எழுத்து

சி.சு. செல்லப்பா



வல்லிக்கண்ணன்

எழுத்து

சி.சு. செல்லப்பா

தொகுப்பாசிரியர் :

வல்லிக்கண்ணன்

ஞானியாரடிகள் தமிழ்மன்றம்

ப. எண்.7, நாகமணி தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
பு. எண். 17 சென்னை – 600 002.

முதற் பதிப்பு : டிசம்பர் 2001

- பதிப்பாசிரியர் : அ.நா. பாலகிருஷ்ணன்
சென்னை – 600 002.
போன் : 8589314

- உரிமை : பதிப்பாசிரியருக்கே

- மொத்த விற்பனையாளர் :

விஜயா பதிப்பகம்
20, ராஜவீதி,
கோயமுத்தூர் – 641 001
போன் : 394614

- அட்டை பட வடிவமைப்பு :

M.A. பார்த்தசாரதி
மாஸ்கம்யூனிகேஷன்ஸ்,
திருமலைபிள்ளை ரோடு, தி.நகர், சென்னை – 17.

- ஒளிஅச்சுக்கோப்பு :

சுகன் கம்ப்யூட்டர் சிஸ்டம்ஸ், சென்னை– 2. ☎ : 8415932

- கட்டமைப்பு :

ராஜ் எண்டர்பிரைஸஸ், சென்னை–14. ☎ : 8111754

பக்கங்கள் : 328

விலை ரூபாய் : 60.00

உள்ளடக்கம்

		பக்கம்
1.	பதிப்புரை – அ.நா.பாலகிருஷ்ணன்	
2.	எழுத்து – சி.சு.செல்லப்பா – வல்லிக்கண்ணன்	4
3.	சி.சு. செல்லப்பா – எடுத்த புகைப்படங்கள்	
4.	எழுத்து முதல் இதழ் – ஜனவரி 1959	30
5.	''சி.சு. செல்லப்பா – க.நா.சு.'' சில குறிப்புகள் – தி.க. சிவசங்கரன்	108
6.	காந்தீயவாதி – சி.சு. செல்லப்பா – ஏ.என்.எஸ். மணியன்	113
7.	''எழுத்து'' மதிப்பீடு – சின்னக்குத்தூசி	126
8.	''எழுத்து''வும் புதுக்கவிதையும், – வல்லிக்கண்ணன்	204
9.	எழுத்து கடைசி இதழ் ஜனவரி – மார்ச் 1972	270
10.	சி.சு. செல்லப்பாவின் படைப்புகள்	324

பதிப்புரை

''சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்து, புதுத்தடம் போட்டுக் கொண்டு இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயன்றவர்களைத்தான் சோதனைக் காரர்கள் என்று சொல்லலாம்.'' க.நா.சு.வின் இந்த வாக்கியத்தைத்தான் ''எழுத்து'' தன் குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்படுகிறது என்று சி.சு. செல்லப்பா குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட வாக்கியத்தின்படி எழுத்துவின் குறிக்கோள் வெற்றி பெற்றதா, தோல்வி அடைந்ததா என்று 21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பார்க்கும்போது வெற்றி பெற்றதாகவே கொள்ளலாம். ஏனென்றால் புதுக்கவிதையின் வளர்ச்சிக்கு தடம் அமைத்த பெருமை ''எழுத்து''க்கு உண்டு. விழுதுகளைப் பல மடங்குகள் வளர்த்து ஆலமரக் காடுகளாக இன்றைய புதுக்கவிதை வளமுற்று செழித்து விளங்குவதற்கு 'எழுத்து'தான் அடிப்படையாகும். தான் எடுத்துக்கொண்ட கொள்கைக்கு ஏற்றவாறு ''எழுத்து'' சாதனை புரிந்ததினால், நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஓர் மைல் கல்லாக அது இருக்கிறது.

''தீபம்'' அலுவலகத்தில் 1965 முதல், கடைசி வரை சி.சு. செல்லப்பாவின் நட்பு தொடர்ந்து இருந்தது. சில நாட்களில் நா.பாவுடன் நானும் நடந்தே திருவல்லிக்கேணி பிள்ளையார் கோயில் தெருவில் இருக்கும் அவரது வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்து பேசியுள்ளோம். இலக்கிய சர்ச்சைகளுக்கு குறைவே இருக்காது. தரம் தாழாது, தனி மனிதனின் சொந்த வாழ்க்கையின் பண்புகள் கொச்சைப் படுத்தப்படாத உரையாடல்களாகத்தான் இருக்கும்.

தி.ஜ.ர., டாக்டர். மு.வ., கி.வா.ஜ., வல்லிக்கண்ணன், பி.எஸ். ராமையா, தி.க.சி., நாரண.துரைக்கண்ணன், கு. அழகிரிசாமி போன்ற தலை சிறந்த தமிழ் அறிஞர்கள் ''தீபம்'' அலுவலகத்தில் வந்து சென்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். நா.பா. மறைந்த பிறகு இன்று வரை அவருக்கு நடைபெறும் நினைவுக் கூட்டங்களில் தலைமை வகித்து நடத்தி வருபவர் வல்லிக்கண்ணன் ஆவார். சி.சு. செல்லப்பா ஒரு நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தனது நினைவுகளை எடுத்துக்கூறினார். வல்லிக்கண்ணனின் முத்து விழாவிற்காக அவரை அவரது இல்லத்தில் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு

அதிகம் எனக்கு கிடைத்தது. அப்பொழுது தன்னுடைய வளர்ச்சிக்கு மட்டுமின்றி நவீன தமிழ் இலக்கியத்தில் புதுக்கவிதை வளர்ச்சிக்கு சி.சு. செல்லப்பாவின் பணியைப் பற்றி அடிக்கடி எடுத்துரைப்பார். அதோடு தன்னை விட வயதில் மூத்தவர் என்றும் கூறியுள்ளார். வல்லிக்கண்ணனின் முத்துவிழா கூட்டத்தில், தனது ஏற்புரையில் வல்லிக்கண்ணன் அவரது நண்பரும், முன்னோடியுமான சி.சு. செல்லப்பாவிற்கு ஏதாவது நினைவு செய்யவேண்டும். அது ''தீபம் யுகம்'' போல் புத்தகமாக இருக்க வேண்டும் என்ற தனது வேண்டுகோளை வைத்தார். எனது நன்றியுரையில் அப்படியே செய்யலாம் என்ற நம்பிக்கையை தெரிவித்தேன். கடந்த ஒரு வருடமாக பணி தொடர்ந்து நடைபெற்று ''எழுத்து'' – ''சி.சு. செல்லப்பா'' என்ற கட்டுரைத் தொகுப்பு இன்று நூலாக உருப்பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் 'எழுத்து'வின் அவ்வளவு ஏடுகளையும் எங்கிருந்து பெறுவது என்று வல்லிக்கண்ணன் அவர்களிடம் கூறியபொழுது, நானே வைத்திருக்கிறேன் தருகிறேன் என்றார். பத்து கட்டுகளையும் சின்னக்குத்தூசியிடம் கொடுத்து எழுத்து மதிப்பீட்டை எழுதும்படி கேட்டுக்கொண்டார். ஜூனியர் விகடனில் 2000ம் ஆண்டு ஏப்ரல் 14 முதல் ''எத்தனை மனிதர்கள்'' என்ற தலைப்பில் தமிழ்ச்சான்றோர்களின் வரலாற்றை சுவைபட எழுதிப் பெருமை சேர்த்தவர் சின்னக்குத்தூசி ஆவார். மேலும் சி.சு. செல்லப்பாவின் கடைசி காலத்தில் அணுக்கத் தொண்டராகப் பழகிய ஏ.என்.எஸ். மணியனிடம் ஒரு கட்டுரை வாங்கினால், அவரது வாழ்க்கையை அருகில் இருந்து பார்த்து அவருக்கு உதவி செய்தவரின் அனுபவங்கள் இக்கட்டுரைத் தொகுதிக்கு மெருகு சேர்க்கும் என்ற அவாவின் அடிப்படையில் வல்லிக்கண்ணன் ஓர் கட்டுரையைப் பெற்றுச் இதில் சேர்த்துள்ளார். தி.க.சியிடம் விமர்சனக் கண்ணோட்டத்தில் ஓர் கட்டுரை கடைசி நேரத்தில் பெற்றுச்சேர்த்தேன். பல முறை தொலைபேசியில் பேசிய பிறகு, தனது முதுமையையும், நோயின் தொல்லைகளையும் பொருட்படுத்தாது சிரமம் பாராட்டாமல், தான் கூற பிறரிடம் எழுதச்சொல்லி, அவர் கட்டுரையை அனுப்பி வைத்தார். ஜனவரி 59ல் முதன் முதலில் வந்த எழுத்து பிரதியையும் கடைசியாக 1970ல் (ஜனவரி – மார்ச்) வெளிவந்த காலாண்டு இதழையும் இக்கட்டுரைத் தொகுப்பில் இணைத்துள்ளேன்.

''எழுத்து'' எவ்வகையில் இலக்கியப் பணிபுரிந்தது என்பதை இங்கு இந்த இரு இதழ்களின் கட்டுரைகள் புலப்படுத்தும்.

வல்லிக்கண்ணன் தன்னுடைய இலட்சிய இலக்கியவாதியான சி.சு. செல்லப்பாவிற்கு இக்கட்டுரைத் தொகுதியை நன்றியுடன் கொண்டு வருகிறார். சி.சு. செல்லப்பா தனக்கு கிடைத்த ''விளக்கு'' அமைப்பு பரிசு தொகையின் மூலம் அவரே எழுதிய ''என் சிறுகதை பாணி'' என்ற நூலை 1995ல் வெளிக்கொண்டு வருகிறார். சி.சு. செல்லப்பாவின் ''சுதந்திர தாகம்'' என்ற நாவலை 3 பாகங்களாக அவரே 1.7.97ல் தனது எழுத்து வெளியீடு மூலம் கொண்டு வருகிறார். பி.எஸ். ராமையாவை சி.சு. செல்லப்பா மிகவும் மதித்துப் போற்றுவதோடு, தன் இலட்சிய வாதியாகவும் குருவாகவும் ஏற்றுக்கொண்டு அவரது நினைவு போற்றும் வகையில் தன்சொந்தச் செலவிலேயே 15.7.98ல் ''ராமையாவின் சிறுகதை பாணி'' என்ற நூலை தனது 86வது வயதில் எழுத்து பிரசுரமாக வெளியிடுகிறார். 18.12.98ல் இலக்கிய உலகிலிருந்தும், இவ்வுலகிலிருந்தும் மறைந்து விடுகிறார். இறுதி ஆண்டுகளில் அவர் நிறைவேற்றிய சாதனைகள் மகத்தானவை. வியந்து போற்றப் பட வேண்டியன.

இக்கட்டுரைத் தொகுப்பு இலக்கிய வாசகர்களின் தமிழ் இலக்கியத் தாக்கத்தை மேலும்அதிகரிக்கும் என்று நம்புகிறேன். தற்கால சிறிய பத்திரிகைகளுக்கு வழிகாட்டியாகவும், எதிர்காலத்தில் எழுத்தை விட சிறந்த தமிழ் இலக்கிய பத்திரிகை வாரப்பத்திரிகையாக ஓர் இதழ் தோன்ற ஓர் உந்துதலாகவும் இது அமையக்கூடும் என்றும் நம்புகிறேன். விமர்சனங்கள் – விமர்சிக்கின்றவரின் மீது விமர்சனங்கள் காணும் போக்கு விடுத்து, கதை மாந்தர்களின் மீது மட்டும் விமர்சனம் அமையுமானால் தமிழில் விமர்சனக் கலை மேலும் சிறக்கும். புதுக்கவிதைப் பணியை குறிப்பிடாமல் இருக்க முடியாது. இது எழுத்தின் சாதனைகளில் முக்கியமானது; முதன்மையானதும் கூட. இக்கட்டுரைத் தொகுப்பை உரிய நேரத்தில் அச்சிட்டுக் கொடுத்த ராஜ் எண்டர்பிரைஸஸுக்கும், சி.சு. செல்லப்பா படங்களை கொடுத்து உதவிய நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

டிசம்பர் 2001

அ. நா. பாலகிருஷ்ணன்

சி.சு.செல்லப்பா

எடுத்த புகைப்படங்கள்



சி.சு.செல்லப்பா

எடுத்த புகைப்படங்கள்



'எழுத்து' சி.சு.செல்லப்பா

— வல்லிக்கண்ணன்

1

தமிழ் எழுத்துலகில் 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்த படைப்பாளிகளில் சி.சு செல்லப்பாவும் ஒருவர் ஆவார்.

1930களில் தமிழ் சிறுகதைக்கு இலக்கியத்தரம் சேர்க்கவும், தமிழ் சிறுகதையை உலக இலக்கியத்தரத்துக்கு உயர்த்தவும் இலட்சிய வேகத்தோடு எழுத்துப்பணியில் ஈடுபட்டார்கள். இளைஞர்கள் சிலர். அவர்களுக்கு 'மணிக்கொடி' என்ற பத்திரிகை களம் அமைத்துக் கொடுத்தது.

புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, மௌனி, பி.எஸ். ராமையா, பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), ந. சிதம்பரசுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, க.நா. சுப்பிரமணியம், எம்.வி. வெங்கட்ராம் ஆகியோர் 'மணிக்கொடி'யில், அவரவர் ஆற்றலையும் தனித்தன்மையையும் வெளிப்படுத்தும் சிறுகதைகள் எழுதிக்கொண்டிருந்தார்கள். பிற்காலத்தில் இவர்கள் 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' என்று குறிப்பிடப்படலாயினர்.

பின்னர் தோன்றிய மறுமலர்ச்சி இலக்கியப் பத்திரிகைகளுக்கு 'மணிக்கொடி' ஒரு முன்னோடியாக விளங்கியது. குறைவான காலமே அது பிரசுரம் பெற்றிருந்தாலும், எழுத்துலகத்தில் அது ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மணிக்கொடி எழுத்தாளர்கள் சிலரது எழுத்துக்கள் பின்னர் கதை எழுத முற்பட்ட இளைஞர்களை வெகுவாக பாதித்தன.

மணிக்கொடி எழுத்தாளர்கள் வாழ்க்கை பற்றி ஆழ்ந்த நோக்குடன் புதுமையும் கனமும்சேர்ந்த, உணர்ச்சிகரமான சிறுகதைகளைப் படைத்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரது நோக்கும், எழுத்துப்பாணியும், கதைகள் எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட விஷயங்களும் வித்தியாசமானவையாக இருந்தன.

இலக்கிய உணர்வு என்பதில் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்வையே இலக்கியத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் பலவிதமான சிரமங்களுக்கும் சோதனைகளுக்கும் அவர்கள் உள்ளானார்கள். எனினும், சாதனைகள் படைப்பதில் அவர்கள் ஊக்கமும், உற்சாகமும் காட்டினார்கள்.

அவர்களில் சி.சு. செல்லப்பா விசேஷமாகக் குறிப்பிடத் தகுந்தவர். தனித்தன்மை உடைய சிறுகதைகள் படைத்துக் கவனிப்புப் பெற்ற செல்லப்பா நாவல், கவிதை, நாடகம், மொழிபெயர்ப்பு, பத்திரிகைத்துறை, பதிப்புத்துறை என்று பலவகைகளில் தனது ஆற்றலையும் ஈடுபாட்டையும் வெளிப்படுத்தி பாராட்டுதற்குரிய சாதனைகள் புரிந்திருக்கிறார். சதாகாலமும் அவருடைய சிந்தனையும் பேச்சும் தமிழ் இலக்கியம் குறித்ததாகவே இருந்தன. தீவிர வேகத்துடன் முனைந்து செயலாற்றி இலட்சிய வாதியாகவும் அவர் விளங்கினார்.

இப்படிப் பலதுறைகளில் அவரது பங்களிப்பும் சாதனைகளும் பெரும் அளவில் இருப்பினும், சி.சு. செல்லப்பா என்றதும் ஒரு இலக்கிய வாசகனுக்கு நினைவுக்கு வருவது 'எழுத்து' பத்திரிகை தான். அவ்வளவுக்கு அவருடைய 'எழுத்து' இதழ் தனிச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் கொண்டது ஆகும்.

2

'என் அப்பா வழியில் எனது ஊர் சின்னமனூர். என் தாய் வழியில் என் சொந்த ஊர் வத்தலக்குண்டு. இரண்டு வகையில் பார்த்தாலும் நான் மதுரை ஜில்லாக்காரன். ஆனாலும் திருநெல்வேலி ஜில்லா மீது எனக்கு தனி அபிமானம் உண்டு. என் தகப்பனார் பொதுப்பணித்துறை (பப்ளிக் ஒர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட்) ஓவர்சியர் ஆக வேலைபார்த்தது அங்கே தான். தாமிரபரணி ஆற்றிலிருந்து குழாய் அமைத்து தூத்துக்குடிக்குத்தண்ணீர் கொண்டு செல்லும் பணியை என் அப்பாதான்செய்து முடித்தார். பல வருடங்கள் நாங்கள் திருநெல்வேலி ஜில்லாவின் பல ஊர்களில் வசித்தோம். என் ஆரம்பப்படிப்பு பாளையங்கோட்டையில் தான் நடந்தது. பிறகு தூத்துக்குடியில் தொடர்ந்தது. தாமிரபரணியை ஒட்டி அமைந்துள்ள முறப்பநாடு, அகரம் கிராமங்களில், நாங்கள் வசித்தோம். காலையில் அப்பாவும் நானும் ஆற்றில் குளித்ததும், அநேக நாட்கள் அப்பா ஆற்றைக்கடக்க என்னை தோளில் தூக்கிக்கொண்டு அக்கரையில் பணிகள் நடக்கும் இடத்துக்கு இட்டுச்சென்றதும் என்னால் மறக்க முடியாத அனுபவங்கள்.

இதற்கெல்லாம் மேலாக, நான் சிறுகதை எழுத்தாளன் ஆக மலர்ச்சி பெற்றதும், என் கதைகள் சுதந்திரச்சங்கு, மணிக்கொடி இதழ்களில் வரத் தொடங்கியதும் நான் ஸ்ரீ வைகுண்டம் ஊரில் வசித்த நாட்களில்தான். அதனாலே நானும் திருநெல்வேலி எழுத்தாளர்களோடு சேர்ந்தவன் தான்; தாமிரபரணித்தண்ணீர் தான் என்னுள் இலக்கிய உணர்வையும் எழுத்தாற்றலையும் ஊட்டி வளர்த்தது என்று நானும் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியும்'.

இப்படி சி.சு. செல்லப்பா என்னிடம் அடிக்கடி சொல்லி யிருக்கிறார்.

ஆயினும், அவருக்கு தந்தை வழியில் சொந்தமான சின்னமனூரை விட, தாய் வழிப்பாட்டி ஊரான வத்தலக்குண்டு பேரில்தான் அதிகமான பற்றுதலும், பிரியமும் இருந்தது. அதனால் வத்தலக்குண்டு ஊரில் தோன்றிப் புகழ் பெற்ற எழுத்தாளர்களான

பி.எஸ். ராஜமய்யர், பி.எஸ். ராமையா ஆகியோரிடம் விசேஷமான அபிமானமும் அவருக்கு இருந்தது.

இலக்கியத் தகுதி பெற்ற நாவலான 'கமலாம்பாள் சரித்திரம்' எழுதிய பி.எஸ். ராஜமையரின் பெருமையை வத்தலக்குண்டு ஊர்வாசிகள் சரிவர அறிந்து கொள்ளவில்லை என்ற வருத்தம் செல்லப்பாவுக்கு உண்டு. எனவே, நாவலாசிரியரின் பெருமையை சொந்த ஊர்க்காரர்களுக்கு உணர்த்துவதற்காக, ஒருவருடம் ஒரு சிறப்பு விழா ஏற்பாடு செய்தார் செல்லப்பா. பெயர் பெற்ற எழுத்தாளர்கள்பலரை சென்னையிலிருந்து வத்தலக்குண்டுக்கு வரவழைத்து, ராஜமய்யர் பெருமைகளையும் சிறப்புகளையும் பேசும்படி செய்தார். நா. பார்த்தசாரதி, வ.க. , தி.க. சிவசங்கரன், கோமல் சுவாமிநாதன், நடிகர் எஸ்.வி. சகஸ்ரநாமம் மற்றும் பலர் கலந்து கொண்ட அவ்விழா முக்கியத்துவம் பெற்றதாயிற்று. 'ராஜமய்யர் வாழ்ந்த இல்லம்' என்ற கல்வெட்டும் ஒரு வீட்டில் பதிக்கப்பட்டது.

3

செல்லப்பாவுக்கு அவருடைய தகப்பனார் மீது மிகுந்த பற்றுதலும் பாசமும் பெருமையும்இருந்தன. அவருள் தேசபக்தியை, காந்தி ஈடுபாட்டை, சுதந்திரத்துக்காகப் போராட வேண்டும் என்கிற உணர்வை தகப்பனார் எப்படியெல்லாம் தன்னுடைய சின்ன வயசிலிருந்தே வளர்த்து வந்தார் என்பதை செல்லப்பா அடிக்கடி சொல்வது உண்டு. ஒவ்வொரு சந்திப்பின் போதும் குறிப்பிட்டு மகிழ்வார். அவருடைய இறுதிக்காலத்திலும் உள நெகிழ்ச்சியோடு என்னிடம் நினைவு கூர்ந்தார். அவரது மகத்தான நாவலான 'சுதந்திர தாகம்' மிலும், 'என் சிறுகதைப்பாணி' நூலிலும் இவ் உணர்வுகள் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

1974ல் 'எழுத்து பிரசுரம்' களை கல்லூரிகளிலும் மேல் நிலைப்பள்ளிகளிலும் விற்பனை செய்வதற்காக செல்லப்பாவும் நானும், இரண்டு மாதகாலம், திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றினோம். தூத்துக்குடியில் நாங்கள்அப்படி அலைந்த போது, அங்கே சிறுவயதில் அவர் கல்வி கற்ற பள்ளிக்கூடத்தை மகிழ்ச்சிப் பெருக்கோடு எனக்குக் காட்டினார். அவர்காலத்திய ஆசிரியர்களைப் பற்றியும் சொன்னார்.

பின்னர், தாமிரபரணி ஆற்றங்கரை ஊர்களானமுறப்ப நாடு, அகரம் என்ற இடங்களுக்கும்என்னை அழைத்துச் சென்றார். தூத்துக்குடி குடிநீர் குழாய்திட்ட வேலைக்காக அவருடைய அப்பா அக்கிராமங்களில் தங்கிப் பணிபுரிய நேர்ந்தது. தாமிரவர்ணி ஆற்றில் கிணறு வெட்டி, இருபத்து நாலு மைல் தூரத்துக்குக் குழாய் போடும் வேலை அவர் தந்தையின் மேல்பார்வையில் தான் நடைபெற்றது. அந்தக்காலத்தில் அவர்கள் வசித்த வீடு, சுற்றியஇடங்கள், பொதுப்பணித் துறையில் அப்பா நிறைவேற்றிய பணிகள், வெட்டப்பட்ட கிணறு, அங்கு குடிநீர்த்திட்டத்துக்காக அமைக்கப்பட்ட பெரிய இரும்புக்குழாய்களை எல்லாம் செல்லப்பா உற்சாகத்துடன் எனக்குக் காட்டினார். தனது சிறுபிராய நினைவுகளில் வாழ்ந்து அவர் சந்தோஷம் கண்டார். அந்நாட்களில் குடியிருந்த வீட்டின் முன் நெடுநேரம் நின்று தனது நினைவுகளை உணர்ச்சி பரவசத்துடன் பேசினார்.

ஸ்ரீவைகுண்டம் ஊரில் வசித்த போதுதான் சி.சு.செல்லப்பா எழுத்தாளன் ஆகவேண்டும் என்ற உந்துதல் பெற்று கதை எழுதத்தொடங்கினார். அவர் எழுதிய முதல் கதையை 'சுதந்திரச் சங்கு' வாரப் பத்திரிகைக்கு அனுப்பினார். அதன் ஆசிரியர் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டு பெயர் பெற்றிருந்த சங்கு சுப்பிரமணியன். அவர்அந்தக் கதையை வரவேற்று ஒரு கடிதம்எழுதினார். அந்தக் கதையைத் திருத்தி 'சங்கு' இதழில் வெளியிட்டார். அவருடைய கடிதமும், புதிய எழுத்தாளனுக்கு ஊக்கமளித்து உற்சாகமூட்டிய செயலும் தன்னுள் எத்தகைய கிளர்ச்சி ஏற்படுத்தியது, மேலும் மேலும்எழுத எப்படி உற்சாகம் தந்தது என்பதை செல்லப்பா பலமுறை சொல்லியிருக்கிறார். இதை 'என் சிறுகதை பாணி' நூலில் விரிவாகவே பதிவு செய்துள்ளார்.

'என்னை சிறுகதையாளனாக ஆக்கி வெளிப்படுத்திய வர் சங்கு சுப்பிரமணியன். அவரை நான் இன்னும்நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று செல்லப்பா குறிப்பிட்டிருக்கிறார்.

4

சி.சு. செல்லப்பாவை நான் முதன் முதலாகப் பார்த்தது எனக்கு நினைவிருக்கிறது. 1945ஆம் வருடம். அப்போது திருச்சியில் இருந்து 28மைல்கள் தள்ளி உள்ள துறையூர் என்கிற சிற்றூரில், 'கிராம ஊழியன்' என்னும் மறுமலர்ச்சி இலக்கிய மாதம் இரு முறை இதழ்நடந்து கொண்டிருந்தது. அதில் நான் பணியாற்றி வந்தேன். அதே சமயம் என்னுடைய 'இதயஒலி' எனும் கையெழுத்துப் பத்திரிகையும் வளர்த்து வந்தேன். திருச்சி மாவட்ட கையெழுத்துப் பத்திரிகையாளர்கள் ஒருங்கிணைந்த 'முதலாவது மாநாடு' நடத்தினார்கள். அதற்கு வரவேற்புக்குழுத்தலைவராக எனக்குபொறுப்பளித்தார்கள்.

ஸ்ரீரங்கம் ஊரில் நடைபெற்ற அம் மாநாட்டுக்கு 'ஆனந்தவிகடன்' உதவிஆசிரியர் நாடோடி, 'பாரததேவி' நாளிதழ் ஆசிரியர் கே. அருணாசலம், மணிக்கொடி எழுத்தாளர் 'சிட்டி' பெ.கோ. சுந்தரராஜன் முதலியவர்கள் வந்திருந்தார்கள். சிட்டியுடன் அவர் நண்பர் செல்லப்பாவும் வந்தார். அப்போதுதான் முதன்முறையாக நான் அவரைப் பார்த்தேன். சிட்டி அறிமுகப்படுத்தினார். அவ்வளவு தான். செல்லப்பா அம்முறை என்னுடன் சகஜமாகப் பேசிப் பழகவில்லை.

அக்காலக்கட்டத்தில் சி.சு.செல்லப்பா வத்தலக்குண்டு ஊரில் வசித்து வந்தார். கையால்காகிதம்செய்து, 'தக்ளி'யில் நூல் நூற்பது போன்ற காந்தி வழிக்குடிசைத்தொழில் முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருந்தார். அவருடைய இயல்புகளில் இதுவும் சேரும். படிப்பு, எழுதுவது, இலக்கியம் பற்றிப் பேசுவது, பத்திரிகைகளில் வேலை பார்ப்பது என்பனவற்றில் அவர்காட்டி வந்த உற்சாகத்தையும் செயலூக்கத்தையும் கைத்தொழில் போன்ற இதர முயற்சிகளிலும் ஈடுபடுத்தி மகிழ்ந்தார்.

பஞ்சினால் அழகு அழகான சிறுபொம்மைகள், பறவைகள், முயல்குட்டி, நாய் போன்றவை செய்வதில் கைதேர்ந்தவர் அவர். நவராத்திரி சமயத்தில் பொம்மைக் கொலு வைத்து, வயர் மாட்டி சின்னச் சின்ன பல்புகள் கொண்டு அலங்காரம் செய்து

ஒளியேற்றுவதில் அவர் அதிகமான உழைப்பையும் நேரத்தையும் செலவிடுவது உண்டு.

வத்தலக்குண்டில் அவர் வீட்டின் பின்பக்கம் காலிஇடம் அதிகம் இருந்தது. அதைப் பண்படுத்தி காய்கறிப் பயிர்கள் வளர்ப்பதிலும், முருங்கை தென்னை கொய்யா வாழை முதலிய மரங்கள் வளர்ப்பதிலும், அவற்றிலிருந்து பலன்கள் பெறுவதிலும் அவர் தீவிர முனைப்புக் காட்டி உழைத்திருக்கிறார்.

'வாடிவாசல்' என்ற அவருடைய சிறப்பான நெடுங்கதையை அவர் புத்தகமாக வெளியிட விரும்பினார். அதில் மாட்டுச் சண்டை சம்பந்தமான படங்கள்சேர்க்க ஆசைப்பட்டார். அதற்காக, மதுரை மாவட்டத்தில் நடைபெறும் 'மஞ்சி விரட்டு' (ஜல்லிக்கட்டு) – மாடுகளுக்கும் மனிதருக்கும் நிகழும் சண்டை– காட்சிகளை படம் பிடிக்கத் தீர்மானித்தார். அவரே காமிராவை கையாண்டு, விரும்பிய கோணங்களில் எல்லாம் போட்டோ எடுத்தார். அவற்றை அவரே தன் வீட்டில் இருட்டறை அமைத்து, கழுவி, பிரிண்ட் போட்டு, படங்களாக்கினார். அதற்குத் தேவையான பயிற்சிகள் பெறுவதில் அவர் சலிப்பில்லாமல் காலம் செலவிட்டிருந்தார்.

இப்படி புதுமைகள் பண்ணுவதிலும், புதியன கற்றுக் கொள்வதிலும் செல்லப்பா தனது வாழ்நாள் முழுவதும் ஆர்வம் காட்டி வந்திருக்கிறார்.

சிறுகதைகளையே எழுதிக் கொண்டிருந்த செல்லப்பா இலக்கிய விமர்சனத்தில் ஈடுபட நாட்டம் கொண்டார். அதற்காக அமெரிக்க, ஐரோப்பிய இலக்கிய விமர்சன நூல்களைப் படிப்பதில் தீவிரமாக முனைந்தார். அமெரிக்கன் லைபிரரி, பிரிட்டிஷ் லைபிரரிகளிலிருந்து பெரிய பெரிய புத்தகங்களை எடுத்து வந்து, வீட்டில் உட்கார்ந்து விடாமுயற்சியோடு படித்தார். ஐந்தாறு நாட்கள் சேர்ந்தாற்போல வீட்டை விட்டு வெளியே எங்கும் போகாமல் விமர்சன நூல்களைப் படிப்பதிலேயே மும்முரமாக இருந்தார். அவர் இந்தச் சமயத்தில் திருவல்லிக்கேணி பிள்ளையார்கோயில் தெரு வீட்டில் மாடியில் வசித்தார். மாடியை விட்டுக் கீழே இறங்காமல் இப்படி அநேக நாட்கள் படிப்பில் கழித்ததாக அவர் சொல்லியிருக்கிறார்.

ஒரு கால கட்டத்தில், பழந்தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் ஒரு ஆய்வு மாணவனின் ஊக்கத்தோடு படித்தறிவதில் உற்சாகம் காட்டினார் செல்லப்பா.

செல்லப்பாவின் மனஉறுதி, வைராக்கியத்தோடு ஒரு காரியத்தை செய்து முடிக்கும் குணம், எண்ணியதைச் செய்து தீர்க்கும் விடாப்படியான தன்மை, கொள்கைப் பிடிப்பு, நட்பு உணர்வு முதலிய பண்புகள் வியந்து போற்றப்பட வேண்டியன ஆகும்.

5

செல்லப்பா தானே சொந்தமாக, இலக்கிய விமர்சனத்துக்கு என்று ஒரு பத்திரிகை நடத்தத் துணிந்தார். அதற்கு வித்தியாசமாக – அதுவரை எவரும் எண்ணாத விதத்தில் – 'எழுத்து' என்று பெயர் வைத்தார். இதற்காகப் பலரும் அவரைக் கேலி செய்தார்கள்.

'இதில் என்ன தவறு இருக்கிறது? இங்கிலீஷில் ரைட்டிங், நியூரைட்டிங் என்றெல்லாம் பெயர் வைத்து இதழ் நடத்தவில்லையா? அதே மாதிரிதான் இதுவும்' என்று செல்லப்பா பதிலளித்தார்.

அவர் காட்டிய வழியில் பின்னர் பலரும் பத்திரிகைகளுக்கு வித்தியாசமான பெயரை வைக்கத் துணிந்தார்கள். நடை, கசட தபற, ங, ஐ, அஃ என்றெல்லாம்.

உண்மையான சிறுபத்திரிகை (லிட்டில் மேகசின்) நடத்துவதிலும் செல்லப்பா தான் முன்னோடியாய், வழிகாட்டியாய் செயல்பட்டிருக்கிறார். 'எழுத்து பத்திரிகை கடைகளில் விற்பனைக்குக் கிடைக்காது. சந்தாதாரர்களுக்கு மட்டுமே கிடைக்கும். குறிப்பிட்ட குறைந்த எண்ணிக்கையில் தான் பிரதிகள் அச்சிடப்படும்' என்று அறிவித்துக் கொண்டு, அவ்விதமே செயலாற்றினார். பன்னிரண்டு வருட காலம் அப்படி, தனித்தன்மை உடைய ஒரு பத்திரிகையை நடத்தியது மாபெரும் சாதனையாகும்.

அதற்காக அவர் அனுபவித்த கஷ்டங்களும் நஷ்டங் களும் அதிகமாகும். பத்திரிகைக்கு சந்தா சேர்ப்பதற்காக அவர் ஊர்ஊராக அலைந்து திரிந்தார். ரயிலிலும், பஸ்சிலும், நண்பர்களின் சைக்கிள் பின்னால் அமர்ந்தும், நடந்தும் போய், படிப்பில் ஈடுபாடு உடைய அன்பர்களை அணுகி, 'எழுத்து' பத்திரிகை பற்றி எடுத்துச் சொல்லி செல்லப்பா இதழை வளர்க்கப் பாடுபட்டார். அது இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதாகும். அந்தப் பத்திரிகையே தனி இலக்கிய வரலாறு ஆகத் திகழ்வதும் ஒரு விசேஷம் ஆகும்.

அதே போல் தான் அவர் புத்தக வெளியீட்டில் ஈடுபட்டதும். வணிகப் பிரசுரகர்கள் தனது எழுத்துக்களை புத்தகமாக வெளியிட முன்வரவில்லை என்றதும், தானே தன்னுடைய எழுத்துக்களை நூல்களாக்குவது என்று செல்லப்பா தீர்மானித்தார். அதற்காக 'எழுத்து

பிரசுரம்' ஆரம்பித்தார். குறிப்பிடத் தகுந்த நூல்கள் பலவற்றை வெளியிட்டார்.

அவர் தன்னுடைய நூல்களை வெளியிட்டதுடன் நில்லாது, தான் மதிப்பும் மரியாதையும், அன்பும்நட்பும் கொண்டிருந்தவர்களின் எழுத்துக்களையும் புத்தகமாக்க முன்வந்தார். வ.ரா. ந. பிச்சமூர்த்தி, சிட்டி எழுத்துக்களை புத்தகங்களாக்கினார். எனது சிறுகதைகளையும் கவிதைகளையும் 'எழுத்து பிரசுரம்' ஆக வெளியிட்டது அவருடைய விசால மனப்பண்பை வெளிப்படுத்தியது.

பின்னர், 'தீபம்' இதழில் நான் தொடர்ந்து எழுதிய 'புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' கட்டுரைகளை நானே தான் புத்தகமாக வெளியிடுவேன் என்று அவராகவே கூறி, 1977ல் 'எழுத்து பிரசுரம்' ஆகப் பிரசுரித்தார்.

அதனால் அது 1978ல் சாகித்ய அகாடமிப் பரிசைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

'அந்தப் புத்தகத்தின் பிரதிகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டன. பணத்தை நான் வேறு வகைகளில் செலவிட்டு விட்டேன். உங்களுக்கு ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. அது என் மனசை உறுத்திக் கொண்டிருக்கிறது' என்று செல்லப்பா சொன்னார்.

'நீங்கள் எனக்கு பணம் தரவேண்டாம்' என்றேன்.

'அது முறையாகாது. நான் எப்படியும் தந்து விடுவேன்' என்று அவர் தெரிவித்தார்.

சில வருடங்களுக்குப் பிறகு செல்லப்பா என்னைத் தேடி வந்து ஆயிரம் ரூபாய் தந்தார். 'இது ஒரு பகுதி தான். பாக்கியை பிறகு தருவேன்' என்றார்.

'இதுவே போதும்' என்று சொன்னேன்.

'அது நியாயமில்லை' என்று கூறிச் சென்றார்.

அநேக வருடங்களுக்குப் பிறகு செல்லப்பா ஒருநாள் எதிர்பாராத விதமாக, தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்தார். 'அதை இவரிடம் கொடு' என்றார்.

அம்மா ஆயிரம் ரூபாய் கட்டை அளித்தார்.

'இப்ப தான் என் மனச்சுமை தீர்ந்தது. புத்தகம் முழுதும்விற்று, வந்த பணத்தை நானே செலவு பண்ணிவிட்டேன். உங்களுக்கு பணம் தரவில்லையே என்று உறுத்தல் என்னுள் இருந்து கொண்டே இருந்தது. முன்பு ஒரு பகுதி கொடுத்தேன். மேலும் கொடுக்க முடியவில்லையே என்ற மனவேதனை. நீங்கள் ஒரு தடவை கூட பணம் வேண்டும் என்று கேட்கவில்லை. அதனாலேயே என் மன உறுத்தல் அதிகமாயிற்று. இப்பதான் என் மனசுக்கு சமாதானமாயிற்று' என்று செல்லப்பா சொன்னார்.

அவரது அன்பும் நட்பு உணர்வும் என் உள்ளத்தில் நெகிழ்ச்சி ஏற்படுத்தின.

6

'எழுத்து பிரசுரம்' நூல்களை விற்பனை செய்வதற்கும் செல்லப்பா மிகுந்த சிரமங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. வணிக நோக்குப் பதிப்பகத்தினரும் விற்பனையாளர்களும் அவ் வெளியீடுகளை விற்றுத் தருவதற்குத் துணைபுரியவில்லை.

'இந்த மாதிரிப் புத்தகங்கள் எல்லாம் விலைபோகாது' என்று கூறி அவற்றைத் தங்கள் விற்பனை நிலையங்களில் வைத்துக் கொள்ளவே மறுத்தார்கள். விற்க முயல்வதாகச் சொல்லி புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட சிலரும் அவற்றை ஒரு மூலையில் போட்டு வைத்தார்கள். புத்தகம் வாங்க வருகிறவர்கள் பார்வையில் படுகிறபடி எடுப்பாக வைக்க அவர்கள் விரும்ப வில்லை.

பல மாதங்களுக்குப் பிறகு செல்லப்பா போய் புத்தக விற்பனை எப்படி இருக்கிறது என்று கேட்ட போது, ஒன்று கூட விலைபோக வில்லை என்று கூறி, அவரது புத்தகங்களை அவரிடமே திருப்பித் தந்தார்கள். அவை அழுக்கடைந்து காணப்பட்டன.

இதனால் எல்லாம் செல்லப்பா மனம் தளர்ந்து போக வில்லை. 'எழுத்து' பத்திரிகையை ஊர்ஊராக அலைந்து பரப்ப முயன்றது போல் 'எழுத்து பிரசுரம்'களையும் நெடுகப் போய் விற்பனை செய்வேன் என்று அவர் உறுதிபூண்டார். தமிழ்நாடு நெடுகிலும் உள்ள கல்லூரிகளின் பட்டியல் ஒன்று தயாரித்தார். பிறகு, மாவட்ட வாரியாகச் சென்று அங்குள்ள கல்லூரிகள், மேனிலைப் பள்ளிகள் அனைத்துக்கும் புத்தகப் பைகளை சுமந்து கொண்டு, உற்சாகம் குன்றாது சென்று முயன்றார். அவரது விடாமுயற்சிக்கு நல்ல பலனும் கிட்டியது.

அப்படி 1974ல் அவர் புத்தக விற்பனைக்காக திருநெல்வேலி மாவட்டத்துக்கு வந்த போது தான் நானும்அவருடன் சேர்ந்து சுற்றினேன்.

புத்தகக் கட்டுகளை, திருநெல்வேலி ஜங்ஷனை ஒட்டியுள்ள சிந்து பூந்துறையில், அண்ணாச்சி சண்முகம் பிள்ளை வீட்டில் வைத்திருந்தோம். நாங்கள் இருவரும் ராஜவல்லிபுரம் வீட்டில் தங்கினோம். அதிகாலையில் எழுந்து தாமிரவர்ணி ஆற்றுக்குப்போய்

நீராடிவிட்டு வந்து, ஏழுமணி சுமாருக்கு பஸ்சில் ஏறி சிந்துபூந்துறை வந்து, அண்ணாச்சி வீட்டிலிருந்து புத்தகங்களை பைகளில் அடுக்கி எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு நாள் ஒரு கல்லூரி என்று போய் புத்தகங்களை விற்பதில் ஈடுபட்டோம்.

அனைத்துக் கல்லூரிப் பேராசிரியர்களும் 'பிரின்ஸ்பால்'களும் எங்கள் இருவரையும் இலக்கிய வாதிகளாக அறிந்திருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. சீசன் தோறும் புத்தகங்களைத் தள்ளிவிட வருகிற விற்பனை ஏஜண்டுகள் தான் நாங்களும் என்று சில கல்லூரிகளின் முதல்வர்கள் எண்ணினார்கள். அந்த ரீதியிலேயே பேசினார்கள். ஆயினும் பெரும்பாலான கல்லூரிகளில் பேராசிரியர்கள் எங்களைப் பற்றித் தெரிந்து வைத்திருந்தார்கள். எங்கள் எழுத்துக்களையும் அறிந்திருந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் தான் நான் 'தீபம்' மாத இதழில் 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' கட்டுரைத் தொடர் எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது தான் புதுக்கவிதை நூல்களும் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. ஆகவே, எங்களை அநேக கல்லூரிகளில் புதுக்கவிதை பற்றியும், தற்காலத் தமிழ் இலக்கியம் குறித்தும் பேசச் சொன்னார்கள். பல கல்லூரிகளில் 'எழுத்து பிரசுரம்'களை மகிழ்ச்சியுடன் வாங்கினார்கள். சில இடங்களில் வேண்டாம் என மறுத்து விட்டார்கள்.

'உங்கள் நூல்களை நீங்களே சுமந்து ஊர்ஊராகச் சென்று விற்பனை செய்வதைப் பார்க்கையில், சுதந்திரப்போராட்ட காலத் தியாகிகளின் நினைவு எங்களுக்கு வருகிறது. மகாத்மா காந்தியின் வழிகாட்டலில், தொண்டர்கள் கதர் துணிகளை கட்டுக் கட்டாகச் சுமந்து கொண்டு ஊர்ஊராகச் சென்று கதர் விற்பனை செய்வதில் உற்சாகமாக ஈடுபட்டார்கள். அதே மாதிரி நீங்களும் நல்ல நூல்களை சுமந்து சென்று விற்கிறீர்கள். உண்மையான காந்தியவாதிகளாகவே நீங்கள் இருவரும் தோன்றுகிறீர்கள். எளிமையாக இருக்கிறீர்கள். பெரிய எழுத்தாளர்கள் என்று பந்தா எதுவும் பண்ணிக்கொள்ளாமல் சாதாரணர்களாகவே காணப்படுகிறீர்கள். உங்களை கவுரவித்து பெருமைப்படுத்த வேண்டும். இப்போது எங்களால் எதுவும் செய்ய இயலவில்லை. புத்தகங்கள் கூட, வாங்கமுடியவில்லை. அதற்காக மிகவும் வருத்தப் படுகிறோம்.'

இவ்வாறு ஒரு கல்லூரி ஆசிரியர்கள் தெரிவித்தார்க்ள். அவர்களுடைய பண்பாடும் பேச்சும் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி தந்தன. இப்படிப் பலவிதமான அனுபவங்கள் எங்களுக்குக் கிட்டின.

திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு மாதங்கள் செல்லப்பாவுடன் சுற்றியதோடு நான் நின்று விட்டேன். கன்னியாகுமரி, திருச்சி மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்வதற்கு செல்லப்பா என்னையும் உடன்அழைத்தார். நான் போகவில்லை. அவர் மட்டும் தனியாக புத்தகச் சுமைகளுடன் திரிந்தார்.

கனமான புத்தகப் பைகளைச் சுமந்து சுமந்து அவரது தோள்பட்டைகளில் வலியும், அலைந்து கால்களில் மூட்டுவலியும் ஏற்பட்டு தொல்லை கொடுக்கத் தொடங்கிய பிறகு தான் செல்லப்பா ஊர்சுற்றிப் புத்தகங்கள் விற்பதை நிறுத்திக் கொண்டார்.

7

பண விஷயத்தில் செல்லப்பா விசித்திரமான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தார். அவருக்கு பணத்தேவை அதிகம் இருந்தது. வாழ்க்கை நடத்துவதற்கும், எழுத்துக்களை புத்தகங்களாக்கி வெளியிடவும் எப்பவும் அவருக்குப் பணம் தேவைப்பட்டது. இருப்பினும், நிறுவனங்களும் நல்மனம் கொண்டோரும் விரும்பி அளித்த பரிசுகளையும் பணத்தையும் அவர் பிடிவாதமாக மறுத்து வந்தார்.

அவருடைய வாழ்நாளில் வெவ்வேறு சமயங்களில் இப்படி பரிசுகள், அன்பளிப்புகள் அவரைத் தேடி வந்தன. எவர் தரினும் சரியே,அவற்றை நான்பெற்றுக்கொள்ள மாட்டேன்; இது என் கொள்கை என அவர் உறுதியாகத் தெரிவிப்பதை வழக்கமாக்கினார். கோவை ஈ.எஸ். தேவசிகாமணி தந்த முதுபெரும் எழுத்தாளருக்கான பாராட்டுப் பணம், சென்னை அக்னி அட்சரவிருது, சிந்து அறக்கட்டளை தமிழ்ப்பணி விருது, இலக்கியச் சிந்தனை தர முன்வந்த ஆதிலெட்சுமணன் நினைவுப் பரிசு... இப்படி பல.

ஒரு சமயம், செல்லப்பா உடல் நலம் இல்லாது சிரமப்படுவதை அறிந்த கோவை ஞானி அன்புடன் அவருக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பினார். நான் எவரிடமும் அன்பளிப்புப் பெறுவதில்லை என்று எழுதி அதை நண்பருக்கே திருப்பி அனுப்பிவிட்டார். இதையும் செல்லப்பா என்னிடம் சொன்னார். ஞானி ரொம்ப கால நண்பர்தான்; ஆனாலும் என் கொள்கையை நான் விடுவதற்கில்லை என்றார்.

1999 மே மாதம் கோவையில் ஞானியைக் கண்டுபேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எங்கள் நண்பரான செல்லப்பாவின் மரணம் குறித்துப் பேசிக்கொண்டோம். அப்போது அவர் வருத்தத்துடன் குறிப்பிட்டார். 'ஒரு சந்தர்ப்பத்தில் அவருக்கு உபயோகமாக இருக்கும் என்று ஆயிரம் ரூபாய் அனுப்பினேன். அதை அவர் திருப்பி அனுப்பிவிட்டார்'.

'என்னிடம் செல்லப்பா சொன்னார். நீங்கள் பணம் அனுப்பியதையும் சொன்னார். அதை அவர் திருப்பி அனுப்பி

விட்டதையும் சொன்னார். என்ன பண்ணுவது! நான் என் கொள்கைப்படி நடந்து கொண்டேன் என்றும் சொன்னார்.'

'என் விஷயத்திலும் அவர் அப்படி நடந்து கொள்வார் என்று நான் எண்ணியத்தில்லை. என் மனசுக்கு கஷ்டமாக இருந்தது' என்றார் ஞானி.

அன்பளிப்புகள் விஷயத்தில் மற்றவர்கள் மனஉணர்வுகள் பற்றி செல்லப்பா கவலைப்பட்டதில்லை. அவர் தனது உள்மனசின் குரலுக்கே செவிசாய்த்தார். அதன்படி செயல் புரிந்தார்.

அமெரிக்காவின் குத்து விளக்கு அமைப்பின் புதுமைப்பித்தன் நினைவுப் பரிசு முதல்முறையாக அறிவிக்கப்பட்டு செல்லப்பாவுக்கு வழங்கப் பெற்ற போதும், அவர் அதை ஏற்க மறுத்தார். ஆனால் நண்பர்கள் பணத்தைப்பெற்று அவருடைய எழுத்துக்களை புத்தகமாக வெளியிட உபயோகிக்கலாமே என்று வலியுறுத்தினார்கள். நீங்களே அதைச் செய்யுங்கள் என்று செல்லப்பா கூறிவிட்டார். 'நாடக வெளி' ரெங்கராஜன் பொறுப்பேற்று, செயல்புரிந்து செல்லப்பாவின் 'என் சிறுகதைப் பாணி' என்ற நூலை வெளிக் கொணர்ந்தார்.

8

அவரது 75–85 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் சி.சு. செல்லப்பா புரிந்துள்ள சாதனைகள் பெரிது– பெரிது என வியக்கச் செய்வனவாகும்.

'என் சிறுகதைப் பாணி', 'பிச்சமூர்த்தியின் கவித்துவம்' 'ஊதுவத்திப் புல்' (ந.பி. கவிதைகள் பற்றியது), 'எழுத்து களம்' ('எழுத்து' பத்திரிகை அனுபவங்கள்), 'பி.எஸ். ராமையாவின் கதைக் களம்' இப்படி அநேகம் எழுத்துப் பிரதிகளை உருவாக்கினார். ஒவ்வொன்றும் 800 பக்கங்கள், ஆயிரம் பக்கங்கள் என்று வரும். ஒவ்வொன்றும் தனித்தனி சாதனை தான்.

இவற்றில் முதல் மூன்றும் புத்தகங்களாக வந்து விட்டன. 'ராமையாவின் சிறுகதைக்களம்' நூலை செல்லப்பா தனது இறுதி நாட்களில் சிரமப்பட்டு புத்தகமாக கொண்டு வந்தார். அவர் கடைசியாகப் பிரசுரித்த நூல் அதுதான்.

இவற்றை எல்லாம் விட முக்கியமானது – மகத்தான சாதனை என்று குறிப்பிட வேண்டியது – தனது விடுதலைப் போராட்ட கால அனுபவங்களை அடிப்படையாக்கி செல்லப்பா எழுதிய 'சுதந்திர தாகம்' எனும் இரண்டாயிரம் பக்க நாவல் ஆகும்.

அதைத் தனது தள்ளாத வயதிலும் எழுதி முடித்தது ஒரு பெரும் சாதனை. பெரும் சிரமங்களுக்கிடையிலும் அதை மூன்று பாக நூலாக அச்சிட்டு வெளியிட்டது உண்மை யிலேயே மா பெரும் சாதனைதான்.

செல்லப்பா இலக்கியத்தையே உயிர்மூச்சாகக்கொண்டு வாழ்ந்தார் என்று சொல்லலாம். எப்போதும், எவரிடமும் அவர் இலக்கிய விஷயங்கள் பற்றியே பேசினார். தமிழில்இதுவரை செய்யபட்டிருப்பவை போதாது; இன்னும் அதிகம் செய்யப்படவேண்டும்; என்னஎன்ன செய்யலாம், அவற்றை எப்படிச் செய்யவேண்டும் என்று அவர்சதா சிந்தித்து வ்ந்தார். அவற்றை நண்பர்களிடம் ஆர்வத்தோடு எடுததுச்சொல்வதில் உற்சாகம் கண்டார்.

தமிழில் விமர்சனம் வளரவேண்டும் என்பதற்காகவே செல்லப்பா 'எழுத்து' பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினார். அது

நின்றுவிட்ட பிறகு, சில வருடங்கள் கழித்து, இலக்கிய விஷயங்களை விளக்குவதற்காகவே 'பார்வை' (Perspective) என்ற இதழைத் தொடங்கினார். இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டிருந்த அதுஅவர் எதிர்பார்த்த வரவேற்பைப் பெறவில்லை. மூன்று இதழ்களுடன் நின்று விட்டது.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், 'சுவை' என்ற காலாண்டு இதழைத் தொடங்கினார். அதுவும் மூன்று இதழ்களுக்கு மேல் வளரவில்லை.

செல்லப்பா ஆய்வுமுறை விமர்சனத்தை (Analytical Criticism) கைக்கொண்டிருந்தார். ஆயினும் சிலரது படைப்புகளை அவர்அப்படி ஆழ்ந்த ஆய்வுக்கு உட்படுத்த வில்லை என்றே சொல்லவேண்டும்.

அவர் பிடிவாதமாகச் சில கருத்துக்ளைக் கொண்டிருந்தார். அவற்றை அவர் மாற்றிக்கொண்டதே யில்லை. 'மணிக்கொடி' எழுத்தாளர்களுக்குப் பிறகு சிறந்த சிறுகதைப் படைப்பாளிகள் தமிழில் தோன்றவேயில்லை என்பது அவற்றில் ஒன்று. 'எழுத்து'க்குப் பிறகு விமர்சனம் கவனிக்கப்படவில்லை என்றும் அவர் கருதினார்.

அனைத்தினும்மேலாக, பி.எஸ். ராமையா சிறுகதைகள் பற்றி அவர்மிக உயர்ந்த கருத்துகொண்டிருந்தார். ''படைப்புக் களத்தில் ராமையா ஸ்தானம் தான் முதல். வேர்ல்ட் ஃபிகர்' அவர். அவ்வளவு வைரைட்டி. தீம்ஸ். யாராலும் கன்சீவ் பண்ணமுடியாது. ஐரணிக்கு அவர் தான் ராஜா. உலகத்திலேயே' என்று ஓங்கி அடித்துச் சொல்லி வந்தார்.

பி.எஸ். ராமையா கதைகளைப் பற்றி வேறு விதமான கருத்து தெரிவித்தவர்களை விரோதிகளாக மதித்தார் அவர்.

'ராமையா கதைகள் பற்றி நீங்கள் இப்படி உயர்வாகப் பேசுவது உங்களுடைய வத்தலக்குண்டு ஊர் அபிமானத்தினால் தான்'' என்று சி. கனகசபாபதி ஒரு சமயம் செல்லப்பாவிடம் சொல்லிவிட்டார்.

செல்லப்பாவுக்கு கோபம்வந்தது. கனகசபாபதியுடன் மேலும் பேச விரும்பாமல் அவரைவிட்டு வேகமாக நடந்து போய்விட்டார்.

இப்படிஅவர்கள் பேசிக்கொண்டது ஒரு ஓட்டல் வாசலில் சி.க. ஓட்டலைவிட்டு வெளியே வரக்காத்து நிற்க வில்லை செல்லப்பா.

கனகசபாபதி பின்னர் வந்து பேச முயன்ற போதும், செல்லப்பா அவருடன் பேச மறுத்துவிட்டார். 'ராமையா சிறுகதைகள் பற்றி தரக்குறைவாகப் பேசுகிற ஒருவரோடு எனக்கு நட்பு தேவையில்லை' என்று உறுதியாகத் தெரிவித்தார் அவர்.

சி. கனகசபாபதி 'எழுத்து'வில் புதுக்கவிதைகளில் தேர்ந்து எடுத்து 'புதுக்குரல்' தொகுப்பாக உருவாவதற்கும், அது மதுரைப் பல்கலைக் கழகத்தில் பாடநூலாகத் தேர்வாகி இடம்பெறுவதற்கும் காரணமாக இருந்தவர். 'எழுத்து'வில் அரிய ஆய்வுக்கட்டுரைகள் எழுதியவர். செல்லப்பாவுக்கு நெருங்கிய நண்பராக இருந்தவர். ஆயினும், ராமையாவின் எழுத்து பற்றி அவர் மாறுபட்ட கருத்து கொண்டிருந்ததை செல்லப்பாவால் மன்னிக்கமுடியவில்லை. அந்த நிகழ்ச்சிக்குப்பிறகு சி. கனகசபாபதியுடன் செல்லப்பா நட்புறவு கொள்ளவேயில்லை.

இதைப்போலவே ஒரு சுவாரசியமான நிகழ்ச்சியை திருப்பூர் கிருஷ்ணன் பதிவு செய்திருக்கிறார். அவருடைய அனுபவம் இது –

''அன்று பி.எஸ். ராமையாவைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். ராமையாவைப் பற்றிச் சொல்லும்போது அவர் முகமெல்லாம் பளபளவென ஜொலிக்கும். ராமையாவிடம் அவர்கொண்டிருந்த அன்பு மட்டுமல்ல, ராமையாவின் இலக்கியத்தின் மேல்அவர் வைத்திருந்த மதிப்பும் கூட விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது.

ராமையா படைப்புகள் அத்தனையையும் ஒன்றுவிடாமல் புத்தகமாக வெளியிட வேண்டும் என்றார்என்னிடம். ராமையா உன்னதமான எழுத்தாளர் என்பதையும், ஆகச் சிறந்த படைப்புகள் பலவற்றையும் எழுதியிருக்கிறார் என்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் 'குங்குமப் பொட்டுக்குமாரசாமி' என்றெல்லாம் அவர் எழுதிய படைப்புகள் சாதாரணமானவை. அவரின் பொருளாதாரத் தேவைக்காக அவர்எழுதிக்குவித்தவை. அவற்றை நீக்கிவிட்டு, காலத்தை வென்று நிற்கும் மற்ற ராமையா படைப்புகளை

செல்லப்பாவே தேர்வு செய்துதொகுக்க வேண்டும் என்பது என் வாதம்.

திடீரென்று செல்லப்பா சுவரைப்பார்க்கத் திரும்பி உட்கார்ந்து கொண்டுவிட்டார். அறையில் ஏற்கனவே இரண்டு பேர் இருந்தோம். இப்போது மூன்று பேர் ஆகிவிட்டோம். நான், அவர், சுவர் !

'ஏன் சுவரைப் பார்த்து உட்கார்ந்து விட்டீர்கள்?'

'ஏ சுவரே ! வந்திருக்கும் இந்த ஆளுடன் பேசுவதை விட, எனக்கு உன்னுடன் பேசுவது திருப்தியாக இருக்கிறது.'

'ஆமாம். ஏனென்றால் சுவருக்கு அபிப்பிராயங்கள் கிடையதால்லவா!'

'ராமையாவை விமர்சிக்கும் நபருடன் எனக்கு பேச்சு வார்த்தை கிடையாது.'

'நாம் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோம். பி.எஸ். ராமையாவை விட்டு விட்டு மற்றவற்றைப்பற்றி மட்டும் இனிமேல் பேசுவோம்.'

சரி என்று சொல்லிவிட்டு மறுபடி என்பக்கமாகக் திரும்பி உட்கார்ந்து கொண்டார். என் உதட்டோரத்தில் சிரிப்பு ஒளிந்து கொண்டிருந்ததை அவர் கவனித்திருக்க வேண்டும். 'என்னடா பண்ணுவேன். உன்னோட பேசாம என்னால் இருக்கமுடியாதேடா' என்றார்.

என் மனம் நெகிழ்ந்தது.'

('பாரதமணி' செப்டம்பர் 2001)

செல்லப்பாவின் பிடிவாதகுணம் பிரசித்தமானது. அது அவரது பலமாகவும் பலவீனமாகவும் அமைந்திருந்தது. அவருடைய தாயார் வழி ஊரான வத்தலக்குண்டு மீது அவருக்குத் தனி அபிமானம் இருந்தது. அந்த ஊருக்குப் பெருமை தேடித்தந்த பி.எஸ். ராஜமய்யர், பி.எஸ். ராமையா இருவரையும் அவர் போற்றி மகிழ்ந்தார்.

வத்தலக்குண்டுக்காரர்கள் இவ்விருவரின் பெருமைகளை உணரவில்லையே என்ற வருத்தமும் செல்லப்பாவுக்கு இருந்தது. ராஜம் அய்யரின் பெருமையை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே

அவர் ராஜமய்யரது நூற்றாண்டு விழாவை அவ்வூரில் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தார். நடத்திக்காட்டினார். அய்யர் எழுதிய 'ரேம்பிள்ஸ் இன் வேதாந்தா' என்ற ஆங்கில நூலை உயர்ந்த பதிப்பாக வெளியிட்டு மகிழ்ந்தார்.

அதே போல ராமையாவின் பெருமையையும் வத்தலக்குண்டுக்காரர்கள் அறியவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். சென்னையிலேயே வசித்த செல்லப்பா ஒரு கால கட்டத்தில், இனி வத்தலக்குண்டில் வசிப்பது என்று தீர்மானித்து, மனைவியுடன் அவ்வூர்போய்ச்சேர்ந்தார். சில வருடங்கள் அங்கு அமைதியாக வாழ்ந்தார். பிறகு மீண்டும் சென்னையிலேயே வசிப்பது என்று வந்து சேர்ந்தார்.

அந்த ஊரில் இலக்கியச் சூழ்நிலையே இல்லை. அங்கே இருப்பவர்களுக்கு இலக்கிய உணர்வும் ரசனையும் கொஞ்சம் கூட இல்லை. என்னால் இயன்ற அளவு முயன்றேன். அவர்கள் விழிப்படைவதாகத் தெரியவில்லை. ராமையாவின் மதிப்பைத் தெரிந்துகொள்ளவே மறுக் கிறார்கள். சின்ன வய்சில் ராமையா அவர்களிடையே வளர்ந்து, வறுமையில் கஷ்டப்பட்டது இதுகளையே பெரிதாகச்சொல்லி, ராமையாவை இளப்பமாகக் கருதிப் பேசுகிறார்கள். அவர்களோடு இருக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. சென்னைக்கே வந்துவிட்டேன் என்று அவர் சொன்னார்.

சில வருட சென்னை வாசத்துக்குப் பின்னர் அவர் மனைவியுடன் மதுரை சேர்ந்து மகனுடன் வசிக்கலானார். அவருடைய முதுமை, அவரைப் படுத்திய நோய்கள், இவற்றால் அம்மாவும் அப்பாவும் படுகிற சிரமங்களை கவனித்து அவர்களின் ஒரே மகன் சி. மணி இருவரையும் தன்னுடன் வந்து தங்கியிருக்கும்படி கேட்டுக்கொண்டதே காரணம். மணி பேங்கில் பணிபுரிகிறார்.

அவருக்கு உத்தியோக நிமித்தமாக பெங்களூருக்கு இடமாறுதல் ஏற்பட்டது. அவர் குடும்பத்தோடு செல்லப்பா வும் பெங்களூர் சென்றார். தமிழ்நாட்டை விட்டுப்போய் வேற்றுமாநிலத்தில் வாழ வேண்டியிருக்கிறதே என்ற மனக்குறை செல்லப்பாவுக்கு இருந்தது.

எனினும், வாய்த்த தனிமையை செல்லப்பா நன்கு பயன்படுத்திக்கொண்டார். அவர் எழுத எண்ணியிருந்த பலவற்றையும் எழுதி முடித்தார். முக்கியமாக, அரைவாசி எழுதிக்கிடப்பில் போட்டிருந்த ‘சுதந்திரதாகம்’ நாவலை எழுதி நிறைவு செய்ய முடிந்தது அவரால்.

இருப்பினும், அந்த சூழ்நிலை அவருக்கு ஒத்துப்போகவில்லை. குடும்பத்தில் சகஜமாக எழக்கூடிய சிறு சிறு பிணக்குகள் அவர்உள்ளத்தை பாதித்தன. அதனால் மகனோடு சண்டை பிடித்துக்கொண்டு அவர் மீண்டும் தனி வாழ்க்கை நடத்த சென்னைக்கே வந்து சேர்ந்தார்.

சென்னையில், அதுவும் திருவல்லிகேணிப்பகுதியில் வசிக்கையில் கிடைக்கிற சூழலும் மனநிம்மதியும் மற்றஇடங்களில் எனக்குக்கிடைக்கவில்லை. இனி சாகிற வரை இங்கேதான் என்று சொன்னார் செல்லப்பா.

அவ்வாறே நிகழ்ந்தது. 1998 டிசம்பர் 18ஆம் நாளன்று, திருவல்லிக்கேணி, பிள்ளையார் கோவில் முதல் தெருவில் அவர்வசித்த வீட்டில் செல்லப்பாவை மரணம் தழுவியது.

9

மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு கிராமத்தில், 1912 செப்டம்பர் 29ஆம் நாள் பிறந்தார் செல்லப்பா.

அவரது தந்தை பெயர் சுப்பிரமணிய அய்யர். ஊர் சின்னமனூர். ஆகவே 'சி.சு.' என்பதைத் தனது பெயரின் முதல் எழுத்துகளாகக் கொண்டார்.

வெகுகாலம் வரை அவர் சி.எஸ். செல்லப்பா என்றே பெயரை எழுதி வந்தார். 'பாரததேவி' மாத இதழில், கு.ப. ராஜகோபாலுடன் அவர்பணியாற்றியபோது, பத்திரிகை ஆசிரியர். வ.ரா. பெயரை தமிழில் எழுதவேண்டும் என்று குறிப்பிடவும், சி.சு. செல்லப்பா என்று எழுதலானார்.

மதுரை கல்லூரியில் செல்லப்பா பி.ஏ. படித்தார். அப்போதே, மகாத்மா காந்தியின் வழிகாட்டலினால் ஈர்க்கப்பட்டு, சுதந்திரப்போராட்டத்தில் கலந்து கொண்டார். சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுசிறை சென்றார். விடுதலை பெற்று வெளியே வந்தபிறகு, காந்தீய வாழ்க்கை முறைகளைக்கடைப்பிடித்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். கைராட்டையில் நூல்நூற்றல், கையால் செய்யும் காகிதம் தயாரித்தல், போன்றவற்றில் அவர்உற்சாகம் கொண்டு ஊக்கத்துடன் செயல்பட்டார். அப்போதே எழுத்து முயற்சியிலும் முனைத்திருந்தார்.

1930களில் புகழ்பெற்று விளங்கிய 'சுதந்திரச்சங்கு' வாரப்பத்திரிகையில் சி.சு.செல்லப்பாவின் முதல் கதை வெளிவந்தது. 1934ம் ஆண்டில். அது முதல்அவர் ஆர்வத்தோடு சிறுகதைகள் எழுதலானார். 'மணிக்கொடி' இதழில் அவருடைய கதைகள் தொடர்ந்து இடம் பெற்றன. கலைமகள், பாரததேவி, தினமணி, சந்திரோதயம் முதலிய பத்திரிகைகளில், தனித்தன்மை உடைய சிறுகதைகளை அவர் எழுதினார். அதன் மூலம் இலக்கிய ரசிகர்களின் கவனிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றார்.

'மணிக்கொடி' நடந்துகொண்டிருந்த காலத்தில் (1930 களில்) சி.சு. செல்லப்பா சென்னைக்கு வந்து பத்திரிகைத் துறையில் பணிபுரியலானார். 'மணிக்கொடி'க்குப்பிறகு, 'பாரததேவி' மாத

இதழில் வேலை பார்த்தார். 1947 முதல்1953வரை 'தினமணி' நாளிதழில் சஞ்சிகைப்பகுதியின் பொறுப்பேற்று செயல்புரிந்தார். 'தினமணி சுடர்' 'தினமணி கதிர்' என்று பெயர் மாறுவதற்கும் அவரே காரணமாக இருந்தார். கருத்து வேற்றுமையால் அவர் தினமணியிலிருந்து வெளியேறினார்.

1959ல் இலக்கிய விமர்சனத்துக்காகவும், புதிய சோதனை முயற்சிகளைப் பரப்பவும் அவர் 'எழுத்து' என்ற மாதப் பத்திரிகையை ஆரம்பித்தார். புதுக்கவிதை வளர்ச்சி பெறுவதற்கு 'எழுத்து' வெகுவாக உதவியது.

சி.சு. செல்லப்பா நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். அவற்றை,பிற்காலத்தில் அவரே தொகுத்து எழுத்து பிரசுரம்' வெளியீடுகளாகப் பதிப்பித்தார். செல்லப்பா சிறுகதைகள் என்று ஏழு தொகுதிகள் வந்தன. அவை தவிர, சிறு சிறு புத்தகங்களாக கைதியின் கர்வம், செய்த கணக்கு, பந்தயம், ஒரு பழம், நீர்க்குமிழி, பழக்கவாசனை ஆகியனவும் வெளியிடப்பட்டன.

தனது சிறுகதைகள் பற்றி, 'என் சிறுகதைப் பாணி' என்ற பெரிய நூலை சி.சு. செல்லப்பா எழுதிவெளியிட்டிருக்கிறார்.

ஆங்கிலத்திலிருந்து சிறந்த சிறுகதைகள் பலவற்றையும் அவர்தமிழாக்கி பத்திரிகைகளில் பிரசுரம் செய்தார். 'எழுத்து' காலத்தில் செல்லப்பா கவிதைகள் எழுதுவதில் ஈடுபட்டார். 'மாற்று இதயம்' என்ற நீண்ட கவிதையும், மகாத்மா காந்தி பற்றிய 'நீ இன்று இருந்தால்' குறுங்காவியமும் நூல்களாக வந்துள்ளன.

காற்று உள்ளபோதே, ஏரிக்கரை, குறித்த நேரத்தில், எல்லாம் தெரியும் ஆகியவை அவருடைய கட்டுரைத் தொகுப்புகள், இவற்றுடன், தமிழில் சிறுகதை பிறக்கிறது. தமிழ் சிறுகதை முன்னோடிகள், இலக்கிய விமர்சனம், படைப்பிலக்கியம், ந. பிச்சமூர்த்தியின் கவிதைகள் பற்றி 'ஊதுவத்திப்புல்' 'மாயத்தச்சன்', எனது சிறுகதைப் பாணி, பி.எஸ். ராமையாவின் கதைக்களம் ஆகிய விமர்சன நூல்களும் வெளிவந்திருக்கின்றன.

செல்லப்பா நாடகத்திலும் ஆர்வம் காட்டினார். 'எழுத்து நாடக அரங்கம்' என்ற பெயரில் ஒன்றிரு நாடகங்கள் அரங்கேற்றம் செய்தார். அப்போது, மதுரை மாவட்ட மறவர் வாழ்க்கையை அடிப்படையாக்கி

'முறைப்பெண்' என்ற நாடகத்தை எழுதி, நூலாக வெளியிட்டார்.

ஜல்லிக்கட்டுவை ஆதாரமாகக்கொண்ட 'வாடிவாசல்' எனும் குறுநாவல் தனிப்புத்தகமாக வந்துள்ளது. 'எழுத்து'வில் சோதனை ரீதியில் அவர்எழுதிய 'ஜீவனாம்சம்' நாவலும் பிரசுரமாயிற்று. அவருடைய இறுதிநாட்களில் 'சுதந்திர தாகம்' என்கிற மாபெரும் நாவல் மூன்று பாகங்களாக வெளிவந்தது.

இவை எல்லாம் தமிழ் வாசகர்களிடையே உரிய கவனத்தைப் பெறவில்லை. அது செல்லப்பாவின் குறை அன்று.

சி.சு. செல்லப்பா சதா பேச்சிலும் செயலிலும் இலக்கிய உணர்வுடனேயே வாழ்ந்தார். வாழ்க்கையில் முன்னேற விரும்பிச்செயலாற்றுகிற பலரைப் போல, எழுத்து வேறு, வாழ்க்கை வேறு என்று அவர் நடந்து கொண்டதில்லை. அதனால் வறுமை நிலையை விரும்பி ஏற்றுக்கொண்டார். எச்சமயத்திலும் அவர் மனஉறுதி யோடும் பிடிவாதத்துடனும்நேர்மையுடனும் வாழ்ந்து காட்டினார். ஒரு போதும் அவர்நம்பிக்கை இழந்ததில்லை. கடுமையாக உழைப்பதில் அவர் உற்சாகம் கொண்டிருந்தார். உயர்ந்த எண்ணங்களும் எளிய வாழ்க்கை முறைகளும்கொண்டு வாழந்து, மனித வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமும், தனி மாண்பும் சேர்க்கும் உயர்ந்த மனிதர்களில் சி.சு. செல்லப்பாவும் ஒருவர்.

'நான் தேர்ந்து கொண்ட கொள்கைகளிலிருந்து வழுவாமல், கடைசிவரை, நேர்மையாக வாழ்ந்து விட்டேன். இந்த திருப்தி எனக்கு இருக்கிறது' என்று செல்லப்பா தனது இறுதிக்கட்டத்தில் என்னிடம் சொன்னார்.

ஆயிரக்கணக்கான பக்கங்களில் அவர் எழுதி வைத்துள்ள 'எழுத்துக் களம்' 'விமர்சனத் தோட்டம்' ஆகிய நூல்கள் அச்சு வடிவம் பெறவில்லையே என்ற மனக்குறை செல்லப்பாவுக்கு இருந்தது.

ஆயினும், அவர் செய்து முடித்துள்ள இலக்கிய சாதனைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் சி.சு. செல்லப்பாவுக்கு சிறப்பான தனி இடத்தைப் பெற்றுத் தந்திருக்கின்றன என்பதில்சந்தேகம் இல்லை.

எழுத்து

ஆசிரியர் : சி.சு. செல்லப்பா

புதுமை இலக்கிய மாத ஏடு

அடக்கம் :

எழுத்து வளர	– தலையங்கம்
சாகித்ய அகாடமி தமிழ் பரிசு	– க.நா.சு
பெட்டிக்கடை நாரணன்	– ந. பிச்சமூர்த்தி
கவிதை	– மயன்
நல்ல தமிழ்ச் சிறுகதைகள்	– க.நா. சுப்ரமண்யம்
எழுதுவதெல்லாம்...	– சிட்டி
தாழை பூத்தது	– பெ.கோ. சுந்தரராஜன்
பாரதிக்குப்பின் – 1	– க.நா.சு.
கமலாம்பாள் சரித்திரம்	– சி.சு. செல்லப்பா
விண்ணும் மண்ணும்	– ந. சிதம்பரசுப்ரமண்யன்
தற்கால தமிழ் இலக்கிய விமர்சன தோரணை	– சி.சு. செல்லப்பா
கௌமாரி	– சாலிவாஹனன்
எம்.வி.வி. கதைகள்	– தி. ஜானகிராமன்

எழுத்து வளர

முழுக்க முழுக்க கருத்து ஆழமும் கனமும் உள்ள ஒரு இலக்கியப் பத்திரிகையை, இந்த பாமரப் பிரியமான பத்திரிக்கையைப் பரப்புக் காலத்தில் ஆரம்பிப்பது ஒரு சோதிக்கிற முயற்சிதான். எழுத்து பற்றி பிரஸ்தாபித்தபோது பல வாசகர்கள், எழுத்தாளர்கள், நண்பர்கள் இத்தகைய அபிப்ராயத்தைத் தான் எதிரொலித்துச் சொன்னார்கள். ஆனால், இத்தகைய ஒரு முயற்சி தற்போது தேவை என்பதை மட்டும் எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். தன் ரகவரிசையில் எழுத்து முதலாவதாக வருகிறது என்று நாம் அடித்துச் சொல்ல வரவில்லை. கால் நூற்றாண்டுக்கு முன்பு வ.ரா. 'மணிக்கொடி' இத்தகைய சோதனை முயற்சியாக அமைந்ததற்கு முன்பு, பால பாரதி, பஞ்சாமிர்தம், பிரஜா நுகூலன் போன்றவைகளும் பின்பு சுதந்திரச் சங்கு, சூறாவளி, தேனீ போன்றவைகளும் அதன் உடன் நிகழ்காலத்திலேயே கலைமகள்

பத்திரிகையும் அதன் தன்காலம், சூழ்நிலைக்கு ஏற்ப இலக்கிய சோதனை முயற்சிகளில் இறங்கியவைகள் தான். அந்த மரபு வழியில் வரும் எழுத்து இன்றைய சூழ்நிலை, பரப்பு, வீச்சு போக்குக்குத் தக்கபடி தன்னை உருவாக்கிக் கொண்டு வெளிவருகிறது என்பதைத்தான் குறித்துச் சொல்லைத் தோன்றுகிறது.

இன்றைய போக்குகளை எழுத்து எப்படி பிரதிபலிக்கும், எதிர்காலப் போக்குக்கு என்ன வகை செய்யும்,சென்றகாலப் போக்குகளை எவ்வாறு மதிப்பிடும் என்பதுதான் இந்த முயற்சியின் முன் உள்ள கேள்வி. அதற்கு உள்ள பதில்களை இந்த ஏடு ஆரம்பித்து, வரும் ஏடுகள் தொடர்ந்து சொல்லும். மக்களுக்குப் பிடிக்கிறதை நாங்கள் கொடுக்கிறோம் என்ற குரல் இலக்கிய உலகத்திலும் அரித்துக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில் பழக்க முறையாகிவிட்ட ரீதியிலேயே கருத்துக்களையும் அலுக்கும்படியாக, ஒரே விதமாக கொடுக்கும் ஒரு மனப்பாங்கு பரவியுள்ள நிலையில், மக்களுக்கு இன்னின்னவைகளை கொடுத்து, பிடிக்கச் செய்ய வேண்டும், புதுப் புது விதமாக நோக்கும் பார்வையும் கொண்டு வெளியிட்டுச் சொல்ல வேண்டும் என்ற ஒரு நினைப்பு ஒரு மொழி இலக்கியத்துக்கு அவசியமானது. அந்த நினைப்புடன் எழுத்து ஏடுகள் பெருகும்.

எழுத்து என்ற வார்த்தைக்கு அகராதி ரீதியாக அக்கரம், இலக்கணம், கல்வி, கையெழுத்து, ஆதாரச் சீட்டு, ஓவியம் என்றெல்லாம் விளக்கம் இருந்தாலும் 'இலக்கியப் படைப்பு' என்ற அர்த்தத்தில் தான் பெயர் தாங்கி வருகிறது இந்த ஏடு. இதனால் அம் மொழி பற்றிய பலவித அக்கறைகளை எழுத்து ஒதுக்கி விடும் என்பதல்ல. மொழியும்இலக்கியமும் இசைந்து சமநடை போட்டுச் செல்லும் வகையாக செயல்படும்.

இலக்கிய அபிப்ராயங்களை எடுத்துச் சொல்வதில் சிறப்புகளை மட்டும் எடுத்துச் சொல்வதுடன் நின்று விடுவது ஒரு வகை. குறைகளையும் சேர்த்துச் சொல்வதுமற்றொரு வகை. குறைகளை மட்டும் எடுத்துச் சொல்வது மூன்றாவது வகை. இந்த மூன்றில் முதலாவது பாராட்டாக நின்று விடுவது. மூன்றாவது கண்டனமாக மிஞ்சுவது. இரண்டும் விமர்சனம் அல்லது திறனாய்வு என்ற ஆராய்ச்சி எல்லைக்கு அப்பாலேயே நின்று விடுபவை. நடுவகையான, நிறை- குறை இரண்டையும் எடுத்துக் காட்டும் ஒரு

கருத்து ஓட்டப் போக்கே விமர்சனம் ஆகும். இந்த அடிப்படையில் தான் எழுத்து இயங்கும். வெறும் கொடூரமும் சிலாகிப்பும் காட்டி இலக்கியத்தை வளர்த்துவிட முடியாது. இதுவரைய இலக்கிய சரித்திரம் அதை நிரூபித்திருக்கிறது. புகழ்ச்சியும் இகழ்ச்சியும் அததுக்காக ஒரு அந்தஸ்து கொண்டு, எந்த ஒரு இலக்கிய வடிவத்தின் ஸ்தானத்தையும் நிரந்தரமாக காப்பாற்றியோ அழித்தோ கொடுத்ததில்லை.

இலக்கிய அபிப்ராயத்தைச் சொல்வதில் நாம் காட்டியுள்ள ஆரம்பம், முதல் எழுத்து நிலையில் தான்இருக்கிறதே தவிர, இரண்டாவது எழுத்துக்குப் போகவில்லை. திட்டவட்டமாக, அடம்பிடித்த பேச்சாக ஒன்றைச் சொல்வதோடு நிறுத்திக்கொண்டு விடும் முறைதான் பெரிதும் வழக்கில் இருந்து வந்திருக்கிறது. ஒரு இலக்கிய நூலைப் பற்றி அபிப்ராயம் சொல்வதில் பகுப்பு முறையைக் கையாண்டு, விண்டுபார்த்து நயம் காணும் முறை – இன்றைய இலக்கியம் மட்டுமல்ல, பழமை இலக்கியங்கள் பற்றியும் கூடச் சொல்லலாம் – கையாளப்பட்டதாகச் சொல்ல முடியாது. ஒரு இலக்கிய உருவம் எதனால் நன்றாக இருக்கிறது, இல்லை என்று அந்த நூலில் அமைந்த குணம் குறைகளைக் கொண்டே விளக்கிப் பார்ப்பது தான், நல்லது கெட்டது பிரிக்கவும், சிறப்பு சிறுமை அறியவும் ஏதுவாக இருக்கும். அது மட்டுமல்ல. இலக்கியப் படைப்புக்கான இலக்கண லக்ஷண மரபு, மூன்று காலத்தையும் ஊடுருவிச் செல்லும் இழையோட்டமாக நீண்டு செல்வதையும் பார்க்கமுடியும்.

இந்த விதமான கருத்துக்களைச் சொல்ல வருவதில் கருத்து வேற்றுமை இருக்கத்தான் செய்யும் என்பதை புதிதாகச் சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. 'எழுத்து'க்குப் பொறுப்பு ஏற்று இருப்பவரும் அதை அணைத்து நிற்பவர்களும் இதை உறுதியாக நம்புகிறவர்கள் தான். கலைகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் உள்ள உறவு மறுக்க முடியாதது. அது எந்த அளவுக்கு இருக்கு என்பதைப் பொறுத்துத் தான் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன. கலை உருவங்களை ரசித்து, கோட்பாடு பற்றிய வித்யாசங்களைப் போக்கிக் கொள்ளக் கூடும். கோட்பாடுகளை எடுத்துக்கொண்டு கலை உருவத்தை விளக்கி ஆதாரம் காட்டி கலை உருவத்தின் மதிப்பை அறியச் செய்ய முடியும். கலைகள் பல்வேறு மாறுபட்ட சித்தாந்தங்களுக்கு களமாக அமைந்துள்ளன என்பது

இன்று நாம் பார்க்கிற விஷயம். அதை நினைவிலிருந்து ஒதுக்கிவிட்டு நாம் ஒரு இலக்கிய நூலை அணுக முடியாது. ஆனால் அவ்விதம்பார்ப்பதில் சில எச்சரிக்கைகளை மனதில் கொள்ளவும் தவறக் கூடாது. எனவே எழுத்து இலக்கியக் கோட்பாடுகள் தத்துவக் கோட்பாடுகள் சம்பந்தமாக திறந்த கதவாகத் தான் இருக்கும். கருத்துப் பரிமாறுதல்களின் விளைவாகத்தான் இலக்கியப் படைப்பும் ரசனையும் ஏற்படமுடியும் என்ற நம்பிக்கையை எழுத்து தன்முன் வைத்துக் கொண்டுள்ளது. எழுத்து பக்கங்களில் இந்த இதழில் காணும் வரிகளே அதற்கு சான்றாக அமைந்திருப்பதைப் பார்க்க முடியும்.

கருத்துக்களைச் சொல்வதைப் பற்றி அதிகம் பிரஸ்தாபித்து இருப்பதால்,இலக்கியப்படைப்பு சம்பந்தமாக எழுத்து தனக்கு எல்லைக்கோடிட்டுக் கொண்டுவிடும் என்பதல்ல. சொல்லப் போனால் படைப்புதான் 'எழுத்து'க்கு முதல்அக்கறையாக இருக்கும்.

'சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்து, புதுத்தடம் போட்டுக் கொண்டு இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயன்றவர்களைத்தான் சோதனைக்காரர்கள் என்று சொல்லலாம்.'

என்று க.நா.சு.தன் 'சிறந்த தமிழ்ச் சிறுகதைகள்' கட்டுரையில் கூறியுள்ளது அப்படியே 'எழுத்து' தன் குறிக்கோளாகக் கொண்டுள்ள படைப்பு லக்ஷியமாகும். சோதனை செய்து பார்ப்பவர்களால்தான் இலக்கியமே வளர்ந்திருக்கிறது. தமிழ் இலக்கியத்துக்கு முதல்நாவலைத் தந்த வேதநாயகம் பிள்ளையும் சிறுகதையைத்தந்த பாரதியும் வசன நடையில் புதுமை காட்டிய வ.ரா.வும் இந்த வழிவந்த மற்ற சிலரும் சோதனைக்காரர்கள். இன்றைய இலக்கியம் பற்றிப் பேசும் போது இவர்களைத்தான் முதலில் குறிப்பிடுகிறோம். சுயமாக, தனித்தன்மையுடன் கலைஉருவம் படைத்தவர்களை அதே சுவடில் பின்பற்றி 'காப்பி' அடித்து சிருஷ்டிப்பவர்களை ரசிக உள்ளம் அவ்வளாவாக நீண்ட நாளைக்கு தன் நினைவில் இருத்திக் கொள்வதில்லை. ஆகவே இலக்கிய அபிப்ராயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்களுக்கு களமாக எழுத்து அமைவது போலவே, இலக்கியத் தரமான எத்தகைய புதுசோதனைகளுக்கும் எழுத்து இடம் தரும்.

முடிவாக –

எழுத்து இரண்டு நிபந்தனைகளுடன் வெளி வருகிறது. 2000 பிரதிகளுக்கும் மேல் அச்சாகாது, நேரில் சந்தாதாரராகச் சேருபவர்களுக்குத்தான் கிடைக்கும் என்ற அறிவிப்புகள் நூதனமானவைதான். வாசகர்களின் தொகையைக் கட்டுப் படுத்திக் கொள்வதற்காக அல்ல; இலக்கிய வாசகர்களை தேடிப்பிடிப்பதுதான் 'எழுத்து'க்கு நோக்கம். ஏனெனில் 'பிடித்தமானது' என்ற சாக்கில் பொது வாசகர்களை திருப்திபடுத்துவதற்கான வழிகளை எழுத்து கையாளும், உத்தேசம் இல்லை. 'எழுத்து எனக்குப் பிடித்து இருக்கிறது' என்று சொல்லக்கூடிய வாசகர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அவர்ளைத் தேடும் எழுத்து. எழுத்து தன்முன் கொண்டுள்ள பார்வையைப் பற்றி சொல்லிவிட்டது. இலக்கிய வாசகர்களின் ஆதரவை எதிர்பார்த்து ஒரு துணிச்சலான முயற்சியாக வரும் 'எழுத்து'க்கு தமிழகம் தன் அரவணைப்பைத் தந்து, அது ஏட்டின் பின் ஏடாக அடுக்கு ஏற வகை செய்யும் என்ற நம்பிக்கையுடன் இந்த முதல் ஏடு உங்கள் முன் வைக்கப்படுகிறது.

அழைப்பு அபிப்ராயம் க.நா.சு.
சாகித்ய அகாடமி தமிழ் பரிசு

வளரும் தமிழ் இலக்கியத்துக்கும் டெல்லி சாஹித்திய அகாடமிக்கும் ஒருவித தொடர்புமேயில்லை என்பது அவர்கள் இதுவரை அளித்திருக்கிற மூன்று பரிசுகளிலிருந்து ஓரளவு தெளிவாகவே தெரிகிறது. சாஹித்திய அகாடமியார் இதுவரை தமிழுக்கு மூன்று பரிசுகள் அளித்திருக்கிறார்கள். பரிசுபெற்ற இந்த மூன்று நூல்களுமே இலக்கிய ரீதியில் வளரும் தமிழ் இலக்கியத்தில் நல்ல ஸ்தானம் பெறக்கூடியவையல்ல. சாஹித்திய அகாடமியார் பரிசளிப்பது சாஹித்தியத்துக்காகத்தானே இருக்கவேண்டும்? அதற்குப்பதில் அவர்கள் ஆசிரியர்களின் ஸ்தானத்தை மட்டுமே மனசில் கொண்டு பரிசளித்து வந்திருப்பதாகத் தோன்றுகிறது. பிற இந்திய மொழிகளில் இந்த மூன்று நூல்களையும் மொழி பெயர்த்துத் தந்தால் இன்றையத் தமிழில் நல்ல இலக்கியம் எதுவுமே இல்லையோ என்று பிறர் நினைக்க இடம் இருக்கிறது.

இந்த வருஷப் பரிசுப் பட்டியலைப் பார்க்கும் போது மற்றமொழிகளில் இலக்கிய முயற்சிகளுக்குப் பரிசு அளித்திருக்கிறார்கள் என்றும், தமிழுக்கு மட்டுமே இது நேர்ந்திருக்கிறது என்பதும் தெரிகிறது. அந்த நூல்களின் தராதரங்கள் நமக்குத் தெரியாது. ஆனால் சிறுகதை, நாவல், நாடகம், முதலிய நூல்களுக்குப் பரிசளித்திருக்கிறார்கள். தமிழ் நூல் மட்டுமே ராமாயணத்தைத் திருப்பிச் சொல்லுகிற நூலாக இலக்கிய சிருஷ்டி என்று சொல்லமுடியாத வகையிலே அமைந்திருக்கிறது. இப்படிப் பரிசளித்திருப்பது இலக்கிய வளர்ச்சிக்கு உதவியது ஆகாது.

இந்தப் பரிசுகள் எப்படி அளிக்கப்படுகின்றன என்பது மர்மமாகவே இருக்கிறது. இரண்டு வருஷங்கள் தமிழுக்குப் பரிசு

எழுத்து

மாதந்தோறும் வருவது

தனிப்பிரதி ந.பை. 50

ஆண்டு சந்தா ரூ. 5.00

3 ஆண்டுகளுக்கு ரூ. 10.00 (சிலோனுக்கும்)

பர்மா மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு

(ரூ. 7.50, ரூ. 15.00)

இலங்கை அன்பர்கள் மட்டும் வி.பி.பி. மூலம் சந்தா தொகையை செலுத்தலாம். மற்றவர்கள் மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். சகலவித தகவல்களுக்கும் எழுத முகவரி :

சி.சு. செல்லப்பா, 'எழுத்து'

19-A, பிள்ளையார் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை – 5.

'எழுத்து' பக்கங்களில் கையெழுத்திட்ட கட்டுரைக் கருத்துக்கள் அதை எழுதியவருடையவையாகும். 'எழுத்து' கொண்டுள்ள அபிப்ராயம் அல்ல.

தராதிருந்துவிட்டு மூன்றாவது வருஷம் இந்நூலைத் தேர்ந்தெடுத்தது சரியல்ல என்றே சொல்லவேண்டும். தமிழ் இலக்கியத்தில்இன்றைய வளத்துக்கு அடிகோலித் தந்த காலஞ்சென்ற புதுமைப்பித்தன், வையாபுரிப் பிள்ளை இவர்களுக்கோ, அல்லது இன்று இலக்கிய வளர்ச்சியை சிறுகதை, நாடகம், நாவல், விமர்சனம், சரித்திரம் முதலிய துறைகளில் சாத்யமாக்கும் ந. பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்ரமண்யன், லா.ச.ராமாம்ருதம், ஆர். ஷண்முகசுந்தரம்,

தி.ஜானகிராமன், கு. அழகிரிசாமி, சங்கர்ராம் இவர்களில் யாருக்காவது பரிசை அளிக்கலாமே.

சர்வஜன ரஞ்சகமாக உள்ள பத்திரிகை எழுத்துக்குத்தான் சாஹித்திய அகாடமியின் தமிழ் பரிசு அளிக்கப்படும் என்று தான் நாம் நம்பவேண்டுமா? இந்தக் குறைபாட்டுக்கு காரணம் சாஹித்திய அகாடமித் தமிழ்க் கமிட்டியில் பத்திரிக்கைக்காரர்களும் பேராசிரியர்களும் மட்டுமே இடம் பெற்றிருப்பது தான் என்று சொல்ல வேண்டும்.

பெட்டிக்கடை நாரணன்
ந. பிச்சமூர்த்தி

தான்சாக மருந்துண்ட
தவசிகளைக் கண்டதுண்டோ?
ஊன் சாக,
உயிர் இருக்க
உலவுபவர் சித்தரன்றோ?
நான் யாரு?
சித்தனா தவசியா?
பிழைக்கச் சொத்தெதுவும்
பாட்டனோ வைக்கவில்லை;
அழைத்து வித்தை ஏதும்
அப்பனோ புகட்ட வில்லை.
அதற்காக
ஆண்டவன் கொடுத்த மூளை
அடுப்படிப் பூனையாமா?

நீண்ட விழியாள் துணையால்
குங்குமத்தைத்தண்ணீரோடு
குலுக்கிக் கலர்கள் செய்தேன்;
தயங்காமல் உப்பைப்போட்டு
தனியான சோடா செய்தேன்.

சிறுகதைகள், 'பிக்ஷு' என்ற புனைபெயரில் கவிதைகள், 'ரேவதி' என்ற புனை பெயரில் இலக்கியக் கட்டுரைகள் சென்ற கால நூற்றாண்டு காலமாக எழுதிவரும், முன் வரிசைப் படைப்பாளிகளில் ஒருவரான பிச்சமூர்த்தி தஞ்சை ஜில்லாவில் 1900ல் கும்பகோணத்தில் பிறந்தவர். 'பதினெட்டாம் பெருக்கு' 'மோஹினி' 'ஜம்பரும் வேஷ்டியும்' என்ற மூன்று சிறுகதைத்தொகுதிகளும் 'காளி' என்ற நாடகமும் அவருடையவை வெளியாகி இருக்கின்றன. 'மாயமான்' என்ற நாடகமும் 'வசன கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பும் வர இருக்கிறது. தற்போது சென்னையில் 'நவ இந்தியா' தினசரியில் உதவி ஆசிரியராக இருக்கிறார்.

ஏழைக் கென்றிரங்கி,
எளிதான விலையில் விற்க
கருவாடு போன்ற வாழைப்
பழங்களும்,
புகையிலைக் காம்பும்
பீர்க்கன் இலையைப் பழிக்கும்
வெற்றிலையும், வெட்டுப்பாக்கும்,
சின்னப்பயல்களுக்கென்று
பலூனும்,
பெப்பர்மென்டும்,
பெரியவர்களுக்கென்று
நெய்பொடியும்,
லேகாமருந்தும்
வகையாகச் சேர்த்துவைத்தேன்.
நாரணன்பெட்டிக்கடையின்
நாமமே பரவலாச்சு
இன்று கடன் இல்லை என்ற
எச்சரிக்கை எதிரே இருக்கும்.
என் பேச்சு தேனாய்ச்சொட்டும்.
குழைவிலே வாங்குவோர்கள்
வண்டாகி, பின்னர்
வாடிக்கைக்காரர் ஆகி
ஆண்டிரண்டோடும் முன்னே
தத்வங்கள் பொய்க்கக்கண்டேன்.

பல தத்வங்கள் கவிழக்கண்டேன்.
உயிரற்ற ஜடத்தில் பெருக்கம்
உண்டாகா தென்ற கொள்கை
பொய்ப்பதை நானே கண்டேன்.
இருபது ரூபாய் முதலே
இருநூறாக மாறி
ஏற்றம் எனக்களிக்க
உருமாலை வாங்கிக்கொண்டேன்,

ஓராளென ஆகிவிட்டேன்.
உருமாலை நாராயணனாய்
உருமாறி உயர்ந்தபின்னர்
அகமடியர் தெருவில் சின்ன
அங்கயற்கண்ணி மளிகைக்
கடையொன்று வைத்துவிட்டேன்.
சம்பளத்தை அள்ளிவீசச்
சுரங்கம் சுரக்கவில்லை.
தோதாகப் பொடிப் பையன்கள்
சம்பளமில்லா துழைக்க,
தொழிலிலே தேர்ச்சி கொள்ள,
முன்வந்து தொங்கவில்லை.
எனவே,

கோழியுடன் எழுந்திருந்து
கோட்டானுடனே துயிலும்
கோலமே வாழ்க்கை ஆச்சு.
சரக்கோ கொஞ்சம்
எட்டுமணி நேரம்
தட்டாது விற்றால்
தட்டில் மிச்சம்
தங்கி இருக்குமா?
இப்படிக்கிருக்க
எலிவேறு இரவில்
இராஜ்யம் வகித்தால்
என் உருமாலை மட்டும்
கிழியாமல் போமா?
போனாலும்
நீண்ட விழியாளின் அருள்
நீங்கவில்லை.
முதலுக்கு மோசம்
மருந்துக்கும் காணோம்.
மண்ணெண்ணை பங்கீடு

வந்தது அருளால்.
மண்ணெண்ணை வர்ணம்
இரண்டுதான் என்றாலும்
மஞ்சளும் வெளுப்பும்
என்றாலும் பலபேர்கள்
கறுப்பென்று கதறினர்.
தம்படி நாணயம்
இல்லாமல் போனதும்
முதலுக்கு மோசம்
அணுகாத வேலியாய்,
உயிருள்ள அரணாய்
உவந்திட முளைத்தது.
அங்கயற்கண்ணி
அடிகளே சரணம்!

தம்பிடி மிச்சத்தைக்
கேட்ப்பவரில்லை.
சில்லரைப்போருக்கு
வருவோரும் இல்லை,
அங்கையற்கண்ணியின்
அலையோடும் அருளால்
எண்ணைக்குப் பின்னர்
அரிசிக்கும் பங்கீடு.
தானாகத் தங்கம்
தடத்தில் கிடைத்தால்
ஓடென்றொதுக்க நான்
பட்டினத்தாரோ?

மீன்கொத்தி ஒன்று
உள்ளே இருந்ததால்
பங்கீடுகடை ஒன்று
பட்டென்று வைத்தேன்.
பணக்காரன் ஆனேன்.
பங்கீட்டுக் கடைகளால்

பணக்காரர் ஆனால்
பாவம் என்றேதேதோ பேப்பரில் வந்தன.
பாவமொன்றில்லாவிட்டால்
பாருண்டா?
பசியுண்டா?
மண்ணில் பிறப்பதற்கு
நெல்லொப்பும்போது,
களிமண்ணில்கலந்திருக்க
அரிசி மறுப்பதில்லை.
நக்ஷத்திரம் போல,
நல்முத்துப்போல,
சுத்தமாய் அரிசி விற்க,
பங்கீட்டுக் கடை என்ன
சல்லடையா?
முறமா?
நெல்மிஷினா?
பலகைக்காரியா?
மூட்டையைப் பிரிக்குமுன்னர்
முந்நூறு பேரிருந்தால்
சலிப்பதெங்கே?
புடைப்பதெங்கே?
புண்ணியம் செய்யத்தான்
பொழுது எங்கே?

அங்கயற்கண்ணியன்
அருளென்ன சொல்வேன்
பங்கீடு வாழ்க !
பாழ்வயிறும் வாழ்க!

(பங்கீட்டு முறை அமுலில் இருந்த காலத்தில்
எழுதப்பட்ட கவிதை)

கவிதை

'மயன்'

எனக்கும் கவிதை பிடிக்காது, மனிதன் எத்தனையோ
எட்டுக்கள் எடுத்து வைத்துவிட்டான்: இவற்றில்
எத்தனை எட்டுக்கள் கவிதையால்
சாத்திய மாயின
என்று யார்
தீர்மானித்துச் சொல்ல இயலும்? பின்
எதற்காகத்தான் கவிதை தோன்றுகிறது?
மொழியின் மழலை அழகுதான்.
ஆனால் அது போதவே
போதாது.
போதுமானால் கவிதையைத் தவிர வேறு
இலக்கியம் தோன்றியிராதே. போதாது
என்றுதான், ஒன்றன் பின் ஒன்றாக
இத்தனை இலக்கியத்
துறைகள்
தோன்றின – நாடகமும், நாவலும், நீள் கதையும்,
கட்டுரையும் இல்லாவிட்டால்
தோன்றியராது; ஆனால் அவையும் தான்
திருப்தி தருவதில்லையே!
அதனால்
தான் நானும் கவிதை எழுதுகிறேன்.
மனிதனுக்குக் கலை எதுவும் திருப்தி தராது.
மேலே, மேலே என்கிற ஏக்கத்தைத்தான்
தரும். கலையின்
பிறப்பு
இந்த அடிப்படையில் ஏற்படுவது. கடவுளே
இன்னமும் உயிர்வைத்துக்கொண்டிருப்பது
இந்த அடிப்படையில் தான் சாத்தியம்
என்று சொல்லலாம்.

சிறந்த தமிழ்ச் சிறுகதைகள்

– ஒரு தொகுப்புக்கான சில குறிப்புகள் –

க.நா. சுப்ரமண்யம்

சிறுகதை என்கிற நவீன இலக்கியத் துறையில் தற்கால த் தமிழ் இலக்கியாசிரியர்கள் ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள்: கணிசமான அளவில் இத் துறையில் ஒரு வளம் காணக்கிடக்கிறது என்று சாதாரணமாக எல்லோருமே ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்த வளத்தைச் சீர் தூக்கிப் பார்ப்பதிலே, எது வளம், எது வளமின்மை என்று பார்ப்பதிலே, நமக்குள்ளே பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. சிறுகதை என்பது முதலில் கதையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற ஒரு அடிப்படையை வைத்துக்கொண்டு, ராஜாஜி, சாமிநாதய்யர் போன்றவர்களையும், கல்கி, கி.வா. ஜகந்நாதன் போன்றவர்களையும், புதுமைப்பித்தன், கு.ப.ரா. மௌனி போன்ற சிறுகதை ஆசிரியர்களுக்குச் சமமானவர்களாக மதிப்பிட்டுச் சொல்லும் போக்கும் இன்று நமக்கு

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, இலக்கிய விமர்சனம் ஆகிய பல இலக்கிய உருவ வகைகளிலும் புதுச் சோதனைகள் செய்து இருபத்தைந்து வருஷ காலமாக தமிழிலும், இங்கிலீஷிலும் எழுதி வரும் க.நா.சு. 1912ல் பிறந்தவர். தஞ்சை ஜில்லா சுவாமிமலை அவரது சொந்த ஊர். 'தெய்வ ஜனனம்', 'அழகி', 'ஆடரங்கு', சிறுகதைத் தொகுப்புகளும், 'பசி', 'சர்மாவின் உயில்' 'பொயத்தேவு' ஒருநாள்' 'ஏழுபேர்', 'சமூகச் சித்திரம்', 'ஆட்கொல்லி', 'வாழ்ந்தவர் கெட்டால்' ஆகிய நாவல்களும், 'நல்லவர்' என்ற நாடகமும் 'படித்திருக்கிறீர்களா' (இரண்டு தொகுதி) 'முதல் ஐந்து நாவல்கள்' என்ற இலக்கிய விமர்சன நூல்களும் வெளிவந்திருக்கின்றன. 'மால்தேடி', அசுரகணம்', 'பட்டணத்து வாழ்வு', 'ஜாதி முத்து' ஆகிய நாவல்களும் 'ஊதாரி' என்ற நாடகமும் எழுதியுள்ளார். 'இலக்கிய விசாரம்' விமர்சனக் கலை' என்ற புஸ்தகங்கள் வெளிவர இருக்கின்றன. வெளிநாட்டு சிறந்த நாவல்கள் பத்துக்குமேல் மொழி பெயர்த்து இருக்கிறார். மயன், ஆண்டாள், ஆர். சத்யன், கே. பரமசிவம் ஆகிய புனை பெயர்கள் அவருக்கு உண்டு. இப்போது நம்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு எழுதி ஒரு சுதந்திர எழுத்தாளராக வாழ்க்கை நடத்தி வருகிறார்.

இருக்கிறது. தமிழில் இதுவரை வெளி வந்துள்ள ஒரே ஒரு 'தரத்தொகுப்பு' நூலான சிறுகதை மஞ்சரியிலே, கதைகளும் சிறுகதைகளும் (சோமு, சங்கர், அகிலன், ஜகந்நாதன், தூரன் முதலியவர்களுடையவை வெறும் கதைகள், புதுமைப்பித்தன், கு.ப.ரா. பிச்சமூர்த்தி, ஜானகிராமன் இவர்களுடையவை சிறுகதைகள்) இடம் பெற்றிருக்கின்றன. தொகுப்பாசிரியருக்கு கதைக்கும் சிறுகதைக்கும் உள்ள தாரதம்மியம் தெரியவில்லை என்பது வெளிப்படை.

கதை என்பது எத்தனையோ காலமாக, வழி வழி வந்த ஒரு சொத்து. (ஆனால் அதற்கு இலக்கிய அந்தஸ்து சிறுகதையான பிறகுதான் ஏற்படும்). மஹாபாரதத்துக்கும், ராமாயணத்துக்கும் கதைதான் அடிப்படை. ஷேக்ஸ்பியரின் கவிதை நாடகங்களுக்கும் கதைதான்அடிப்படை. புற நானூறிலுள்ள பல செய்யுள்களுக்கும் கதைகள் தான் அடிப்படை. இது தவிர புத்தர் ஜாதகக்கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், பரமார்த்த குரு கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், இவையெல்லாம் கதைகள். இந்தக் கதைகளில் பலவும் ஆரம்பத்தில் ஆதி காலத்தில் இந்தியாவிலே தோன்றித்தான் உலகெங்கும் பரவின என்றுசொல்லிப் பெருமைப்படுபவர்கள் உண்டு.

கதை என்பது ''பொய்யை அடிப்படையாகக்கொண்ட ஒரு சித்திரம்–அல்லது பல சித்திரங்கள்'' என்றுசொல்லலாம். பொய்யே கலக்காத கதைகளும்இருக்கலாம் தான். ஆனால் உலகத்தில் எந்த ஆதி இலக்கியத்திலும் பொய் சிறிதும் கலவாத கதை இருந்ததாகத் தெரியவில்லை. சத்தியத்தை நிலைநிறுத்தத் தோன்றிய அரிச்சந்திரன் கதையும்கூடப் பொய்யை அடிப்படையில் அடக்கிய கதைதான். தொல்காப்பியத்தில் தமிழ்ச் சிறுகதைபற்றிக்கூறுகிற ஆதாரம் இருப்பதாகக்கூறிப் பெருமைப் படுகிற (படுத்துகிற) பண்டிதர்களும் கூட இந்தப் ''பொய்ச்'' சித்திரத்தைத்தான்சொல்லுகிறார்கள். அது கதையின் இலக்கணம்; இலக்கிய அந்தஸ்தை எட்டாத எல்லாக் கதைகளுக்கும் லக்ஷணம் அது.

கதை என்பது இலக்கியத்தில் ஒரு தனித்துறையல்ல என்பது வெளிப்படை. அது எல்லாப் பகுதிகளுக்கும் பொதுவான ஒரு

அம்சம். அதிலே இலக்கியத் தரம், மனிதத்தன்மைத் தரம் இரண்டும் சொல்ல இயலாது. நீதிக்கதை, உபயோகமானது, அசுவாரசியமானது, சுவாரசியமானது என்று பிரிவுகள் வேண்டுமானால் சொல்லலாமே தவிர, இலக்கிய பூர்வமான தராதரம் சொல்ல இயலாது. கதை என்று பொதுப்படக் கவிதை, நாடகம், காவியம், வசன நூல்கள் பல இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக இயங்குகிற ஒரு அடிப்படைக் கோப்பு. ஆனால் சிறுகதை என்பதோவெனில் இலக்கியத்தில் ஒரு தனித்துறை. இந்தச் சிறுகதை என்கிற இலக்கியத் தனித்துறை உலக இலக்கியத்திலேயே தலையெடுத்துச் சுமார் நூற்றி முப்பது வருஷங்கள் தான் ஆகின்றன. எட்கார் ஆலன் போ என்கிற அமெரிக்க இலக்கியாசிரியர் தோற்றுவித்த இலக்கியத் தனித்துறை இது. (ஆனால் ஆங்கில, மேலை நாட்டுப் பண்டிதர்களில் சிலரும்கூட இதை இவ்வளவு தெளிவாக ஏற்றுக் கொண்டு விடுவது கிடையாது. பைபிளில் இருக்கிறது சிறுகதை, கிரேக்க இலக்கியத்தில் உண்டு என்று பண்டிதர்களுக்கே உரிய பாணியில் அங்கும் சண்டைகள் உண்டு). இத்துறையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ப்ரெட் ஹார்ட்டி, ஹாதார்ண் போன்ற அமெரிக்க ஆசிரியர்களும், ப்ரான்ஸ்வா காப்பி, மெண்டெஸ், மோபாஸான் போன்ற பிரெஞ்சு ஆசிரியர்களும், செக்காவ் போன்ற ருஷ்ய ஆசிரியர்களும் போற்றி வளர்த்து வளம் செய்தார்கள். இருபதாம் நூற்றாண்டிலே ஆம்பிரோஸ் பிர்ஸ், ஷெர்வுட் ஆண்டர்ஸன், ஹெமிங்வே, பாக்னர், வில்லியம் ஸரோயன் போன்ற அமெரிக்கர்களும், லாகர்லெவ், வான் ஹெய்டன்ஸ்டாம், டாபெர்ஹால் ஸ்டிராம் போன்ற ஸ்வீடிஷ்காரர்களும், பிராண்டெல்லோ, பாலஸெக்கி போன்ற இத்தாலியர்களும், கார்க்கி, ப்யூனின் போன்ற ருஷ்யர்களும், ஜாய்ஸ், ஓகானர் போன்ற ஐரிஷ்காரர்களும், காப்கா, தாமஸ் மான் போன்ற ஜர்மானியர்களும் அநடோல் பிரான்ஸ் போன்ற பிரஞ்சுக்காரர்களும் இலக்கிய அடிப்படையில் வளர்த்து வந்திருக்கிறார்கள். மேலைநாட்டு அவசர யுகத்தின் தேவைகள் பலவற்றால் ஆங்கிலத்திலும், வேறு ஐரேப்பிய மொழிகளிலும் பத்திரிகைகள் யுகமும் அவசர யுகமும் தோன்றிய பின், கதை, சிறுகதை என்கிற இலக்கிய உருவம் பெற்றுப்பின்னர் பத்திரிகைக்கதை என்று ஒரு தேய்வும் பெற்றது. இந்தப் பத்திரிகைக் கதைகளுக்குச் சிறந்த

உதாரணங்களாக, ஸாமர்ஸெட் மாம், ஏ.இ.கோப்பார்டு, இர்வின் ஷா முதலியவர்களைச் சொல்லாம்.

மேலை நாட்டில் தோன்றிய இச் சிறுகதை இலக்கிய வளம் இருபதாம் நூற்றாண்டிலே, இந்தியாவிலும் சீனாவிலும் ஜப்பானிலும் புது இலக்கியத்தில் இந்திய உருவமும், சீன உருவமும், ஜப்பானிய உருவமும் எடுத்தது. சென்ற முப்பது வருஷங்களில் ஜப்பானியச் சிறுகதை பிரமாதமாக வளர்ச்சி பெற்றுள்ளது. சீனத்துச் சிறு கதை ஆரம்பத்தில் பிரமாதமான வளர்ச்சி பெற்று, அரசியல் காரணங்களினால், சோஷலிஸ யதார்த்தாவதம் என்கிற குட்டையிலே (இலக்கிய உத்தியிலே) வந்து தேங்கிவிட்டது. சிறுகதைக்கு இந்திய உருவம் தருகிற முயற்சியை ரவீந்திரநாத் தாகுர் சிறப்பாகச் செய்தார்.

தாகுரின் சிறுகதை முயற்சியை வ.வே.சு. ஐயரும், கவி சுப்பிரமணிய பாரதியாரும் பின்பற்றினார்கள். வ.வே.சு. ஐயர் ‘குளத்தங்கரை அரச மர’த்தில் தாகுர் செய்த காரியத்தையே ஓரளவு தமிழில் வெற்றியுடன் திரும்பவும் செய்து பார்த்தார். அவர் எழுதிய மற்றக் கதைகளிலும் அவர் ஓரளவுக்குப் பிறர் செய்ததையே பின்பற்றினார். எனினும் ஓரளவு வெற்றி பெற்றார் என்பதனால் தமிழில் சிறுகதைக்கு வ.வே.சு. ஐயரைத்தான் தந்தையென்று சொல்லுவது வழக்கமாகி விட்டது. கவி பாரதியாரின் கதைகளைச் சிறுகதைகள் என்று சொல்லமுடியாது. வெறும் கதைகளாகவே சொன்னார் அவர். ஆங்கில, பிரெஞ்சு மொழிச் சிறுகதைகளையும், தாகுர் சிறுகதைகளையும் அறிந்தேதான் பாரதியார் தன் கதைகளை எழுதினார். ஆனாலும் உருவத்தை விட அவருக்குச் சீர்திருத்தக் கருத்திலே மோகம் அதிகமானபடியினாலே, அவர் கதைகள் சிறு கதைகளாகவும் கூட அமைதி பெறவில்லை. உதாரணமாக பாரதியாரின் பூலோக ரம்பையைச் சொல்லாம். அற்புதமான ஒரு கதையை உருவம், அல்லது ஒரு உருவமல்லாத பிரக்ஞையுடன் செய்யாமல் வழிந்தோட விட்டுவிடுகிறார் பாரதியார். இந்தக் குறை மாதவையாவின் குசிகர் குட்டிக் கதைகளிலும் உண்டு என்றுதான்சொல்ல வேண்டும்.

சிறுகதை என்பதற்கு அடிப்படையாக அதை எழுதுகிற வனுடைய இலக்கிய உருவப் பிரக்ஞை அமையவேண்டும்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அல்லது அதிகமாக ஆழ்ந்து பார்க்கும்போதும் கூட, இவ்விஷயம் ஒரு உருவமல்லாத உருவமாகவே இருக்கலாம். ஆனால் அந்த உருவமல்லாத உருவத்தையும்கூட, குணத்தையும் விசேஷத்தையும்கூட, உணர்ந்தே, இலக்கியப் பிரக்ஞையுடன் செய்திருக்கிறான் ஆசிரியன் என்பதுதான் அதைச் சிறு கதையாக்குகிறது. சிறுகதையின் ஆரம்பம், நடு, முடிவு என்பதைப் பற்றிச் சொல்வது இப்போது விளையாட்டுக்கும், கேலிக்கும் இடமாகத் தோன்றலாம். ஆனால் அதுதான் சிறுகதை என்கிற இலக்கியத் துறையில்அடிப்படையான விஷயம். இந்த ஆரம்பம், இந்த நடு, இந்த முடிவு தான் வேண்டும் என்பது முன் கூட்டிநிச்சயமானதல்ல – ஆனால் அது ஏற்பட்ட பின், அது தவிர்க்கமுடியாதது என்கிற உணர்வு விமர்சகர்களுக்கும் வாசகனுக்கும் ஏற்பட வேண்டும். இந்த உணர்வை ஏற்படச்செய்பவனைத்தான் இலக்கியத்தித்தில் சிறுகதாசிரியன் என்று நாம் கொண்டாட முடியும். நடை அழகு, விஷயத்தெளிவு, அமைதி முதலியனவெல்லாம் இலக்கியப் பரப்பில் எல்லாத் துறைகளுக்குமே பொதுவானவை. ஆனால் சிறுகதை உருவமும், உருவ அமைதியும், தவிர்க்கமுடியாத தன்மையும் (inevitability), ஒருமைப்பாடும் சிறுகதைக்கு மட்டும் உரியது. இதை எப்படி விமர்சகன் முதலில் தேர்ந்து புரிந்து கொள்ளுகிறான் என்பதும், வாசகர்கள் எப்படித் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு வகையாக இனங்கண்டு கொள்ளுகிறார்கள் என்பதும், இலக்கிய விமர்சனம் சரியாக வளராத இக்காலத்தில், தமிழில் தெளிவாக்குவது சற்றுச் சிரமமான காரியம்தான்.

இலக்கிய விமர்சகன் என்று, என்னைப் போல சொல்லிக் கொண்டு வருபவன், இதைத் தன் படிப்பையும், பிறமொழிச் சிறுகதை அறிவையும் வைத்துக் கணித்துக் கொள்ளுகிறான் என்று மட்டும் சொல்லிவிட்டு, அதற்கு உதாரணமாக இன்று பழக்கமான ஆசிரியர்கள் சிலருடைய சிறுகதை உருவங்கள் பற்றிய குறிப்புகள் மட்டும் இங்கு தர முயலுகிறேன். உருவமேயல்லாத பலவித கதை உருவங்களை நமக்குச் சமைத்துத் தந்திருப்பவர் என்று வில்லியம் ஸரோயனைச் சொல்லலாம்; பாதரஸத்தைப் போலக் கைக்கடியிலிருந்து நழுவி விடும் உருவம் பெற்றவை அவர் கதைகள். உருவமில்லாதது போன்ற, ஆனால் அலசிப் பார்த்தால் நல்முத்துப்

போன்ற உருவம்படைத்த சிறு கதைகள் செக்காவினுடையவை. மழமழ வென்று பூசி மெழுகிய களிமண் உருண்டைகள் மோபாஸானின் சிறுகதைகள். ஓ ஹென்ரியின் சிறு கதைகள் அழுத்தி விட்டு விட்டால் மேலெழும்பி நம் கையையே பின்பற்றும் விசை Spring போன்றவை. குதித்துக் கொம்மாளமிட்டுக் கொண்டு நம்மை முட்டித் தாக்க வரும் காளைகள் போன்ற சிறு கதைகள் ஹெமிங்வேயினுடையவை. ராக்ஷஸ எட்டுக்கால் பூச்சி போல நின்று நிலைத்து நம்மை மயக்கி அருவருப்பையும் கவர்ச்சியையும் ஒருங்கே தந்து வலை வீசும் உருவம் படைத்தவை வில்லியம் பாக்னரின் சிறு கதைகள். நகாசு வேலையை அதி அற்புதமாகச் செய்த பொன் அணிகள் அநடோல் பிரான்சின் கதைகள். கார்க்கியின் கதைகளோ கனமான காட்டு மரத்தால் செய்யப்பட்ட உபயோகமான சாமான்கள்...

பொதுவாக இத்தனையும் சொன்ன பிறகு தமிழில் சிறந்த சிறு கதைகள் என்கிற விஷயத்துக்கு வருவோம்.

வ.வே.சு. ஐயருக்குப் பிறகு தமிழில் சிறுகதை வளர்ந்த சரித்திரம் அநேகமாக நம்மில் எல்லோருக்குமே தெரியும். மூன்று பிரிவுகளாகத் தற்காலத்திய கதை வளர்ச்சியை நாம் கணிக்கலாம். (ஒன்று) இலக்கியத்துறை என்று எதிலும் அடங்காத கதை முயற்சிகள். இம்முயற்சியில் தலை சிறந்தவர்கள் என்று அ. மாதவையா, டாக்டர் சாமிநாதய்யர் (நினைவுக் கதைகள்) எஸ்.வி.வி., ராஜாஜி முதலியவர்களைச் சொல்லலாம். இந்தக் கதைகளில் கருத்தால், விஷயத்தால், அவரவர்கள் மனோதர்மப்படி முக்கியத்துவம் தந்து கொள்ளலாம். இலக்கிய ரீதியாக முக்கியத்துவம் கிடையாது என்று தான் சொல்ல வேண்டும். அதாவது உதாரணமாக, விதவைகளை

மோரியாக்

'எழுத்தார்களிலே இரண்டே இரண்டு ரகங்கள் தான் உண்டு நல்ல எழுத்தாளர்கள் நன்றாக எழுதாதவர்கள் என்று இரண்டு ரகங்கள் தான் உண்டு. இதைத் தவிர வேறு பாகுபாடுகளே தேவையில்லை' என்று ஃபிரான்ஸ்வா மொரியாக் என்கிற ஃபிரெஞ்சு நாவலாசிரியர் ஒரு தரம் கூறினார். அவர் இலக்கியத்துக்காக நோபல் இலக்கியப் பரிசு பெற்றவர். இன்றைய இலக்கிய உலகத்தின் நல்ல எழுத்தார்களில் ஒருவர்.

'எங்களுடைய லக்ஷிய சிருஷ்டிகளால் சாதாரண மனிதர்களின் வாழ்விலே ஒரு தெளிவு ஏற்படுகிறது. தங்கள் உள்ளப்பாங்கைத் தாங்களே அறிந்து கொள்ளச் சாராரண மனிதர்களுக்கு நாங்கள் உதவுகிறோம். எங்கள் எழுத்தின் பலன் இதுதான் என்றார். அவர் இன்னொரு சமயம். கத்தோலிக்க மத சம்பந்தமான விஷயங்களில் ஒரு அழுத்தமும், பழமை என்று சொல்லப்படுவதில் அசையாத நம்பிக்கையும் உள்ள நாவலாசிரியர் மொரியாக். நல்லது கெட்டது என்கிற தத்துவங்கள் வாழ்விலே நடத்துகிற போராட்டத்தை இன்றைய நாவலாசிரியர்களிலே அதிக திடமாகவும், தீர்மானமாகவும் வர்ணிப்பவர் அவர். தெரஸே,தெரியாத கடல், கறுப்புத் தேவதைகள், ஃபிரான்டநாக் குடும்ப மர்மம், அன்புள்ளவரும் அன்பில்லாதவரும் முதலியன அவருடைய சிறந்த நாவல்களில் சில.

உயர்த்துவதற்காகப் பயன்படக் கூடியன மாதவையாவின் கதைகள்; கள் குடிப்பதை ஒழிக்க உபயோகப்படக்கூடியவை ராஜாஜி கதைகள் என்றும், பழைய தலைமுறைச் சரித்திரங்களை அறிந்து கொள்ள உ.வெ. சாமிநாதய்யரின் கதைகள் உதவும் என்றும், வெறும் பொழுது போக்காக எஸ்.வி.வி.யின் கதைகள் உதவும் என்றும் பொதுவாகச் சொல்லாம். இவற்றிலே இலக்கியத்தரம் ஏற்றிவைப்பதற்கில்லை. இந்த பழைய கதாசிரியர்களுக்கு வாரிசுகளாக இன்று கதைகள் எழுதுபவர்களில் கி.வா. ஜகந்நாதனையும், பெ. தூரனையும் சொல்லலாம். சந்தர்ப்ப விஷேசத்தால் மணிக்கொடி கோஷ்டி யினருக்குத் தலைவராக ஒரு சிலரால் கருதப்படும் பி.எஸ்.ராமையாவின் கதைகளும் (பொதுவாக) இந்த ரகத்தைச் சேர்ந்தவையே என்பது எனது அபிப்பிராயம்.

இரண்டாவதாகச் சொல்ல வேண்டியது பத்திரிகைக் கதைகள், 1930–ம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து தமிழில் பத்திரிகை யுகம் அதன் உச்சியை எட்டியிருக்கிறது என்றும் சொல்லலாம். இப்படிச் சொல்லுகிற போது பத்திரிக்கை அவசரம், நெருக்கடி, எல்லாமாகச் சேர்ந்து அமைந்த கதைகளைச் சொல்லலாம். கல்கி இத்துறையில் வழிகாட்டியாக அமைந்தார். இந்தப் பத்திரிகைக் கதைகளுக்கு பல்லாயிரக் கணக்கான வாசகர்களைச் சம்பாதித்துக் கொடுத்தவரும் கல்கிதான். கல்கியின் கதைகளில் அநேகமாக எல்லாமே பிறர் கதை அஸ்திவாரத்தில் தோன்றியவை தான். சற்றே மாற்றியோ திருத்தியோ, தமிழில் உருவம் என்று அவருக்கு எட்டாததொன்றைத் கற்பனை செய்து கொண்டு உருமாற்றி வைக்கப் பட்டவைதான். அவரைப் பின்பற்றிப் பலரும் பத்திரிகைக் கதை எழுதி வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதாவது கதைக்கும் சிறு கதைக்கும் இடையில் ஒரு உருவம் இது. இலக்கிய ரீதியில் கவனித்தால் ஒரு விதமான குண விசேஷமும் இல்லாதது. எத்தனையோ பேர் சாதாரணமாகக் கையாண்ட விஷயங்களை மறுபடியும் ஒரு தரம் படிக்கக்கூடிய பாஷையிலே, சிரமப்படுத்தாத வகையிலே எழுதியிருக்கிறார்கள். இந்த ரகத்தைச்சேர்ந்தவர்கள் என்று நூற்றுக்கணக்கான இன்றைய ஆசிரியர்களைச் சொல்லலாம். வாசகர்களை நினைவில் வைத்துக் கொண்டு கதைகள் எழுதுபவர்கள் இவர்கள்; பத்திரிகைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே எழுதுபவர்கள். தமிழ்நாட்டில் சிறு கதைப் பரிசுகள் பலவற்றையும் தட்டிக் கொண்டு

போகிறவர்கள் இவர்களாகத்தான் இருக்கமுடியும்; குறிப்பிட்ட பஞ்சாயத்தார் ஐந்து பேரைத் திருப்தி செய்யக் கூடியவர்கள் இவர்கள். இந்த பட்டியல் தருவதென்று ஆரம்பித்தால் இடம் போதாது. ஆனால் இந்தப் பத்திரிகை ரகத்திலே, குறிப்பாக வெற்றி பெற்றவர்கள் என்று அகிலன், பூவாளூர் சுந்தரராமன், சிரஞ்சீவி முதலியவர்களைச் சொல்ல வேண்டும். இந்தப் பட்டியலில் இடம் பெறுபவர்கள் என்று சுகி, ரஸவாதி, ரா.கி. ரங்கராஜன், எல்லார்வி, மாயாவி போன்ற பலரைச் சொல்லலாம்.

தமிழில் சிறந்த சிறுகதைத் தொகுப்பு என்று ஒன்று வெளியிட வேண்டும் என்று எனக்குப் பணியளிக்கப் பட்டால் இவர்களையும், இவர்களுக்கு முந்திய வகுப்பில் சேர்ந்தவர்களாகச் சொல்லிய கதாசிரியர்களையும் நான் சேர்க்கமாட்டேன் என்பது தெளிவு. இப்போது அப்படிப் பட்ட தொகுப்பு நூலில் யார் யாரைச் சேர்க்கலாம் என்பது பற்றி இலக்கிய விமர்சன ரீதியில் பார்க்கலாம்.

இலக்கிய ரீதியில் சிறு கதைக்கு இலக்கியப் பிரக்ஞையுடன் அமைந்த உருவம் வேண்டும். அதுதான் ஒரு குறிப்பிட்ட சிறு கதையை, கதை, பத்திரிக்கைக் கதை என்கிற தரத்திலிருந்து உயர்த்தி இலக்கிய பூர்வமான சிறு கதையாக்குகிறது என்று சொன்னேன். தமிழுக்கு மட்டுமல்ல. உலக இலக்கியப் பரப்புக்கே சிறு கதைத் துறை புதுத்துறைதான். ஆகவே பெரும்பாலும் நல்ல சிறு கதாசிரியர்கள் என்று உலக இலக்கியத்தில் இடம் பெறுபவர்கள் எல்லோருமே இலக்கிய சோதனைக்காரர்கள் தான். சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்து, புதுத் தடம் போட்டுக் கொண்டு, இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயன்றவர்களைத் தான் சோதனைக்காரர்கள் என்று சொல்லலாம். இதிலே ஓரளவேனும் வெற்றி பெற்றவர்களைத் தான் சிறந்த சிறு கதாசிரியர்கள் என்று சொல்ல வேண்டும். இப்படி வெற்றி பெற்ற முதல் தமிழ்ச் சிறு கதாசிரியர்களில் பலர், அந்தக் காலத்தில் 'மணிக்கொடி' என்கிற அல்பாயுஸுப் பத்திரிகையில் தங்கள் சிரஞ்சீவிக் கதைகளை எழுதினார்கள். அதற்கும் மணிக்கொடிக்குச் சிறிதும் பொறுப்பில்லை என்றாலும் கூட, மணிக்கொடி கோஷ்டி என்கிற ஒரு பெயர் நிலைத்து விட்டது. அதனால் நஷ்டம் ஒன்றுமில்லையே!

மணிக்கொடியில் எழுதிய நல்ல சிறு கதாசிரியர்கள் இருவர் இன்று நம்மிடையே இல்லை. ஒருவர் புதுமைப்பித்தன். மற்றவர் கு.ப.ராஜகோபாலன். இவர்கள் இருவருமே இலக்கியத்தில், குறிப்பாகச் சிறுகதைத் துறையில், சோதனைகள் செய்து பார்க்கும் திறனும், செய்த சோதனைகள் சிலவற்றில் இலக்கிய வெற்றியும் பெற்றவர்கள். புதுமைப்பித்தன் செய்த சோதனைகளும் அதிகம்; வெற்றி தோல்விகளும் அதிகம். ஆனால் பெற்ற வெற்றிகள் கணிசமானவை. கு.ப.ரா. செய்த சோதனைகள் குறைவு. அந்த அளவில் வெற்றி அதிகம். எண்ணிக்கையளவில் கணக்கெடுத்தால் கு.ப.ராவின் வெற்றி பெற்ற சிறுகதைகள் புதுமைப்பித்தனுடைய வெற்றி பெற்ற சிறுகதை எண்ணிக்கையை விட அதிகமானாலும் கூட, புதுமைப்பித்தனுடைய சோதனை, ஆழம் பரப்பு இரண்டும் அதிகம் என்பதனால் அது தமிழில் சிறு கதை வளத்தை அதிகமாக்கியது. பிற்காலச் சோதனையாளருக்குச் சிறப்பான வழிகாட்டியது என்றும் சொல்லவேண்டும்.

இன்னும், நம்மிடையே இருந்தும், அதிகமாக எழுதாமல் மணிக்கொடியில் மட்டும் சிறப்பாக எழுதிய ஆசிரியர்களிலே மௌனி என்பவரைத் தனியாகச் சொல்ல வேண்டும். இவருடைய பதினைந்து பதினாறு சிறுகதைகளிலே, சிறப்பாக "அழியாச் சுடர்", "பிரபஞ்சகானம்" என்கிற சிறு கதைகளில் இதுவரை தமிழில் காணக்கிடைக்காத ஆழம் காணப்படுகிறது. சொல்வதற்கு மிகவும் சிரமமான பல விஷயங்களை, ஒரு லக்ஷியக் காதல் நோக்கிலிருந்து romantic melancholy என்கிற ரீதியில், அழுத்தம் தந்து அற்புதமான சிறு கதை உருவம் படைத்திருக்கிறார் மௌனி. தமிழில் இன்று வரை வெளிவந்துள்ள சிறு கதைகளிலே மௌனியின் இந்த இரண்டு சிறு கதைகளும் ஒரு சிகரம் என்பது என் அபிப்பிராயம்.

ந. பிச்சமூர்த்தி ஆரம்ப காலத்தில் கவிதை நிரம்பிய பல சோதனைகள் நடத்தினார். அவற்றிலே வானம்பாடி, மோஹினி, தாய் முதலியவை சிறப்பான வெற்றிகள். ஒரு இருபது வருஷ மௌனத்துக்குப் பிறகு அவர் மறுபடியும் சிறுகதைகள் எழுத இரண்டொரு வருஷமாகத் தொடங்கியிருக்கிறார். அந்தக் கதைகள்

அற்புத உருவம் பெற்று, ஆழமும் அர்த்தமும் கூடித் திகழ்கின்றன.

ந. சிதம்பரசுப்ரமணியன் என்பவருக்குச் சிறு கதையில் உருவம் என்கிறதில் நம்பிக்கை கிடையாது. ஆகவே அவருடைய சிறு கதைகளைச் சோதனைகளாகக் கருத முடியாது. ஆனால் அவற்றிலே ஒரு அற்புதமான உருவம், ஆரம்பமும், நடுவும், முடிவும் அமைகின்றன என்பது படிப்பவர்களுக்குத் தெரியும். இதுபோல தமிழில் சிறந்த சிறுகதைத் தொகுதியில் இடம் பெறக் கூடிய ஆசிரியர்கள் என்று மணிக்கொடி கோஷ்டியினரில் வேறு பலரையும் சொல்லலாம். அவர்கள் திறமைக்கேற்ப சோதனைகள் செய்து பார்த்தவர்கள். சி.சு.செல்லப்பா, க.நா.சுப்ரமண்யம், சுந்தா; கி.ரா. எம்.வி.வெங்கடராமன், முதலானோர். செல்லப்பாவின் ஆரம்ப காலக் கதைகள் ஒருவிதமானவை, பிற்காலத்தில் அவர் எழுதியுள்ள சிறுகதைகளில் கொஞ்சம் கனமான பகைப்புலமும், லேசான விஷயமும் அடங்கியிருக்கிறது என்று சொல்ல வேண்டும். கி.ரா.வின் சிறு கதைகளைப் பாடப்புஸ்தகச் சிறு கதைகள் என்றே சொல்லலாம். அவற்றில் ஆழமோ கனமோ அதிகம் கிடையாது; ஆனால் உருவம் உண்டு. சற்றேறக்குறைய பத்திரிகைத் தரத்தைத் தொடுகிறமாதிரிக் கதைகள் அவருடையவை என்றாலும் இலக்கிய முயற்சிகள் தான். சுந்தா மணிக்கொடி கோஷ்டியில் இலக்கியாசிரியராகத் தொடங்கி பத்திரிகை எழுத்தாளராக முடிந்தவர். இவருடைய ஆரம்ப காலக் கதைகளில் சில நல்ல சோதனைகள். க.நா. சுப்ரமண்யத்தின் மணிக்கொடிக் கதைகளில் உருவப் பிரக்ஞையுடன், ஆழந்தெரியச் செய்யப்படும் முயற்சிகள் அதிகம். வெற்றி பெற்ற ஒரே கதை என்று சாவித்திரி என்பதைச் சொல்லலாம். இவருடைய பிற்காலத்துச் சிறுகதைகளில் சோதனை அம்சம் அதிகம். எம்.வி. வெங்கடராமன் பல பழங் கதைகளை அற்புதமான புதுமெருகுடன் எழுதியிருக்கிறார். சிறுகதைகளாக அவற்றிற்கு ஒரு இலக்கியத்தரம் உண்டென்றாலும் கூட, அவை பழங்கதைகளின் புது மெருகுதான்.

மணிக்கொடி கோஷ்டியைச் சேராத சிறுகதாசிரியர்களும் சிலர் அந்தக் காலத்தில் எழுதத் தான் எழுதினார்கள். இவர்களில் தி.ஜ.ரங்கநாதனையும், த.நா. குமராஸ்வாமியையும், சங்கரராமையும்

சிறப்பாகச் சொல்லாம். முன்னிருவர் சிறு கதைகளிலும்சோதனை அம்சங்கள் மிகக் குறைவு. ஒரு சாதாரண நிலையில் நின்று கதை சொல்வதை, இலக்கிய அந்தஸ்தைத் தொட்டும் தொடாமலும் செய்பவர் தி.ஜ.ர.குமாரஸ்வாமியின் சிறு கதைகளிலே ஒரு romantic melancholy யும் காதல் கட்டமும் சிறப்புக்கள். சங்கரராம் வேட்டைக் கதைகள், மாட்டுக் கதைகள், நாட்டுக் கதைகள் பல எழுதியுள்ளார். இவை பத்திரிக்கைக் கதைகளின் அம்சங்கள் பூராவும் பொருந்தி, ஓரளவு இலக்கிய நயமும் உள்ளவை.

1940க்குப் பிறகு தோன்றிய சிறு கதாசிரியர்களிலே சிறப்பாக மூன்று பேர்களைச் சொல்ல வேண்டும். இலக்கிய ரீதியில் லா.ச.ராமாம்ருதம் ஒரு சோதனைச் சிறு கதாசிரியர். அவர் ஒரே மாதிரியான சோதனைதான் செய்கிறார். சோதனைகளைப் புதுமைப்பித்தன் மாதிரி மாற்றாமல், மௌனி மாதிரி, ஒரே ரீதியில் செய்பவர். இதில் அவர் நல்ல வெற்றி பெற்றிருக்கிறார் – கொட்டு மேளம், இதழ்கள் போன்ற கதைகளில். இரண்டாவதாகச் சொல்லவேண்டியவர் தி.ஜானகிராமன். இவருடைய சிறு கதைகளிலும் சோதனைப் பரப்பு குறைவு. ஆனால் இவர் சிறு கதைகளிலே தனித்துவமும், ஒரு கிண்டலும், பேச்சு நடையும், உருவமற்ற ஒரு உருவமும் தெரிகின்றன. மூன்றாவதாகச்சொல்ல வேண்டியது. அழகிரிசாமி. குரலை உயர்த்தாமல் தன்சிறு கதைகளில் பலவிதமான விந்தைகளைச் செய்து காட்டுகிறார். நடை வேகத்தை முடுக்காமல்அவர் செய்துள்ள சோதனைகளை வெற்றிகரமாக அவர் செய்திருக்கிறார் என்றும் சொல்லலாம்.

1948க்குப் பிறகு தமிழ்ச் சிறு கதைகளிலே சோதனை வேகமும், இலக்கிய நோக்கம் தேய்ந்துவிட்ட மாதிரித் தோன்றுகிறது. சமீப காலத்தில் அதாவது இப்போது இரண்டொரு வருஷங்களாகத் தான் மீண்டும் உயிர் வந்த மாதிரி இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் சொல்லலாம். முக்கியமாக அதுவரை செய்யப்பட்ட இலக்கிய முயற்சிகளைச் சரிவரத் தராதரம் அறிந்து கணிக்க யாரும் முயற்சி செய்யாததையும், பத்திரிகை ஆதிக்கம் எழுத்திலே அதிகமாகி விட்டதையும் சொல்லலாம். இந்தப் பத்து வருஷங்களில்

நூற்றுக்கணக்கான கதாசிரியர்கள் தோன்றினாலும், அவர்களில் பெரும்பாலானவர்கள் பத்திரிக்கைக் கதைகள் எழுதத்தான் முற்பட்டார்கள். அதுதான் லாபகரமாக இருந்தது. இந்தமோசமான நிலையிலே பழைய மணிக்கொடி கோஷ்டியினர் சிலரும், பின் வந்த மூவரும் தவிர வேறு யாரும் சிறப்பான சிறு கதைகள் என்று சொல்லும்படி எதுவும் எழுதவில்லை. ஆனால் சென்ற நாலைந்து வருஷங்களில் வந்த எழுத்துக்களில் பலவற்றைச் சலித்துப் பார்க்கும்போது இரண்டுபுதுப்பெயர்கள் கிடைக்கின்றன. ஒன்று சுந்தரராமஸ்வாமி – இவருடைய சிறு கதைகளில் ஒரு லேசான கிண்டலும் கேலியும், ஒரு தனித்துவ நோக்கும் காணக்கிடக்கின்றன. அவர் கடைசியில் எழுதியுள்ள நாலைந்து கதைகளில் அதி அற்புதமான உருவம் அமைந்திருக்கிறது. அதே போல ஜெயகாந்தன் என்ற ஒரு இளைஞர் எழுதுகிற சிறுகதைகளிலே சில நன்றாகவும் பல சிறுபிள்ளைத்தனமாகவும் இருக்கின்றன என்று சொல்லலாம். கிழவன் கிழவி பிணக்குக் கதை ஒன்றும், நந்தவனத்திலோராண்டி என்கிற சிறு கதையையும் நல்ல சிறு கதைகளாகச் சொல்லலாம்.

பழைய சிறுகதை ஆசிரியர்களில் ந. பிச்சமூர்த்தியின் சமீப காலத்திய சிறுகதைகள் பலவற்றில் உருவமும் அழகும் கூடியுள்ளன. செல்லப்பாவின் சிறுகதைகளிலே பகைப்புலம், பின்னணி அதிகமாகவும், விஷயத் தெளிவு குறைந்தும் காணப்படுகிறது. க.நா.சு.வின் சிறு கதைகளிலே சோதனை அம்சங்களும் தத்துவ அம்சங்களும் அதிகரித்துள்ளன. லா.ச.ராவின் கதைகளில் ஒரு உருவ அமைதி காணக்கிடைக்கிறது. சமீப காலத்திய தி.ஜானகிராமனின் சிறு கதைகளில் உருவம் தேய்ந்து பழங்கதைகளின் விஷயத்தின் நிழல்தான் ஆடுகிறது. கு. அழகிரிசாமி இந்த ஐந்தாறு வருஷங்களில் ஒரு சிறு கதைகூட எழுதியதாகத் தெரியவில்லை. சிறு கதை என்கிற இலக்கிய அந்தஸ்தை எட்டாத பத்திரிக்கைக் கதைகள் கூட பெரும்பாலும் இந்தக் காலத்தில் தரம் மிகக் குறைந்து 1948–க்கு முன் பத்திரிக்கைக் கதை எட்டிய தரத்தை எட்டவில்லை.

என் கண்ணில் படாத நல்ல சிறு கதைகள் தமிழில் இருக்கலாம் என்பதை நான் விவாத அளவில் ஒப்புக் கொண்டாலும் கூட கூடிய

எழுதுவதெல்லாம்...

சிட்டி

மானிடன் முதலில் தோன்றி
மரக்கிளை வாசம் செய்து

கானிடைத் திரிந்தபோது
கருத்தழியாதிருந்து வந்தான்

பெண் வந்தாள் பார்த்து நின்றான்
பேச ஒரு மொழி செய்து

கண்கண்ட உண்மைக் கெல்லாம்
கருத்தாலே கலர் கொடுத்தான்

தவிதவித்துத் தத்தளித்துத்
தற்குறிப்பால் தள்ளாடி

கவிதையெனக் குழம்பியதன்
கற்பனைக்குப் பெயரிட்டான்

நாளடைவில் இசைகுறைய
நாப்பழக்கம் நயம்இழக்க

தாளிட்ட கதவின் பின்
தத்துவம் பலபேசி

பழுத்தோர் சிந்தனையின்
பல்வேறு ஒலியெல்லாம்

எழுத்தென்ற ரூபத்தில்
ஏட்டிலே பொறித்துப்பின்

கட்டுரை நடையாடிக்
கவிதைக்குப் பொருள்தேடி

தொட்டும் தொடாததுமாய்
தொல்கலைக் கையாண்டு

கதையென்ற வடிவத்தைக்
காணாத புதுமையென

வளைத்துச் சிதைத்திட்டான்
வளைவெல்லாம் உத்தியென்றான்

இலக்கியம் செய்வதென்றால்
எளிதில்லை எழுத்தாளா!

கலக்கினால் கவிரியும்
கழிவு பொருள் பலகாட்டும்.

வரையில் யாராவது நன்றாயிருக்கிறது என்று சொன்னாலும் கதையைத் தேடிப்படிக்கிறேன் என்பதனால், அப்படிப்பட்ட ஒரு கதாசிரியன் பெயரையும் நான் விட்டுவிடவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

ஆனால் இந்த இருபத்தைந்து முப்பது வருஷங்களில்தமிழ் இலக்கியத்தில் சிறு கதைத் துறையில்ஒரு வளம் ஏற்பட்டிருக்கிறது. அந்த வளத்தைச் சொல்லுகிற அளவில் சிறு கதைத் தொகுதி ஒன்று வெளியிடுவதானால் அதில் கட்டாயமாக புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்ரமணியன், லா.ச.ராமாம்ருதம், தி. ஜானகி ராமன், கு. அழகிரி சாமி இந்த எட்டுப் பேருடைய சிறுகதைகளும் சேரும், இவை தவிர சி.சு. செல்லப்பா, க.நா. சுப்ரமண்யம், தி.ஜ. ரங்கநாதன், கி. ரா., த.நா. குமாரஸ்வாமி, சங்கரராம் முதலியவர்களுடைய சிறுகதைகள் இரண்டாம் பக்ஷமாக இடம் பெறலாம். இதிலே சுந்தர ராமஸ்வாமி, ஜெயகாந்தன் இருவருடைய சிறுகதைகளையும்சேர்த்துக்கொள்ளலாம். தமிழ்ச் சிறுகதையில் இலக்கிய வளத்தைக் காட்ட இப்படிப்பட்ட ஒரு தொகுப்பு பிரயோஜனப் படலாம்.

குறிப்பிட்ட ஆசிரியர்களுடைய எந்தெந்தக் கதைகளைச் சேர்த்துக்கொள்வது என்பது பற்றி விசாரிக்க வேண்டியது அவசியம் அதையும் பின்னர் செய்து பார்க்கலாம்.

சிறுகதைகள், சிட்டி என்ற புனை பெயரில் ஹாஸ்யக் கட்டுரைகள், கவிதைகள், வில்லி என்ற பெயரில் கிண்டல் கவிதைகள் சென்ற 30 வருஷ காலமாக தமிழிலும் இங்கிலீஷிலும் எழுதி வரும் சுந்தரராஜன் 1910ல் மதுரை ஜில்லாவில் உள்ள நத்தம் கிராமத்தில் பிறந்தவர். 'அந்திமந்தாரை' என்ற சிறுகதைத் தொகுதியும், 'கண்ணன் என் கவி' என்ற பாரதி கவிதை விமர்சனமும் 'ஹர்ஷன்' என்ற நாடகமும் 'வார்தா திட்டம்' என்ற கல்வி முறை புஸ்தகமும் வெளியாகி இருக்கின்றன. பல ரேடியோ நாடகங்கள் எழுதி இருக்கிறார். பள்ளி ஆசிரியராகவும் பத்திரிகைக் காரராகவும் வேலை பார்த்திருக்கும் அவர் இப்போது மத்திய அரசாங்க ஊழியராக சென்னையில் வேலை பார்த்து வருகிறார்.

தாழை பூத்தது

பெ.கோ. சுந்தரராஜன்

'நான் வரட்டுமா கல்யாணி? மாமா காத்திண்டு இருப்பார். பாட்டி தூங்கியிருப்பா. பசங்கள் ரகளை பண்ணுவா, ... சரி போட்டது போட்டபடி இருக்கட்டும். நீ தூங்கு.'

'சரி மாமி.... உங்களுக்கு ரொம்ப சிரமம்' என்று கல்யாணி வந்தனம் தெரிவித்தாள். அப்பொழுது தான் சாப்பிட்ட இலையை எறிந்துவிட்டுக் கை அலம்பி விட்டு வந்தாள்.

'போடி போ, பைத்தியம்... கதவைத்தாளிட்டுக்கோ...' அடுத்த வீட்டு மாமி பாலம்மாள் விடை பெற்றுச்சென்றாள்.

கல்யாணி அந்த அம்மாள் போவதையே பார்த்துகொண்டு வாசலில் நின்றாள். பெற்ற தாயார் மாதிரி இப்படி யார் வந்து உதவுவார்கள்? கல்யாணியின் தனிமையில் அந்த அம்மாளின் துணை எவ்வளவோ ஆறுதல் அளித்தது. இரவு அதிக நேரம் ஆகி விடவில்லை. மணி எட்டு தான் இருக்கும். இருந்தாலும் ஊர் ஒசை அடங்கிக் கொண்டிருந்தது. தெருக்கோடியில் இருந்த பெட்டிக்கடை வாசலில் ஓரிரண்டு பேர் நின்று பேசிக்கொண்டிருந்தனர். சில வீடுகளுக்கப்பால் ஒரு அனாதை, அம்மாவையும் தாயையும் மகராசியாக்கி தருமம் செய்யத் தூண்டிக் கொண்டிருந்தாள். சற்று தூரத்தில் அவளுக்குப் போட்டியாக ஒரு நாய் குலைத்துக் கொண்டிருந்தது. எங்கோ ஒரு வீட்டு வாசலில் இலை விழும் சத்தம்கேட்டு நாய் ஓடிவிட்டது. பிச்சைகாரி தோல்வியைப் பொருட்படுத்தாமல் வோட்டு கேட்கும் அபேக்ஷகரைப் போல் அடுத்த வீட்டுக்கு நகர்ந்து மீண்டும் மக்களுக்கு தரும உணர்ச்சியை வலியுறுத்தினாள். கதவு தாளிடப்போகும் சமயத்தில் கல்யாணிக்கு நினைவு வந்தது: வேலைக்காரி கூட மறுநாள் வரமாட்டாள். மிஞ்சிய சாதம் வீணாகி விடுமே என்று உள்ளே விரைந்தாள்.

சோற்றுப் பாத்திரத்துடன் நாலு வீடு தள்ளி நிற்கும் பிச்சைக்காரிக்காக கல்யாணி வாசலில் பொறுமையுடன் காத்து நின்றாள். 'ஏ பிச்சைக்காரி!இங்கே வா' என்று கூப்பிட அவளுக்குக்

கூச்சம். சந்தடி அதிகம் இல்லாத கல்யாணியின் வீட்டைத் தாண்டிப்போகும் பிச்சைக்காரிக்கு வியப்பாகவே இருந்தது. அழைத்து அறம்புரியும் மனிதர்கள் கூட இருக்கிறார்கள் என்பதை அவள் அறியாமலில்லை. ஆனால் தன் வரவுக்காக உணவும் கையுமாக காத்திருப்பார்கள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

'அம்மா, என்தெய்வமே மகராசி, நல்லா இருக்கணும் நீ. வயிறாரச் சோறு போட்டையே. மக்களைப்பெற்று நல்லா வாழணும்' என்று பிச்சை போட்ட கல்யாணியை அவள் வாழ்த்திச் சென்றாள்.

எப்பவும் சிந்தனையிலாழ்ந்த கல்யாணிக்குக் கூட சிறிது புன்முறுவல் தோன்றிற்று. மனதிற்குள் தன்னையே பரிகசித்துக் கொண்டு கதவை மூடிக்கொண்டு உள்ளே சென்றாள்.

ஏதோ மயக்கமாய் வரும் போலிருந்தது. மாலையிலிருந்தே ஒரு மாதிரி அஜீர்ணமாக விருந்தது. 'பித்தம் அப்படித்தானிருக்கும்; சாப்பிடு' என்று பாலம்மாள் வற்புறுத்தி சாப்பிடச் செய்துவிட்டாள். சாப்பிட்டது தவறு என்று இப்பொழுது கல்யாணிக்குப்பட்டது. வயிற்றில் ஏதோ சங்கடம். முற்றத்திற்கு விரைந்தாள்.

வாயைக் கொப்பளித்து விட்டு வாசல் பக்கம் வந்தாள். முகமெல்லாம் வியர்வை அரும்பி இருந்தது. கதவைத்திறந்து வைத்துக்கொண்டு காற்றாட உட்கார்ந்தாள். சினிமாவுக்குப் போயிருந்த ஒண்டுக்குடித்தன தம்பதிகள் லீலும் கிருஷ்ணனும் வரும்போது எப்படியும் கதவைத் திறக்க வேண்டும். தூங்கிவிட்டால் கஷ்டம். சிறிது நேரம் உட்கார்ந்திருப்போம் என்று எண்ணினாள்.

அடுத்த வீட்டுக் கதவுதிறக்கும் ஓசை கேட்டது. மறு நிமிஷம் பாட்டி வந்தாள்.

'ஏண்டி கல்யாணி? உடம்புக்கு என்ன?'

ஒண்ணுமில்லை பாட்டி, என்னமோ சாப்பாடு ஒத்துக்கல்ல'.

'என்ன சாப்பாடோ? என்ன ஒத்துக்கறதோ போரும்போ. நீ ஒண்டியாய் சமைக்கிறதும் சாப்பிடறதும் ...ஏன் படுத்துக்கிறது தானே...

... போகனும் நீங்க தூங்கிட்டேள்னு மாமி சொன்னாளே.'

'எனக்குத் தூக்கம் எங்கேடி வரப்போறது. பெரிய தூக்கம்தான் வரணும்'.

'அப்படிச் சொல்லாதெங்கோ பாட்டி, உங்க மாதிரி பெரிய துணையில்லாட்ட...'

'என்ன துணை வேண்டியிருக்கு. நீ இருக்கல்லியோ இப்போ தன்னந்தனியா.. ஆயுசு பூராவும் இவாளுக்கு உழைக்கிறது தான் மிச்சம், பாரு மணி ஒன்பதாகல்ல, பிள்ளையும் அவளுமா... ஏண்டி வாந்தியா எடுத்தே? ஓசை கேட்டது. என்ன உடம்போன்னு ஓடி வந்தேன்.'

'ஒண்ணுமில்லை. ஏதோ கொஞ்சம் மயக்கம் போல இருந்தது...'

'நன்னாச் சொன்னே. கொஞ்சமாம்.'

'லீலு எங்கே திரும்பவும் சினிமாவுக்குப் போயிட்டாளா? இப்படித் தனியா இருக்கையே...'

'பழக்கம் தானே பாட்டி. தனியா இல்லாமெ யாரு துணைக்கு வருவா. அவஅவாளுக்கு வேலையில்லையா...' கல்யாணியின் குரலில் ஒரு நிதானம்தொனித்தது.

'ஏண்டி, நீ குளிச்சு எத்தனை நாளாச்சு?'

'போங்க பாட்டி! இந்த மாதிரி ஒவ்வொரு வாரமும் கேட்கிறேள்.'

'இல்லேடி,பொங்கலுக்கு முந்தின எட்டாம் நாள் தானே ஸ்நானம் பண்ணினே. நன்னா நினைவிருக்கு. நீ கூட அப்போ சொன்னியே பொங்கலுக்கு உன் அகமுடையானுக்கு லீவ் இருக்கும்னு.'

'ஆமாம் நாலுநாள் லீவ் இருந்தது. வழக்கம்போல ஆபீஸ் கட்டுகள்கொண்டு வந்தார். பண்டிகை முடிந்ததும் திரும்பியும் காம்ப்போயிட்டார்.'

'சரிதான். பொங்கல் தாண்டி,பௌர்ணமி தாண்டி பத்து நாளாச்சே. கல்யாணி நீ புண்ணியசாலி. அம்மா பரதேவதே! மஹேஸ்வரி குழந்தை சிறிசு நன்னாப் பெத்து பிழைக்கட்டும். அம்மாடி, நன்னா இதை கவனிக்காம இருந்தேன்.'

கல்யாணிக்கு ஏதோ மனதில் திகில் தோன்றிற்று.

'என்ன பாட்டி ரொம்ப அமர்க்களம் செய்றேள்,' என்றுசொல்லித் தன் குழப்பத்தை மறைக்க முயன்றாள்.

'அமர்க்களம் தாண்டியம்மா, இன்னமே அமர்க்களம்தான்... இரு நீ தனியா இருக்கக்கூடாது. நானாவது கூட வந்து படுத்துக்கிறேன்,' என்று சொல்லிவிட்டு பாட்டி வீட்டுக்குப்பறந்தாள்.

பாவம், பாலம்மாளை ஏன் எழுப்புகிறாள் என்று கல்யாணி இரங்கினாள். பக்கத்துவீட்டுத் திண்ணையில் மாமியாரும் மருமகளும் அவசரமாக ரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

'... நான்தான் நேத்தே சொன்னேனே அவ முகமெல்லாம் அழகிட்டுக் களையாயிருக்குன்னு.'

'கேக்கனுமா. நிறம், வயசு எல்லாம் நிறைந்திருக்கு. சரி நீ கதவை மூடிக்கோ, நான் அங்கேயே படுத்துக்கிறேன்..' என்று முடித்துவிட்டு பாட்டி வந்தாள்.

எழுபது வயதுக்கு மேல் என்றுதான் சொல்லலாம். ஆனால் முப்பது வயதுப் பெண்போலப் பாட்டி சுறுசுறுப்பாயிருந்தாள். பாட்டியின் பரபரப்பைப் பார்த்து கல்யாணிக்கு வேடிக்கை ஒரு புறம்; குழப்பம் ஒரு புறம்.

'இந்தாடி குட்டி; நான் கதவண்டை படுத்துக்கிறேன். அவர் வரும்போது நானே கதவைத் திறக்கிறேன். நீ நிம்மதியாகத் தூங்கு.

ஆனால் பாட்டி கல்யாணியைத்தூங்கவிடவும் இல்லை. கல்யாணிக்கும் நிம்மதியான தூக்கம் வரவும்இல்லை.

பாட்டி தன்னுடைய முதல் பிரசவத்திலிருந்து தன் குடும்பத்தார் ஒவ்வொருவருடைய பிறவியைப் பற்றியும் பூரண விவரங்களுடன் வர்ணிக்க ஆரம்பித்துவிட்டாள்.

நல்ல வேளையாக கல்யாணியின் காதில் அவ்வளவும் விழவில்லை. பாட்டியின் புள்ளி விவரங்களில் கண்ட, காய் விழுந்த கேஸ்கள், ஆயுத கேஸ்கள், ஆஸ்பத்திரிக் குடித்தனம் எல்லாம் கல்யாணிக்கு வெறும் வார்த்தைகளாகவே பட்டன. அவளுடைய எண்ணங்கள், நத்தைபோல் சுருங்கி மனதின் நிலவறைக்குள் ஓடி ஒளியத் தொடங்கின.

தன்னுடைய அறையில் கதவைத்திறந்து வைத்தவாறு படுத்துக்கொண்டிருந்த கல்யாணிக்கு அப்பொழுது எதைப் பற்றியும் சிந்திக்க பயமாய்இருந்தது. தான் அடக்க முயன்ற சிந்தனைகள் ஏற்கெனவே அடங்கிக்கிடந்த நினைவுகளால் உந்தப்பட்டு வெளியேறி அவள் கற்பனையில் பவனி வரத் தொடங்கின. தன் மணவாழ்க்கையின் ஏழு வருஷங்களில் எத்தனையோ நாட்கள் இம்மாதிரி அவள் தன் எண்ணங்களுடன் போராடி இருக்கிறாள். நல்ல பண்பும், உயர்ந்த மனப்பான்மையும் இயற்கையிலேயே பெற்றிருந்ததால் அவள் அதிகமாக தன்னைப்பற்றிக் கவலைப் பட்டதில்லை. ஏழைக் குடும்பத்தின் முதல் பெண்ணாய்ப் பிறந்த பலனை சகோதர சகோதரிகளுக்கு உழைக்கும் பாக்கியமாகக் கருதிப் பெற்றாள். கஷ்டப்பட்டு தன்னை விவாகம் செய்வித்தபோது தன் தாய்தந்தையருக்கு இனி அதிகமாய்உதவியாய் இருக்க முடியாதே என்ற குறைதான் அவளுக்குச் சிறிது வருத்தம் கொடுத்தது.

அவளை மனைவியாக அடைந்தபோது நல்ல வேலையில் தான் இருந்தான். இவள் அதிர்ஷ்டம் வீட்டில் கால் வைத்த மூன்று மாதத்தில் வேலை போய்விட்டது என்பது ஒரு சாரார் கருத்து. நாகராஜன் கெட்டிக்காரனாயிருந்தாலும் நிலைத்து ஓரிடத்தில் வேலையிலிருக்கமாட்டான் என்பது மற்றோரு சாரார் துணிபு.

ரசனை

'ஒரு கற்பனையான படைப்பு நூலின் உண்மையான மேன்மைக்கும் அதை ரசிப்பதற்கு சகலமானவர்களுக்கும் உள்ள திறமைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. உண்மையான சோதனை இதுதான் – அதை ரொம்பவும் ரசிக்கும் ஒருவனுக்கு அது அளிக்கக்கூடிய திருப்தி அளவும் திருப்தி விதமும்தான்.'

என்று அமெரிக்க தத்துவாசிரியரும், நாவலாசிரியருமான ஜார்ஜ் ஸாந்தாயனா கூறி இருக்கிறார். இந்த கருத்தை ஒட்டி ஸ்டீபன் பெப்பர் என்ற கலை விமர்சகர் கூறி இருப்பதாவது :

எவ்வளவு பேர்கள் ஒரு கலை வடிவத்தை ரசிக்கிறார்கள் என்பதற்கும் அந்த கலை வடிவத்தின் அழகு மதிப்புக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது. அதை போதிய அளவு உய்த்து உணர்கிறவர்களுக்கு அது தருகிற மகிழ்ச்சி அளவைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

எப்படியோ கல்யாணிக்கு ஏற்பட்ட குறை சீக்கிரம்தீர்ந்து விட்டது. ஆறு மாதத்திற்குள் தாய் வீடு வந்துவிட்டாள். வேலைக்காக நாகராஜன் சென்னையில் நான்கு வருஷ காலம் அலைந்து கொண்டிருந்தான். ஏதோ ஆறு ஏழு மாதத்திற்கொரு முறை வருவான். உடனே போய் விடுவான். சில சமயங்களில் உண்மையில் அந்த நான்கு வருஷங்களில் இரண்டு முறை பத்து ரூபாய் வீதம் பணம் கூட அனுப்பி விட்டான்.

இதற்கிடையில் கல்யாணியின் தகப்பனார் இறந்து போனதற்கு வயோதிகமும் ஒரு காரணம் தான். அவளுடைய சகோதரன் ஒருவன் தான் சம்பாதிக்கும் வயது அடைந்திருந்தான். படிப்பு அதிகம் பெறாத நிலையில் ஒரு கடையில் அமர்ந்தது எவ்வளவோ அதிர்ஷ்டம். இன்னும் மூன்று பெண்கள்; கடைசி பையன். இவர்களுக் கிடையில் தான் ஒரு சுமையாக இருக்கிறோமென்ற பீதி கல்யாணியை நாளுக்கு நாள் வாட்டிக்கொண்டே இருந்தது. படித்து வேலைக்குப் போக வசதியும் இருக்கவில்லை. அந்த யோசனையும் பெற்றோர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

கல்யாணியின் பொறுமைக்கு தீவிர சோதனை ஏற்படுவதற்குள் நாகராஜனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்து விட்டது. ஆனால் அடிக்கடி வெளியூர் போகும் வேலை. ஒரு பெரிய உத்யோகஸ்தருக்கு காம்ப் கிளார்க்காக முதலில் போட்ட உத்திரவை அவர்கள் இன்னும் மாற்றவில்லை. அந்த ஆபீஸருக்கும் நாகராஜன் மீது தான் நம்பிக்கை போலும். ஆகக்கூடி எது எப்படி இருந்தாலும் தனிக்குடித்தனம் செய்வது என்று கல்யாணி வந்துவிட்டாள். நாகராஜன் ஆபீஸ் திருமங்கலத்தில்தான். ஆனால் மதுரை ஜில்லா முழுவதும் அவன் ஆபீஸருடன் சுற்ற வேண்டியிருந்தது. கல்யாணியின் தாயார்வீடு நிலக்கோட்டையில்தான். ஆனால் இனி அங்கே இருப்பது கூடாது என்று கல்யாணி தீர்மானித்து விட்டாள்.

''இப்போ என்ன பாட்டி அவசரம் அதுக்கெல்லாம்?'' என்று சற்று கோபமாகவே கல்யாணி கேட்டாள்.

''அடி பொண்ணே, தூங்குறாய்ன்னு நெனச்சேனே. இப்போ இல்லாட்டா நாலுமாசம்கழிச்சுப் போகத் தானே வேணும்.'

''கூடிய சீக்கிரம் அவள் பிறந்தகம் போக வேண்டுமென்று பாட்டி சொன்னதுதான் கல்யாணியின் சிந்தனைப் பந்தலில் ஊடுருவி அவளைத்தாக்கிவிட்டது.

பிறந்தகத்திற்கா? நல்ல கொடுமை. அந்தத் துணையை விட இந்தத் தனிமை மேலல்லவா? தனித்திருக்கத்தானே கல்யாணி பிறந்தாள். கன்னியாயிருந்த போது குடும்பப் பொறுப்பை மேற்கொண்டாலும் அவளுக்கு அதிக தோழிகள் கிடையாது. தன் சிந்தனைகளுடனே தான் உறவாடி வந்தாள். எவ்வளவு கற்பனைகளோ! எவ்வளவு ஆசைகளோ! அவளோ அவைகளைச் சரியாக நேர் நின்று பார்த்ததில்லை. அடங்காத குழந்தைகளை குளிப்பாட்டி, உணவூட்டி, படுக்க வைக்கும் முறையில் அந்த எண்ணங்களை அவள் கையாண்டாள்.

மணமான பிறகுதான் என்ன, அதே நிலைதான். இப்பொழுது மூன்று வருஷ தனிக்குடித்தனத்தில்? ஆம். குறைந்தது இரண்டு மாதத்திற்கொரு முறையாவது கணவனுடன் பேசியிருப்பாளே...

பாட்டி கதவைத் திறந்தாள். கிட்டு நேரே தன் அறைக்குப்போய் விட்டான். லீலு பாட்டியிடம் ஏதோகேட்டாள். பாட்டி ரகசியமாய் ஏதோ சொல்லிவிட்டு ''ஆம் நாளை கார்த்தாலே மறந்துடாதே'' என்றாள்.

கல்யாணி தன் விழிப்பு நிலையைக் காட்டிக் கொள்ள வில்லை. தன் சிந்தனைகளுடன் சதுரங்கம் தொடர்ந்தாள். ஏன். தன் கணவன் தனக்கு ஒரு குறையும் வைக்கவில்லையே. சமீப காலத்தில் தன்னை நன்றாகத்தான் வைத்துக்கொண்டிருக்கிறான். லீலு கூட கேட்டிருக்கிறாள்.

''வரும்போதெல்லாம் ஏதாவது வாங்கிக்கொண்டு வருகிறாரே'' என்று. வாங்கி வரத்தான் செய்கிறான். ஆனால் வேலையையும் கூடக் கொண்டு வருகிறானே. மாதத்தில் நாலு நாள் கூட வீட்டுச்சாப்பாடு இன்றி அலைந்து விட்டு வீட்டுக்கு வரும் போது கூட காகிதக் கட்டுடன் வந்தால். பாவம் காம்ப் முழுவதும் சுற்றிய பிறகு கஸ்பா ஆபீஸுக்கு வந்துதானே வேலையை முடிக்கவேண்டும். அவன் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது கல்யாணி தொந்திரவு செய்யமாட்டாள். ...

அறையில் லீலுவும் கிட்டுவும் நெடுநேரம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஏன் நாகராஜன் கூடத்தான் கல்யாணியுடன் அன்று நாள் முழுதும் பேசிக்கொண்டிருந்தான். காலை மூன்று மணி வரை பேசிக்கொண்டிருந்தார்கள். அநேகமாய் இம்முறை காம்ப் இருக்காது என்று நாகராஜன் சொல்லிக்கொண்டிருந்தான். காலை ஆறுமணிக்கே ஆபீஸர் வீட்டிலிருந்து ஆள் வந்தான்.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள். உடனே அன்றே காம்ப் கிளம்பவேண்டும் என்று உத்தரவு! நாகராஜன் போய் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிவிட்டது. இது புதிது என்று சொல்வதற்கில்லை. சமுதாய நல மகாநாட்டின் போது மூன்று மாதம் வெளியூரில் இருந்தது இல்லையா...

லீலுவும் கிட்டுவும் பேசி முடித்து விட்டார்கள். பாட்டியின் குறட்டையைத் தவிர எங்கும் மௌனமே நிலவிற்று. அந்த அமைதிக்கு நடுவில் கல்யாணியின் எண்ணங்கள் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டன. எவ்வளவோ முயன்றும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. தன் கணவன் நாகராஜன் எங்கு இருப்பான் என்று நினைத்துப் பார்த்தாள். எங்கு இருந்தாலும் அவனும் தூங்கமாட்டான். ஏதோ காகிதங்களைப் புரட்டிக் கொண்டிருப்பான்.

கல்யாணியின் நிலையைப் பற்றி அவன் அறிந்தால் என்ன செய்வான்?

என்ன செய்வான். மீண்டும் காம்ப் போய் விடுவான். அதுதானே அவன் சுபாவம், தர்மம் என்று யாரோ பரிகசித்ததுபோல் கல்யாணிக்கு பிரமை. திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள்.

ஒருநாளும் தான் நாகராஜனை ஹிம்சித்தது இல்லையே. என்றோ தற்செயலாய் அவன் வீட்டிலிருக்க நேர்ந்ததில் அம்மா இந்த விளைவா. தெய்வமே. பிறர் கொடுத்து வைத்து அனுபவிக்கும் சந்தோஷம் வேண்டுமென்று அவள் நினைக்கத் துணிந்ததில்லையே. வழக்கம்போல் நாகராஜன் காம்ப் போய்க்கொண்டிருந்தால்... கல்யாணி மீண்டும் தன் தாய் வீடு செல்ல வேண்டாமே. பாட்டி பெருமைப் படுகிறாள். மாமியின் மலர்ந்த முகம் இன்னும்

பிரகாசிக்கும். லீலு சந்தோஷத்தால் துள்ளிக்குதிப்பாள். எல்லோருக்கும் ஆனந்தம்தான்...ஏன்? தனக்கு... கல்யாணிக்கு. ஏதோ தொண்டையில் அடைப்பது போலிருந்தது.

திடீரென்று பாட்டி விழித்துக்கொண்டாள்.

''ஏம்மா கல்யாணி... என்ன? ஏன் அழறே? என்னம்மா செய்றது?'' என்று பரிவுடன் கேட்டாள்.

கல்யாணி பதில் சொல்ல சிறிது நேரம் ஆயிற்று, கண்களைத் துடைத்துக்கொண்டு புரண்டு படுத்தாள்.

''ஒன்றுமில்லையே'' என்று சொல்லிவிட்டுப் பெருமூச்சு விட்டாள். அழக்கூட அவளால் முடியவில்லை.

பாரதிக்குப் பின் – 1
டாக்டர் சாமிநாதையர்

கவி சுப்பிரமணிய பாரதி பிறப்பதற்கு 27 ஆண்டுகளுக்கு முன்பிறந்த, பாரதியார் .இறந்ததற்கு 24 ஆண்டுகளுக்குப் பின் இறந்த டாக்டர் சாமிநாதையர் அவர்களைப் பாரதியாருக்குப் பின் என்கிற இலக்கிய வரிசையிலே முதலாவதாகச் சொல்வது மிகவும் பொருத்தமான விஷயம். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக் காலமாகிய இதை நாம்சாதாரணமாக பாரதியுகம் என்று கொண்டாடுகிறோம். சாமிநதையர் யுகம் என்றும் கொண்டாடலாம்.

பண்டைத்தமிழ்ச் செல்வங்களைத் தேடித்தந்து புதுத் தமிழ் வளத்துக்கு அடிகோலிய சாமிநாதையரின் இலக்கிய சேவைகளுக்கெல்லாம் வாரிசாகத்தான் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே பாரதியார்தமிழ் வேகத்துடன் எழுதத் தொடங்கினார் என்று சொல்லுவது பொருந்தும். அதே போல பாரதியார் தந்த வசன வேகம் தமிழ்த் தாத்தாவையும் பாதித்தது. பிற்காலத்தில் சாமிநாதையர் எழுதிய பல வசன நூல்களும் பாரதியார் யுகத்தின் முத்திரை பெற்றவை.

டாக்டர் சாமிநாதையர் 1855ல் பிறந்தவர். 1871 முதல் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் சிஷ்யராக அமைந்து, 1876ல் அவர் இறக்கும் வரையில் அவரிடம் தமிழ்ப்பாடம் கேட்டார். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை காலத்தில் ஆரம்பித்த திருவாவடுதுறைத் தொடர்பு அவருக்குப் பின்னரும் பிரயோசனப் பட்டது. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் முதல் மாணவராகிய தியாகராஜச் செட்டியார் 1880ல் சாமிநாதையரை கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராக, தனது ஸ்தானத்திலே அமர்த்தினார். கும்பகோணத்தில் முனிசீப்பாக அக்காலத்தில் இருந்த சேலம் ராமசாமி முதலியார் ஐயரவர்களை சீவக சிந்தாமணியைச் சரிவரப்பதிப்பித்து அச்சேற்றும் வேலையை மேற்கொள்ளச்செய்தார். தியாகராஜச் செட்டியார். பூண்டி அரங்கநாத முதலியார் இவர்களுடைய பழக்கத்தினால் புஸ்தகங்களைப் பதிப்பிடும் காரியத்தைத் திறமையாகச்செய்யும் சக்தி சாமிநாதையருக்கு வந்தது.

டாக்டர் சாமிநாதையர் அவர்கள் தமிழ்நாடு எங்கும் தேடித்திரிந்து, சுவடிகளைக் கண்டு பிடித்து, பதிப்பித்து அச்சிட்ட சரிதங்களைப் படிக்கும்போது நமக்கு ஒரு காவியத்தை படிப்பது போன்றதோர் உணர்ச்சியே ஏற்படும். ஜைன, பௌத்த நூல்களான சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றைப் பதிப்பித்த காரணத்தினால் சாமிநாதையர் பலவித கண்டனங்களுக் குள்ளானதெல்லாம் பழங்கதை – ஆனால் சுவாரசியமான கதை. பத்துப்பாட்டு, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு இவையெல்லாம் ஐயரவர்களின் பதிப்புகளாக வெளிவந்தன.

அவரைப் பழந்தமிழ் இலக்கியத்தின் பிரதிநிதியாக மட்டும் நாம் கொள்வது பொருந்தாது. பிற்காலத்தில் அவர் எழுதிய வசன நூல்கள் பலவும் நமது கவனத்துக்குரியன. 1942 வரையில் உயிர் வாழ்ந்த சாமிநாதையர் ஒரு நூற்றாண்டுக்கே பிரதிநிதியாகப் பல விஷயங்களைப் பற்றி எழுதியுள்ளார். நினைவு மஞ்சரி, உரைநடைக் கோவை, முதலிய கட்டுரைத் தொகுப்புக்களில் சென்ற நாலைந்து தலைமுறைகளின் சரித்திரத்தையும், பழக்க வழக்கங்களையும் தமிழ் மக்களையும் நாம் காணமுடிகிறது. இலக்கிய நயத்துடனும் அமைதியுடனும் டாக்டர் சாமிநாதையருடைய நினைவுக் கட்டுரைகள் நமது முன்னோர்களை (அதாவது சமீபகாலத்திய முன்னோர்களை) நாம் அறிந்து கொள்வதற்கான அரிய பொக்கிஷமாக உதவுகிறது. அவர் எழுதியுள்ள பல ஜீவிய சரித்திரங்களிலும் – கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ண பாரதியார், மீனாட்சிசுந்தரம் பிள்ளை இவற்றிலும் பல சுவையான வரலாறுகள் காணக் கிடக்கின்றன. இந்த இடைக்காலத்தை நமக்கு இவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டுகிற வேறு தமிழ்நூல்கள் இல்லை என்றே சொல்ல வேண்டும். சாமிநாதையரின் என் சரித்திரமும் நமது சரித்திரத்தில் சென்ற நூற்றாண்டைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

சாமிநாதையரைப்பற்றித் தமிழில் வந்துள்ள கட்டுரைகளில் இரண்டு பேர் எழுதியவை மிகவும் முக்கியமானவை. 1.டி.கே.சி. எழுதிய தியாகராஜ விலாசம் அல்லது புலவர் தொழில் (இதய ஒலியில் உள்ளது) 2. எஸ். வையாபுரிப் பிள்ளையின் தமிழ்ச்சுடர் மணிகளில் சாமிநாதையர் பற்றி உள்ள தொண்டின் பெருமை, வாழ்க்கையும் மதிப்பும், நினைவு நாள் என்ற கட்டுரைத் தொடர்.

க.நா.சு.

கமலாம்பாள் சரித்திரம்

– பி.ஆர். ராஜம் அய்யர் நாவல் –

சி.சு. செல்லப்பா

'கமலாம்பாள் சரித்திரம்' என்ற ஒரே நாவலின் மூலம் சென்ற நூற்றாண்டின் சிறந்த நாவலாசிரியர் என்ற புகழ் ஒரு முகமாகக் கிடைக்கப் பெற்ற நாவலாசிரியர் பி.ஆர். ராஜமய்யர். அவர் 1889–ல் தன் 26–வயதில் காலமாவதற்கு முன் 21–வது வயதில் எழுத ஆரம்பித்து, மூன்று வருஷ காலம் தொடர்ந்து, 'விவேகசிந்தாமணி' என்ற மாதப் பத்திரிக்கையில் சிறிது சிறிதாக தொடர் நாவலாக வெளிவந்த நாவல் அது. மொத்தமாக எழுதி முடித்து அது தொடர்ந்து வெளிவந்ததா, இல்லை தற்போது பல தொடர் நாவல் ஆசிரியர்கள் இதழ் பார்த்து மறு இதழுக்கு 'சுடச்சுட' எழுதி வருவதைப் போல எழுதப்பட்டதா என்ற தகவல் எதுவும் கிடைக்க வழியில்லை. இந்தநாவலின் முதல் பதிப்பு அவர் காலத்திலேயே வெளிவந்திருக்கிறது. 'கமலாம்பாள்' நாவலுக்குப் பிறகு அதோடு ஒப்பிடக் கூடிய தமிழ் நாவல் இன்னும் வரவில்லை என்று அடித்துச் சொல்லும் ரசிகர்கள் இன்றும் பலர் இருக்கிறார்கள். எந்த அளவுக்கு அந்த வார்த்தைகள் செல்லக்கூடியவை, என்ன ஆதார வலுக்கொண்டு ஆராய்ந்து முடிவுகட்டப்பட்டிருக்கிறது, வளரும் தமிழ் நாவல் இலக்கியத்தில் அதன் ஸ்தானம் என்ன ஆகிய கேள்விகள் இலக்கிய விமர்சன ரீதியாக ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியவை.

'கமலாம்பாள்' நாவலை எடுத்துக் கொண்டு சோதித்துப் பார்க்கப் புறப்படுமுன், இலக்கிய விமர்சனம் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல வேண்டி இருக்கிறது. நாவலும் சிறு கதையும் நமக்கு கப்பல் மூலம் இறங்கிக் கிடைத்த புதுச்சரக்காக இருப்பது போலவே அவை பற்றிய இலக்கிய விமர்சன முறையும் நமக்குப் புதிதுதான். எத்தனை விதங்களில் ஒரு இலக்கிய சிருஷ்டியை அணுகுவது என்பதைப் பற்றி, அநுபவரீதியாக, இந்த இலக்கியப் பிரிவுகள் முன்னதாகவே செழித்து வளர்ந்திருக்கும் பாஷைக்காரர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பார்த்து, நிதானித்து இருப்பதும், இன்னும், விண்டு பார்த்து அபிப்ராயங்கள் சொல்லி வருவதும் நமக்கு முன் இருப்பவை. அவைகளை கவனத்தில் கொண்டு நம் இலக்கிய நூல்களை ஆராய வேண்டும். உலக நாவல் இலக்கியத்தில் பல்வேறு

இலக்கிய விமர்சன முறைகளைக் கையாண்டு இலக்கியத்தின் நோக்கம், வேலை, மதிப்புகள், பயன் ஆகிய விசேஷ குறிகளை முன் வைத்து ஒரு நூலை அவிழ்த்துப் பார்த்து, நயம் கண்டு, சிறப்பியல்புகளை விசாரணை மூலம் வெளிச் சொல்லும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வருவதைப் பின்பற்றிச் செல்லுவதில் நாம் வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லை. நயம் அறிவதற்கு, தரத்தை நிர்ணயிப்பதற்கு எத்தகைய அளவு கோலும் தேவையில்லை என்ற கட்சிவாத மனப்பான்மை நம்மிடமிருந்து அழிந்து போகச் செய்ய, அன்று மற்ற தேச இலக்கியங்களில் செய்யப் பட்ட தீவிர முயற்சிகள் நாம் இன்று செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது.

விமர்சன முறைகள்

ஒரு இலக்கிய நூலை அணுகும் இலக்கிய விமர்சனம் எத்தனையோ கேள்விகளில் ஒன்றை முதன்மையாகக் கொண்டு பார்க்கிறது.தத்துவ ஞானம், வேதாந்தம், அடிப்படையில் ஒரு மனோதர்ம இலக்கியம் எத்தகைய சித்தாந்தத்துக்கு விளக்கமாக அமைந்திருக்கிறது என்று பார்ப்பது ஒரு முறை. மட்டமான திலிருந்தும் கெட்டதிலிருந்தும் பிரித்து, நல்லதை எடுத்துக் காட்டும் வழியாக, லக்ஷணங்களைக் கொண்டு தர நிர்ணயக் கேள்வியும் கேட்கலாம். இன்னும், அதற்கென உள்ள ஒரு குறிப்பிட்ட மதிப்பு (Value) சம்பந்தமாக முடிவுகட்ட ஏதுவாக பிரத்தியேக உத்தி முறைகளைக் கொண்டு அந்த இலக்கிய நூலை விண்டுபார்த்து மெய்ப்பிக்கலாம். ஒரு இலக்கியப் படைப்பில் மனோதத்துவம் எவ்விதம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது, இந்த இலக்கிய நூல் எத்தகைய ஒரு மனோதத்துவ நிலையில் அதாவது எழுதியவனின் மனப்போக்கின் வழியில் – எழுந்து உருப்பெற்றிருக்கிறது எனவும் ஆராய்வதற்கு உரியது. நூலில், சமூகத்தின் போக்கு எவ்விதம் பிரதிபலிக்கிறது, எத்தகைய சமூக குணங்கள் அதை பாதித்திருக்கின்றன, எழுதியவனின் சமூக ஆசாரம் பற்றிய விசாரணை என்று சமூக சாஸ்திர ரீதியாகவும் பார்ப்பதுண்டு.

இதோடு சம்பந்தப்பட்டது கலாசாரம் பொருத்தம் பார்க்கும் முறையாகும். ஒரு இலக்கிய நூலையோ ஆசிரியரையோ சரியாக அறிந்து கொள்ள அந்த உடனிகழ் காலத்துக்கு (Contemporary) நம்மை மன மாற்றிக் கொண்டு சரித்திர முறை வழியே ஆராய்ந்து பார்த்து

முடிவுக்குவருவது ஒருவழி. இவைகளுடன் அந்த நூல் இலக்கிய மரபு வழியே எந்த அளவுக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என அந்த மரபு லக்ஷணங்களை பிரயோகித்துப் பார்த்து பாண்டித்ய முறையில் பார்ப்பதும் உண்டு. இறுதியா மேலே குறிப்பிட்ட கேள்விகள் எதுவும் கேட்காமல், அந்த நூலின் சில தன்மைகளை புறநிலை நோக்காக மெய்ப்பித்து காட்டுவது முதல், அந்த நூல் விமர்சகனை – ஒரு நுண் விசாரணைக்காரனை எவ்விதம் உறுத்துகிறது என்று தன் மனப்பதிவு ரீதியாக வெளிப்படுத்திச் சொல்வது வரை உள்ள பல்வேறு முறைகளில் ஒன்றைக் கொண்டு பார்த்து வாசகனுக்கு குணங்காண்கிற சக்தியை அதிகரிக்கச் செய்யும் உத்தேசத்தை மட்டும் கொண்ட முறையும் இருக்கிறது.

இந்த முறைகளையும் அவைகளை கையாளுவதன் விளைவாக கிடைக்கும் பயன்களையும் கோட்பாடு வழியாக ஆராய இப்போது இடம் இல்லாததால் இத்தனை விதமானநோக்குகளுக்கு ஒரு இலக்கிய நூல் சோதனைக்கு உள்ளாகிறது என்பதை மட்டும் கொண்டால் போதும். எட்வர்ட் டெய்ச்சஸ் என்ற விமர்சன நூலாசிரியர் கூறியுள்ள மாதிரி 'இலக்கியக் கோட்பாடுகளை பரிசீலிப்பது என்பது உன்னதமான தத்துவஞான முறை; ஆழ்ந்த கருத்தமைந்த காரியம். இலக்கியத்தின் தன்மை பற்றி விளக்கக்கூடியது மட்டுமல்ல. தனித்தனி இலக்கியப் படைப்புகளை படித்து இன்னும்அதிகமாக ரசிக்கவும் அறியவும் உதவுவதாகும். இலக்கிய கோட்பாடுகளோடு சம்பந்தம்இல்லாமலேயே ரசனை இருக்கலாம். ஆனால் இலக்கிய கோட்பாடுகளின் பெருக்கமும் பிரயோகமும் ரசனையில் ஒரு தெளிவும் குறித்த பார்வையும் உயர்வும் ஏற்பட உதவும்.

கதை

'கமலாம்பாள்' நாவலின் சுருக்கம் இதுதான். மதுரை ஜில்லாவின் ஒரு கிராமத்தில் லட்சிய கிரஹஸ்தராக உலகத்தின் புன்னகை விழ சுகபோக வாழ்வு வாழ்ந்துவரும் முத்துசாமி அய்யர் ஒரு சீரிய குணம் படைத்தவர். ஆனால் நிலைமை சடக்கென மாறி விடுகிறது. எதெதெல்லாம் அவர் பிரியமானது என, கருதி இருந்தாரோ எதோடெல்லாம் அவருக்கு உறவு இருந்ததோ

அதெல்லாம் அவருக்கு எதிராக திரும்பிவிடுகிறது. அடுக்கடுக்காக துன்பங்கள் தொடர்கின்றன. அவரது ஒரே பிரிய தம்பி தன் மனைவியால் மருந்து வைக்கப்பட்டு அவள் வசமாகி விரோதமாகி விடுகிறார். ஜெல்லிக்கட்டில் அவர் தம்பியின் ஏற்பாட்டால் மாடு பிடிபட்டதால் மனம் பொங்கிய ஜமீன்தாரின் தூண்டுதலால் பேயாண்டித் தேவன் தம்பியின் சொத்தை கொள்ளையடிக்க, தான் முன் நின்று அவனைப் பிடிக்க ஏற்பாடுசெய்து கேஸ் நடத்தப்போய் அவன் விரோதம் ஏற்பட்டு விடுகிறது. அவன் பழி வாங்க முத்துசாமி அய்யரது ஆண் குழந்தையைத் திருடிப் போய்விட, புத்ர சோகத்தில் ஆழ்ந்து, தன் தர்ம பத்தினி கமலாம்பாளுடனும் கல்யாணமான பெண் லக்ஷிமியுடனும் விரக்தியுடன் வாழ்ந்து வருகையில், தன் சகோதரன் சுப்ரமண்ய அய்யரும் இறந்துவிட, பம்பாயிலிருந்து அவர் நடத்திய வியாபாரம் முறிந்து பெரிய நஷ்டம் ஏற்பட இருக்கும் செய்தியும் வருகிறது. அவர் பம்பாய்க்கு புறப்பட்டுச் சென்றிருந்த சமயம், இன்னும் அந்த குடும்பத்தை கெடுக்க சூழ்ச்சி புகழ்பெற்ற அந்த கிராமப் பெண்கள் வம்பர் மகாசபையில் உருவாகி, கமலாம்பாளைப் பற்றி அபவாதச் செய்தி பம்பாயிலிருந்து திரும்பிவரும் வழியில் சிதம்பரத்தில் தங்கும் முத்துசாமி அய்யரது காதில் விழச் செய்யப்படுகிறது. புத்திரனையும் இழந்து, பம்பாய் திரவிய நஷ்டமும் ஏற்பட்ட நிலையில், மனைவியைப் பற்றிய இந்த அபவாதச் செய்தியும் காதில் விழ , நம்பி, உலகத்தை வெறுத்து தற்கொலை செய்துகொள்ளப்போகும் சமயம் ஒரு பிரகாசம் தோன்றுகிறது. அவரை அழைத்து, தடுத்து ஒரு திவ்ய மகாபுருஷன் அபயப்பிரதானம் கொடுத்து ஞானோபதேசம் செய்துதன்னோடு அழைத்துச் செல்கிறார். இதற்கிடையே கணவன் திரும்பி வராதது கண்டு தன் மகள் லக்ஷ்மி, மாப்பிள்ளை ஸ்ரீநிவாசன் இவர்களுடன் சிதம்பரத்துக்கு அவரைத் தேடி கமலாம்பாள் செல்ல, இடை ஸ்டேஷன் ஒன்றில் இறங்கிய ஸ்ரீநிவாசன் கைது செய்யப்பட்டு தெரியாத இடத்துக்கு கொண்டு செல்லப்படுகிறான். அவனைக் காணாது ரயிலில் உள்ளவர்கள்துடித்துக் கொண்டிருந்த சமயம் வெள்ளப் பெருக்கால் பாலம் உடைந்து ரயில் விழுந்து பயங்கர விபத்து ஏற்பட்டு விடுகிறது. கமலாம்பாளும் லக்ஷ்மியும், சுந்தரமும் கரையோரம் ஒதுக்கப்பட்டு மூர்ச்சையுற்றுக் கிடக்க, அந்த சமயம்

அங்கு வந்த அவர்கள் கிராமப் பழைய தமிழ் பண்டிதரான அம்மையப்ப பிள்ளை அவர்களை அடையாளம் கண்டு, தூக்கிச் சென்று, மூர்ச்சை தெளிவிக்க அங்கிருந்து சில நாட்களில் யாவரும் சிதம்பரத்துக்கு முத்துசாமி அய்யரைத் தேடிப் போகிறார்கள்.

தனக்கு ஞானம் உணர்த்திய சச்சிதாநந்த சுவாமியுடன் முத்துசாமி அய்யர் வழிநடந்து சென்னை திருவொற்றியூர் வந்து சேர்ந்து, ஆண்டவனுடைய கல்யாண குணங்களைப் பற்றிய வாயாரப் பேசிக்கொண்டு இருக்கையில், சிதம்பரத்தில் அவரைக் காணாமல் கமலாம்பாள் முதலியவர்கள் சென்னைக்கு வந்து, முன்பு மாப்பிள்ளை ஸ்ரீனிவாசன் இருந்த வீட்டில் தங்கி இருக்கும் சமயம், அம்மையப்ப பிள்ளை ஊரெங்கும் அலைந்து தேட, திருவொற்றியூரில் இருக்கும் மகானைப்பற்றிக் கேள்விப்பட்டு விசாரிக்கலாம் எனப் போய்ப் பார்க்க அதற்குள் அவர்கள் அதைவிட்டுப் போய் விடவே, வடக்கே காசி நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள்.

இங்கே இப்படி இருக்க, குற்றம் செய்த வேறு ஒருவருடைய சாயலாக இருந்ததால், தவறாகப் புதுச்சேரி சிறையில் அவதிப்பட்ட ஸ்ரீனிவாசன் விசாரணையில் உண்மை வெளியானதின் பேரில் விடுதலை பெற்று தன் நண்பனுடன் காசிக்குப் புறப்பட்டுச் செல்கிறான். சச்சிதாநந்த சுவாமியும் முத்துசாமி அய்யரும் காசிக்கு வந்து சேருகிறார்கள். ஆக கதை முடியும் கட்டத்திற்கு வருகிறது. காசியில் ஒரு மடத்தில் அவர்கள் தங்கி இருக்கும், சமயம் கிராமத்திற்கு திரும்பி வந்த பேயாண்டித் தேவன் அந்த குடும்பம் சீர் குலைந்ததை அறிந்து வருந்தி பரிகாரம் செய்ய, அவரைத் தேடிப் புறப்பட்டுச் செல்கையில் ஒரு ஊரில் ஒரு வீட்டுத் திண்ணையில் இரவு படுத்து இருந்தபோது உள்ளே பேசிய குரல்களிலிருந்து பம்பாயில் முத்துசாமி அய்யரின் சொத்தை கொள்ளையிட்ட இருவர் எனத் தெரியவர, போலீஸ் உத்யோகஸ்தரைப் போல நடித்து மிரட்டவும் அவர்கள் பணம் புதைத்துவைக்கப்பட்டிருந்த இடத்தைக் காட்ட, பணத்துடனும் அவர்களுடனும் காசி அடைந்து முத்துசாமி அய்யர் முன் வைக்கிறான். அது மட்டுமின்றி முத்துசாமி அய்யர் மடியில் உட்கார்ந்திருந்த ராமசேஷய்யர் என்பவரின் குழந்தைதான் காணாமற்போன முத்துசாமி அய்யரின் குழந்தை என்பதையும் துப்புத் துலக்குகிறான்.

அதே சமயம் சச்சிதாநந்த சுவாமிகளை தரிசிப்பதற்காக கமலாம்பாளும், அம்மையப்ப பிள்ளையும் மடத்துக்குப் புறப்பட்டுச் சென்றதும், அந்த வீட்டு வாசல்திண்ணையில் வந்து உட்கார்ந்த இருவர்களும் ஸ்ரீனிவாசனும் சுப்பராயனுமாக இருப்பதை வீட்டு உள்ளிருந்து வந்த லக்ஷிமி அறிந்து யாவரும் ஆநந்தப்பட்டு மடத்துக்கு வந்த சமயம், மடத்தில் கணவனைக் கண்ட கமலாம்பாள் அவர் பாதத்தில் வீழ்ந்து மூர்ச்சித்து கிடப்பதையும் முத்துசாமி அய்யரும் கடவுளின் மாயையைக் கண்டு சிரிப்பதா அழுவதா எனத் தெரியாமல் பிரமத்தில் லயித்துப் பரவசமாக இருப்பதையும் பார்க்கிறார்கள். இப்படியாக பலபேருடைய பல நாள் துயரம் பகவானுடைய கிருபையால்ஒரே இடத்தில் ஒரு நாழிகையில் நிவர்த்தி ஆகிறது. எல்லோரும் ஊர்திரும்பி முத்துசாமி அய்யர் இல்லறத் துறவில் வாழ்க்கை நடத்த, கமலாம்பாள் ராமத்யான ஆநந்த வைபவத்தில் முழுகி இருக்க இப்படியே நல்லவர்கள் சுகமாக வாழ, கெட்டவர்கள் அவரவர் பாபத்துக்கு அநுபவிக்க, கதை முடிகிறது.

கதையம்சம் பற்றி

இந்த கதைச் சுருக்கத்தினால்,நாவலை படித்து முடித்ததும் கிடைத்த சாராம்சத்தினால், இன்றையக் கண் கொண்டு பார்த்த அளவுக்கு கதையம்சம் சம்பந்தமாக சிறப்புகளை விட குறைகள் தான் முன்னுக்குத் தெரிய வந்தன. ஒரே நிதானமாக வளர்ந்து கதை மத்திக்கு வந்த பின்,பின்பாதி ஒரே வேகத்தில் சரிந்து விடுகிறது. அது மட்டமல்ல. யதார்த்தத்தனமான நடப்புகள் மாறி சட்டென அற்புதம் நிகழ்வதும், எப்படியும் எல்லாம் சரியாகிவிட வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வற்புறுத்திச் செல்வது போல துக்க சம்பவங்களை அடுக்கி,வற்புறுத்தித் திணித்து, பொருத்த மில்லை என்று நமக்குப் பட்டுகூடுமோ, என, வாசகனுக்கு சந்தேக்கு தெளிவுக்கு பின் விளக்கங்கள் சமாதானங்கள் கூறுவதும் சினிமா மாதிரி எல்லாவற்றையும் ஒரே இடத்திற்கு தக்க ஆதாரம் காட்டாமல் கொணர்ந்து சேர்த்து முடித்ததும் ஆகிய குறைகள் பளிச்சென தெரிய வருபவை. உண்மையில் கதையம்சத்தைக் கொண்டு இது ஒரு சுத்தமான யதார்த்தவாக நாவல் என்று சொல்லத்தோன்றவில்லை. போகப் போக யதார்த்த தன்மை விழுந்துபோய் அதிசயோக்தித்

தன்மைதான் நாவலில் அங்கங்கே இடம் பெற்று விடு கிறது. ஆனால் நாவல் யதார்த்தமான ஒரு முடிவுக்குத் ; ான் வந்திருக்கிறது.

இதனால், இது ஒரு சிறந்த நாவல் இல்லை என்று ஆகிவிடுகிறதா? நான் வேறொரு இடத்தில் கூறி இருப்பது போல, நாவலோ சிறுகதையோ, நாடகமோ எதற்கும், கதையம்சம் அவசியமானதுதான் ஆனாலும் கதையம்சத்தின் பங்கு ஓரளவு தான். அது நீங்கலாக, உருவம், உத்தி, கற்பனை, திருஷ்டி, தீட்சண்யம், புதிய நோக்கு, சொல்வழியில் நூதனம், கொடுக்கும்புதிய திருப்ட ம், புதிய லட்சணங்கள் ஏற்றுதல், பாஷைநயம், புதுப்புது படி ங்கள், அநுபவவெளியீடு, உணர்ச்சி, சிந்தனைப் போக்குத் தோரணை, தத்துவம், அழுத்தம், கனம், ஆழம் வன்மை, வலியுறுத்தல் இத்யாதி சிறப்பு அம்சங்களின் பங்கும் சேர்ந்துதான் செழுமைப் பொருளாக ஆகிறது ஒரு இலக்கியப் படைப்பு. ஆக, இத்தனையையும் ஒரு நாவலில் சோதித்துப் பார்த்துத்தான் முடிவுகட்ட வேண்டுமே ஒழிய கதையம்சம் ஒன்றை மட்டும் ஆழம் கொண்டு தர நிர்ணயம் செய்ய முடியாது. இவைகளுடன் ஆசிரியனின் நோக்கத்தையும் மனதில் வாசகன் கொள்ளவேண்டி இருக்கிறது. இந்த நாவலைதான் எழுதுவதின் உத்தேசத்தைப்பற்றி நாவலாசிரியர் பிற்கூற்றாக புஸ்தகததில் எழுதியுள்ள சில வரிகளைப் பார்ப்போம். அந்த வரிகள் சில முக்கிய கருத்துக்களை தெரிவிப்பதாக இருக்கின்றன. அந்த நாவலை நாம் எப்படி அணுக வேண்டும் என்று நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது போல, நமக்கு உணர்த்துவது போல இருக்கின்றன. அவர் கூறி இருக்கிறார் :

ஆசிரியர் உத்தேசம்

'இப்பொய்க்கதையை இதுகாறும் பொறுத்தருளிய நேயர்காள்! நும்பெரும் பொறுமைக்கு என் பெரும் வந்தனம். இக்கதை பெரும்பான்மையும் பலவித மனோசஞ்சலத்தின் மத்தியில் எழுதப்பட்டதாதலால் அழகு குன்றி' குன்றக்கூறன் மிகைபடக்கூறல்' முதலிய யீரைங்குற்றங்களுக்கும் குடியாயுளது...'

'இது நிற்க, இச்சரித்திர மெழுதுவதில் எனக்குக் கதையே முக்கிய கருத்தன்று. மற்றென்னையோ வெனில் பகவானது மாயா

ஒரு வேண்டுகோள்

இந்த 'எழுத்து' ஏடு உங்களுக்கு திருப்தி அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்குத்தெரிந்த இலக்கிய வாசகர்களுக்கு சிபாரிசு செய்யுங்கள். அவர்கள் முகவரியை எனக்கு எழுதி அனுப்புங்கள். அவர்களுக்கு எழுதுகிறேன். இது பெரிய ஒத்தாசை.

– சி.சு. செ.

விபூதியாம் பெருங் கடலுள் ஒரு அலையுள் ஓர் நுரையுள், ஓர் அணுவை யானெடுத்து அதனுள் என் புல்லறிவிற் கெட்டிய மட்டும் புகுந்து பார்த்து.... தூண் பிளந்துதோன்றிய அவனே அங்கும் இருக்கக்கண்டு திசை திறந்தண்டங்கிறிச் சிரித்தசெங்கட்சீயத்தைக் கண்டு கைகூப்பி ஆடிப்பாடியரற்றி உலகெலாந் துள்ளித் துகைத்த இளங்சேயொப்ப யாமும் ஆடிப்பாடி ஓடவேண்டுமென்பதே யன்றி வேறன்று.

'பொன்னம்மாளது சூழ்வினையிலும், சங்கரியது கொலைத் தொழிலிலும், சுப்புவின் கலகத் திறத்திலும், நடராஜனது விவரமறியா இளமையிலும், ராமசேஷய்யரது வாஞ்சா ரூபமான முதுமையிலும், லட்சுமி ஸ்ரீநிவாசனது மனோ தர்ம விசேஷத்திலும், கமலாம்பாளது பக்தி வைபவத்திலும் முத்துசாமியய்யரது ஆத்மானந்தத்திலும் எங்கும் சமமாய், சாட்சியாய், ஏகமாய் பூரணமாய், நித்தியமாய்....' உம்பர்க்கும் உனக்கும் ஒத்து இவ்வுலகெங்கும் நாம் காண்போம்.... கமலாம்பாளைப் போல 'புத்தியலறி யொண்ணாய் புராணனை பக்தியாம் வலையிற்படுத்து... அருட்தாகங் கொண்டு அவரது மனகோசார மான அவ்வடி நிழலில் ஒய்வடைவோம்.

'இவ்வுலகில் உழன்று தவிக்கும் ஒரு அமைதியற்ற ஆத்மா பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து கடைசியாக நிர்மலமான ஒரு இன்பநிலை அடைந்ததை விவரிப்பதே இந்த நவீனத்தின் முக்கிய நோக்கம்.

'கடவுள் எல்லாவற்றிக்கும் அந்தம். எல்லாம் கடைசியில் அவனையே அடைகின்றன. என்ன நேர்ந்தாலும் அவைகள் எல்லாம் நமது நன்மைக்கே என்பதையும், நாம் அநுபவிக்கும் தண்டனைகள் கடைசியாக நமக்கு நன்மையாகவே முடியுமென்பதையும் உணர்ந்து கர்மாவில் ஈடுபடுவது அவனை அடையும்படியான சுருக்கு வழி.

ஆன்மீக அக்கறை

இந்த பிற்கூற்று முற்கூற்றுகளில் தன் உத்தேசத்தைக் குறிப்பிட்டிருப்பது போலவே, கதை நெடுக,இதை ஒட்டிய ஆன்மீகக் கருத்துக்களை தன் கதாபாத்திரங்கள் வாயாலும், தன் வாயாலேயும், பல இடங்களில் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் வலியுறுத்த நாவலாசிரியர் தவறவேயில்லை. வெறுமனே தத்துவ உபதேசத்திற்காக மட்டும் இல்லாமல் கதாபாத்திரங்கள் தங்கள் செயல்கள் மூலம் கூடச் செய்யும் ஒரே சிரத்தை கதை நெடுக காண்கிறது. 'இந்த துன்பமே கடவுளைப் பற்றி நினைக்க செய்வதினால் நமக்கு ஒரு பெரிய அநுகூலமாக இருக்கிறது' என்று கமலாம்பாள் எண்ணிச் சொல்கிறபடி துக்கத்தின் மேல் துக்கமாக வந்து விழவிழ மனித சுபாவம் பண்படுகிறது? பக்குவப்படுகிறது. சோதனைக் குள்ளாகிய ராமன், அரிச்சந்திரனைப் போல, சீதை சந்திரமதியைப் போல, முத்துசாமி அய்யரும் கமலாம்பாளும் இந்த ஜன்மத்தில் யாதொரு தவறும் செய்தறியாதவர்கள் ஆனாலும் கர்மாவின் கைக்குள் சிக்கி உழன்று அநுபவத்திடையே ஞானம் பெற்றவர்கள். முத்துசாமி அய்யர் சிந்திக்கிறபடி மனிதன் அநுபவிக்கவே பிறந்தவன். சுவாமி அநுபவிக்க சக்தியும் கொடுத்து அவ்வனுபவம் சுலபத்தில் கிட்டாதபடி பலமான தடைகளையும் ஏற்படுத்தி இருக்கிறார். நாம் ஒரு மாமிசத்துண்டை நாய்க்குக் காட்டி தூர வீசி யெறிந்து விளையாடுவதுபோல சுவாமி நம்மை சோதனை செய்து விளையாடுகிறார். அர்ச்சுனை வலியச் சண்டைக்கிழுத்து அவனோடு கைகலந்து சண்டை போட்டல்லவோ அவனுக்கு பாசுபத அஸ்திரம் கொடுத்தார்' என்றபடி சோதனைக் குள்ளாகி கடவுள்அனுக்கரகத்தாலேயே மீட்சி பெற்றவர்கள்.

தன் நாவல் பற்றி...

வாழ்க்கையைப் பற்றிய இந்தநோக்கைக் கொண்டு, மனித சுபாவம் எவ்விதமெல்லாம் சந்தர்ப்பங்களில் அக, புறச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு உயர்ந்தும் தணிந்தும் போய் ஒரு நிலைக்கு வருகிறது என்பதைத்தான் இந்த நாவல் மூலம் ராஜமைய்யர்

எடுத்தக்காட்டி இருக்கிறார். அவரது வேதாந்தக் கருத்துக்கு விளக்கமாக அமைந்ததுதான் இந்த நாவல் என்று சொல்ல வேண்டும். முதன்மையாக, சித்தாந்த ரீதியாகத் தான் இந்த நாவலைப் பார்க்கவேண்டு மென்பது நாம் கதையைப் படித்து ம்டிவுக்கு வந்தது மட்டும் அல்ல. ஆசிரியருடைய வ்ார்த்தைகளான 'இச்சரித்திர மெழுவதில் எனக்குக்கதையே முக்கியக் கருத்தன்று' என்று ஆரம்பிக்கும் வரியே நம்மை எச்சரித்து விடுகிறது. எனவே அவரது கதையில் நாம் காணும் குறைகளை ஆசிரியர் முன் கூட்டியே யூகித்து, அதில் வேறுவித பார்வைகள் மூலம் குறைகள் காணக்கூடும் என்பதாலேயே தன் எல்லையை வகுத்துக் கொண்டிருக்கிறார். 'இப்பொய்க் கதை' என்று சொல்லும் போது தன் கற்பனை உருவம்நிஜமாக நடந்தல்ல என்பதை மட்டும் உணர்த்தாமல் கலாரீதியாகவும் அதில் பொய் இருப்பதற்கு இடம் இருப்பதைப் பற்றி பிரஸ்தாபிக்கிறார். இந்த யூகத்திற்கு வலுக்கொடுப்பது போல 'இக்கதை பெரும்பான்மையும் பலவித மனோசஞ்சலத்தின் மத்தியில் எழுதப்பட்டதாதலால் அழகு குன்றி 'குன்றக் கூறன் மிகைபடக்கூறல் முதலிய யீரைங்குற்றங்களுக்கும் குடியாயுள்ளது' என்ற பின் வரிகள் இருக்கின்றன. அடக்கமாகச் சொல்லப்பட்டவார்த்தைகள் என்பதற்கு மேலாக தன் உத்தேசத்தின், எல்லை வரையறுப்பின் பலனாக, தன் நாவல் சில அம்சங்களில் கலைத் தன்மை பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கூறியதாகத்தான் படுகிறது.

சிறுகதை, ஓரங்க நாடகம், நாவல், கட்டுரைகள் ஆகிய துறைகளில் கால் நூற்றாண்டுகாலமாக படைப்பில் ஈடுபட்டிருக்கும் சிதம்பர சுப்ரமண்யன் 1912ல் பிறந்தவர். ராமானாதபுரம் ஜில்லாவில் உள்ள மழவராய நேந்தல் அவரது ஊர். 'சக்ரவாகம்,' 'சூரியகாந்தி', 'வருஷப்பிறப்பு' ஆகிய சிறுகதைத்தொகுதிகளும், 'ஊர்வசி' என்ற நாடகத் தொகுப்பும், 'இதயநாதம்' என்ற நாவலும் வெளிவந்திருக்கின்றன. அவரது புது நாவல் ஒன்று சமீபத்தில் வெளிவர இருக்கிறது. தற்போது சென்னையில் வாஹினி ஸ்டுடியோ, விஜயா புரொடக்ஷன்ஸ் மானேஜராக வேலை பார்த்து வருகிறார்.

விண்ணும் மண்ணும்
– வாழ்வும் பயனும் –

ந. சிதம்பர சுப்ரமண்யன்

இந்தக் கதை எல்லோருக்கும் தெரிந்த கதைதான். சிவபெருமானின் திருநீலகண்டத்தில் அசைந்தாடிக் கொண்டிருந்த நாகம், விஷ்ணுவின் வாகனமான கருடாழ்வானைப் பார்த்து ''அப்பா கருடா, சௌக்யமா'' என்றதாம்.

கருடன் பதில் சொல்லிற்றாம், ''அப்பா நாகேசா! இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லோரும் சௌக்யந்தான்'' என்று. வாழ்விலே நாம் நன்கு ஆராய்ந்தறிய வேண்யடிதொரு தத்துவத்தைக் காணலாம் இந்தக் கதையிலே.

சிவபிரான் கழுத்தில் இல்லாமல் நாகம் கீழே ஊர்ந்துகொண்டிருந்தால், நடந்திருக்கவேண்டிய நாடகம் வேறு. ஆனால்சிவபிரான் கழுததில் நாகத்தின் நிலை வேறு. வேறு இடத்தில் இருக்கும்பொழுது அதன் நிலை வேறு. நிலை மாறும் பொழுது தன்மை மாறிவிடுகிறது.

விக்கிரமாதித்தன்சிம்மாசனம்கண்டுபிடிக்கப்பட்ட கதை இருக்கிறதே. அதுவும் இத்தன்மையதுதான். பயிற்கொல்லையில் மேடைமீதிலிருக்கும் பிராமணன், அங்கு வந்து கொண்டிருக்கும் போஜராஜன் படைகளை அன்போடு உபசரிக்கிறான். ஆனால் மேட்டிலிருந்து கீழிறிங்கி வந்ததும் அவன் தன்மையும் கீழிறங்கி விடுகிறது. பயிர்கள் வீணாகி விடுமென்று, வந்த ஜனங்களை, விரட்டியடிக்கிறான். அரியாசனத்தில் (மண் மூடியிருந்தாலும்) இருக்கும்பொழுது அரசன் தன்மையும்மண்ணை மிதித்ததும் சாதாரண மனிதன் தன்மையும் வந்துவிடுகிறது. இது இயற்கையே.

ஒவ்வொரு நிலையில் இருக்கும்பொழுது ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தன்மையும் மதிப்பும் இருக்கிறது. அந்த நிலை மாறும் பொழுது தன்மைகளும் நிலைகளும் மாறிவிடுகின்றன. விலையுயர்ந்த வைரம் ஒன்று கையிலிருக்கிறது. அதை விற்க வேண்டும். அழுக்குப் படிந்த ஆடைகளை அணிந்துகொண்டு,

கண்யக் குறைவாகக் காணப்படும் ஒருவன் கையில் இருந்தால் அது திருட்டுச் சொத்தாயிருக்கும் என்று ஒருவரும் வாங்கத் துணியமாட்டார்கள். அப்படியே வாங்க முன் வந்தாலும், அதர்ம விலைக்குத்தான் கேட்பார்கள். ஆனால், அதே கல் ஒரு பெரிய தனவந்தன் கையிலோ, அல்லது ஒரு ரத்ன வியாபாரி கையிலோ இருந்தால் அதன் மதிப்பு ஏறிவிடுகிறது. அதற்கு நியாயமாக உள்ள விலையை விட அதிக மாகவே கொடுத்து வாங்கத் தயங்க மாட்டார்கள். நிலையைப் பெருத்து விலை பார்க்கப் போனால் விலை யென்பதே இந்த நிலையை அடிப்படையாகக் கொண்டதொரு பொருள்தான். இந்த தத்துவத்தைத்தான் ஆங்கிலத்தில் மதிப்பு என்று சொல்லுவார்கள். நம் நாட்டில் அதற்கு இஷ்டம், பயன், புருஷார்த்தம் , உறுதிப் பொருள் என்று சொல்லி வந்திருக்கிறார்கள்.

இந்த மதிப்பு மாறக் கூடியது என்று பார்த்தோம். நிலை மாறும் பொழுதுதான் மாறும் என்பதில்லை. காலம் மாறும்பொழுதோ, அல்லது இதர காரணத்தாலோ இவை மாறவும் மாறலாம். காப்பி நமக்குப் பிடித்த வஸ்துதான். ஆனால் பித்தம் அதிகமாகி வாந்தியாகிக் கொண்டிருக்கும் பொழுது, காப்பியை நினைத்தாலே, வாந்தி யாகிறது. இல்லையா? நம் தேகத்தின் நிலை மாறிவிட்டதால் அதன் ருசி மாறிவிடுகிறது.

எல்லா மனிதர்களுக்கும் பொதுப்படையாகத்தான் இந்த மதிப்புக்கள்இருக்கும் என்பதற்கில்லை. மனிதனுக்கு மனிதன் இவை மாறிக் கொண்டும் இருக்கலாம். ஒரு மனிதன் போற்றும் ஒருபொருள் மற்றொருவனுக்கு அது சாதாரணமானதாயிருக்கலாம். உங்களுக்குத் தான் சேலம் மாப்பிள்ளையின் கதை தெரியுமே. சேலம் மாப்பிள்ளை தஞ்சாவூர் ஜில்லாவிலே பெண் எடுத்திருந்தான். மாப்பிள்ளைக்கு விருந்து கேழ்வரகுக் களி செய்து வைத்திருந்தார்கள். மாப்பிள்ளைக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் மாமனார் வீட்டிலே நல்ல அரிசிச் சோறு சாப்பிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தான். ஏனென்றால், சேலம் ஜில்லாவில் தினந்தோறும் கேழ்வரகு சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்துப் போயிருந்தது. ஆனால் தஞ்சாவூர் ஜில்லா மாமனார் வீட்டிலே கேழ்வரகு தினசரி உபயோகத்தில் இல்லாத பொருள். ஆகவே, அவர்களுக்கு அருமையான அந்தப் பொருளை மாப்பிள்யைக்கு வேண்டுமென்று தயார் செய்தார்கள். மாப்பிள்ளை இலையில் இருந்த களியைப்

பார்த்து, வணங்கிவிட்டு "சர்வ வல்லமையுள்ள களியப்பா, நான் உன்னைவிட்டு ஓடி வந்தாலும் இங்கேயும் என்னைத் துரத்திக்கொண்டு வந்துவிட்டாயே" என்று சொல்லிவிட்டு வாயில் களியைப் போட்டுக் கொண்டானாம். ரஸமான கதை. எல்லா மனிதர்களும் ஒரு பொருளில் ஒரே மாதிரியான மதிப்பைக் கொடுப்பதில்லை என்பதற்கு நல்ல உதாரணம்.

இந்தத் தத்துவத்தை மனத்தில் வைத்துக் கொண்டு வாழ்க்கையின் பயன் என்ன என்று எடைபோட்டுப் பார்க்கலாமா? வாழ்வின் மதிப்பு என்ன? அதனால் ஏதேனும் பயன் உண்டா? மனிதன் எதற்காக வாழ்கிறான்? அவன் வாழ்விலே அடைய விரும்பும் பொருள்கள் யாவை? அவைகளின் தன்மை என்ன? அவைகளின் மதிப்பு என்ன? ஒரு தொழிலாளியின்உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம். ஒரு தொழிற் சாலையில் ஒருநாள் எட்டு மணி நேரம் வேலை செய்கிறான். அவன் செய்யும் வேலைக்குத் தகுந்தாப் போல்,ஊதியம் கிடைக்கிறது. ஆனால் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் காலவரை நிர்ணயிக்கப் பட்டதுதான். வாழ்விலே அதைப் போலவே, என்ன பயனைப் பெறுகிறோம்? இந்த வயிறு வளர்க்கும் காரியத்தைத் தவிர வேறு ஏதாவது மனிதரிடம் நாம் எதிர்பார்க்கலாமா? அவன் வாழ்வு, கேவலம் வயிறு வளர்ப்பதுடன் முடிவடைந்து விடுகிறதா? அதற்கு மேலும் அவன் செய்ய வேண்டிய, செய்திருக்கிற அல்லதுசெய்ய முயற்சிக்கிற காரியங்கள் ஏதாவது உண்டா? அல்லது வாழ்வே, பயனற்ற ஒரு காரியம் தானோ?

மாக்பெத் சொன்னான்:

"வாழ்க்கையா – அது ஒருநடமாடும் நிழல்.
காத்தடித்துவிட்டுப்போன கோமாளியின் ஆட்டம்
கூச்சலும் கோபமும் மிகுந்து நிற்கும்
பித்தன் சொன்னதொரு பொய்க்கதை"

மாக்பெத்தைப் போலவே, ஒவ்வொருவரும் ஏமாற்றமோ தோல்வியோ அடையும் காலத்தில் 'சீ! இதென்ன பைத்யக்கார வாழ்க்கை!" என்று கசந்து கொண்டிருக்கிறோம். இதென்ன பயனற்ற வாழ்வு என்று சில சமயங்களில் மதித்து, வாழ்விலே துக்கத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாதா, அதுதான் வாழ்வின் பயனா, என்றும் யோசித்திருக்கலாம். அல்லது உமார் காயத்தைப் போல்,

இன்றைக்கின்றைக் கென்றோயாது
  இரவும்பகலும் உழைத்திடுவர்
அன்றி நாளைக்காமெனவே
  அலுப்பில்லாது முயன்றிடுவர்

ஒன்றுசொல்வேன் உண்மைமொழி
  உறுதியாகக் கொள்வீரே
என்றும்மூடர் நன்மையுமக்கு
  இங்கும் இல்லை அங்கும் இல்லை.

என்று ஆணித்தரமாகத் தீர்மானிக்கலாம்.

இதற்கு நேரிடையான அபிப்ராயங்களும் இல்லாமல் இல்லை. வாழ்வு கிடைத்தற்கரிய பெரியபாக்யமென கருதியவர்களும் உண்டு. இந்த அரிய வாழ்வைப் பெற்றோமே என்று பெருமைப் பட்டு மகிழ்ச்சி கொண்டவர்களும் இருக்கத்தானிருக்கிறார்கள். மனித வாழ்க்கை பற்றி ஔவைப் பிராட்டி சொல்வதைக் கொஞ்சம் கேட்கலாம்.

அரியதுகேட்கின் வரி வடிவேலோய்
அரிதரிது மானிட ராதலரிது
மானிடராயினும் கூன்குருடு செவிடு
பேடுநீங்கிப் பிறத்த லரிது
பேடுநீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செய்தலரிது
தானமும் தவமும் தான்செய்வாராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.

பாரதியார் உலகத்தைப் பித்தன் சொன்ன கதையாக வெறுத்துத் தள்ளவில்லை. என்ன அற்புதமான வாழ்க்கை யடா என்று அதிசயித்து அனுபவித்துத்தான் பாடியிருக்கிறார்.

ஒவ்வொரு நிலையில் நின்று பார்க்குபொழுது வாழ்வும் அதன் பயனும் கூட ஒவ்வொரு மாதிரியாகத் தோன்றுகிறது. ஆகவே, இந்த Value என்ற மதிப்பிடும் அம்சத்தை எதை வைத்துத் தான் நாம் ஆராய்வது?

பொதுவாகப் பார்த்தால் மக்கள்பொருளோடு ஒட்டிய வாழ்வைத்தான் ஒரு அளவு மதிப்பிடுகிறார்கள் என்பது நமக்கு நன்கு விளங்குகிறது. ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

நண்பர் ஒருவர் நம் வீட்டிற்கு வருகிறார். அவருடன் பேசிக்கொண்டிருக்கிறோம். நம் வீட்டிலிருக்கும் பெரியவர் உள்ளிருந்து வருகிறார். வந்த நண்பரை அவருக்கு அறிமுகப்படுத்தி விடுகிறோம். நண்பரை என்ன உத்யோகம் என்று கேட்கிறார். நண்பர் பதில் சொல்கிறார். 'என்ன சம்பளமோ' என்று கேட்கிறார் பெரியவர். நமக்கு தர்ம சங்கடமாயிருக்கிறது. நண்பர் எதையோ மென்று 'முழுங்கிச் சொல்கிறார். பெரியவர் நண்பரை எடை போட்டுவிட்டார். பெரியவர், வந்தவரின் படிப்பையோ, குணத்தையோ, இதர யோக்யதைகளையோ பற்றி அறிய அக்கறை கொள்ளவில்லை. அவர் முகத் தோற்றத்தைக் கூட அவர் மனத்தில் வாங்கினாரா என்பது சந்தேகம் தான். ஆனால் வந்தவரின் தன்மையை அறியக் கூடிய ஒரே உரைகல்லில் உரைத்துப் பார்த்துவிட்டார் அல்லவா?

இதையும் பார்க்கலாம். எங்கள் காரியாலயத்திற்கு ஒரு நண்பர் வந்திருந்தார். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, ஒருவர் காரில் வந்து இறங்கினார். நண்பர் அவரைக் கவனித்துப் பார்த்துவிட்டு "இந்தப் பெரிய மனிதர் யார்" என்றார்.

"அவர் பெரிய மனிதர் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றேன் நான்.

"பெரிய மனிதராகத் தானிருக்க வேண்டும். இருபத்தேழாயிரம் பெறுமான கார். கையில் விலையுர்ந்த சிகரெட் பெட்டி. வண்ணான் மடிப்புக் கலையாத வேஷ்டி, ஜரிகை அங்கவஸ்திரம். ஆள் மிகவும் அந்தஸ்துள்ளவராகத் தானேயிருக்கிறார். பார்த்தால் பெரிய மனிதராகத்தானேயிருக்கிறது" என்றார்.

"ஐயா, இவர் மிகவும் சின்ன மனிதர். இவர் எப்படிப்பட்ட பேர்வழி தெரியுமா? தப்பான எந்தக் காரியத்தையும் கூசாமல் செய்வதில் அசகாய சூரர். அந்தக் கார் மார்வாரி கடையில் மாதா மாதம் தவணைக்கு கடன் வாங்கிய கார். கட்டியிருக்கும் வேஷ்டி இவருடையதுதானா என்பது சந்தேகம். ஆனால் வெளிச்சம் போடுவதில் மன்னன். பேச்சிலே வானத்தை வில்லாக

வளைத்துவிடுவான் பேர்வழி. பெரிய மனிதனுக்கு நல்ல இலக்கணம் கண்டு பிடித்தீர்கள் ஐயா'' என்றேன் ஆத்திரத்தோடு.

''அப்படியா! எனக்குத் தெரியவில்லையே'' என்று திகைத்தார் நண்பர்.

மனிதனைப் பொருளோடு வைத்து மதிப்பிடுவதுதான் உலக இயல்பென்பதைப் பார்த்தோம். ஆனால், இதிலும் கூட அனேக சிக்கல்கள் வந்து விடுகின்றன. நிலைமாறும் போது மாறும் மதிப்பைப்பற்றிக் கவனித்தோம். நிலை ஒன்றாகவே இருந்தாலும் பார்க்கும் முறையில் சிறு வித்யாசங்கள் ஏற்படும்பொழுது அந்த மதிப்பு வெவ்வேறாகி விடுகின்றது.

ஒவ்வொரு பொருளுக்கும் பல மதிப்புக்கள் இருக்கின்றன. நிலைமாறாவிட்டாலும் அந்த பல தரப்பட்ட மதிப்புக்குட்பட்டே யிருக்கின்றன. இவைகளுக்கு Intrinsic Value சுபாவ மதிப்பு – Face Value தோற்ற மதிப்பு – Market Value விலைபோடும் மதிப்பு -Break-up-value- பின்ன மதிப்பு என்று பலவிதங்களில் அதைப் பாகுபாடு செய்திருக்கிறார்கள்.

வடபழனியில் என் வீடு இருக்கிறது. அதைப் புதுப்பித்திருக்கிறேன். ஒருநண்பர் வீட்டிற்கு வந்தார். வீட்டைப் பார்த்தார். ''பேஷ், வீட்டை மிகவும் வசதியாகக் கட்டிவிட்டீர்களே. எவ்வளவு ஆயிருக்கிறது'' என்று கேட்டார் நண்பர். ''ஐம்பதாயிரம் இழுத்து விட்டது'' என்கிறேன்.

''அடேயப்பா ரொம்ப ஜாஸ்தியாயிருக்கே. ஏன் அவ்வளவு ஆயிருக்கிறது? இந்தத் தொகைக்கு நல்ல பங்களா மாம்பலத்தில் வாங்கியிருக்கலாமே.''

''பழய வீடாயிருந்தது; கையை வைக்கவும் மேலும் மேலும் விழுங்கி மிகவும் சாப்பிட்டு விட்டது. புதிய வீடு கட்டுவது சுலபம். நான் பழய வீட்டைப் பிரித்துக்கட்ட ஆரம்பித்ததும் என்னை யறியாமலேயே அதிகம் ஆய்விட்டது.'' என்றேன்.

''நீங்கள் விற்க ஆரம்பித்தால் அந்தத் தொகை கிடைக்குமா'' என்று கேட்டார் நண்பர்.

நான் ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழிக்கிறேன். நான் வீட்டிற்குச் செலவழித்த தொகைதான் என் வீட்டிற்கு விலை. அதுவே அதன் சுபாவ விலை (Intrinsic). ஆனால், அதை வாங்க முன் வருபவர்கள் எனக்கு என்ன செலவாயிற்று என்று கவலைப் படப்போவதில்லை. வீடு எத்தனை பெறும் என்றுதான் கணக்கிட்டுப் பார்ப்பார்கள். அந்த வட்டாரத்தில் நிலத்திற்குள்ள சராசரி விலையை விசாரிப்பார்கள். கட்டடத்தின் அகலம் நீளம் என்ன, எப்படிக் கட்டப் பட்டிருக்கிறது. அதற்கு வரக்கூடிய வாடகை எவ்வளவு, எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறது. இவைகளையெல்லாம் விசாரித்து அவர்கள் மதிப்புப்போடுவார்கள். இவர்கள் போடும் மதிப்பு நாற்பதாயிரம் என்று வைத்துக் கொள்வோம். இதுதான் விலைபோகும் மார்க்கெட் மதிப்பு (Market Value). ஆனால் வீட்டின் தஸ்தாவேஜுகளைப் பார்த்தால் நான் பழைய வீட்டை என்ன விலைக்கு வாங்கினேனோ, அந்த விலைதான் இருக்குமே தவிர, நான்பிரித்துக் கட்டின தொகை இருக்காது. புது வீட்டின் தஸ்தாவேஜும் பழைய விலையைத் தான் காட்டும். அதுவே, முகமதிப்பு (Face Value) என்று சொல்லலாம்.

இந்தப் புது வீட்டைப் பிரித்து, ஜன்னல்கள், கதவுகள், ஓடுகள், உத்தரங்கள், செங்கல்கள் இப்படியாகத் தனித்தனியாக விற்பதனால் என்ன கிடைக்குமோ அதுவே பின்ன மதிப்பு (Break up Value) பைத்யக்காரத்தனமாகத் தோன்றினாலும், விற்க முடியாத, கிராமத்திலிருக்கும் சில வீடுகளை விற்பதற்கு இது சிறந்த முறையாகவும் லாபகரமான முறையாகவும் ஆகிவிடுவதை சில விசித்திரமான இடங்களில் பார்க்கலாம்.

மற்றொன்றையும் பார்த்துவிடலாம். என் பக்கத்து வீட்டை, ஒரு பெரிய அச்சாபீஸ் முதலாளி வாங்கியிருக்கிறார். அது அவருக்குப் போதவில்லை. பெரிய யந்திரங்கள் வைக்கவும், கடுதாசி வாங்கி சேமித்து வைக்கவும், காரியலாயத்திற்கும், என் வீடும் இருந்தால் மிகவும் வசதியாக இருக்கும். தொழில் நன்கு அபிவிருத்தி செய்ய சௌகரியமாயிருக்கும். என் வீட்டை அவர் விலைக்கு வாங்க முடியுமா என்று நோட்டம் பார்க்கிறார். ஒரு மனிதர் மூலம் விசாரித்துப் பார்க்கிறார். நான் அசிரத்தையாகச் சொல்கிறேன். “நான்எதற்காக ஐயா இதை விற்கப் போகிறேன். விற்பதற்காகவா இவ்வளவு சிரமப் பட்டு என் இஷ்டத்திற்குக் கட்டியிருக்கிறேன்.

எனக்கு மிகவும் 'ராசி'யான வீடு. இந்த வீட்டிற்குள் கால் வைத்தவுடன் தான் எனக்கு நல்ல காலம் ஆரம்பமாயிற்று'' என்று பெருமையாகச் சொல்கிறேன்.

''அப்பொழுது கொடுப்பதாக எண்ணம் இல்லையே'' என்கிறார் வந்தவர். நான் யோசிப்பது போல் சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு, ''ஆமாம் உடனடித் தேவை ஒன்று மில்லை. இருந்தாலும் நல்ல விலையாக வந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம்''. என்கிறேன்.

''என்ன விலையென்றால் கொடுக்கலாம். ஒரு உத்தேசம் சொன்னால் யோசித்துப் பார்க்கலாமே.''

மறுபடியும் ஒரு விநாடி யோசித்துவிட்டு ''ஐம்பத்தை யாயிரம் கொடுப்பதென்றால் கொடுத்துவிடுகிறேன்,'' என்கிறேன்.

''சரி'' என்று விடுகிறார் அச்சாபீஸ்காரர். அவருக்குத் தேவை இருப்பதால், அந்த விலை கொடுத்து வாங்க முன் வருகிறார். அதுதான் தேவை மதிப்பு (Utility Value).

இதுவரையில், நிலைமாறும்பொழுது மாறும் மதிப்பையும், ஒரு நிலையிலேயே வெவ்வெறுவிதமான மதிப்புக்கள் ஒரு பொருளுக்கு ஏற்படுவதையும் பார்க்கிறோம். இந்த மதிப்பு அடிப்படையில் எதனால் உண்டா கிறது?

மனிதன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் இரண்டுவிதமாக அறிகிறான். ஒன்று பொருளின் தன்மையை உணர்வது. மற்றொன்று அந்தப் பொருளுக்கும் தனக்கும் உள்ள தன்மையை அறிவது. ஒன்று தனக்குப் புறம்பான (Objective) அறிவு. மற்றொன்று தன்னுடன் சம்பந்தப்பட்ட (Subjective) உறவு. முதலாவதை (Fact) உண்மையென்றும், பிந்தியதை மதிப்பு (Value) என்றும் சொல்லலாம்.

நான் சிறுவயதிலிருந்து வசித்து வந்த ஊர் தண்ணீர் இல்லாத ஊர். பயிர்பச்சைகளைக் காண முடியாது. எங்கள் பூர்வீக கிராமம் அங்கிருந்து அறுபது மைலுக்கப்பாலுள்ளது. கிராமத்திலிருந்துவரும் உறவினர்களை எங்கள் பந்துக்கள் 'கிராமத்தில் மழை உண்டா'' என்று கேட்பார்கள். அவர்கள் உண்டு, இல்லை என்று சொல்வார்கள். பட்டினவாசியான எனக்கு வந்ததும் வராததுமா மழையின் மேல் ஏன்

இவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள் என்று அப்பொழுது புரிந்ததில்லை. பிற்காலத்தில், மழையைப் பற்றி அவர்கள் அக்கறை காட்டியது, மழையின் பயனைப் பற்றித்தான் என்று தெரிந்து கொண்டேன். மழைபெய்தால் நல்ல மகசூல் கிடைக்கும் அல்லவா? மழை பெய்கிறது என்று நாம் அறிந்துகொள்வது ஒரு உண்மை (Fact). ஆனால் அந்த மழையினால், பயிர் நன்கு விளையும் நமக்கு உபகாரமாகும் என்பது மதிப்பு (Value).

மின்சாரம் என்ற சக்தியை ஒருவன் கண்டு பிடிக்கிறான். மற்றொருவன், மின்சாரத்தை ஜனங்களுக்கு உபயோகப்படும் படி செய்கிறான். அவன் அதற்கு மதிப்பை (Value) உண்டு பண்ணுகிறான்.

மனிதன் ஒருவனுக்குத்தான் அறியும் சக்தி இருக்கிறது. அடையவேண்டும் என்கிற வேட்கை இருக்கிறது. அடைந்தபின் அனுபவம் என்ற பேறு அவனுக்குக் கிடைக் கிறது.

ஒரு பொருளை ஒரு மனிதனே, பலதரப்பட்ட பயன்களில் அநுபவிக்கவும் கூடும், மலை வாசம் செய்யும் பொழுது, திடீரென்று ஒரு நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடிக்கிறான் மனிதன். இது (Fact) உண்மை. இந்த நீர்வீழ்ச்சியை மின்சாரத்திற்குப் பயன்படுத்தலாம் என்று யோசிக்கும் பொழுது ஒருவித மதிப்பு (Value) ஏற்படுகிறது. அது இல்லாமல், என்ன அழகான நீர்வீழ்ச்சி என்று அதன் அழகை அநுபவிக்கும் பொழுது அதுவும் ஒரு பயன்தான் (Value). ஆனால் இது வேறு தினுசான பயன்.

பயன்களிலே பல வகைகள் இருக்கின்றன. அவைகளை வரிசைப்படுத்திப் பார்க்கலாம்.

வாழ்க்கையிலே மனிதன் தன் வாழ்விற்கு அனேக பொருட் சாதனங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கிறான். இவைகள் பொருளாதாரப் பயன்கள். (Economic Value)

> இந்த பத்திரிகையின் பொறுப்பு ஏற்றிருக்கும் சி.சு. செல்லப்பா மதுரை ஜில்லா வத்தலக்குண்டில் 1912ல் பிறந்தவர். 'ஸரஸாவின் பொம்மை', 'மணல்வீடு' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகள் அவருடையவை வெளியாகி இருக்கின்றன.

மனித தன்மையை வைத்துத்தேடப்படும் பயன்கள்

மனிதன் அனுபவத்திற்கு உணர்ச்சிகளை வைத்துக் கொண்டுதேடப்படும் பயன்கள் அழகு அனுபவங்கள் (Aesthetic Value).

மனிதன் நடத்தையை ஆதாரமாக வைத்துக்கொண்டு தேடப்படும் பயன்கள் தார்மீகப் பயன்கள் (Moral Value)

மனிதன் ஆன்மீக அடிப்படையில் தேடும் பயன்கள் (Spiritual Values)

இவைகள் எல்லாமே, மனிதன் தேடும் பயன்கள்தான். ஒவ்வொரு மனிதனிடமும் இவைகள் இருக்கத்தான் செய்கின்றன. சிலரிடம் பொருளாதாரப் பயன்தேட்டம் அதிகமாயிருக்கும். சிலரிடம் ஆன்மீகத் தேட்டம் அதிகமாயிருக்கும். இதுவே வித்தியாசம்.

இந்தப் பல்வேறு பயன்களையும் ஒவ்வொன்றாய் சீர்தூக்கிப் பார்க்கலாம்.

இன்றைய தமிழ் இலக்கிய விமர்சன தோரணை

சி.சு. செல்லப்பா

தற்கால தமிழ் இலக்கிய விமர்சனப் போக்கை, இதுவரையில் பிரசுரம் ஆகி இருக்கும் புஸ்தங்கள், சஞ்சிகைப் பக்கங்களில் வெளியாகி இருக்கும்கட்டுரைகள், பத்திரிக்கை கள், தினசரிகளின் பத்திகளை நிரப்பும் புத்தக விமர்சனங்கள், ஆகிய இவைகளிலிருந்துமட்டும் நிதானித்து மதித்து விட முடியாது. இலக்கியத்தை அணுகுவதில், ஊன்றிச் சொல்லும், பழங்கிடைப்பற்றுள்ள, அடம்பிடித்த, காலத்துக்கும் ஒவ்வாத முறைகளுக்கு எதிராக படைப்பாளர்களிடம் ஏற்பட்ட ஒரு அதைப்பு (Reaction) மூலம் வெளியான தற்போதைய மனப்போக்கை ஒருவன் கவனத்தில் கொண்டாக வேண்டும். இலக்கியத்தை ரசிப்பதற்கான தன்மை நமது முன்னோர் களுக்கு இருந்ததில்லை என்ற கருத்தை துச்சமாகத் தள்ளிவிடுவதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன என்றாலும், ஒன்றை – இதை மட்டும் நாம் அப்படியே விழுங்கித்தான் ஆக வேண்டும். கலைகளில் கடைக்குட்டியாகிய இலக்கிய விமர்சனம், இன்று, நாம் அதைப்பற்றி கொண்டுள்ள முழு அர்த்தத்தில், முற்றிலும்மாறுபாடான ஒரு பயிற்சி முறையையும் செயல்வழியையும் தண்டிக் கேட்கிறது. இந்தக் கட்டுரையின் வீச்சு நோக்கம் தற்கால இலக்கியம் பற்றி மட்டும் கட்டுண்டு இருந்தாலும், தமிழ் தொன்மைக் காவியங்கள் சம்பந்தமாக முன்கால, இன்றைய, குணம் காண்கிற தோரணைபற்றிய ஒரு அறிமுகக் குறிப்பு விஷயத்தை வித்யாசத்தால் பார்த்து அறிவதற்கு நமக்கு உதவக்கூடியதாக இருக்கும்.

பழைய முறையின் வரையறை

சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையைப்பற்றி அபிப்ராயம் கூறுகையில் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் வரிகள் இவை :

'இவரது உரையினால் தமிழ் உணர்ச்சியும் இசை, கூத்து முதலியன பற்றிய உணர்ச்சியும் மிகுந்தன. அணிகளின் இயல்புகளும் இவரால் அங்கங்கே விளக்கப்பட்டன. சில சில இடங்கில் சொற்களும் நயங்களும் எடுத்துக்காட்டப்பட்டன. இவைகளுக்கு மேலாகவுள்ள இலக்கிய நயம், கவிதை நயம் முதலியன இவரால் சிறிதும் புலப்படுத்தப்படவில்லை. முற்காலத்தே இவ்வகை நயங்களை உரைகாரர்கள் எடுத்துக் காட்டும் வழக்கமும் பெரும்பாலும் இல்லை.... உரைகளோவெனில், நூலிலுள்ள கொள்கைகளையும், நோக்கங்களையும், நியதிகளையும், இலக்கணங்களையும், அணிகளையும், எடுத்துக்காட்டுதலையே தமது முக்ய கடமையாகக் கொண்டன. ஆகவே, இசை யுணர்ச்சி, சரித்திர உணர்ச்சி, கதை நயம், சொல் நயம், நீதி, சமயத்துவம் முதலியவற்றுள் ஒரு சிலவற்றின் பொருட்டு, ஒவ்வொரு காலத்தில் இக்காவியம் தோன்றியது முதல் இன்று வரை பாராட்டப்பட்டு வந்துள்ள தெனலாம்.' (இலக்கிய மணிமாலை)

இலக்கிய மதிப்பீடு செய்வதில் புதிய, சத்தான நோக்கை கைக்கொள்ளவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அவர் மேலும் கூறி இருக்கிறார் :

.... இவைகளை யெல்லாம் புறம்பே ஒதுக்கினால் அன்றி, சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயத்தையும் கலை நயத்தையும் கவித்துவ நயத்தையும் நாம் உணர்ந்து கொள்ள முடியாது. இந் நெறியில் நாம் இக் காவியத்தைக் கற்றால் தான் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று 'சுப்ரமண்ய பாரதி கூறியதன் உண்மை விளங்கும். இந் நெறி கையாளப்ப டுதற்குரிய காலமும் இந்த நூற்றாண்டேயாகும். ஏனெனின் இலக்கியங்களை இப்புதிய நெறியில் கற்று அநுபவிப்பதற்கு இக்காலத்து ஆங்கிலத்தில் உள்ள நூல்– மதிப்பு முறை பெரிதும் உதவவல்லது.

தன் வாழ்நாள் முழுவதும் பழமை யான தமிழ் காவியங்களை ரசித்து, ஆராய்ந்து, ஆராய்ச்சியும் செய்வதிலேயே ஈடுபட்டிருந்த ஒருவரது பேனாவிலிருந்து வரும் இந்த வரிகள் மறுக்க முடியாதபடி ஒன்றைக் குறிக்கின்றன. அதாவது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு உரைநூல் வடிவில் கையாளப்பட்ட பழையவிமர்சன 'முறை' (அதை ஒரு முறை என்று கூறக்கூடுமானால்!) அவர்கள் தகுதியானது என நினைத்த ஒரு சில மதிப்புக்களைப் புலப்படுத்துவதில் விசேஷ சிரத்தைகாட்டுவதோடு வரையறை பண்ணிக்கொண்டு விட டதாகும் என்பதுதான். இப்படிச் செய்ததன் மூலம் ஒரு வித மன ஒடுக்கம், ஒரு பக்க மனச்சாய்வு, துரபிமானம் கூட உள்ள ஒரு அறிவை வெளிக் காட்டிக் கொண்டு விட்டார்கள், சென்ற காலத்து உரை ஆசிரியர்களை விட்டு விடுவோம். இன்றைக்கும் கூட, தொன்மை நூல்களில் மேய்ந்து கொண்டிருக்கும் பண்டிதர்களும் பேராசிரியர்களும் கூட இந்த மரபை மிகுந்த விசுவாசத்துடன் காப்பாற்றி வருகிறார்கள். பழைய இலக்கியம், அவர்களுக்கு, கால நிர்ணயம் செய்யவே முடியாத நூல்களின் காலத்தை நிர்ணயிப்பதற்கு தங்கள் உரைவாட்களை மோதிக் கொள்வது, தங்கள் சரித்திர, இன ஆராய்ச்சிக் கோட்பாடுகளுக்குப் பொருந்தக் கூடிய அர்த்தங்களை தானே விளங்குகிற வார்த்தைகளுக்கு வர்ணம் கொடுப்பது, அக்காலத்து மக்கள் வாழ்க்கைமுறை பற்றிய மெய்ம்மைத் தகவல்களுக்காக துருவுவது போன்றவை களுக்கான களமாக இருக்கிறது. இந்தவித வாதமாடுதல் களைப் பற்றி, தன் தேசத்தவரைக் குறித்துக் கண்டித்து சொன்ன அமெரிக்க விமர்சகர் மால்காம் கௌலியின் வார்த்தைகளையே எதிரொலியாக எடுத்துக் காட்டத்தான் ஒருவருக்குத் தோன்றுகிறது.

'நமது படிப்புகள் ஒன்று உபயோகமற்றவை அல்லது தப்பு வழியில் போகிறவை – அதுவும் முக்யமாக நமது இங்கிலீஷ் இலக்கியப் படிப்புகள்.'

ஆயினும், நாம் மேல் நாட்டிலிருந்து எடுத்துக் கொண்ட நாவல், சிறுகதை ஆகிய உருவங்களான வசன கட்டுக்கதைகளின் பரப்பைக் கண்ட சென்ற நூற்றாண்டுக் கடைசி சில பத்தாண்டுகள் இன்றைய இலக்கிய அபிப்ராய தோரணையை அடி எடுத்துக் கொடுத்தன. கவிதைத் துறையில் ஒரு படைப்பு நூலில் உள்ள சம்பிரதாய நியதி அம்சங்களுக்கு மட்டும் அளவு மீறிய முக்யத்துவம்

கொடுத்து வந்திருப்பவர்களால் பின்பற்றப்பட்டவைகளை விட முற்றிலும் மாறுபட்ட குணம் காணும் பார்வையை அது வேண்டியது. அன்று வெளியான இரண்டு புஸ்தக மதிப்புரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் பின்வரும் இரண்டும் :

சென்ற நூற்றாண்டு மதிப்புரை விதம்

.... கதைக்கரு முழுக்கவும் வெகுநன்றாக தூக்கிப் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஏற்பட்ட நஷ்டங்கள் யாவும் ஒரே நாளில்சீராகிவிட்டன என்று முடிவு நோக்கி சற்று அவசரப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர, பலவகையாக உள்ள கதாபாத்திரங்கள் எல்லாம் கூரியதாகவும் வாழ்க்கைக்குப் பொருத்தமானதாகவும், அதுவும் ஒரு சில வரிகளில் தீட்டப்பட்டிருக்கின்றன. ஒரு சாமான்ய இந்து குடும்பக் கதைக்குத் தக்க வீச்சு ஆச்சர்யப்படத்தக்க விரிவு கொண்டு அமைந்திருக்கிறது... இவை எல்லாம் வெகு அழகாக பேதத்தைக் காட்டுகின்றன. ஓரளவுக்கு நாவலின் பரப்பை வெளித் தெரிவிக்கின்றன. நடை எளிமையாகவும், தூயதாகவும்....

(பி.ஆர். ராஜமய்யர் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரம்' நாவலுக்கு 'பிரபுத்த பாரதா' 1897மார்ச் இதழில் 'இங்கிலீஷில் வெளியான மதிப்புரை.)

....பொதுவாக சந்தர்ப்பங்கள் நன்றாக ஆய்ந்து எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் சோக தோரணை போதுமான அளவு வலியுறுத்தப்படவில்லை. கதாசிரியர்..... செய்திருந்தால், இன்னும் நேர்த்தியாக கலை நோக்குக்கு உபயோகப்பட்டிருக்கும். கதைக் கருவை வளர்த்துச்செல்வதில் ஆசிரியர் கணிசமான சிறப்பை வெளிக் காட்டி இருக்கிறார்; ஆனாலும் சுவாரஸ்யத்தில் அடிக்கடி குறுக்கிடும் யோசனைகள் விஷயத்தில் இன்னும் கொஞ்சம் அடக்கிக்கொள்ளும் சாமர்த்தியம் காட்டப்பட்டிருப்பின் சிலாக்யமாக இருந்திருக்கும். புஸ்தகம் இங்கும் அங்கும் ஒருவருக்கு டென்னிஸனை நினைவூட்டக்கூடிய மேன்மையான சாயைகள் நிறைந்து இருக்கிறது...

(அ.மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' நாவலுச்கு 'பிரபுத்த பாரதா' 1898 மார்ச் இதழில் இங்கிலீஷில் புஸ்தக மதிப்புரை.)

இவை இங்கிலீஷில் எழுதப்பட்டிருந்தாலும், தமிழ் இலக்கிய அரங்கில் மதிப்பீட்டு முறையின் ஆரம்பகால மாதிரிகள் என்று கருதப்பட வேண்டியவையாகும். புஸ்தக உற்பத்தி, பத்திரிகைப் பெருக்கு மூலம் தெளிவாகத் தெரியும் இன்றைய பரபரப்புக்கு மாறாக, இலக்கிய முயற்சிகள் சந்தடியற்ற சூழ்நிலையில் நடைபெற்று வந்த ஒரு காலம் அது. ஒழுங்குபடுத்திய நோக்கு ஒன்று கொண்ட விமர்சன அபிப்ராயம் வாய்ந்த இந்த வரிகள், அவ்வளவு ஆரம்ப தசையிலும் கூட ஒரு புஸ்தக மதிப்புரை முறை இலக்கிய விமர்சன முறை எல்லைக்குள் வந்திருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. டென்னிஸனைப்பற்றியும் நாவல் லக்ஷணம், உத்திகளைப் பற்றியும் பிரஸ்தாபித்திருப்பது, ஓரளவுக்கு மதிப்புரையாளருக்கு மேற்கத்திய இலக்கியம், அதன் விமர்சன நியதிகளையும் பற்றிய விஷயஞானம் இருப்பதைக் காட்டுவதாக இருக்கிறது.

புதுவித பரிசோதனை ஆரம்பம்

உரைநடையைப் பரிசீலனை செய்வது நிலையாகப் பின்பற்றப் படவில்லை. ஏனென்றால் மேய்வதற்கு வேண்டிய அளவு அப்போது கிடையாது. ஆனால் இந்த புதுவித பரிசோதனையின் ஆதாயத்தை பெறும் பேறு இந்த நூற்றாண்டின் முதல் மூன்று பத்தாண்டுகளில் கவிதைக்குக் கிடைத்தது. தமிழ் சிறுகதையின் தந்தையான வ.வெ.சு.அய்யர், பலமொழி இலக்கியங்களுடன் தனக்கு இருந்த நல்ல பயிற்சியுடன், அவரே கூறி இருப்பதுபோல, 'வாசகர்கள், பண்டிதர்களின் கண்களைத் திறக்கவும்' விஷயத்தை புதுநோக்குடன் பார்க்கச் செய்யவும் வேண்டிய அவசியத்தை உணர்ந்தார். சம்பிரதாயமான கவிதை இலக்கணங்களையும் நியதிகளையும் பற்றிய சிந்தனைகளிலேயே தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாமல், முன்கால இங்கிலீஷ் இலக்கிய விமர்சகர்களது முறையைப்பின்பற்றி, அந்த சந்தர்ப்பத்துக்கு, தன்முன் இருந்த வேலை, 'சாமான்ய ஜனங்களுக்கு இவ்வுணர்ச்சிகளும் எண்ணங்களும் பரவுவதற்கு உதவியாக இருக்க, பழைய காவியங்களில் நயம் காணுவது தான் என்று நம்பினார். நாற்பது வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்ட 'மறுமலர்ச்சி' 'கவிதை' என்ற அவரது இரண்டு கட்டுரைகளும், இந்த மாறும் மனப்பாங்கை

வானம்

'மயன்'

பட்டுக் கருநீலப்புடவையு மல்ல, பதித்த
நல் வயிரமும் அல்ல. அண்ணாந்து நோக்கி
அதனைக் கண்ணால் தொட்டுப் பார்த்தால்
அறிவோம் – பூச்சி அரித்த, ஒளிப் பூச்சி
அரித்த கறுப்புப் பழம் கம்பிளி அது.
ஆடிப்பாடி ஓய்ந்து, கூடி நின்று கூத்
தடித்து அயரும் வேளையிலே, குளிர் அடங்க
அதை எடுத்துப் போர்த்து மடக்கிக்
கொண்டு கிடக்க முடியுமானால் நன்றாக
இருக்கும் – அநாவசியமாக உயரப் பறக்கிறதே!

('ஹல்மே' என்கிற ஆங்கிலக் கவி எழுதியதைப் பின்பற்றி)

நெஞ்சறிந்து கொண்ட நிலையில், பழக்கமாகி அல்லது இயல்பாகி விட்ட. நமது படைப்புப் பழக்கத்தை, புது முகப்படுத்த வேண்டியது பற்றி பரிந்துபேசி எடுத்துச் சொல்லின. வெறும் உபதேசத்தோடு அவர் நின்று விடவில்லை. கவிதைத் துறையில் சுப்ரமண்ய பாரதியும் வசனத்துறையில்நாவலாசிரியர்களான வேதநாயகம் பிள்ளை, ராஜம் அய்யர் மாதவையா ஆகியோரும் செய்த அந்த நாளைய சோதனைகளை அளவிட்டார். 'புதிய இயக்கம் பிறந்ததும் அதற்கேற்ற கவி ஒருவரும் தோன்றினார்' என்று பாரதியைப் பற்றி, அவரது கவிதைகளைக் குறித்து, ஒரு சுருக்கமான ஆராய்ந்த அபிப்ராயம் கூறி இருக்கிறார்.

ஆனாலும், கம்பராமாயணப் படிப்பில் தான் அய்யரது திறனாய்வு சக்தி உச்சநிலையை அடைந்திருப்பதை ஒருவர் பார்க்க முடிகிறது. 'கம்பராமாயண ரசனை' என்ற அவரது விமர்சன நூல் (அதில் உள்ள கட்டுரைகள் 1920 க்கு பின் வந்த வருஷங்களில் அவரது 'பால பாரதி' பத்திரிக்கையில் வெளியாயின) இதுவரை கம்பனைப் பற்றி வந்திருப்பவைகளில் தலை சிறந்ததென ஒரு முகமாகக் கருதப்பட்டு வருகிறது. பெரும்பாலும் குணம் காண்கிற நோக்குடனே மட்டும் செல்வக் கேசவராய முதலியார், வெ.ப.சுப்ரமண்ய முதலியார், பி.ஸ்ரீ. ஆசார்யா, எஸ்.டி.எஸ். யோகி, அ. ஸ்ரீனிவாசராகவன், கி.வா.ஜகந்நாதன் ஆகியோர் பாராட்டி, சிலாகித்து எழுதியதினின்று மாறுபட்டு, அவரது விசாரணை, குணம்

குறை இரண்டையும் எடுத்துக்காட்டும் வழி வந்ததாக இருக்கிறது. அவருக்குப் பின் டி.கே. சிதம்பரநாத முதலியாரது கம்பராமாயண ஆராய்ச்சி, விமர்சன மதிப்பு வாய்ந்ததாக உள்ளது என்று சொல்லலாம். தன் வாதத்துக்கு ஆதாரம் காட்ட இன்னின்ன கவிதைகள் கம்பன் எழுதியது அல்ல என்று சொன்ன அளவுக்குப்போனவர் அவர்தான். கவிதை விமர்சனப் போக்கில் அவரது கம்பன் கவி இன்ப அநுபவம் ஒரு கட்டத்தை அடையாளம் இடுவதாக இருக்கிறது.

ஒரு நூலை 'சிலாகித்துப்பாராட்டுவது' என்பதற்கு நான் கொண்டிருக்கும் அர்த்தம், அந்த நூலின் நல்ல அம்சங்களைப் பற்றி மட்டுமே விஷயம் அறிந்து இருப்பது என்பது; விமர்சிப்பது என்பது அதன் தரத்தை மதிப்பிடுவதில் திறன் பெற்றிருப்பது என்பது. இந்த புதிய முறையைக் கைக்கொண்டு ஆர்.பி. சேதுப்பிள்ளை, ம.பொ. சிவஞான கிராமணி இன்னும் சிலர் சிலப்பதிகாரத்தை, குணம்காணும் தோரணை காட்டி சிலாகித்து எழுதி இருக்கிறார்கள். ஆர்.எஸ். தேசிகன் வேறு பல நூல்களை ஒப்பிட்டுப் பார்த்து எழுதி இருக்கிறார். இதில் ஈடுபட்டு உள்ள பலரில் சிலரைத்தான் நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

தற்கால விமர்சன தொனி

தற்காலத்திய கவிதைகள் பற்றிய விமரிசனத் தன்மையை பார்க்கப்போனால் இந்த நூற்றாண்டின் இதுவரைய ஆண்டுகளின் தனிப்பெரும் கவியான சுப்ரமண்ய பாரதிக்கு, அவரது கவிதைகளைப் பற்றிய சிறந்த விமர்சன தோரணை மதிப்பீடு இனித்தான் கிடைக்கவேண்டும். பெ.கோ. சுந்தரராஜனும் (சிட்டி) கு.ப. ராஜகோபாலனும் மேல்நாட்டு கவிதை இலக்கியத்துடன் தங்களுக்கு ஏற்பட்டிருந்த பரிச்சயத்தின் வெளிச்சத்தில் கவிதை அமைப்பு, பாரதியின் கருத்துபற்றி ஆராய்ந்து எழுதிய 'கண்ணன்-என் கவி' என்ற குணம் காணும் முறையைப் பின்பற்றிய புஸ்தகம் ஒரு ஆரம்பம் எனலாம். அ. ஸ்ரீனிவாசராகவன், பி. மகாதேவன் ஆகியோர் எழுதியுள்ள புஸ்தகம் பாரதி கவிதைகள் விமர்சன நூல்களில் குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய கவிகளோ, தங்களைப் பற்றிய

அபிப்ராயம் என்ன என்பதை அறிந்து கொள்ள இன்னும் எதிர்பார்த்து, காத்து, நிற்க வேண்டி இருக்கிறது.

சரி, வசனத்தைப் பற்றி என்ன? கவிதையைப் படிப்பதால் கிடைக்கும் இன்பத்துக்குச் சமமாகவோ, அதற்கு அதிகமாகவோ வசனத்தைப் படிப்பதில் இன்ப அநுபவம் தங்களுக்குக் கிடைப்பதாக பலர் உணர்ந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் உலக கட்டுக்கதை இலக்கியங்களில் முக்குளித்து இருக்கிறவர்களுக்குக்கூட உரை நடை இலக்கியத்தை அளவிடுவது ஒரு இன்பகரமான செயலாகப் படவில்லை. உண்மை என்னவென்றால், இலக்கிய உருவ வகைகளிலேயே இனிப்பாக இருப்பதும் இன்றைக்கு ஒரே மோகமாக அடிப்பதுமான நாவலும் சிறுகதையும் கூட, கவிதை ஆராய்ச்சியில் குணம் காணவும் விமர்சிக்கவும் தங்கள் பேனாக்களை ஓட்டுகிறவர்கள் கைகளில் பகுப்புப் பெறவே வழி இல்லை.

மேலே குறிப்பிட்ட இரண்டு இங்கிலீஷ் புஸ்தக மதிப்புரைகளுக்கு வெகு காலத்துக்குப் பின், கால் நூற்றாண்டுக்கு முன்பு, சிறுகதைத் துறையில் உரைநடைப் போக்குக்கு ஒரு புதிய வேகம் கிடைத்தது. நாவலுக்கு அது கொஞ்சம் பிந்திக் கிடைத்தது.'மணிக்கொடி' என்ற பத்திரிகைப் பெயரைக் கொண்டு மதிக்கப்பட்ட 'மணிக்கொடி காலம்' என்ற காலப்பகுதியில், ஆழ் கருத்து எழுத்துக்களிலும் சிறுகதைச் சோதனைகளிலும் புதுப்பித்த முயற்சிகள் செய்யப்பட்டன. இந்தக் காலத்தில் சோதனையாளர்கள் படைப்பதோடு மட்டும் திருப்தி கொண்டு விடாமல், தங்கள் முன்னோடிகளான வ.வெ.சு., பாரதி இருவரையும்போல, சிறுகதையின் உருவம், உத்தி, விஷயம் இவைகளைப் பற்றி தங்களுக்குள்ளேயே விவாதித்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். இலக்கியத் திருட்டுகளையும் பற்றி அவர்களே தான் கத்தி, அம்பலப்படுத்தி, மேலோட்டமான, பாமரப் பிரியமான எழுத்துகளுக்கு மேலாக தங்கள் எழுத்துக்களைப் படிக்கச் செய்யவும், அவர்களே தான் போராட வேண்டி இருந்தது. எழுத்து பற்றி பல அம்சங்களையும் பற்றிய விவாதம் இன்றைக்கும் தொடர்ந்து தனிப்பட்ட சம்பாஷணைகளிலும், கோஷ்டிக் கூட்டங்களிலும் நடைபெற்றுவருகிறது.

இலக்கிய சர்ச்சைகள்

சில இலக்கிய சர்ச்சைகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று, பாரதிக்குப்பின் பேர் சொல்லக்கூடிய தாக்கான இலக்கி யாசிரியரான வ.ராவுக்கும் புகழ்பெற்ற எழுத்தாளரும்பிரபல பத்திரிகாசிரியருமான கல்கிக்கும் இடையே இருபத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, பாரதிக்கு உரிய இலக்கிய பீடம் பற்றி நடைபெற்ற சர்ச்சையாகும். அப்போது இலக்கிய அளவை, லக்ஷணங்கள் கடுமையான பரிசோதனைக்கு உள்ளாயின. பாரதிக்கும் வ.ராவுக்குக்கும் பிறகு தமிழ்பேனா பார்த்தே இராத ஒரு தீவிரவாதத்துடன், இலக்கியத் திருட்டு, மேலோட்டம் எழுத்து இவைகளுக்கு எதிராக, சிறந்த சிறுகதை எழுத்தாளர் புதுமைப்பித்தன் தாக்குதல் மற்றொன்று. சமீபத்தில் தற்கால சிறுகதை நாவல் இலக்கியம் பற்றி அதைப் படைப்பவர்களிடையே நடந்த சர்ச்சையும் குறிப்பிடத்தக்கது.

இப்போது ஒரு புதிய உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள எழுத்தாளர்களும், அதற்கு வெளியே பிற ராஜ்யங்களில் உள்ள தமிழ்எழுத்தாளர்களும் அங்கங்கே தங்களுக்கென எழுத்தாளர் சங்கங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி கூடி முற்கால, இன்றைய எழுத்தாளர்களது நூல்களைப்பற்றி விவாதிக் கிறார்கள். இலக்கிய விஷயங்கள் பற்றிய விவாதங்கள் சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள் நடத்துகிறார்கள். இன்னொன்றும் சொல்ல வேண்டும். வாசகர்கள் சங்கங்களும் சில இலக்கியப் பிரச்சனைகளை ஆராய்வதில் ஈடுபட்டு இருக்கின்றன. இவைகளில் அநேகமாக முழுவதுமாக அச்சுக்கு வராமலே இருந்து விடுகின்றன. அதனால்தான், ஆரம்பத்தில், வெளியான புஸ்தகங்கள், பத்திரிகை,சஞ்சிகை பத்திகள், மதிப்புரைகள் இவைகளைக் கொண்டு மட்டும் தமிழ் இலக்கிய விமர்சனம் பற்றிய ஒரு முடிவுக்கு வந்து விட முடியாது என்று எச்சரிக்கை கூறினேன்.

புஸ்தக மதிப்புரைகளைப் பற்றி இந்த இடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது ஆகும். மேலே குறிப்பிட்ட இரண்டு இங்கிலீஸ் மதிப்புரைகளின் முறையும் சாரமும் மதிப்புரையாளர்களால் தொடர்ந்து பொதுவாகப் பின்பற்றப்படவில்லை என்பது உண்மைதான். இவைகளில் பெரும்பாலானவை பத்திரிகை வார

அநுபந்தங்களில் வெளியானவை. தங்கள் முன் உள்ள இலக்கிய ரகத்தைப் பற்றி எதுவும் தெரியாதவர்களாகவோ அல்லது அக்கறை இல்லாதவர்களாகவோ உள்ளவர்களது கையில் மதிப்புரைகள் ஆரம்ப திசை நிலையிலேயே நின்று விடுகின்றன.

படைப்பாளியும் மதிப்பீடும்

தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில் பரிதாபகரமான அம்சங்களில் ஒன்று படைப்பாளியே இந்த மதிப்பீட்டு வேலையையும் செய்ய வேண்டி ஏற்பட்டிருப்பதுதான். ஒரு சிறுகதை ஆசிரியனோ நாவலாசிரியனோ மற்றொருவரது படைப்பை அளவிட வேண்டி இருக்கிறது. கவிதையை மட்டும் விரும்பி ரசித்துக் கொண்டிருக்கும் பண்டிதப்போக்கு உரைகாரர்களுக்கு உரைநடை நூல்களைப் பற்றி உற்சாகம் கிடையாது. மேற்கத்திய இலக்கிய அறிவு பெற்றுள்ள பேராசிரியர்களைப் பற்றியும் இதேதான் சொல்ல வேண்டும். பழைய இலக்கியங்களில் நல்ல பயிற்சி உள்ள சாமி சிதம்பரனார், 'செய்யுள் அல்லாதவைகள் இலக்கியம் அல்ல என்ற கருத்து வெகு காலமாக நீடித்து வந்திருக்கிறது. இது ரொம்ப தவறானது. உரைநடை இலக்கியங்களையும் நாம் மதிப்பிட முற்பட வேண்டும்' என்று ஒரு இடத்தில் சரியாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, தான் அறையப்படும் மரத்தைத்தானே தூக்கிச் சென்றவரைப்போல, சென்ற இருபதாண்டு படைப்பாளர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் மதிப்பிட்டுக்கொள்வதற்கு, தங்கள் திறனாய்வு அறிவை உபயோகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

படைப்பாளிகள் தாங்களே இதைச் செய்ய வேண்டுமா என்று தங்களையே கேட்டுக்கொள்பவர்களும் இருக்கிறார்கள். இன்னும் ஒரு படி மேலே சென்று, நாம் மதிப்பீடு செய்ய அவசரப்படவேண்டாம், படைப்பு திசையில் நாம் நமது கண்களை முனைக்கச்செய்தால்போதும் என்று சொல்பவர்களும் உண்டு. சில மாதங்களுக்கு முன் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தில் நடைபெற்ற இலக்கிய விமர்சனம் பற்றிய விவாதத்தின்போது ந. பிச்சமூர்த்தியும் கு. அழகிரி சாமியும் இந்த அபிப்ராயத்தைக் கூறினார்கள். இதற்கு மாறாக, ரா.ஸ்ரீ. தேசிகன், க.நா.சுப்ரமண்யம், சி.சு. செல்லப்பா

ஆகியோர் தரநிர்ணயம் செய்யத்தக்க நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதாக அபிப்ராயப்பட்டார்கள்.

இன்றைய விமர்சனத் துறையில்

இன்று, தமிழ் இலக்கிய விமர்சனதுறையில் க.நா.சுப்ரமண்யம் என்ற பெயர் குறிப்பிடத் தக்கது. பொதுவாக தொட்டாற்சுருங்கி சுபாவமுள்ள பல எழுத்தாளர்களது கோபத்தை சம்பாதித்து, இன்னின்ன புஸ்தகம் இலக்கிய மதிப்பு வாய்ந்தது அல்ல என்று சொல்லும் துணிச்சல் கொண்ட விமர்சகர்களோ மதிப்புரைக்காரர் களோ அவரைப்போல இல்லை எனலாம். ஒரு குறிப்பிட்ட இலக்கிய விமர்சன முறையைக் கையாளும்விமர்சகர்அவர் ஒருவர்தான். அந்த முறை இலக்கிய சரித்திர ரீதி விமர்சன முறையாகும். அவரது தற்கால இலக்கிய சரித்திரக் கட்டுரைகள் பல தமிழிலும் இங்கிலீஷிலும் எழுதப்பட்டவை; இன்றைய தமிழ் இலக்கியம் பற்றி நாமும், பிற இந்திய மொழிக்காரர்களும்வெளி நாட்டாரும் அறியச் செய்திருக்கின்றன. வெகு சமீபத்தில் திருக்குறளின் இலக்கிய அந்தஸ்து பற்றிய ஒரு அபிப்ராயத்தை அவர் வெளியிட்டு பண்டிதர்களை திடுக்கிடச் செய்தார். வ.ரா.வைப் போலவே இவருக்கும் பண்டிதர்கள் முக்கிய எதிரிகள். 'படித்திருக்கிறீர்களா' என்ற அவரது புஸ்தகம், பலதரப்பட்ட நூல்களை வாசகர்கள் பரிச்சயம் செய்து கொள்ள ஏதுவாக, புஸ்தகங்களை எடுத்துச் சொல்லி எழுதப்பட்டதாகும். 'முதல் ஐந்து நாவல்கள்' என்ற மற்றொரு புஸ்தகம் இலக்கிய லக்ஷணங்களைக் கொண்டு முன்னதை விட சற்று மேலான விமர்சன ரீதியில் ஆராயப்பட்ட நூல். இவை இரண்டும் சேர்ந்து எதிர்கால தமிழ் வசன இலக்கிய விமர்சன வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன எனலாம்.

1940ஐ தொடர்ந்த வருஷங்களில்இத்தகைய புஸ்தகங்கள் வந்திருப்பதை நாம் பார்க்கலாம். ஏ.வி.சுப்ரமண்ய அய்யரது 'தற்கால தமிழ் இலக்கியம்' உபயோகமுள்ள தகவல் அறிவிக்கும் நூல். மு. அருணாசலத்தின் 'இன்றைய தமிழ் உரைநடை' என்ற புஸ்தகம் சுவாரஸ்யமாகவும் சிரத்தை எடுத்தும் எழுதப்பட்டிருந்தாலும் தற்காலத்து சிறந்த எழுத்தாளர்களின் உரைநடைகளில் காணப்படும் உயர்ந்த தன்மைகளை கவனத்தில் கொண்டுவரத் தவறிவிட்டது.

சுப. நாராயணன் எழுதிய 'கவிதை' கலை, விமர்சனம்' அ.முத்துசிவம் எழுதிய 'கவிதை' ஆகிய இரண்டும் சொல்லத்தக்கவைகள். எஸ்.வையாபுரிப் பிள்ளையின் 'இலக்கியச் சிந்தனைகள்' மற்றும் சில புஸ்தகங்கள், நியாயத்துக்கு இசைந்த ஒரு குறிப்புப் பார்வையும் மன விலாசமும் கலந்த அறிவுடன் எழுதப்பட்ட பாண்டித்யத்தை காட்டுவனவாக உள்ளவை. தமிழ் இலக்கிய மாணவர்கள் படித்தாக வேண்டியவைகள். இந்தக் காலத்து நூல்களில் சிறந்ததான, சிதம்பர ரகுநாதன் எழுதிய 'இலக்கிய விமர்சனம்' என்ற புஸ்தகம் சற்று அடவாதமாகச் சொல்வதாக அமைந்திருந்தாலும், அதன் துணிச்சல், இலக்கியப் படைப்பு சம்பந்தப்பட்ட உண்மைக்கு முன்னே முகம் காட்டுமாறு ஒருவரைக் கேட்கிறது.

கௌமாரி

சாலிவாஹனன்

மோகக்கண் கருவிழியே
முத்தமிடாக் கனியிதழே
தேகத்திளங் கனலே
திகட்டாத சுவைமதுவே

மதுக்கலயம் உடலிதிலே
மணம்பரப்பும் உயிர்நறவம்
எதற்காகத் தேக்கிவைத்து
ஏங்குகிறாய் இளநலமே?

உயிர்வருடத் திளவேனில்
ஒளிமின்னும் ஓர்கணந்தான்
மயற்பவள மாதுளையே
மனத்தாசை மறைத்திடலேன்?

மோஹந் தவிர்ந்து விடும்
முத்தங்கள் சிந்திவிடும்
தாகத்தவிப் படங்கும்
தனிமையிலே மெய்சிலிர்க்கும்

சுவைத்தேலாக் கரும்பாவாய்
சூக்குமத்தின் உருவாவாய்
பவங்கடந்த சிவசக்திப்
பாலனத்தின் நிரைவாவாய்

மண்ணின்பக் காமமெலாம்
மானிடாமா யாடுமவள்
உண்ணின்றிங் காடுகிறாள்
உமையவளே யிளங்குமரி

– (மோகக்கண்)

'யோகம்' என்ற காவியத்திலிருந்து

சென்ற இருபது ஆண்டுகளாக கவிதைகளும் கதைகளும் எழுதி வரும் 'சாலிவாஹனன்' என்ற வி.ஆர். ராஜகோபாலன் 1918ல் ராமனாதபுரம் ஜில்லா விசாலையங்கோட்டை என்ற ஊரில் பிறந்தவர். 'கலாமோஹினி' என்ற 'சின்ன' இலக்கிய பத்திரிகையை நடத்தியவர். அவரது கவிதைகள், கதைகள் எதுவும் புஸ்தகமாக வரவில்லை. சில மொழி பெயர்ப்புக்கள் செய்திருக்கிறார். தற்போது சென்னை சர்க்கார் காதி டைரக்டருக்கு பிரசுர உதவியாளராக சென்னையில் வேலை பார்த்து வருகிறார்

1950க்குப் பின் வந்த ஆண்டுகளில் முதலில் வெளிவந்த குறிப்பிடத்தக்க புஸ்தகம், ஒரு திட்டமிட்ட பாட முறையின் அடிப்படையில் பல மேல்நாட்டு விமர்சன அபிப்ராய மேற்கோள்களுடனும் ஒரு பாட புஸ்தகமாக எழுதப்பட்ட அ.ச. ஞானசம்பந்தம் எழுதிய 'இலக்கிய விமர்சனம்' என்ற நூல். அது, ஓரளவுக்கு, இலக்கியம் பற்றி தெரிந்துகொள்ள ஆரம்பிப்பவர்களுக்கு உபயோகமாகிற புஸ்தகம். இந்த விஷயங்களைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிவிக்கக்கூடிய இரண்டாவது புஸ்தகம் இனிமேல்தான் வரவேண்டும். குறிப்பிடத்தக்க மற்றொரு புஸ்தகம் புதுமைப்பித்தன் எழுதியுள்ள 'புதுமைப்பித்தன் கட்டுரைகள்' என்பது. அதற்கு முந்தின இருபது வருஷகாலத்தில் எழுதப்பட்ட கட்டுரைத் தொகுதி அது. 'இலக்கியத்தின் பொதுவான லக்ஷணங்களை ஆராயும் நோக்கத்துடன் எழுதப்பட்டவைகள்' என்று அவரே குறிப்பிட்டவாறு, அந்த கட்டுரைகள், அக்காலத்து இலக்கியப் போலிப் படைப்புகளை கடுமையாகத் தாக்கி, புதிய சோதனைகளையும நோக்குகளையும் கொள்ளும்படியாக கேட்ட ஒரு உறுதிபடைத்த படைப்புக் குரலின் முத்திரையைக் கொண்டனவாக இருப்பவை. இவை தவிர, கு.ப.ராஜகோபாலன் பத்திரிகைகளில் எழுதியுள்ள, புஸ்தகமாக இதுவரை வெளிவராத பல கட்டுரைகளும் மற்றும் பலரது தனிக் கட்டுரைகளும் பல உள்ளன.

மொத்தத்தில், ஒருவிதமாக தற்கால தமிழ் இலக்கிய விமர்சன தோரணை அதன் இலக்கிய செழுமைக்குத் தக்கபடி இருக்க வேண்டிய அளவுக்கு வெளிப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பல முன்வரிசை சிறுகதை ஆசிரியர்கள் நாவலாசிரியர்கள், கவிகளது படைப்புக்கள். இனித்தான் மதிப்பிடப்பட்டு, பகுத்துப் பார்க்கப் பட இருக்கின்றன. அவர்களது வியக்தி ஆராயப்பட்டு, அவர்களது வாழ்க்கை நோக்கு, சித்தாந்தம் நிரூபிக்கப்பட இருக்கிறது. இலக்கியத்தில் அவர்கள் கொண்ட பங்கை அளவிட வேண்டி இருக்கிறது. இவை சம்பந்தமாக ஒரு பரபரப்பை இப்போது ஒருவர் பார்க்க முடிகிறது. தமிழ் இலக்கிய விமர்சனத்துக்கு இது ஒரு எதிர்கால ஒளிகாட்டுவதாக இருக்கிறது. இதுபற்றி இரண்டு அபிப்ராயங்கள் இருப்பதற்கில்லை.

உண்மைதேடியின் அநுபவ இலக்கிய வடிவங்கள்

தி. ஜானகிராமன்

இருட்டு ரூ.1.25; உயிரின் யாத்திரை ரூ.1;
எம்.வி. வெங்கடராமன் எழுதிய கதைகள்.
வானதிப் பதிப்பகம் :: தி. நகர், சென்னை–17.

பதினைந்து அல்லது பதினாறு வயதில் எம்.வி. வெங்கடராமன் கதைகள் எழுத ஆரம்பித்தவர். ஆனால் அந்தக் கதைகள் 'மணிக்கொடி'யில் வெளிவந்து கொண்டு இருந்தன. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால், அவ்வளவு இளமையில் அவ்வளவு முதிர்ச்சியைக் காண்பது பல நாடுகளிலும், பல காலங்களிலும் மிகவும் துர்லபமான காரியம். இன்றைய எழுத்தில் தலைசிறந்த கலைஞராக விளங்கும் ஒருவர் வெங்கடராமன் கதைகள் தான் என்னை எழுதத் தூண்டின' என்று இரண்டு மூன்று தடவை என்னிடம் சொல்லி பரவசப் பட்டிருக்கிறார். அந்த வெங்கடராமன் எழுதிய சிறுகதைகள் இன்னும் கையெழுத்துகளாகத்தான் இருக்கின்றன. இந்த 'இருட்டு'ம் 'உயிரின் யாத்திரை'யும் சமீபத்தில் எழுதிய நீண்ட கதைகள்.

சிறுகதை, நாவல், நாடகம் எழுதி இருக்கிறார் ஜானகிராமன். சொந்த ஊர் தஞ்சாவூர். 1921ல் பிறந்தவர். 'கொட்டுமேளம்' 'சிவப்பு ரிக்ஷா' ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளும் 'அமிர்தம்' என்ற நாவலும் பிரசுரமான புஸ்தகங்கள். மோகமுள்' என்ற நாவல் சீரியலாக வெளி வந்திருக்கிறது. 'மலர் மஞ்சம்' என்ற நாவல் சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் வந்து கொண்டிருக்கிறது. நாலுவேலி நிலம் என்ற அவரது மேடை நாடகம் சேவாஸ்டேஜால் நடிக்கப்பட்டு வருகிறது. இன்னொரு நாடகம் எழுதிக்கொண்டிருக்கிறார். சென்னை ரேடியோவில் கல்வி நிகழ்ச்சி மேற்பார்வையாளராக வேலை பார்த்து வருகிறார்.

வெங்கடராமனின் எல்லாக் கதைகளும் புத்தக வடிவில் இன்னும் வெளிவராவிடினும், அவருடைய இலக்கிய வளர்ச்சியைப் பற்றி (பத்திரிகைகளில் வெளிவந்தவற்றைத் தொடர்ந்து வாசித்த வரையில்) ஒரு அளவுக்குத் தெளிவாகச் சொல்ல முடியம். ஆதியில் வந்த கதைகள் உலகைக்கண்டு கோபமும் துக்கமும் பொங்கிய உணர்ச்சிக் கற்பனைகள். அடுத்தபடியாக வந்தவை உலகத்தைக் கண்டு குரூரமாகவும் கபடமாகவும் சிரித்துக் கிண்டல் செய்தவைகள். மூன்றாவதாக கண்ணை உள்நோக்கித் திருப்பிய உண்மை தேடியின் அனுபவங்களின் இலக்கிய வடிவங்கள். ஆனால் இந்த மூன்று கட்டங்களிலும் மனமுதிர்ச்சி நிறைந்தே காணப்பட்டு வந்திருக்கிறது. இந்த 'இருட்டும்' 'உயிரின் யாத்திரையும்' மூன்றாவது நிலையச் சேர்ந்தவை.

தினம் காண்கிற கதைகளிலும் வேறுபட்டவை இந்தக் கதைகள். அதாவது மனிதன் சமூகப் பிராணி அல்லது குடும்பப் பிராணி என்ற அன்றாட நிலையை கடந்து, தனியாக நின்று உள்நோக்க முயற்சி செய்யக்கூடியவன்(வேண்டியவன் என்றும் சொல்லலாம்) என்ற நிலையில் நின்று எழுதப் பட்டவைகள்.

''நடராஸா'' என்ற கூத்தரசு என்று ஒரு வாலிபன். முரட்டுப் பகுத்தறிவுவாதி- அதாவது பகுத்தறிவுக்கு இன்று உள்ள பொருளில் கடவுள், கோயில் எல்லாவற்றையும் ஒழித்துக்கட்டி மக்களை அறிவு சொர்க்கத்திற்கு ஏற்றி வாழவைக்க ஏங்குகிற இளைஞன். இந்தப் பகுத்தறிவு வாதத்தில் இவனையே ஏப்பம் விட்டுவிடுகிற வெண்ணிலா என்கிற பெண்ணை ஒரே பேச்சு மேடையில் சந்தித்து, காதலிக்கிறான். அன்றிரவு கும்பகோணம் கோவில்களைச் சபித்துக் கொண்டே மயான பூமிக்குப் போய்க் காதலை பரஸ்பரம் தெரிவித்துக் கொள்கிறார்கள். ஆறு மாதம் போக அமளியில் திளைக்கிறார்கள். அதிபோகத்தினால் கூத்தரசு வலுவிழந்து டாக்டரிடம் போகிறான். ஒரு நாள் இரவு இருட்டில் இருவரும் படுத்திருக்கும் போது பக்கத்தில் படுத்திருந்த வெண்ணிலாவின் கைவேறு, கால் வேறு, தலை வேறாகக் கிடப்பது தெரிகிறது. விளக்கைப் போட்டவுடன் அவள் முழு உடம்புடன் அழகாகத் தூங்குவதும் தெரிகிறது. விளக்கையணைத்ததும் மீண்டும் அந்த பயங்கர முண்டக் காட்சி.

கடைசியில் திகில்பிடித்து வெளியே ஓடுகிறான் கூத்தரசு. டாக்டர் அம்பலவாணரைக் கலந்து ஆலோசித்த போது, வெண்ணிலாவின் முன்னால் ஒரு ராம படத்தைக் காட்டுகிறார் அவர். அதை உற்றுப் பார்த்துவிட்டு, உடம்பை யாரோ முறிக்கிறாப் போலதுடிதுடித்து பின் வீழ்கிறாள் வெண்ணிலா.

டாக்டர் அம்பலவாணர் கூத்தரசைத் தன் பூஜை உள்ளில் வைத்து ராமஜபம் செய்யச் சொல்கிறார். ஆனால் வெண்ணிலாவின் உடம்பு எரிகிறது. கூத்தரசு புலன்களுக்கெட்டாத அனுபவத்தை அனுபவிக்கிறான். அவன் கொள்கையைவிட்ட கோபத்தில் மூட்டையைக் கட்டிக்கொண்டு ஊருக்குப் போய்விடுகிறாள் வெண்ணிலா. ஆனால் அங்கும் அவள் உடம்பு தேறவில்லை. அந்த ஊர் டாக்டர் மூளையில் கட்டி புறப்பட்டிருக்கும் என்கிறார். அம்பலவாணர் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் உடம்பு வியாதியாகப்படவில்லை அது. ஆத்மாவைப் பேய் சூழ்ந்த நோயாகத்தான் அவருக்குப் படுகிறது. கூத்தரசு, டாக்டர் எல்லாருடைய முயற்சிகளையும் மீறி வெண்ணிலா சென்னைக்குப் போய் உடம்பைக் காட்டத் துடிக்கிறாள். அம்பலவாணரின் எக்ஸ்ரேயில் காணாத ஒரு மூளைக் கட்டி சென்னை டாக்டரின் எக்ஸ்ரேயில் தெரிகிறது. பேய்த் தீனி தின்கிற வெண்ணிலாவைப் படுக்க வைத்து மூளைக்கு ரணசிகிச்சை நடக்கிறது. ஆனால் மூளையில் கட்டியில்லை. வெண்ணிலாவின் உயிரைக் கடவுளிடமிருந்து பேய் காப்பாற்றி, உடம்பைவிட்டு எடுத்துக் கொண்டு போய்விடுகிறது.

ஆஸ்திகம், நாஸ்திகம் இரண்டு பிரிவிலும் கண்ணிழந்தவர்கள் உண்டு. அறிவுக்கு முன்னால் சுவர் எழுப்பிக்கொண்டு அப்பால் போகமாட்டேன், பார்க்க மாட்டேன் என்று மூட நம்பிக்கையில் உழைப்பவர்கள் ஆஸ்திகத்திலும் நாஸ்திகத்திலும் இருக்கிறார்கள். கிணற்றுத் தவளை மனப்பான்மை எங்கேயிருந்தால் என்ன? உண்மை மறைந்து விடுகிறது. இந்தப் போராட்டத்தை வல்லமையும் வேகமும் கொண்ட தன் நடையில் சொல்லுகிறார் வெங்கடராமன்.

'உயிரின் யாத்திரை' வேறு புத்தகம், வேறு பாத்திரங்கள் கொண்ட கதை. ஆனால் 'இருட்' டின் தொடர்ச்சி என்று சொல்ல

இடமிருக்கிறது. மனைவி மரணத்தறுவாயில் கிடக்கிறாள். சுற்றி கடைசி அழுகையும் அழுதுவிட்டார்கள். திடீர் என்று கோபு என்ற ஒரு நண்பன் வந்து 'ராஜா, உன் ராணி பிழைப்பாள், எங்கள் வீட்டுக்கு மூன்றாவது வீட்டில் குடிவந்திருக்கிற சதாசிவம் சொல்லி விட்டு வரச்சொன்னார். வந்து அவரிடம் மருந்து வாங்கிப்போ' என்கிறான். ராஜா ஓடிப்போய் சதாசிவத்திடம் அந்தக் கடுகளவு மருந்தை வாங்கிவந்து கொடுக்கிறான். எல்லாரும் கைவிட்ட உடம்பு தேறி இருவர் வாழ்விலும் உயிருட்டம் பிறக்கிறது. சதாசிவத்தோடு நெருங்கிப் பழகும்போது அவனுடைய பூர்வ ஜன்மக் கதைகளைச் சொல்கிறார் சதாசிவம். போன ஜன்மத்தில் அவனை மணக்க விருந்து, கடைசியில் எவனுடனோ ஓடிவிட்ட ஒரு பெண், இப்போது இந்த ஜன்மத்தில் சதாசிவத்துக்கு மனைவியாகிவிடுகிறாள். குணம் இன்னும் மாறவில்லை, போன ஜன்மத்தில் தன் தந்தையாக இருந்தவர் சதாசிவம் என்று அவரிடமிருந்தே கேள்விப்படுகிறான் ராஜா. ஒரு கணம் அவருக்கு துரோகம் செய்யக்கூட அவன் மனம் பாய்ந்து சட்டென்று பின் வாங்குகிறது. ஆனால் அதற்கும் தூண்டுகிறவள் அவள்தான். கடைசியில் அவள் சதாசிவத்தின் பரமபக்தனைப் போல இருந்த கோபுவுடன் இன்பம் துய்க்கிறாள். ஓடிவிட்டாள் என்ற செய்தி கேட்டு, அவளைப் பார்க்கவந்த ராஜா, அவளை மீண்டும் சதாசிவத்தின் வீட்டில் காண்கிறான். ஆனால் சதாசிவம் உள்ளே பரமோனத்தில் ஆழ்ந்து கிடக்கிறார். அவளுடைய மயக்கை விலக்கிக் கொண்டு உள்ளே போனவன் சதாசிவத்தை சமாதி நிலையில் கண்டு, சாதாரண அறிவுக்கும் உயர்ந்த நிலைக்கும் எட்டாத பிரபஞ்ச ஒருமை நிலையில், அத்வைத வெள்ளத்தில் தானே மூழ்கிவிடுகிறான் ராஜா. சிவநிலையிலிருந்து மீண்டவன், தான் கண்ட எல்லையற்ற ஆனந்தம் பேரிளபத்தின் ஒரு துளி என்று அவர் சொல்லி அறிகிறான்.

இலக்கியத்தின், முக்கியமாக கதையிலக்கியத்தின் பொருள் எப்படி இருக்கவேண்டும் என்ற விஷயம் பற்றி பலருக்கு கருத்து வேற்றுமை இருக்கலாம். அன்றாட ஆசாபாசங்கள், அதாவது சமூகப் பிராணியான மனிதனின் ஆசாபாசங்கள், லட்சியங்கள், குணங்கள் இவைகள்தான விஷயமாக இருக்க முடியும், வேண்டும் என்று கூடப் பலர் சொல்லலாம். என்னைப் பற்றிய வரையில் இந்த விதிகள் செய்யும் ஆசை, மனிதனுடைய எல்லையில்லாத சாதனைகளில்

நம்பிக்கையில்லாததனால் எழுகிறது என்று தோன்றுகிறது. அடிப்படையாக, மனிதன் ஒவ்வொருவனும் தனியன்தான். சமூக விவகாரங்களெல்லாம் இந்தத் தனிமையை எவ்வளவு தூரம் காண முடியும். அது எவ்வளவு தூரம் சாத்யம் என்று கண்டுபிடிக்கிற முயற்சிதான். கம்யூனிஸம் கூட இந்தத் தனிமையின் ஆழத்தைக் கண்டுபிடிக்கிற முயற்சிதான். அவர்கள் இல்லை என்று மறுத்தால், அதற்கு நாம் என்ன செய்கிறது!

மேனாட்டு இலக்கியங்களின் தொடர்பால் இலக்கியப் பொருள் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று நாம் திட்டமிடுகிறோம் என்று தோன்றுகிறது. மனிதனின் பரநிலைகளைக் காணும் விஞ்ஞானத்தைக் கண்டதால் நம் நாட்டு இலக்கியங்கள் இப்படி எல்லை கட்டிக் கொள்ளவில்லை. மேனாட்டு இலக்கியங்களிலும் இப்படி எல்லைக் கட்டிக் கொள்ளாமல் உள் நோக்கிப் பாய்ந்த பல இலக்கிய மேதைகள் இருந்திருக்கிறார்கள்.

வெங்கடராமனே முன்னுரையில் சொல்கிறார் – கடவுட் பிரசாரமாக இதை எழுதவில்லை என்று. அவர் சொல்லியிருக்கத் தேவையில்லை. ஆனால் இப்போதுள்ள சந்தர்ப்பங்களைக் கண்டுதான் அப்படிச் சொல்லியிருக்கிறார் அவர். ஆகவே, தற்செயலாக ஏற்பட்டதுதான் இந்த இரண்டு கதைகளின் பொருட்களும்.

கதை விஷயத்தைப் பற்றி சர்ச்சை போதும். சொல்லுகிற வல்லமை அவருக்கு எவ்வளவு வசப்பட்டிருக்கிறது என்பதை விரிவாகக் கண்டு அனுபவிக்க முடிகிறது. அவர் நடையிலும் சொல்லாட்சியிலும் ஒரு அசாதாரணத் தன்மை இயற்கையாகவே ஒலிக்கிற வழக்கம். இதை அவர் எழுதிய அந்த நாட் கதைகளிலேயே காண முடியும். உறுதியும் சுயப்பிரக்ஞையும் தெறிக்கிற அசாதாரணத் தன்மை அது. அதனால் தான் மனித மனத்தின் பல விசித்திரங்களைப் பொருளாகக் கொள்ள முடிந்திருக்கிறது அவரால். அந்த உறுதியின் விளைவாகத் தீவிரமான முனைப்புடன் சொற்கள் நோக்கத்தை நோக்கி ஓடுகின்றன.

வெங்கடராமன் கதைகள் தனி ரகம். அவருடைய பாஷையும் தனிதான். தனிமட்டுமல்ல. மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை. பலபேருக்குத் தூண்டுகோலாக இருக்கிறவை. அந்தப் பலபேரில் நானும் ஒருவன் என்பதை பெருமையுடனேயே சொல்லிக் கொள்ள முடியும். அவருடைய மதிப்பை முழுவதும் அறிய அவருடைய சிறுகதைகளையும், மகாபாரதக் கதைகளை தன் சொந்தப் போக்கில் அவர் எழுதிய கதைகளையும் வாசிக்க வேண்டும். உணர்ச்சி முறுக்கேறிய முதல் கதைகளையும் 'விக்ரகவிநாசன்' என்ற பெயரில் அவர் குரூரமாகச் சிரித்து எழுதிய கதைகளையும், இப்போது எழுதுகிற கதைகளையும் வாசித்தால்தான் அவரை முழுவதும் அறிய முடியும்.

உண்மையான எழுத்து ஆசிரியரின் மனத்தைச் சித்தரிக்கும். இந்த எளிய, பெரிய ரசமட்டத்தை வைத்துப் பார்த்தால், வெங்கடராமனின் கதை விஷயங்களுக்கு தனியிடமும் மதிப்பும் உண்டு. அதாவது மறுக்க முடியாத இடம்.

வானதிப் பதிப்பகத்தார் அழகாக இந்த இரண்டு புத்தகங்களையும் கொண்டு வந்திருக்கிறார்கள். நல்ல விஷயங்களில் அவர்களுக்கு உள்ள ஆசைக்கு இது ஒரு அத்தாட்சி.

EZHUTTHU

Edited and Published by C.S. Chellappa from 19-A, Pilliar Koil St., Triplicane, Madras - 5.

Printed by S. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras - 5.

"சி.சு. செல்லப்பா – க.நா.சு" சில குறிப்புகள்

தி.க. சிவசங்கரன் (தி.க.சி)

மணிக்கொடி எழுத்தாளர்களான க.நா. சுப்பிரமணியம் (தோற்றம் : 31-01-1912); (மறைவு 16-12-1988) சி.சு. செல்லப்பா (தோற்றம் 29-09-1912 மறைவு 18-12-1998) ஆகிய இருவரும் தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பல்வேறு துறைகளில் பல்வேறு விதங்களில்பெரும்பங்காற்றியவர்கள் என்பது நாடறிந்த உண்மை.

மணிக்கொடி காலகட்டம் என்பது 1934-1940 ஆகும். மணிக்கொடியின் மூலவர் 'வ.ரா' எனப்படும் வ. ராமசாமி. அதன் தொடர்ச்சியாக வந்த சிறுகதை மணிக்கொடியின் ஆசிரியர் பி.எஸ். ராமையா.

சிறுகதை மணிக்கொடியில் புதுமைப்பித்தன், மௌனி, கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, ந. சிதம்பர சுப்ரமணியன், சி.சு. செல்லப்பா, பெ.கொ. சுந்தரராஜன், (சிட்டி) பி.எஸ். ராமையா, எம்.வி. வெங்கட்ராமன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மகாகவி பாரதியின் லட்சியங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை கலை இலக்கியத்துறையில் பரப்புவதற்காக, வ.ரா, கு. சீனிவாசன் , டி.எஸ். சொக்கலிங்கம் ஆகியோர் மணிக்கொடி வார இதழை ஆரம்பித்தனர்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அது சிறுகதைக்கான மாதம் இரு முறை இலக்கிய இதழாக மாற்றப்பட்டது.

இந்த மணிக்கொடி எழுத்தாளர்களில் படைப்புத்துறையில் மட்டுமின்றி, திறனாய்வுத் துறையிலும் புகழ் பெற்றவர்கள் க.நா.சு வும், சி.சு. செல்லப்பாவும் ஆவர்.

திறனாய்வுத்துறையில் இவர்களது இலக்கியக் கொள்கை களையும் போக்குகளைவும் விளைவுகளையும் மிகச்சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

க.நா.சு.வைப் பொருத்த அளவில் "ஒரு படைப்பாளிக்கு கலை சம்பந்தமான பொறுப்பு மட்டுமே உண்டு; சமுதாயப் பொறுப்பு கிடையாது; கலைஞன் என்பவன் ஒரு தனித்தீவு; தன்னுடைய படைப்பு மிக உயர்ந்த சிகரங்களை நோக்கிச் செல்லவேண்டும்; உலக இலக்கியத் தரத்தை எட்ட வேண்டும்; கலைஞன் ஒரு சுதந்திர புருஷன்; அவனுக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் கூடாது" என்பதே அவரதுஇலக்கிய கொள்கையின் அடிப்படையாகும்.

இந்தப் பார்வையில் தான் அவரது திறனாய்வுகள் அனைத்தும் அமைந்திருந்தன. எனவேதான் "நான் மணிக்கொடிக்காரன் அல்ல!" என்று அவர் கூறுவது வழக்கம்.

வேறுவிதமாகச் சொன்னால் மேலைய (ஆங்கில – அமெரிக்க) நாட்டு எழுத்தாளர்களான ஜேம்ஸ் –ஜாய்ஸ், ஆடன், எலியட் போன்றோரே அவரது இலக்கியப் பார்வையை உருவாக்கியவர்கள் எனலாம்.

ஆகவே, தமிழில் புதிய இலக்கியம் வளர்வதற்கு மேற்கண்ட இலக்கியவாதிகளின் படைப்புகளையே இவர் அளவு கோலாய் கொண்டிருந்தார்.

நோபல் பரிசு பெற்ற பல மேற்கத்திய எழுத்தாளர்களின் பாதையில் தமிழில் புதிய எழுத்து வளர வேண்டும் என்பதையே அவர் எப்போதும் வலியுறுத்தினார்.

அவர் தமிழனாய்ப் பிறந்திருந்தாலும் அவரது இலக்கிய இதயம் ஆங்கில, அமெரிக்க இலக்கிய எழுத்தாளர்களின் தத்துவம் மரபுகளை ஒட்டியே இயங்கிக்கொண்டிருந்தது.

மேலை இலக்கியம் என்று கூறும்போது மேக்சிம் கார்க்கி, மைக்கேல் ஸோலக்கோவ், மயாக்கோவ்ஸ்கி முதலிய தலைசிறந்த சோவியத் எழுத்தாளர்களை இவருக்கு அறவே பிடிக்காது.

இவர்கள் இலக்கிய சாதனையாளர்கள் என்பதை அவர் ஒரு போதும் ஒப்புக்கொண்டதே இல்லை. "மார்க்ஸிய அழகியல்" என்ற இலக்கியக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட படைப்பாளிகள் உலகத்தரமான கலைப்படைப்புகளை வழங்க முடியும் என்பதை வாழ்நாள் முழுவதும் நிராகரித்தவர் க.நா.சு.

இவர் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்ற இலட்சியத்தோடு முழு நேர எழுத்தாளராகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். மேலைநாட்டு தலை சிறந்த நவீன இலக்கியப் படைப்பாளிகள்போல் இந்தியாவிலும் தமிழகத்திலும் விளங்கவேண்டும் என்பது இவரது கனவு. ஆனால், அந்தக் கனவு நிறைவேறாமல் போனதால்தான் மணிக்கொடியில் தமிழில் எழுத வந்தார். உலகப் புகழ் பெற்ற இந்திய எழுத்தார்களான முல்க்ராஜ் ஆனந்த், ஆர்.கே. நாராயணன் ஆகியோரின் படைப்புகள் மீது இவருக்கு எந்த உயர்ந்த அபிப்பிராயமும் கிடையாது.

''மார்க்ஸிய அழகியல்'' பார்வையுடைய முல்க் ராஜ் ஆனந்த்தை இவர் ஒரு தரமான இலக்கியவாதியாக அங்கீகரித்ததே இல்லை! காந்தியவாதியான ஆர்.கே. நாராயணனைப் பற்றிக்கேட்டால்'' ஏதோ எழுதுகிறார்; சுமாராக எழுதுகிறார்; பரவாயில்லை!'' என்று கூறுவது இவரது வழக்கம்.

எனவே, க.நா.சு. மார்க்ஸிய அழகியல் எழுத்தாளர்களை மதிக்கவும் இல்லை. காந்திய தத்துவத்தை பின்பற்றி எழுதிய படைப்பாளர்களுக்கு உரிய மரியாதையையும், கௌரவத்தையும் வழங்கவுமில்லை. எடுத்துக்காட்டாக மணிக்கொடி எழுத்தாளரான பி.எஸ். ராமையாவை ஒரு சிறந்த படைப்பாளியாக க.நா.சு. ஏற்றுக்கொள்ளவில்லை !

''பி.எஸ். ராமையா ஒரு நல்ல கதை கூட எழுதவில்லை. அவற்றில் இலக்கியத்தரம் ஏற்றி வைப்பதற்கில்லை! கதைக்கருத்தால், விஷயத்தால் முக்கியத்தும் தந்து கொள்ளலாம் ; இலக்கிய ரீதியில் முக்கியத்தும் கிடையாது. ராமையா கதைகள் பொதுவாக, இந்த ரகத்தைச்சேர்ந்தவை என்கிறார். க.நா.சு. (பார்க்க சி.சு.செல்லப்பா'' என் இலக்கிய பாணி'' பக்கம் 262)

ஆனால், தலை சிறந்த மணிக்கொடி கதாசிரியர்களில் ஒருவராக, பி.எஸ். ராமையாவைப் புதுமைப்பித்தன் அங்கீகரித்திருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (காண்க : புதுமைப்பித்தன் –கட்டுரைகள்).

சுருங்கச்சொன்னால் க.நா.சுவின் இலக்கியப் பார்வையானது கொள்கை அடிப்படையாலும் நடைமுறை ரீதியாகவும் ஒரு குறுகிய

போக்கையே கொண்டது. இவர் தனது பார்வையானது ''எனது சொந்த ரசனையை அடிப்படையாகக்கொண்டது'' என்று மட்டுமே கூறுவார். அது எனது சொந்த அபிப்பிராயம் என்று கூறி 'தனது' முடிவுகளுக்கு காரண காரியம் எதுவும் கூறாமல் தப்பித்துக்கொள்வார்.

அவரது சொந்த ரசனை என்பதும் ஆளுக்கு ஆள், நேரத்திற்கு நேரம், இடத்திற்கு இடம், வித்தியாசப்படும். இவரது இலக்கியத் தரப்பட்டியல் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். இவரது இலக்கியப் பார்வை தன்வயமானதாகும். இவரது திறனாய்வுப் போக்கைப் பின்பற்றுவோர் தமிழ்நாட்டில் குறுங்குழு வாதிகளாக இன்றும் இயங்கி வருகிறார்கள். இது தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பல்வேறு விதங்களில் தடைக்கற்களாக உள்ளது.

ஆனால் சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் போக்கு க.நா.சு. வின் போக்கிலிருந்து வித்தியாசமானது.

ஒரு படைப்பாளிக்கு கலாரீதியில் மட்டுமின்றி, சமுதாய ரீதியிலும் மிகுந்த பொறுப்பு உண்டு என்பது சி.சு. செல்லப்பாவின் அழுத்தமான இலக்கியக்கொள்கையாகும். எந்த இலக்கியப் படைப்பிலும், சத்தியம் (உண்மை) சிவம்(நன்மை + சக்தி), சுந்தரம் அழகு) இம் மூன்றும் இணைந்திருக்க வேண்டும் என்பது இவரது கோட்பாடாகும்.

இந்த அடிப்படையில்தான் சி.சு. செல்லப்பா மணிக்கொடி எழுத்தாளர்களையும், அதற்கு பின் வந்த பிற எழுத்தாளர்களையும், மதிப்பிட்டு, தமது முடிவுகளை வழங்கி உள்ளார்.

மகாகவி பாரதியாரின் ''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்'' என்பதே இவரது இலக்கியக் கோட்பாடாகும்.

''சொல் புதிது, பொருள் புதிது, சுவை புதிது'' என்னும் பாரதியின் வாக்கின் படிதான் புதுமைத்தமிழ் இலக்கியம் வளரவேண்டும் என்பது இவரது அசைக்கமுடியாத நம்பிக்கை. இந்த அடிப்படையில் தான் அவர் எழுத்துப் பத்திரிகையையும் எழுத்துப் பிரசுரங்களையும் வெளியிட்டு வந்தார். தாமும் தனித்துவத்துடன் எழுதினார். பிற எழுத்தாளர்களையும் ஆதரித்தார். தன்னலமற்ற இலக்கியப் பணிகளுக்காக இன்றளவும் சி.சு. செல்லப்பா தமிழ்ச் சமூகத்தால் பெரிதும் மதிக்கப்படுகிறார்.

சி.சு. செல்லப்பா ஒரு காந்தியவாதி என்ற போதிலும் தமது குருநாதர்களான மகாகவி பாரதி, வ.ரா. திரு. வி.க. ஆகியோரின் பாதையில் பொதுவுடைமை இயக்கத்திற்கும் படைப்பாளிகளுக்கும் உரிய மதிப்பளிக்கத் தவறியதில்லை! அவர்களது திறமைகளை ஒருக்காலும் புறக்கணிக்கவில்லை.

சான்றாக தோழர் ஜீவா அவர்களையும் அவரது பேச்சுக்களையும், எழுத்துக்களையும் சி.சு. செல்லப்பா வாயாரப் புகழ்வதுண்டு. ''பிரபஞ்சீயம்'' (Universalism) என்னும் சொல்லை ஜீவா அடிக்கடி பயன்படுத்துவார். உலகு தழுவிய மானுட நேயம் என்பதை இது குறிக்கும்.

''ஜீவாவின் இந்தச் சொல்லாக்கம் மிகப்புதுமையானது. அருமையானது. பொருள் பொதிந்தது'' என்று சி.சு. செல்லப்பா பாராட்டி இருக்கிறார். ஏனெனில் செல்லப்பாவும் தாகூரைப்போல, பாரதியைப்போல, ஒரு உலக, மானுட நேயத்தையும் மானுட விடுதலையையும் போற்றியவர்.

டி. செல்வராஜ், மார்க்ஸிய எழுத்தாளர் என்று தெரிந்திருந்த போதிலும் அவரது 'மலரும் சருகும்' என்ற நாவலை தமது எழுத்து இதழில் மிக நேர்மையுடனும் விரிவாகவும் பாராட்டினார். இது செல்லப்பாவின் நடுநிலை உள்ளத்திற்கும் நியாயமான விமர்சனப் போக்கிற்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இன்றையத் தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையில் இன்றளவும் செல்வாக்குச் செலுத்திவரும் க.நா.சு., சி.சு. செல்லப்பா ஆகியோரின் வாழ்வும், பணிகளும் நாம் கூர்ந்து ஆராயத்தக்கன. கலை இலக்கியத் துறையில் ஆர்வமும் அக்கறையும் உள்ள அனைவரும் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விஷயம் இது.



காந்தியவாதி செல்லப்பா

ஏ.என்.எஸ். மணியன்

நான் சுமார் 14 ஆண்டுகள் தினமணி காரியாலயத்தில் கேன்டீன் வைத்திருந்தேன். அக்காலத்தில் கேன்டீனுக்கு மதியம் டிபனுக்கு அனேகமாய் ஆசிரியர் குழுவினர் அனைவரும் வருவார்கள். ஆனால் திரு. சி.சு. செல்லப்பாவும் திரு. ஏ.என்.எஸ்ஸும் வந்ததில்லை. ஆகையால் திரு. சி.சு.செ. அவர்களின் கதைகளை கலைமகளில் படித்திருந்தாலும் அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை.

தினமணி பத்திரிகைத் தொழிலாளர்கள் ஸ்டிரைக்கினால் பத்திரிகை நிறுத்தப்பட்டது. பின் சிறிது காலம் சென்று சித்தூரிலிருந்து வெளி வரத் தொடங்கியது. என் வியாபாரம் (கேண்டீன்) மூடப்பட்டது. நான் சித்தூருக்குப் போகவும் இல்லை. ஆபீஸ் நிர்வாகம் என்னைக் கூப்பிடவும் இல்லை.

நானும் பல இடங்களில் அலைந்து விட்டு திருவல்லிகேணியில் திருவெட்டீஸ்வரன் பேட்டை என்று அழைக்கப்படும் பகுதியில் பிள்ளையார் கோவில் சந்து (முதல்) 76 எண் உள்ள வீட்டில் சிறிய அளவில் சிற்றுண்டி விடுதி நடத்திக்கொண்டிருந்தேன். என் கடைக்கு வேலையாள்கள் யாரும்இல்லை. நானும் என் மனைவியும் தான் எல்லாம் நாங்கள் தயார் செய்து விட்டு விற்பனையை நான் மட்டும் செய்வேன். அப்பொழுதுதான் மாலை சுமார் 4 மணிக்கு ஒருவர் வந்து 4 இட்டிலி கட்டிக்கொடுக்கும்படி கேட்டார். நான் அவர் கேட்டதைக் கட்டிக்கொடுத்ததும் அவர் காசு கொடுக்கும் போது அவர் கையில் மஞ்சள் நிற அட்டை போட்ட ஒரு புஸ்தகம் இருந்ததை என் கண் கண்டது. அட்டையில் இருந்த 'சுவை 1' இலக்கியக்கட்டுரைகள் சி.சு. செல்லப்பா என்று இருந்ததைப் படித்தேன். நான்

படித்ததைப்பார்த்த அவர் அந்தப் புத்தகத்தை உடனே என்னிடம் கொடுத்து படித்துவிட்டுத்தாருங்கள் என்றார். நானும் வாங்கிக்கொண்டு நீங்கள் எப்படி சார் நாளைக்கு வருவீர்களா? இதைத்தங்களிடம் எப்பொழுது கொடுப்பது என்று கேட்டேன்.

'இதை நான் தான் எழுதினேன். என் பெயர் சி.சு. செல்லப்பா. சன்னதி பக்கத்தில் உள்ள தெருவில் தான் இருக்கிறேன். நீங்கள் படியுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். இப்படித்தான் எங்கள் சந்திப்பு நடந்தது.

அதன் பிறகு அவர் நான் இருந்த பிள்ளையார் கோவில் முதல் சந்தில் 17 என்ற எண் உள்ள வீட்டிற்கு குடி வந்து விட்டார். அதன் பிறகு நானும் அவரும் நெருங்கிப் பழகும் வாய்ப்பை என்னுடைய படிக்கும் பழக்கம் ஏற்படுத்திக்கொடுத்தது அல்லாமல் குடும்ப விவரங்களும் இருவரும் பரிமாறிக்கொள்ளும் நிலையும் ஏற்பட்டது. தினசரி மாலை அவர் என் கடையில் வந்து உட்கார்ந்து ஒரு மணி நேரம் இருந்து இலக்கியம் சினிமா, சங்கீதம் எல்லாவற்றையும் பேசுவோம். இப்படியான சூழ்நிலையில் எங்கள் இருவர் குடும்ப நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வோம். எங்களிடையே இருந்து வந்த அன்பின் காரணமாய் அவருடைய எழுத்தாள நண்பர்கள் யார் அவரைப் பார்க்க வந்தாலும் என்னைக்கூப்பிட்டு அவர் அறிமுகப்படுத்தி வைப்பார்.

இதற்கிடையில் நான் ஒரு புதிய வியாபாரம் ஆரம்பித்தேன். நன்கு நடத்தி வந்த இடத்துக்கு எதிர்பக்கம் ஒரு கடையை திறந்தேன். அதில் தஞ்சாவூர் பக்ஷணக்கடை என்று பெயர் வைத்து இனிப்பு வகைகளும் கார வகைகளும் தயார்செய்து என் மகன்களில் ஒருவனை உட்காரச் சொல்லி வியாபாரம் செய்தேன். அது திரு. சி.சு. செ. அவர்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி தந்தது.

அவர் எங்களுடைய முன்னேற்றத்திலும் எங்கள் வாழ்க்கையிலும் மிகுந்த அக்கறையும் அறிவுரையும் கொண்டு அன்பினாலும் உண்மையான நட்பினாலும் என் குடும்பத்தார் எல்லாரையும் கட்டிப்போட்டு விட்டார்.

அவரும் ருசி அறிந்து என் கடையில் வாங்கிச் சாப்பிடுவார். கோதுமை அல்வா பால்கோவா இவை இரண்டும் அவருக்குப்பிடித்தமானவை. தாமும் சாப்பிடுவார். அவரைத் தேடி

வருகிறவர்களுக்கும் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றும், கார வகை மெது பகோடா என்று ஒரு ஐட்டம் போடுவோம், இதுவும் வாங்கிச் சாப்பிடக் கொடுப்பார். தன் வீட்டில் தன் மனைவியாரை, தேனீர் போட்டு கொடுக்கச்செய்வார். பின் என்னைச் சந்திக்கும் பொழுதெல் லாம், சுப்பிரமணிய அய்யர்(என்னை இப்படித் தான் பெயர் சொல்லிக் கூப்பிடுவார்) நீர் கடை வைத்தது எனக்கு ரொம்ப உபகாரமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது என்று பலமுறை சொல்லி இருக்கிறார்.

இந்தக் கால கட்டத்தில் ஒரு நாள் 'இந்தியா டுடே' ஆசிரியை வாசந்தி அவரைக் காண வந்தார். அவருக்கு விலாசம் சரியாகத் தெரியவில்லை. அந்தச் சந்தில் தான் என் கடையிருக்கிறபடியால் சி.சு.செ. வின் பெயரைச் சொல்லி வீட்டைக் கேட்டார். நான் கூடவே அழைத்துப்போய் அவர் வீட்டைக் காண்பித்துவிட்டு திரும்பிய பொழுது திரு. சி.சு.செ. அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்து ஆசிரியை வாசந்தி அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்தினார். உடனே வழக்கம்போல் அல்வாவும், பகோடாவும் வாசந்தியுடன் வந்த ரவீந்திரன் என்ற எழுத்தாளர்க்கும் வரவழைத்து கொடுத்து விட்டு தான் வாசந்தி அவர்கள் வந்த விவரத்தைப் பற்றி கேட்டார்.

பிறகு அவர் எழுதிய சுதந்திர தாகம் நாவலில் ஒரு சிறிய பகுதியை வாசந்தி அவரிடம் கேட்டார்கள். சி.சு.செ. அவர்களும் இந்தியா டுடேயில் இரண்டு பக்கங்கள் வரும் அளவிற்கு வரும் கையெழுத்துப் பிரதியின் நகலைக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு சென்று விட்டார். வாசந்தி அவர்கள் அடுத்த மாத இந்தியா டுடேயில் அவர் கொடுத்த பகுதி அப்படியே வந்து விட்டது. (அந்த இதழுக்கு இரண்டாயிரம் பணமும் திரு.சி.சு.செ. அவர்களுக்குக் கிடைத்தது)

அதன் பிறகு எப்பாடுபட்டாவது சுதந்திரதாகம் 3 பாகங்களாக எழுதி வைத்திருந்த கை எழுத்துப் பிரதியை வெளியிட சுமார் 20 ஆயிரம் ரூபாய் வேண்டும் என்றும் நான்கு பேர்களிடம் (என்நெருங்கிய நண்பர்கள்) தலைக்கு 5 ஆயிரம் கடன் வாங்கியாவது வெளியிடப் போகிறேன். நீரும் ஐந்தாயிரம் கொடுங்கள் புஸ்தகம் வெளிவந்ததும் திருப்பி கொடுத்து விடுகிறேன் என்று என்னிடம் சொன்னார். அந்த சமயம் என்னுடைய மாதாந்திர

சீட்டுப்பணம் இருந்தது. அதிலிருந்து நானும் கொடுத்தேன். மற்றவர்களும் கொடுத்தார்கள். அவரும் அவர் மனைவி மீனாட்சி அம்மாளும் சைக்கிள் ரிக்ஷாவில் சுமார் 10 முறைக்கு குறையாமல் அலைந்து திரிந்து உழைத்து புஸ்தகம் வீட்டுக்கு வந்து விட்டது. புஸ்தகம் வந்ததும் அவைகளை வைக்க தன்னுடைய படுக்கை அறையிலேயே ஒரு பீரோ மாதிரி அடுக்கி வைத்தார். அந்தத் தம்பதிகள் இருவருக்கும் எல்லையில்லா சந்தோஷம்.

என்னிடம் ஒரு பிரதியைக் கொடுத்தார். முதலில் நான் பணம் பெற்றுக்கொண்டால் தான் வாங்கிக்கொள்வேன் என்று சொன்னேன். அப்படியானால் அதன் மூன்று பாகங்களும் சேர்ந்து நானூறு ரூபாய் என்ற விலையில்எனக்கு கமிஷன் 100 ரூபாய் கழித்து 300 ரூபாய் பெற்றுக்கொண்டார். அவருடைய எழுத்தாள நண்பர்களுக்கெல்லாம் கடிதம் எழுதினார். பலர் புஸ்தகத்திற்கு தபால் சார்ஜும் சேர்த்து பணம் அனுப்பி பெற்றுக்கொண்டார்கள்.

எல்லாப் பத்திரிகைகளுக்கும் மதிப்புரைக்காக இரண்டு பிரதிகள் அனுப்பினார். அவரும் என் மகன் சூரியும் ஆட்டோவில் போய் தினமலர், தினமணி, ஆனந்த விகடன், கல்கி, குமுதம், துக்ளக், குங்குமம் இந்த பத்திரிகை காரியாலயங்களுக்கெல்லாம் நேரிலேயே கொடுத்து வந்தார்கள். இவைகளில் ஆனந்த விகடன் ஒரே ஒரு பிரதி போதும் என்று ஒன்றை திருப்பிக் கொடுத்து விட்டது. பெற்றுக்கொண்ட ஒரு பிரதிக்கும் விலை ரூ 400 கொடுத்து விட்டார் ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள். விமர்சனமும் சி.சு.செ. + மனைவி பேட்டியும் படமும் வந்தது. கல்கியிலும் சுப்ரபாலன் என்பவர் நன்றாக எழுதினார்.

முதுபெரும் எழுத்தாளரும் சி.சு.செ. வின் நெருங்கிய நண்பருமான திரு. பே.கோ. சுந்தரராஜன் என்கிற சிட்டி தினமணியில் சி.சு.செ. வின் சுதந்திர தாகம் ஒரு இதிகாசம் போன்றது என்று குறிப்பிட்டார். துக்ளக்கிலும் விமர்சனம் வந்தது.

வெளியூர்களில் இருந்து பல பேர்கள் தாங்கள் நடத்தும் பள்ளிகளுக்கும் நூலகங்களுக்கும் நேரிடையாக வந்து வாங்கிச்சென்றார்கள். சி.சு.செ. வாங்கிய நான்கு பேர்களுக்கும் கடனை திருப்பிக்கொடுத்து விட்டார். சி.சு.செ. அவர்கள் தன்

மகன் வங்கி அதிகாரி. தனக்கோ, குடும்பத்தினருக்கோ தன் புஸ்தகங்கள் வெளியிடுவதற்கோ நிதியுதவி மகனிடம் அவர் கேட்டதே இல்லை.

ஒரு நாள் என்னிடம், 'சுப்பிரமணிய அய்யர், என் லட்சியம் நிறைவேறிவிட்டது. என் ஆயுள் முடிவதற்குள் எப்படியாவது சுதந்திர தாகத்தை வெளியிட வேண்டும் என்கிற கனவு நினைவாகிவிட்டது. இன்னும் ஒன்று பாக்கி இருக்கிறது. பி.எஸ். ராமையாவின் கதைகளைப்பற்றி ஒரு விமர்சனம் வெளியிட வேண்டும் என்று சொன்னார். சுதந்திர தாகம். புஸ்தகம் பாதி விற்பனை ஆகிவிட்டது என்றும், அரசாங்க நூலகங்களில் வாங்கிவிட்டார்களானால் தீர்த்து விடும் என்றும், அதற்கான முயற்சியில் தன்னால் தள்ளாமை காரணமாக ஈடு பட முடியவில்லை என்றும் கூறினார்.

இது நடந்த சில வாரங்களில் பி.எஸ். ராமையாவின் சிறுகதைப்பாணி என்று ஒரு புஸ்தகமும் வெளியிட்டார். பி.எஸ் ராமையாவின் 300 சிறு கதைகளின் சிறப்பும் குறிப்பும் விமர்சனம் கொண்ட நூல் அது. விலை 100 ரூபாய்.

முதலில் நான் தான் வாங்க வேண்டும் என்று என் மனைவியிடம் சொல்லியிருந்தார். அச்சமயம் நான் வெளியில் சென்றிருந்தேன். நான் வந்ததும் என் மனைவி சொன்னபடி நான் போய் அவரிடம் 100 ரூபாய் கொடுத்து வாங்கினேன். அதில் சி.சு.செ. அவர்கள் ராமையாவின் 300 கதைகளுக்கும் சுருக்கம் எழுதியிருக்கிறார். அதற்கே அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். படைப்பாளி என்ற சொல்லுக்கு மிகமிகத்தகுதியானவர் திரு. சி.சு. செல்லப்பா அவர்கள்.

திரு. சி.சு. செ. அவர்கள் ஒரு காந்தீயவாதிதான் சந்தேகம் இல்லை. ஆனால் அவருடைய முன்கோபம் அவரை சந்தேகிக்கச் செய்யும். நெருங்கிப் பழகியவர்கள் சமாதானம் செய்து கொள்வார்கள். எந்த ஒரு வேலையையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திப்போடவே மாட்டார் அவர்.

அக்காலத்திய சினிமா தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் எல்லாப் படங்களையும் அவர் பார்த்திருக்கிறார். அதே போல் நானும் ஓரளவு பார்த்திருப்பதால் அவைகளைப் பற்றி நிறைய நாள் மாலை

நேரங்களில் பேசிக்கொண்டிருந்திருக்கிறோம். அக்கால நடிகர்கள் அசோக்குமார், திலீப்குமார், பிருத்விராஜ், சாகு மோடக், பிரேம் அதிப், கோஹர், நடிகை சாந்தாஅப்தே நர்கீஸ், தேவிகா ராணி, இவர்கள் நடித்த படங்களைப் பற்றியும் தற்காலப் படங்களையும் ஒப்பிட்டு தரம்பிரித்துப் பேசுவோம். டைரக்டர்களில் சாந்தாராம், ஷோரப்மோடி புகழ்பெற்ற பாடும் நடிகர்கள் சைகால், கேஸிடே, ஆத்மா இவர்களுடைய படங்களை எல்லாம் விரும்பிப் பார்த்திருக்கிறார் என்பதை அவருடைய விமர்சனத்திலிருந்து தெரிந்து கொண்டேன். அதே போல் தியாகராஜ பாகவதர் படங்கள் அம்பிகாபதி, சிந்தாமணி, சிவகவி, அசோக் குமார், திரு நீலகண்டர் சத்ய சீலன், பி.வி. சின்னப்பாவின் கண்ணகி, குபேரகுசேலா, மகாமாயா – சூர்ய மாலா விகடயோகி மேலும் தமிழ்பட டைரக்டர்களான திரு. ராஜா சாண்டோ,கே.சுப்பிர மணியம், ஒய்.வி. ராவ். பின்.என். ராவ், டைரக்டர் முருகதாஸ், டி.ஆர். சுந்தரம் இவர்களுடைய படங்களையும் பற்றி நானும் அவரும் விமர்சனம் செய்திருக்கிறோம்.

அதே மாதிரி சாப்பிடும் விஷயத்திலும் அவருக்கு மிகவும் உயர்ந்த தரமான ருசி நிறைந்தவைகளே பிடிக்கும். அவர் வீட்டில் தினமும் என்ன என்ன காய்கறிகள் சமைக்க வேண்டும் என்று அவருடைய மனைவிக்கு சொல்லிவிடுவார்.

ஒரு நாள் நான் அவரைக் காண சென்ற பொழுது அவர் சமையலறையில் அடுப்பின் கீழ் அமர்ந்து அடுப்பில் இருந்த சிறிய வாணலியில் உருளைக்கிழங்கு சிறிய துண்டுகளாக நறுக்கியவைகளை நன்றாக, கையில் இருந்தசட்டுவத்தால் அடிக்கடி கிளறி விட்டுக்கொண்டிருந்தார். ஏன் சார் என்ன செய்கிறீர்கள், மாமி எங்கே என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தேன். வாங்கோ வாங்கோ, எனக்கு உருளைக்கிழங்கு ரோஸ்ட் பண்ணத் தெரியவில்லையாம். அதனால் அவரே பண்ணிக்கொள்கிறார் என்று மாமியின் குரல் கேட்டது. சி.சு. செ. அருகில் மாமி நின்றபடி குறை கூறினார்.

உடன் சி.சு.செ. சொன்ன பதில் இது. 'மொறு மொறு' என்று இருக்க வேண்டும். சிகப்பாக இருக்கட்டும் என்று அவளைப் பண்ணச் சொன்னேன். தீய வைத்து விட்டாள். அதனால்தான் நான்இவளுக்கு

செய்து காண்பிக்கிறேன்' என்று கூறினார். இந்த சம்பாஷணையினால் மாமிக்கு முகத்தில் எந்த விதமான சலனமும் ஏற்படவில்லை. வழக்கமான புன்னகையுடன் என்னைப் பார்த்து உட்காரும்படி சைகை செய்தார்.

ருசியாக சாப்பிடுவதில் அவருக்கு அந்த வயதிலும் நாட்டமிருந்தது. ஆனால் எதையும் அளவிற்கு மேல் அதிகமாக சாப்பிடமாட்டார். ஆடம்பரம் அறவே பிடிக்காது. 4 முழம் கதர்வேட்டி அரைக்கைகதர் சட்டை மேல்வஸ்திரம் கையில் கைத்தடி இதே கோலம் தான். எந்த நிகழ்ச்சியானாலும் கலந்து கொள்வார். எழுத்தாளர் வர்க்கத்திற்கே உரிய வெற்றிலைப் பாக்கு புகையிலை, பொடி எந்தப் பழக்கமும்அவருக்கு இல்லை.

பிறர்களுடைய கருத்துக்களை கேட்பார். அவருக்கு சரிபட்டதை ஏற்றுக்கொள்வார். அதே மாதிரி தன் கருத்துக்களை பிறருக்கு திணிக்கவும் மாட்டார். தனக்கு ஏற்பு ஆகாத பிறருடைய கருத்துடன் சமரசமும் செய்து கொள்ள மாட்டார்.

இதே மாதிரிதான் சொந்த வாழ்க்கையிலும் பெங்களூரில் தன் மகன் ஏற்பாடு செய்திருந்த எல்லா வசதி களுடன் இருக்கும் (பெட்ரூம் அட்டாச் பாத்ரூம்) வீட்டில் அவருக்கு இருக்க முடியவில்லை. கொஞ்ச காலம் இருந்து விட்டு, ரூபாய் இரண்டாயிரம் வாடகையில் சென்னைக்கே வந்து விட்டார். தானும் மனைவியும் இரண்டே பேர்கள் தான். வரும் நண்பர்களுக்கெல்லாம் என் கடையிலிருந்து சிற்றுண்டி. மனைவி தேனீர் போட்டுக்கொடுப்பார்கள். (இந்த கால கட்டத்தில் தான்தன்னுடைய ஒரே பேரனுக்கு உபநயனம் (பூணூல்) தான் ஜீவிய வந்தனாய் இருக்கும் பொழுதே போட்டு விட ஆசைப்பட்டார். பெங்களூரில் இருக்கும் மகனுக்கு விவரமாய் எழுதினார். சென்னை திருவல்லிகேணியில் உள்ள பண்ட் கல்யாண சத்திரத்தில் அவர் செலவிலேயே வைதீக முறைப்படி உபநயனம் செய்வித்தார். இதற்கு மூல காரணம் என் கருத்துப்படி.

இவர் தினமணியில் உதவி ஆசிரியராய் இருந்த போது திருவல்லிக்கேணி பிள்ளையார் கோவில் தெருவில் 22 எண் உள்ள வீட்டில் தான் குடியிருந்து வந்தார். சுமார் இருபது ஆண்டுகாலமாக இருந்ததுமல்லாமல் தன்னுடைய 'எழுத்து' பத்திரிகை பிறந்த வீடு இருந்த பகுதி. எல்லாப் பத்திரிகை நண்பர்களும் எழுத்தாளர்களும்

கூட பல இலக்கிய கூட்டங்கள் இதே தெருவில் இருக்கும் எச்.எச்.மண்டல் பள்ளி கூடத்தில்நடத்தி இருக்கிறார். இம்மாதிரி காரணங்களால் பெங்களூரில் இருக்கும் தன் மகன், மருமகள் பேரன், பேத்தி இவர்களை சென்னைக்கு வரவழைத்து இவர்கள் தங்குவதற்கு இவர் குடியிருக்கும் வீட்டிற்கு அருகிலேயே சி.சு.செ.வின் மைத்துனி (இவர் மனைவியை விட மூத்தவர்.) தன் மகன் மருமகளுடன் குடியிருந்தார். மைத்துனியின் வீடு அவர்களுக்குசொந்தமானது. உறவினர்கள் வந்தால் தங்குதற்கு தடையில்லை. இத்யாதி காரணங்களினால் தன் பேரனின் பூணூல் கல்யாணத்தை நடத்தி மகிழ்ந்தார்.

அமெரிக்காவில் வசிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படும் விளக்கு என்ற அமைப்பு முதிய தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு கௌரவமும் சன்மானமும் அளிக்க முடிவு செய்தது. திரு. சி.சு.செ. அவர்களை அக்குழுவினர் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களுடைய நோக்கம் ஒரு கூட்டம் நடத்தி பாராட்டி விட்டு ரூபாய் இருபதினாயிரம் நிதி வழங்குவது. ஆனால் திரு. சி.சு.செ. அவர்கள் எனக்கு பணம் தேவை இல்லை, என்னுடைய வெளிவராத நூல் ஒன்றை வெளியிடுங்கள் என்றார்.

பணத்தை மறுத்த மிகச் சிறந்த படைப்பாளிகள் எனக்குத் தெரிந்து இரண்டுபேர்தான். ஒன்று சி.சு.செ. மற்றொருவர் சினிமாவிற்கு கதை வசனம் எழுதும்படி வருந்தி வருந்திஅழைத்த சினிமா முதலாளிகளை ஏறெடுத்தும் பார்க்காத படைப்பாளி திரு. வல்லிக்கண்ணன் அவர்கள். இருவரும் நண்பர்கள் தான். இருவரும் எளிமையானவர்கள். இருவரும் காந்தியவாதிகள். என் கருத்துப்படி திரு.வ.க. அவர்கள் முள் இல்லாத ரோஜா. திரு.சி.சு.செ. அவர்கள் முள்ளில் ரோஜா. இருவருக்கும் இன்னும் பல ஒற்றுமைகள். இரு நண்பர்களும் உயர்ந்த சிறந்த படைபாளிகள் என்பதை தமிழ் இலக்கிய (புதுக்கவிதை உள்பட) உலகம் மறக்காது. மறைக்கவும் இயலாது.

அமெரிக்காவில் உள்ள விளக்கு (அமைப்பு) வெளியிட்டது தான். திரு. சி. சு. செல்லப்பாவின் சிறுகதைப்பாணி என்ற அருமையான ஆராய்ச்சியும் அனுபவமும் நிறைந்த நூல். சென்னை

மைலாப்பூர் சாஸ்திரி ஹாலில் வெளியிடப்பட்டது. இதற்காக சென்னை பரோடா பாங்கில் பணிபுரியும் திரு. ரங்கராஜன் அவர்களின் உழைப்பும் ஆர்வமும் மிக பாராட்டப்பெற வேண்டியது. ஆரவாரம் இல்லாமல் இந்த ரங்கராஜன் அவர்கள் செய்யும் தமிழ் இலக்கியத் தொண்டு மகத்தானது.

திரு.சி.சு.செ. அவர்கள் தனக்கு ரூ.20,000 த்தை விட, தன்னுடைய படைப்பை பலர் படிப்பதையே பணத்தை விட பெரிதாக போற்றினார் என்பதை இதன் மூலம் அறிந்தோம்.

பேரனின் பூணுல் கல்யாணம் முடிந்து மகனும் மருமகளும் பேரனும் திரும்ப பெங்களூர் சென்று விட்டார்கள்.

ஒரு நாள் காலை 10 மணி. திரு.சி.சு.செ. அவர்களின் மனைவி என் கடைக்கு வந்து மாமாவிற்கு உடம்பு சரி இல்லை என்று கொஞ்சம் வீட்டுக்கு வந்து போகும்படி கூப்பிட்டார். திரு.சி.சு.செ அவர்களின் மைத்துனியும் மகனும் மதுரைக்கு சென்றிருந்தார்கள். எனவே உறவினர் என்று சொல்வதற்கு அப்பொழுது யாரும் இல்லை. நான் உடனே சென்று பார்த்தேன். மார்பு வலிக்கிறது, மூச்சுவிடுவது கஷ்டமாக இருக்கிறது என்றும் அமிர்தாஞ்சனம் வெள்ளை தடவியிருப்பதாகவும் சொன்னார். நான் என் மகன் சூரியை அழைத்து குப்புமுத்து தெருவிலிருக்கும் டாக்டர் ரமேசன் என்பவரை உடனே அழைத்துவரும்படி, அவனுடைய ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு போய் அழைத்து வரும்படி அனுப்பினேன். அந்த டாக்டர் ரமேசன் என்பவர் பெங்களூரைச் சேர்ந்த இளைஞர். நல்ல பண்பாளர். என் குடும்ப வைத்தியர் அவர்தான். மேலும் தொழில் ரீதியாகவும் நானும் அவருட் வாடிக்கையாளர்கள். பல வருடப்பழக்கத்தில் உரிமையால் அழைத்து வரச்சொன்னேன். (இப்பொழுது எவ்வளவு ஆபத்தான கேசானாலும் கியூ வரிசை தான்) உயிர் காக்கும் தொழில் சில சமயம் உயிர் போக்கும் தொழிலாகி விட்டது. அந்த நல்ல டாக்டர் வந்து பார்த்துவிட்டு மார்பில் சளி நிறை இருப்பதாகவும், இரண்டு மூன்று நாள்கள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும் என்றும் சொன்னார். இதற்கு சி.சு.செவும் சம்மதித்தார். லாயிட்ஸ் ரோட்டில் இருக்கும் ஒரு கிளினிக் அவரே எழுதிக் கொடுத்தார். அப்பொழுது ஆட்டோவில்

ஏற்றி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

அன்று மாலை சி.சு.செவின் மைத்துனியும் மகனும் வந்து விட்டார்கள். அவர்களிடம் தகவல் தெரிவித்ததும் பொறுப்பை மைத்துனியும் மகனும் மருமகளும் ஏற்றுக் கொண்டு வேளா வேளைக்கு உணவு, இரவுக்கு காவல் எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு, பெங்களூரில் இருக்கும் மகனுக்கு தெரிவித்தார்கள். மகனும் தன்மனைவியுடன் உடன் வந்தார். சுமார் ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் இருந்து குணமாகி வீடு திரும்பினார் சி.சு.செ. மகனும் பெங்களூர் சென்று விட்டார்.

இப்பொழுது சி.சு.செ. அவர்கள் மிகவும் சுறுசுறுப்பு அடைந்துவிட்டார். இந்த சமயத்தில்தான். பி.எஸ். ராமையாவின் சிறுகதைப்பாணி ஏற்கனவே கைஎழுத்துப் பிரதியாக இருந்ததை சரிபார்த்து அதற்கான வேலைகளைச் செய்து புத்தகமாக கொண்டு வந்து தன் வீட்டில் அடுக்கி வைத்து விட்டார். பத்திரிகைகளுக்கு மதிப்புரைக்கு தானே அனுப்பி விட்டதாக சி.சு.செ யின் மைத்துனியின் மகன் திரு. சங்கரசுப்பிரமணியன் என்னிடம் கூறினார்.

அந்த நூல் (பி.எஸ். ராமையாவின் சிறுகதைப்பாணி) வாசகர்களுக்கோ. நூலகங்களுக்கோ அல்லது விற்பனைக்கோ சென்றதாக தெரியவில்லை. நான் இரண்டு பிரதிகள் வாங்கினேன். என் நண்பரும் பத்திரிகையாளருமான திருமலை என்பவரிடம் படித்து விட்டுத்தாருங்கள் என்று கொடுத்தேன். அவர் பாவம் மிக நல்லவர். அவரிடமிருந்து ஒரு எழுத்தாளர் படித்துவிட்டு தருவதாக வாங்கிச் சென்றாராம். பல நாள் கழித்து புத்தகத்தை தருமாறு திருமலை கேட்டதற்கு, திருப்பிக் கொடுப்பதற்காகவா என்னிடம் கொடுத்தீர் என்று இரவல் வாங்கியவர் சொல்லிவிட்டார். இவரும் ஒரு எழுத்தாளர்தான். டாக்டர் மு.வ. அவர்கள் சொன்னது போல் கயவர்கள் இல்லாத இடமே இல்லையோ?

திரு.சி.சு.செ.வீட்டில் யாரும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நேரிட்டது. மாலை 4மணி சுமாருக்கு ஒரு கார் வந்தது. சி.சு.செ. குடி இருக்கும் தெருமுனையில் நின்றது. காரிலிருந்து இரண்டு பேர். சி.சு.செ. வீட்டிற்கு சென்றார்கள். சிறிது நேரத்தில் மாமி வந்து என்

கடையில் அல்வாவும் – பகோடாவும் வாங்கிக் கொண்டு என்னையும் மாமா அழைப்பதாக கூப்பிட்டார். நானும் போனேன். அங்கே அமர்ந்திருந்த இரண்டு பேர்களிடமும் என்னை அறிமுகப்படுத்தி விட்டு, என்னிடம் கூறினார். 'இவர்கள் லலிதா ஜுவல்லரியிலிருந்து வந்திருக்கிறார்கள். என்னை அழைத்துப் போக. நாளை வருவதாக சொல்லி இருக்கிறேன். நீங்களும் நாளை மாலை எங்களுடன் வரவேண்டும்' என்று அன்புக் கட்டளையிட்டார் .

மறுநாள் மாலை சொன்னபடியே லலிதா ஜுவல்லரியின் கார் வந்து திரு.சி.சு.செ.வையும் அவர் மனைவியையும் அழைத்துச் சென்றது.

அன்று நான் வர முடியாத காரணத்தை முதல்நாளே சி.சு.செ. அவர்களிடம் சொல்லி விட்டேன். ஆகையால் அன்று அவர்களுடன் செல்லவில்லை. மறுநாள் காலை 10 மணிக்கு சி.செ. அவர்களை சந்தித்தபொழுது அவர் சொன்னவை இது. எங்கள் இருவர்க்கும் இரவு விருந்து சப்பாத்தி, பாசந்தி, போண்டா பொங்கல் என்று பல ஐட்டங்கள். நாங்கள் இருவர், லலிதா ஜுவல்லரியின் முதலாளியும் மானேஜர் முத்துக்குமார், இன்னும் ஒருவர். பிரமாதமாக விருந்து சாப்பிட்டோம். விருந்து முடிந்ததும் எனக்கு சரிகை கரையிட்ட வேஷ்டி மனைவிக்கு பட்டுப்புடவை ஜாக்கெட் துணி இவ்வளவும் கொடுத்துவிட்டு, ஒரு டிரேயில் தங்க சங்கிலிகள் தோடு மூக்குத்தி எல்லாம் வைத்து உங்களுக்கு தேவையானதை எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள். என்மனைவிக்கு 100 பவுன் நகை போட்டு என்னுடன் அனுப்பி வைத்தார் என் மாமனார். அவளுக்கு நகைபோட்டுக் கொண்டு அவள் மனம் நிறைந்து விட்டதால் இப்பொழுது வேண்டாம் என்று மறுத்தாள். ஆனால் நான் அதை எல்லாம் புத்தகம் போட்டு அழித்து விட்டேன் என்று மனம் விட்டு சொன்னார். பிறகு அவர்கள் கொடுத்த ஜவுளி வகைகளை மட்டும் எடுத்துக்கொண்டு வீட்டிலேயே காரில் கொண்டு விட்டுசென்றார்கள். 100 சவரன் நகை அணிந்து திரு.சி.சு.செ. அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவியான மீனாட்சி மாமிக்கு எவ்வளவு சவரன் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளும் அளவிற்கு திரு. சி.சு. செல்லப்பா அவர்கள் தன் சிந்தனையினாலும்தன் இடையறாத உழைப்பினாலும் சுதந்திர தாகம்

என்ற நாவலின் மூலம் பல இலட்சம் ரூபாய்கள் மீனாட்சி மாமி கை எழுத்து போட்டு வாங்கிக் கொள்ளும்படி செய்துவிட்டார். எப்படி? மூன்று பாகங்கள் கொண்ட சுதந்திர தாகம் என்ற நாவல் விலை நானூறு (400) ரூபாய். தமிழ்நாட்டு நூலகங்களுக்கு வாங்கிக் கொள்ள அரசாங்க அனுமதி கிடைத்து விட்டது. நூலகங்களுக்கான தனி விலையானாலும்400 பிரதிகளுக்கு எவ்வளவு ரூபாய் நீங்களே எத்தனை லட்சம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

மீனாட்சி மாமிக்கு என்ன குறை?

கணவர் உயிருடன் இருக்கும்பொழுது இந்த நூலகங்களுக்கான உத்தரவு கிடைத்திருந்தால்? இதுதான் மீனாட்சி மாமியின் குறை.

சில நாள்களுக்குப் பிறகு மீண்டும் சனியும் சனிபகவானும் கூடவே வந்து விட்டார்கள். முன் வைத்தியம் செய்த அதே ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். இம்முறை மகன் மருமகள் பேரன் மைத்துனி, இவரின் மகன் மனைவி கூடவே இருந்தார்கள். காலை10 மணிக்கு, பல ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு சுதந்திர தாகத்தை அளித்த உயிரும் மூச்சும் சி.சு. செல்லப்பா என்ற உடலை விட்டு சுதந்திரமாக தத்தம் பயணத்தைத் தொடங்கின.

திரு.சி.சு.செல்லப்பா அவர்களுடைய சிறப்பான குணங்கள் என்றும் என் உள்ளத்தில் பதிந்து அவரைப்பற்றி பெருமையாக எண்ணச் செய்கின்றன. எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த போது, இலக்கியங்களுக்கு என்று (ராஜ ராஜன்) பரிசு திட்டத்தை ஏற்படுத்தினார். ஒரு முறை சுத்தானந்த பாரதி அவர்கள் எழுதிய ‘பாரத காவியம்’ என்ற நூலுக்கு கிடைத்தது. ஒரு லட்சரூபாய் நிதி.

அதன் பின் அதே பரிசுத் தொகையை இரண்டு பேர்களுக்குப் பிரித்து (50ஆயிரம் வீதம்) அளிக்க முன்வந்தார்கள். அதில் சி.சு. செல்லப்பாவும் ஒருவர். மற்றவர் பெயர் நினைவில்லை. இதை சி.சு. செல்லப்பா அவர்கள் ஏற்க மறுத்து விட்டார். இலக்கியத் தராதரம் தெரியாதவர்களுடைய பரிசு எனக்குத் தேவைஇல்லை என்று அழுத்திக் கூறி விட்டார்.

இன்னும் இதேபோல் ஓய்வூதியம் (தியாகிகளுக்கு) அதையும் வெகு காலம் வாங்காமல் இருந்தார். பிறகு உறவினரோ நண்பரோ ஒருவர் உனக்கு தேவையில்லை என்பதற்காக வேண்டாம் என்கிறாயே ; பிற்காலத்தில் உன் மனைவிக்கு உபயோகமாக இருக்கும் என்று வற்புறுத்தியதன் பேரில் மத்திய அரசு ஊதியத்தை மட்டும் சி.சு.செ. ஏற்றுக்கொண்டார்.

இன்னும் பல இலக்கிய அமைப்புகள் கொடுக்க முன் வந்த பண முடிப்புகளை மறுத்து, தன்னுடைய இலக்கியப் பணிக்கு கிடைத்த பாராட்டைத் தவிர வேறு எதையும் அவர் ஏற்றுக்கொண்டதில்லை.

காந்தீயத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர் சி.சு. செல்லப்பா.

இறுதி மூச்சுள்ள வரை காந்தீயவாதியாகவே வாழ்ந்து மறைந்தார். என்றும் இருக்கும் தமிழ் இலக்கிய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

''எழுத்து'' மதிப்பீடு

– *சின்னக்குத்தூசி*

1

எழுத்தாளர்கள் எல்லோருக்குமே – அவர்களது எழுத்துலக வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் சொந்தத்தில் ஒரு பத்திரிகை நடத்திப் பார்ப்போம் என்கிற ஆசை வராமல் இருக்காது. சொந்தமாக ஒரு பத்திரிகை நடத்தி பத்திரிகை உலகில் பல புதுமைகளைச் செய்து காட்ட வேண்டும் என்ற இலட்சியப்பார்வையோடுதான் பத்திரிகைகளை ஆரம்பிப்பார்கள். முதல் இதழே முப்பதாயிரம் போகும். ஒருவருடத்திற்குள் ஒரு இலட்சத்தை எட்டிவிடலாம் என்கிற கனவுகளோடுதான் பத்திரிகையை ஆரம்பிப்பார்கள்.

அதன் பின்னர், அவர்கள் ஆரம்பித்த பத்திரிகைகள் எதிர்பார்த்தபடி விற்பனை ஆகாது. விளம்பரம் இல்லாததால்தான் விற்பனை எதிர்பார்த்தபடி இல்லை என்று அவர்களாகவே கணித்துக் கொண்டு கையிலுள்ள சிறுமுதலை விளம்பரம் செய்வதிலும் செலவழிப்பார்கள். அப்புறம் தமிழகம் முழுவதிலும் விற்பனையாளர்கள் பரவலாக இல்லாததால்தான் விற்பனை நாம் நினைத்தபடி இல்லாமல் போய்விட்டது என்று தங்களுக்குத் தாங்களே ஒரு சமாதானம் சொல்லிக்கொள்வார்கள். நண்பர்கள் வருவார்கள்'நீங்கள் சொல்கிற எல்லாக் காரணங்களும் சரிதான்; அது தவிர இன்னொரு பெரிய காரணமும் இருக்கிறது. பத்திரிகை அட்டையிலிருந்து கடைசிப்பக்கம் வரையில் விஷயம் தெரிந்த – அறிவாளிகள் படித்துப் பாராட்டும் விதத்தில்தான் இருக்கிறது. எல்லாமே கனமான விஷயங்களாக இருக்கின்றன. பத்திரிகை விற்பனை கூடவேண்டுமானால் அது சகல ஜனங்களையும் சென்றடைவதாக இருக்கவேண்டும். எல்லாத்தரப்பு மக்களையும் கவர்வதாக சுவாரஸ்யம் மிகுந்ததாக இருக்கவேண்டும்' என்பார்கள். அதுவும் சரிதானே என்று பத்திரிகையை வெகு ஜனரசனைக்கு ஏற்றவாறு மாற்றுவார் பத்திரிகையை ஆரம்பித்த எழுத்தாளர்.

அதன் பிறகும் விற்பனை என்னவோ – கூடாது என்பதோடு மேலும்குறையவும் ஆரம்பிக்கும். ஆலோசனைகளை அற்புதமாக வழங்கும் கெட்டிக்கார நண்பர்கள். அதற்கும் ஒரு சமாதானம்

சொல்வார்கள். ஏற்கனவே இலட்சக்கணக்கில் விற்பனையாகும் பத்திரிகைகள் ஐம்பது அறுபது வருடங்களாக வந்து கொண்டிருப்பவை. ஐம்பது வருடங்களில் படிப்படியாக வளர்ந்து இரண்டு இலட்சம் பிரதிகள் விற்பனை என்ற சாதனையை அடைந்துள்ளன. நம்முடையது நான்கு மாதப் பத்திரிகைதானே!'' என்பார்கள்.

மொத்தத்தில் – முதலில் விற்பனை இல்லை என்ற ஒரு குறையோடு மட்டுமிருந்த அந்தப் பத்திரிகை கடைசியில் மூட வேண்டிய நிலை வரும் போது விஷய கனத்தையும் இழந்து வெகுஜனரசனை என்ற பெயரில் தனது தரத்தையும் இழந்ததாகிவிடும். அப்போதும் நண்பர்கள் –காரணம் சொல்வதில் சளைக்க மாட்டார்கள். ''ஆரம்பித்தபோது நன்றாகவே இருந்தது. போகப்போக ஆரம்பத்தில் இருந்த இலட்சியப்பார்வை – இலக்கியத்தரம் இதழுக்கு இதழ் குறைந்து விட்டது. அதனால் இது என்ன கேரக்டர் உள்ள பத்திரிகை என்ற அடையாளமே வாசகர்களுக்குப் பிடிபடாமல் போய்விட்டது. அதுதான் காரணம்'' என்பார்கள்.

பல்வேறு ஏடுகளில் பணிபுரிந்து – சம காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட எழுத்தாளர்களின் சொந்தப்பத்திரிகைகள் ஏன் நிலைக்கவில்லை; நீடிக்கவில்லை என்பதை எல்லாம் சி.சு. செல்லப்பா அனுபவப்பூர்வமாக தெளிவாக அறிந்து வைத்திருப்பார் போலிருக்கிறது.

அவர் சொந்தத்தில் ஆரம்பித்த 'எழுத்து' மாத இதழின் முதல் இதழிலேயே இரண்டு நிபந்தனைகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். அவை என்ன?

''எழுத்து இரண்டு நிபந்தனைகளுடன் வெளிவருகிறது 2000 பிரதிகளுக்குமேல் அச்சாகாது. நேரில் சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குத்தான் கிடைக்கும் என்ற அறிவிப்புகள் நூதனமானவைதான்.

வாசகர்களின் தொகையைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக அல்ல; இலக்கிய வாசகர்களைத் தேடிப்பிடிப்பதுதான் 'எழுத்து'க்கு நோக்கம்.

ஏனெனில் -'பிடித்தமானது' என்ற சாக்கில் பொது வாசகர்களைத் திருப்திப்படுத்துவதற்கான வழிகளை 'எழுத்து' கையாளும் உத்தேசம் இல்லை.

'' 'எழுத்து'' எனக்கு பிடித்திருக்கிறது'' என்று சொல்லக்கூடிய வாசகர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அவர்களைத் தேடும் 'எழுத்து'.

எழுத்து தன் முன் கொண்டுள்ள பார்வையைப் பற்றிச் சொல்லிவிட்டது. இலக்கிய வாசகர்களின் ஆதரவை எதிர்பார்த்து ஒரு துணிச்சலான முயற்சியாக வரும் 'எழுத்து'க்கு தமிழகம் தன் அரவணைப்பைத் தந்து, அது ஏட்டின் பின் ஏடாக அடுக்கு ஏற வகைசெய்யும் என்ற நம்பிக்கையுடன் இந்த முதல் ஏடு உங்கள் முன் வைக்கப்படுகிறது.''

– என்று குறிப்பிட்டிருக்கிறார் செல்லப்பா.

செல்லப்பாவோடு நன்கு பழகி, அவரை முழுமையாக அறிந்தவர்களுக்கெல்லாம் தெரியும்; அவர் எதிலும் கறாராகவும் கண்டிப்பாகவும் இருப்பார். எதிரே இருப்பவர் என்ன நினைப்பார்; அவருக்கு நாம்சொல்லும் கருத்து பிடிக்குமோ பிடிக்காதோ என்றெல்லாம்யோசிக்காமல் தமக்குச் சரி என்று பட்டதை தயக்கம் சிறிதுமின்றி – பளிச்சென்று அழுத்தம் திருத்தமாகப் பேசுவார்.

அவரது தயவு தாட்சண்யத்திற்கு இடமில்லாத இந்தப் போக்குத்தான். அவரது 'எழுத்து' மீது எல்லையற்ற மதிப்புக்கொண்ட பலரையும் – அவரிடம் நெருக்கம் கொள்ள முடியாதபடிக்கு – எட்டியே நிற்க வைத்தது.

எழுத்து முதல் இதழின் ஆசிரிய உரையிலும் செல்லப்பாவின் இந்தத் தனித்துவமும் – கறார் நிலையும் ஆரம்பம் முதல் கடைசி வரையில் பிரதிபலிக்கின்றன.

ஏற்கனவே வந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளுக்கும் 'எழுத்து'க்கும் என்ன வித்தியாசம்?

''மக்களுக்கு பிடிக்கிறதை நாங்கள்கொடுக்கிறோம் என்ற குரல் இலக்கிய உலகத்திலும் அரித்துக்கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில்–

பழக்க முறையாகி விட்ட ரீதியிலேயே கருத்துக்களையும் அலுக்கும்படியாக, ஒரேவிதமாகக் கொடுக்கும் ஒரு மனப்பாங்கு பரவியுள்ள நிலையில் –

மக்களுக்கு இன்னின்னவைகளைக் கொடுத்துப் பிடிக்கச் செய்யவேண்டும். புதுப்புதுவிதமாக, நோக்கும் பார்வையும் கொண்டு வெளியிட்டுச்சொல்ல வேண்டும் என்ற ஒரு நினைப்பு – ஒரு மொழி இலக்கியத்துக்கு அவசியமானது. அந்த நினைப்புடன் எழுத்து ஏடுகள் பெருகும்'' – என்கிறார். இந்த நோக்கத்தை இன்னும் அழுத்தமாகச்சொல்ல விரும்புகிறவர்போல !

'சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்து, புதுத்தடம் போட்டுக்கொண்டு இலக்கியத்தின் எல்லைகளை சற்று விரிவடையச் செய்ய முயன்றவர்களைத்தான் சோதனைக்காரர்கள் என்று சொல்லலாம்'' என்று க.நா.சுதன் 'சிறந்த தமிழ்ச்சிறுகதைகள்' என்ற கட்டுரையிலே கூறியுள்ளது அப்படியே 'எழுத்து' தன் குறிக்கோளாகக்கொண்டுள்ள லக்ஷியமாகும். சோதனை செய்து பார்ப்பவர்களால்தான் இலக்கியமே வளர்ந்திருக்கிறது. தமிழ் இலக்கியத்துக்கு முதல் நாவலைத் தந்த வேதநாயகம்பிள்ளையும், சிறுகதையைத் தந்த வ.வே. சு அய்யரும் , புதுக்கவிதை தந்த பாரதியும், வசன நடையில் புதுமை காட்டிய வ.ராவும் இந்த வழிவந்த மற்ற சிலரும் சோதனைக்காரர்கள். இன்றைய இலக்கியம் பற்றிப் பேசும்போது இவர்களைத்தான் முதலில் குறிப்பிடுகிறோம். சுயமாக, தனித்தன்மையுடன் கலை உருவம் படைத்தவர்களை, அதே சுவடில் பின்பற்றி 'காப்பி'யடித்து சிருஷ்டிப்பவர்களை ரசிக உள்ளம் அவ்வளவாக நீண்ட நாளைக்குத் தன் நினைவில் இருத்திக் கொள்வதில்லை. ஆகவே இலக்கிய அபிப்பிராயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்களுக்கு களமாக 'எழுத்து' அமைவது போலவே, இலக்கியத்தரமான எத்தகைய புது சோதனைக்கும் 'எழுத்து' இடம் தரும்'' – என்று விளக்கமாக எழுதியிருக்கிறார்.

செல்லப்பா குறிப்பிட்டிருப்பதுபோல – அவரது 'எழுத்து' முதல் இதழ் வித்தியாசமானதாக – 'எழுத்து' எனக்குப் பிடிக்கிறது என்று அந்த முதல் இதழைப் படித்தவர்கள் பாராட்டும்படியாக அமைந்திருக்கிறதா என்றால் 'ஆம்' என்று செல்லப்பா பாணியிலேயே தயக்கமில்லாமல் பதிலளித்து விடலாம்.

1959ஆம் வருடம் ஜனவரி மாதம்தொடங்கப்பட்ட 'எழுத்து' தொடர்ந்து பத்து ஆண்டுகள் வெளிவந்திருக்கிறது. அத்தனை இதழ்களைப் பற்றியும் விமர்சிக்க பக்கங்கள் போதாது என்பதால் முதல் இதழை மட்டும் சற்று விரிவாகவே பரிசீலித்துப் பார்க்கலாம்.

முதல் இதழின் அட்டையிலேயே 'எழுத்து வளர' என்ற தலைப்பில் சி.சு. செல்லப்பாவின் ஆசிரிய உரை – ஆரம்பமாகிவிடுகிறது. பொருளடக்கமும் அட்டைப் பக்கத்திலேயே அரைப்பக்க அளவில் வெளியிடப்பட்டிருக்கிறது. அட்டைப்படம் என்று ஒரு பக்கத்தை வீணடிக்க அப்போது செல்லப்பா விரும்பவில்லை போலும்.

செல்லப்பாவின் ஆசிரிய உரைக்கு அருகில் முதல்செய்தி விமர்சனக் கட்டுரையாக க.நா.சு எழுதிய சாகித்திய அகாடமி தமிழ் பரிசு என்ற கட்டுரை இடம் பெற்றிருக்கிறது.

ஆண்டுதோறும் சாகித்ய அகாடமி பரிசு பெற்ற எழுத்தாளர் யார்? அவரது படைப்பு எது என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டதுமே –அந்த எழுத்தாளரைப் பிடிக்காதவர்கள் அவரைத் தாக்கு தாக்கென்று தாக்குவதும் அவரது படைப்பில் மதிப்புக் கொண்டவர்கள் பாராட்டுவதும் – இப்போதும் வருடந் தோறும் நடைபெற்று வரும் வாடிக்கையாக இருந்துவருகிறது.

சாகித்ய அகாடமி தொடங்கி மூன்றாவது முறையாக ராஜாஜி எழுதிய சக்ரவர்த்தித்திருமகன் – இராமாயண நூலுக்குப் பரிசு அறிவித்திருந்தபோது 'எழுத்து' முதல் இதழ் வந்தது. அதனால் க.நா.சு. அதையே 'அழைப்பு அபிப்பிராயம்' என்ற பகுதியில் விமர்சித்திருக்கிறார்.

"வளரும் தமிழ் இலக்கியத்துக்கும் டெல்லி சாகித்திய அகாடமிக்கும் ஒருவித தொடர்புமேயில்லை என்பது அவர்கள் இதுவரை அறிவித்திருக்கிற மூன்று பரிசுகளிலிருந்தும் ஓரளவு தெளிவாகவே தெரிகிறது. சாகித்ய அகாடமியார் இது வரை தமிழுக்கு மூன்று பரிசுகளை அளித்திருக்கிறார்கள். பரிசு பெற்ற இந்த மூன்று நூல்களுமே இலக்கிய ரீதியில் வளரும் தமிழ்இலக்கியத்தில் நல்ல ஸ்தானம் பெறக்கூடியவை அல்ல. சாகித்ய அகாடமியார் பரிசளிப்பது சாகித்தியத்துக்காகத்தானே இருக்கவேண்டும்? அதற்குப்பதில் அவர்கள் ஆசிரியர்களின் ஸ்தானத்தை மட்டுமே மனசில் கொண்டு

பரிசளித்து வந்திருப்பதாகத் தோன்றுகிறது. பிற இந்திய மொழிகளில் இந்த மூன்று நூல்களையும் மொழிபெயர்த்து தந்தால் 'இன்றைய தமிழில் நல்ல இலக்கியம் எதுவுமே இல்லையோ' என்று பிறர் நினைக்க இடம் இருக்கிறது.

இந்த வருஷப் பரிசுப்பட்டியலைப் பார்க்கும்போது மற்ற மொழிகளில் இலக்கிய முயற்சிகளுக்குப் பரிசு அளித்திருக்கிறார்கள் என்றும் தமிழுக்கு மட்டுமே இது நேர்ந்திருக்கிறது என்பதும் தெரிகிறது. அந்த நூல்களின் தராதரங்கள் நமக்குத் தெரியாது. ஆனால் சிறுகதை நாவல் நாடகம் முதலிய நூல்களுக்குப் பரிசளித் திருக்கிறார்கள். தமிழ் நூல் மட்டுமே இராமாயணத்தைத் திருப்பிச் சொல்லுகிற நூலாக, இலக்கிய சிருஷ்டி என்று சொல்ல முடியாத வகையிலே அமைந்திருக்கிறது. இப்படிப் பரிசளித்திருப்பது இலக்கிய வளர்ச்சிக்கு உதவியது ஆகாது. இந்தப் பரிசுகள் எப்படி அளிக்கப்படுகின்றன என்பது மர்மமாகவே இருக்கிறது. இடையில் இரண்டு வருஷங்கள் தமிழுக்குப் பரிசு தாராதிருந்துவிட்டு மூன்றாவது வருஷம் இந்நூலைத்தேர்ந்து எடுத்தது சரியல்ல என்றே சொல்லவேண்டும். தமிழ் இலக்கியத்தில் இன்றைய வளர்ச்சிக்கு அடிகோலித்தந்த காலஞ்சென்ற புதுமைப்பித்தன், வையாபுரிப் பிள்ளை இவர்களுக்கோ அல்லது இன்று இலக்கிய வளர்ச்சியை சிறுகதை நாடகம், நாவல், விமர்சனம், சரித்திரம் முதலிய துறைகளில் சாத்தியமாக்கும் ந. பிச்சமூர்த்தி, சிதம்பரசுப்ரமணியன், லா.சா.ராமாம்ருதம், ஆர். ஷண்முக சுந்தரம், கு. அழகிரிசாமி, சங்கர்ராம் இவர்களில் யாருக்காவது பரிசை அளிக்கலாமே.

சர்வ ஜனரஞ்சகமாக உள்ள பத்திரிகை எழுத்துக்குத்தான் சாகித்ய அகாடமியின் தமிழ்ப்பரிசு அளிக்கப்படும் என்றுதான் நாம் நம்பவேண்டுமா? இந்தக்குறைபாட்டுக்குக் காரணம் சாகித்ய அகாடமித் தமிழ்க்கமிட்டியில் பத்திரிக்கைகாரர்களும் பேராசிரியர்களும் மட்டுமே இடம் பெற்றிருப்பதுதான் என்று சொல்லவேண்டும்'' – என்பதாக எழுதியிருக்கிறார் க.நா.சு.

க.நா.சு. வின் கட்டுரையை இன்று படிக்கும் எவருக்கும் 'சாகித்ய அகாடமி பரிசு' என்பது இன்றுமட்டுமல்ல; அன்றும், என்றும் பெரும்பாலும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கின்றது என்பது தெளிவாகும்!

க.நா.சு .வின் கட்டுரையைத் தொடர்ந்து - ந. பிச்சமூர்த்தியின் 'பெட்டிக்கடை நாரணன்' என்ற கவிதை வெளியிடப்பட்டிருக்கிறது. கவிஞர் பிச்சமூர்த்தியைப் பற்றி ஆசிரியர் எழுதிய அறிமுகக் குறிப்பு ஒன்றும் - கவிதையோடு சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது.

''சிறுகதைகள், 'பிக்ஷு' என்ற புனைபெயரில் கவிதைகள்'' 'ரேவதி' என்ற புனைபெயரில் இலக்கியக் கட்டுரைகள் - சென்ற கால் நூற்றாண்டுக் காலமாக எழுதிவரும், முன்வரிசைப் படைப்பாளிகளில் ஒருவரான பிச்சமூர்த்தி தஞ்சை ஜில்லாவில் 1900-இல் கும்பகோணத்தில் பிறந்தவர். 'பதினெட்டாம் பெருக்கு', 'மோஹினி', 'ஜம்பரும் வேஷ்டியும்' என்ற மூன்று சிறுகதைத் தொகுதிகளும் 'காளி' என்ற நாடகமும் அவருடையவை வெளியாகியிருக்கின்றன. 'மாயமான்' என்ற நாடகமும் 'வசன கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பும் வர இருக்கிறது. தற்போது சென்னையில் 'நவ இந்தியா' தினசரியில் உதவி ஆசிரியராக இருக்கிறார்''.

- என்பது பிச்சமூர்த்தி பற்றிய குறிப்பாகும். இந்த இதழில் எழுதியுள்ள எல்லோருடைய எழுத்துக்களுக்கும் அடியில் – எழுதியவர்களைப் பற்றிய அறிமுகங்களை இதுபோல சுருக்கமாக வெளியிட்டிருக்கிறார் சி.சு.செ.!

இன்றைய தமிழ் இலக்கிய விமர்சன தோரணை என்று செல்லப்பா எழுதிய கட்டுரையிலும்

''இந்தப் பத்திரிகையின் பொறுப்பு ஏற்றிருக்கும் சி.சு.செல்லப்பா மதுரை ஜில்லா வத்தலகுண்டில் 1912இல் பிறந்தவர். 'ஸரஸாவின் பொம்மை' 'மணல் வீடு' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகள் அவருடையவை வெளியாகி இருக்கின்றன''

– என்ற அறிமுகக் குறிப்பை தன்னைப் பற்றியும் வெளியிட்டிருகிறார்.

'எழுத்து' வெளிவந்த கால கட்டத்தில் – அன்றைய இலக்கிய உலகின் ஜாம்பவான்கள் என்று போற்றப்பட்ட தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள் – கவிதைகள் – சிறுகதை – புத்தக விமர்சனக்கட்டுரை ஆகியவை இந்த முதல் இதழில் வெளி வந்திருப்பது –வாசகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதோடு

பிரமிப்பிலும் ஆழ்த்துவதாக அமைந்திருக்கிறது. காரணம் அன்று – பெரிய பத்திரிகைகள் – அதாவது ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், அமுதசுரபி, சுதேசமித்திரன் வாரப்பதிப்பு போன்றவை வெளியிட்டு வந்த தீபாவளி மலர்களில்தான் இத்தனை பெரிய எழுத்தாளர்களின் அத்தனை படைப்புகளும் இடம் பெற்றிருக்கும்.

32 பக்கங்களில் – ஐம்பது பைசா விலையில் –வெளிவந்த 'எழுத்து' முதல் இதழில் 'மயன்' என்ற புனைபெயரில் க.நா.சு எழுதிய கவிதை ஒன்றும் அவரே ஆங்கிலக் கவி ஹல்மே எழுதியதைப் பின்பற்றி எழுதிய கவிதை ஒன்றும், 'சிட்டி', 'சாலிவாஹனன்' ஆகியோரின் கவிதைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

சிறந்த தமிழ்ச் சிறுகதைகள் – ஒரு தொகுப்புக்கான சில குறிப்புகள் என்ற தலைப்பில் க.நா.சு வின் விரிவான விமர்சனக் கட்டுரையும் – 'பாரதிக்குப்பின்' என்ற பொதுத்தலைப்பின் கீழ் முதலாவதாக அவர் எழுதிய 'டாக்டர் சாமிநாதையர்' என்ற வாழ்க்கை விமர்சனக்கட்டுரையும் இடம் பெற்றிருப்பதோடு சிட்டி – தமது இயற்பெயரிலேயே(பெ.கோ. சுந்தரராஜன்) எழுதிய 'தாழைபூத்தது' என்ற சிறுகதையும் பிரசுரமாகியுள்ளது.

சி.சு.செல்லப்பா 'இன்றைய தமிழ் இலக்கிய விமர்சன தோரணை' – 'கமலாம்பாள் சரித்திரம் – பி.ஆர். ராஜம்அய்யர்நாவல்' என்கிற இரண்டு கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

ந. சிதம்பரசுப்ரமண்யனின் 'விண்ணும் மண்ணும்' கட்டுரைத் தொடர் இந்த முதல் இதழில் ஆரம்பமாகி இருக்கிறது.

'புஸ்தகங்கள்' என்று தலைப்பிட்டபகுதியில் முதல் புத்தக விமர்சனக்கட்டுரையை தி.ஜானகிராமன் எழுதியிருக்கிறார். எம். வி. வெங்கட்ராம் எழுதிய 'இருட்டு' 'உயிரின் யாத்திரை' என்கிற இரண்டு புத்தகங்களைப்பற்றி இரண்டு பக்கங்கள் விரிவாக விமர்சித்திருக்கிறார். தி.ஜா.

''அட்டை பளபளவென்று கண்ணைப் பறிக்கிறது''. ''ஆசிரியரே எழுதிய கவிதைகளின் தொகுப்பு'' ''நறுக் நறுக்கென்று சுருக்கமாக எழுதப்பட்ட கருக்கான தகவல்கள்'' என்று ஒற்றை

வரியில் புத்தக விமர்சனங்கள் எழுதப்படும் இந்தக் காலத்தோடு ஒப்பிட்டால் தி.ஜா. நூலாசியர் பற்றியும் அவரது படைப்புகள் பற்றியும் எழுதியிருக்கும் விமர்சனத்தைப் படிக்கும் வாசகர்கள் அந்த நூல்களை தேடிப்பிடித்துப் படிக்கும் அளவுக்கு சுவையும் பயனும் மிக்கதாக புத்தக விமர்சனப் பகுதி அமைந்திருப்பதைக் காணலாம்.

32 பக்கங்களில் இத்தனை பேரின் கருத்தாழமும் கலைநயமும் மிளிரும் படைப்புகளை வரிவிடாமல்படித்து முடிக்கும் வாசகர்கள் அனைவரும் ''எழுத்து'' எனக்குப் பிடித்திருக்கிறது' என்று வாய்விட்டுப் பாராட்டும் அளவுக்கு வந்துள்ள முதல் இதழின்–20ஆம் பக்கத்தில் சி.சு.செல்லப்பா வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

''இந்த எழுத்து ஏடு உங்களுக்குத் திருப்தி அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்குத் தெரிந்த இலக்கிய வாசகர்களுக்கு சிபாரிசு செய்யுங்கள். அவர்கள் முகவரியை எனக்கு எழுதி அனுப்புங்கள் அவர்களுக்கு எழுதுகிறேன். இது பெரிய ஒத்தாசை'' – என்பதே அந்த வேண்டுகோள்.

2

'எழுத்து' இரண்டாவது இதழின் சிறப்பம்சம் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியாகும். 'அரங்கம்' என்ற தலைப்பிட்டு வாசகர்களின் கடிதங்களை வெளியிட்டிருக்கிறார் செல்லப்பா.

இந்தப்பகுதியை வெறும் பாராட்டு அல்லது தாக்குதல் கடிதங்களை வெளியிடும் பகுதியாகக் கருத வேண்டாம் என்று வாசகர்களுக்கு உணர்த்துவதுபோல 'அரங்கம்' என்ற தலைப்புக்குக் கீழேயே 'இலக்கியத் தரமான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் களம்' என்று அரங்கத்திற்கு ஒரு விளக்கத்தையும் அளித்திருக்கிறார்.

இன்றும் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதி வந்து கொண்டு தானிருக்கின்றன. ''வாவ்'' ''பிரமாதம்'' 'தோலுரித்துக்காட்டிவிட்டார்'' 'ஜொள்ளுவிடச்செய்து விட்டீரே!' 'கீப்இட் அப்' போன்ற பாணியிலான கடிதங்களாகவே வெளியிடப்படுகின்றன. எல்லாமே நாலடியார்போல நாலு வாக்கியக் கடிதங்கள்தான். எல்லாக்கடிதங்களுமே வாரா வாரம் எல்லா ஏடுகளிலும் 'கீப் இட்அப்' என்று அந்தந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் முதுகில் ஒரு கார்டு மூலமே ஷொட்டுக்கொடுக்கும் கடிதங்களாகவே இருப்பதையும் – இப்படி எல்லா ஏடுகளிலும் கடிதம் மூலம்பொன்னாடை – பூமாலை அணிவிக்கவென்றே தமிழகத்தில் சில வாசகர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் அடையாளம் காட்டும் கடிதங்களாகவே இவை அமைந்திருக்கின்றன.

செல்லப்பாவின் முதல் இதழைப் படித்துவிட்டுக் கடிதம் எழுதிய வாசகர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல; அவர்கள் எழுத்து முதல் இதழில் வெளிவந்த கட்டுரைகள் பற்றி 'ஷொட்டு'க் கொடுத்து மிருக்கிறார்கள். குட்டுவைத்தும் குறைகூறி இருக்கிறார்கள். குற்றஞ்சாட்டியும் இருக்கிறார்கள். செல்லப்பாவும் நிறை – குறைகள் ஆகிய இரண்டையும் சொல்லி – ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் கூறி இருப்பவர்களின் கடிதங்களை மட்டுமே வெளியிட்டிருக்கிறார்.

கடிதங்கள் எல்லாமே நீளமானவை; ஒவ்வொன்றையும் ஒரு விமர்சனக் கட்டுரையாகவே பாவிக்கலாம். எழுதியவர்களும் அல்ப சொல்பமானவர்களல்ல. எல்லோருமே புகழ்பெற்ற எழுத்தாளப் பெருமக்கள். முதல் இதழில் கடிதம் எழுதியிருப்பவர்கள் சிட்டி. வி.ரா.ரா. சாமினாத ஆத்ரேயன், புதுவையிலிருந்து 'தமிழன்'. ஏறத்தாழ நான்கு பக்கங்களுக்கு இந்த நான்கு வாசகர்களின் கடிதங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

சாகித்ய அகாடமி ராஜாஜியின் 'சக்ரவர்த்தித்திருமகன்' என்கிற இராமாயண நூலுக்குப் பரிசு வழங்கியது சரியல்ல என்று முதல் இத்ழில் க.நா.சு. எழுதிய கருத்துக்கு மயிலையிலிருந்து வி.ரா.ரா. எழுதிய பதில் இங்கு குறிப்பிடத்தக்கது. காரணம் இன்று சாகித்ய அகாடமி பரிசு விவரம் அறிவிக்கப்பட்டதும் எப்படி –பரிசு பெற்றவர் தங்களுக்குப் பிடிக்காத எழுத்தாளர் என்றால் அவரைத் தாக்கித் துளைத்து ''அவருக்கு என்ன தெரியும்'' என்று விமர்சிப்பதும் – பிடித்தவர் என்றால் '' இந்தப்பரிசே இவரால் பெருமை அடைந்தது'' என்று புகழுவதுமான ஒரு போக்கு நிலவுகிறதோ. இது அந்த 50களிலும் இருந்திருக்கிறது என்பதை ராஜாஜியின் நூலை ஆதரித்து வி.ரா.ரா. எழுதிய கடிதம் நிரூபித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

''பரிசு பெற்ற புத்தகம் ''சக்கரவர்த்தி திருமகன்'' அதன் ஆசிரியர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்; பரிசு கொடுத்தவர்கள் நிர்வாகத்துறையைச் சார்ந்த ஒரு ஸ்தாபனத்தில் இந்த ஸ்தாபனத்தால் பத்திரிகைக்காரர்களும் பேராசிரியர்களும் தவிர இலக்கிய கர்த்தாக்களும் இருக்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அந்தக் கர்த்தாக்களின் நூல்களுக்கு யார் பரிசு கொடுப்பது? தாங்களே கொடுத்துக்கொள்வதா? இராமாயணத்தை திருப்பிச் சொன்னதால் மட்டும் ஒருநூலின் தரம் குறைந்து விடுமென்றால் கம்பனுக்குத் தமிழ் இலக்கியத்தில் இடம் கிடையாது.

இராமாயணத்தைத் தவிர வேறு எதைப்பற்றி எழுதினாலும் பரிசு கிடையாது என்று அகாடமியார் சொல்லும்வரை பொறுத்திருப்போமே! அடுத்தவருஷம் 'வியாசர்விருந்து'க்குத்தான் கொடுப்பார்கள் என்பது என்ன நிச்சயம்?

பொருள் இருக்கட்டும்; ஆசிரியர் என்ற அடிப்படையில் சி.ராஜகோபாலாச்சாரியாருக்கு பரிசு கொடுத்ததால் அகாடாமிக்குத் தான் பெருமை. இதைத் தடுக்க எழுத்தாளனுக்கு என்ன உரிமை?

எழுத்தாளனுக்கு – சிருஷ்டி எழுத்தாளனுக்கு, 'இலக்கிய ரீதியில் வளரும் தமிழ் எழுத்தாளனுக்கு அகாடமி பரிசு கிடைத்தால் தான் பெருமையா? அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தானா க.நா.சு பட்டியலில் காணும் இலக்கியக் கலைஞர்கள்? அவர்களுக்குப் பரிசுக் கொடுப்பதில் அகாடமிக்குக் கூடத்தயக்கம் இருக்காது என்று நம்பு கிறேன். அந்தச் சமயத்தில் க.நா.சு குறிப்பிட்ட ஆறு பேர்களுடன் அவருடைய சிறுகதைப்பட்டியலில் மட்டும் இடம்பெறும் 'மௌனி'யின் இலக்கிய சேவைக்கும் அகாடமியின் அங்கீகாரம் கிடைக்கட்டுமே!

– என்று எழுதியிருக்கிறார் வி.ரா.ரா!

இந்தக்கடிதம் இன்றுபோலவே அன்றும் பிடித்தவரைப் பெருமைப்படுத்துவது என்பதோடு நில்லாமல் பிடிக்காதவர் களையும் அதே சாக்கில் ஒரு தாக்குத் தாக்கி விடுவது என்கிற போக்கு, அன்றே இருந்திருக்கிறது என்பதைப் பிரதி பலிப்பதாக இருக்கிறது!

'எழுத்து' ஏடு – கடிதங்கள் பகுதியில் இன்னொரு புதுமையைச் செய்திருப்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. பொதுவாக அன்றும் – இன்றும் வாசகர் கடிதங்கள் பகுதியில் பத்திரிகையின் ஆசிரியர்கள் – கடிதம் எதையும் எழுதுவது கிடையாது. தவறான தகவலை வாசகர்கள் யாராவது சுட்டிக் காட்டினால் நறுக்குத்தெரிந்தாற்போல – நாலுவரிகள் வருத்தம் தெரிவிக்கப்பட்டிருக்கும். அதில் ஆசிரியர் என்று முழுவதுமாக எழுதினால் அதுவே நீளமாகிவிடும் என்பதாலோ என்னவோ (ஆ.ர்) என்று அதையும் கூட வருத்தத்துக்குக்கீழே சுருக்கியே எழுதுவார்கள்.

செல்லப்பா இந்த விஷயத்திலும் ஒரு புதுமையைப் படைத்துக்காட்டி இருக்கிறார். முதல் இதழில் க.நா.சு எழுதிய சிறந்த தமிழ்ச்சிறுகதைகள் என்ற கட்டுரையில் கூறப்பட்டிருந்த கருத்துக்களை மறுத்து தஞ்சாவூரில் இருந்து சாமினாத ஆத்ரேயன் எழுதிய கடிதத்தை வெளியிட்ட செல்லப்பா – அதனைத் தொடர்ந்து க.நா.சுவின் இந்தக்கட்டுரை பற்றிய தமது கருத்து என்ன என்பதையும்

விளக்கி ஏறத்தாழ இரண்டு பக்கம் கொண்ட மிக நீண்ட கடிதம் அல்லது கட்டுரை ஒன்றினை ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியிலேயே எழுதியிருக்கிறார்.

2000–மாவது ஆண்டில் தமிழ் இலக்கிய உலகில் ஒரு சர்ச்சை எழுத்தாளர்கள் மத்தியில் பலமாக உருவாகியிருந்தது. சிறந்த சிறுகதைகளைத் தொகுத்துத் தருபவர் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்ன என்பது பற்றிய சர்ச்சையே அது. சாகித்ய அகாடமி சார்பாகத் தொகுக்கப்பட்ட தமிழ்ச் சிறுகதைகள் பேரால் நடந்த அந்தச் சர்ச்சையில் சுவை – பயன் ஆகியவைகளை விட அதிகமாக சூடும் இருந்தது.

சிறந்த தமிழ்ச் சிறுகதைகள் என்பதாக எழுத்து முதல் இதழில் க.நா.சு வெளியிட்ட பெயர்ப்பட்டியல் ; அதற்கு பதிலளித்து சாமிநாத ஆத்ரேயன் எழுதிய கடிதம்; அதனையொட்டி ஆசிரியர் செல்லப்பாவே க.நா.சுவின் கட்டுரை மீதான தமது அபிப்பிராயங்களை வாசகர் கடிதப் பகுதியில் எழுதியிருப்பது ஆகியவற்றையெல்லாம் படிக்கும் எவருக்கும் –2000இல் மட்டும்தான் என்பதில்லை. 1950களிலேயே சிறந்த சிறுகதைகள் என்று பட்டியலிடுவது பற்றி பெரிய அளவில் சர்ச்சை இருந்திருக்கிறது என்பதை அறிய வியப்பு மேலிடாமல் இராது. சாமிநாத ஆத்ரேயன் எடுத்த எடுப்பிலேயே க.நா.சுவை கண்டனக் கணைகளால்துளைத் திருக்கிறார்.

''திட்டவட்டமாக அடம் பிடித்த பேச்சாக ஒன்றைச் சொல்லி நிறுத்திக்கொண்டு விடும் முறைக்கு எடுத்துக்காட்டாக எழுத்தின் முதல் இதழ் 'சிறந்த தமிழ்ச் சிறுகதைகள்' என்ற கட்டுரையைத் தாங்கி வருகிறது. அந்தக்கட்டுரையில் ஆரம்பம் முதல் ஒரே சித்தாந்தங்கள் தாம்.

அங்காடிக் கூடைக்காரன் நிறைகல்லுக்குபதிலாக காராக் கருணைத் துண்டுகளை – அரைவீசை – ஒரு வீசை என்று சாதிப்பது மட்டுமல்லாமல் – அதை நிறையாக வைத்துக்கொண்டு மற்றவைகளை நிறுக்க முயல்வது போல் இருக்கிறது அக்கட்டுரையின் தோரணை. ஒரு தீர்மானம்; அப்படித்தீர்மானம் செய்ய தன் மனத்தெளிவில் உள்ள அளவற்ற நம்பிக்கை இவை தான் தொனிக்கின்றன.

... அடுத்தாற் போல் ஓர் ஆசிரியப்பட்டியல் – ஆசிரியரின் திறன் என்ற அடிப்படையில் இலக்கிய விமர்சனம் கவைக்கு உதவாதது. தலைசிறந்த ஆசிரியர்களின் எல்லா சிருஷ்டிகளுமே ஒரே தரத்தைச் சேர்ந்ததல்ல. அனாமதேய ஆசிரியர்களின் ஒன்றிரண்டு மிக உயர்ந்ததாகவும் அமைந்திருக்கலாம். ஆகவே தனிப்பட்ட ஒரு இலக்கியத்தைப் பற்றிய சர்ச்சைதான் இலக்கிய விமர்சனம் ஆகும்.

... அழகான பொருள் அழகாக மட்டும் இருக்கலாமே தவிர உபயோகப்பட்டுவிடக்கூடாது. அப்படி உபயோகப் படுத்தி விட்டால் அதற்கு அழகு இருந்தாலும் அதைப் பொருளாக ஏற்றுக் கொள்ளக்கூடாது – என்ற ரீதியில் விதவைகளை உயர்த்துவதாகப் பயன்படக்கூடிய மாதவையாவின் கதைகளுக்கு மதிப்புத்தர மறுக்கிறார் க.நா.சு.

கல்கியின் 'கேதாரியின் தாயார்' என்ற சிறுகதைக்கு இலக்கிய மதிப்பில்லை. ஏனென்றால் அது விதவைக்கு இரக்கம் காட்டுகிறது. அதன் ஆசிரியர் பத்திரிக்கை கதை எழுத்தாளர் கும்பலைச் சேர்ந்தவர். தமிழில் உருவமென்பது கல்கிக்கு எட்டாத ஒன்று என்று சொல்வது சரியாகாது.

... பழைய மணிக்கொடி கோஷ்டியினர் சிலரும் பின்வந்த மூவரும் தவிர வேறு யாரும் சிறப்பான சிறுகதைகள் என்று சொல்லும்படி எதுவும் எழுதவில்லை என்பது கண்ணை மூடிக்கொண்ட கொக்கின் அபிப்பிராயம். இலக்கிய விமர்சனம் அல்ல''.

– என்று எழுதியிருக்கிறார் சாமிநாத ஆத்ரேயன்.

ஆத்ரேயனின் விமர்சனத்தையொட்டி – க.நா.சுவின் கட்டுரை பற்றிய தமது கருத்தை தயவு தயவுதாட்சண்யத்திற்கு இடமில்லாத வகையில் – அதே கடிதங்கள் பகுதியில் தாமும் ஒரு வாசகராக மாறி எழுதியிருக்கிறார் ஆசிரியர் செல்லப்பா.

''ஒரு தொகுப்பைத் தயாரிப்பதில், தான் கையாளும் முறையை, தன் உத்தேசத்திற்கு ஏற்ப வகுத்துக்கொள்ள தொகுப்பாசிரியனுக்கு உள்ள சுதந்திரம் அவருடையது. நாமும் அவர் எந்த நோக்குடன் தொகுத்திருக்கிறார் என்பதை, அவர் முகவுரையாகக்கூறும் விளக்கத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட இலக்கிய

வகை பற்றி அதன் வளர்ச்சி ரீதியாகவும் – குறிப்பிட்ட காலவரை வகுத்துக்கொண்டும், சிறந்த ஆசிரியர் பட்டியல் வழியாகவும் அல்லது சிறந்த கதைகள் தரம்பார்த்தும் ஏதாவதொரு விதமாகத் தொகுப்பு தயாரிக்கலாம்.

இந்த நான்கில் கடைசி வகையைப் பின்பற்றியது க.நா.சுவின் 'சிறந்த தமிழ்ச் சிறுகதைகள்' என்ற கட்டுரை. அதை முன் வைத்துக்கொண்டு பார்க்கும்போது, கட்டுரையில் சிறந்த தமிழ்சிறுகதைப்பட்டியல் ஒன்று கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல முடிகிறது.

மௌனி, பிச்சமூர்த்தி, க.நா.சு ஆகியோரது கதைகளை மட்டும் சொல்லி, அதிலும் மௌனி ஒருவரைப்பற்றித்தான் சிறந்த சிறுகதை ஆசிரியர் என்று குறிப்பிட்டுவிட்டு 'குறிப்பிட்ட ஆசிரியர்களுடைய எந்தெந்தக்கதைகளை சேர்த்துக்கொள்வது என்பது பற்றி...

...பின்னர் விமர்சனம் செய்து பார்க்கலாம் என்று கட்டுரையை முடித்துவிட்டார். ஒரு ஐந்தாறு பக்க ஆராய்ச்சிக்குப் பிறகும் கட்டுரையின் நோக்கம் நிறைவேறாமலேயே நின்றுவிட்டது.''

– க.நா.சுவின் கட்டுரை பற்றி இப்படித் தெளிவாக தமது கருத்தை வெளியிடும் செல்லப்பா. அதற்காக க.நா.சு விடம் சண்டைக்குப்போக முடியாது என்று எழுதி அதற்கான காரணத்தையும் விளக்கியிருக்கிறார்.

எனவே கட்டுரையின் தலைப்பு 'சிறந்த தமிழ்ச் சிறு கதாசிரியர்கள்' என்று இருந்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். ஏனெனில் முதலாவதாக ஒரு எட்டுப் பேர்களும், இரண்டாம் பக்ஷமாக இடம் பெறக்கூடிய ஒரு ஆறு பேர்களும், இவர்களோடேயே சேர்க்கக்கூடிய இரண்டு பெயர்களும் ஆக க.நா.சு. கருதும் பதினாறு சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் கிடைத்திருக்கிறது.

இந்தப்பட்டியல் தருவதும் ஒரு திறனாய்வுப் பார்வை யுள்ளவரது சுதந்திரத்துக்குள் வருவதாகும். எனவே 'இந்தப் பெயரை ஏன் விட்டாய்? அதை ஏன் சேர்த்தாய்' என்று ஒரு விமர்சகனிடம் வம்புக்குப் போவதில் விவேகம் கிடையாது. அதற்குப்பதில், சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் என்று என்ன ஆதாரங்களைக் கொண்டு அவர் முடிவுகட்டி இருக்கிறார் என்று அவரிடமிருந்து எதிர்பார்ப்பதும்,

கேட்பதும், அது தெரிந்து, பிறகு நாம் காட்டும் சரக்கை அவரது அளவுகோல்படி காட்டி விளக்கம் கேட்டு வாதுக்குப் போவதும் தான் முறையாக இருக்கும்.

– என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சரி; அப்படியானால் விமர்சனம் என்பது எப்படி இருக்கவேண்டும்? இந்தக் கேள்விக்கும் தமது கடிதக் கட்டுரையில் விளக்கம் அளித்திருக்கிறார் அவர்.

''க.நா.சு தன் கட்டுரையில் தான் கருதும் சிறந்த தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களைப் பொறுக்கியது சம்பந்தமாக போதிய ஆதாரங்கள் கொடுத்து விளக்கி இருக்கிறாரா என்று பார்க்கப் போனால் அதிலும் ஒரு நிறைவேற்றம் தெரியவில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர் குறிப்பிட்டிருப்பதில் குறிப்பிடத்தக்கது சோதனை என்ற விளக்கம். இலக்கியத்தில் சோதனை என்றால் என்ன என்று கேட்பது வேறு விஷயம். சோதனைக்காரர்கள் என்பதற்குக் க.நா.சு கொடுத்துள்ள விளக்கத்தை ஏற்றுக் கொண்டு நான் மேலே செல்கிறேன்.

க.நா.சு குறிப்பிட்ட இந்த பதினாறு பேர்களும் எவ்வித சோதனைகள் செய்திருக்கிறார்கள் என்பதை அவர் விளக்கியிருந்தால் அவர் பட்டியலை ஏற்க, மறுக்க உதவி இருக்கும். ஏற்பது மறுப்பது என்று சொல்லும்போது இலக்கிய ரீதியாக அவர்களுக்குத் தரக் கூடிய ஒரு ஸ்தானத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

'புதுமைப்பித்தன்' செய்த சோதனைகள் அதிகம். வெற்றி தோல்விகளும் அதிகம். 'கு.ப.ரா. செய்த சோதனைகள் குறைவு; அந்த அளவில் வெற்றி அதிகம்'. 'மௌனியின் கதைகளில் இதுவரை தமிழில் காணக் கிடைக்காத ஆழம் காணப்படுகிறது' 'பிச்சமூர்த்தி ஆரம்ப காலத்தில் கவிதை நிரம்பிய சோதனைகளை நடத்தினார். கி.ரா.வின் சிறு கதைகளை பாடப் புஸ்தகச் சிறுகதைகள் என்றே சொல்லலாம். (இன்னும் அடுக்கலாம்) ஆகிய வரிகள் விமர்சன ரீதியாக, குறிப்பிடப்பட்ட எந்தச் சிறுகதை ஆசிரியரையும் பற்றி எவ்வித ஆதாரத்துடனும் மதிப்பிட உதவக்கூடியதாக படவில்லை.

நண்பர் க.நா.சுவிடம் நான் அடிக்கடி நேரில் கூறிக்கொள்ளும் புகார் ஒன்று உண்டு. அதையே இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒரு குறிப்பிட்ட நூல் அல்லது ஆசிரியரைப்பற்றி பகுப்புமுறை (Analytical) திறனாய்வு செய்வதின் மூலம் இலக்கிய ரசனையை வளர்க்க முடியும் என்பது என் கருத்து. நாம் எத்தகைய ஆதாரங்களைக் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தோம் என்று வெளித் தெரிவதுதான் மற்றவரிடம் நம் கருத்தைத் தோற்ற வைப்பதற்கு உதவும். பொதுப்படையாகச் சொல்வதும், முடிவுகளை மட்டும் அழுத்தமாகச் சொல்வதுடன் நிறுத்திக் கொள்வதும் – இலக்கிய, சரித்திர ரீதியாகச் குறிப்பிடுவதற்குப் போதுமே தவிர– படைப்பாளர், படைப்பு பற்றி மதிப்பு அறிய உபயோகமாகச் கூடியதாகச் சொல்ல முடியாது. இன்றைய தமிழ் இலக்கிய ரசனை வளர பகுப்பு முறைத்திறனாய்வு வேண்டும்'' என்கிறார் செல்லப்பா.

க.நா.சு கட்டுரை மீதான சாமிநாத ஆத்ரேயனின் கண்டனம், செல்லப்பாவின் விளக்கம் ஆகிய பகுதிகளை நாம் விரிவாக இங்கே சுட்டிக் காட்டியதின் நோக்கம் – எழுத்து – கடைசி இதழ் வரையில் – செல்லப்பாவின் விமர்சனக் கொள்கை எப்படி இருந்தது என்கிற அடையாளம். எழுத்து இரண்டாவது இதழில் வெளிவந்த இந்தப் பகுதி மூலம் தெளிவாகத் தெரிகிறது என்பதால்தான்.

அன்றுமட்டுமல்ல; இன்றும் கூட–வெகுஜனங்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகையில் எழுதப்படும் சிறுகதைகள் நாவல்கள் எல்லாம் இலக்கியத் தரம் வாய்ந்தவை அல்ல என்று ஒரு கருத்து சிலரால் பரப்பப்பட்டு வருகிறது. க.நா.சு தான் இந்தக் கருத்தின் மூலகர்த்தா என்பது பலரது நம்பிக்கை. இந்தக் கருத்து பற்றியும் தமது அபிப்பிராயத்தை தயக்கமின்றி கூறுகின்றார் செல்லப்பா.

"....இன்னொன்று. பொதுவாக பத்திரிகையுகம், பத்திரிகை அவசரம், தேவை, நெருக்கடி என்று காரணம் கூறி, கதைகளின் தரம் பற்றி முடிவு கூறிவிட முடியாது. அந்தந்தக் காலத்தில் அந்தந்தப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட அவசரம் தேவை நெருக்கடி 'மணிக்கொடி' போன்ற சின்னப் பத்திரிகைளுக்கும் இருக்கத்தானே செய்திருக்கின்றது. இதற்கெல்லாம் உட்பட்டு வெளியானவைகள் தானே கா.நா.சு பட்டியல் ஆசிரியர்களுடையவையும்! ஏன்? 'இவை பல்வேறு சமயங்களில் பல்வேறு பத்திரிகைகளில் வெளியாவதற்காக எழுதப்பட்ட கதைகள்' என்று அவரேதன் 'ஆடரங்கு' கதைத் தொகுதி முகவுரையில் குறிப்பிட்டு பத்திரிகை ஆசிரியர்களுக்கும்,

அதிபர்களுக்கும் நன்றி செலுத்தி இருந்தாலும் (இலக்கியத்தில் ஒரு மைல்கல் என்று சொல்லவிரும்பவில்லை என்று அவர் சொல்லிக் கொண்டாலும்) முன் வரிசையில் கட்டாயமாக நான் சேர்க்கக்கூடிய ஒரு சிறுகதை ஆசிரியரது இலக்கியத்தரமான கதைகளாகத்தானே இருக்கின்றன. அகிலன், ரசவாதி போன்றோர் கதைகளை இலக்கிய ரீதியில் பார்த்து குணம், குறை எடுத்துக்காட்ட வேண்டியதுதான் விமர்சனப் பார்வையே ஒழிய சட்டடியாக பத்திரிகை ரகம் என்று புறக்கணிப்பது அல்ல. இப்படி இன்னும் பல கருத்துக்களை சொல்லிக் கொள்ளத் தோன்றுகிறது. அதற்கான சந்தர்ப்பங்கள் பின்னால் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு முடிக்கிறேன்.

பகுப்புமுறைத் திறனாய்வு மூலம் படைப்புகளையும் மதிப்பிட்டு ஓரளவுக்கு சாதித்த பிறகுதான் ஒருவர் தருகிற பட்டியலுக்கு அந்தஸ்து, மதிப்பு, நம்பிக்கை ஏற்படச் சாத்யமாகும் என்று எனக்குப்படுகிறது.'' என்கிறார் செல்லப்பா

எழுத்து இரண்டாவது இதழ் மூலம் வாசகர்கள் ஆசிரியருக்கு எழுதும் கடிதங்கள் – பகுதியையே முழுமையான ஆரோக்யமான விமர்சனத்திற்கான களமாக மாற்றி பிறஏடுகளுக்கும் இந்த 'ஆசிரியருக்குக் கடிதம்' பகுதியை எவ்வளவு பயனுள்ள பகுதியாகவும் கருத்துப் பரிமாற்றத்துக்கான கருவியாகவும் பயன்படுத்தலாம் என்று வழிகாட்டி இருக்கிற செல்லப்பா 'வாசகர் கடிதங்கள்' பகுதியில் தன்னையும் ஒரு வாசகராக இணைத்துகொண்டு – விமர்சனம் எப்படி இருக்க வேண்டும்? கதைகளின் தரத்தை அவை வெகு ஜன ஏடுகளில் வெளிவந்தவை என்பதை வைத்து நிர்ணயிக்கலாமா? என்பன போன்ற பிரச்சினைகளின் 'எழுத்து'வின் நிலைப்பாடு என்ன என்பதையும் அடையாளம் காட்டி இருக்கிறார்.

இந்த இதழில் – பிழை திருத்தம் பகுதியில் – 'தர்க்கம்' ஆசிரியர் பெயர் ஜெயகாந்தன் என்று இருக்கவேண்டும் என்று ஒரு திருத்தம் வெளியிடப்பட்டுயிருக்கிறது. 46ஆம் பக்கத்தில்உள்ள 'தர்க்கம்' சிறு கதையில் இது ஐயகாந்தன் என்று அச்சாகியிருக்கிறது. பத்திரிகை அச்சு வாகனம் ஏறும் கடைசி நிமிஷம் வரையில் செல்லப்பா பத்திரிகையில் தவறுகள் இல்லாமல் வெளிவரவேண்டும் என்று அக்கரை காட்டுபவராக இருந்திருக்கின்றார் என்பதையே இந்தத் திருத்தம் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

3

எழுத்து – மூன்றாவது இதழிலும் – செல்லப்பா ஒரு புதுமையை உருவாக்கிக் காட்டி இருக்கிறார். 'வாசகர் கடிதங்கள்' பகுதியில் எழுத்து – இரண்டாவது இதழில் வெளியிட்டிருந்த இரண்டு சிறுகதைகள் பற்றி – ஜடாதரன் என்ற எழுத்தாளர் எழுதிய கடிதத்துக்கு மதிப்பளித்து – பொறுப்புணர்ச்சியோடு – தலையங்கப் பகுதியில் விரிவாக விளக்கமளித்திருக்கிறார் செல்லப்பா. ஜடாதரன் – எழுத்து இரண்டாவது இதழில் பிரசுரமாகியிருந்த இரண்டு சிறுகதைகளைப் பற்றிக் குறைத்து எழுதியதோடல்லாமல் எழுத்து – விமர்சனம் பற்றிக் கூறுகிற கொள்கையடிப்படையில் உயர்ந்தவைகளை நட்சத்திரக் கதைகளை வெளியிடவேண்டாமா என்று கேள்வி எழுப்பி இருக்கிறார்.

ஜடாதரன் குறிப்பிடும் அந்த இரண்டு சிறுகதைகளில் ஒன்று ஜெயகாந்தன் எழுதிய 'தர்க்கம்'. மற்றொன்று பராங்குசம் எழுதிய 'வெற்றியின் பண்பு'.

இந்த இரண்டு கதைகள் பற்றி – ஜடாதரனின் புகாருக்குப் பதிலளிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு சிறுகதை சிறந்ததா, அல்லவா என்பதை நிர்ணயிக்க உதவும் அளவுகோல்கள் எவை என்பது பற்றிய தமது கருத்தை அழகாகக் கூறி இருக்கிறார் செல்லப்பா.

முதலில் ஜடாதரனின் கடிதத்தைப் பார்ப்போம்.

''ஜெயகாந்தன் அதிர்ஷ்டவசமாக நமக்கு கிடைத்திருக்கும் புதிய பெயர்களில் ஒன்று என்பதோடு கூட நம்பிக்கையூட்டவல்ல எழுத்துக்கும் பிரதிநிதியாக விளங்குகிறார் என்பதையும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் 'தர்க்கம்' என்ற அவருடைய சிறுகதை 'எழுத்து' பறைசாற்றிக் கொள்ளும் உயர்ந்த நோக்கங்களுக்கு ஈடுகொடுக்குமாறு அமையவில்லை.

ஜெயகாந்தனின் சிறந்த சிறுகதைகளை மற்ற பத்திரிகைகளில் தான் படிக்க வேண்டும் போலிருக்கிறது.

பராங்குசம் எழுதிய கதையை 'எழுத்து' எதற்காக வெளியிட்டிருக்கிறது என்றே புரியவில்லை. நீங்கள் மற்ற எழுத்தாளர்களின் சிறுகதைகளை சீர்தூக்கிப் பார்ப்பது அப்புறம் இருக்கட்டும் 'எழுத்து' பத்திரிகையில் வெளியிடும் சிறுகதைகள் எல்லா அம்சங்களிலும் உயர்ந்தவைகளாக இருக்கும் நட்சத்திரக் கதைகளாக இருக்க வேண்டாமா? ஊர் உலகத்துக்கெல்லாம் விமர்சனம் செய்து விட்டு உங்கள் சொந்த பத்திரிகையிலேயே 'வெற்றியின் பண்பு' போன்ற சாதாரண பத்திரிகைக் கதைகளை வெளியிட்டு பத்திரிகை ஆசிரியரின் கதை பொறுக்கும் திறமையை (?) மற்றவர்கள் சந்தேகிக்கும்படி ஏன் விடுகிறீர்கள்?'' என்று கேட்டிருக்கிறார் ஜடாதரன்'

ஜடாதரனின் குற்றச்சாட்டுக்கு பதிலளிப்பதற்கு முன்பு வாசகர்கள் எழுதும் கடிதங்களையும் வாசகர்களின் விமர்சனக் கண்ணோட்டம் அதிலே சிறந்து விளங்குவதையும் பாராட்டி இருக்கிறார் செல்லப்பா.

''இந்த எழுத்து ஏட்டின் கடைசி இரண்டு பக்கங்களில் 'எழுத்து'க்கும் அதன் ஆசிரியருக்கும் வந்த கடிதங்கள் பலவற்றிலிருந்து பொறுக்கியவைகளிலிருந்து எடுத்துள்ள குறிப்பிடத் தகுந்த வரிகளைப் பார்க்கலாம். ஏதோ பத்திரிகையைப் படித்தோம்; ஆசிரியரையோ, எழுத்தாளரையோ பாராட்டினோம் என்றும், தங்கள் பாராட்டுக்கடிதம் பிரசுரிக்கப்படுமா என்றெல்லாம் நினைக்காமல் தங்கள் அப்பிராயங்களை துணிந்து கூறியுள்ள வாசகர்களுடையவை அவை.

இவை பல விஷயங்களைத் தெளிவுபடுத்த –தெளிவு படுத்திக் கொள்ள கேட்டவை. அவை அத்தனைக்கும் ஒரு சிறு தலையங்கத்திலோ ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள்ளோ பதில் விளக்கமாகத் தந்துவிட முடியாது.

கடிதங்களில் குறிப்பிட்ட ஒன்றிரண்டு கருத்துக்களுக்கு மட்டும் கொஞ்சம் பதிலாக விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

'தர்க்கம்' என்ற சிறுகதை' 'எழுத்து' பறைசாற்றிக் கொள்ளும் உயர்ந்த நோக்கங்களுக்கு ஈடு கொடுக்குமாறு அமையவில்லை... 'வெற்றியின் பண்பு' போன்ற சாதாரணப்பத்திரிகைக் கதைகளை

வெளியிட்டு பத்திரிகை ஆசிரியரின் கதை பொறுக்கும் திறமை (?) யை மற்றவர்கள் சந்தேகிக்கும்படி ஏன் விடுகிறீர்கள்?"

பொதுவாக மேலே குறிப்பிட்டுள்ள வரிகளும் அதோடு சேர்ந்த மற்ற வரிகளும் 'நாசூக்' கின்றி எழுதப் பட்டிருந்தாலும் கடிதக்கருத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பார்க்கலாம்.

ஜெயகாந்தனும் – பராங்குசமும் இந்த இரண்டு கதைகளை விட சிறந்த கதைகளை எழுதி இருக்கலாம்; இருக்கிறார்கள் என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். இப்போது இரண்டு கதைகளைப் பற்றித்தான் பேச்சு. ஜெயகாந்தன் கதை எதனால் 'எழுத்து'க்கு ஈடுகொடுக்குமாறு அமையவில்லை, 'வெற்றியின் பண்பு' எதனால் சாதாரணப் பத்திரிகைக் கதை என்று எழுத்தாளர் 'ஜடாதரன்' விமர்சன வழியாகக் குறிப்பிட்டிருந்தால் அதைப்பற்றி மேலே விவாதிக்க முடியும். ஏன், இலக்கிய விமர்சனத்துக்கே அது பயன்பட்டிருக்கும். ஆனால் முடிவுகளை மட்டும் சொல்லிவிட்டு நிறுத்திக் கொண்டு திருப்தி அடைந்து விட்ட பின் அந்தக் கேள்விக்கு இடமில்லை.

ஒரு சிறுகதையின் தரத்தை நிர்ணயிப்பது எதைப்பொறுத்தது? அதன் கதையம்சத்தை பொறுத்தா? அல்லது அது பெற்றிருக்கும் உருவத்தைப் பொறுத்தா? அல்லது இரண்டும் சேர்ந்தா?

இரண்டும் சேர்ந்து என்றுதான் யாரும் பதில் சொல்வோம். விஷய சத்தும் உருவ அழகும் கொண்ட ஒரு படைப்புதான் சிறப்பானதாகும் என்பது கலை , இலக்கியம் சம்பந்தமாக பல்வேறு அபிப்ராயங்களுக்கிடையே முடிவு சமரச மனப்பான்மையாகச் செய்துகொள்ள வேண்டியதாகும்.

ஜெயகாந்தன் சிறு கதையின் கதையம்சம் பழசுதான். அந்தத் தன்மையை முன் வைத்து அது சாதாரணமானது என்று தூக்கியெறிந்து விடலாம். ஏன், புதுமைப்பித்தனின் அகல்யை, சாபவிமோசனம் இவைகளையே தள்ளிவிடலாம். ஆனால் அது அவ்வளவோடுதான் நின்று விடுகிறதா? இந்தக் கதையை முழுக்க பகுப்பு முறை ஆராய்ச்சி செய்ய இங்கு இடமில்லை. ஆயினும் முதலாவதாக சிறு கதை என்ற ஒரு உருவத்துக்கு, நூற்றாண்டுக்கு மேற்பட்ட கால அளவில் பல்வேறு சமயங்களில் பலர் கைகளில் அதற்கு உருவ அழகு ஏறி ஏறி தனி ஒரு அந்தஸ்து பெற்று விட்ட உருவத்துக்கு அது உதாரணமாகிறது.

வெறும் கதைக் குவியல்களுக்கு நடுவில் முதலாவதாக சிறுகதை உருவமாகக் கிடைப்பதே ஒரு பெரிய விஷயம். அடுத்து கதை சொல்லபட்டிருக்கும் விதம். இதுதான், கதையம்சம் கதையிலிருந்து கிடைக்கும் மதிப்பு இரண்டையும் விட, ரசிப்பதற்கென ஏற்பட்ட ஒரு கலைப் பொருளில் அதிகம் பார்க்க வேண்டியதாகும்.

இந்த சொல்லும் விதம் 'தர்க்கம்' சிறுகதையில் மிகையின்றி, வகையாக, விஷயம் தெரிந்த ஒரு ஞானத்துடன் போதிய சூழ்நிலை கிளப்பி, தகுந்த வார்த்தைகளை உபயோகித்து, பொருத்தமான விவகாரமும் கலக்க, உச்சநிலைக்குக் கதையை படிப்படியாக ஏற்றிச் சென்று கதைக்கு ஒரு முழுமையும் ஒரு ஒருமையும் ஏற்படுத்திக் கையாளப்பட்டிருக்கிறது. இதுபோதும் கதை மூளியல்ல என்பதற்கு.

இதைவிடச் சிறந்த கதை என்பது அது வேறு விஷயம் ஒரு ஆசிரியரின் படைப்பு பல்வேறு தரங்களில் அமையத்தான்செய்யும். சந்தர்ப்பத்துக்கு கிடைத்த – ஒரு ஒப்புக் கொள்ளப்பட்ட ஆசிரியரின் படைப்பை அவர் எப்போதோ எழுதிய மிகச்சிறந்த கதையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு பத்திரிகாசிரியர் செய்வதல்ல. பரிசுப் போட்டி நீதிபதிகள் வேலை அது!

– என்று ஜெயகாந்தனின் கதையின் கலையம்சங்கள் குறித்து விளக்கும் செல்லப்பா பராங்குசத்தின் கதையிலிருந்து ஒரு பாராவை மட்டும் எடுத்தெழுதி சிறுகதையின் இலட்சணங்கள் என்னென்ன என்பது பற்றி அந்தப் பாராவிலிருந்தே உதாரணம் காட்டி விளக்கி இருக்கிறார்.

'எழுத்து' நான்காவது இதழைப் பார்க்கும் போது அதன் வாசகர் கடிதங்கள் பகுதி 'எழுத்து' என்கிற பத்திரிகைக்குள்ளேயே விமர்சன இலக்கியம் – அல்லது விமர்சனங்களை வளர்ப்பதற்கான ஒரு தனிப்பத்திரிகையாக சிறு பத்திரிகையாக வளர்ந்து வருவது தெளிவாகிறது.

மூன்றாவது இதழில் ஜெயகாந்தன் பராங்குசம் கதையின் மேன்மை பற்றி செல்லப்பா எழுதிய தலையங்கத்தை மறுத்து – ஜடாதரன் கடிதத்தை ஆதரித்து க.நா.சு எழுதிய கடிதம் நான்காவது வெளியிடப் பட்டிருக்கிறது.

க.நா.சு வின் கருத்துக்களுக்கு பதிலளித்து 'எழுத்து' கதைகள் என்ற தலைப்பில் ஒரு தனிக்கட்டுரையே எழுதி இருக்கிறார் செல்லப்பா.

எழுத்து முதல் இதழில் க.நா.சு எழுதிய 'சிறந்த தமிழ் சிறுகதைகள்' என்று கட்டுரைக்கு இரண்டாவது இதழில் சாமிநாத ஆத்ரேயன் மறுப்பு வெளியிட்டிருந்தார். நான்காவது இதழில் 'அரங்கம்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கடிதங்களில் முதலிடம் பெற்றிருக்கிற கஸ்தூரியின் கடிதம். ஆத்ரேயன் கூற்றுக்களை மறுத்து க.நா.சுவின் விமர்சனப் பணிக்கு புகழாரம் சூட்டுவதாக அமைந்திருக்கிறது. ''...எப்படியும் தமிழ்நாட்டில் நெஞ்சும் நெஞ்சும் மோதும் ஒரு பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்ட க.நா. சுவின் பணி காலப் பணியையும் மீறித் துளிர்க்கும் பணி'' என்று பாராட்டி இருக்கிறார் அவர்.

கஸ்தூரியின் கடிதத்தை அடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ள கடலூர் டி.எஸ். கோதண்டராமனின் கடிதம் க.நா.சு வை நோக்கி வினாக்கணைகள் தொடுக்கும் கடிதமாக அமைந்திருக்கிறது.

''கதை, சிறுகதை நாவல், கவிதை முதலியவைகளை ஸ்ரீ. க.நா.சு அவர்கள் தனிவிதமாக அளவிடுகிறார். ஆனால் அவர் உபயோகிக்கும் அளவுகோல் எது என்பது புரியவில்லை. ஏன், அவரே அதைத் திட்டமாக சொல்ல முடியுமா என்பதும் சந்தேகம்தான்! அவருடைய அளவுகோல் எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஒன்றை மட்டும் – இந்த 'ஒன்று' மிக முக்கியமானது – அவர்மறந்து விடுகிறார். பொது ஜனப் பேராதரவு! 'வாசகர்களை நினைவில் வைத்துக்கொண்டு கதைகள் எழுதுபவர்கள்' என்று பலரை ஒதுக்கி வைக்கிறார். 'பத்திரிக்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்பவர்கள்' என்று சிலரைத் தனியே நிறுத்தி வைக்கிறார்.

ஸ்ரீ.க.நா.சு ஒரு கேள்விக்கு பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார். ''ஐயா எழுத்தாளர்கள் வாசகர்களுக்காகவும் பத்திரிகைகளுக்காகவும் எழுதாவிட்டால் வேறு யாருக்காக, எதற்காக எழுதுகிறார்கள்? எழுத்தாளனும் மனிதன் தான். தன்னை மறந்து ஒரு ஆவேச நிலையிலிருந்து அவன் எழுதினாலும் மற்ற மனிதர்களை அவன் சிருஷ்டிகள் வசப்படுத்தத்தான் செய்யும். அப்படி

வசப்படுத்தாவிட்டால் அவன் சிருஷ்டிகளால் என்ன லாபம்?'' என்று கேட்டிருக்கிறார் டி.எஸ். கோதண்டராமன்.

'எழுத்து' முதல் நான்கு இதழ்களில் கதைகள், கவிதைகள், கட்டுரைகள், புதுக்கவிதைகள், புத்தக விமர்சனங்கள் என்று பல அம்சங்கள் நிறைந்து காணப்பட்டாலும் விமர்சனமே எல்லா வற்றையும் விட சிறப்பாக மேலோங்கிக் காணப்படுகிறது!

செல்லப்பாவை நன்கு அறிந்தவர்கள் பலரும் ''அவர் ஒரு முசுடு, பிடிவாத குணம் படைத்தவர், தான் சொல்கிற கருத்துக்கள் தான் சரி என்று சாதிக்க முனைபவர்'' என்றெல்லாம் கூறுவதுண்டு.

'எழுத்து'வின் முதல் நான்கு இதழ்களும் ''செல்லப்பாவை பற்றிய இந்தக் கருத்துக்கள் உண்மையல்ல; அவர் தன்னளவில் பிடிவாதமானவர் என்றாலும் – தமக்கு எதிராகப் பிறர் கூறும் கருத்துக்களை வரவேற்பவர், அப்படிக் கூறப்படும் கருத்துக்கள் அவருக்கு கோபத்தை உண்டுபண்ணும் அளவினதாக இருந்தாலும், அவைகளை அப்படியே தமது ஏட்டில் வெளியிட்டு – அதற்கான பதில்களை நாகரிகம் பிறழாத வகையில் சொல்லக் கூடிய பரந்த மனோபாவம் கொண்டவர்'' என்று மறுப்புக் கூறுவதுபோல் அமைந்திருக்கின்றன.

க.நா.சு வின் கருத்துக்களில் தமக்கு உடன்பாடில்லை என்பதை தலையங்கம் தனிக்கட்டுரைகள் மூலம் தொடர்ந்து செல்லப்பா விளக்கியபடியே இருக்கிறார்; க.நா.சுக்கு எதிரான கடிதங்களையும் அவர் வெளியிடத் தயங்கவில்லை. எனினும் இந்த முதல் நான்கு இதழ்களிலும் க.நா.சுவின் கவிதை கட்டுரைகளே நிரம்பி வழிகின்றன. முதல் இதழில் ''சாகித்ய அகாடமி தமிழ்பரிசு'', ''சிறந்த தமிழ்ச் சிறுகதைகள்'' ''டாக்டர் சாமிநாதையர்'' என்று க.நா.சு. எழுதிய மூன்று கட்டுரைகள், 'மயன்' என்ற பெயரில் க.நா.சு. எழுதிய இரண்டு கவிதைகள், இரண்டாவது இதழில் க.நா.சு. எழுதிய ''எஸ்.வையாபுரிப்பிள்ளை'', மயன் எழுதிய 'தரிசனம்' என்ற கவிதை, மூன்றாவது இதழில் க.நா.சுவின் ''விமர்சனத்தின் எல்லைகள்'' ''மறைமலையடிகள்'' நான்காவது இதழில்'' திரு.வி. கலியாணசுந்தரனார்'' ''இலக்கியத்தில் விஷயமும் உருவமும்'' மயன் எழுதிய 'போதுமோ' ''விளையாடும் பூனைக்குட்டி'' என்ற இரு

கவிதைகள். கடிதங்கள் பகுதியில் 'எழுத்தும் அதன் முயற்சிகளும் என்று 'எழுத்து' க.நா.சு மயமாகவே காட்சி தருகிறது! அது – செல்லப்பா எல்லோரும் நினைப்பது போல தன் கருத்துவின் சரி என்று சாதிப்பவர் அல்ல, அவர் எல்லோரது கருத்தையும் வரவேற்கக் கூடியவர் என்கிற அவரது தாராளமயக் கொள்கையையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

4

'எழுத்து' 5ஆவது இதழ் கு.ப.ரா நினைவு ஏடாக வெளியிடப்பட்டது. இந்த இதழில் கு.ப.ரா பற்றிய ஒரு தலையங்கக் கட்டுரையையும் – 'இன்ப ஞாபகங்கள்' என்ற தலைப்பில் கு.ப.ராவுடன் பழகிய நாட்கள் பற்றிய ஒரு வாழ்க்கை விமர்சனக் கட்டுரையையும் சி.சு. செல்லப்பாவே எழுதியிருக்கிறார். கு.ப.ராவும் நானும்– என்ற தலைப்பில் சிட்டி எழுதிய கட்டுரையும், க.நா.சு எழுதிய 'கு.ப.ரா வின் கதைகள்' என்ற விமர்சனக்கட்டுரையும் கு.ப.ரா நினைவு ஏட்டின் சிறப்பு அம்சங்களாக இடம் பெற்றிருப்பதோடு, கு.ப.ரா எழுதிய சிறுகதை, கட்டுரை, கவிதை, விமர்சனம் ஆகியவைகளுக்கு வகைக்கு ஒன்றாக கு.ப.ராவின் நான்கு படைப்புகள் இடம் பெற்றிருக்கின்றன.

எழுத்து – ஏட்டின் வளர்ச்சியில் – இந்த ஐந்தாவது இதழ்– ஒரு திருப்புமுனை போல அமைந்திருக்கிறது. 'கலா மோகினியில்' கு.ப.ரா எழுதிய வசன கவிதை என்ற கட்டுரையை செல்லப்பா மறு பிரசுரம் செய்திருக்கிறார் இந்த இதழில்!

எதிர்காலத்தில் – எழுத்து – முழுக்க முழுக்க புதுக்கவிதை யின் மறுமலர்ச்சிக்கும் – வளர்ச்சிக்குமே தன்னை அர்ப்பணித்துக் கொள்ளப்போகிறது என்பதைக் கட்டியங் கூறி அறிவிப்பது போல கு.ப.ரா வின் வசன கவிதை பற்றிய கட்டுரை அமைந்திருக்கிறது.

எழுத்து – புதுக்கவிதை இயக்க வளர்ச்சிக்கான ஏடாக மாறுவதற்கான வித்து – இந்தக் கட்டுரை மூலமே விதைக்கப் பட்டது என்பதை 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலில் வல்லிக்கண்ணன் கீழ்க்கண்டவாறு விவரித்திருக்கிறார்.

''புதுக்கவிதை புதிய மறுமலர்ச்சியும், இயக்க வேகமும், வலிமையும் பெறுவதற்கு 'எழுத்து' தோன்ற வேண்டியிருந்தது.

சி.சு.செல்லப்பா 1959 ஜனவரியில் 'எழுத்து' மாசிகையை ஆரம்பித்தார். அப்போது அவர் புதுக்கவிதை சம்பந்தமாகத் தீவிரமான கொள்கைகளோ, ஆசை நிறைந்த எதிர்பார்ப்போ, ஆர்வம் மிகுந்த

திட்டமோ கொண்டிருந்தார் என்று சொல்வதற்கில்லை. அப்படி ஏதேனும் இருந்திருந்தால், அது அவசியம் முதல் இதழின் ஆசிரியப் பிரகடனத்தில் ஒலிபரப்பப்பட்டிருக்கும். 'எழுத்து' முதல் ஏட்டில் மட்டுமல்ல, முதல் வருடத்தின் எந்த ஏட்டிலுமே புதுக்கவிதை சம்பந்தமான அபிப்பிராயம் எதுவும் ஆசிரியர் பக்கத்திலோ, கட்டுரையாகவோ, அல்லது படைப்பாளிகளின் அபிப்பிரா யமாகவோ, பிரசுரிக்கப்படவில்லை.

ஐந்தாவது இதழ் கு.ப.ரா நினைவு ஏடு. அதில் கு.ப.ரா பற்றி பலர் எழுதிய கட்டுரைகளோடு, கு.பரா.வின் படைப்புகள் ஒரு சிறுகதை, ஒரு கட்டுரை, ஒரு விமர்சனம், ஐந்து கவிதைகள் ஆகியவை சேர்க்கப்பட்டன. கட்டுரை 'வசன கவிதை' என்ற தலைப்பில் கு.ப.ரா கலாமோகினியில் எழுதியிருந்தது ஆகும்'' என்ற குறிப்பிட்டிருக் கிறார் வல்லிக்கண்ணன். கு.ப.ராவின் படைப்புகளில் வசன கவிதை என்ற இந்தக்கட்டுரையை மட்டும் பெயர் சூட்டி வ.க.எழுதியிருப்பது இந்தக் கட்டுரைதான் – பின்னாளில் எழுத்து புதுக்கவிதை வளர்ச்சிக்கான ஏடாகவே மாறியதற்கான முதல் அடையாளம் என்பதை அவரும் உணர்ந்திருக்கிறார் என்பதையே காட்டுவதாக இருக்கிறது.

எனினும் வசன கவிதை என்பதும் – புதுக்கவிதை என்பதும் ஒன்றல்ல; வேறு வேறு என்று வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். இரண்டும் ஒன்றுதான் என்று விளக்கம் அளிப்பவர்களும் இருக்கிறார்கள். வசன கவிதையின் தந்தை பாரதி – புதுக்கவிதையின் முன்னோடி பிச்சமூர்த்தி – என்று இனம் பிரித்துக் காட்டுபவர்களும் இருக்கிறார்கள். இதிலே செல்லப்பா 'வசன' கவிதை என்பது வேறு; புதுக்கவிதை என்பது வேறு; இரண்டும் ஒன்றல்ல'' என்ற கருத்தையே அழுத்தமாகக் கொண்டிருந்தார். எழுத்து ஏடுகளில் வசனகவிதை – புதுக்கவிதை பற்றி நடத்தப் பெற்ற சர்ச்சைகளுக்குத் தூண்டுகோலாக இருந்தது அதன் 14வது இதழில் பிச்சமூர்த்தி எழுதிய கட்டுரைதான். அந்தக் கட்டுரையின் தலைப்பும் கு.பரா.வைப் போன்றே 'வசனகவிதை' என்பதுதான். பிச்சமூர்த்தியின் கட்டுரை நெடுகிலும் புதுக்கவிதை என்ற சொற்பிரயோகத்தைவிட வசனகவிதை என்பதே அதிகமாக விரவிக் கிடக்கிறது.

பதினான்காவது ஏட்டில் பிச்சமூர்த்தியின் கட்டுரையை வெளியிட்ட செல்லப்பா – 15ஆவது இதழில் வசனகவிதைவேறு,

புதுக் கவிதைவேறு என்பதை விளக்கி ஒரு நீண்ட ஆசிரிய உரையை எழுதினார்.

இதுபற்றிக் குறிப்பிடும் வ.க. –

''பிச்சமூர்த்தி கட்டுரை பிரசுரமானதற்குப் பிறகு 'எழுத்து' ஏட்டில் கவிதை,வசன கவிதை பற்றிய சர்ச்சைகள் அதிகமாக இடம் பெற்றிருந்தன. எழுத்து 15ஆவது ஏட்டில், தலையங்கப்பகுதியாக, ஆசிரியர் தனது எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார். ....புதுக்கவிதை வேறு, வசனகவிதை வேறு என்று பிரித்துப் பேச முற்பட்ட 'எழுத்து' ஆசிரியர் ந.பியின் சில அபிப்பிராயங்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை வலியுறுத்தியது குறிப்பிடத்தகுந்ததாகும்.'' என்கிறார்.

பிச்சமூர்த்தி , செல்லப்பா ஆகியோரது கருத்து வேறுபாடுகள் எப்படியிருப்பினும் – பிச்சமூர்த்தியின் 'வசன கவிதை' என்ற கட்டுரை வெளிவந்தபிறகுதான் – எழுத்து – முழுக்க முழுக்க புதுக்கவிதை வளர்ச்சிக்கான ஏடாக மாறியது; எனினும் இந்தச் சர்ச்சைக்கான – இந்தப் புதிய மாற்றத்துக்கான – கொடி ஏற்றம் 5ஆவது இதழில் வெளியிடப்பட்ட கு.ப.ரா வின் 'வசனகவிதை' என்ற கட்டுரை தான் என்று கொள்வதில் தவறேதுமில்லை.

வசன கவிதை என்பது என்ன? அது கவிதையா? அல்லவா? அப்படி எழுதுவது கேலிக்குரியதா? அல்லது கேலி பேசுபவர்கள்தான் நகைப்பிற்கிடமானவர்களாக என்பதை எல்லாம் மிகச் சுருக்கமாக அதே சமயம் மிகவும் அழுத்தமாகவும் தெளிவாகவும் – கு.ப.ராவின் கட்டுரை படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

புதுக்கவிதையின் வளர்ச்சி – மறுமலர்ச்சிக்கான ஏடாக 1959 முதல் பத்தாண்டுக் காலம் தீவிரமாக பணியாற்றிய எழுத்து என்கிற மாத ஏடும் மறைந்துவிட்டது. அதன் ஆசிரியர் செல்லப்பாவும் இப்போது இல்லை. எனினும் புதுக்கவிதையா மரபுக்கவிதையா என்ற சர்ச்சை இன்னமும் ஓய்ந்துவிடவில்லை. புதுக்கவிதையின் வளர்ச்சி போலவே அந்தச் சர்ச்சையும் வளர்ந்து செல்லப்பா அங்கீகரித்த புதுக்கவிதை படைப்பாளிகள் யார்? அவர் அங்கீகரிக்க மறுத்து விட்ட புதுக்கவிதை கவிஞர்கள் யார் என்கிற அளவுக்கு புதிய புதிய சிகரங்களை நோக்கி பயணித்தபடியே இருக்கிறது.

பிச்சமூர்த்திக்கு முன்பே வசனகவிதை – புதுக் கவிதையை மரபுக் கவிதைகளுக்கு இணையானதாக உயர்த்தி – ஒப்பிட்டுக் காட்டிய கு.ப.ராவின் 'வசனகவிதை' என்ற அந்தக்கட்டுரை இன்னும் புதுக்கவிதை படைப்பாளிகளின் வாளாகவும் கேடயமாகவும் இருக்கிறது அது வருமாறு :-

''வசன கவிதையை ஏளனமாகப் பேசுவது இப்பொழுது இலக்கிய ரசிகர்களிடையே' பாஷன்.

'அதென்ன வசனகவிதையா? இப்பொழுது யாப்பிலக்கணம் தெரியாதவர்களெல்லாம் இப்படி ஆரம்பித்து விட்டார்கள். வாய்க்கு வந்ததை எழுதி வசன கவிதை என்கிறார்கள்'' என்று ஒரு சிலர் கேலி.

'வசன கவிதை புதிதொன்றுமில்லை. பண்டைத் தமிழில் இருந்ததுதான் அது. அகவல் வசன கவிதைதானே? இவர்கள் என்ன புதிதாகக் கண்டு பிடித்து விட்டார்கள்?' என்று மற்றும் சிலர் தாக்குதல்.

வேடிக்கை என்னவென்றால் எதிர்ப்பவர்கள் இருதரப்பினராக இருக்கிறார்கள். ஒருவர் ஆட்சேபனை மற்றொருவரது போல் அல்ல. ஒருவர் வசன கவிதையே கூடாது என்கிறார். மற்றவர் அது புதிது என்று சொல்லக்கூடாது என்கிறார். விசித்திரம்தானே இது? யாப்பிலக்கணம் தெரியாததால் வசன கவிதையைப் பிடித்துக் கொண்டார்கள் அதை எழுதுகிறவர்கள் என்றவாதம் சுத்த அசட்டுத்தனத்தை தவிர வேறொன்றுமில்லை. எழுதுகிறவர்களுக்குத் தேவையானால் யாப்பிலக்கணத்தைக் கற்றுக் கொள்ள எத்தனை நாழிகைகள் ஆகும்? அதென்ன அப்படி எளிதில் கற்றறிய முடியாத வித்தையா? தமிழ்ப் பண்டிதருக்கு வருவது - கவிதை எழுத முனைகிறவனுக்கு வராமல் போய் விடுமா என்ன? அப்படிப்பட்ட பிரம்மவித்தை ஒன்றுமில்லை. அது நிச்சயம். யாப்பிலக்கணத்தைப் படிக்காமல் கூட கண்களை மூடிக் கொண்டு செய்யுள் பாடலாம் அது கிடக்கட்டும் வால்ட் விட்மனும் எட்வர்ட் கார்ப்பென்டரும் ஆங்கில யாப்பிலக்கணம் கற்றறியத் தெரியாமல் தான் வசன கவிதை எழுதினார்களோ? புது யாப்பிலக்கணமே ஏற்படும்படி வங்காளியில் பாக்கள் பாடிய ரவீந்திரர் கடைசிக் காலத்தில் வங்காளியில் வசனகாவியத்தில் எழுதித் தொலைத்தார். அதுதான் போகட்டும் என்றால், சுப்பிரமணிய பாரதி யாப்பிலக்கண முறையில் ஏராளமாக எழுதியவர் காட்சிகள் என்ற

வசன கவிதையையும் ஏன் எழுதினார். காட்சிகளையும் யாப்பிலக்கண முறையிலேயே எழுதியிருக்கக் கூடாதே ?

மேற்சொன்ன ரசிகர்களுக்கு பயந்து பாரதி - காட்சிகளை யாப்பிலக்கணமுறையில் எழுதியிருந்தால் கவைக்குதவாமல் போயிருக்கும். காட்சிகள் யாப்பிலக்கண முறையில் அமையாத தால்தான் அவ்வளவு சிறப்பும் அழகும் வேகமும் கொண்டிருக் கின்றன. யாப்பிலக்கணங்களுக்குக் கட்டுப்பட்டு வரும் கவிதையும் உண்டு. அதற்குக் கட்டுப்படாமல் வரும் கவிதையும் உண்டு. கவிதை என்ற வஸ்து நேரிசை - நிரையிசையில் மட்டுமில்லை. அவை ஒழுங்காக இருந்தால் மட்டும் கவிதை வந்து விடாது. கவிதை என்பது நடை மட்டுமல்ல; கருத்தும் இருக்க வேண்டும்.

செவி நுகர் கவிதை என்று கம்பன் சொன்னதைத் திரித்து செவி நுகர்வது தான் கவிதை என்று கொள்வது தப்பு; கவிதை செவிநுகர்வதாக இருக்கவேண்டும் என்பதுதான் பொருள். செவி நுகர்வதெல்லாம் எங்காவது கவிதையாக முடியுமா? கவிதையெல்லாம் செவிநுகர்வதாக இருக்கும் நிச்சயம்.

வசன கவிதையைச் செவிநுகருமா என்றால் நுகரும்; ஏனென்றால் வசன கவிதைக்கும் யாப்பிலக்கணம் உண்டு. அதிலும் மாவிளங்காய், தேமாங்கனி எல்லாம் வந்தாக வேண்டும். வரும் வகை மட்டும் வேறாக இருக்கும். அவ்வளவுதான். வசன கவிதைக்கும் எதுகை, மோனை கட்டாயம் உண்டு. ஏனென்றால் இந்த அலங்காரங்களை எல்லாம் உண்டாக்கியது கவிதை ; இலக்கணமல்ல. அது அவற்றை இஷ்டம் போல், சமயத்திற் கேற்றவாறு மாற்றிக் கொள்ளும். முதலில் உண்டாக்கினபடியே இருக்க வேண்டும் என்றால் இருக்காது. இலக்கியம் கூறுவதுதான் இலக்கணம். இலக்கணம் கூறுவது இலக்கியமாகவே முடியாது. கவிதை எல்லாம் நன்னூல் யாப்பிலக்கணத்தையொட்டியே இருக்க வேண்டுமென்று இலக்கணம் பிடிவாதம் செய்தால் நடக்காது. நன்னூலுக்கும் மேலான ஒரு புதுநூலை இலக்கியத்தின் போக்கிற்கொப்ப (இலக்கணம்) தயாரித்துக் கொள்ள வேண்டும்.

காம்போதி ராகம் போட்டுப் பாட வருவதுதான் கவிதை என்று யாராவது வாதித்தால், அவர்களுக்குக் கவிதை இன்ன தென்றே தெரியாது என்றுதான் நாம் பதில் சொல்ல வேண்டும். ஆங்கிலக்

கவிதையை நாம் ராகம் போட்டுப்பாடியா அனுபவிக்கிறோம்? அவர்களுடைய ராகத்தைப் போட்டுப் பாடினால்தான் அது நன்றாக விளங்கும் என்று சொல்ல யாராவது முன்வருவார்களா?

பொதுவாகக் கவிதைக்கு, எந்த பாஷையிலிருந்தாலும் சரி, ஒரு தனி ராகமும் தாளமும் இருக்கின்றன. அதை அனுபவிக்க கர்நாடக சங்கீதத்தின் ஒத்தாசையோ, ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் ஒத்தாசையோ, ஐரோப்பிய சங்கீதத்தின் ஒத்தாசையோ வேண்டியதேயில்லை. கவிதையின் ராகம் உள்ளத்தில் கிளம்புகிறது; ஹிருதயம் தாளம் போடுகிறது.

Wee see Heaven in a wild flower

And Eternity in a grain of sand

என்ற சித்தவாக்கை அனுபவிக்க நாம் ஐரோப்பிய சங்கீதத்தை கற்க வேண்டியதில்லை.

<u>புல்லினில் வைரப்படை தோன்றுங்கால்</u>

என்பதை அனுபவிக்க காம்போதி ராகமா வேண்டும்?

நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக !

நமது பாட்டு மின்னலுடைத்தாகுக!

என்ற மகாவாக்கு கவிதை ஆக எந்த சங்கீதத்தின் உதவி கேட்க வேண்டும், கேட்கிறேன்?''

என்கிற கு.ப.ராவின் இந்தக் கட்டுரைதான் – எழுத்து 14ஆவது இதழிலிருந்து தன்னைப் புதுக்கவிதை வளர்ச்சிக்காகவே அர்ப்பணித்துக் கொள்ளத் தூண்டுகோலாக விளங்கிய கட்டுரை!

எழுத்து ஐந்தாவது இதழில் கு.ப.ரா வின் வசன கவிதை போற்றும் கட்டுரையோடு எதிர்ப்பக்கத்தில் கு.ப.ரா எழுதிய ஐந்து கவிதைகளை (கலா மோஹினியிலிருந்து) மறுபிரசுரம் செய்திருக் கிறார் செல்லப்பா.

வசன கவிதை பற்றி கு.ப.ரா எழுதிய கட்டுரையோடு அவர் எழுதிய கவிதைகளையும் படிக்க வசதி செய்து கொடுத்ததின் மூலம் – கு.ப.ரா வின் கவிதை படைக்கும் ஆற்றலையும் வாசகர்களின் பரிசீலனைக்கு வைத்திருக்கிறார் சி.சு.

ஐந்தில் ஒன்று 'பெண்ணின் பிறவி ரகசியம்' என்பது.

கவிகள் களைப் பின்றிக் காவியமியற்ற,
நின் கண்கள் என்ன நிலைக்காக கவர்ச்சியில்
கருமை தட்டியவை?
யுகம் யுகமாக மனிதனை மாயை போல மயக்க
உன் கருவளையும் கையும் என்ன கவிதையில்
கட்டழகு பெற்றவை?
உலகமே உணர்வழிந்து உள்ளங்கலங்க,
உன் இதழ்கள் என்ன சொற்சுவையில்
சுருதி சேர்ந்தவை?
மானிடன் மார்பில் ஒவ்வொரு அடியிலும் எதிரொலிக்க
உன்கால் மெட்டி என்ன வெள்ளி இசையில்
இன்பம் கட்டியது?
தெரியவில்லை; நீ சிரிக்கிறாய்!
தீக்குளியிலும் உனதழகு உயருகிறதோ?
சீதையைப் போல!
அழிவுகூட உன்னை அங்கம் அங்கமாக
அலங்கரித்து விடுகிறதோ?
உனதியற்கை உணர்ச்சிக் – கலையுடுத்தது
மொக்கின் மார்புபோல – அல்லவா?
துச்சாதனன் போல மனிதன்
உன் துகிலை உரிகிறான் –
பெண்ணியற்கையைப் பரிந்து காண!
பாஞ்சாலியின் புடவை போல அது
வளர்கிறது, வளர்கிறது, வளர்கிறது!
மனிதன், பேதை, மயங்கி விழுகிறான்.

எழுத்து ஐந்தாவது இதழில் திருச்சிற்றம்பலக்கவிராயர் (தொ.மு.சி.ரகுநாதன்) எழுதிய சோதனை கவிதை என்ற கவிதையும் எதிர்வரும் காலத்தில் எழுத்து புதுக்கவிதைக்கான இலக்கியக் களமாக மாறி விடும் என்பதைக் கூறாமல் கூறும் ஆருடம் போன்ற கவிதையாகவே அமைந்திருக்கிறது.

கெடுபிடி செய்து பொடி பல செய்யும் பல்லை! – உள்ளக்
கிளர்ச்சி வடிக்க இலக்கண மேபெருந் தொல்லை ! – பாட்டின்
அடிபடு மெதுகை அடிபடு மோனையிற் சாடக் – கூத்
தாடும் கவிதைத்தாயே! நீயோர் தொல்லை!
தொல்லை! தொல்லை! – உன்னைத்
தொடுவதும் இனிமேல்தானும் இல்லை! இல்லை!
விக்கும் பொருளைக் கக்கத் திணறி நையோம் – அந்த
வேதனைதீரச் சோதனைக் கவியே செய்வோம் ! – தமிழ்
பொக்கும் பொடியும் மக்கும் மடிந்தே போகும் – என்ற
போதும் கவிதைத்தாயே! நீயோர் பூதம்!
பூதம் ! பூதம் ! – எங்கள்
புதுமைக் கவியே இனிமேல் எங்கள் வேதம் ! வேதம் !

என்பது திருச்சிற்றம்பலக் கவிராயரின் 'சோதனைக் கவிதை'. கு.ப.ரா நினைவு ஏடாக வெளிவந்த எழுத்து– புதுக்கவிதை இயக்கத்திற்கான கொடியேற்று இதழாகவே காட்சியளிக்கிறது. இந்த இதழில் விடுபட்டுப்போன ஒரு வழக்கமான அம்சம் வாசகர் கருத்தரங்கு – கடிதங்கள் பகுதி இல்லாமற் போனதுதான்!

5

'எழுத்து' – புதுக்கவிதை வளர்ச்சிக்காக இயக்கமாகவே நடத்தப்பட்ட ஏடு – என்று இன்று எழுத்துப் பற்றியும் செல்லப்பா பற்றியும் நினைவு கூர்பவர்கள் அனைவருமே போற்றுகிறார்கள். ஆனால் எழுத்து முதல் ஆண்டின் 12 இதழ்களிலும் செல்லப்பா – எழுத்து பத்திரிகையை நடத்துவதின் நோக்கம் விமர்சனங்களை வளர்ப்பது, இலக்கியம் பற்றிய பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் அவைகளைப்பற்றி உருவாகும் சர்ச்சைகள் மூலம் – வாசகர்களுக்கு நல்ல இலக்கியம் எது? நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான பணிகள் – நோக்கங்கள் – செயல்பாடுகள் எப்படி இருக்கவேண்டும் என்று உணர்த்தும் நோக்கமாகவே இருந்து வந்தது.

இதனைப் 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூலில் வல்லிக்கண்ணன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

''முழுக்க முழுக்க கருத்து ஆழமும் கனமும் உள்ள ஒரு இலக்கியப் பத்திரிகையை ஒரு சோதனை முயற்சியாக நடத்த வேண்டும் என்ற எண்ணமே செல்லப்பாவிடம் மேலோங்கி யிருந்தது என்று சொல்லலாம். அப்படிப்பட்ட சோதனை முயற்சியில் இலக்கிய அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதுதான் முக்கியப்பணியாக இருக்க வேண்டும் என்ற நோக்கமும் அவருக்கு இருந்தது என்று கொள்ளலாம்''என்று குறிப்பிட்டிருக்கிறார் வல்லிக்கண்ணன்.

'எழுத்து' ஆறாவது இதழில் விமர்சனப்பாதையில் என்ற தலைப்பிட்டு ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார் செல்லப்பா. அதிலே 'எழுத்து' இலக்கிய விமர்சனத்துக்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

''இலக்கிய அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதைத் தான் தன் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ள 'எழுத்து' வில் வெளிவந்துள்ள கட்டுரைகளை இரண்டு விதமாக பிரிக்கலாம்.

இலக்கியப் படைப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பொதுப்படையாக ஆராய்வது ஒன்று.

மற்றொன்று தனிப்பட்ட நூலாசிரியரையோ, நூலையோ எடுத்துக்கொண்டு ஆராய்வது.

......இலக்கிய விமர்சனத்துறையில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் இருக்கிறார்கள்; விமர்சனம் செய்வதற்குப் போதிய சூழ்நிலை இல்லை என்றெல்லாம் ஒரு தயக்கம் மேலோட்டமாக பரவி இருந்ததையும் போக்கும் ரீதியில் இன்று பலர்– எழுத்து – மூலம் முன்வருகிறார்கள் இலக்கிய அபிப்பிராயம் சொல்ல.

இந்த இதழில் பழையவரான சுந்தரராஜன் (சிட்டி) எழுதியுள்ள 'தமிழ் இலக்கியம்' விமர்சன அல்லது மதிப்புரைக் கட்டுரை குறிப்பிடத்தக்கது. விமர்சகர்களை விமர்சனம் செய்யும் அந்தக் கட்டுரை இதுவரை கூறப்பட்டுள்ள சில இலக்கிய அபிப்பிராயங்களுக்கு அறைகூவலாகவே அமைந்திருக்கிறது. அது ஆழ்ந்த கவனத்துக்கு உரியதாகும்.

அடுத்து புதியவரான டி.கே.துரைஸ்வாமி எழுதியுள்ள கட்டுரை ஒரு இலக்கியப் படைப்பை அணுகும் பல்வேறு முறைகளில், ஒரு முறையான சமூக ஆச்சார ரீதியில் இலக்கியப் படைப்பைப் பார்த்து, அந்த நோக்கின் விளைவாக அந்த நாவலில் தெரியவரும் நயங்களையும் தகவல்களையும் எடுத்துச்சொல்லும் வாக்காக அமைந்திருக்கிறது. இந்தக் கட்டுரை புதுவிதமானது.

அடுத்து 'எழுத்து' அரங்கத்தில் வெ.சாமிநாதன் எழுதியுள்ளது. ஒரு கதையை எடுத்துக்கொண்டு பகுப்பு முறையைக் கையாண்டு விண்டு பார்த்து தரம் அறியும் முறை அது' ஒரு படைப்பு இலக்கியத் தரமானதா என்று நிதானிப்பதற்கு இலக்கியத் தன்மைகள் அதில் உள்ளனவா என்று முதலில் பார்க்க வேண்டும்' என்பதாக பிரிட்டிஷ் விமர்சகர் டி.எஸ்.எலியட் கூறிய மாதிரி 'நல்ல எழுத்து' என்று அறிவதற்கு இந்த விதமான நுண்ணிய பார்வை அவசியம். எழுத்து வாசகர்களது இந்தப் பார்வைகள், இந்த ஆறாவது ஏட்டில் விழுந்திருப்பது, முறையான விமர்சன நோக்கு உருவாகிக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது'' - என்று அந்தத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார் செல்லப்பா.

புதுக்கவிதை இயக்கமாகவே - பின்னர் மாறிவிட்ட எழுத்து – ஆரம்ப காலத்தில் தமிழில் விமர்சனக் கலையை உருவாக்கும்

நோக்கத்துடன் தான் செயல்பட்டு வந்தது என்பதை இத்தலையங்கம் உறுதி செய்வதாக இருக்கிறது.

எனினும் 14ஆவது இதழில் செல்லப்பா புதுக்கவிதையின் இடம் பற்றி எழுதினார். அதன் பிறகு 'எழுத்து' கொஞ்சம் கொஞ்சமாகவும் பின்னர் மளமளவென்றும் புதுக்கவிதை வளர்ச்சிக்கான ஏடாக உருமாறிவிட்டது.

புதுக்கவிதைக்கான இயக்கமாகத் தன்னை மாற்றிக் கொள்வதற்கு முன்பு - விமர்சனக்கலைக்கான ஏடாக வெளிவந்து கொண்டிருந்த 'எழுத்து' இதழ்களை மட்டும் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டால் தமிழில் புதுக்கவிதை வளர்ச்சிக்கு மட்டுமல்ல, விமர்சனக்கலை வளர்ச்சிக்கும் செல்லப்பாதான் முன் கைடுத்து வைத்து முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்திருக்கிறார் என்பதை அதுவே நிரூபிக்கும். செல்லப்பாவுக்கு முன்பும் தமிழில் விமர்சகர்கள் இருந்திருக்கலாம். ஆனால் செல்லப்பா மாதிரி விமர்சனக் கலையை வளர்ப்பதற்கென்றே ஒரு தனி ஏடு தொடங்கி நடத்தியவர்கள் யாரும் இல்லை. செல்லப்பா தமது எழுத்து ஏட்டைத் தொடங்குவதற்கு முன்பும் பலர் புதுக்கவிதைகளை எழுதியிருப்பார்கள். ஆனால் புதுக்கவிதை வளர்ச்சிக்கெனவே ஒரு பத்திரிகையின் பெரும்பாலான பக்கங்களை அர்ப்பணித்தவர்கள் செல்லப்பாவுக்கு முன்பு யாரும் இருந்ததில்லை.

விமர்சனம் - புதுக்கவிதை ஆகிய இரண்டுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து ஒரு மாத இதழை நடத்த முடியும் என்று சாதித்துக் காட்டினார் செல்லப்பா. எழுத்து ஏட்டில் பல சோதனை முயற்சிகளைத் துணிந்து அவர் செய்தார் என்பதோடு எழுத்து என்ற பத்திரிகையையே அவர் சோதனை முயற்சியாகத் தான் நடத்திக்காட்டினார் வெற்றிகரமாக!

இலக்கியத்தில் சோதனை முயற்சி என்றால் என்ன?

இந்தக் கேள்விக்குத் தெளிவாகப் பதிலளிப்பவர்போல ஆறாவது இதழில் க.நா.சு வின் சிறுகட்டுரை ஒன்றினை வெளியிட்டிருக்கிறார் செல்லப்பா.

இலக்கியத்தில் சோதனை என்ற தலைப்பில் க.நா.சு எழுதிய கட்டுரையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதையே ஏறத்தாழ எழுத்து ஏட்டில் பிரதிபலித்துக் காட்டினார் செல்லப்பா.

க.நா.சு. சொல்கிறார் :

"இலக்கியத்தில் சோதனை செய்து பார்ப்பது என்றால் என்ன என்பது பற்றிப் பலரும் என்னைக் கேட்கிறார்கள்.

இதுவரை செய்யப்படாத எதையும் செய்து பார்க்க முயலுவதைத்தான் நான் சோதனை என்று சொல்லுகிறேன். சோதனை வெற்றி பெற்றால் இலக்கியமாகி விடுகிறது. நிலைத்து விடுகிறது. சோதனை முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டும் – வெற்றி பெறாவிட்டாலும் கூட.

சுவடில்லாத பாதையிலே, தனிவழிஅமைத்துக் கொண்டு போகச் செய்யப்படுகிற முயற்சி எதுவும் முயற்சியாக முக்கியமானதுதான். இந்த முயற்சிகளில்தான் பிற்காலத்தில் இலக்கிய சிகரங்களை எட்டுவது சாத்தியமாகிறது.

இலக்கியத்தில் புதுவிஷயம் என்பது அனேகமாக சாத்தியமில்லை என்று சொல்லலாம். ஏனென்றால் சொல்ல வேண்டிய பொருள் சொல்பமே. அதைப் பலரும் பலதினுசாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு தினுசாகச் சொல்லிப் பார்க்கிற முயற்சியைத்தான் சிறப்பாக சோதனை என்று சொல்ல வேண்டும்.

சோதனை பொருளைப் பற்றியதாக இராது இலக்கிய உருவத்தைப் பற்றியதாக இருக்கலாம். அல்லது பொருளுக்கும் உருவத்துக்கும் உள்ள உறவு முறைகளை ஆராய்வதாக இருக்கலாம் இதைப் புது மாதிரியாகச் செய்பவனைச் சோதனைக்காரன் என்றும், வெற்றிகரமாகச் செய்பவனை இலக்கிய கர்த்தா, படைப்பாளி என்றும் நாம் போற்றுகிறோம்.

இலக்கியத்திலே புதுமை என்பதுதான் உயிர்நாடி. அதை வைத்துத்தான் இலக்கியம் இயங்குகிறது. அந்தப் புதுமையைச் சாத்தியமாக்குகிற காரியம் இலக்கியத்தில் சோதனைக்காரர்களால் சிறப்புறுகிறது.

ஒரே இலக்கிய சோதனையை, அதன் உருவம் பூரணத்துவம் பெறுகிற வரையில் செய்தவர்கள் உண்டு. நம்மிடையே தமிழில் சிறுகதை எழுதியவர்களில் மௌனியை உதாரணமாகச் சொல்லலாம். பல விதமான சோதனைகளைச் சிறுகதை அளவில் செய்து பார்த்தவர் புதுமைப்பித்தன். உருவத்திலும் உருவ விஷய உறவுகளிலும்

சோதனைகள் செய்து பார்த்தவர்கள் என்று கு.ப. ராஜகோபாலனையும் ந.பிச்சமூர்த்தியையும் சொல்லலாம்.

இந்த சோதனை அம்சம்தான் பிற்கால இலக்கியத்தின் வளர்ச்சியை சாத்தியமாக்குகிறது'' என்று விளக்கமளித்திருக்கிறார் க.நா.சு.

க.நா.சு சுட்டிக்காட்டுகிற – புதுமாதிரியாகச் செய்த சோதனைக்காரன், வெற்றிகரமாகச் செய்த இலக்கியகர்த்தா ஆகிய இரண்டுபாத்திரங்களையும் சிறப்பாக வகித்து – எழுத்து பத்திரிகையில் நடத்திய இலக்கிய சோதனை முயற்சிகள் மூலம் சாதித்துக்காட்டியிருக்கிறார் செல்லப்பா.

'எழுத்து' 7ஆவது இதழ் புதுமைப்பித்தன் எழுத்துக்கள் என்ற தலைப்பில் – புதுமைப்பித்தனின் கதை, கவிதை, விமர்சனம், அவரது உரைநடை, அவர் செய்த புதுமைகள் ஆகியவைகளே நிறைந்த இதழாக வெளியிடப்பட்டிருக்கிறது.

கு.ப.ரா., வ.ரா, புதுமைப்பித்தன், பாரதி என்று வரிசையாக செல்லப்பா வெளியிட்ட சிறப்பிதழ்கள் அனைத்துமே பக்கங்கள் அளவில் பகட்டின்மை – பளபளப்பின்மை ஆகியவைகளின் அளவில் 'ஏழைக்கேற்ற எள்ளுருண்டை' களாகத் தான் இருக்கின்றன. எனினும் ஒவ்வொரு சிறப்பிதழையுமே ஒரு சிறுநூலாகப் பதிப்பித்தால் அவை அனைத்துமே நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியின் வரலாறுகளாகவே அமையும். எதிர்காலத்தில் இலக்கியம் படிக்க ஆர்வத்தோடு முன்வரக்கூடிய இலக்கியதாகம் மிகுந்த மாணவர்களுக்கு பாடப்புத்தகமாகவே பயன்படும்.

புதுமைப்பித்தனை புரட்சிப்படைப்பாளி என்றே பெருமைப் பொங்கிடக் குறிப்பிடுகிறார் செல்லப்பா.

புரட்சிப் படைப்பாளி – யார்?

''வளரும் இலக்கியம் சம்பந்தமாக குறிப்பிடத்தக்கது அதில் மேலும் சோதனைகளை – பிரக்ஞையுடனோ அல்லது தானறியாமலோ செய்து ஒரு புதுமையான விளைச்சலைக் காட்டியவனை புரட்சிப் படைப்பாளி என்று தான் கூற வேண்டும். 'புரட்சிக்காகப் புரட்சி' என்று இல்லாமல் – 'பழசைத்தாக்க வேண்டும், தகர்க்க வேண்டும்' என்ற ஒரு வெறியை மட்டும் தன்

முன்வைத்துக்கொள்ளாமல் 'உலகத்தோடு சண்டை பிடித்துக் கொள்ள வேண்டும்' என்ற ஒரு வக்ர ஆசை – அதில் ஒரு மகிழ்ச்சியும் கொள்ளாமல் 'அவ நம்பிக்கைதான் என் நோக்கு' என்று பெருமைப்பட்டுக் கொள்ளாமல் – ஒரு புரட்சிக்காரன் இலக்கியத் துறையில் இருக்கமுடியுமா? முடியும் என்பதற்குப் புதுமைப்பித்தன் ஒரு உதாரணம்'' என்கிறார் செல்லப்பா.

''இந்த 'எழுத்து' ஏடு கதை, கவிதை, விமர்சனம், நடை ஆகிய துறைகளில் புதுமைப்பித்தன் ஒரு கலகக்காரராக சாதித்திருப்பதை ஓரளவு அளவிடுவதற்கும், இதுவரை வெளித்தெரிய வராத சில ரசமான தகவல்களைக் கொண்டு அவரைப்பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வளரும் இலக்கியத்துக்கு இது உதவக்கூடும். இன்று வளரும் இலக்கியம் இந்தப் புரட்சிப்படைப்பு தோரணையைத் தொடர்ந்து சுமந்து செல்லக் கூடுமானால் இந்தப் புரட்சி மரபு வழியில் தலைசிறந்த படைப்புகள் வெளிவருவதற்கு சாத்யமாக இருக்கும்''

– என்று புதுமைப்பித்தன் எழுத்துக்கள் பற்றி இதழுக்கு முகமன் கூறியிருக்கிறார் அவர்.

கண்ணனின் சின்னஞ்சிறு வாயிக்குள் யசோதை உலகங்கள் அனைத்தையும் காட்சியாகக் கண்டாள் என்று புராணங்கள் கூறுவது போல இந்தச் சின்னஞ்சிறு சிறப்பிதழில் புதுமைப்பித்தன் எழுத்துக்களின் சகல பரிமாணங்களையும் வாசகர்கள் காணவும் பயனடையவும் வழிசெய்திருக்கிறார் செல்லப்பா.

ராமநாதன் எழுதிய சில 'ரசமான சம்பவங்கள் பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி) எழுதிய பித்தனும்புதுமையும்' ரா.ஸ்ரீ. தேசிகன் எழுதிய 'சொவியின் உரைநடை' வாணீசரணன் எழுதிய 'விமர்சகர் விருத்தாசலம்' சாலிவாஹனன் எழுதிய 'கவிராயர் வேளூரார்' கு.அழகிரி சாமியின் 'புதுமைப்பித்தன் சொன்னவை 'கி.ரா எழுதிய 'நான் நாஸ்திகனாயிருந்தேன்' பி.வி.சுப்ரமணியம், சிட்டி ஆகியோரின் சொ.வி பற்றி என்று ஒன்பது கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார். நவமணிகள் என்றே சொல்லலாம்.

செல்லப்பாவின் 'எழுத்து'களில் பெரும்பாலும் இலக்கியத்தில் புதுமுயற்சி – சோதனை – புரட்சி என்பன போன்ற

சொற்பிரயோகங்கள் விரவிக்கிடக்கின்றன! இந்த விஷயங்களில் அவரது கருத்துக்கள் எந்த அளவுக்கு புதுமைப்பித்தனின் சோதனை முயற்சி அல்லது புரட்சிப் படைப்புகளோடு ஒத்துப்போவதாக இருக்கின்றன என்பதை அவர் எழுதிய 'புரட்சிப் படைப்பாளி' என்ற தலையங்கம் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

''...........புதுமைப்பித்தனே தனக்கு நம்பிக்கை வறட்சி இருப்பதாககூறி இருக்கிறாரே என்று கேட்கலாம். ஆனால் சமூகத்தில் நம்பிக்கை வைத்து அதற்குக் கசையடி கொடுத்து அதைத் தூண்டி சொரணை பெறச்செய்யும் ஒரு ஆத்திரத்தைக் கொட்டத்தான் அந்த 'நம்பிக்கை வறட்சி' அவருக்கு உத்வேகம் அளித்தது. ஆனால்அந்த உத்வேகத்தில் அவர் தன்னை மறந்து விடவில்லை. அதாவது தன் கலைத்தன்மையைத் தளரவிடவில்லை.

அவருக்கு முன் ராஜமையர், மாதவையா, பாரதியும் கூட, ஆகியோரைப் போலன்றி, அவரது எழுத்துக்களை எந்தக் குறிப்பிட்ட சித்தாந்தத்துக்கும் நம்பிக்கைக்கும் ஆதரவாகவோ, எதிரிடையாகவோ உபயோகப்படுத்திக் கொள்ளமுடியாத ஒரு சுத்தக் கலைஞன் புதுமைப்பித்தன்.

எனவே 'வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரி நான் பிறப்பித்து விட்டவைகள்'என்று தன் எழுத்துக் களைப்பற்றி அவரே சொல்லி இருக்கும் படைப்புகள், அவநம்பிக்கை, நம்பிக்கை வறட்சி, கசப்பு இவைகளுக்கும் மேலாக எழுந்து, வாழ்க்கையை ஆழ்ந்து ஒரு அனுதாபத்துடன், அபிமானத்துடன், மனிதன் மனிதனாக வாழ மறந்து விட்டதைக் குத்திக்காட்டி அடிப்படைகளை உணரச்செய்ய வலியுறுத்தும் ஒரு கண்டிதத் தோரணையில் அமைந்தவை.

'கலைஞன் தனக்குக் கொள்கையே கிடையாது என்று சொல்லித் தப்ப முடியாது' என்று கு.ப.ரா சொன்னது போல புதுமைப்பித்தனுக்குத் திட்ட வட்டமான நோக்கம் உண்டு. ஆனால் அந்த நோக்கம் ஒரு தீர்க்கதரிசனப் பார்வை அல்ல. எதிர்காலக் கனவும் அல்ல. உடனடியாக, இன்றே, இப்போதே என்பதை வலியுறுத்துவதாக இருக்கிறது.

தன்நோக்கம் தன்னை வெளிக்காட்டிக்கொடுத்து விடாதபடி, கலைத்தன்மைக்குபின் மறைந்து நிற்கச் செய்ய, ஒரு கலைஞனுக்கு உரிய இயல்பான திறமை அவருக்கு இருந்தது.

தன் நாற்பத்தி இரண்டாவது வயதில் (1906 – 48) காலமான புதுமைப்பித்தன், விஷயம், வடிவம், நடை ஆகிய மூன்று அம்சங்களிலும் புரட்சிகரமான சோதனைகள் செய்து அவைகளில் சாதனை காட்டியவர். அவரது சுமார் நூறு கதைகளையும், கவிதைகளையும், நாடகங்களையும், ஒரு குறுநாவலையும் படிப்பவர்கள் அவைகளைப் படிக்கும்போதே இதை உணர முடியும்.

அவரது கதைக்கான விஷயங்கள் உலகில் வாழ வந்த மனிதனது அவலம் மிகுந்த இன்றைய, வாழ்வு விவரணங்கள், சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு, இல்லாமை, ஒரு யந்திர வாழ்க்கை இத்யாதிகளை அடிப்படையாகக்கொண்டு மனித வாழ்வைப் பல கோணங்களிலிருந்து பார்த்த தகவல்கள். சுந்தர ராஜன் செப்பியிருப்பது போல 'அந்த நூறும் நூறு வகையான கதைகள்; அவைகளில் நூற்றுக்குக் குறையாத கோணங்களையும் வேற்றுமைகளையும் நாம் காண்கிறோம், என்றாலும் புதுமைப்பித்தனது ஒரே 'பேசும்குரல்' அத்தனையிலும் ஒலிப்பதைக் கேட்க முடிகிறது.

வடிவம் சம்பந்தமாக புதுமைப்பித்தன் சிறுகதைத் துறையில் கையாண்ட உத்திகள் பலதரப்பட்டவை. அவைகளை ஒரு குறிப்பிட்ட வகை, முறைக்குள் அடைக்க முடியாது. அவர் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கும் அவரது மன அவசத்துக்கும் என்ன தேவை இருந்ததோ அந்தத் தேவைக்கு ஏற்ப நிறைவும் குறைவும் கொண்டு உருவானவைகள். அவரது சிறுகதை உருவ – விஷய சோதனையின் வெற்றிச்சிகரம் 'கயிற்றரவு' சிறுகதை.

அடுத்து நடை. புதுமைப்பித்தன் நடை தமிழுக்கே புதிது. புரட்சிகரமானது. (தான் கையாண்ட நடையைப் பற்றி அவர் கூறியிருப்பதை பிறிதொரு இடத்தில் காணலாம்) தான் செய்த சோதனையை அவர் தெரிந்தேதான் செய்திருக்கிறார். தன் உரைநடையில் தன் கருத்துக்களை வெளியிட்டுச் சொல்ல நடையை அவர் தனக்கு ஏற்றவாறெல்லாம் அதை முறுக்கியும் திருகியும் லாகவப்படுத்திக் கொண்டார். அதன் விளைவாக (அன்று குழம்பினாலும்) இன்று, தான் சொல்ல விரும்பிய கருத்துக்களை விரும்பிய விதமே வார்த்தைக்குள் அடக்கி பிறரிடம் தொற்றவைக்கும்

ஒரு சாதனையை அவர் காட்டிவிட்டார் என்று யாரும் ஒப்புக்கொள்கிறார்கள்'' என்கிறார் செல்லப்பா.

இந்த இதழின் இன்னொரு பக்கத்தில் புதுமைப்பித்தன் தனது நடை பற்றிக் கூறியதை தனியாகப் பிரசுரித்திருக்கிறார் சி.சு.செ.

''கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு தாவித்தாவிச்செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன். அது நானாக எனக்கு வகுத்துக்கொண்ட ஒரு பாதை. அது தமிழ்பண்புக்கு முற்றிலும் புதிது. அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதின் விளைவாக பாஷைக்குப் புதிது. இதனால் பலர், நான் என்ன எழுதுகிறேன். என்பது பற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொதுஜனங்களுக்குப் புரியாது என்று சொல்லி அனுதாபப்பட்டார்கள். அந்த முறை நல்லதா கருத்து ஓட்டத்துக்கு வசதி செய்வதா என்பதை அதே முறையில் பலர் எழுதிய பின்புதான் முடிவுகட்ட முடியும்'' என்று தமது எழுத்து நடை பற்றிப் புதுமைப்பித்தன் விளக்கம் அளித்திருக்கிறார்.

செல்லப்பா அடிக்கடி கையாளும் சோதனை முயற்சி, சோதனை என்ற சொற்களைக்கூட புதுமைப்பித்தன் விரும்பிக் கையாண்டிருக்கிறார். சோதனை செய்து பார்க்கப்பெரிதும் விரும்பியிருக்கிறார் என்பதை கு. அழகிரிசாமி இந்த ஏட்டில் எழுதியுள்ள 'புதுமைப்பித்தன் சொன்னவை' என்ற கட்டுரையில் உள்ள ஒரு தகவல் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

''என்னையும் ரகுநாதனையும் உதவியாசிரியர்களாகக் கொண்டு அவர் ஆரம்பிக்க உத்தேசித்திருந்த பத்திரிகை 'சோதனை' என்ற பத்திரிகை. அதில் வெளியிடும் ஒவ்வொரு சிறுகதைக்கும் நூறு ரூபாய் சன்மானம் கொடுக்க வேண்டும் என்று அவர் சொல்லிக் கொண்டார். ஆனால் 'சோதனை' வெளிவரவில்லை. அதற்கு பதிலாக எங்கள் மூவருடைய தனித்தனி வாழ்க்கையிலும் ஏற்பட்ட சோதனைகள் போதும் என்று ஆகிவிட்டன''

– என்று குறிப்பிட்டிருக்கிறார் கு. அழகிரிசாமி

சொ.வி பற்றி பி.வி.சுப்ரமணியம் எழுதிய கட்டுரையில் உள்ள இன்னொரு தகவல் புதுமைப்பித்தன், செல்லப்பா ஆகிய இரண்டு

பேருக்குமே சுதந்திரப் போராட்டத்தை அடிப் படையாகக் கொண்டு ஒரு பெரிய நாவலை நான்கு பாகங்கள் மூன்று பாகங்களில் எழுத வேண்டும் என்ற ஆசை இருந்ததைத் தெரிவிக்கிறது.

''காலை 8 மணி முதல் 11 வரை பேசிக் கொண்டிருப்போம். அப்போது தாம் செய்து வந்த வேலை பற்றியும் மற்ற பலபல விஷயங்களையும் பற்றி எடுத்துரைத்து விட்டு 'ஒரு நல்ல திட்டம் போட்டிருக்கிறேன் தெரியுமா' என்றார் புதுமைப்பித்தன். பிறகு அந்தத் திட்டத்தை விவரித்தார்.

''சுதந்திர ஆர்வ ஆரம்ப நாட்கள் முதல் 1942 ஆகஸ்ட் புரட்சி முடிய உள்ள தேசிய அரசியலைப் பின்னணியாகக் கொண்டு நாலு பாகங்களில் ஒரு நாவல் எழுதப் போவதாகத் தெரிவித்தார். அதை அவர் பிறகு எழுதுவதற்கு முயற்சியாவது செய்தாரா என்பது எனக்குத் தெரியாது. அதற்குப் பிறகு நாங்கள் சந்திக்கவில்லை'' என்கிறார் பி.வி.சுப்ரமண்யம்.

புதுமைப்பித்தன் தமது திட்டப்படி சுதந்திரப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நாவலை எழுதவில்லை. ஆனால் செல்லப்பா தமது இறுதிக்காலத்தில் 'சுதந்திர தாகம்' என்ற பெயரில் மூன்று பாகங்கள் ஏறத்தாழ ஆயிரம் பக்கங்கள் கொண்ட நாவலை எழுதிவிட்டுத்தான் தமது இலக்கிய யாத்திரையையும் வாழ்க்கைப்பயணத்தையும் முடித்துக்கொண்டார்.

'எழுத்து' ஏழாவது இதழில் ஒரு விசேஷ அம்சம். செல்லப்பாவின் ஜீவனாம்சம் என்ற நாவல் இந்த இதழில்தான் தொடர்கதையாக ஆரம்பம்ஆகி இருந்தது.

6

''எழுத்து இரண்டு நிபந்தனைகளுடன் வெளிவருகிறது. 2000 பிரதிகளுக்குமேல் அச்சாகாது. நேரில் சந்தாதாரராகச் சேருபவர்களுக்குத்தான் கிடைக்கும் என்ற அறிவிப்புகள் நூதனமானவை தான்.

வாகசர்களின் தொகையைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக அல்ல. இலக்கிய வாசகர்களைத் தேடிப்பிடிப்பதுதான் 'எழுத்து'க்கு நோக்கம். ஏனெனில் 'பிடித்தமானது' என்ற சாக்கில் பொது வாசகர்களைத் திருப்திப்படுத்துவதற்கான வழிகளைக் கையாளும் உத்தேசம் 'எழுத்து'க்கு இல்லை. ''எழுத்து' எனக்குப் பிடித் திருக்கிறது'' என்று சொல்லக்கூடிய வாசகர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ, அவர்களை எழுத்து தேடும்''.

என்பதாக. பிடிவாதக்காரர் என்று எல்லோராலும் கருதப்பட்ட செல்லப்பா 'எழுத்து'வின் முதல் இதழிலேயே தமக்கேயுரிய பிடிவாத குணத்தோடு எழுத்து ஏட்டிற்கான கொள்கையைப் பிரகடனம் செய்திருக்கிறார்.

இன்றும் செல்லப்பா போலவே கொள்கைப் பிடிவாதங்களுடன் சிலர் சிற்றிதழ்களை நடத்தி வருகிறார்கள். தனிச்சுற்றுக்கு மட்டும் என்ற அக்மார்க் தனிமுத்திரையுடன் எதிர்காலத்திலும் பலர் – புதிது புதிதாக சிற்றிதழ்களைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவிட முன் வரக்கூடும்.

கொள்கைப் பிடிவாதத்துடன் நடத்தப்படும் சிற்றிதழ் எப்படி இருக்கவேண்டும்? எதை எதையெல்லாம் கொள்ள வேண்டும்; எதையெதையெல்லாம் தள்ள வேண்டும்? ''இப்படித்தான் இந்தப் பத்திரிகை வெளிவரும்'' என்று உயர்ந்த குறிக்கோள்களுடன் – அழுத்தமான நம்பிக்கையோடு சிற்றிதழ் நடத்தினால் அப்படிப்பட்ட ஏடுகளுக்கு என்னென்ன கஷ்டங்கள் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவதில் ஏற்படும்? அப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படாமல் தவிர்க்கவும் – ஏற்பட்டால் சந்தித்துச் சமாளிக்கவும் எந்தெந்த வழிகளில் செயல்படலாம் என்பதற்கெல்லாம் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் அமைந்திருக்கிறது செல்லப்பாவின் எழுத்து.

எழுத்து ஏடு மூலம் செல்லப்பா என்ன சாதித்தார் என்று தெரிந்துகொண்டு பிரமிப்பது போலவே – அந்த ஏட்டைத் தொய்வில்லாமல் தொடர்ந்து பத்தாண்டுகள் நடத்த செல்லப்பா எப்படி எப்படியெல்லாம் சிரமப்பட்டார், செயல்பட்டார் என்பதைத் தெரிந்துகொள்வது அந்த பிரமிப்பை அதிகபடுத்து வதாகவே இருக்கும்.

32 பக்கங்களே கொண்ட 'எழுத்து' ஏட்டின் முதல் ஏட்டிலேயே எழுத்து வளர வாசகர்கள் உதவி செய்ய வேண்டும் என்று 20ஆம் பக்கத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதிலே "இந்த 'எழுத்து' ஏடு உங்களுக்குத் திருப்தி அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்குத் தெரிந்த இலக்கிய வாசகர்களுக்கு சிபாரிசு செய்யுங்கள்; அவர்கள் முகவரியை எனக்கு எழுதி அனுப்புங்கள். அவர்களுக்கு எழுதுகிறேன், இது பெரிய ஒத்தாசை." என்று வாசகர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு இதழிலும் தலையங்கம் போல இலக்கிய கொள்கைகள், இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்துக்களை இடைவிடாமல் எழுதுவது போலவே 'எழுத்து' நடத்துவதில் தமக்கு ஏற்பட்ட சந்தோஷங்கள், சங்கடங்கள், ஆகியவைகளையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார் அவர். தம்மை இந்தப் பணியில் உற்சாகப்படுத்த வாசகர்களின் ஒத்துழைப்பைக் கோருவது போலவே – வாசகர்களை – சந்தாதாரர்களை சந்தோஷப்படுத்தவும் புத்தக அன்பளிப்பு போன்றவற்றின் மூலம் முயன்றிருக்கிறார் அவர்.

வாசகர்களின் ஒவ்வொரு கடிதத்தையும் செல்லப்பா ஊன்றிப் படித்திருக்கிறார். அதில் சொல்லப்பட்ட கருத்துக்களில் தம்மால் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளை 'எழுத்து' இதழ்களில் அமல் நடத்திக் காட்டி இருக்கிறார் என்பதை எழுத்து முதல் இதழிலிருந்து கடைசி இதழ் வரை காணமுடிகிறது.

இரண்டாவது இதழின் ஆசிரிய உரைப்பகுதியில் 'எழுத்து' ஏட்டின் ஆத்மா சுத்தமானது' 'குழந்தையின் நிர்வாணம் போன்ற புனிதமான தோற்றம் கொண்டிருக்கிறது' என்னும் இரண்டு வாசகக் கருத்துக்கள் என்மனதில் பதிந்தவை – என்று குறிப்பிட்டிருக்கிறார். சந்தா கட்டமுந்தியவர்களின் பெயர்களை மகிழ்ச்சி பொங்கிடக் குறிப்பிட்டு நன்றி தெரிவித்திருக்கிறார்.

''எழுத்து' முதல் சந்தாதாரரான கோமல் சாமிநாதனும் இலக்கிய ரசிகரான திருப்பூர் சின்னசாமியுட முறையே மனம் நிறைந்து எழுத்துக்கு அளித்த பாராட்டு. ஆத்மாவும் உருவமும் மனிதப் பிறப்புக்கு இன்றியமையாததுபோல, கலை இலக்கியப் படைப்புகளுக்கும்தான். இந்த இலக்கியப்படைப்புகளுடன் உறவு கொள்ளும் 'எழுத்து' தன் ஆத்மாவையும் தோற்றத்தையும் புனிதமாக என்றைக்கும் வைத்துக்கொ காண்டுவாசக நம்பிக்கைகளை நிறைவேற்றுவதில் முனையும்.

அதற்கான ஊட்டத்தை எழுத்துக்கு கொடுப்பது பாசகர் கையில்தான் இருக்கிறது. அது 'எழுத்து'க்கு கிடைத்துக் கொண்டே இருக்கவேண்டும்'' என்று வாசகர்களின் பெருமை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் அவர்.

அந்த இரண்டாவது இதழிலேயே வாசகர்கள் சந்தாத்தொகையை அனுப்புவதற்கான ஒரு மாதிரிப் படிவத்தை சந்தாரசீது அளவில் ரோஜா நிறக்காகிதத்தில் அச்சிட்டு இணைத்திருக்கிறார்.

<u>எழுத்து ஏடுகள் தவறாது கிடைக்க</u>

எனக்கு எழுத்து .... மாத ஏடு

ஏடு முதல் $\frac{\text{ஒரு ஆண்டுக்கு}}{\text{அரை ஆண்டுக்கு}}$ அனுப்பி வைக்கவும்.

$\frac{\text{ஒரு ஆண்டு – ரூ.5.00}}{\text{அரை ஆண்டு – ரூ. 2.50}}$

மணியார்டர் மூலம் சந்தா அனுப்பி இருக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

....

எழுத்து 19, ஏ பிள்ளையார்கோயில்தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை–5.

– என்று ஒரு படிவத்தை இணைத்திருக்கிறார்.

ஆறாவது இதழின் இரண்டாம் பக்கத்தில் 'எழுத்து' பற்றிய ஒரு முழுப்பக்க விளம்பரம். அதிலே சந்தா சேர்பவர்களுக்கு செல்லப்பா எழுதிய ஒரு புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்படும் என்ற அறிவிப்பு.

அந்த விளம்பரத்தை இங்கு காண்போம் :

உங்கள் இலக்கிய ரசனைக்கு 12 எழுத்துக்களும் ஒரு புத்தகமும்.

எழுத்து தமிழ் இலக்கியத் துறையில் புதுப்பாதை வகுத்துச் செல்லும் புதுவிதப் பத்திரிகை என்பதை அதன் இதுவரைய 6 ஏடுகளும் நிரூபித்துக் காட்டிவிட்டன. தன் ரகத்தில் இன்று தனியொரு பத்திரிகையாக வாசகர்களாலும் எழுத்தாளர்களாலும் கருதப்படுகிறது எழுத்து.

எழுத்துக்கு நீங்கள் இன்னும் நேரடி சந்தாதாரராக சேரவில்லை என்பது தெரியும். நேரடியாக சந்தாதாரர்களாக சேருபவர்களுக்குத் தான் அனுப்பப்படும் எழுத்து.

எழுத்து சந்தா அதிகம் அல்ல. தனிப்பிரதி 50 காசு ஆனாலும் பெரிய அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்படும் 'எழுத்து' வின் ஆண்டுச் சந்தா 5 ரூபாய்தான்.

இதோ !

இப்பொழுது உங்களுக்கு இன்னொரு சலுகையும் கிடைக்கிறது. மேலே உள்ள புத்தகம் (வாடிவாசல்) பற்றி தகவல்களைப் படியுங்கள்.

எழுத்துக்கு நேரடி சந்தாதாரர்களாக சேர்பவர்களுக்கு 'வாடிவாசல்' கதைப்புத்தகம் அன்பளிப்பாக அனுப்பப்படும்.

'எழுத்து'வில் வரும் ஒரு ஏடுகூடத் தவறாது உங்களுக்குக் கிடைக்க வகை செய்து கொள்ளுங்கள். நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு எழுத்து ஏடும் உங்களுக்கு நஷ்டம்.

இவ்வளவு சிக்கனத்தில் ஒரு ஆண்டுக்கு இலக்கியத்தரமான 12 ஏடுகளும் ஒரு சிறந்த கதைப்புத்தகமும் கிடைப்பது ஒரு அரிய வாய்ப்பு உங்களுக்கு.

வாடிவாசல்
சி.சு.செல்லப்பா

கொம்புக்கும் கைக்கும் நடக்கும் மரணப் போராட்டமான பாண்டிய நாட்டு ஜல்லிக்கட்டை வைத்து எழுதப்பட்ட கதை. விலை ரூ.1.00

– என்பது செல்லப்பா வெளியிட்ட விளம்பரம்.

எட்டாவது இதழில் சந்தா சேகரிப்பு எப்படி இருக்கிறது என்பது பற்றி வாசகர்களோடு பேசுகிறார் செல்லப்பா. அதிலே எழுத்து ஏட்டை நடத்துவதில் தாம் எதிர் கொள்ளும் கஷ்டங்களைப்பற்றி லேசாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

''எழுத்து' சந்தாதாரர்கள் தொகை, குருவி கொத்திச் சேகரிப்பதுபோல மெதுவாக உயர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் கணிசமான அளவுக்கு உயரவில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். எழுத்து வாசக அன்பர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகித்து ஆங்காங்கே உள்ள இலக்கிய ஆர்வம் படைத்த வாசகர்களுக்கு எழுத்து பற்றி அறிவித்தும், அத்தகைய வாசகர்களைப்பற்றி எனக்கு அறிவித்தும் ஒரு தொடர்பு ஏற்படுத்தி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரி முந்தின வேண்டுகோளுக் கிணங்கி பல வாசகர்களுக்கு 'எழுத்து' வை அறிமுகப்படுத்திக் கொடுத்திருக்கும் எழுத்து சந்தாதாரர் அன்பர்களுக்கு என் நன்றியையும் இந்தச் சந்தர்ப்பத்தில் செலுத்திக் கொள்கிறேன்.

காகித விலை உயர்வு காரணமாக சற்று தரம்குறைந்த காகிதத்தை உபயோகிக்க வேண்டி இருக்கிறது. நிலைமை சரியானதும் பழைய மாதிரி தரமிகுந்த காகிதத்தில் வெளியிட ஏதுவாக இருக்கும். எழுத்துக்கும் வாசகர்களுக்கும் உள்ள உறவு ஒரு குடும்ப உறவு போன்றதால் இவைகளைச் சொல்லிக் கொள்வது அவசியமாகிறது''

– என்று எழுதியிருக்கிற செல்லப்பா இன்னொரு தகவலையும் சொல்கிறார்! எழுத்து சந்தா கேட்டு இருந்த இடத்திலிருந்தே வேண்டுகோள் மட்டும் விட்டு விட்டு சும்மா இருந்துவிடவில்லை அவர்! எழுத்துக்கு சந்தா வழங்கக்கூடிய இலக்கிய அன்பர்களைத் தேடி ஊரூராகப் பயணமும் நடத்தி இருக்கிறார். அதனால் எழுத்து எட்டாவது இதழ் ஒன்றிரண்டு நாட்கள் தாமதமாகவே வெளிவந்திருக்கிறது. ஒருநாள் இருநாள் அல்ல மூன்று வாரகாலம்

தொடர்ந்துவெளியூர்களில் பயணம் செய்து இலக்கிய அன்பர்களை நேரில் சந்தித்து சந்தா சேர்த்திருக்கிறார் செல்லப்பா.

பத்தாவது இதழில் – வாசகர்களின் பாராட்டுகளையும் அவர்கள் கூறும் புகார்களையும் குறிப்பிட்டு பதிலளித்திருக்கிறார்.

''உண்மையாக எழுத்து ஒவ்வொரு ஏடு பற்றியும் வாசக அன்பர்கள் மனம் விட்டு எழுதித் தெரிவிக்கும் கருத்துக்களைப் படிக்கும்போது ரொம்ப திருப்தியாக இருக்கிறது'' என்று குறிப்பிடும் செல்லப்பா ''எங்கள் கடிதங்களை நீங்கள் வெளியிடவேண்டும் என்கிற அவசியமில்லை' 'ஏன், எங்களுக்கு நீங்கள் பதில் கூட எழுத வேண்டிய அவசியமில்லை. ' 'எழுத்து'வில் செயலில் காட்டியோ கருத்துக்களை வெளியிட்டோ செய்தால் போதும் என்று கூறுகிறார்கள் – என்பதாகக் குறிப்பிட்டு விட்டு வாசகர்களின் பெரும்பாலான புகார்கள் தொடர்ச்சியாக பல இதழ்கள் தபாலில் கிடைக்கவில்லை என்றிருப்பதை சுட்டிக்காட்டிவிட்டு அதற்கு சமாதானமும் கூறுகிறார்.

'எழுத்து' தவறாமல் முதல் தேதியன்றே அனுப்பப்படுகிறது. கிடைக்கவில்லை என்றால் எனக்கு உடனடியாக எழுதுங்கள்'' என்கிறார். பெரும்பாலும் ஆபீஸ் முகவரிக்கு அனுப்பப்படும் பிரதிகள்தான் சந்தாதாரர்களின் கைக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே வீட்டுவிலாசத்தைக் கொடுங்கள். தவறாது உங்கள் கைக்கே கிடைக்கும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார். ஒரு எழுத்து ஏடு கூட சந்தாதாரர்கள் இழந்துவிடக் கூடாது என்கிற அக்கறை தனக்கிருப்பதை எடுத்துக் காட்டிவிட்டு வாசகர்களுக்கு மறுபடியும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார்.

''தீபாவளி வருகிறது. உங்கள் நண்பர்களுக்கு பரிசாக நீங்கள் ஏதாவது தர விரும்பினால் அவர்களுக்கு ஒரு ஆண்டுக்கு எழுத்து சந்தா நீங்கள் கட்டி அவர்களையும் எழுத்து வாசகர்களாக்கி எழுத்துக்கும் ஒரு ஊக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். சந்தாதாரர்கள் ஆளுக்கொரு சந்தா சேர்த்துக் கொடுத்தால் 'எழுத்து' வரும் ஆண்டுக்கு இன்னும் பெருநடைபோட்டுச் செல்லும் வலுப்பெற்றதாக ஆகிவிடும் உங்கள் ஆதரவில்'' என்று வேண்டுகோளை முடிக்கிறார்.

இவைகள் எல்லாமே எழுத்து ஏடு – முதல் ஆண்டில் – 10 இதழ்களைத் தொடுவதற்கு முன்பே – செல்லப்பாவுக்கு ட ர்திரிகை

நடத்துவதில் ஏற்பட்ட சிரமங்களைத்தான் கோடிட்டுக் காட்டுவதாக இருக்கிறது என்றாலும் பல்வேறு சிரமங்களுக்கிடையிலும் 1970ம் வருடம் வரையில் மொத்தம் 119 இதழ்களைக் கொண்டு வந்து இருக்கிறார்.

காகித விலை உயர்ந்துவிட்டது என்று கவலைப்பட்டு அந்தக் கவலையை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் செல்லப்பா ''ஆகவே இந்த இதழ் முதல் எழுத்துவின் விலை 25 காசு உயர்த்தப்படுகிறது'' என்று விலையை அதிகரித்துவிடவில்லை. மாறாக ''தரம் உயர்ந்த காகிதத்தில் வெளியிட முடியவில்லை. நிலைமை சீரானதும் காகிதம் பழையபடியே தரமானதாக இருக்கும்'' என்று தான் கூறுகிறார்.

எனினும் எழுத்தைத் தொடர்ந்து நடத்துவதில் செல்லப்பாவுக்கு சிரமங்கள்தான் அதிகரித்திருக்கின்றனவே தவிர வாசகர்களின் அமோக ஆதரவு பெருகிவிடவில்லை என்பதை எழுத்துக்கு ஒரு வயது நிறைந்த பின் வெளிவந்த இதழ்கள் நிரூபிப்பவையாக இருக்கின்றன.

32 பக்கங்கள் என்பது போய் 24 பக்கங்கள் என்று பக்கங்களைக் குறைக்க வேண்டியிருக்கிறது. அதன்பிறகு அது 16 பக்கங்கள்தான் என்ற அளவுக்கும் வெளிவந்து பத்திரிகையை நடத்துவதில் செல்லப்பாவுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் 'எழுத்து' வைத் தொடர்ந்து நடத்தியே தீரவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்த செல்லப்பா – அந்தக் கஷ்டங்களை – விலையேற்றம் செய்து வாசகர்களின் தோள்களில் மட்டும் இறக்கி வைக்க சம்மதம் இல்லாதவராக இருந்திருக்கிறார். அதனால் தான் 9 ஆண்டுகள் முடிய – அவர் எழுத்து ஏட்டின் அச்சிடும் காகிதத்தை சற்றுத்தரம் தாழ்ந்த காகிதமாக்கி இருக்கிறார். பக்கங்களை 32 லிருந்து 24,20 என்று குறைத்து 16 பக்கங்கள் தான் என்றும் ஆக்கி இருக்கிறார். ஆனால் அந்த ஒன்பது ஆண்டுகளிலும் 50 காசுகள் விலை என்பதை ஒருபோதும் 60 பைசாவாகவோ 75 பைசாவாகவோ உயர்த்த முன்வரவில்லை. அதே கால கட்டத்தில் பல பத்திரிகைகள் பல தடவைகள் பத்திரிகை அச்சிடும் காகிதவிலை உயர்வு – தயாரிப்புச் செலவில் கூடுதல்

போன்றவைகளைக் காரணம் காட்டி சிறிது சிறிதாக விலையை உயர்த்திக் கொண்டே இருந்திருக்கின்றன. ஆனால் செல்லப்பா மட்டும் – தனது கஷ்டத்தை வாசகர்களும் பகிர்ந்து கொள்ளட்டுமே என்று நினைக்கவில்லை. விலையையும் உயர்த்தவில்லை.

2000 பிரதிகளுக்கு மேல் அச்சிடமாட்டேன், சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் பத்திரிகையை அனுப்புவேன் என்ற குறைந்தபட்ச விற்பனை நோக்கத்துடன்தான் செல்லப்பா பத்திரிகையை ஆரம்பித்தார். தமிழகத்தில் நல்ல படைப்புகளைத் தந்த பல புதிய தலைமுறை எழுத்தாளர்கள் பலர் அந்தக் கால கட்டத்தில்தான் முற்போக்கு இலக்கிய உலகின் அங்கீகாரம் பெற்று பிரபலம் அடைந்து கொண்டிருந்தார்கள். முற்போக்கு எழுத்தாளர்கள் பலர் – நல்லிலக்கியம் படைத்த பெருமைக்குரிய பலர் – மேடைதோறும் – ஏடு தோறும் "தமிழ்மக்களிடையே நல்லிலக்கியங்களுக்கு ஆதரவு பெருகிவருகிறது. வெகு ஜனப் பத்திரிகைகளின் மாயையிலிருந்து விடுபட்டு – தமிழ் வாசகர்கள் நல்ல இலக்கியம் பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றெல்லாம் பெருமை பேசிக் கொண்டிருந்தார்கள். என்றாலும் 'எழுத்து' போன்ற நல்லிலக்கிய விமர்சனம் – புதுக்கவிதை வளர்ச்சிக்கான பத்திரிகைக்கு – அதன் ஆசிரியர் தொடர்ந்து ஒன்பதாண்டுகள் 50 காசுக்கு மேல் விலையை ஏற்ற மாட்டேன் என்று பிடிவாதமாக பத்திரிகையை வெளியிட்டுக் கொண்டிருந்தபோதிலும் – அவரது அதிகபட்ச விற்பனை இலட்சியமான 2 ஆயிரம் வாசகர்களையே அது எட்ட முடியவில்லை, அல்லது ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனை என்ற குறைந்தபட்ச ஆசையைக்கூட அதனால் பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை.

செல்லப்பாவும் தமது பிடிவாதத்தை – நல்ல நோக்கத்தின் அடிப்படையிலான பிடிவாதத்தை – 10ஆவது ஆண்டுத் தொடக்கத்தில் சற்றே தளர்த்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

பத்தாவது ஆண்டில் ஏப்ரல் மாதம் வெளிவந்த 'எழுத்து' இதழ் அட்டையே செல்லப்பாவின் நல்ல பிடிவாதம் தளர்ந்து விட்டதை பறை சாற்றுவதாக அமைந்திருந்தது.

எழுத்து 112வது இதழின் அட்டையிலேயே எழுத்து என்ற தலைப்பின் கீழே 'இலக்கியக் காலாண்டு ஏடு' என்ற புதிய சொற்றொடர் இடம் பெற்றிருந்தது.

பக்கங்களும் 42 என்பதாகக் கூடிவிட்டதோடு – விலையும் மும்மடங்காக ஒண்ணரை ரூபாயாக உயர்ந்துவிட்டது. இந்த மாற்றங்கள் பற்றி வாசகர்களுக்கு 'திருப்பம்' என்ற தலைப்பிட்டு எழுதிய தலையங்கத்தில் விளக்கம் அளித்திருக்கிறார் செல்லப்பா.

அதிலும் கூட செல்லப்பாவின் நேர்மையும் – உண்மைகளை ஒளிவு மறைவற்ற வகையில் – சுற்றி வளைக்காமல் பளிச்சென்று பட்டுக்கத்தரித்தது போல – தயக்கமின்றி வெளியிடும் அவரது சுபாவமும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

''இந்த ஏட்டிலிருந்து 'எழுத்து' கால் ஆண்டு ஏடாக குவார்டர்லியாக உங்கள் கைக்கு வருகிறது.

சென்ற ஏட்டிலேயே இதைத் தெரிவிக்க இயலாமல் போனதுக்கு சந்தாதாரர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஒன்பதே கால் ஆண்டுகளாக 111 ஏடுகள் மாதம்தோறும் வந்து கொண்டிருக்கும் 'எழுத்து'க்கு இந்த மாறுதல் ஏன் என்பதை நான் விளக்கவேண்டியவன்.

இலக்கியப்பத்திரிகை சம்பந்தமாக மதிப்பிட எனக்குத் தெரிந்திருந்தால் அப்போதே நான் குவார்டர்லியாகவேதான் ஆரம்பித்திருப்பேன்.

'எழுத்து' மாதிரி நோக்கம் உள்ள பத்திரிகைகளுக்கு அதுதான் சரியானது என்பது உலகத்து மொழி இலக்கிய பத்திரிகை உலகத்தைப் பார்த்ததிலிருந்து தெரிகிறது.

இலக்கியக் கருத்துக்கள் சுடச்சுடத் தரவேண்டியவைகள் இல்லை. நின்று நிதானித்து அசைபோடும் போக்காக ஆராய்ந்து மதிப்பீடு செய்ய அவகாசம் வேண்டும். படைப்புகள்தான் சுடச்சுடத்தரப் பட வேண்டியவை உடனிகழ் இக்காலத்திலேயே அவைகளுக்கு உறவு ஏற்பட்டாக வேண்டும்.

நிதானமான, ஆராய்வான செயல்படுகைக்கு காலாண்டு ஏடு வசதியாக பொறுத்தமாக இருக்கும் என்றுபடுகிறது. ஆனாலும் குவார்டர்லியிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. சில தகவல்களைச் சொல்லும்போது ரொம்ப நாளாகிவிடும். பழசாயும் போயிருக்கலாம்.

ஒன்றுக்குப் பார்த்தால் மற்றொன்றுக்கு சங்கடம்தான். பத்தாண்டுகள் மாத ஏடாகப் பார்த்தாயிற்று. இனிகாலாண்டு ஏடாகப் பார்ப்போமே என்ன செய்கிறது என்று!''

– என்பதாக 'எழுத்து' வை மாத ஏடாக நடத்த முடியாமல் காலாண்டு இதழாக நடத்த வேண்டியதற்குத் தன் மீதே பழிபோட்டுக் கொள்கிறார் செல்லப்பா. அப்போதும்கூட ''வாசகர்கள் ஆதரவு எதிர்பார்த்தபடி இல்லை. தமிழகத்தில் நல்ல இலக்கியம் நல்ல விமர்சனம் ஆகியவைகளை ஆதரிப்போர்–அதற்காக மாதம் 50பைசா செலவிடக்கூடிய வாசகர்கள் ஒரு இரண்டாயிரம் பேர் கூட இல்லை என்று வாசகர்கள் மீது பழி போட அவருக்கு மனமில்லை என்பதையே ''இலக்கியப் பத்திரிகை சம்பந்தமாக ஆரம்பத்திலேயே சரியாக மதிப்பிட எனக்குத் தெரிந்திருந்தால் அப்போதே நான் குவார்ட்டர்லியாகவே ஆரம்பித்திருப்பேன்'' என்னும் அவரது சுயவிமர்சனம் காட்டுவதாக இருக்கிறது.

காலாண்டு இதழாக மாற்றப்பட்ட 'எழுத்து' எப்படி வரும், கடந்த 9 ஆண்டு கால எழுத்துவின் சாதனைகள் என்ன? வாசகர்கள் சுட்டிக்காட்டிய குறை என்ன? வாசகர்களுக்கு மதிப்பளித்து எழுத்து –எப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டதாக வெளிவரப்போகிறது? என்ற கேள்விகளுக்கும் இந்தத் தலையங்கத்தில் செல்லப்பா விளக்கம் அளித்திருக்கிறார்.

''இப்படி ஒரு மறு ஆரம்பமாகத் தொடர்கிறபோது, அதாவது இன்னொரு கட்டத்துக்கு 'எழுத்து' நகர்கிறபோது வளர்ந்தும் புதுசாகவும் இருக்க வேண்டும் என்ற நினைப்பு தோன்றுவது இயல்பே.

எழுத்து பற்றி – இந்தப் பத்தாண்டுக் காலத்தில் தற்காலப் புத்தகங்கள் பற்றிய மதிப்புரைகள் இல்லை. கதைகள் இல்லை. தமிழ்நாட்டில் சிறந்த எழுத்தாளர்கள் என்று அவர்களால் கருதப்படுபவர்கள் எழுதவில்லை. ஒரு சிலரைப்பற்றியே திரும்பத்திரும்ப மதிப்பிடப்படுகிறது. ஒரே குரலாக ஒலிக்கிறது. மாறுபட்ட கருத்துக்களுக்கு இடம் கொடுப்பதில்லை என்றெல்லாம் என் நேர் காதுக்கே வந்ததுண்டு. நான் எல்லாத்துக்கும் சமாதானம் சொல்லமுடியாது.

'எழுத்து'வில் இருந்த அளவுதான் சரி என்றும் அடம் பிடிக்கமாட்டேன்.'' என்கிறார் செல்லப்பா!

எழுத்து பற்றிக் கூறப்பட்ட குறைகள் என்று செல்லப்பா பட்டியலிட்டிருப்பதைப் படிக்கும் ''எவருக்கும் இப்போது வெளிவரும் சிறுபத்திரிகைகள் மட்டும் என்ன? இதே புகார்கள்தானே – ஒவ்வொரு சிற்றிதழ் மீதும் வாசகர்களால் மட்டுமல்ல; எழுத்தாளர்களாலேயே கூறப்படுகின்றன?'' – என்று கேட்கத் தோன்றும்'. அவ்வளவு துல்லியமாக – கூறப்பட்ட குறைகளை அளந்து சொல்லியிருக்கிறார் அவர்.

முதலில் 'எழுத்து' – ஒன்பதாண்டுகளில் என்ன சாதித்தது என்பதை தன்னடக்கத்தோடு சுட்டிக்காட்டுகிறார்.

''முதலில் 'எழுத்து' மாதிரி ஒரு பத்திரிகை தமிழுக்கே புதுசு. முதலாவது' இன்று வரை மற்றொன்று தோன்றவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். விமர்சனம் தமிழில் வளராத துறை. எனவே 'ஸ்பேட் ஒர்க்' என்கிறோமே சிரமமான பூர்வாங்க வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதைத்தான் 'எழுத்து' இந்தப் பத்தாண்டுக்காலத்தில் செய்ய முயன்றிருக்கிறது என்றே நான் கருதுகிறேன். அந்த வேலையாவது கணிசமாகச் செய்யப்பட்டிருக்கிறதா என்பதும் எனக்கு இன்னும் சந்தேகமே. 'எழுத்து'வோடு உறவு கொண்டவர்கள்தான் மதிப்பிடவேண்டும்.

ஆனால் ஒன்று; ஓஹோ என்று இல்லாவிட்டாலும் இன்று தமிழில் இலக்கிய விமர்சனக் கூட்டங்கள், கட்டுரைகள் படிப்பது, நூல்களையும் ஆசிரியர்களையும் விமர்சிப்பது, விவாதக் கருத்தரங்குகள், பட்டிமன்ற சர்ச்சைகள்,விமர்சன நூல்கள் வெளிவருதல் ஆகியவை நடப்பது 'எழுத்து' வின் பத்தாண்டுக்கால பாதிப்பால்தான் என்று நினைக்க முடிகிறது.''

– என்று 'எழுத்து' வின் பத்தாண்டுகள் சாதனை பற்றிக் குறிப்பிடும் செல்லப்பா காலாண்டிதழாக மாறிஇருக்கின்ற எழுத்து – எப்படி இருக்கும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார்.

''மேலே 'எழுத்து' சம்பந்தமாக எடுத்துச் சொல்லப்பட்ட விருப்பங்கள் நிறைவேறக் காலத்துக்குக் காத்திருப்பதுதான் சரி என்று பட்டது. இந்தப் பத்தாவது ஆண்டில் அவைகளை நிறைவேற்ற

முயலலாம். இந்த ஏடுபற்றி விளக்குவதை விட இது உங்களிடம் தன் புது தொனியைக் காட்டுகிறதா என்பதை உங்கள் பார்வைக்கே விட்டுவிடுகிறேன்.

'எழுத்து' ஆக்க ரீதியாக மதிப்பீட்டில் ஈடுபடுமே தவிர தெருச்சண்டைக்காரர்களுக்கு குளிர்ச்சி' என்றபடி – சத்தான விவகாரம் இல்லாத பட்டிமன்ற சர்ச்சைகளை விரும்பாது. புதுக்கவிதை சோதனை முயற்சிகள் சம்பந்தமாக இயங்க அக்கறை கொண்டதால் அதில் சாதனை காட்டியவர்களை அடிக்கடி பிரஸ்தாபித்து ஆராய்ந்து படைப்புக்கு ஊக்கம் அளிக்கச் செய்வது அவசியமானதே. இனி படைப்புகள் மதிப்புரைகள் கணிசமாக இடம் பெறும்; நான் திட்டமிடலாம் நல்ல சிறுகதைகளும் மதிப்புரைகளும் கட்டுரைகளும் கிடைக்க வேண்டுமே; பார்ப்போம்.''

– என்று குறிப்பிட்டிருக்கிறார் செல்லப்பா.

தலையங்கத்தின் இறுதியில் சந்தாதாரர்கள் மூலமே பத்திரிகை நடத்துவது என்கிற தமது முதல் இதழ்ப் பிரதிக்ஞையின் அடிப்படையில் இந்தப் பத்தாவது ஆண்டிலும் சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்விடுக்கிறார்.

''எழுத்துவின் பொருளாதார நிலை பற்றியும் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். தன்னைத்தானே பார்த்துக்கொள்ளக்கூட முடியவில்லை. கையைக் கடித்தது.

சந்தா மெலிவால் 'எழுத்து'ம் ஈசலிறகு போல் வந்தது. சென்ற ஆண்டு தடுமாறியும் வந்தது; உங்களுக்குத் தெரியும். இப்போது புதுப்பித்த முயற்சியில் 'எழுத்து' இறங்கி இருக்கிறது. தடுமாறாமல் வர சந்தா முக்கியம்.

இந்த 'எழுத்து' உங்களுக்கு நல்ல திருப்பம் காட்டுவதாகப் பட்டால் ஆளுக்குக் குறைந்தது ஐந்து சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும்படிக்கேட்டுக் கொள்கிறேன். இந்த ஏடு பற்றி உங்கள் கருத்துக்களை எதிர் பார்க்கிறேன் '' என்று முடித்திருக்கிறார் செல்லப்பா.

செல்லப்பாவின் சந்தா சேகரிப்பிற்கான வேண்டுகோளுக்கு பலன் இருந்ததா? இல்லை என்றே தோன்றுகிறது.

112ஆவது இதழ்முதல் காலாண்டிதழாக மாற்றப்பட்ட எழுத்து 40 பக்கங்கள் – விலை ரூபாய் 1.50 என்று மூன்றேமூன்று இதழ்கள்தான் வந்தது. அந்த மூன்றாவது இதழின் கடைசிஅட்டையில் 12 எழுத்து இதழ்களுக்கான மூன்றாண்டுச் சந்தா கட்டினால் (15ரூபாய்) இரண்டு புத்தகங்கள் (3.50 முதல் 4.25 மதிப்புள்ளவை) அன்பளிப்பாகத் தரப்படும் என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த அறிவிப்பின் தலைப்புப் பகுதியில் மிகவும் உருக்கமான வேண்டுகோள் ஒன்றையும் சந்தாதாரர்களுக்கு விடுத்திருந்தார்.

"அன்புள்ள வாசகர்களே ,

எழுத்து, எழுத்து பிரசுரம், நான் மூன்றும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு பத்தாண்டு காலமாக செயல்பட்டுவரும் ஒரு முக்கூட்டு முயற்சி. விமர்சனத்திற்காக ஒரு பத்திரிகையையும், இலக்கியத்தரமான – மற்ற புத்தகப் பிரசுரங்கள் போட முன்வராத எழுத்தாளர்களது நல்ல படைப்புகளைப் புத்தமாகக் கொண்டுவர ஒரு பிரசுரத்தையும் சேர்த்து துணிந்து ஒருவனாக நடத்தி வருவது அவ்வளவு சுலபமான காரியமாக இல்லை.

எழுத்து – எழுத்து பிரசுரம் இரண்டையும் வைத்துத் தான் நான். என்னைவைத்துதான் அவை.

இரண்டும் தொடர்ந்து வளர திடமான இலக்கியப் பணிக்கு போதிய ஆதரவு அவசியம் – வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். அதுக்கான ஒரு திட்டம் போட்டிருக்கிறேன். கீழே விவரம் வேண்டுகோளைப் பொருட்படுத்தி தக்க ஆதரவு தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்."

– என்பது செல்லப்பாவின் வேண்டுகோள் (அவரது திட்டம் என்பது மூன்று ஆண்டு சந்தா செலுத்தினால் தொகை ரூ.3.50 முதல் 4.25 ரூபாய் மதிப்புள்ள இரண்டு புத்தகங்களும், இரண்டு ஆண்டு சந்தா செலுத்தினால் ரூபாய் 2 முதல் ரூ.2.50 மதிப்புள்ள இரண்டு புத்தகங்களும், ஒரு ஆண்டு சந்தா செலுத்தினால் ரூ.1 முதல் 1.25 மதிப்புள்ள புத்தகங்களும் அன்பளிப்பாக அனுப்பப்படும் என்பதுதான்.)

இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட இதழுக்கு – அடுத்து வந்த 115ஆவது இதழின் விலை ரூ.1.50 லிருந்து ரூ.1.25ஆகக்

குறைக்கப்பட்டிருக்கிறது. (அதே 40 பக்கம்) அதன்பிறகு 116ஆவது இதழும் அதே விலையில் 40 பக்கங்களுடன் வந்தது. 117ஆவது இதழின் பக்கங்கள் 32ஆகக் குறைந்தது118-119 ஆகிய கடைசி இரண்டு இதழ்களின் பக்கங்களோ மேலும் குறைந்து 24 பக்கம்தான் என்றாகிவிட்டது.

பனிரெண்டாம் ஆண்டு என்ற தலைப்போடு 1970 ஜனவரி மார்ச் என்று தேதியிடப்பட்ட 119ஆவது இதழோடு 'எழுத்து' ஏட்டை செல்லப்பா நிறுத்திவிட்டார்.

பிடிவாதக்காரர் என்று எல்லோராலும் கணிக்கப்பட்ட செல்லப்பா என்ற எழுத்துப் போராளி – தமக்கே உரிய பிடிவாதத்துடன் "இப்படித்தான் எனது பத்திரிகைவரும்" என்று உயர்ந்த நோக்கம் – நெஞ்சுநிறைந்த ஆசை – தமிழ்மக்கள்மீது அளவுக்கதிகமாகக் கொண்டிருந்த நம்பிக்கை – எதிர்பார்ப்பு ஆகியவைகளையே கைமுதலாகக் கொண்டு நடத்திய ஒரு பத்திரிகை – தொடர்ந்து அவரால்நடத்தப்பட முடியாமல் நின்றுவிட்டது என்பது வருத்தத்துக்குரிய விஷயம் மட்டுமல்ல. முற்போக்கு, பிற்போக்கு, நல்லிலக்கியம் நச்சிலக்கிய, என்றெல்லாம் விண்முட்டப் பேசுகிற படைப்பாளிகள் – வாசகர்கள் எல்லோருமே வெட்கப் படவேண்டிய விஷயம்தான்.

செல்லப்பா நடத்திய எழுத்து வெளிவந்து கொண்டிருந்தபோது அதைப்பற்றிக் குறை கூறியவர்கள், குற்றஞ்சாட்டியவர்கள், கேலிபேசியவர்கள் எல்லாம் உண்டு.

எழுத்து – நிறுத்தப்பட்டு இன்று 32 வருடங்களாகிவிட்டன. இன்றும் செல்லப்பா போலவே உன்னத நோக்கங்களோடு இலட்சியப் பிடிப்புடன் பலர் சிறிற்தழ்களை நடத்தி வருகிறார்கள். இன்றும் அந்த சிறிற்தழ்கள் மீது செல்லப்பா காலம் போலவே குறைகள் கூறப்படுவதையும் குற்றச்சாட்டுகள் எழுவதையும் பார்க்கிறோம். சிற்றிதழ்களால் சிற்றிதழ்களை நடத்து வோரால் படைப்பாளிகளிடையே பலகோஷ்டிகள் உருவாகி விட்டன. முன்புபோல – நல்லதை இனம் கண்டு பாராட்டும் போக்கு இப்போது இல்லை. ஒரு கோஷ்டியைச் சேர்ந்த படைப்பாளிகள் – இன்னொரு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்று தாங்கள் கருதும் படைப்பாளிகளைத் தாக்குகிறார்கள்; விமர்சனம் என்ற பெயரால்

அவமதிக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு – எல்லாவற்றையும் விட அதிகமான அளவில் ஆனதாக இன்றைய காலகட்டத்தில் பிரதான இடம் வகிப்பதைப் பார்க்கிறோம்.

கருத்துக்கள் – விமர்சனங்கள் எப்படியும் இருக்கட்டும், இன்றைய சிற்றிதழ்கள் செல்லப்பாவின் எழுத்தைப்போல அல்லாமல் அதிக அளவில்10 ஆயிரம் 20 ஆயிரம் என்பது அளவிலாவது வாசகர்களைப் பெற்றிருக்கிறதா என்று பார்த்தால் – எல்லாச் சிற்றிதழ்களின் ஒட்டு மொத்த விற்பனையைக் கூட்டிப் பார்த்தாலும் 20 ஆயிரம் பிரதிகள் விற்கின்றனவா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது.

ஆகவே செல்லப்பாவின் 'எழுத்து' முயற்சி தோற்று விட்டதாகக் கருத இடமில்லை. இன்று ஏராளமான சிற்றிதழ்கள் செல்லப்பாவின் 'எழுத்து' போலவே சிறந்த படைப்புகளுடன் சிறந்த விமர்சனங்களுடன் வருகின்றன. செல்லப்பாவின் ஏட்டை விட இப்போது வரும் சிற்றிதழ்களின் அட்டையும், அச்சும் வடிவமைப்பும் அச்சிடப்படும் காகிதமும் அற்புதமாக இருக்கிறன்றன! என்றாலும் சிற்றிதழ்களின் எண்ணிக்கை மட்டும் – அதனை நடத்திக் கொண்டிருப்பவர்களே மகிழ்வடையும்படியாக இல்லை என்பது எதைக் காட்டுகிறது? நல்ல ஏடுகள்; நல்ல இலக்கியம் வளரவேண்டும் என்று ஆசைப்படுகிற வாசகர்கள் –படைப்பாளிகள் – ஏடு நடத்துவோர் அனைவருமே சிந்தித்து விடைகாண முன்வர வேண்டும்.

மற்றபடி இந்த அத்தியாயத்தை 'எழுத்து'க்கு பத்துவயது நிரம்பியபோது 1959–1968 என்ற தலைப்பிட்டு செல்லப்பா எழுதிய தலையங்கத்தை சுட்டிக்காட்டி நிறைவு செய்வது பொறுத்தமாக இருக்கும். செல்லப்பாவும் தனது ஏட்டின் பத்தாண்டுக் காலத்தை அதன் நிறை-குறைகளை வாசகர்கள் தான் சரியாக கணித்துக் கூறமுடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தத் தலையங்கம்- இன்றுசிற்றிதழ் நடத்துவோர்-'சிற்றிதழ்களில்தங்களதுபடைப்புகள் வருவதைப் பெருமையாகக் கருதும் படைப்பாளிகள்' சிற்றிதழ்களை விரும்பி-வாங்கிப் படிப்பதால்நான்மற்றவாசகர் களைவிட இலக்கியப் பரிச்சயத்திலும் இலக்கியங்களில் தோய்வதிலும் சற்று வித்தியாசமானவன்; உயர்ந்தவன் என்று கருதுகிற விஷயஞானம்

கொண்ட வாசகர்களும்படித்து -சிற்றிதழ்களின் வெற்றியோ தோல்வியோ எதன் அடிப்டையில் கணிக்கப்பட வேண்டும் என்பதை செல்லப்பாவின் அனுபவம் மூலம் தெரிந்து கொள்ளவேண்டிய உண்மையின் வெளிச்சமாகவும் குரலாகவும் அமைந்திருக்கிறது.

''இந்த ஏட்டோடு எழுத்துக்கு பத்து வயது நிரம்புகிறது. அதாவது இங்கிலீஷில் : டிகேட் என்கிறோமே-பத்து ஆண்டுகள், என்று குறிப்பிடும் படியான கால அளவை எட்டிவிட்டது. ஒரு சின்னப்பத்திரிகை, விமர்சனம், புதுக்கவிதை இரண்டில் மட்டும் முதன்மையான அக்கறை காட்டி வந்திருக்கும் ஒரு இலக்கிய ஏடு பத்து ஆண்டுகள் வந்து விட்டது என்றால் நம்புவது சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனால் இது நடப்பு, தமிழ் இலக்கியப் பத்திரிகைத் துறையில் இதுவரை காணாத ஒன்று. இந்த சாதனையுடன் அடுத்த ஏடுமுதல் பதினோறாவது ஆண்டுக்குள் நுழைந்து அடுத்த கால அளவான மாமங்க காலத்தை நோக்கி முன்னேற இருக்கிறது.

ஆனால் வெறுமனே கால அளவை மட்டும் கொண்டு எழுத்துவின் சாதனையை பெரிசுபடுத்தி பேசுவதும் சரியாகாது. எழுத்து தன் வயதுக்கேற்ற ஆளுமையை சாதனையாகப் பெறக்கூடுமானால்தான் அதன் வாழ்வு நாட்கள் முக்கியமானதாகும். குறிப்பிடத்தக்கதாகும். எழுத்துக்கு ஆளுமை என்று எந்த அர்த்தத்தில் கூறுவது கணிப்பது? முதலில் அதுக்கு ஒரு தனித்தன்மை இருக்க வேண்டும். மற்றவைகளிலிருந்து மாறுபட்டு ஒலிக்கும் ஒரு தொனி இருக்க வேண்டும். அந்தத் தொனியும் எடுப்பானதாக இருக்க வேண்டும். அதோடு திட்ட வட்டமான நிச்சயமான முக்கியத்துவம் வாய்ந்த, பொருட்படுத்தத் தக்க பொருள் கொண்டதாக இருக்க வேண்டும். அதோடு முத்திரை இட்ட குணம் கொண்டதாக இருக்கவேண்டும். இவை எல்லாம் சேர்ந்துதான் ஒன்றை தனித்து தூக்கிக்காட்டும்.

இந்த குணங்களை வைத்து எழுத்துவின் பத்தாண்டுகால 114 ஏடுகளை மொத்தமாக பார்த்ததில் தெரியவருவது என்ன? எழுத்துவில் இதுவரை வெளியாகி இருக்கும் ஏறக்குறைய 500 கட்டுரைகளும், 700 கவிதைகளும் மற்றும் சிறுகதைகள், மதிப்புரைகளும் இதர அம்சங்களும் பொருட்படுத்தத் தக்கனவா? விமர்சனத்துறையிலும்,

கவிதைத் துறையிலும் ஒரு திருப்பம் விளைவித்திருக்கிறதா? வளர்ச்சி, முன்னேற்றம் தெரிகிறதா? இவைகளில் வெளியான கருத்துகளின் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா? இவைகளில் தொனித்த படைப்பு அனுபவம் மதிப்புள்ளதாக தற்காலத்ததாக இருந்திருக்கிறதா? இதுமாதிரி எல்லாம் இன்னும் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு பதில் கிடைக்கிறதா எந்த மாதிரியான பதில் என்று பார்க்க வேண்டும். இந்த சிறிய தலையங்கத்தில் நாம் கேள்விகளைத் தான் எழுப்பியிருக்கிறோம், பதிலை நாம் சொல்வதைவிட 'எழுத்து'வோடு ஆரம்ப முதல் தொடர்பு கொண்ட வாசகர்கள்ஆராய்ந்து பார்க்க வேண்டும். தங்கள் கருத்தையும் தெரியப்படுத்தும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

ஆனால் இதை மட்டும் நாம் சொல்லமுடியும். விமர்சனம் புதுக்கவிதைத்துறைகளில் 1958க்கு முன் அதாவது 'எழுத்துவருமுன் இருந்த சூழ்நிலையையும், சாதனையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'எழுத்து'வின் பாதிப்பு நன்றாகத் தெரிகிறது. புதிதாக வெளிவரும் பத்திரிகைகளில் வரும் விமர்சனக் கட்டுரைகளும், சென்னையிலும் மற்ற இடங்களிலும் உள்ள வாசகர் சங்கங்கள் நடத்தும் கூட்டங்களில் பேசி, எழுதி வெளியாகும் பேச்சு, கட்டுரை கருத்துக்களும் 'எழுத்து'வின் பாதிப்பை நிரூபிப்பவை. ஒரு அன்பர் 'மணிக்கொடிகால' கட்டத்திற்குபின் 'எழுத்து'தான் கால கட்டமாக அமைவது என்று குறிப்பிட்டதுபோல், 'எழுத்து'வின் சாதனை ஆகும். இதில் நமக்குக் கொஞ்சம் திருப்தி. கொஞ்சம் என்றதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். 'எழுத்து'க்கு ஆதர்சமாயும் அதன்முதல் ஏடுமுதல் படைப்புத் தொடர்பு கொண்டும் புதுக்கவி தைத்துறையில் 'எழுத்து'வில் வளம் பெருக மூலகாரணமாவும் இருந்து வரும் பிச்சமூர்த்தியும் 'எழுத்து'வின் பத்தாண்டுப்போக்கு, சாதனை பற்றி கொஞ்சம்தான் திருப்தி தெரிவிக்கிறார்.

'தீபம்' பேட்டியில் 'எழுத்து' இலக்கியவட்டம், போன்ற பத்திரிகைகள் இத்துறையில் (விமர்சனத்துறையில்) செய்துள்ள முயற்சி போதாது என்று கூறியிருக்கிறார். அவர் அபிப்பிராயத்தை நாம் மதிப்போடு ஏற்றுக் கொள்கிறோம். விமர்சனம் சம்பந்தமாக இந்தப் பத்தாண்டு காலத்தில் ஒருஆரம்பம் செய்திருக்கிறது எழுத்து. அது நல்ல ஆரம்பமாக இருக்கிறது என்று தான் கருதுகிறோம்.

புதுக்கவிதை சம்பந்தமாக ஒரு வார்த்தை இந்தப் பத்தாண்டுக் காலத்தில் வளம் பெருகி, மற்றப் பத்திரிகைகள் சிலவும் அதை வரவேற்றுப் பிரசுரிக்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட 'எழுத்து' சாதித்திருக்கிறது. சிறந்த கவிதைகள் பல தமிழில் பிறந்திருப்பது தமிழ் கவிதைக்கு இன்னும் நல்ல எதிர்காலம் இருப்பதற்கு அறிகுறியாகும்.

கடைசியாக – வெளிநாடுகளில் வெளியாகும் சிறந்த இலக்கிய ஏடுபோல 'எழுத்து' ஆக வேண்டும் என்பதே இலட்சியம். வரும் ஆண்டில் அதுக்கான செயல்முறையை கையாள உத்தேசம் வாசகர்கள் தங்கள் சந்தா ஆதரவை தொடர்ந்து தருவதுடன் அதிகப்படுத்தியும் தரும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

– என்று எழுதியிருக்கிறார் செல்லப்பா.

ஆரம்ப ஏடு முதல் கடைசி ஏடுவரை செல்லப்பா எத்தனை எத்தனையோ முறை'' சந்தா அனுப்புங்கள். சந்தா சேர்த்துக்கொடுங்கள்'' என்று வேண்டுகோளுக்கு மேல் வேண்டுகோளாக விடுத்திருந்தும் அவர் எதிர்பார்த்தபடி சந்தாதாரர்கள் சேராததால் 'எழுத்து' அவரே வர்ணித் திருப்பதுபோல் புற்றீசலின் சிறகாகப் பக்கங்களால் மெலிந்து ஒரு கட்டத்தில் காலாண்டிதழாக மாறி கடைசியில் நின்றே போய்விட்டது.

செல்லப்பாவையும் செல்லப்பாவின் எழுத்து ஏட்டின் இலக்கிய வளர்ச்சிக்கான பணிகளையும் நினைவு வைத்திருப்பவர்களும் இன்றும் செல்லப்பா நடத்திய எழுத்து ஏட்டின் தொகுப்புகளைத் தேடி படிப்பவர்களும், இப்போது செல்லப்பா போலவே – உயர்ந்த நோக்கங்களோடு வெளிவந்து கொண்டிருக்கும் சிற்றிதழ்களுக்கேனும் சந்தா செலுத்த வேண்டும்; சந்தா சேர்த்துத் தர வேண்டும். அதுவே செல்லப்பாவுக்கு செலுத்தும் சிறந்த அஞ்சலியாக இருக்கும்.

7

"அரசியலில் நிரந்தர எதிரிகள் என்றும் யாரும் கிடையாது, நிரந்தர நண்பர்கள் என்பதாகவும் யாரும் கிடையாது' என்று அரசியல்வாதிகள் அடிக்கடி சொல்வதைப் பார்த்திருக்கிறோம்.

இலக்கியத்திற்கும் இது பொருந்தும் என்று தான் தோன்றுகிறது. 'பாரதியார் உலக மகாகவி' என்று வ.ரா. சொல்ல-"அப்படிச் சொல்வது சரியல்ல' என்று கல்கி எழுத- அது ஒரு பெரிய சர்ச்சையாகி-அதையே ஒரு சிறு புத்தகமாக வெளியிடும் அளவுக்குப் போய்விட்டது! ஆனால் வ.ரா. வோடு வாதிட்ட கல்கிதான் எட்டையபுரத்தில் பாரதிக்கு மணிமண்டபம் எழுப்ப முன்வந்தார்.

அது போலவேஇலக்கிய விமர்சன உலகில் க.நா.சு வும், சி.சு.செல்லப்பாவும் நேர் எதிர் துருவங்களாக மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களாக இருந்ததும் உண்டு. இரண்டு பேருமே சேர்ந்து 'எழுத்து' மூலம் விமர்சனக்கலை வளர்ச்சிக்காக ஒன்றுபட்டு உழைத்ததும் உண்டு ! அதன்பிறகு மறுபடியும் மனவேறுபாடு கொண்டதும் உண்டு!

'எழுத்து' என்ற பெயரில் விமர்சனக்கலை வளர்ச்சிக்கு என ஒரு ஏடு வேண்டும் என்ற எண்ணம் செல்லப்பாவுக்கு எப்படி உண்டாயிற்று? சிறுகதைகள் எழுதுவதில் மட்டும் அக்கறை கொண்டிருந்த செல்லப்பாவை விமர்சனத் துறைக்குள் தள்ளிவிட்டவர்கள் யார்?

செல்லப்பாவே அதுபற்றி 'என்சிறுகதைப்பாணி' என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

"மைலாப்பூரில் இளைஞர்கள் சிலர் சேர்ந்து நடத்திய ஒரு கூட்டத்தில் லா.ச.ராமாமிருதம் கதைகளை அவரை வைத்துக் கொண்டே ஆராய்ந்து கூட்டத்துக்கு என்னை தலைமை வகிக்கச் சொன்னார்கள். அதுதான் முதல் கூட்டம். அதுக்கு பிறகு என்னையே ஒரு கூட்டத்தில் சிறுகதை பற்றி பேசச் சொன்னார்கள். இப்படி என் ரசனை வெளியீட்டு அனுபவம் ஆரம்பம். அப்போது தி. ஜானகிராமன்

நாவல் 'மோகமுள்' சுதேசமித்திரன் வாரப்பத்திரிகையில் வெளிவர ஆரம்பித்தது. அதுவரையில் தமிழில் வெளிவந்த அத்தனை நாவல்களிலிலும் இருந்து அது மாறுபட்டது; புதுவிதமானது சிறப்பானது. ஜானகி ராமன் வாராவாரம் வருவார். அவரிடம் நாவலைப் பற்றி ஆராய்வேன். நயம், குறை காட்டுவேன். அப்போது சுதேசமித்திரன் 'தீபாவளி மலர்' வந்தது. அதன் பொறுப்பாக இருந்தவர் ரங்காச்சாரி என்பவர். அவரிடம் என்னைப் பற்றி ஜானகிராமன் சு.மி.மலருக்கு தமிழ்ச்சிறுகதை பற்றி எழுதகேட்கச் சொல்லி இருக்கிறார். அவர் கட்டுரை கேட்டார். எனக்கு வியப்பாக இருந்தது. எழுதினேன். என் முதல் கட்டுரை (1956). அதே மலரில் அப்போது திருவனந்தபுரத்தில் இருந்த க.நா.சு 'நாவல் இலக்கியம்' என்ற தலைப்பில் எழுதி இருந்தார். இரண்டும் அநேகமாக ஒத்த பார்வையாக இருந்தது தற்செயலாக ஏற்பட்டது. இந்த இரண்டு கட்டுரைகளும் எங்களுக்கு ஒட்டிய அடுத்த தலைமுறை எழுத்தாளர்களான ஆர்.வி.(ஆர். வெங்கட்ராமன்), அகிலன் இருவருக்கும் ஆத்திரம் ஊட்டி விட்டது. முன்னவர் க.நா.சுவுக்கும் பின்னவர் எனக்கும் சூடாக பதில் கொடுத்திருந்தார்கள். அவர்களை தொடர்ந்து ர.பாலகிருஷ்ணன், 'ஜடாதரன்' ஆகிய சுப்ரமண்யன் இருவரும் அவர்களுக்கு ஒத்து ஊதியிருந்தார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த இருவருமே பி.எஸ். ராமையாவிடம் போய் இதுபற்றி பேச, அவர் ஒரு கடிதமாக தன் அபிப்ராயத்தை எழுதிக் கொடுத்து வெளிவந்ததுதான். க.நா.சுவையும் என்னையும் (அதிகமாக என்னை) ராமையா வெளுத்துக்கட்டி இருந்ததுதான் விசேஷம். இன்னும் மூன்று நான்கு பேர் கலந்து கொண்டிருந்தார்கள். க.நா.சுவும் நானும் இவற்றுக்கெல்லாம் தக்க பதில் எழுதினோம். ரசமான விவகாரம். இந்த விவகாரம் என்னைத் தூண்டிவிட்டது. விமர்சனத் துறைக்குள் என்னை தள்ளி விட்டது. வெட்டி விவகாரம் போகட்டும் "உருப்படியாக ஏதாவது எழுத வேண்டும் என்று தோன்றியது" - என்கிறார் செல்லப்பா.

சரியாகச் சொல்வதானால் அந்த 1954 சுதேசமித்திரன் தீபாவளிமலர் செல்லப்பாவை மட்டும் இலக்கிய விமர்சனத் துறைக்குள் தள்ளி விடவில்லை. தமிழகத்தில் அன்றும் தேசிய நீரோட்ட எழுத்தாளர்கள் திராவிடர் இலக்கிய எழுத்தாளர்கள் தனித்தமிழ் இயக்கத்தார் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று பிரிந்து

கிடந்த பல்வேறுபட்டவர்களையும் விமர்சனத் துறைக்குள் பிடித்துத்தள்ளியது.

க.நா.சு. செல்லப்பா எழுதிய கட்டுரைகளை விட அந்த தீபாவளி மலரில் ரா.ஸ்ரீ. தேசிகன் எழுதிய கட்டுரை தமிழின் மீது ஆறாக் காதல் கொண்டவர்கள் எல்லோரையுமே விமர்சகர்கள் ஆக்கிவிட்டது. (இதனை எழுதும் நானும் கூட அன்று அந்தக் கட்டுரைகளைக் குறிப்பாக ரா.ஸ்ரீ. தேசிகன் கட்டுரைகளை கடுமையாகத் தாக்கி கூட்டங்களில் பேசி இருக்கிறேன். தோழர் விஜயபாஸ்கரனின் 'சரஸ்வதி'க்கு இந்த மூன்று கட்டுரைகளை விமர்சித்து மிக நீண்ட கட்டுரை ஒன்றினை அனுப்பி வைத்தேன். அதில் ஒரு பகுதி மட்டும் வாசகர் கடிதப்பகுதியில் வெளிவந்தது.)

அதுநாள் வரையில் படைப்புகளில் மட்டுமே போட்டி போட்டுக் கொண்டிருந்த மேற்குறிப்பிட்ட பல்வேறு போக்குகளைச் சார்ந்த எழுத்தாளர்கள் பலரும் திடீரென்று விமர்சனத்துறையிலும் இறங்க அந்த சுதேசமித்திரன் தீபாவளிமலர் தமிழில் அதுவரை கவனத்திற்கு வராமல் இருந்த விமர்சனத்துறைக்கு ஒரு புதிய வெளிச்சத்தை மட்டுமல்ல, வேகத்தையும் தந்துவிட்டது. அது கிளப்பிய சர்ச்சைகளே செல்லப்பாவையும் விமர்சனத் துறைக்குள் தள்ளியது. அதனாலேயே தமிழில் விமர்சனத்துறைக்கு என்றே ஒரு தனி ஏடு 'எழுத்து' செல்லப்பா மூலம் முதன் முறையாகக் கிடைத்தது.

சுதேசமித்திரன் தீபாவளிமலர் கட்டுரை மூலம் ஒன்றுபட்ட க.நா.சுவும் செல்லப்பாவும் 'எழுத்து' ஏட்டின் ஆரம்பக் காலத்திலும் தங்களுக்குள் உள்ள கருத்து வேறு பாடுகளை எல்லாம் ஒரங்கட்டி வைத்து விட்டு விமர்சனக் கலையின் வளர்ச்சி என்பதில் தோளோடுதோள் நின்று செயல்பட்டார்கள்.

பின்னர் இன்னொரு காலகட்டத்தில் 'எழுத்து'வையும் செல்லப்பாவையும் கடுமையாகத் தாக்கியவர்களோடு க.நா.சுவும் சேர்ந்து கொண்டார்.

அதுபோலத்தான் செல்லப்பாவை குறை கூறியவர் களுக்கு ஆதாரமாக பி.எஸ். ராமையாவும் செல்லப்பாவை வெளுவெளு என்று வெளுத்துக்கட்டி ஒரு கடிதம் தந்தார். என்றாலும் செல்லப்பா இதையெல்லாம் மனதில் போட்டுக் கொள்ளவில்லை.

''பி.எஸ்.ராமையா மணிக்கொடி ஆசிரியராக இருந்தவரே தவிர மணிக்கொடி ஏட்டின் தரத்திற்கு சிறந்த கதைகள் எழுதியவரல்ல'' என்று ஒரு பிரச்சாரம் ராமையாவுக்கு எதிராக எழுந்தபோது ராமையாவைத் தேடிப்போய் அவரது சிறுகதைகள் அனைத்தையும் அவரிடமிருந்து வாங்கிவந்து 'ராமையாவின் சிறுகதை பாணி என்ற தலைப்பில் 300 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்றினை எழுதி வெளியிட்டார் செல்லப்பா!

இவைகள் எல்லாம் அந்தக் காலத்து எழுத்தாளர்கள் மத்தியிலும் கருத்து வேறுபாடுகள் விமர்சன மோதல்கள் கடுமையாக இன்று போலவே இருந்தது என்றாலும் அவர்கள் எல்லாம் தனி மனிதத் துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டு மோதிக்கொள்ளவில்லை! படைப்புகள் பற்றிய விமர்சனமே அவர்களது மோதல்களில் வியாபித்திருந்தது. அதனால்தான் அவர்களால் ''இலக்கிய விமர்சனத்தில் நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தர விரோதிகளும் இல்லை'' என்பது போல பரஸ்பரம் மதிப்பும் மரியாதையும் குறையாத வகையில் நடந்து கொள்ள முடிந்தது!

செல்லப்பாவைக் குறை கூறுபவர்கள் எல்லோரும் பொதுவாகக் கூறக்கூடிய புகார்கள் என்ன? அவர் ஒரு முன்கோபக்காரர், முசுடு, தன் கருத்துதான் சரி என்று திடமாக நம்புகிறவர். அதனால் மாற்றுக் கருத்துக்களை அவர் மதிக்க மாட்டார் என்று கூறப்படுவதுண்டு!

செல்லப்பா நடத்திய 'எழுத்து' முதல் இதழிலிருந்து கடைசி இதழ் வரையில் படித்துப் பரிசீலிக்கும் எவருக்கும்

''செல்லப்பா தன் கருத்தில் பிடிவாதமாக இருப்பவர் என்பது எவ்வளவு உண்மையோ – அந்த அளவுக்கு பிறர் கருத்துக்கு – தமக்கு உடன்பாடு இல்லாத மாற்றுக் கருத்துக்களுக்கு அவர் தாராளமாக இடம் தந்தார்'' என்பது தெளிவாகப் புரியும்.

மாற்றுக் கருத்துக்கொண்ட கட்டுரைகளை அல்லது கண்டனக் கடிதங்களை அவர் 'எழுத்து' வில் பிரசுரித்தார் என்பதோடன்றி அவற்றிற்கான பதில்களையும் பொறுப்புணர் வோடு எழுத்து தலையங்கப் பகுதியிலோ அல்லது கட்டுரை வடிவிலோ சொல்லி தம்மிடம் கருத்துவேறுபாடு கொண்டவர்களை சமாதானப்படுத்தவும் அவர் முயன்றிருப் பதைப் பல இதழ்களில் காணமுடிகிறது.

செல்லப்பாவைக் குறை கூறுபவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். செல்லப்பாவின் கருத்தோ – கதையோ சரியில்லை என்று சொல்ல எல்லோருக்கும் உரிமை இருப்பதுபோலவே அந்த உரிமை செல்லப்பாவுக்கும் உண்டு என்பதுதான் அது! மற்றபடி பிறரது எழுத்து பற்றி செல்லப்பா சொல்லும் கருத்துக்களுக்கு உள்நோக்கம் எதுவும் கிடையாது. அவர்தமது மனதில் பட்டதை தயவுதாட்சண்யம் பாராமல் பளிச்சென்று சொல்லக்கூடியவராக இருந்தார். உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் தந்திரம் அறியாதவராக இருந்தார். கிராமத்து மக்களின் பாணியில் சொல்வதானால் வெகுளி சூதுவாது தெரியாதவர், கள்ளம்கபடமற்ற வெள்ளை உள்ளம் படைத்தவர்!

இனி லா.ச.ராமாமிர்தத்துக்கு செல்லப்பாவிடம் ஏற்பட்ட கசப்பும் இனிப்புமான அனுபவம் எப்படி என்பதைப் பார்ப்போம் .

''செல்லப்பாவும் நானும் முதன்முதலாக சந்தித்த தெப்போ?'' சரியாக ஞாபகமில்லை.

எனக்கு 18, 19 வயதில் என் முதல் தமிழ்கதையுடன் ஹனுமான் வாரப்பத்திரிகை (ஆசிரியர் – சங்கு சுப்ரமணியம்) ஆபீசுக்குப் போனேனே. அங்கே அவர் உதவி ஆசிரியராக இருந்தாரே அப்பவா? அப்போது நாங்கள் பேசினதாக நினைவில்லை. எனக்கு அங்கு தி.ஜ.ர.வைத்தான் தெரியும்.

அல்லது மெரினா கடற்கரையில் மணிக்கொடி எழுத்தாளர்கள் மாலை மாலை சந்தித்துப் பேசுவார்களே அப்போதா?

ஒன்று தெரியும். செல்லப்பாவுக்கு என் ஆரம்ப கால எழுத்துக்களைப்பற்றி நல்ல அபிப்ராயமில்லை'' இந்தப் பையன் நன்றாக எழுதுகிறான்'' என்று தி.ஜ.ர. என்னை அறிமுகப்படுத்திய போது ' என்ன நல்ல எழுத்து? எதிலும் ஒரு வக்கிரப்பார்வை!' என்று அவருடைய உரத்த குரலில் ஒரு விளாசு விளாசினாரே பார்க்கலாம்! அப்போது அவரிடம் எனக்குக் கண்ட நடுக்கம் நாளடைவில் அன்பும் ஆழ்ந்த மரியாதையாகவும் மாறுபட்டாலும், இப்பவும்,எப்பவும் அவரிடம் எனக்கு சற்று பயம்தான். காரணம் அவருடைய நேர்மை (honesty) என்று இப்போது உணருகிறேன்''

– என்று குறிப்பிடும் லா.ச.ரா மேலும் தமது கசப்பான அனுபவத்தை விவரிக்கிறார்.

பரமசிவன் போல் அவர் கோபத்தின் ப்ரபையுள் நின்றார் என்று எனக்குத் தோன்றிற்று. முதல் தாக்கம்.

ஒற்றை நாடித்தேகம், கதர் அரைக்கைசொக்காய், கதர்வேட்டி, கையில் எப்பவும் ஒரு துணிப்பை, அனேகமாக அதில் புத்தகங்களும் எழுதுகோலும் தானிருக்கும். சற்று குறுகலான நீண்ட முகத்தில் குழிவான கண்களில் கோபம் பறப்பதாக என் எண்ணம். அந்த நாளைப்பற்றிப் பேசுகிறேன். செல்லப்பா மன்னிக்கனும்.

அப்போது வை. கோவிந்தன் வெளியிட்டுவந்த 'சக்தி' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த தி.ஜ.ர என் கதைகளை வெளியிட்டு வந்தார். அடுத்து அந்தக் கூட்டத்தில் என் எழுத்து, பொதுவாகவோ குறிப்பிட்டோ அடிபடும் போதும் செல்லப்பாவின் அபிப்ராயம் மாறவில்லை. என் கதைகளைப் பற்றி அவரிடம் நான் வாதிக்க வில்லை. அந்த அளவுக்கு எனக்குத் துணிச்சல் ஏது? என் பயம்தான் அதிகரித்து கொண்டுவந்தது.

பிறகு ஒரு சமயம் புதுக்கதையுடன், 'சந்திரோதயம்' (ஆசிரியர் க.நா.சு) ஆபீசுக்கு சென்றபோது அங்கு ஆசிரியர் குழுவில் செல்லப்பா உட்கார்ந்து கொண்டிருக்கிறார்! கதையைக் கொடுத்துவிட்டு, 'சரி என் கதை வெளிவந்தாற் போலத்தான்' என்று நினைத்துக் கொண்டே வெளியேறினேன். என் தப்பான எடைக்கும், என் சின்னத்தனத்துக்கும் அத்தாட்சி வேறே வேண்டாம்'' என்று தன்னையே கடிந்து கொள்ளும் லா.ச.ரா அப்புறம் நடந்தது என்ன என்பதையும் தொடர்ந்து கூறி இருக்கிறார்.

''அபூர்வ ராகம்' சந்திரோதயத்தில் வெளிவந்தது பெரிதல்ல.

வந்த சுருக்கில், திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோட்டில் செல்லப்பாவை சந்திக்க நேர்ந்தது. அதே சாலையில் பத்து நிமிடத்துக்கு முன்தான் ந. சிதம்பர சுப்ரமணியத்துடன் பேசினேன்.

செல்லப்பா கதையைப் பாராட்டினார். அவர் பாராட்டிய வாசகம் ஞாபகமில்லை. ஆனால் முடிவில் சொன்ன வார்த்தைகள் இன்னமும் நினைவில் ஒலித்துக் கொண்டிருக் கின்றன.

''என்ன ராமாமிர்தம், வாழையிலை ஏட்டில் அல்வாத் துண்டைப் பறிமாறிவிட்டு அதில் முடி அகப்பட்டாற் போல கதை

முடிவில் உங்கள் வழக்கமான சேஷ்டையைக் காண்பித்து விட்டீர்களே!''

'அபூர்வ ராகம்' எனக்கு எழுத்துத்துறையில் ஒரு திருப்பம். வாசகர்களும் சக எழுத்தாளர்களும்' 'இதென்ன புதுக்குரல் கேட்கிறது?' என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.

அதற்குப் பின்னாலும் என் கதைகள் வெளி வந்து கொண்டிருந்தன. செல்லப்பா என்ன அபிப்பிராயம் சொல்வார் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந் தேன். ஜனனி, யோகம், புற்று, ப்ரளயம்... ஊஹூம் செல்லப்பா வாய் திறக்கவில்லை. நானும் கேட்க வில்லை.

எனக்கு மட்டும் ரோசமில்லயா? அவர் வரையில் என்னிடம் ஏதோ அத்தி பூத்து உதிர்ந்து விட்டது என்று என்னைப்பற்றி நினைத்துக்கொண்டேன். என்னில் ஏதோ விசனம் கண்டேன்.

காலம் கடந்தது.

ஒரு நாள்மாலை பெரிய தெருவில் (நாங்கள் திருவல்லிக்கேணி வாசிகள்) ஏதோ குருட்டு யோசனையில் எதிரே யார் என்ன வருகிறது என்று கூடத் தெரியாமல் –

''என்னய்யா இது இந்த மாதிரி தெருவில் நடந்தால் ஆபத்து இல்லையா?''

அதட்டல் கேட்டு உலகுக்கு மீண்டால் என் வழியில் செல்லப்பா நின்று கொண்டிருந்தார் கையில் அவர் பையுடன், முகத்தில் சிரிப்பு இல்லை. தெருவில் என் அஜாக்ரதைக்குக் கோபம் தானிருக்கும்.

ஒரு நிமிஷம் பொறுத்து,

''சுதேசமித்திரன் வார இதழில் உங்கள் கதை – இதழ்கள் (பார்கவி) படித்தேன். ரொம்ப நன்றாக இருக்கிறது. ஒரு அப்பு அழுக்குக் கிடையாது. Perfect Ending ல் வைத்திருக்கும் முத்தாய்ப்பு பிரமாதம்'' என்றார்.

யார் இப்படிச் சொல்வது? செல்லப்பாவா? வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷியா? இல்லை. சிற்பம் சிரக்கம்பம் செய்கிறது.

எனக்கு வாயடைத்துப் போய்க் கண்கலங்கி விட்டது. ஓ! செல்லப்பா எதிரில் உணர்ச்சி வசப்படுவதில் எனக்கு வெட்கம்கிடையாது. அவரைவிட நான் ஐந்து ஆறுவயது இளையவன்தான்.

செல்லப்பா, கனிவுடன் '' என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நல்ல பண்டம் கிடைக்காதா என்று தேடிக் கொண்டேயிருக்கிறோம். கிடைத்தால் உங்களை விட சந்தோஷம் எங்களுக்குதான் அதிகம்.''

இந்த நாளில் இப்படி யாரேனும் சொல்வார்களா? மணிக்கொடி எழுத்தாளர்களின் விசேஷம் அதுதான். அதிலும் செல்லப்பா.

மேலும், 'உங்கள் கதையை சுதேசமித்திரன் வார இதழில் விமர்சனம் செய்யலாம் என்றிருக்கிறேன்.''

ஏதேது, கொண்டைபோட்டு, மயில்ரக்கை சூட்டல் வேறா? அங்குமிங்குமாக துணுக்காக, ஒரு வரி இருவரியாக தினசரி பேப்பரிலோ, வாசகர் கடிதங்களிலோ பாராட்டு வந்தால் அதை ப்ரேம்போட வழியிருக்கிறதா என்று யோசிக்கும் நாள் அது. தொடர்ந்து அந்த ஒரு கதையை மூன்று வாரங்கள் விமர்சனம். என் கதையைப் படிப்பதைக்காட்டிலும் என்னைப் பற்றி படிக்க – என்ன ருசி!

– என்று கசப்போ கசப்பில் ஆரம்பித்த தமது அனுபவம் அடிக்கரும்பின் ருசிபோல இனிப்பில் முடிந்ததை உள்ளம் நெகிழ்ந்து எழுதியிருக்கிறார் லா.ச.ரா.

செல்லப்பா பிறரது கருத்துக்களை – படைப்புகளை மதிக்கத்தவறியவர் அல்ல. பாராட்டப்படக்கூடியவைகளை பளிச்சென்று – பாராட்டுவார், நல்லதைக் கண்ட மாத்திரத்தில்– உடனடியாகப் பாராட்டுவார், யாரும் அதுபற்றிக் தம்மிடம் அபிப்ராயம் கேட்க வேண்டும் என்று காத்திருக்காமல் தேடிப்போய் பாராட்டுவார் என்பதற்கு லா.ச.ராவின் அனுபவம் ஒரு சாட்சியாகவே அமைந்திருக்கிறது.

ஒரு காலத்தில் 'செல்லப்பா நமது கதைகளைப் பாராட்டி ஒரு வரி சொல்லமாட்டாரா' என்று லா.ச.ரா ஏக்கத்துடன் காத்திருந்தார். அதே செல்லப்பா – லா.ச.ரா கேட்காமலே – அவர் எதிர்பாராமலே அவரது கதைகளை விமர்சித்தார். அதுபற்றி செல்லப்பாவே சொல்வதைக் கேட்போம்.

''லா.ச.ராமாமிருதம் சிறுகதை தொகுப்பு 'இதழ்கள்' என்ற புத்தகமாக வெளிவந்திருந்தது. அதில் உள்ள இதழ்கள் – 6 என்ற கதையை விமர்சித்து நீண்ட கட்டுரை சு.மி.யில் எழுதினேன். விமர்சனம் செய்பவனுக்கு ஏதாவது ஒரு அர்த்தமுள்ள மதிப்பு உள்ள கொள்கைப் பார்வை இருக்கக்கூடும் என்று பொதுவாக கருதப்படுகிறது. எனக்கு அத்தகைய, என்னை ஒப்படைத்துக் கொண்ட (கமிடெட்) பார்வை (அப்ரோச்) எதுவும் கிடையாது. கதையின் நயம்தான் எனக்கு முக்கியமானதாகப் பட்டது. எனவே கதையின் நயத்தன்மைகளை நுட்பமாக ஆராய்ந்து எழுதினேன். இந்த நுட்பமான ஆராய்வுக்கு (அனலிடிகல் மெதேடு) ஆய்வுமுறை விமர்சனம் என்று ஆங்கிலப் பெயர். எனவே செயல் வழி (பிராக்டிகல்) விமர்சனத்தில் ஒரு பிரிவான ஆய்வு விமர்சன முறையை கடைப்பிடித்தேன்.

– என்கிறார் செல்லப்பா.

இனி செல்லப்பாவுக்கு 'எழுத்து' என்ற விமர்சன ஏட்டைத் தொடங்கும் எண்ணம் ஏன் ஏற்பட்டது என்பதைப் பார்ப்போம்.

''அதை அடுத்து ஒவ்வொரு முதன்மை சிறுகதை எழுத்தாளர்களின் சிறந்த கதைகள் ஒவ்வொன்றையும் அதே உத்தி பாணியில் எழுத இருந்தேன். அதற்குள் பத்திரிகை பொறுப்பாசிரியர் மாறிவிட்டார். எனவே தொடரவில்லை. அதன் பின் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில். கு.ப.ரா. கதைகள் 'புதுமைப்பித்தன் கதைக்கரு' ஆகிய கட்டுரைகளை 1957) படித்தேன். அதிலும் தொடர்ந்து பேச, கட்டுரைப் படிக்க இருந்தேன். அதுவும் நடக்கவில்லை. பத்திரிகைகளிலும் சரி, சங்கங்களிலும் சரி திடீரென அக்கறை ஒன்றில்தோன்றும்,திடும்மென ஆர்வம் குன்றிவிடும். நாள் கழித்து 'கமலாம்பாள் சரித்திரம்' நாவல் பற்றிய கட்டுரை படித்தேன். முற்போக்கு பத்திரிகை தாமரையில் 'இன்று தேவையான உரைநடை' அதே ஆண்டில் எழுதினேன். இவை யாவும் எழுத்து ஆரம்பிக்கு முன்

எழுதிய கட்டுரைகள். அதுவரை ஏழு விமர்சன கட்டுரைகள் எழுதி இருந்தேன்.

இந்த ஏழு கட்டுரைகளை நான் எழுதியபோது விமர்சனம் எழுதும் ஈடுபாடு ஏற்பட்டதே தவிர, விமர்சனத்துக்காக ஒரு பத்திரிகை என்ற நினைப்பே அறவே இல்லை. ஆனால் ஐம்பத்தாறில் நடந்த தேக்கம் – வளப்பம் – விவகாரம் (சுதேசமித்திரன்) எனக்குள் ஏற்படுத்திய வேகம் வளர்ந்தது. இந்த மூன்று ஆண்டுகளில் அதுக்கு ஏற்ப எழுதிய இந்த ஏழு கட்டுரைகளும் சத்தாக இருப்பதாக உணர்ந்தேன். எனக்குள் ஒரு திட நிச்சயம் ஏற்பட்டது. அதாவது விமர்சனத்துறையில் நிறைய சொல்ல விஷயங்கள் இருப்பதாக உணர்வு ஏற்பட்டது. விமர்சனக் கட்டுரைகள் போட எந்த பத்திரிகையும் தயாராக இல்லை. தீபாவளி மலர்களில் ஒன்றிரு கட்டுரைகள் 'பெரிய மனிதர்கள்'' என்று அவர்கள் கருதும் சிலரது பத்தாம் பசலி விஷயங்கள் கொண்ட கட்டுரைகளையே போடு வார்கள். எனவே என் கட்டுரைகளுக்கு இடம் கிடைக்காது என்று நிச்சயமாக தெரிந்தது. அந்த நினைப்பு விழுந்ததும் தான் பத்திரிகை யோசனை தோன்றியது. ராமையா ஒரு கால் நூற்றாண்டுக்கு முன் 'சிறுகதைகளை மட்டும் போடுவதற்காக ஒரு பத்திரிகை இல்லை' என்று குறிப்பிட்டு சிறுகதை மணிக்கொடி ஆரம்பித்தது போலவே அவர் ஊர்க்காரரான எனக்கும் தோன்றவே 'விமர்சனத்துக்காக மட்டும் ஒரு பத்திரிகை ஆரம்பித்தால் என்ன?' என்று எனக்குள் கேட்டுக் கொண்டு, 'அவசியம் தேவை' என்று நானே பதிலும் சொல்லிக் கொண்டேன். 'எழுத்து' மனதில் கருக் கொண்டது. துணிந்து என் சொந்த முயற்சியாக 'எழுத்து' – புதுமை இலக்கிய மாத ஏடு என்ற பொதுப் பெயரில் 1959 ஜனவரியில் முதல் ஏட்டை கொண்டுவந்தேன். என் இலக்கியப்பாதை இலக்கியப் பத்திரிகைப் பாதையாக புதிய திருப்பம் கொண்டது. விமர்சனம் தான் உத்தேசம் என்றாலும் புதுவித படைப்புகளை ஒதுக்கி விடக்கூடாது என்ற விவேகமும் இருந்தது. முதல் ஏட்டுக்கு பெரும் பகுதிக் கட்டுரைகளுடன் கதை, கவிதைகளும் போட்டேன்.

ஐம்பத்தொன்பது முதல் என் இலக்கியப்பாதை விமர்சனத்துறையில் தான் இன்றுவரை (தொண்ணூற்று ஐந்து வரை) எனக்கு வழிஅமைத்து சென்றிருக்கிறது. எழுத்து விமர்சனத்துக்காகத்தான் ஆரம்பித்தேன். ஆனால் புதுக்கவிதை

எப்படியோ இடம் பிடித்துக் கொண்டது. என் பத்திரிகை கவனம் இதிலும் ஈடுபட்டது.

– என்பதாக 'எழுத்து' பிறந்ததற்கான உந்து சக்திகளாக இருந்ததைப்பற்றி விவரித்திருக்கிறார் செல்லப்பா.

இன்று எழுத்தும் இல்லை; செல்லப்பாவும் இல்லை. எனினும் 'எழுத்து' போன்ற சிற்றிதழ்கள் –செல்லப்பாவுக்கு இருந்தநோக்கங்கள் – அவைகளை அடைவதற்காக அவர் பட்ட சிரமங்கள் ஆகியவைகளோடேயே நடத்தப்பட்டு வரு கின்றன.

இன்று சிற்றிதழ்களை நடத்துபவர்கள் செல்லப்பா போல 2000 பிரதிகளுக்கு மேல் அச்சிடமாட்டோம் என்று பிரதிக்ஞை எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. என்றாலும் செல்லப்பா காலம் போலவேதான் இன்றைய வாசகர்களும் இருக்கிறார்கள். சிற்றிதழ்களின் விற்பனை குறைந்த பட்சமாக ஒரு 10 ஆயிரத்தையாவது எட்டுமா என்பது சந்தேகத்துக் குரியதாகவே இருக்கிறது.

செல்லப்பா காலத்தில் இருந்ததை விட சிற்றிதழ் நடத்துவோரிடை குழு மனப்பான்மையும் பல மடங்கு அதிகமாக இருக்கிறது.

குழுமனப்பான்மை காரணமாக தமக்கு ஏற்பட்ட வேதனைகள் பற்றி செல்லப்பாவே மனம் வருந்திக் கூறி இருக்கிறார்.

'எழுத்து'வின் இளமைக் காலத்தில் 'எழுத்து' டன் எழுத்துறவு கொண்டிருந்த ஒரு சிலர் 'எழுத்து' தங்களது விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளாமல் இலக்கியத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டது தன்னைக் குறுக்கிக் கொண்டதாகும் என்று முடிவு கட்டிக்கொண்டு அது தங்களுக்குப்போதாது என்று தீர்மானித்து 'எழுத்து'டன் வேற்றுமை காட்டி 'எழுத்து' விடமிருந்து பாதை பிரிந்து சென்றார்கள். தங்கள் நோக்கத்திற்கு ஏற்ப புதிய பத்திரிகைகளைத் துவக்கும் திட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அவர்கள் செய்தது சரிதான். கூட்டுக்குள் இருக்கும் வரை குஞ்சுக்குத் தாய் வேண்டும். இறக்கை முளைத்து பறக்க முடியவும் தன் வாழ்க்கையை தானே தேடிக்கொள்வது இயல்பு தானே.

என் 'எழுத்து'க்கும் மேலாகவே அவர்கள் முயற்சி இருக்க வேண்டும் என்று தான் நானும் விரும்பினேன்.

இதை நிறைவேற்ற நடைமுறையில் அவர்கள் ஆக்க ரீதியாக செயல்படுவதுதான் அவர்கள் உத்தேசமாக இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் செய்யும் புதிய முயற்சிகளுக்கு ஆதரவாகக் காட்ட 'எழுத்து' பற்றியும் என் ஆசிரியப் போக்குபற்றியும் குறைகளை சிருஷ்டித்துக்கொண்டு அவற்றைத்தேவை இல்லாமல் பிரச்சாரம் செய்ய முற்பட்டார்கள்''

–என்று வருத்தத்துடன்–அதே சமயம் தம்மைப் பிரிந்து சென்று தன் மீது தாக்குதல் நடத்தியவர்களின் முயற்சி பற்றி ஒரு தாயின் உள்ளத்தோடு குறிப்பிட்டிருக்கிறார் செல்லப்பா.

எனினும் எத்தகைய பிரிவுகள் விமர்சனங்களாலும் செல்லப்பாவின் 'எழுத்து'க்கு இலக்கிய விமர்சன உலகிலும் புதுக்கவிதை இயக்க வரலாற்றிலும் உள்ள முதலிடத்தை 'இல்லை' என்று ஆக்கிவிட யாராலும் முடியவில்லை.

செல்லப்பா காலமாகி இரண்டு வருடங்களுக்குப் பிறகு வெளிவந்த 'நடைவழிக்குறிப்புக்கள்' என்ற நூலில் அதன் ஆசிரியர் சி.மோகன் (இவர் இலக்கிய உலகில் 'வயல்' மோகன் என்று அழைக்கப்படுபவர்) – 'எழுத்து'வின் பணிகள் சிற்றிதழ்கள் வளர்ச்சியில் அதன்பங்கு பற்றி எழுதி யிருக்கிறார்.

''தற்காலத் தமிழிலக்கிய வரலாற்றில் தனித்துவமிக்க தனிப்பெரும் இயக்கம் 'எழுத்து' சிறு பத்திரிகை என்ற கருத்தாக்கத்துக்கும் அதன் உண்மையான அர்த்தத்துக்கும் செம்மையான வடிவம் கொடுத்த இதழ்.

தற்காலத் தமிழ் இலக்கியப் பரப்புக்கு விரிவும் ஆழமும் அமைத்துக் கொடுத்த களம்.

இவ்வியக்கம் நிர்மாணித்த பரப்பிலிருந்து விரிந்து புதிய எல்லைகளை அகலப்படுத்தி செழுமையுற்றதுதான் அதனைத் தொடர்ந்து இன்று வரை நீடிக்கும் சிறுபத்திரிகைச் சூழல்.

''பதினோரு வருடங்கள் நீடித்து நிலைபெற்று வலுவான தாக்கத்தை நிகழ்த்திய இவ்வியக்கத்தை கட்டமைத்த அபார சக்திதான்

சி.சு. செல்லப்பா காந்தி யுகத்தின் அர்ப்பண உணர்வும் லட்சியப்பிடிவாதமும் வழிநடத்திய வாழ்வும் இவருடையது.

இவருடைய இலக்கிய முனைப்பு 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சிறுகதை, நாவல், நாடகம்,கவிதை, விமர்சனம் என எழுத்தின் பல்வேறு தளங்களிலும் இவர் தன்னை முன்வைத்திருக்கிற போதிலும் காலத்துக்கும் இவருக்குமான உறவில் இவருடைய உயர்ந்த பங்களிப்பானது 11 ஆண்டுகால 'எழுத்து' இயக்கத்தின் மூலம் ஓர் எழுச்சியை உருவாக்கியதில்தான் தங்கியிருக்கிறது.''

–என்று குறிப்பிட்டிருக்கிற வயல் மோகன் எழுத்துவின் பாணி பாதை– பணிகள் – சாதனைகள் ஆகியவற்றையும் சுருக்கமாக கோடிட்டுக்காட்டியிருக்கிறார்.

''1959–ஆம் ஆண்டு ஜனவரியில் 'எழுத்து' முதல் இதழ் வெளிவருகிறது. தற்காலத் தமிழிலக்கியத்தில் மறுமலர்ச்சியும் செல்லப்பாவின் இலக்கிய வாழ்வில் புத்தெழுச்சியும் நிகழ்கிறது.

க.நா.சுவின் ஆசிரியப் பொறுப்பில் இரண்டாண்டுகள் (1945–47) வெளிவந்த 'சந்திரோதயம்' இதழில் இணைந்து செல்லப்பா பணியாற்றியபோது க.நா.சுவின் பாதிப்பில் செல்லப்பாவுக்கு விமர்சன ஈடுபாடு ஏற்பட்டது. நாளடைவில் அது வளர்ந்து தமிழ்ச்சூழலில் விமர்சனத்தின் தேவையை வெகுவாக உணர்ந்ததில் விமர்சனத்துக்கென்றே செல்லப்பா உருவாக்கிய இதழ் தான் 'எழுத்து'

க.நா.சுவிடமிருந்து விமர்சன ஆர்வத்தைப் பெற்றபோதிலும் க.நா.சுவின் ரசனைவழி தரநிர்ணய விமர்சன முறையை செல்லப்பா நிராகரித்தார். ஆங்கில விமர்சன நூல்களை தீவிரமாக வாசித்த இவர், படைப்பின் மேன்மையை முன்வைக்க பகுப்பாய்வு முறையே உகந்தது என்று அதை மேற்கொண்டார். 'எழுத்து'வில் செல்லப்பா அதிகமும் விமர்சனக் கட்டுரைகளே எழுதினார்.

விமர்சனத்துக் கென்று 'எழுத்து' தொடங்கப்பட்ட போதிலும் தற்செயல் நிகழ்வாக புதுக்கவிதை ஊடகத்திற்கான தளமாகவும் அது அமைந்தது. புதுக்கவிதைகளும்புதுக்கவிதை பற்றிய கட்டுரைகளும் இடம் பெறலாயின. தமிழ் இலக்கியப் பரப்பில் புதுக்கவிதை அலை எழுந்தது. அலை வீச்சின் தொடக்கத்திலேயே புதுக்கவிதையின் சிறந்த படைப்புகள் வெளிவரத்தொடங்கின. தர்மு, சிவராமு,

பசுவய்யா,தி.சோ. வேணுகோபாலன், சி.மணி, நகுலன், எஸ். வைத்தீஸ்வரன் போன்ற கவிஞர்கள் வெளிப்பட்டனர். செல்லப்பாவும் புதுக்கவிதை பற்றிய கட்டுரைகளோடு புதுக்கவிதைகளும் எழுதினார்.

விமர்சனத் துறையில் வெங்கட்சாமிநாதன், தர்மு சிவராமு என்ற புதுக்குரல்கள் 'எழுத்து' மூலம் உரத்து ஒலித்தன. ந.முத்துச்சாமி சிறந்த சிறுகதையாளராக 'எழுத்து' மூலம் வெளிப்பட்டார்.

11 ஆண்டுகள் லட்சிய முனைப்போடும் பிடிவாதத் தோடும் இதழை நடத்திய சி.சு. செல்லப்பாவுக்கு அதனால் ஏற்பட்ட பொருள்இழப்பு கட்டுக்கு அடங்காதது. அர்ப்பண உணர்வும் லட்சியப் பிடிப்புமே அவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க வைத்திருக்கிறது.

''என் வாழ்க்கைப் பாதையில் முன்பாதியில் தேசத்துக் காக; பின்பாதியில் இலக்கியத்துக்காக' என்று இதைச் சாதாரணமாக இவரால் ஏற்றுக்கொள்ள முடிகிறது.

என்கிறார் சி.மோகன்.

இந்த இடத்தில் ஒரு தகவல்!

பெரியவர் வல்லிக்கண்ணன் அவர்கள் ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு 'எழுத்து' முதல் இதழ் முதல் 119ஆவது இதழ் வரையிலான 10 தொகுதிகளை என்னிடம் கொடுத்து இவைகளைப் படித்து 'எழுத்து'வின் பணிகள் சாதனைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதிக் கொடுங்கள் என்றார்.

ஒவ்வொரு தொகுப்பாக எடுத்துப்படிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு தொகுப்பு பற்றியுமே தனித்தனியாக புத்தகங்கள் எழுதலாம் என்று தோன்றுகிற அளவுக்கு படிக்கப்படிக்க தனிமனிதனாக நின்று இவ்வளவு பெரிய சாதனைகளைச் செல்லப்பாவால் எப்படி சாதிக்க முடிந்தது என்ற பிரமிப்பே மேலோங்கியது.

முதல் 12 இதழ்களில் 8 இதழ்கள் பற்றித்தான் எழுதியிருக்கிறேன். அதுவே இவ்வளவு நீளமான கட்டுரை யாகி விட்டது. 'எழுத்து' வின் முதல் வருடம் முழுவதும் அது இலக்கிய விமர்சனத்திற்கான பத்திரிகையாகவே வெளி வந்திருக்கிறது.

இரண்டாவது ஆண்டின் இரண்டாவது இதழிலிருந்து தான் அதாவது 14ஆவது இதழிலிருந்துதான் அது புதுக்கவிதை வளர்ச்சிக் கான ஓர் இயக்கமாகவே மாறிஇருக்கிறது.

புதுக்கவிதை இயக்கமாகவே செயல்பட்ட ஏடு என்று சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள 'எழுத்து' பற்றிய விமர்சனத்தில் அந்தப் பதினாலாவது இதழிலிருந்து 119ஆவது இதழ் வரையில் விமர்சனம் இல்லாவிட்டால் இந்த முயற்சிக்கு பரிபூரணமாக நிறைவு ஏற்படாது.

எழுத்து புதுக்கவிதைக்கு ஆற்றிய பணிகள் குறித்து ஏற்கனவே வ.க. அவர்கள் ''புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற விமர்சன நூலில் மிகச் சிறப்பாக சுட்டிக் காட்டி இருக்கிறார்.

எனவே புதுக்கவிதை ஏடாக மாறிய பின்னர் வெளிவந்த எழுத்து ஏடுகள் பற்றி – அவர் எழுதிய 'பொன்மலர் நாற்ற முடைத்து' என்பதுபோல அவர் எழுதிய விமர்சனத்தையே இங்கே மீண்டும் மறுபிரசுரம் செய்து விடுவதுதான் பொறுத்தமாக இருக்கும் என்று கருதி – பெரியவரிடம் சொல்லி – அவருடைய அனுமதியையும் பெற்றேன். இந்த நூலின் இன்னொரு பகுதியில் இந்தக் கட்டுரையின் தொடர்ச்சி போலவே வல்லிக்கண்ணன் அவர்கள் எழுதிய விமர்சனம் இணைக்கப் பட்டிருக்கிறது.

'எழுத்து' செல்லப்பா பற்றி மிகச்சிறப்பானதொரு விமர்சனத்தை லா.ச.ரா எழுதியிருக்கிறார். 'குங்குமம்' வார இதழில் வெளிவந்த அந்த விமர்சன கட்டுரையின் இறுதிப் பகுதியில் இதை விடச் சிறப்பாக எழுத்து – செல்லப்பா பற்றி நம்மால் சொல்ல முடியாது என்கிற அளவுக்கு அமைந்துள்ள அந்த விமர்சனத்தின் கடைசிப் பகுதியை அப்படியே தருவது – இந்த விமர்சன முயற்சிக்கு நிறைவு தருவதாக இருக்கும்.

செல்லப்பா பிடிவாத குணம் படைத்தவர். இதற்கு ருசு வேறெங்கும் தேட வேண்டாம். பத்து வருடங்கள் 'எழுத்து'ப் பத்திரிகையை நடத்தினாரே அது போதாதாது? பொழுது போக்கு அம்சம் ஏதுமில்லாமல் முழுக்கவே விமர்சனத்துக் கென்றே ஆன பத்திரிகை. இதனுடைய வெற்றி நிச்சயம் வியாபார ரீதியில் இல்லை. முழுப்பொழுதை எழுத்தாக்கிக் கொண்டவனுக்கு தினமும் சோதனையான அந்நாளில் (இப்போது மட்டும் என்ன வாழ்ந்தது)

''செல்லப்பா எப்படி உங்களால் சாத்தியமாகிறது'' என்று கேட்க முடியமா? அவ்வளவு துணிச்சல் எனக்கேது? ''அது என் சொந்த விஷயம் .இலக்கியம் பேசவந்தீர்களா, வம்பு பேசவந்தீர்களா?'' என்று கேட்டு'விட்டால்? கேட்பாரோ, மாட்டாரோ ? செல்லப்பா விடம் அந்த அத்து எனக்கு எப்பவும் உண்டு. நாக்குத் துடித்ததுடன் சரி.

'எழுத்து' வின் வெற்றி வேறு விதத்தில். விமர்சனத்தின் அந்தஸ்தை அது எடுத்துக் காட்டிற்று.

புதுக்கவிதை இயக்கத்துக்கு தொட்டில் என்கிற முறையில் எழுத்து என்றும் பேசப்படும். செல்லப்பா லட்சியவாதி. அவருக்கு அதுபோதும். இல்லை, அதுகூட அவருக்கு அவசியமில்லை. தனக்கு சரி, இல்லை, தன் மனச்சாட்சிக்கு சரியென்று பட்ட ஒரு காரியத்தில் ஈடுபட்டோம் என்கிற திருப்தி போதும்.

பிடிவாதம் வீம்பு – அரிச்சந்திரனிலிருந்து காந்தி வரை, ராமபிரானிலிருந்து துரியோதனன் வரை, பீஷ்மனிலிருந்து செல்லப்பா வரை நான் பூஜிக்கும் குணங்கள். இந்தக் குணங்களால் என்றுமே லாபம் இல்லை. நன்மை கூட இல்லை.

ஆயினும் அவை குணங்கள், அவையில்லாவிட்டால் முதுகெலும்பே இல்லை. Compromise செல்லப்பாவின் அகராதியிலே கிடையாது.

விமர்சனம் என்பது – இல்லை விமர்சனத்தைப் பற்றி நான் எண்ணுவதை, இடமும் நேரமும் கிடைத்தால் பின்னால் எழுதுகிறேன். உண்மையான விமர்சகனின் தகுதிகள் என்னவென்று எனக்குத் தெரியும்.

1. புத்தி கூர்மையிலும் கத்தி கூர்மை

2. நுனிப்புல் மேயாமை (பத்துப் பக்கங்கள் மேலெழுத்த வாரியாகக் கண்ணோட்டம் விட்டுவிட்டு, புத்தகத்தையே விமர்சனம் செய்யும் போலித்தனம் இல்லாமை)

3. எடையிலும் தராசிலும் துல்லியம்

4. இரக்கமற்ற நாணயம்

5. சமயத்துக்குத் தாளம் போடாத நேர்மை

விமர்சன லட்சணங்களைச் சொல்வதாக நினைத்து மனித லட்சணங்களையே சொல்லிக்கொண்டு போகிறேன். இவை அத்தனைக்கும் செல்லப்பாவிடம் குறைவே இல்லை.

செல்லப்பா பெரிய மனுஷன்

பெரியோரைப் புகழ்வோம்.''

‘எழுத்து’வும் புதுக்கவிதையும்

வல்லிக்கண்ணன்

புதுக்கவிதை புதிய மறுமலர்ச்சியும் இயக்க வேகமும் வலிமையும் பெறுவதற்கு ‘எழுத்து’ தோன்ற வேண்டியிருந்தது.

சி.சு. செல்லப்பா 1959 ஜனவரியில் ‘எழுத்து’ மாசிகையை ஆரம்பித்தார். அப்போது அவர் புதுக்கவிதை சம்பந்தமாகத் தீவிரமான கொள்கைகளோ, ஆசை நிறைந்த எதிர்பார்ப்போ, ஆர்வம் மிகுந்த திட்டமோ கொண்டிருந்தார் என்று சொல்வதற்கில்லை.

அப்படி ஏதேனும் இருந்திருந்தால், அது அவசியம் முதல் இதழின் ஆசிரியப் பிரகடனத்தில் ஒலிபரப்பப்பட்டிருக்கும். ‘எழுத்து’ முதல் ஏட்டில் மட்டுமல்ல, முதல் வருடத்தின் எந்த ஏட்டிலுமே புதுக்கவிதை சம்பந்தமான அபிப்பிராயம் எதுவும்– ஆசிரியர் பக்கத்திலோ கட்டுரையாகவோ, அல்லது படைப்பாளிகளின் அபிப்பிராயமாகவோ–பிரசுரிக்கப்படவில்லை.

5–வது இதழ் ‘கு.ப.ரா. நினைவு ஏடு. அதில் கு.ப.ரா பற்றி பலர் எழுதிய கட்டுரைகளோடு, கு.ப.ரா. படைப்புகள் ஒரு சிறுகதை, ஒரு கட்டுரை, ஒரு விமர்சனம், ஐந்து கவிதைகளும் சேர்க்கப்பட்டன. கட்டுரை, ‘வசனகவிதை’ என்ற தலைப்பில் கு.ப.ரா. ‘கலாமோகினி’யில் எழுதியிருந்தது ஆகும்.

‘முழுக்க முழுக்க கருத்து ஆழமும் கனமும் உள்ள ஒரு இலக்கியப்பத்திரிகையை’ ஒரு சோதனை முயற்சியாக நடத்த வேண்டும் என்ற எண்ணமே செல்லப்பாவிடம் மேலோங்கியிருந்தது என்று சொல்லலாம். அப்படிப்பட்ட சோதனை முயற்சியில், ‘இலக்கிய அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதுதான்’ முக்கியப் பணியாக இருக்க வேண்டும் என்ற நோக்கமும் அவருக்கு இருந்தது என்றும் கொள்ளலாம்.

‘எழுத்து இலக்கியக் கோட்பாடுகள் தத்துவக் கோட்பாடுகள் சம்பந்தமாக திறந்த கதவாகத்தான் இருக்கும். கருத்துப் பரிமாறுதல்களின் விளைவாகத்தான் இலக்கியப் படைப்பும் ரசனையும் ஏற்பட முடியும் என்ற நம்பிக்கையை எழுத்து தன் முன் வைத்துக்கொண்டுள்ளது’ என்று முதல் ஏட்டில் அறிவித்துள்ளது.

உடனடியாகவே இலக்கியப்படைப்பு பற்றிய தனது அக்கறையையும் பிரஸ்தாபித்திருக்கிறது.

'கருத்துக்களைச் சொல்வதைப் பற்றி அதிகம் பிரஸ்தாபித்து இருப்பதால், இலக்கிய படைப்பு சம்பந்தமாக எழுத்து தனக்கு எல்லைக் கோடிட்டுக் கொண்டுவிடும் என்பதல்ல. சொல்லப் போனால்படைப்புதான் 'எழுத்து'க்கு அக்கறையாக இருக்கும்' என்றும்.

'இலக்கிய அபிப்பிராயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்களுக்கும் களமாக எழுத்து அமைவது போலவே, இலக்கியத்தரமான எத்தகைய புது சோதனைகளுக்கும் எழுத்து இடம் தரும்' என்றும் தெளிவுபடுத்திக் கொண்டது.

'சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்து புதுத்தடம் போட்டுக்கொண்டு இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயல்கிறவர்களின் படைப்புக்களை வரவேற்பது, என்பதை 'எழுத்து' தனது லட்சியமாக வரித்துக்கொண்டது.

அதனால், கவிதைத் துறையில் புதுக்கவிதைக்கு அது இடம் அளிக்க முன் வந்தது.

முதல் இதழில், ந.பிச்சமூர்த்தியின் 'பெட்டிக் கடை நாரணன், என்ற கவிதை வெளி வந்தது. அது 'எழுத்து'க்காக விசேஷசமாக எழுதப்பட்டது அல்ல. பங்கீட்டு முறை அமுலில் இருந்த காலத்தில் எழுதப்பட்ட கவிதை.

எப்படியும் பிழைப்பது என்று துணிந்து விட்ட நாரணன் பெட்டிக் கடை வைத்து, ஏற்றம் பெற்று, மளிகைக் கடை முதலாளி ஆகி, மண்ணெண்ணெய் பங்கீடு, அரிசிப் பங்கீடு ஆகியவற்றின் துணையோடு பெரும் பணக்காரன் ஆனதை அழகாக வர்ணிக்கும் கவிதை. வாழத் தெரிந்தோர் கையாளும் யுக தர்மங்களையும் அவர்களுடைய 'வாழ்க்கை நோக்கை'யும் சுவையாகவும், கிண்டல் தொனியோடும் இக்கவிதை எடுத்துச் சொல்கிறது.

க.நா. சுப்ரமண்யம் கவிதைகள் இரண்டு, 'கவிதை' என்ற சொந்தப் படைப்பும், 'ஆங்கிலக் கவி ஒருவர் எழுதியதைப் பின்பற்றி' எழுதப்பட்ட 'வர்ணம்' என்பதும் – வந்திருந்தன.

முதல் வருடத்தில் ந.பி. கவிதைகள் மூன்றே மூன்று தான் (பெட்டிக்கடை நாரணன், விஞ்ஞானி, கலீல் கிப்ரான் தமிழாக்கமான 'ஜீவா! தயவுகாட்டு') பிரசுரமாயின் 1,2,3 ஏடுகளில்.

'எழுத்து' முதல் ஐந்து ஏடுகளில் க.நா.சுப்ரமண்யம் கட்டுரைகளும் கருத்துக்களும் மிக அதிகமாக இடம் பெற்றிருந்ததைப் போலவே, முதல் வருடத்தில் (ஏழு ஏடுகளில்) அவரது கவிதைகளும் அதிகமாகப் பிரசுரமாகியிருந்தன.

க.நா.சு. சோதனை முயற்சிகள் என்றே கவிதைகள் எழுதினார் என்பதற்கு அவருடைய வரிகளையே எடுத்தெழுதுவதுதான் நல்லது.

'கவிதையில் நான் செய்ய முயற்சித்ததெல்லாம், விஷயத்தையும் வார்த்தைகளையும் உள்ளத்து உண்மையிலே குழைத்து, காதும் நாக்கும் சொல்லுகிற கட்டுப்பாடுகளுக்கும் கண்தருகிற கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு எழுதுவது என்கிற காரியம்தான்; இன்றைய உண்மையை நிரந்தரமாக்குகிற காரியம்தான், இன்றைய என் அனுபவத்தை வார்த்தைகளால், பேசும் சந்தத்தில் இலக்கியமாக்க, கவிதையாக்க முயலுகிறேன். பயன், கழுதையா, குதிரையா, வசனமா கவிதையா, இலக்கியமா பிதற்றலா என்று கேலி செய்பவர் இருக்கலாம். சோதனை என்று சொல்லும்போது இதற்கெல்லாம் பயப்பட்டுக் கட்டாது. இலக்கிய சோதனைகள் பலவும் ஆரம்பத்தில் கேலிக்கிடமாகவேதான் காட்சியளித்துள்ளன...

'என் புதுக் கவிதை முயற்சிகள் கவிதையாகவும் இலக்கியமாகவும் உருவெடுக்க, வாசகர்கள் ரசிகர்கள் உள்ளத்தில் எதிரொலித்துப் பயன்தரப் பல காலமாகலாம் என்பதையும் அறிந்தே நான் இந்தக் கவிதைச் சோதனையைச் செய்து பார்க்கிறேன். நம்முடைய இன்றைய தினசரி வாழ்விலே இடம் பெறுகிற விஷயங்கள் எல்லாமே, உவமைகள், உருவகங்கள், ஏக்கங்கள், ஆசைகள், வார்த்தைகள், மௌனம் எல்லாமே, என் கவிதைக்கு விஷயம். வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாக இருப்பது போலவே என் கவிதையும் சிக்கலும் சிடுக்கும் நிரம்பியதாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை. தெளிவு தொனிக்க வேண்டும்; ஆனால் சிக்கல் விடுவிக்கக் கூடாததாகவும் இருக்க வேண்டும். கவிதை நயம் எது என்று எடுத்துச் சொல்லக் கூடாததாக இருக்க வேண்டும் – அதே

சமயம் பூராவும் புரியாமலும்இருந்துவிடக் கூடாது. திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்க, ஒருதரம் படிப்பவருக்கும் ஒரு எதிரொலிக்கும் தன்மை, விடாப்பிடியாக உள்ளத்தைப் பிடித்துக் கொள்ளும் ஒரு குணம் இருக்க வேண்டும் இந்தப் புதுக்கவிதையிலே என்றுதான் எண்ணுகிறேன்.'

('சரஸ்வதி' மலர் – புதுக்கவிதை கட்டுரை)

க.நா.சு.வின் 'கவிதை' எனும் கவிதையை படித்துப் பாருங்களேன்!

எனக்கும்
கவிதை பிடிக்காது.
மனிதன் எத்தனையோ
எட்டுக்கள் எடுத்து வைத்து விட்டான்;
இவற்றில்
எத்தனை எட்டுக்கள் கவிதையால்
சாத்திய மாயின
என்று யார்

தீர்மானித்துச்சொல்ல இயலும்? பின்
எதற்காகத் தான் கவிதை தோன்றுகிறது?
மொழியின் மழலை அழகுதான்.
ஆனால் அது போதவே
போதாது.

போதுமானால் கவிதையைத் தவிரவேறு
இலக்கியம் தோன்றியிராதே, போதாது
என்றுதான்,ஒன்றன் பின் ஒன்றாக
இத்தனை இலக்கியத்
துறைகள்
தோன்றின, நாடகமும், நாவலும், நீள்
கதையும், கட்டுரையும் இல்லாவிட்டால்
தோன்றியிராது; ஆனால் அவையும் தான்
திருப்தி தருவதில்லையே!

அதனால்
தான் நானும் கவிதை எழுதுகிறேன்.
மனிதனுக்குக் கலை எதுவும் திருப்தி தராது.
மேலே, மேலே என்கிற ஏக்கத்தைத்தான்
தரும். கலையின்
பிறப்பு
இந்த அடிப்படையில் ஏற்படுவது. கடவுளே
இன்னமும் உயிர்வைத்துக் கொண்டிருப்பது
இந்த அடிப்படையில்தான் சாத்தியம்
என்று சொல்லலாம்.

'எழுத்து' முதல் ஏட்டில் தந்த கவிதைகளைப் பார்த்துவிட்டு தி.சோ. வேணுகோபாலன், டி.கே. துரைஸ்வாமி, 'பசுவய்யா என்ற பெயரில் சுந்தர ராமசாமி ஆகியோரும் கவிதைகள் எழுத முற்பட்டார்கள்.

'கவி – வேதனை' என்ற வேணுகோபாலன் கவிதை 2–வது ஏட்டில் இடம் பெற்றுள்ளது. பிறகு 9,11 ஏடுகளில் 'நான் கவியானேன்' 'வெள்ளம்' எனும் கவிதைகள் வந்துள்ளன.

துரைஸ்வாமியின் கவிதைகள் (காத்தபானை, கடன்பட்டார் சிலை) 3, 4, 5 ஏடுகளில் பிரசுரமாயின.

புதிதாகத் கவிதை எழுதியவர்களில் 'பசுவய்யா' கவிதைகள் புதுமையும் தனித்தன்மையும் பெற்று விளங்கின. மூன்றாவது இதழில் வெளியான 'உன் கை நகம்' குறிப்பிடத்தகுந்தது.

நகத்தை வெட்டியெறி – அழுக்குச் சேரும்
நகத்தை வெட்டியெறி – அழுக்குச் சேரும்.

அகிலமே சொந்தம் அழுக்குக்கு!
நகக் கண்ணும் எதற்கு அழுக்குக்கு!

'பிறாண்டாலாமே – எதிரியைப்
பிறாண்டலாமே?'
பிறாண்டலாம், பிடுங்கலாம்,
குத்தலாம், கிழிக்கலாம்.

ஆரத் தழுவிய
அருமைக் கண்ணாளின்

இடது தோளில்
ரத்தம் கசியும்.

வலது கை நகத்தைவெட்டியெறி – அல்லது
தாம்பத்திய பந்தத்தை விட்டுவிடு.

தூக்கி சுமக்கும்
அருமைக் குழந்தையின்

பிஞ்சுத் துடைகளில்
ரத்தம் கசியும்.

இடது கை நகத்தை வெட்டியெறி அல்லது
குழந்தை சுமப்பதை விட்டுவிடு.

நகத்தை வெட்டியெறி – அழுக்குச் சேரும்.
நகத்தை வெட்டியெறி – அழுக்குச் சேரும்.

'குறும்பை தோண்டலாமே – காதில்
குறும்பை தோண்டலாமே?'

குறும்பை தோண்டலாம்
குறும்பை தோண்டலாம்

குறும்பைக்குக் குடியிருப்பு
குடலுக்குக் குடிமாற்றம்
குருதியிலும் கலந்துபோம் – உன்
குருதியிலும் கலந்துபோம்.

நகத்தை வெட்டியெறி – அழுக்குச் சேரும்.
நகத்தை வெட்டியெறி – அழுக்குச் சேரும்.

இவ்வாறு புதிய நோக்கும் போக்கும் பெற்ற பசுவய்யா தொடர்ந்து கவிதை எழுதினார். கதவைத் திற, வாழ்க்கை, மேஸ்திரிகள், என் எழுத்து என்பன 'எழுத்து' முதல் வருட ஏடுகளில் வெளி வந்துள்ளன.

கருத்தாழம் கொண்ட 'மேஸ்திரிகள்' என்ற கவிதை மிகுதியும் ரசிக்கத் தகுந்தது.

1

பல்கலைக் கழகத்தின்
முன்னொரு தோட்டம்
தீட்டினார் மேஸ்திரி
அற்புதத் திட்டம்

2

திட்டம் விளைந்தது
தோட்டம் மறைந்தது
காட்சி தந்தது
மிருகக் காட்சிசாலை

3

தோட்டத்திலே மேஸ்திரி ஒருவரே
எண்ணத் தொலையுமோ உள்ளே?

'எழுத்து' புதுக் கவிதை முயற்சிகளுக்குத் தந்த ஆதரவைக் கண்டு உற்சாகம் பெற்று, மா. இளையபெருமாள், கி.கஸ்தூரி ரங்கன், சி.பழனிசாமி, சக்ரதாரி, சுப.கோ. நாராயணசாமி ஆகியோரும் இவ்வருடத்தில் கவிதைப் படைப்பில் ஈடுபட்டார்கள். எல்லாம் ரசிக்க வேண்டிய – பாராட்டுதலுக்கு உரிய படைப்புகளே யாகும்.

'எழுத்து' 14–வது ஏட்டிலேதான் ஆசிரியர் 'புதுக்கவிதை' பற்றி பிரஸ்தாபிக்கத் துணிந்துள்ளார்.

'பழங்கவிதை புதுக் கவிதை என்று அதிகம் இப்போது பாகு படுத்திப் பேசிக் கொள்கிறோம். புதுக்கவிதை முயற்சிகள் என்று ஒருவகை கவிதைகளுக்குப் பெயர் சூட்டி. அதற்கு இடம் தருகிறோம். தமிழ்க் கவிதையைத் தனியான ஒரு பாதையில், திருப்பி விட்ட பாரதியின் தனித்தன்மையை ஏற்றுக் கொண்ட பின், அதற்குப் பிறகு அவ்வப்போது தோன்றும் ஆற்றல்கொண்டவர்களது சோதனைப் படைப்புகளுக்கும் ஒரு அந்தஸ்து, ஒரு இடம் இருக்கிறது. ஆனால் இந்தப் புது கவிதை முயற்சி எந்த அடிப்படையில் எந்த அளவுக்கு பழங் கவிதையிலிருந்து மாறுபட்டு நிற்கிறது என்பதை எல்லாம் ஆராய்வதற்கான அளவுக்கு புதுக்கவிதை வளம் பெருக வில்லை என்ற ஒரு நினைப்பும் இருந்துவருகிறது. இந்த ஏட்டில் பிச்சமூர்த்தி வசன கவிதை பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இன்று புதுக்கவிதை சோதனை ஆரம்பித்து வைத்த முதல்வர் பிச்சமூர்த்தி புதுக் கருத்துக்கள் ஆதாரத்துடன் அழுத்தமாக ஆராய்ந்து கூறப்பட்டுள்ள கட்டுரை அது.'

பிச்சமூர்த்தி கட்டுரை

புதுக்கவிதையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வரலாற்று ரீதியில் எழுதுவதற்காகவே இத்தொடர் பிறந்தது. அதனால் தான் புதுக்கவிதையின் ஆரம்பகாலமான 1940களில் அம்முயற்சி சம்பந்தமாக இலக்கியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பலரகமான அபிப்பிராயங்களையும் முழுக்கட்டுரைகளாக அவ்வப்போது எடுத்தெழுத நேரிட்டது.

1960களில் புதுக்கவிதை புதிய வேகம் பெற்று வளரத் தொடங்கியது. அப்போதும் அந்த முயற்சியைக் கேலி செய்தும், குறை கூறியும் கண்டித்தும் பேசியவர்களும் எழுதியவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களது எதிர்ப்புக்குப் பதில் கூறுவது போல, ந.பிச்சமூர்த்தி எழுதிய கட்டுரை எழுத்து, (பிப்ரவரி 1961) 14வது ஏட்டில் வெளிவந்தது.

கருத்தாழம் கொண்ட, 'வசன கவிதை' என்ற அந்தக் கட்டுரையை அப்படியே எடுத்தெழுதுவது இவ்வரலாற்றுக்கு அவசியமானது என்று நான் கருதுகிறேன். சிந்தனைத் தெளிவோடும் அழுத்தத்துடனும் எழுதப்பட்டுள்ள அக்கட்டுரை இன்றைய ரசிகர்களுக்கும் இனி வரும் வாசகர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வசன கவிதை

"வசன கவிதை என்று கிடையாது, அது கவிதையே ஆகாது என்று ஒரு விமர்சகர் கூறியிருக்கிறார். ஏன் இல்லை, ஏன் ஆக முடியாது என்று தர்க்க ரீதியாக எனக்கு விளங்கவில்லை. வசனமும் கவிதையும் வெவ்வேறு வகையைச் சேர்ந்தவை என்பது உண்மைதான். வசனம் நமக்கு செய்தியைத் தெரிவிக்கிறது. நம்முடைய அறிவுக்கு உணவாகப் புதிய விஷயங்களைக் கொண்டுவந்து சேர்க்கிறது. எனவே தபாலைப்போல இயங்குகிறது. கவிதை நம்முடைய அறிவுடன் தொடர்புகொள்ள முயல்வதில்லை. நம்முடைய உணர்வுடன் உறவாட முயல்கிறது. நேரிடையாக உள்ளத்தைத் தொட்டு புதிய அனுபவத்தை எழுப்ப முயல்கிறது. தனக்குள் எரியும் சுடர்கொண்டு மற்றொரு மனத்தையும் சுடர்

கொள்ளச் செய்கிறது. வசனம் லோகாயத உண்மையை அடிப்படையாகக்கொண்டது. கவிதை மன நெகிழ்ச்சியை, மன அசைவை அடிப்படையாகக் கொண்டது.

ஆனால் வசனத்தை கவிதையைப் போல் செயல்படுத்த முடியாதா? கூடாதென்ற நியதி உண்டா? இல்லை. அம்மாதிரி செயல்படும் பொழுது வசனம் தன் தொழிலை விட்டுக் கவிதையின் தொழிலை ஏற்றுக் கொண்டு விடுகிறது என்றுதான் ஏற்படும். பார்வைக்கு வசனம், உண்மையில் கவிதை.

மற்றொரு விஷயம். இப்பாகுபாடு தெளிவை உத்தேசித்து செய்யப்பட்டதே ஒழிய நிரந்தரமான தென்று கருதக் கூடாது. நோக்கத்தினால் அவை பாகுபாட்டைச் சேர்ந்த தன்மையோ மற்றொரு பாகுபாட்டைச்சேர்ந்த பெருமையையோ அடைகின்றன. ஜுரத்தில் வேகம் ஏறுவதுபோல் உணர்ச்சி கூடினால் தரையில் நடக்கும் வசனம் சிறகு பெற்றுக் கவிதையாகிவிடும்.

ஒரு உதாரணத்தைக் கொண்டு பார்ப்போம். பாரதியார் 'காட்சி' என்ற தலைப்பில் சில வசன கவிதைகளை இயற்றித் தந்திருக்கிறார்.

'இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமை உடைத்து. காற்றும் இனிது. தீ இனிது. நிலம் இனிது. ஞாயிறும் நன்று. திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன. மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.'

என்று முதல் கவிதை தொடங்குகிறது.

இது வசனமா? தர்க்க அறிவுக்கு என்ன புரிகிறது. கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோலல்லவா இருக்கிறது. சுருதி பேதமாக அல்லவா இருக்கிறது. ஆம் வசன ரீதியாகப் பார்த்ததால் விளைந்த வினை இது. இது கவிதை. செய்தி சொல்ல வந்த,விஞ்ஞானத்தை விளக்க வந்த வசனமல்ல. சிருஷ்டியின் அனுபவத்தைக் கூறும் உணர்வுள்ள சொற்கள்.

எனவே வசனம் கவிதையாக முடியாதென்று முன் கூட்டியே முடிவு செய்வது தர்க்கத்திற்கு ஒவ்வாது. மனிதனுடைய மொழிகள் அடைந்துள்ள மாறுபாட்டையும். கவிதை என்னும் துறை அடைந்துள்ள வளர்ச்சியையும் சரித்திர ரீதியாக உணராத குற்றம்தான் இம்மாதிரி அபிப்பிராயங்களுக்குக் காரணமாகிறது.

கவிதையின் சரித்திரத்தைப் பார்த்தால், பாட்டிலிருந்தே கவிதை பிறந்திருக்கிறதென்று தோன்றுகிறது. முதல் முதலாக மனிதன் பாடத்தான் பாடியிருப்பான். இத்துறையில் அவனுடைய ஆதிகுருமார்கள் என்று குயிலையும் மாட்டையும் கரிச்சானையும், நீரொலியையும் இடியையும் இவை போன்ற எண்ணற்றவையே யும்தான் கொள்ள வேண்டும். எனவே பாடினான் என்பதைவிட இசைத்தான் என்றே கூறலாம். ஒருக்கால் வாயால் இசைக்கும் முன்னரே இசைக்கருவிகளைக் கண்டுபிடித்திருக்கவும் கூடும். வண்டடித்த மூங்கிலில் எழும் ஒலியைக் கொண்டே புல்லாங்குழல் கண்டு பிடித்தார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இசைக் கருவிகளைக் கொண்டு இசையறிவு விரிந்திருக்கக்கூடும். நாதசுரத்தில் சாகித்யத்தைப் பழக தத்தகாரங்களே போதுமானவை என்று சொல்லப்படுவதையும் இங்கு நினைவூட்டிக் கொள்ளலாம். வார்த்தைகளை உருவி விட்ட மெட்டைத் தானே வாத்யத்தில் கேட்கிறோம். முதல் முதலாக சொல்லுக்கு அதிக இடமற்ற இசையே பாட்டாக உலவிற்று என்று கருதலாம்.

மனிதனுடைய சிந்தனையும் உணர்ச்சியும் வளர்ச்சி அடையத் தலைப்பட்ட பிறகு வெறும் இசையால் உண்டாகும் இன்பத்துடன் பொருளையும் மன நெகிழ்ச்சியையும் வியப்பையும் துயரத்தையும் சொற்களின் மூலம் ஊட்டி இசைக்கு நிரந்தரமான அடிப்படையையே அளிக்கலாமே என்ற ரகசியம் மனிதனுக்குப் புலனாகிவிட்டது.

சவுக்கைத் தோப்பின் வழியே காற்று பாய்ந்து சென்ற பிறகு தோன்றும் ஒயுமொலி சொல்லொணாத ஏக்கத்தை உண்டாக்குகிறது என்பதுநம்முடைய அனுபவம். ஆனால் மனிதன் உயிரின் பெருவெள்ளத்திலிருந்து பிரிந்த தனித்துளி மூலத் தொடர்பறுந்து வாழ்வெனும்துயரக்கடலில் விழுந்து தத்தளிப்பதாகக் கருதி தவிக்கும் ஜீவன். இந்தப் பிரிவினை துயரத்திற்கு வேதனைப்படுவது போன்ற வேதனைதரும் சொற்களையும் இவ்வேகத்துடன் கோர்த்து விட்டால் இசை கவிதையாகி விடுகிறது. காற்றில் தோன்றி காற்றில் மறையும் இசை கால்பெற்று நிலைத்து உணர்ச்சிக்குத் தீயூட்டும் சிறப்பை அடைகிறது. இப்பொழுது இசை வெறும் குறிப்பற்ற கிளர்ச்சியாக இல்லாமல் பொருளுள்ள பாட்டாகிறது. கவிதையாகிறது.

ஆனால் ஒன்று. இரண்டு வகையிலும் காதென்னும் பொறி வழியேதான் இந்த இன்பமும் அனுபவமும் தோன்றியாக வேண்டி

இருக்கிறது. காதை முன்னிறுத்தியே இதுவரை கவிதை எழுதப்பட்டு வந்திருக்கிறதென்பதை இங்கு நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும். இன்னும் கவிஞர்களில் பலர் கவிதை புனைவதற்குமுன் சந்தத்தையோ பாவகைகளின் இரண்டொரு வரிகளையோ நினைவில் கொண்டு பரிசலாக்கி கவிதையின் சொற்களை மீதேற்றி கவிதை புனைவது எனக்குத் தெரியும். யாப்பிலக்கண அறிவின்றியே வெற்றிகரமாக கவிஞர்கள் இந்தக் காரணத்தினால்தான் ஒலிக் குற்றமின்றி கவிதை புனையமுடிகிறது.

இப்பொழுது முக்கியமான பிரச்னை என்னவென்றால், காதை நம்பாமல் கவிதையைத் தோற்றுவிக்க முடியாதா என்பதுதான். அனுபவத்தில் புதுமையைக் காட்ட விரும்பும் கவிஞன் இது இயலும் என்பதைக் கண்டான். கருத்திலே மடை திறக்கும் உணர்வு நெகிழ்ச்சியிலே, சுட்டிக் காட்டும் பேருண்மையிலே கவிதை பொதிந்து கிடக்கிறதென்ற உண்மையைப் புதுக்கவிஞன் கண்டு பிடித்தான். கவிதை செற்களில் இல்லை, ஒலிநயத்தில் இல்லை என்பதைக் கண்டு கொண்டான். இரண்டுக்கும் காரணமான தன்னிடத்தில் இருக்கிறதென்ற பேருண்மையை, அதிருஷ்ட வசத்தால் தான் பெற்ற அனுபவத்தில் இருக்கிறதென்ற ரசனை நுட்பத்தை உணர்ந்தான்.

இந்த அடிப்படையின் மீது பார்க்கும் பொழுது கவிதை காதை நம்பித்தான் வாழ வேண்டுமென்ற அவசியம் தோன்றவில்லை. கவிதையின் மரபுக்கொத்த அங்கங்களும் இக்கருத்துக்கு ஆதரவாகவே இருக்கின்றன. கவிதைக்கு உயர்நாடியான உவமை அணி பெரும்பாலும் கண்ணைச் சார்ந்த அலங்காரம். காதை நம்பிக் கவிதை பிறக்க வேண்டியிருந்த நிலையிலும் கூட, கவிதையின் சிறப்பெல்லாம் ஐம்பொறிகளின் தயவையும் மீறிய நேரிடையான அனுபவத்தால், இயற்கையான நுண்ணுணர்வால், ஏற்படுவதென்ற உண்மையை எப்படி மறந்துவிட முடியும்?

இந்த உண்மையின் காரணமாகவே, ஒரு பொறிக்கு உரித்தான தொழிலை மற்றொரு பொறியின் மீதேற்றி கவிதையில் சிறப்பைக் கூட்டும் கற்பனை முறை கையாளப்பட்டு வந்திருக்கிறது.

ஒரு உதாரணத்தைக் கொண்டு இதை ஆராய்வோம். ஆனால் ஒரு எச்சரிக்கை. இது இலக்கிய விசாரமேயன்றி, மன இயல்

விமர்சனமே அன்றி, சரித்திர ரீதியான தொடரல்ல என்பதை மறக்கலாகாது. 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாரதியார் பாடினார். இயற்கையாக ருசியை நாக்கின் மூலமே உணர்கிறோம். காதின் மூலம் இந்த ருசியை உணரலாம் என்பது இயற்கைக்கு முரண்பட்டது. ஆனால் கவிஞர் இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே என்கிறாரே. நாக்கின் தொழிலைக் காதின் மேலேற்றித் திடுக்கிடும் புதிய அனுபவத்தைக் கூறுகிறாரே! ஆம். நாக்குக்கு இனிப்பாவது போல காதுக்கு இனிப்பாக இருக்கிறது என்கிறார். அதாவது பொறிகளுக்குள்ள வேறுபாடு உடலியலைப் பற்றிய வரையில் உண்மையே ஒழிய மன இயலைப் பற்றிய வரையில் வேறுபாடாகாது. இரண்டின் விளைவும் ஒன்றுதான் என்ற தத்வ ரகசியத்தை மறை முகமாகக் காட்டுகிறார்.

வேறுவிதமாகக் கூறினால், பொறிகள் தங்கள் தங்கள் தொழில்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ள இயலும் என்று தத்வரீதியாகக் கொள்ளலாம். கவிதையின் ஒருமைப்பட்ட, உடனடியான அனுபவத்தை விளைவிப்பது ஆறாவது பொறியாகிய மனமேயாகும். பொறிகள் தபால்காரனைப் போல். செய்தி என்று உணரும் சக்தி மனத்திற்குத்தான் உண்டு. எனவேதான் பொறிகள் தனித் தன்மையை இழந்து, பதிலியாகக்கூட இயங்கி கவிதையென்னும் விளைவுக்குக் கருவியாகின்றன.

நாக்கின் தொழிலைக் காது மேற்கொள்வது போல, காதின் தொழிலைக்கண் ஏன் ஏற்க முடியாது? முடியும் என்று கவிஞன் கண்ட பொழுது தோன்றியதுதான் வசன கவிதை. இந்தக் காரணத்தாலேயே அச்சு இயந்திரம் தோன்றிய பிறகே வசன கவிதை சாத்யமாயிற்று, காதை அடிப்படையாகக் கொண்ட எதுகை மோனைகளுக்கு இப்பொழுது அவசியமில்லாமல் போய் விட்ட தென்பது கசப்பான புதிய உண்மை.

எதுகை மோனைகளாலும், சந்தத்தாலும் கவிதைக்கு கிடைத்து வந்த இசைப் பயனை ஸ்தூல நிலையிலிருந்து சூக்ஷ்ம நிலைக்கு உயர்த்தக் கூடிய கவிதை முறை சாத்யமாகி விட்டது. சொற்களைத் தொடுக்கும் ஜாலத்தாலேயே கவிதையின் பிறப்பிடத்திலேயே அதை எழுப்பிக் காட்டும் கடினமான கவிதைக் கலைக்குத் தூண்டுதல் ஏற்பட்டு விட்டது. இசையை இசைவாக மாற்ற வேண்டிய கடமை

உண்டாகி விட்டது. எனவே பல கோடி ஒலி அமைப்புகளிலே சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கவிதையில் ஒலிஇன்பத்தைக் கூட்டுவது போல பல கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பொறுக்கி எடுத்து இசையவைக்கும் முயற்சி புதிய கவிதை ஆயிற்று, யாப்புக்கிணங்காத வகை என்று குறிப்பிடுவதற்காகவே கவிதை என்ற சொல்லுடன் 'வசன' என்ற சொல்லையும் சேர்த்து இப்புதிய முறையைக் குறிப்பிடுகிறார்கள். பார்த்தால் வசனம் பாய்ந்தால் – நெஞ்சில் பாய்ந்தால் – கவிதை.

மரபுக்கிணங்கிய கவிதையில் ஒலி நயம் என்று ஏதோ தனியாக இருப்பதாகக் கூறுவதே ஒரு பிரமை என்று வாதிக்கக்கூட இடமிருக்கிறது; கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் கவிதையில் தெரிவிக்க ஏறக்குறைய குறிப்பிட்ட வார்த்தைகளால் முடியும். வேறு சொற்களை உபயோகித்தால் கருத்தும் உணர்ச்சியும் மாறிவிடும். கருத்திலோ உணர்விலோ ஏற்படும் இசையே ஒலிதயம் என்ற தனிப்பேருடன் நடமாடுகிறது.

பாம்பைப் பற்றிய மரபான கருத்தொன்றை ஆராய்ந்து பார்ப்பது இந்த வாதத்திற்குத் தெளிவை அளிக்கும். பாம்புக்குக் கட்செவி என்ற பெயர். அதாவது பாம்புக்குக் காதுகிடையாது என்று ஏற்படுகிறது. ஆனால் மகுடிக்கு முன் ஆடுகிறதே என்று சொல்லக்கூடும். பழம் நூல்களெல்லாம் பாம்புக்கு இசை உணர்ச்சி அதிகம் என்று கூறுகின்றனவே என்றும் சொல்லக்கூடும். ஊர்வன வகை ஆராய்ச்சியாளர்கள் பாம்பு இசையைக் கேட்டு ஆடவில்லை, கண்ணுக்குத் தெரியும் மகுடியோ மற்றப் பொருளோ அசைவதற்கு ஏற்ப ஆடுகிறது என்று முடிவு செய்திருக்கிறார்கள். எனவே பாம்பு ஒலிநயம் காண்பதாகக் கூறுவதெல்லாம் ஒரு பிரமை. மரபுக்கிணங்கிய கவிதையின் ஒலிநயம் என்று கூறுவதும் இதைப் போன்ற ஒரு பிரமையே, உண்மையில் மகுடியின் இசையைப்போல் கவிதையில் ஆடும் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் அனுபவித்துத் தான் கவிதாரசனை பெறுகிறோமே அல்லாது வேறெதுமில்லை என்றே கூறலாம்.

வசன கவிதையை முதல்முதலாகக் கண்டு பிடித்தவர் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன். அன்று முதல் இப்புதுத்துறையில் முயற்சிகள் நடைபெற்றே வருகின்றன

இம்முறையால். கவிதையைத் தேக்கிக் காட்ட முடியாதென்பதற்குத் தகுந்த காரணங்களை யாரும் சொல்லவில்லை. மனிதனால் சந்திரனுக்குப் போக முடியாதென்று கூற யாரும் இன்று துணிவுகொள்ள மாட்டார்கள். புறவுலகில் சாத்யமற்ற தென்று கருப்படுவது சாத்யமாகும் பொழுது மனத்துறையில் மட்டும் புதுமை ஏன் சாத்யமாகக் கூடாது? யாப்புக்கிணங்கிக் கவிபுனைபவர்களில் சொத்தை சொள்ளை தோன்றுவதுபோல வசனகவிதைத் துறையிலும் இருக்கலாமே ஒழிய, புது முறைக்கே தோல்வி ஏற்பட்டு விட்டதாக தர்க்க ரீதியாகக் கொள்ள முடியாது. கருத்துக்களின் இசைவே, உணர்வின் சலனமே, கவிதா சிருஷ்டியின் ஒருமையே புதுக்கவிதையாகும்.

'ரவி, மதி, தாரகைக்கு வணக்கம்' என்று எட்வர்ட்கார்ப் பெண்டர் என்னும் அமெரிக்கக் கவி 'ஜனநாயத்தை நோக்கி' என்னும் நீண்ட கவிதையைத் தொடங்குகிறார். இவ்வரியை ஒரு நிமிஷம் கவனிக்கலாம் இது நம்முடைய அறிவுக்கு எந்தச் செய்தியையும் சொல்லவில்லை. எந்தப் பொருளையும் குறிப்பிடவில்லை. ஆனால் நமக்குப் புதிய உண்மை ஒன்றை மறந்து போனதை நினைவூட்டுவதென்றாலும் சரிதான் இது கூறுகிறது. புதிய கதவம் ஒன்றைத் திறந்து உலக சிருஷ்டியுடன் நமக்கிருக்கும் உறவு முறைகளைக் காட்டுகிறது. சிருஷ்டியின் பெரு வெளியில் நம்மைப் போல் செல்லும் சகப் பிராணிகள் இருப்பதையும், நாமும் அவர்களும் சேர்ந்து ஒரே நோக்குடன் தோழமையுடன் இயங்குவதையும் சுட்டிக்காட்டி, குசலம் விசாரித்து, வணக்கம் செலுத்துகிறது. சிருஷ்டி என்னும் மகத்தான இயக்கத்தில் இசைவு பெற்றுள்ளவன் தான் கவி, அவ[illegible]ற்றுத்தான் கவிதை என்ற உண்மையை நாம் உணர்கிறோம். கவிதைக்குப் பிறப்பிடமான ஒருமையும் இசைவையும் உணர்கிறோம். எனவே, இவ்வரியைப் படித்ததும் ஊன் பொதிந்த குறுகிய குடிசையில் தொல்லைப்படும் நம் சிற்றுணர்வு விடுதலை பெற்று விரிந்து பறக்க உதவிய இவ்வனுபவத்தைக் கவிதை என்று உணர்கிறோம்.

இதே அகண்ட இசைவைத்தான், கவிதைத் தன்மையைத் தான், பாரதியாரின் 'காட்சி'யிலும் காண்கிறோம். வசன கவிதைக்கு இதுவே மற்றொரு சிறந்த உதாரணமாகும்.

பாரதியாருக்குப்பின் இத்தடத்தில் சென்றவர்கள் குறைவு.

கு.ப.ராஜகோபாலன் ஓரளவும், நான் சற்று விரிவாகவும், வல்லிக்கண்ணன் சிறிதும் இத்துறையில் சோதனைகள் செய்துள்ளோம்.

புதுமைப்பித்தன் தம் கவிதைகளில் புதிய கவிதா சோதனைகள் நடத்தினார். ஆனால் பெரும்பகுதிகள் கவி வெண்பாவாகவே ஒலிக்கின்றன. இச்சோதனையை இப்பொழுது சிலர் தொடர்ந்து செய்வது வரவேற்கத்தக்கது. வெற்றி தோல்வி கவிஞனுக்கு இல்லை.''

புதுக்கவிதை பற்றி

பிச்சமூர்த்தி கட்டுரை பிரசுரமானதற்குப் பிறகு, 'எழுத்து' ஏட்டில் கவிதை, வசனகவிதை பற்றிய சர்ச்சைகள் அதிகமாக இடம் பெற்றன. 'எழுத்து' 15–வது ஏட்டில் தலையங்கப் பகுதியாக, ஆசிரியர் தனது எண்ணங்களை வெளியிட்டிருந்தார். 'எழுத்து அரங்கம்' பகுதியில் இலங்கை ஆர். முருகையனும், திருப்பத்தூர் பொ. சுந்தரமூர்த்தி நயினாரும் தங்கள் கருத்துக்களை விரிவாக எழுதியிருந்தனர். எஸ். முருகையன் எழுதிய 'கவிதைக் கலை' என்றொரு கட்டுரையும் இடம் பெற்றிருந்தது. 'ஃப்ரி வெர்ஸ்' பற்றிய அரைப்பக்க விளக்கம் ஒன்றும் காணப்பட்டது.

புதுக்கவிதை வேறு, வசன கவிதை வேறு என்று பிரித்துப்பேச முற்பட்ட 'எழுத்து' ஆசிரியர், ந.பி.யின் சில அபிப்பிராயங்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை வலியுறுத்தியது குறிப்பிடத் தகுந்தாகும். அதன் முக்யத்துவம் கருதி, 'புதுக்கவிதைபற்றி' என்ற 'எழுத்து' (மார்ச் 60) தலையங்கக் கட்டுரையை அப்படியே தருகிறேன்.

''கற்பனை எழுத்து உருவ வகைகளில் கவிதைதான் மிகச் சிறந்த வெளியீட்டு சாதனம் என்று சொல்லப்படுகிறது. கவிதையின் பாஷையே ஒரு தனித்தன்மை கொண்டது. ஓசை நய வார்த்தைகள், வார்த்தை தொடர்களால் அமைந்த ஒரு தனிச் சிறப்பான அமைப்பு முறைகளைக் கொண்டு, தனித்து குறிப்பிடப்படுவது. வாழ்க்கையும் மனோபாவனையும் ஒரு கலைப்பாங்கான உள்ளத்தில் பொறிகளால் பாதிக்கப்பட்ட சில மனப்பதிவுகளை ஏற்றுகின்றன. இந்த மனப்பதிவுகளை உணர்ச்சி ரீதியாக உரைத்துப்பார்க்கும் கவிஞன் அதை மொழியின் மூலம் இறுகிய, உறைந்த நடையில் கொடுக்கிறான். இந்த நடையில் அர்த்த வலுடன் செழிப்புடன் ஒரு அழகும் இருக்கிறது. அழகுடன் ஒரு இசைத்தன்மையும் (மியூசிகாலிட்டி) இருக்கும்.

இந்த இசைத்தன்மைதான் கவிதையை வசனத்திலிருந்து பிரித்துக் காட்டுகிறது. ஆனால் இசைத்தன்மை என்பதை மிகுந்த எச்சரிக்கையுடனேயே கவிதைத் துறையில் குறிப்பிட வேண்டும். சங்கீதத்துக்கு உரிய அளவு தேவையான இசைத் தன்மைக்கும் கவிதைக்கு உரிய அளவு தேவையான இசைத் தன்மைக்கும் உள்ள வித்தியாசத்தை எந்த சந்தர்ப்பத்திலும் நாம் அசந்து மறந்துகூட – குழப்பிக் கொள்ளக்கூடாது. வசனத்துக்கும் கவிதைக்கும் உள்ள வித்தியாசத்தைப் போலவே கவிதைக்கும் சங்கீதத்துக்கும் வித்தியாசம் உண்டு. பாரதி தன் கவிதைகள் பலவற்றில் சங்கீதத்துக்கு உரிய இசையம்சம் ஏற்றியிருப்பதைப் பார்க்கலாம். இந்த அளவு இசையம்சம் உள்ள அவரது படைப்புகள் கவித்தரம் குறைந்துதான் காண்கின்றன என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும், இன்று அவரது அத்தகைய படைப்புகளைப் பின்பற்றி எழுதப்படும் மெட்டுப்பாட்டுகள் எல்லாம் கவிதைகள் என்று கருதும் ஒரு ஏற்பு நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் பாதகமாக இருக்கக் கூடியது.

எனவே கவிதைக்கு வேண்டிய இசைத்தன்மை பிச்சமூர்த்தி கூறியதுபோல ‘சவுக்கைத் தோப்பின் வழியே காற்று பாய்ந்து சென்ற பிறகு தோன்றும் ஒரு ஓயுமொலி’ என்பதுதான் முக்கியம். ஓயுமொலி சொப்பனக் குரல்மாதிரி நம் காதுகளில் தாக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இந்த ஓயும் ஒலி சொப்பனக் குரல்தான் ஒலிநயம் என்று சொல்கிறோமே அந்த மென்மையான இசைத்தன்மை வாய்ந்தது. இந்த ஒலிநயம் சுருதி மீட்டலாக ஓடும் கவிதையில் வசனத்திற்கும் ஒலிநயம் உறவு உண்டு என்றாலும் கவிதையில் உள்ள ஒலிநயத் தோற்றமே வேறு. இந்த ஒலிநயத்தை கொணர்வதில்தான் கவிஞன் சாமர்த்தியம் இருக்கிறது. சந்தத்தைக் கொண்டு வார்த்தைகள் ஓசையை தாளப்படுத்திக் காட்டி கவிதையை உணரச் செய்வதுதான் என்பதல்ல.

இந்த மென்மையான ஒலிநயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதுதான் புதுக்கவிதை முயற்சி. சந்தஅமைப்பு ஒழுங்கற்று கையாளப்பட்டிருக்கலாம். அதைப் பற்றிய அக்கறை இல்லாமலும் இருக்கலாம். ஆனால் ஒலிநயம் அதில் இருக்கத் தான் செய்யும். இதனால் மரபான கவிதையில் ஒலிநயம் இல்லை என்று

சொல்லிவிடமுடியாது. சந்தமும் எதுகை மோனையும் சொற்கட்டும் ஒலிநயத்தை ஏற்றக்கூடியவை தான். அதை உணரச் செய்ய வைப்பவைதான். ஆனால் சீர் அசை தளைகளின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு வெளித்தெரியும் படியான தாளக்கட்டுடன் அமைந்த கவிதைகளில் விட புதுக்கவிதையில் ஒலிநயத்துக்கு இடம் அதிகம்.

'மரபுக்கிணங்கிய கவிதைகளில் ஒலிநயம் என்று தனியாக இருப்பதாகக்கூறுவதே ஒரு பிரமை என்று வாதிக்க இடம் இருக்கிறது' என்று பிச்சமூர்த்தி கூறுகிறார். 'ஒலிநயம் என்ற குணநியதியை முற்றாக புறக்கணிப்பது வசன கவிதை' என்கிறார் முருகையன் 'வசன கவிதை என்பது கவிஞன் தன் உணர்வை தோன்றிய போக்கில் சிதறவிடுவதாகும்' என்கிறார் கைலாசபதி. ஆனால் இந்த மூன்றுக்கும் பதில் சொல்வது போல அமைந்திருக்கிறது. புதுக்கவிதை முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்த கு.ப.ராஜகோபாலன் எழுதியுள்ள சிலவரிகள்.

''வசன கவிதைக்கும் யாப்பிலக்கணம் உண்டு. அதிலும் மாவிளங்காய் தேமாங்கனி எல்லாம் வந்தாக வேண்டும். வரும் வகை மட்டும் வேறாக இருக்கும். வசன கவிதைக்கும் எதுகை மோனை கட்டாயம் உண்டு. ஏனென்றால் இந்த அலங்காரங்களை எல்லாம் உள்ளடக்கினது கவிதை. அது அவற்றை இஷ்டம் போல மாற்றிக்கொள்ளும். முதலில் உண்டாக்கின படியே இருக்க வேண்டும் என்றால் இருக்காது.''

கு.ப.ரா. புதுக்கவிதை முயற்சி பற்றி கூறியுள்ள இந்த வரிகள் திட்டவட்டமாகவே அதன் தன்மை பற்றி தெரிவிக்கின்றன. புதுக் கவிதையில் ஒலிநயம் இருப்பதன் அவசியத்தை அவர் உணர்ந்திருப்பது தெரிகிறது. அதை வெறும் பிரமை என்று தள்ளினதாகத் தெரியவில்லை. அவர் கூறி இருப்பவைகளுடன் 'ஃப்ரிவெர்ஸ்' பற்றிய சில வரிகளையும் சேர்த்துப் பார்த்தால் புதுக்கவிதை முயற்சி செய்பவர்களது முறையான நோக்கு புலப்படும்.

நடுவில் ஒரு வார்த்தை. வசன கவிதை என்ற பதச்சேர்க்கை பற்றி. இந்த வார்த்தை எப்படியோ உபயோகத்துக்கு வந்து விட்டது.

இங்கிலீஷ் மொழியில்செய்யப்பட்டு வரும், முப்பது வருஷங்களுக்கு முன்பு சோதனையாக ஒரு இலக்கிய இயக்கமாகவே ஆரம்பித்து செய்யப்பட்ட 'ஃப்ரி வெர்ஸஸ்' என்ற சொல்லின் அர்த்தமாக கருதப்பட்டு உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வசனம் என்ற, கவிதைக்கு மாறுபட்ட, ஒரு பதத்தை அதில் இணைத்திருப்பதால் தெளிவான ஒரு பொருளுக்கு, வியாக்கியானத்துக்கு இடம் இல்லாமல் இருக்கிறது. இந்த பதச்சேர்க்கையை முன் வைத்தே வாதப்பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன. வசன கவிதை என்பது 'கோவேறு கதை' 'விஜிடபிள் பிரியாணி' என்ற பரிகாசமாக பேசப்படுகிறது. புதுக்கவிதை முயற்சி என்றால் அது வசன கவிதைதான், 'யாப்புக்குப் புறம்பான' 'வசனத்தை ஒடித்துப்போட்டு எழுதுவதுதான்' என்று முடிவு கட்டப்படுகிறது.

புதுக்கவிதைகள் வசன கவிதைகளாகத்தான் இருக்கும் என்று கருதுவதற்கு இல்லை. வசன கவிதைகள் எல்லாம் புதுக் கவிதைகள் என்று சொல்லி விடவும் முடியாது. புதுக்கவிதைகள் உருவ அமைப்பில் மட்டுமல்ல; உள்ளடக்கம் சம்பந்தமாகவும் சில புதிய இயல்புகளைப் பெற்றிருப்பதாகும். சோதனை கு.ப.ரா. கூறியுள்ள அலங்கார அம்சங்களைப் பொறுத்தது மட்டுமல்ல. ஒரு கலைஞனை உடன் நிகழ்கால வாழ்க்கை பாதித்து அவனை உணர வைத்திருப்பது. வாழ்க்கையிலும் கலையிலும் மதிப்புத் தர நிலை தேடுவது இவைகள் சம்பந்தமாகவும் உண்டு. எனவே வசன கவிதையையும் புதுக் கவிதையையும் வித்தியாசப்படுத்திக் கொள்வதுதான் முறையானதாகும். குழப்பிக் கொண்டால் தற்காலக் கவிதை சம்பந்தமாக ஒரு அபிப்பிராயம் விழுவதற்கு இடமே ஏற்படாது போய்விடும்.

இதில் இன்னொரு விசேஷம். வசன கவிதைக்கான சில இலக்கண அம்சங்களை கூற ஒருவர் முற்படும்போது புதுக்கவிதைக் கான சில நியதிகளையும் அதில் நாம் காண்கிறோம். கு.ப.ரா. வசன கவிதை பற்றி சொன்னாலும் புதுக்கவிதை பற்றிய விளக்கமாகவே அது இருக்கிறது. பிச்சமூர்த்தியின் வாதத்திலும் சில புதுக்கவிதை சம்பந்தப்பட்டதாக இருக்கின்றன. புதுக்கவிதை சம்பந்தமாக புதுமைப்பித்தன் கூறியுள்ள சில வரிகளைப் பார்ப்போம்.

'ரூபமில்லாமல் கவிதை இருக்காது. கவிதையுள்ள தெல்லாம் ரூபம் உள்ளதென்று கொள்ளவேண்டும். இன்று ரூபமற்ற கவிதையென சிலர் எழுதி வருவது இன்று எவற்றையெல்லாம் ரூபம் எனப் பெரும்பாலோர் ஒப்புக்கொள்கிறார்களோ, அவற்றிற்குப் புறம்பான ரூபத்தை அமைக்க முயலுகிறார்கள் எனக் கொள்ள வேண்டுமேயொழிய அவர்கள் வசனத்தில் கவிதை எழுதுகிறார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்கள் எழுதுவது கவிதையா இல்லையா என்பது வேறு பிரச்னை.'

இப்படி அவர் கூறும்போது மரபானவை என்று நாம் கருதி உள்ள உருவ வகைகளை வைத்து புதுக்கவிதை முயற்சிகளை மதிப்பிடக்கூடாது என்று அவர் கருதுவதாகத்தான் படுகிறது. அத்துடன் கவிதைக்கு உரிய (கு.ப.ரா குறிப்பிட்ட அலங்காரங்களுடன் கூடிய) கவிதைக்கு கரு, கருத்து இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும் என்கிறார். ஆனால் அவர் இன்று வசன கவிதைகள் என்ற தலைப்பில் வெளிவரும் வார்த்தைச் சேர்க்கையில் வசனமும் அல்ல, கவிதையும் அல்ல' என்றும் கூறி இருக்கிறார். புதுக் கவிதையையும் வசன கவிதையையும் அவர் பிரித்துப் பேசி இருப்பது தெரிகிறது.

யாப்புக்கும் கவிதை நடைக்கும் உள்ள உறவு பற்றி கூறுகையில், 'யாப்பு' முறையானது, பேச்சு அமைதியின் வேகத்திற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு ரூபமேயொழிய பேச்சு முறைக்கும் புறம்பான ஒரு தன்மையைப் பின்பற்றி வார்த்தைகளைச் சேர்ப்பதல்ல' என்று குறிப்பிட்டிருக்கிறார். மேல்நாட்டு புதுக்கவிதை முயற்சிகளில் காணப்படும் முக்கியமான அம்சங்களில்ஒன்று, பேச்சு வழக்கில் உள்ள இசைவான வார்தைகளையும் வார்த்தைத் தொடர்களையும் கவிதையில் நிறையப் புகுத்துவது. பேச்சு அமைதியையும் புதுக்கவிதைகளில் காண முடியும். எனவே புதுக்கவிதைகள் அமைவதற்கு உதவுபவைகளில் சொற்களின் முக்யத்வம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கவிதைக்கு ஒலிநயம் போலவே சொல் அமைவும் எவ்வளவு இன்றியமையாதவை என்பதை காட்டும் பின்வரும் கு.ப.ரா. வின் கவிதை வரிகள்.

கவிகள் களைப்பின்றி காவியமியற்ற
நின் கண்கள் என்ன நிலைக்காக் கவர்ச்சியில்

கருமை தட்டியவை?
யுகம் யுகமாக மனிதனை
மாயை போல மயக்க
உன் கருவளையும் கையும்
என்ன சொற்சுவையில்
சுருதி சேர்ந்தவை?
மானிடன் மார்பில்
ஒவ்வொரு அடியிலும் எதிரொலிக்க
உன் கால் மெட்டி
என்ன வெள்ளி இசையில்
இன்பம் காட்டியது?

இந்தச் செய்யுளுடன் பாரதியின் காட்சிகளில் உள்ள வரிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் புதுக் கவிதைக்கும் வசன கவிதைக்கும் பல அம்சங்களில் உள்ள வித்தியாசம் தெரியும். பாரதியின் காட்சி வரிகளில் வரும் சொற்கள் 'சிருஷ்டியின் அனுபவத்தைக் கூறும் உணர்வுள்ள சொற்களாக' இருக்கலாம். ஆனால் அவைகளின் சேர்க்கையிலே இசைத்தன்மை பிறக்கவில்லை. ஆனால் கு.ப.ரா.வின் கவிதைகளில் வரும் சொற்களும் சொற்கோவைகளும் தங்கள் கருத்து, உணர்வு இசையினால் மட்டுமின்றித் தங்கள் ஒலிஇசைவினாலும் சிறப்பாக – முதன்மையாக கவிதை ரூபத்திற்கு உதவி இருக்கின்றன.

புதுக் கவிதை சத்தான தாக்கான முயற்சி. அதன் எதிர் காலம், பழங்கவிதையின் இயல்பும் சிறப்பும் அறிந்து மரபை மீறி மரபு அமைக்கும் வழியாக கவிதை உள்ளம் படைத்தவர்கள் கையாளும் வழிவகைகளைப் பொறுத்து இருக்கிறது.''

எழுத்து 1960 – 61 கவிதைகள்

'எழுத்து'வின்இரண்டாவது ஆண்டு புதுக்கவிதையின் தரமான, வளமான, வளர்ச்சிக்கு வகை செய்தது. பிச்சமூர்த்தியின் கட்டுரையும், தலையங்கமாக வந்த செல்லப்பாவின் கருத்துக்களும் பல எதிரொலிகளைப் பெற்றன. அதே சமயத்தில், கவிதை உள்ளமும் கற்பனை வீச்சும் உணர்வோட்டமும் உடைய உற்சாகிகளைக் கவிதை எழுதத் தூண்டின. புதிய நோக்குடனும் சிந்தனை விழிப்போடும் சோதனை ரீதியில் கவிதை எழுதும் உற்சாகத்தைச் சிலருக்குத் தந்தன.

கவிதை பற்றிய கட்டுரைகளும் அதிகம் தோன்றின. கவிதைக் கலை பற்றி முருகையனும், கவிதை வளம், சுயேச்சா கவிதை பற்றி தரும சிவராமுவும் எழுதிய கட்டுரைகள் குறிப்பிடத் தகுந்தவை.

ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்தும் கனமான கட்டுரைகளை 'எழுத்து'வில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த தரும சிவராமு 1950 – ல் உணர்வு அனுபவங்களும் கற்பனை வளமும் நிறைந்த கவிதைகளை எழுத முற்பட்டார். அவருடைய முதல் கவிதை 'நான்' – த.சி. ராமலிங்கம் என்ற பெயரில் எழுத்து 13–வது ஏட்டில் பிரசுரமாயிற்று.

ஆரீன்றாள் என்னை?
பாரீன்று பாரிடத்தே
ஊரீன்று உயிர்க்குலத்தின்
வேரீன்று வெறும் வெளியில்
ஒன்று மற்ற பாழ்நிறைத்து
உருளுகின்ற கோளமெல்லாம்
அன்று பெற்று விட்டவளென்
தாய்!

இப்படிப் பிறந்து வளர்வது அக் கவிதை.

தரும சிவராமுவின் இரண்டாவது கவிதை 'பயிர்' 23 வது இதழில் வந்தது. அவருடைய கவித்துவத்துக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு அது.

வேலிகட்டா வானத்தில்
வெள்ளிப் பயிர் வளர்க்க
தாலிகட்டிச் சக்தியினை
ஈர்ப்பென்ற நீர்பாய்ச்சிக்
காலமெல்லாம் காத்திருக்க
வைத்துவிட்டாய்; வைத்துமென்ன?
ஊழியென்ற பட்சி அவள்
அயர்ந்திருக்கும் வேளையிலே
வேலிகட்டா வானத்தில்
வெள்ளி விதைகளெல்லாம்
அள்ளி விழுங்கும்வரை
நீர்பாய்ச்சி என்ன பயன்
வேர்முளைக்கக் காணோமே!

முதல் வருடத்தில் கவிதை எழுதத் தொடங்கிய கி.கஸ்தூரி ரங்கன் 'கற்பனைப் பெண்' என்ற இனிய கவிதை ஒன்றே ஒன்றை மட்டும் எழுதியதுடன் நிறுத்திக்கொண்டார். அது ரசிக்கப்பட வேண்டிய படைப்பு.

மஞ்சம் ஒழிந் திருக்கப்
பஞ்சணைகள் பூத்திருக்க
கன்னம் செவ செவக்கக்
கற்பனையே,பெண்ணே
நீ
நெஞ்சில் துயிலுவதேன் – என்
நெஞ்சில் துயிலுவதேன்?
உதயம் ஒளித்திசையில்
உருவாவ தறியாமல்
இதயம் துடித்திசைக்கும்
இன்பத்தா லாட்டுக்களில்
கதையாம் கவிதைகளாம்
கனவுகளாகக் கண்டுகொண்டு
கண்ணில் உறங்குவதேன் – என்
கண்ணில் உறங்குவதேன்?

நெஞ்சோ முட்படுக்கை ! – என்
கண்ணோ கனலிருக்கை!

பஞ்சோ பொறியருகில்?
மலரோ முள்ளின் மேல்?
நஞ்சோ அமுதமாகும்?
நானோ(உ)ன்னருள் பெற்றேன்!

வேறு சிவரும் அபூர்வமாக ஒன்றிரண்டு கவிதைகள் எழுதினார்கள் எனது கவிதைகள் இரண்டு (விஷமும் மாற்றும்; குருட்டு ஈ) 16-வது இதழில் இடம் பெற்றன.

பிச்சமூர்த்தி இயற்கை தரிசனங்களையும் வாழ்க்கை உண்மைகளையும் இணைத்து அவ்வப்போது கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தார். சுமைதாங்கி, லீலை, போலி, திறவுகோல், ஸ்விச், மணல்ஆகியவை 1960–61 வருடங்களில் 'எழுத்து' ஏடுகளில் பிரசுரமாயின.

ஜெயகாந்தன் எழுதிய கவிதை ஒன்று (நீ யார் – எழுத்து 32) குறிப்பிடத் தகுந்தது.

நீ யாரென்றேன்
அழுக்கு என்றாய்
பேரேதென்றேன்
பொய் என்றாய்
ஊரே தென்றேன்
இருள் என்றாய்

ஒளியே,
உயிரே,
உயர்வே வா!

அழுக்கின் உருவே அருகில் வா – உனை
அணைத்துக் கொள்வேன் அஞ்சாதே

உலகின் அழுக்கைச் சுமந்தாலும்
உள்ளத் தழுக்கில்லா உருவே
அழுக்கைக் கடந்து வந்துவிட்டாய் – நீ
அழுக்கின் உருவம் கொண்டுவிட்டாய்

பொய்யின் உருவே அருகில் வா உனைப்
புரிந்து கொண்டேன் ஓடாதே
உலகின் பொய்மையைச் சுமந்தாலும்
உள்ளப் பொய்மையில்லா – உருவே
பொய்மையைக் கடந்து வந்து விட்டாய்– நீ
பொய்யின் உருவம் கொண்டுவிட்டாய்.

இருளின் உருவே அருகில் வா– நாம்
இணைவோம் ஒன்றாய் விலகாதே
உலகின் இருளைச் சுமந்தாலும்
உள்ளத் திருளில்லா உருவே
இருளைக் கடந்து வந்துவிட்டாய் – நீ
இருளின் உருவம் கொண்டு விட்டாய்

அழுக்கின் உருவே உன்னிதழில்
அமுதம் ஊறுவதெப்படியோ?
பொய்யின் உருவே உன்னகத்தில்
புனிதம் ஒளிர்வதெப்படியோ?
இருளில் உருவம் உன்விழியில்
அருளொளி வீசுவதெப்படியோ?

தி.சோ. வேணுகோபாலனும், டி.கே. துரைஸ்வாமியும் தங்கள் சோதனைகளைத் தொடர்ந்து செய்து வந்தனர்.

வேணுகோபாலன் வாழ்க்கைத் தத்துவங்களை சாதாரண நிகழ்ச்சிகளோடு பொருத்திக் காட்டி எளிய முறையில் கவிதைகள் இயற்றினார். உதாரணத்துக்கு 'ஞானம்' என்பதைக் கூறலாம்.

சாளரத்தின் கதவுகள், சட்டம்
காற்(று) உடைக்கும்

தெருப்புழுதி வந்தொட்டும்
கறையான் மண்வீடு கட்டும்
அன்று துடைத்தேன்,
சாயம் அடித்தேன்,
புதுக்கொக்கி பொருத்தினேன்
காலக் கழுதை
கட்டெறும்பான

இன்றும்
கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை
கந்தைத் துணி, கட்டைத் தூரிகை!
அறப்பணி ஓய்வதில்லை,
ஓய்ந்திடில் உலகம் இல்லை!

'ஸட்டயர்' ஆக – பரிகாசத் தொனியோடு எழுதும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டார். 'விசாரணை' என்பது இந்த ரகத்தைச் சேரும்.

தத்துவந்தானே? வெங்காயம் !
போடா! போ!
மூடியதை மூடிப்
பின்மூடி ! முடிவா?
உரித்தால்? மேலும் உரித்தால்
கண்ணீர் கொட்டும்
முட்டாளுக்கு உருக்கம்!
மூளை மோதினால்
தலைக்குத் தேங்காய்!
உனக்கும் எனக்கும்
முடிந்தால்
இதயத்திற்கு மருந்து!
அனேகருக்கு
வயிற்றை நிரப்ப
வேகும் கூத்துத்தான்!
என்று மேலும் வளர்கிறது அது.

'இலக்கிய அனுபவம்' என்பதும் நல்ல கிண்டல் தான்.

சொல்வ திரண்டு வகை
சிந்தித்துச் சொல்லல்!
சிந்தை இலையாதல்!
கரகம் அல்லது
கண்கட்டு ;
இரண்டுக்கும்
பொருள்

சொன்னவன் புலவன்!
கண்டவன் கலைஞன்!
முழிப்பவன்
நீயும் நானும் கேவலம்
வாசகக் கும்பல்!

டி.கே. துரைஸ்வாமி சோதனைக்காவே சோதனை என்ற தன்மையில் கவிதை முயற்சிகளில் தீவிரமாக முனைந்தது போல் தோன்றுகிறது. படிப்பவரைக் குழப்பமுற வைப்பது அவரது கவிதைகள் சிலவற்றின் முக்கிய நோக்கம் என்று எண்ண வேண்டியிருக்கிறது. க.நா.சு. புதுக்கவிதைக்கு வகுத்த இலக்கணத்தை – 'கவிதை சிக்கலும் சிடுக்கும் நிரம்பியதாக இருக்க வேண்டும். தெளிவு தொனிக்க வேண்டும். ஆனால் சிக்கல் விடுவிக்கச் கூடாததாகவும் இருக்க வேண்டும். கவிதை நயம் எது என்று எடுத்துச் சொல்லக் கூடாததாக இருக்க வேண்டும். புரியவில்லை போல இருக்க வேண்டும் அதே சமயம் பூராவும் புரியாமலும் இருந்துவிடக் கூடாது' என்பதை அப்படியே பின்பற்ற ஆசப்பட்டவர் துரைஸ்வாமி என்று எனக்குப் படுகிறது.

'வர்ணபேதம்' என்ற கவிதையை அதற்கு உதாரணமாக கூறலாம்.

கற்புக்கு முல்லை;
கடவுளுக்குத் தாமரை;
காமத்துக்கு அல்லி;

என்று சொன்னால்,
முல்லைக்கு வெள்ளை;
தாமரைக்குச் சிவப்பு,
அல்லிக்கு இருட்டு;

என்று சொன்னால்;
முல்லை மலர
அல்லி சோரும்
தாமரை மலர
முல்லை சோரும்;

அல்லி மலர
என்னசொல்ல?
என்று சொன்னால்,
எங்கு சென்றால்,
என்ன செய்தால்

அல்லி முல்லையாக,
முல்லை மரையாக,
மரையும் அல்லி மலராக,
மாற்றத்தில் மாற்றமுற.
ஏகம் அநேகமாக,
அநேகம் ஏகமாக,

வருவது உண்டோ?
செய்வது அரிதோ?
என்று சொன்னால்?

இதில் ஏதோ மர்மம், பொருள், தத்துவம் இருப்பதாக வாசகன் குழம்பிக் கொண்டு மூளைக்கு வேலை கொடுக்க அவதிப்படட்டுமே என்பதுதான் கவிஞரின் அந்தரங்க நோக்கமாக இருக்கமுடியும்!

வசனத்தையே கவிதை என்று தருவதும் துரைஸ்வாமியின் சோதனை முயற்சிகளில் ஒன்று. 'அறியாதவர் ஒருவருமில்லை' என்பது கவிதையாம்.

''சுவரொட்டியாகவும், சீவனற்ற முதலையாகவும் அசட்டுத் தவிட்டு நிறம் பூண்டு, சந்தடி செய்யாது தன் இரைமீது பதுங்கிப் பாய வரும் வீட்டுப் பல்லியை அறியாதவர் யாருமில்லை.

எச்சிலால் வலைபின்னி, அதன் நடுவே தன் எண்கால் பரப்பி, வந்து சிக்கும் ஈக்கும் பூச்சிக்கும் சலனமற்றிருக்கும் சிலந்தியை அறியாதவர் ஒருவருமில்லை.

மண்டையெல்லாம் கண்ணாக, அழுகல் சிவப்பு முகமும், புழுவுடலும். சிறு இறகும், விஞ்ஞானம் ஆவிர்ப்பலித்த பேயாகவும், சுத்தா சுத்தமறியாத அபேதவாதிகயாகவும் மொய்த்துச் சலிக்கும் ஈயென்ற வொன்றை அறியாதவருமில்லை.

கூட்டமாக அணிவகுத்து, அசட்டுக் கடுஞ்சிவப்பு நிறத்தாங்கி சிந்திய ரௌத்திரத் துளிகள் போல் தடுத்தோரைக் குதறித் தள்ளி அடுத்த நிமிஷம் சாவதற்கு விரையும் இக் கட்டெறும்புக் கூட்டத்தையும் நாம் அறிவோம்.''

இது கவிதை (புதுக் கவிதை) என்று சொல்வதானால், லா.ச.ராமாமிர்தம் எழுதியுள்ள கதைகள் அத்தனையும் மணி மணியான கவிதைகளே என்று சத்தியம் பண்ண' வேண்டியது தான்!

துரைஸ்வாமியின் 'காத்திருந்தேன்' நல்ல கவிதை. ஒருவனது வருகை நோக்கிக் காத்திருக்கும் ஒரு நபரின் தனிமையை, மன உளைச்சலை, உணர்ச்சிச் சுழிப்புகளை விரிவாகச் சொல்லுகிறது இது.

'திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்க, ஒருதரம் படிப்பவருக்கும் ஒருவேகம், ஒரு எதிரொலிக்கும் தன்மை, விடாப்பிடியாக உள்ளத்தைப் பிடித்துக்கொள்ளும் ஒரு குணம் இருக்க வேண்டும் புதுக் கவிதையிலே' என்று க.நா.சு. வகுத்துள்ள இலக்கணத்துக்கு ஏற்ப இயற்றப்பட்டுள்ளது. 'கொல்லிப்பாவை'

'திரௌபதி அவள்
வந்து போகும் அர்ச்சுனன் நான்'

என்ற வரிகள் விளக்கம் கூறப்பெற்று, திரும்பத் திரும்ப ஒலிக்கின்றன இக்கவிதையில்.

'பேதாபேதம்' என்றொரு கவிதை. இது வேறு ரகமான சோதனை.

மண்புழு
மண்ணைப்
பொன்னாக்கும்!

இலைப்
புழு
பட்டு நெய்யும்!

மனிதரில்
சிலந்தியும்

பெண்டிருட்
சிதலும்
உண்டு.

'அலங்காரம்' என்றொரு சொல்லடுக்கு.

மயிற்கண்
முலைப்பால்,
நெடுவேனில்
கார்காலம்
சென்று தேய்ந்திறுதல்
கொல்லிப்பாவை;
மன்னுமிவ்வுலகு.

இப்படிப்பட்ட சோதனைகளினால் புதுக் கவிதைக்கு வளம் சேர்க்க முயன்ற பெருமை துரைஸ்வாமிக்கு உண்டு.

1960–61 ஆண்டுகளில் 'எழுத்து' மூலம் அறிமுகமாகி வளர்ச்சி பெற்ற கவிஞர்களில் முக்கியமானவர் சி.மணி.

இவரது முதல் கவிதை 'குகை' 15–வது ஏட்டில் பிரசுரமாகியுள்ளது. ஏதோ இருள் மனக் குகை ஓவியம். அதிலும் ஒரு வசீகரம் இருக்கிறது. அடுத்து, 18–வது இதழில் வந்த 'அரக்கம்' உலக இயல்பைக் கூறுகிறது.

வாடிய பூக்கள் வீழ்ந்து ஒழிந்தாலும்
விழித்த மலர்கள் சிரித்து மினுக்கும்;
ஈன்ற வாழை இளைத்துச் சாய்ந்தாலும்
உயிர்த்த கன்று முகிழ்த்து மிளிரும்;
வீசிய விண்மீன் சரிந்து அணைத்தாலும்
மிகுந்த மீன்கள் விரித்துச் சிமிட்டும்;
ஊட்டிய அன்னை உழைத்து ஓய்ந்தாலும்
எஞ்சிய குமரன் குமரியைப் பிடிப்பான்.

சி.மணியின் 'மறுப்பு (எ.19) மனக்குகையின் இருள் காட்சியாகத் தான் ஒளியிடுகிறது. ஸர்ரியலிஸ ஓவியம் மாதிரி இருக்கிறது இதில் வர்ணிக்கப்படுகிற காட்சி.

ஒடிந்த அநாதை நிலா
தொழுநோய்க் கூனனாக
பிரேதக்களை ஒளிர
மருந்து தேடித்தேடி அலைய,
வழிந்த சீழ் உருண்டோடி

மஞ்சசற் கட்டியாகி
நெஞ்சு வலியாய்த் துடிக்க,
சீழுனையில் வெடித்த பல முகில்கள்
மனக் குகையின் இருள் வடிவாய்
பேய்க்கணமாய் ஆந்தையாய்ப் பரவி
வானுக்குக் கிழிந்த திரை போட

என்று மேலே மேலே போகிறது கவிதை. அதெல்லாம் ஏன் ஏற்பட்டது?

இளமைக் குவியலாய்
இன்ப நுகர்ச்சியாய்
ஆடிப் பாடிய நான்
ஒரே கணத்தில்
விரக்தி வடிவாகி நரைக்கக்

காரணம். கன்னி ஒருத்தி அவன் ஆசையோடு நெருங்கிக் கேட்டபோது, அவள்

'தனி ஊசல் போல
இடவலமாய் தலையசைத்' ததுதான்!

காதல் தோல்வி கண்ட விரக்தி உள்ளத்தின் வாழ்க்கைச் சூன்ய நோக்கை இக்கவிதை சித்திரிக்கிறது.

'இருளின் நிழல்' என்பதும்
'சாக்காட்டு உலகில்
என்னை விட்டு
கூடு விட்ட பறவையென

ஓடிமறைந்த' பெண்ணை எண்ணிப் பித்துற்ற மனசின் விரக்திப் புலம்பல்தான்.

'கதவை மூடு' வேறு தொனியில் அமைந்துள்ளது. ஆயினும் இதிலும் விரக்தியே மேலோங்கி நிற்கிறது.

கதவை மூடு
வீங்கி விரிந்த மாநிலம்
துவண்டு விழுந்தால் ஆறடி;
வாழ விட்ட பூமகள்

சாய்ந்ததும் செரித்திடுவாள்;
அபூர்வமாய் பெற்ற மகனாய்
நீ வளர்த்த நாயும் கடிக்கும் ;
நோய் பிடிக்க கடனேற
நீயே
உனக்கு எதிராவாய்;
கதவை மூடு, கதவை மூடு.

நகையாய் வெறுத்த உடை
நலிந்ததும் கூடையிலே;
பூவையர் சூழல் பூச்சரம்
வாடியதும் குப்பையிலே

விளங்க வந்த மனைவிளக்கு
மாத முடிவில் மூலையிலே;
வானுக்கு உயிரூட்டி
சிரித்தேகும் எரிகல்
உதிர்ந்ததும் ஒன்றுமில்லை
காற்றேன்? மூச்சேன்?
கதவை மூடு,கதவை மூடு.

கவிஞர்கள் நிலவை எவ்வாறெல்லாமோ வர்ணித்து விட்டார்கள். இன்னும் பாடிக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும், நிலவை ரசிப்பதிலும் வியந்து பாராட்டுவதிலும் மனித மனசுக்கு அலுப்பு ஏற்படும் என்று தோன்றவில்லை.

நிலவை புதியதோர் கோணத்தில் பார்த்து (புதுக்) கவிதை செய்தார் எஸ். வைதீஸ்வரன். அருமையான படைப்பு.

'எழுத்து'வில் வந்த அவருடைய முதல் கவிதை இதுதான். 34-35 என்று இரட்டை இலக்கமிட்ட ஏட்டில் பிரசுரமாயிற்று.

கிணற்றில் விழுந்த நிலவு

கிணற்றில் விழுந்த நிலவைக் கீழிறங்கித் தூக்கி விடு
நனைந்த அவள் உடலை நழுவாமல் தூக்கி விடு
மணக்கும் அவள் உடலை மணல் மீது தோய விடு
நடுங்கும் ஒளியுடலை நாணல் கொண்டு போர்த்தி விடு

கலைமேவும் அவள் குழலைக் காற்றிலே கோதி விடு
அலைக்கும் அவள் மார்பை அல்லிக்கொடி அணைக்க விடு

மருண்ட முகம் தெளியத் திருமஞ்சள் பூசி விடு
ஈதனைத்தும் செய்துவிட்டு இதமான கவிதைகளால்
ஒத்தடங்கள் கொடுத்து விடு
உடலெங்கும் தேன் பூசிப் பத்திரமாய்ப் பெண்ணிவளை
வான்முனையில் கொண்டு விடு
இருட்டு முடியுமுன்னே, இரவு முடியுமுன்னே
திருஷ்டி கழித்தவளைத் திருப்பி யனுப்பிவிடு

இவ்வாறு இன்னும் பல வரிகளைக் கொண்டது இக்கவிதை. இதற்கு 'ஒட்டு'ம் வெட்டு'ம் ஆக இரண்டு கவிதைகள் எழுதினார் தி.சோ.வேணுகோபாலன்.

கற்பனை விரிவும் கருத்தாழமும் உணர்வோட்டமும் கொண்ட கவிதைகள் அவை. நிலவைக் கற்பரசியாகக் கொண்டும் நாணமில்லாப் பரத்தையாகக் கொண்டும் ஒட்டும் வெட்டும் படைக்கப் பட்டுள்ளன. இவை 'எழுத்து' 36–ம் ஏட்டில் இடம் பெற்றன.

'எழுத்து' 36–வது இதழ் அருமையான கவிதைகள் பலவற்றுடன் விளங்கியது. வேணுகோபாலனின் 'ஒட்டும் வெட்டும்' டி.கே.துரைஸ்வாமியின் பேதாபேதம், அலங்காரம், சிலேடை ஆகிய 'மூன்று கவிதைகள்' இவற்றுடன் டி.சி. ராமலிங்கம் (தரும சிவராமு) கவிதைகள் ஐந்தும் இதில் வெளி வந்தன.

படிமச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகப் பலரால் பல இடங்களில் கையாளப் பெற்றுள்ள 'விடிவு' இவ் ஐந்து கவிதைகளில் ஒன்று.

பூமித் தோலில்
அழகுத் தேமல்
பரிதி புணர்ந்து
படரும் விந்து
கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ
இருளின் சிறகைத்

தின்னும் கிருமி
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி

தரும சிவராமூவின் கவிதையாற்றலின் வளர்ச்சியைக் கூறும் படைப்புகள் இவை. விடிவு,மாலை, நிழல்கள், சைத்ரீகன் மறைவு ஆகியவை கற்பனை நயத்தையும் சிந்தனைச் செறிவையும் விளக்கும் கவிதைகள்.

'எழுத்து'வின் 'மூன்று ஆண்டுகள்' வளர்ச்சி குறித்து 36–வது இதழில் வந்துள்ள தலையங்கம் கவிதைகள் பற்றியும் பேசுகிறது–

'எழுத்து'வில் சுமார் 90 கவிதைகள் வந்திருக்கின்றன. எழுத்துவில் வெளியான கவிதைகள் பொருள் விளங்காத சொற்கள் பலவற்றால் பிணைத்துக் கட்டப்பட்ட-கரடு முரடான கதம்ப மாலைகளாக உள்ளவை என்ற ஒரு வாசகர் கருத்தை புதுக்கவிதை பற்றி ஓங்கியடித்துச் சொல்லும் பாதகமான ஒரு அபிப்பிராயத்தின் பிரதிநிதித்துவக் குரலாக கருதுகிறோம் இந்த இடத்தில் அதைப்பற்றி விவாதிக்க இடம் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல வேண்டும். இந்த மாதிரி கருத்துக்கள் கிணற்றுத்தவளை வாழ்வினால் ஏற்படுவது. இலக்கியச்சிறப்பான உலகத்து பல்வேறு மொழிகளிலும் தற்காலக் கவிதைநிலை எப்படி இருக்கிறது என்பதை உணர முடிந்தவர்கள் தான் இந்த புதுக்கவிதை வளர்ச்சியைப் பற்றி புரிந்து கொள்ள முடியும். அன்றைய பாரதியையே கவியாக இன்னும் உணரமுடியாத சூழ்நிலையில் இன்றைய புதுக்கவிதை சோதனைக்கார முதல்வன் பிச்சமூர்த்தியையும், எழுத்து மூலம் முளை விட்டு வளரும் இளம்கொழுந்துகளையும் புரிந்துகொள்ள, புதுக் கவிதைகளின் தன்மைகளை உணர கொஞ்சம் போக வேண்டும். எழுத்து மூன்று ஆண்டுகளாக், சலிக்கும்படி கேட்க ஏற்பட்ட இதுபோன்ற கருத்துக்களைக் கண்டு ஆத்திரப்படாது. இந்த கருத்து மாறச்செய்யும் முயற்சியாக வழிவகைகளை ஆராய்ந்து செல்வது மூலம்தான் பாரதிக்குப் பின் இந்த புதுக்கவிதை பிறப்பு காலகட்டத்தை செழிப்பாக்க முடியும்.''

சாதனைகள் நிறைந்த வருஷம்

புதுக்கவிதை வரலாற்றில் 1962 விஷேமாகக் குறிப்பிட வேண்டிய ஒரு கால கட்டம் ஆகும். அதை சாதனைகள் நிறைந்த வருஷம் என்று கூறலாம்.

அவ்வருடத்தின் நவம்பர் இதழில் (ஏடு 47) 'எழுத்து' நியாயமான பெருமையோடும் மகிழ்ச்சியோடும் எழுதிய தலையங்கத்தின் முக்கிய பகுதியை இங்கே தரவேண்டியது அவசியமாகும். ''சமீபத்தில் எழுத்து வாசகர் ஒருவர் தன் கடிதத்தில் பின் வரும் வரிகளை எழுதி இருந்தார்.

'எழுத்து கவிதையில் காட்டி வரும் சாதனை நீங்கள் ஆரம்பத்தில் எதிர்பார்த்ததாயிராது என நம்புகிறேன்.'

அவர் குறிப்பிட்டிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை...

உண்மையில், புதுக்கவிதை 1959–ல் எழுத்துவில்தான் பிறந்தது என்று சொல்ல முற்படமாட்டோம். இருபது ஆண்டுகளுக்கு முன்பே, ந.பி.யும் கு.ப.ரா.வும் வல்லிக்கண்ணனும் பிறப்பித்துவிட்ட குழந்தை அது. ஆனால் 1959 முதல் இன்று வரைய நாட்களில் தான் இந்தப் புதுக்கவிதை இடம் கண்டு பிடிக்கப்பட்டு நாமகரணமும் இடப்பட்டது.

'வசனத்தை முறித்துப் போட்டு எழுதுவது, 'விஜிடபிள் பிரியாணி', 'கோவேறு கழுதை', யாப்பு தெரியாமல் ஏதோ கிறுக்கல்கள் என்றெல்லாம் கண்டவாறு பரிகாசத்துக்கு உள்ளாகி இருந்த ஒரு முயற்சிக்கு மதிப்பு கிடைத்துவிட்டது இந்த நாட்களில் தான். பாரதியின் 'வசனகவிதை' ஏற்றுக் கொள்ளப்பட்டு ந. பிச்சமூர்த்தியின் புதுக்கவிதைகளும் இன்று அங்கீகரிக்கப் பட்டுவிட்டன.

ந.பி. ஆரம்பித்து வைத்த புதுக்கவிதை முயற்சி இயக்கம் எழுத்துவில் தொடர்ந்து. மயன், சிட்டி, வல்லிக்கண்ணன் ஒன்று சேர, பின்னர். தி.சோ. வேணுகோபாலன், டி.கே.துரைஸ்வாமி, தரும சிவராமூ, சி.மணி, எஸ். வைத்தீஸ்வரன், குறிப்பாக இன்னும் சிலரும் கலந்து கொண்டு புதுக்கவிதையை வளப்படுத்தி வருகிறார்கள். சுமார் இருபத்தைந்து கவிகளின் குரல்களை எழுத்து வாசகர்கள் இந்த நான்கு ஆண்டுகளில் 'எழுத்து' மூலம் கேட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் குரல்கள் ஒரே தொனியாக இல்லாமல் பல்வேறு விதமாக தன் தன் ஒளியைக் காட்டும் முகமாக அமைந்திருப்பதை பார்க்கிறோம். அவர்கள் வைக்கும் முத்திரைகளும் வேறுவேறு.

இத்தச் சமயத்தில் 1912–17ல் 'இமேஜிஸம்' என்ற படிமக் கொள்கையை வைத்துக் கொண்டு இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் டி.இ.ஹ்யூம், எஸ்ரா பவுண்டு, ரிச்சர்ட் ஆல்டிங்டன், எமி லோவல் போன்றோர் கவிதை புனருத்தாரணத்தில் முழுமூச்சாக ஈடுபட்டதை கவனத்துக்கு கொண்டு வர வேண்டி இருக்கிறது. தங்களுக்கு முன் சென்ற பெரியவர்களையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. எஃப், எஸ். ஃபிளிண்ட் என்பவர் எழுதினார்.

'Rhyme and metre are artifical and external additions to poetry andthat as the various changes that can be rung upon them were worked out, they grew more and more insipid until they have become contemptible and encumbering.'

இது இன்றைய தமிழ்க் கவிதை சம்பந்தமாக எவ்வளவு வார்த்தைக்கு வார்த்தை பொருந்துகிறது! பல நூற்றாண்டுகளுக்கு முன்பு படைப்பான விரல்விட்டு எண்ணக் கூடிய சில சிறந்த நூல்களுக்குப் பிறகு இந்த நூற்றாண்டு ஆரம்பகால பாரதிக்கு வரும் வரையில், சொல் ஆடம்பரமும் நச்சுப்படுத்தப்பட்ட உள்ளடக்கமும் மலிந்த படைப்புகள் எத்தனை? பாரதிக்குப் பிறகு இன்று வரை கூட அதே ரீதியில், கற்பனையும் கருத்தும் இல்லாமல் பத்திரிகை செய்யுள்களாக தீபாவளிக்கும் பொங்கலுக்கும், பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் ஐந்தறைப் பெட்டியிலிருந்து 'ஃபார்மூலா' ரீதியாகத் தயாராகும் ஓசைச் சொல் செய்யுள்களும் மெட்டுப் பாட்டுகளும் எத்தனை? இதை வைத்துத் தமிழில் 2000 கவிகள் இருப்பதாக ஒரு பெருமை வேறு! புதுக்கவிகள் இயக்கம் இதையெல்லாம் உடைத்து

மீட்சிபெற இயங்குகிற இயக்கம். இதில் தன் பங்கை இந்த நான்கு ஆண்டுகளாக செலுத்தி வருவதுதான் எழுத்துவின் சாதனை. வாசக அன்பர் குறிப்பிட்டிருப்பதுபோல் எதிர்பார்த்திராததுதான். ஆனால் அது நடந்துவிட்டது. எதிர்பார்த்திருந்தாலும், அதுக்கு மேலாக, 'எழுத்து பிரசுரம்' வெளியீடுகளாக வெளி வந்திருக்கும் 'காட்டுவாத்து'ம் (ந.பிச்சமூர்த்தி) புதுக் கவிதைகள் தொகுப்பும் இதுக்கு சான்று.''

1962–ல் 'எழுத்து' ஏடுகளில் வந்த கவிதைகள் பலவும் கருத்து ஆழம், கற்பனை வளம், வாழ்க்கை தத்துவம், மற்றும் நயங்கள் அநேகம் கொண்ட வளமான படைப்புக்களாக விளங்கின. டி.கே.துரைஸ்வாமி, சி.மணி, எஸ். வைத்தீஸ்வரன், தர்மு சிவராமூ, வல்லிக்கண்ணன் அதிகமான கவிதைகள் எழுதியுள்ளனர். தி.சோ.வேணுகோபாலன், கி.கஸ்தூரிரங்கன், மயன் ஒவ்வொரு கவிதை படைத்துள்ளனர். புதிதாகக் கவிதை எழுத முற்பட்டிருந்த பலரது கவிதைகளும் இவ்வருடம் எழுத்து இதழ்களில் இடம் பெற்றன. சி.சு.செல்லப்பாவும், சு. சங்கரசுப்ரமணியனும் கவிதை முயற்சிகளில் உற்சாகத்தோடு ஈடுபட்டனர். ஆங்கிலத்திலிருந்து பல கவிஞர்களின் படைப்புகள் தமிழாக்கப்பட்டு பிரசுரமாயின. ந. பிச்சமூர்த்தியின் கவிதைகள் மூன்று வந்துள்ளன.

இவ்வருடத்தில், புதுக் கவிதையில் நெடுங்கவிதை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன பிச்சமூர்த்தியின் 'காட்டுவாத்து'ம் சி.மணியின் 'நாகம்' கவிதையும் சிறப்பான படைப்புகள்.

'நரகம்' விசேஷமானது. இதை வெளியிட்டபோது, 43–வது ஏட்டில் புதுக்கவிதையில் 'ஒரு மைல் கல்' என்று தலையங்கம் எழுதி 'எழுத்து' பெருமைப்பட்டது.

''எழுத்துவில் இதுவரை வெளிவந்திருக்கும் நூற்றுக்கும் அதிகமான கவிதைகள் புதுக்கவிதையின் சத்தான தாக்கான குணங்களை நிரூபித்திருக்கின்றன. சி.மணியின் 'நரகம்' புதுக்கவிதை முயற்சியில் ஒரு மைல் கல்லை நாட்டுகிறது. நீளத்தில் மட்டுமல்ல; உள்ளடக்கம், உருவ அழகு, படிமச் சிறப்பு, வாழ்க்கைப் பார்வை, மதிப்பு, தத்துவ நோக்கு, உத்திகையாளுதல் இத்தியாதிகளில் சிறப்பு விளங்குகிறது. பிரிட்டிஷ் கவி டி.எஸ். எலியட்டின் 'ஜே ஆல்ஃப்ரட் ப்ரூஃபராக்கின் காதல் கீதம்', 'பாழ்நிலம்' அல்லது குறுங்காவியம்

என்று இதைப்பற்றி நினைக்கத் தோன்றுகிறது. இந்தக் கவிதையை வெளியிட வாய்ப்பு பெற்றதில் எழுத்துக்கு பெருமை.

'நரகம்' புதுக்கவிதையிலே ஒரு சோதனைமுயற்சி; வெற்றிகரமாக அமைந்த நல்ல சாதனை. நாகரிக நகரத்தில் திரியும் ஒருவனது உணர்வுக்கிளர்ச்சியை, காம உணர்வு தூண்டி விடும் உள்ளக் குழப்பத்தை, அதை வேதனையாக வளர்த்து விடுகிற புற நிலைகளை, அவனுடைய ஏக்கங்களை விவரிக்கிறது இந்நெடுங் கவிதை. வர்ணனைகளும், புதுப் புது உவமைகளும் நயமாகச் சித்திரிக்கப் படுகின்றன இதில்.

உலக இலக்கியத்தில் புதுக்கவிதை பிரமாக்கள் தங்கள் படைப்புக்களில் பழங் கவிதைகளிலிருந்து சில சில வரிகளை, பொருள் பொதிந்த வாக்கியங்களை அப்படி அப்படியே எடுத்தாண்டு தங்களுடைய கற்பனையை வளரவிடுவதை ஒரு உத்தியாக அனுஷ்டித்திருக்கிறார்கள். சி. மணியும் இவ் உத்தியைத் திறமையாகக் கையாண்டு வெற்றிபெற்றுள்ளார். அவருடைய உவமைகள் புதுமையானவை.

'காலத்தின் கீற்றுகள்
வாசமாவில் மறைவதென
உள்ளங்கைக் கோடுகள்
இருளில் மறையும் வேளை
தந்த துணிவு செங்கையை
உந்த நின்ற தையலர்
தலைவன் வரவும் சற்றே
உயரும் தலைவி விழியாக
மறைக்கும் சேலை சாண் தூக்கி,
காக்கும் செருப்பை உதறிவிட்டு
கடலுக்கு வெம்மை யூட்ட
கிழக்கே அடிபெயர்ந்து
அலையை அணைக்கவிட்டார்
ஓரடி ஒளிரும் கால்கள்
மாசறு மதங்கள் போல
வானுக்கு வழிகாட்ட.'

ரேடியோவை பாடவிட்டு, அதில் எழுந்த சங்கீதம் பிடிக்காததால் படீரென அதை நிறுத்திய செயலுக்கு அழகான ஒரு உவமை

'திடுமென் றோராண் வரவே
வாரிச் சுருட்டும் மரபு
வளர்த்த வொரு மங்கையென
விரைந்தே யணைத்து விட்டு
பேயறைந்த நிலையில் வெறிக்க!'

இப்படி நயங்கள் பல கொண்டது 'நரகம்'.

'தமிழகம் கீழுமல்ல
முழுதும் மேலுமல்ல;
உலையேற்றி விட்டு
சோறாக்க மறியல்;
பட்டினியும் அழிவுமே
கிடைத்த பயன்;
பின்னாலும் போகவில்லை
முன்னாலும் நடக்கவில்லை;
நடுக்கிணற்றில் நிகழ்காலம்'

என்று நாட்டின் நிலையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது இதில்.

கே. அய்யப்ப பணிக்கர் கேரளத்தில் கவிதை உலகில் தனி இடம் பெற்றவர். அவருடைய படைப்புகளில் சிறந்ததான 'குருக்ஷேத்திரம்' எனும் நெடும் கவிதையை நகுலன் மலையாளத்திலிருந்து தமிழாக்கினார். அது 'எழுத்து' 48–வது இதழில் வந்தது.

1962–ன் பெரிய சாதனை பிச்சமூர்த்தி கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து 'எழுத்து பிரசுரம்' ஆகப் பிரசுரித்ததும், 'புதுக் குரல்கள்' தொகுப்பை தயாரித்து வெளியிட்டதும் ஆகும்.

ந.பி. 1938 முதல் 1962 முடிய எழுதிய கவிதைகளில், தேர்ந்தெடுத்த 35 கவிதைகள் கொண்ட தொகுப்பு 'காட்டு வாத்து'.

அதன் முன்னுரையில் – 'எதிர்நீச்சு' என்ற தலைப்பில் – பிச்சமூர்த்தி எழுதியுள்ள கருத்துக்கள் இவை–

'இம் முயற்சி ஆற்றில் எதிர்நீச்சல் போடும் முயற்சி, பாதையில்லாக் காட்டில் பயணம் செய்யும் முயற்சி. இம்மாதிரி கவிதையின் அமைப்புமுறையில் அனுபவத்தால் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டே போகும். இலக்கண வரையறை என்று எதுவும் லேசில் அகப்பட்டு விடாது என்பதும் எனக்குத் தெரிந்தது. இத் தொகுப்பிலும் அந்த மாறுதலைக் காணலாம். முடிவான முறையைக் கண்டு விட்டேன் என்று சொல்ல மாட்டேன். மற்றபடி கவிதைகளின் வெற்றி தோல்விகளைப் பற்றி முடிவு செய்ய வேண்டியது என் வேலையன்று.

ஆனால் இரண்டொரு பொது விஷயங்களை மட்டும் கூறலாம். கவிதை கவிதையாக இருந்திருக்கிறது. வரலாறாக இருந்திருக்கிறது. மதத்தின் குரலாக இருந்திருக்கிறது. மனத்தின் குரலாக அதிகம் இருந்ததில்லை. மனத்தின் நுட்பமான அசைவுகளை வெளியிட்டால் சரியான அகத்துறை காணும் என்று தோன்றுகிறது. காதல் மட்டும் அகத்துறை என்று வகை செய்வது மன இயல் சாத்திரத்திற்குப் பொருந்தாது. இத்தொகுப்பில் கதைபோல் இருப்பவற்றில் கூட, கதைச்சுவையை விட தொனிச் சுவை ஓங்கி நிற்பதைக் காணலாம். எதிர் காலத்து நெடுங்கவிதை இந்தப் போக்கில் செல்லாமல் கதைச் சுவையை நம்பினால் கவிதை அம்சம் குன்றிவிடும். கவிதை இனி நாவலுடனோ நாடகத்துடனோ போட்டியிட முடியாது. புதுக்கவிதைக்கு ஏற்ற வாழ்நிலை ஏற்பட்டு விட்டதை நாம் மறக்கக் கூடாது. அச்சுயந்திரமும் லைப்ரரிகளும், மௌன வாசிப்பும் தோன்றிய பிறகு, – அவை தோன்றாத காலத்தில் அமல் செலுத்திய கேள்வி மரபும் ஸ்தூலக்காதின் ஆட்சியும் கண்ணெதிரே மறைந்து வருவதைக் கண்ட பிறகு – கவிதையை வேறு விதமாக அமைக்க ஏன் முயலக்கூடாது?

ஸ்தூலமான சொல்லுக்கும் நயத்திற்கும் அப்பாற்பட்ட பொருளும் அமைதியும் உண்டு என்பது என் நம்பிக்கை. அந்த அடிப்படைகளைத் தொட்டு நான் கவிதையை அமைக்க முயன்றிருப்பதால் பருந்தும் நிழலும் போலுள்ள இசையை இவற்றில் காணலாம். ஸ்தூலத்தை விட சூக்குமத்திற்கு அதிக சக்தி உண்டென்று அணுயுகம் நமக்குக் காட்டி விடவில்லையா?

புதுக் குரல்கள்

"கவிதைத் துறையில் ஒரு புதிய திருப்பத்தைக் காட்டுகிற கவிதைத் தொகுப்பு இது. பாரதிக்குப் பிறகு அந்த கவி காட்டிய பாதையில் சென்று உருவம் உள்ளடக்கம் இரண்டிலும் சோதனை செய்துள்ள 24 கவிகளின் 63 கவிதைகள் அடங்கி இருக்கின்றன. இந்த இருபதாம் நூற்றாண்டு மனிதனுக்கு தான் வாழும் உலகம் ஒரு விசித்திர போர்க்களம். அவனுக்கு ஏற்படும் மோதல்கள் சிக்கலானது. அவற்றின் வெளியீட்டை இந்தப்புதுக்குரல்களில் காண்கிறோம். ஒருவர் நோக்கு மற்றவருக்கு இல்லை. ஒருவர் அனுபவம் மற்றவரிடமிருந்து மாறுபட்டது. அவரவர் நம்பிக்கையும், வேறு வேறு. அவரவர் சொல்திறனும் நானாவிதமானது. அவநம்பிக்கையும் நம்பிக்கையும், சமுசயமும் தன்னம்பிக்கையும், கவலையும் உறுதியும் ஆசையும் ஆதங்கமும் லட்சியமும் யதார்த்தமும் உண்மையும், போலியைக் கண்ட ஆத்திரமும் எத்தனை விதமாக ஒலிக்கின்றன இவர்கள் குரல்களில்!"

'எழுத்து பிரசுரம்' ஆன 'புதுக்குரல்கள்' பற்றிய ஒரு அறிவிப்பு இது. 1962 அக்டோபரில் இத்தொகுப்பு வெளியாயிற்று. அதுவரை 'எழுத்து'வில் அச்சாகியிருந்த சுமார் 200 கவிதைகளிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட கவிதைகள் இந்நூலில் இடம் பெற்றன.

"இந்த தொகுப்பு தெரிவுக்கு பொறுப்பு நான்தான் என்றாலும் (சுமார் 200 கவிதைகளிலிருந்து 63 கவிதைகளை தேர்ந்தெடுப்பதில்) தன் மூப்பாக நடந்து கொண்டு விடவில்லை நான். நண்பர்கள் சி.மணி, பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன், எம். பழனிசாமி, ஆர்.வெங்கடேசன், என்.முத்துசாமி ஆகியோரிடமிருந்து தெரிவுபட்டியல்களை கேட்டு வாங்கி என்னுடையதையும்சேர்த்து முடிவு செய்தது இது அவர்கள் குறிப்பிடாததும் சில சேர்க்கப்பட்டிருக்கும். ஆனாலும் புதுக்கவிதைத் துறையில் நல்ல ஈடுபாடுள்ள ஆறேழு பேர்கள் மதித்தவை அடங்கிய தொகுப்பு இது. அவர்கள் உதவி இன்றி என் வேலைசுளுவாகி இராது. எனக்குள் உள்ள

இருட்டடிப்புகள் என் தெரிவுக்கு குந்தகம் விளைவித்திருக்கவும் கூடும்'' என்று சி.சு. செல்லப்பா, இத்தொகுப்புக்கு உரிய கவிதைகள் தேர்ந்து எடுக்கப்பட்ட விதம் பற்றி, முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய நேர்மை பாராட்டப்பட வேண்டிய பண்பு ஆகும்.

செல்லப்பா இத்தொகுப்புக்கு எழுதிய முன்னுரை ('நுழைவாசல்') நல்ல ஆய்வுரையாக அமைந்துள்ளது.

உலக இலக்கியத்தில் புதுக்கவிதையின் தோற்றம் குறித்தும், கவிதையின் தன்மை பற்றியும் இம் முன்னுரையில் கூறப்பட்டுள்ளவை கவனத்துக்கு உரியன.

''மேற்கே இந்த புதுக்கவிதை பிறந்ததைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வது லாபகரமானது. எந்த ஒரு கவியும் தன் காலத்தில் பிறந்தவன் தான் என்றாலும் அதுக்கும் மீறி எழுத்து அடிப்படைகளை, பேருண்மைகளை வ.வே.சு. அய்யர் குறிப்பிட்டிருப்பது போல அகண்டப்பொருளின் சாயைகளை காட்டுபவனாக என்றைக்குமாக நிற்பவன். இருந்தாலும் ஒரு காலத்துக் கவி இதயம் பற்றிக்கொண்ட அம்சங்களை அடுத்த கால கவி இதயம் வாங்கிக் கொள்கிறதில்லை; முடிகிறதில்லை. மதிப்பு என்று சொல்கிறோமே அது தலைமுறைக்குத் தலைமுறை வித்தியாசப்படுகிறது. அடிப்படை மாறாமல், மேல் மாற்றங்களாக, முகச்சாயல் மாறுதல்களாக ஏற்பட்டு வருவது தெரிந்தது. அபூர்வமாக அடிப்படையை தொட்டாலும் அடிப்படை வெள்ளத்துக்கு முன் நாணலாக வளைந்து கொடுத்து நிமிர்ந்து விடுகிறது. இந்த முகச்சாயல் மாறுதல்களில் உலுக்கல்கள் எந்த நாட்டு இலக்கியத்திலும் ஏற்படாமல் இல்லை. கிளாஸிஸம், ரொமாண்டிஸிஸம், ரியலிஸம் இப்படி கவியின் மனப்பாங்கிலே, உள்ளடக் கத்திலே அனுபவ வெளியீட்டிலே மாறி வந்திருக்கின்றன.

இந்த மாறுதல்களில் ஒன்றாக, 1910க்கு மேல் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள கவிகள் சிலர் சேர்ந்து, கவிதைப் புனருத்தாரணத்தை குறிக்கோளாக கொண்டு இமேஜிஸ்ட்கள் என்ற கோஷ்டி உருவாகிறது. பிரெஞ்சு இலக்கியத்தைப் பின்பற்றி வெர்ஸ் லிப்ரெ என்ற சுயேச்சா கவிதை முறையின் சாத்தியங்களை ஆராய்வதில் அக்கறை காட்டினார்கள். சொல் சிக்கனம், சகஜத்

தன்மை, பேச்சு அமைதி. செம்மை, நூதன படிமப்பிரயோகம் ஆகிய தன்மைகளை கவனித்து கவிதைகளை அமைக்கலானார்கள். டி.இ.ஹ்யூம், எஸ்ரா பவுண்ட், டிஎஸ். இலியட் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். புதிய தொனியும் நூதன நடையும் நவீன படிமப் பிரயோகமும் அவைகளில் தெரிந்தன. விஞ்ஞான, இதர தொழில் துறை தகவல்களை உள்ளடக்கிய குறியீடுகள், பயனாகும் சொற்கள் பொருத்தப்பட்டு ஒரு புதிய பாணியே தோன்றியது.

ஒரு வரிக்கு இத்தனை சீர் இருந்தால் இந்தரக கவிதை என்று, ஒரு வரியின் நீளம் சம்பந்தமாக ஏற்கெனவே வலிந்து நிர்ணயிக்கப்பட்டிருந்த வரையறுப்பைவிட ஒரு நிறுத்து பேச்சு அல்லது சிந்தனைப் போக்கு அளவைக் கொண்டு சுதாவான வரையறுப்பினால் நிர்ணயிக்கப்படும் ஒரு வரி நீளம் மேல் என்று பிரெஞ்சு சுயேச்சா கவிதை சோதனைக்காரர்கள் கூறியது இவர்களைப் பாதித்தது. அதே சமயம் ஒவ்வொரு வரியும் அடி நாதமாக இடையறாத ஒலிநயம் (ரிதுமிக் கான்ஸ்டென்ட்) கொண்டிருக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினதையும் மனதில் போட்டுக் கொண்டார்கள். ஒரே தொகை அசை, சீர்களைப் பயன்படுத்துகிற போது, திரும்பத் திரும்ப ஒரே விதமான ஓசைநய சப்தம்தான் விளைகிறது. மரபான கவிதை இந்த விதமான ஒரு இடையறாத ஓசை நயத்தாலேயே முழுக்க முழுக்க ஆனது. ஆனால் சுயேச்சா கவிதையோ தன் உள்ளடக்கத்துக்கும் பேச்சுக்குரலின் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு ஏற்பட்ட தேவைக்கு ஏற்ப வேறுபடும் ஒரு ஓசைநயத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும் என்பது அவர்கள் கருத்து. இந்த இடையறாத ஒலிநயத்தோடு அவர்கள் ஒன்றிப்பையும் பாட்டர்ன் என்கிறோமே– ஒருவித 'தினிசு' அதையும் சாதிக்க ஒரு வரிக்குள்ளேயே நிறுத்துகளை அளவமைய அமைத்தல், மோனை, 'காடென்ஸ்' என்கிறோமே,குரல் இறக்கம் ஏற்றம், ஒரொரு சமயம் சந்தமும் கூட,ஆகிய சாதனங்களை சிபார்சு செய்தார்கள். ஆக, மொத்தத்தில், இன்று கவிதை வெளியிட வேண்டியிருக்கிற புதிய விஷயத்துக்கு இடம் கொடுக்க, சந்தக் கவிதைக்கு 'ஓவர் ஹாலிங்' அதாவது பழுது பார்த்துச் செப்பனிடல் தேவை என்று கருதினார்கள்.

உருவம் விஷயம் இப்படி இருக்க, உள்ளடக்கம் விஷயத்திலும் பாதிப்பு ஏற்பட்டது. ஃபிராய்டின் கருத்துக்களால் கவிஞர்களது

அகநோக்கு இதுவரை கண்டிராத அளவு விரிவும் ஆழமும் பெற்றது. உணர்வு உலகத்தில் இன்னும் ஆழத் துளாவி துருவிப் பார்த்தார்கள். மென்மையானதும், சிக்கலானதும் கூட்டுக் கலப்பானதும், திட்டமான எண்ணத்துக்கும் உருவாகாமல் பிரக்ஞை நிலையிலேயே இருக்கும் அக உளைச்சல்களை எல்லாம் சொல்லப் பார்த்தார்கள். கணக்கற்ற அணுக்களைப் போல் எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒரே சமயத்தில் மனதுக்குள் பொழியும் மனப் பதிவுகளை, மாறுபடும், இனம் தெரியாத ஒரு கட்டுக்கடங்காத மனப்போக்கை வெளித் தெரிவிப்பது தங்கள் கடமை என்று கருதினார்கள். அதே சமயம் புறஉலகமும் அவர்களைப் பாதித்தது. புதிய விஞ்ஞானத் தகவல்கள் பிரபஞ்ச விசாரணையிலே புதுப் பார்வைகளை ஏற்றின. வாழ்க்கை ஒரு ஐக்யத் தன்மை வாய்ந்தது என்பதோடு தொடர்ந்து ஓடும் ஒரு தாரை, சென்றது நிகழ்வதுடன் பிணைகிறது. நிகழ இருப்பதின் வெளிக்கோட்டை உருவாக்க ஒரு கணம் மறுகணம் என்றெல்லாம் இருந்தாலும் ஒன்றை அடுத்து ஒன்றாக இடையறாமல் தொடர் நிலையாக ஓடிக் கொண்டிருக்கும் கணப்பொழுதுகளால் ஆவது தான் வாழ்க்கை, ஒவ்வொரு நிகழ் கணப்பொழுது எல்லா காலத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது, அத்தகைய கணப்பொழுதில் நின்று பார்க்கிற கவிதையின் பார்வையின் காலம் வெளி இரண்டும் பேதமற்றுப் போய்விடுகின்றன என்ற, காலம் வெளி பற்றிய கருத்துக்கள் பரவின.

ஆக, அகபுற உலக மாறுதல்களால்பாதிக்கப்பட்ட இந்த நூற்றாண்டு ஆரம்ப காலத்தவன் புதுக்கவியாக மலர்ந்தது மேல் நாட்டில் கவிதை உலகம் கண்ட அனுபவம். அது பூத்த பூக்கள் நிறைய.

இதற்குப் பின் , தமிழில் பாரதி செய்த முயற்சிகள் பற்றி குறிப்பிட்டுவிட்டு, புதுக் குரல் கவிஞர்கள் சிலரது சில படைப்புக்களை செல்லப்பா இம்முன்னுரையில் ஆராய்ந்தி ருக்கிறார்.

'1910–20களில் மேல் நாட்டு புதுக்கவிதைக்கு ஒரு உந்துதல் ஃபிராய்டீயம், மார்க்சீயம் இரண்டிலிருந்தும் மனோதத்துவ லோகாயத தத்துவ ரீதியாகவும் ஏற்பட்டது' என்ற தகவலும் இம்முன்னுரையில் காணக்கிடக்கிறது.

மார்க்சிய தத்துவத்தினால் பாதிக்கப்பட்டவர்களும் – மார்க்சிய நோக்குடன் வாழ்க்கையையும் சமூகத்தையும் கவனித்து தங்கள் எண்ணங்களை சொல்கிறவர்களும் அவர்களது கருத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களும் தமிழில் புதுக்கவிதை எழுத முற்பட்டார்கள். அது பிந்திய நிகழ்ச்சி.

இத்தகையோரது கவிதைகள் எழுத்து ஏடுகளில் இடம்பெற்றதில்லை. 'புதுக்குரல்கள்' தொகுப்பில் மார்க்சீய தத்துவ அடிப்படையில் பிறந்தகவிதை எதுவும் இல்லை.

'எழுத்து' ஏடுகளில் கவிதை எழுதியவர்களும், 'புதுக்குரல்கள்' கவிஞர்களும் ஃபிராய்டிச தத்துவத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சில விமர்சகர்கள் குறிப்பிட முன் வந்தார்கள். இது தவறான கணிப்பு ஆகும்.

வாழ்க்கையை கவனித்து, வாழ்வும் காலமும் அன்றாட நிகழ்ச்சிகளும் உள்ளத்திலும் உணர்விலும் உண்டாக்கிய அதிர்வுகளை எழுத்தாக்க முயல்கிறவர்கள் அனைவரும் ஃபிராய்டீசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்று லேபிள் ஒட்டுவது தவறான செயல் தான். அதேபோல் சமூகத்தில் காணப்படுகிற வறுமை, பணத்திமிர், இதர கொடுமைகள் சீர்கேடுகள் முதலியன ஏற்படுத்துகிற உள்ளத்துடிப்புகளை எழுத்தாக்குகிற எல்லோரையும் மார்க்சீய தத்துவப்பாதிப்பு பெற்றவர்கள் – மார்க்சியப் பார்வையோடு பிரச்னைகளை அணுகுகிறவர்கள் என்று முத்திரை குத்தி விடுவதும் தவறான கணிப்பாகவே முடியும்.

ஃபிராய்டிசம், மார்க்சியம் போன்ற தத்துவங்களைப் பற்றி எதுவுமே அறியாதவர்கள்கூட, வாழ்க்கையாலும் அனுபவங்களாலும் பாதிக்கப்பட்டு தங்கள் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் எழுத்துக்களாக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எதை எடுத்தாலும், அதற்கு அயல்நாட்டுத் தத்துவப் பெயரைச் சூட்டி விட்டால்தான் விமர்சனம் பூர்த்தி பெற்றதாகும் என்ற நினைப்போடு விமர்ச்சிக்க முற்படுகிறவர்கள் தங்கள் அறிவுப் பிரகாசத்தையும் மேதைத் தனத்தையும் வெளிப்படுத்தவே ஆசைப்படுகிறார்கள்.

'புதுக்குரல்கள்' தொகுப்பில் உள்ள கவிதைகளில் ஐந்து (ந.பி., கு.ப.ரா. கவிதைகள்) 'எழுத்து' காலத்துக்கு முற்பட்டவை. மற்றவை 1959 – 62 க்கு உட்பட்ட நான்கு ஆண்டுகளில் படைக்கப்பட்டவை.

மா. இளையபெருமாள் 1.கி.கஸ்தூரி ரங்கன் 2. இ.எஸ். கந்தசாமி 2. சு. சங்கர சுப்ரமண்யன் 2. எஸ். சரவணபவானந்தன் 1. பெ.கோ. சுந்தரராஜன் 2. பேரை சுப்ரமண்யன் 1. சி.சு. செல்லப்பா 3. தரும சிவராமு 8 டி.கே. துரைஸ்வாமி 4 டி.ஜி. நாராயணசாமி 1 சுப. கோ. நாராயணசாமி 1 சுந்தரராமசாமி 5 ந. பிச்சமூர்த்தி 2 யோ. பெனடிக்ட் 1 சி.மணி 3 க.நா.சுப்ரமண்யம் 2 ஞா. மாணிக்கவாசகன் 1 முருகையன் 1 கே.எஸ். ராமமூர்த்தி 1 கு.ப. ராஜகோபாலன் 3. வல்லிக்கண்ணன் 4 தி. சோ. வேணுகோபாலன் 6 எஸ். வைத்தீஸ்வரன் 5 ஆக 24 கவிகளின் 63 கவிதைகள்.

'கவிதை சொற்களில் இல்லை. ஒலிநயத்தில் இல்லை. கருத்திலே மடை திறக்கும் உணர்வுநெகிழ்ச்சியிலே சுட்டிக்காட்டும் பேருண்மையிலே பொதிந்து கிடக்கிறது' என்ற ந.பி.யின் விளக்கத்தை நிரூபிக்கும் அருமையான கவிதைகள் பல இத்தொகுப்பில் உள்ளன. இவ்வாறான கவிதைகளிலும் ஒரு ஒலிநயம் இருப்பதை ரசிகர்கள் உணரமுடியும்.

தமிழுக்குப் புதுமையானது இத்தொகுப்பு. இதுபோன்ற தொகுப்புகள் சில வருடங்களுக்கு ஒரு முறையாவது தயாரிக்கப்படவேண்டும். அப்போதுதான் கவிதையின் வளமும், வளர்ச்சியும் புலனாக வாய்ப்பு ஏற்படும்.

'புதுக்குரல்கள்' முதல் பதிப்பு வெளியாகி பத்து வருடங்களுக்கும் மேல் ஆகிவிட்ட பிறகு, இப்போது அதன் இரண்டாம் பதிப்பு பிரசுரமாக வாய்ப்பு கிட்டியது. மதுரைப் பல்கலைக்கழகம் எம்.ஏ.வகுப்புக்கு 'புதுக்குரல்கள்' தொகுப்பை பாடப் புத்தகமாகத் தேர்வு செய்தது. இது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம். ஆகவே, செல்லப்பா அதன் இரண்டாம் பதிப்பை 1973 ஜூலையில் கொண்டுவந்தார்.

இந்த 'திருந்திய பதிப்பு, முதல் பதிப்பில் இடம் பெற்றிருந்த சில கவிதைகள் நீக்கப்பட்டுள்ளன. சில கவிஞர்கள் அகற்றப்பட்டு புதிதாக மூன்று பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சிலரது கவிதைகளில் முதல் பதிப்பில் அச்சாகியிருந்தவற்றில் சில படைப்புகள் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளன. இப்போதும் நண்பர் செல்லப்பா 'தன்மூப்பாக' செயல் புரியவில்லை; விமர்சகர் சி.கனகசபாபதியின் ஆலோசனையோடும் உதவியோடும் இத் திருத்தப்பட்ட பதிப்பை உருவாக்கினார் என்று அறிய முடிகிறது.

வளர்ச்சி

பிச்சமூர்த்தியின் கவிதைத் தொகுப்பு 'காட்டு வாத்து' புதுக்கவிதைகளின் தொகுப்பான 'புதுக்குரல்கள்' ஆகிய புத்தகங்கள் வெளிவந்த பின்னர், புதுக்கவிதையை ஆதரித்தும், குறை கூறியும் எதிர்த்தும் அபிப்பிராயங்கள் பரவலாயின.

பழந் தமிழ் இலக்கியத்தில் நல்லதேர்ச்சியும் புதுமை இலக்கியத்தில் ஈடுபாடும் கொண்ட ச.கனகசபாபதி புதுக்கவிதை பற்றி 'எழுத்து' இதழ்களில் விரிவான கட்டுரைகள் எழுதினார். 'எழுத்து' ஐந்தாம் ஆண்டில் (1963) இவை பிரசுரமாயின.

'காட்டு வாத்து' தொகுதி பற்றியும் ந.பியின். கவிதைத் திறன் பற்றியும் அவர் 'புது மனிதனுக்குப் பாடும் பழமை வழிவந்த புதுயுகக் கவிஞன்' என்ற தலைப்பில் நீண்ட கட்டுரை ஒன்று எழுதினார்.

(எழுத்து ஏடு 49)

'இன்றைய மனக்குரல் வகைக்கு ஏற்ப ஒலிக்கும்' புதுக்கவிதைகளின் தொகுப்பை விமர்சித்து அவர் எழுதிய கட்டுரை எழுத்து 51–வது ஏட்டில் வந்தது.

'கவிதை கதையாக இருந்திருக்கிறது. வரலாறாக இருந்திருக்கிறது. மனத்தின் குரலாக அதிகம் இருந்ததில்லை. மனத்தின் நுட்பமான அசைவுகளை' வெளியிடும் முயற்சியே புதுக்கவிதை என்ற ந. பிச்சமூர்த்தியின் கருத்துக்கு விளக்கமும் விரிவுரையுமாக அமைந்திருக்கிறது கனகசபாபதியின் ஆய்வு.

'காலந்தோறும் கேட்கும் குரல் வகை புதியது. ஒரு காலத்துக் குரல் வகை போல் அடுத்த கால, அதற்கு முன் காலக்குரல் வகை இருப்பதில்லை. சங்க காலம்,சங்கம் மருவிய காலம் என்றவாறு காலப் பாகுபாடு செய்துகொண்டு பார்த்தால் அவ்வப்போது புதுப்புதுக் குரல்வகை கேட்டது அகச்செவியில் படும்.

'தமிழ்க் கவிதையின் குரல் வகையில் இம்முறையில்அறிய வேண்டியது அவசியம். உள்ளடக்கம் ப; றிய குரல் வகைகளையே இங்கு நான் உரக்கச் சிந்திக்கிறேன். சங்க காலக் கவிதை காதலும் வீரமும் பற்றியே உரைக்கிறது. சங்கம் மருவிய காலத்தில் காதலுக்குப் பதில் கற்பும், போர் வீரத்திற்குப் பதில் கருணை வீரமும் மனத்துக்கினிய நயத்துடன் கவிதையின் ஒலியலை எழுப்புகின்றன...

'இவ்வாறு சங்க காலக் கவிதைக்கும் சங்கம் மருவிய காலக் கவிதைக்கும் இடையே குரல்வகையில்வேற்றுமை ஏற்பட்1 து ஏன்? சமூக வாழ்வில் கட்டுப்பாடுகள் காலப்போக்கில் ஆட்சிக் க ங்களை நீட்டியதே காரணம் என்று சொல்லவேண்டும். இந்த ஆதிக் காவியங்களின் காலத்திற்கு முன்பே திருக்குறளில் சங்க காலக் கவிதையில் கேட்காத ஒழுக்க ரீதியின் புதுக்குரல் ஒலித்ததை நாம் இன்றும் கேட்க முடிகிறது.

'ஆதிக் காவிய காலத்தை அடுத்து, மேன்மேலும் சமூகக் கட்டுப்பாடுகள் ஆதிக்கக்கரங்களை நீட்டிய காலத்தில் திருக்குறளைப் போல் சில நீதி நூல்கள் ஒழுக்க நீதிப் புதுக்குரலில் மேலும் உரக்கப் பேசினதை நாம் கேட்கலாம். இக் காலத்தை அடுத்து பக்தி இயக்கக் காலத்தில் பக்திக் கவிதை கடவுளைப் பற்றிய புதுக்குரல் இசைத்தது. அதற்கு முன்கடவுளைப்பற்றிப் பாடல்கள் பாடப்பட்டாலும் இக் காலத்தில் போல உள்ளுணர்வுடன் உண்மை வேகத்துடன் ஆனந்த பாவத்துடன் பாடப்படவில்லை என்பதால் இக்காலத்தின் பக்தி வகையின் குரல் வகை புதியது என்று உணரலாம். இதற்குப் பிந்திய காவிய காலத்தில் கடவுளுக்குப் பதில் கடவுள் தன்மை பற்றி புத்தம் புதுக்குரல் எழுந்ததை இன்றும் நாம் கேட்கிறோம். கம்பன் காவியமே இதற்குச் சான்று. கம்பராமன் மலர்களால் அர்ச்சிக்கப்படும் கடவுளாகத் தோன்றுவதைக் காட்டிலும் கவிதைச் சித்திர மலர்களால் உருவாக்கப்படும் கடவுள் தன்மை குடிவாழும் மனிதனாகக் காண்பதால் இதைத் தெளியலாம். இது அல்லாமல் காவிய காலக் கவிதையின் குரல் வகையில் முன்னைவிடவும் சமுதாய பொதுமைக் குரலும் இழைந்துள்ளது என்றும் சொல்ல வேண்டும்.

'பின்னர் சாத்திர வளர்ச்சிக் காலத்தில் கவிதையின் குரல் வகை மாறியது. மேல் உலக இயலும் பற்றிய புதுக்குரலே அது என்று குறிக்கலாம். இவ்வாறே பார்த்துக்கொண்டே வந்தால் சித்தர்கள்

காலக்கவிதையில் ஞானக்குரலும், பாரதி கவிதையில் புத்தம் புதியதாக தேசமும் விடுதலையும் பற்றிய குரலும், ஒன்றைவிட்டு மாறி இன்னொன்றாக ஒலித்ததை நாம் கேட்கலாம். பாரதியின் தேசீயப் புதுக்குரலில் ஆன்மசக்திக் குரலின் இழைவும் உண்டு. பாரதிக்குப்பின் வாழ்வின் ஒரு புதுக்காலத்தில் இருக்கிறோம். இன்றைய புதுக்கவிதையின் குரல் மனத்தின் குரல். இதற்குமுன் என்றைக்குமே மனத்தின் குரல் கவிதையில் கேட்டதில்லை. மேலும் இன்றைய புதுக் கவிதையின் குரல் மனிதனைப் பற்றியும் கேட்பதை உணரலாம். பிராய்டும் கார்ல்மார்க்ஸுும் கொடுத்த கொள்கைகளே இதற்குக் காரணம்.' (கனகசபாபதி கட்டுரையிலிருந்து)

இக்காலத்திய மனித மனங்களின் குரல் எப்படி எப்படி இருக்கிறது என்பதையும் விமர்சகர் சி. கனகசபாபதி நன்றாக அளவிட்டுச் சொல்லியிருக்கிறார் அந்தக் கட்டுரையில்.

'மனத்தை ஊறுகாய் போட்டுப் புளிக்க வைக்கும் காலம்இது. கண்டது கடியதை விரும்பி நிரப்பி மனவீட்டை பாழ்படுத்துவோரும், திறந்த மனம் என்று பேசிக்கொண்டு மூடத்தெரியாதவரும், பரம்படித்துப் பண்படுத்தாத மனம் என்னும் தரிசான பொட்டல் வெளி கொண்டவரும், மனத்தின் அடிக்கல் நட்டு வைக்காமல் மேற்கட்டிடமும் பூச்சும் பெற்று உலாவருவோரும், மனம் திண்டாடித் திகைத்துத்தெருவில் நிற்பவரும் நம்மில் நிறைந்திருக்கக் காலம் நம்மைப் பார்த்துச்சிரிக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் மனம் போன போக்கு மனநோய் கவ்விப் பிடித்திருக்கின்றன. விஞ்ஞான எந்திரத் தொழில் வளர்ச்சி நூற்றாண்டை, நிகழ் நொடி வாழ்வின் நரம்பில் செவ்விதும் அபத்தமும் சுரங்களாக அடுத்தடுத்து ஒலிக்கின்றன. கூர்பற்களுடன் சுழலும் எந்திரச் சக்கரத்தின் இடையே அகப்பட்ட பட்டுப்பூச்சி போல் இந்த நூற்றாண்டு வாழ்வு சிக்கித் தவிக்கிறது. என்ன காரணம் இதற்குச் சொல்லித் தொலைப்பது? பொருளைத் தேடும் முயற்சியிலும் உறவிலும் அருளைத்தேடும் ஆர்வத்திலும் ஆன்ம வேட்டையிலும் கெக்கலிப்புகளும் ஓலங்களும் சீறலும் சறுக்கலும் வெள்ளமிட்டு அடித்துவரும் நிலைதான் காரணம். நோயிலே படுத்து விட்டது கண்முன்னே நூற்றாண்டு மனிதனின் மனம். இது நோன்பிலே உயிர்ப்பு பெற வேண்டும். சேற்றிலே குழம்பி விட்டான் இம்மனிதன். இவன் திக்கிலே தெளிவு பெறவேண்டும். இப்படி நோயுடன் மருந்தையும் பற்றிய மனத்தின்

குரலே தமிழில் புதுக்கவிதையின் குரல். வாழ்வை நையாண்டி செய்யும் எதிர் மறையில் நேசித்துக் குரல்வகை காட்டினாலும், வாழ்வின் ஆக்க உடன்பாட்டில் கலையின் ஒளியைக் காட்டுவதாகும். ஏதேனும் குறித்ததத்துவம் இதற்கு உண்டா என்றால் மனத்தின் தத்துவம் இது தழுவியிருப்பது எனக் கூறலாம். இந்த மனத்தின் தத்துவத்திற்குள் எவ்வளவோ பல அறிவுத் துறைகளின் புதிய பழைய புறநிலைக் கருத்துக்களும் உள்முகப் போக்கு வரவும் வேண்டுமானால் உள்ளடங்குதலும் செய்வது உண்டு என்பது குறிப்பிடத் தக்கது.'

(எழுத்து 51)

மனித வாழ்வும், சுய அனுபவங்களும், இதர பாதிப்புகளும் ஏற்படுத்துகிற மனப்பதிவுகளையும் கருத்தோட்டங்களையும் கவிதையாக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். வழக்கமாக எழுதிவந்தவர்களோடு, அவ்வப்போது புதியவர்கள் சிலரும் இம் முயற்சியில் ஆர்வத்தோடு இறங்கினார்கள்.

இவர்களது படைப்புகளுக்கு 'எழுத்து' நல்ல ஆதரவு தந்தது; பாராட்டத் தகுந்த, ரசனைக்குரிய, இக்கவிதைகள் பலவற்றையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பது இயலாத காரியம் ஆகும்.

என்றாலும் முக்கியமான ஒரு சிலவற்றை அவற்றின் தனித் தன்மைக்காக – எடுத்து எழுத வேண்டியது அவசியமாகிறது.

சுந்தர ராமசாமி எழுதிய 'காலம்' – எழுத்து (51) அருமையான கவிதை ஆகும்.

'மணியின் முள்ளில் காலமில்லை.
காலமோ–'

என்று துவங்கும் அந்தக் கவிதை சிறிது நீளமானதுதான். கருத்தாழமும் நயங்களும்நிறைந்த அக்கவிதையில் காலத்தைப்பற்றிய எண்ண ஓட்டம் படிப்படியாக வளர்கிறது. பிறகு –

மாயை என்றான் சங்கரன் !
அல்ல, மாயையும் அல்ல வென்றான்.
அரவிந்தனோ லீலை என்றான்,
லீலை தானோ என்று கேட்டான்.

அறிந்தறிந்து
தத்துவப் பாகனையே கொல்லும்
யானை அது

இவ்வாறு சிந்தித்து உண்மை ஒளியைக் காண முயல்கிறது மனசு.

காலம் என்ற ஒன்று
யாளியின் வாய்க்குள்
விரலுணர,
ஓசையெழ உருண்டோடும்
கண்ணுக்குப் படாத
கல் பந்து

குறையாத ஜாடியினின்று
நிறையாத ஜாடிக்குள்
பார்வைக்குத் தெவிட்டாமல்
வில்லாய் வளைந்து விழும்
விழுந்து கொண்டேயிருக்கும்
கட்டித் தேன் பெருக்கு

தரைக்கே வாராது
காற்றோடு மிதந்தோடும்
பூப்பந்து

கிணற்றினுள்ளே
கண்ணுக்குப் புலனாகும்
நதியின் பிரவாஹம்

தேயாததை யெல்லாம்
தேய வைத்து,
தேய்மானம் ஒன்றே
தேயாதது என்று
தேய்த்தும் தேயாது
கோலோச்சும்
தேய்மானத் தத்துவம்,

எனக்கோ
கடவுள் அளித்த ரஜா.
மரணவூரில்
ஆஜராகி வேலை ஏற்க
யான் பெற்ற
காலாவதி

மணியின் முள்ளில் காலமில்லை
அக்கினியைத் தேடி
அலைந்த மனசோ
அடுப்பாய்ப் புகையுது.

பிச்சமூர்த்தி எழுதிய 'வழித்துணை' எனும் நெடுங்கவிதை 53 வது ஏட்டில் பிரசுரமாயிற்று. 'புதுக்கவிதையில் இன்னொரு மைல்கல்' என்று இதை வரவேற்று 'எழுத்து' அதே இதழில் தலையங்கம் தீட்டியுள்ளது. 'அறிவு வார்ப்பான புதுரகப் படைப்பு' என்று சி.கனகசபாபதி இதை விவரித்தும் விமர்சித்தும் தனிக் கட்டுரை எழுதினார். (எழுத்து 5)

பிக்ஷுவின் 1960 காலக் கவிதைகளை 'இரண்டாவது கட்டக் கவிதைகள்' என்று மொத்தமாக, தனியாக ஆராய வேண்டும் என, அவரது 'முதல் கட்டக் கவிதைகள், (1934 – 1964) பற்றி எழுதியபோதே குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே, ந.பி.யின் கவிதைகள் பற்றிய என்எண்ணங்களை இத்தொடரில் அங்கங்கே நான் குறிப்பிடவில்லை. 'வழித்துணை' பற்றியும் அப்படியே.

புதிதாகத் கவிதை எழுத முற்பட்டவர்களில், நா. வெங்கட் ராமன் புதிய எண்ணங்களை தம் படைப்புகளில் கொண்டுவர முயன்று வெற்றியும் பெற்றுள்ளார். இயற்கைக் காட்சிகளோடு விஞ்ஞான உண்மைகளையும் கவிதைப் பொருளாக்க வேண்டும் எனும் புதுக் கவிஞர்களின் துடிப்பு அவருக்கு உண்டு என்பதை அவரது படைப்புகள் காட்டுகின்றன. 'பிரசவம்' என்ற கவிதையை ஒரு உதார ணமாகக் கூறலாம்.

ரவிக் கையின் சூடு
கடல்நீரைப் புகையாக்கி விண்ணேற்ற
காற்றோட்ட,
மலைமறிக்க

மழை பெய்யும்.
மலை உச்சி மழை நீரை
புவி ஈர்க்க
அது
பேரருவியாகி
கொட்டும்: கொட்டும்
அதனடியில் குளிப்பதும், மகிழ்வதும்
நான் நீ மட்டுமா?
விஞ்ஞான மருமகள்
டைனமோப் பெண்ணாளும்
அருவியில் குளிக்கின்றாள்.
'குளிக்காமல்' கருவுறுதல்
குவலயத்தில் கண்டதுண்டு.
மருமகளோ
குளித்துக் கருவுருகின்றாள்.
வட்ட வரிசைப் பற்கள்
புளி, மாங்காய் கடிக்கவில்லை.
பச்சரிசி மெல்லவில்லை
வயிற்றில் கனக்கவில்லை,
ஆனாலும்
ஓர் கணத்துள்
பெற்றெடுத்து விடுகின்றாள் –
ஏழு.

பாலுக் கழுதால்
அவளது
தாமிரக் காம்பில்
மின்பால் சுரக்கும்.
டைனமோப் பெண்ணாள்
தன் காந்தக் கண்களினால்
குழந்தைகளை நோக்க,
புத்துலகைக் காண்கின்றாள்.
அனல் கக்கும்
ஒரு குழந்தை

ஒலி பரப்பும்
ஒரு குழந்தை
ஒளி வீசும்
ஒரு குழந்தை
ஒலி ஒளியைப்
படமாக்கும் இரட்டையர்கள்.
நிலம் நடுங்க
தாள் பதியும்
மார்மப்பிள்ளை?
ஓயாமல் காலத்தை
ஓட்டிக் காட்டும்

முள்ளுக்கைப் பிள்ளை..
பிள்ளை பெற்ற பெருமையிலே
இருந்த பெண்ணாள்
பெயர் வைக்க வந்த
விஞ்ஞான சாஸ்திரியைப்
பார்த்தாளா?
நானறியேன்.

(எழுத்து 53)

நல்முத்து பற்றிய 'கண்' என்ற கவிதையும் ரசமானதுதான். நல்முத்து 'ஆழ்கடல் வயிறு அவனிக்களித்த-அற்புதப்புதையலோ?' கடலின் சிப்பிக் கண்ணுள் தூசோ எதுவோ நுழைந்ததனால் சேர்ந்த துன்பச் சேமிப்போ, என்றெல்லாம் சிந்திக்கிற கவியின் வியப்பு இப்படி வளர்கிறது-

இல்லை இல்லை
துன்பம் எங்கேனும்
விண்ணில் போல் மின்னி
மாந்தர் கை சேர்ந்து
அரம்பையர் விரும்பும்
அணிகலனாமா?
விலை மலையாய்ப் போமா?
கண் தான் காட்சியா?
இல்லாவிட்டால்?

நல்முத்தும்
வர்ணம்பூசின வெறும் எலும்பு
சுண்ணாம்பு பாஸ்பேட்
ஸோடா கார்பனேட் தானா?

(எழுத்து 54)

விஞ்ஞான உண்மையை நயமான கவிதையாக்கிக் காட்டுகிறது. நா. வெங்கட்ராமனின் 'அந்தி' எனும் படைப்பு.

துயிலுமுன் பரிதி
தூக்கி யெறிந்த
வெள்ளை வெற்றிலைக் காம்புகளை
ஆகாசத் தூசுக்கும்பல்
பொறுக்கி
மென்று
உமிழ்ந்த
எச்சில்

(எழுத்து 65)

கவிதையில் கால காலமாகக் கையாளப்பட்டு நைந்து போன விஷயத்துக்குக் கூடப் புதுமை சேர்க்க இயலுமா என்று புதுக்கவிதை சோதனை செய்யத் தயங்கவில்லை. நிலவு இம்முயற்சிக்கும் கை கொடுக்கிறது.

'கிணற்றில் விழுந்த நிலவு' என்.எஸ். வைதீஸ்வரன் எழுதியதையும், நிலவை கற்புக்கரசியாகக் கண்டும், நாணமிலாப் பரத்தையாகக் கொண்டும் தி.சோ. வேணுகோபாலன் ஒட்டும் வெட்டுமாக இரு கவிதைகள் படைத்ததையும் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். வேறு கோணங்களிலும் நிலவைப் பார்க்கிறார்கள் சிலர்.

விட்டெறிந்த இட்டலியோ
கட்டிவைத்த பழஞ்சோறோ
கொட்டி விட்ட கப் தயிரோ
சுட்டு வைத்த அப்பந் தானோ?
என்ன இழவேயானாலும்
எட்ட இருந்து சிமிட்டுது கண்
கிட்ட வந்து எட்டவில்லை

பாடுபட்ட பாட்டாளி
கொட்டாவி விடுகின்றேன்
ஆவ்...
உறக்கம் வருது பசிமறக்கும்.

இ. அண்ணாமலை என்பவரின் நோக்கு இது. (எழுத்து 66 – 67) சி.மணி காணும் தோற்றம் வேறு ரகமானது.

நல்ல பெண்ணடி நீ!
முகத்திரை இழுத்து விட
இரண்டு வாரம்
அதை எடுத்து விட
இரண்டு வாரம்
இதை விட்டால் வேறு
வேலையே இல்லையா உனக்கு?

என்று நிலவைப் பார்த்துக் கேட்கிறார் அவர். (எழுத்து 68)

அதே நிலவை சு. சங்கரசுப்ரமண்யன் வேறுவிதமாகப் பார்க்கிறார் (எ.69)

அவளோ
சினிமாக்காரி
உருவம் காட்டி
ஊரை மயக்க
ஒளி பாய்ச்சி
குளோசப்பில்
நிறுத்துகிறார் யாரோ.
அப்படியே
இருந்துவிட்டாலோ
முகப்பருவும்
மேக்கப்பை
மீறிவிடும்
எனவேதான்
ஒளி குறைத்து
நிழல்பூசி
ஒளிக்கின்றார்
காமிராவேலைக்கு
காரிகையா பொறுப்பு!

சி.மணியின் 'கவிதை நினைவுகள்' குறிப்பிடப் பெறவேண்டிய மற்றொரு அருமையான கவிதை. பரிகாசமும், சிந்திக்க வைக்கும் கருத்தாழமும் கொண்ட படைப்பு; 4 பகுதிகள் கொண்டது. (எ.61)

இருக்கின்ற பாலோ
இருவருக்குத் தான்
அளவோ குறையாது மூவர்
அருந்த வேண்டுமென்றால்
நீரைக் கொட்டி
சரிக்கட்டுவாள்,
பாலின் சுவை கெடுப்பாள்
அளவைப் பற்றிய கவலை
இல்லையென்றால்
நல்ல பாலைத் தருவாள்.

2வது பகுதியில். 'மரபின் தூய பருத்திச் சட்டை, கவர்ச்சியான தோற்றத்துடன், களிப்பூட்டும் பலவண்ணங்களிலும், கண்கவரும் பல வகைகளிலும் கிடைக்கும் – நம்பிக்கையான பெருங்கடைகளில் என்பதனால் பலரும் 'அளவெடுத்து' சட்டையையே வாங்கினார். சிலருக்கு அது அமைந்தது. சிலருக்குப் பொருந்தவில்லை. அநேகருக்கு எப்படி எப்படியோ இருந்தது. என்றாலும் மரபு முத்திரையில் மயங்கி அதை வாங்குவதிலேயே பலரும் ஆர்வமாக இருந்தார்கள். சிலர் மட்டும் அது சரியாக இல்லையெனத் தெரிந்ததும், வேண்டிய துணியை வாங்கிக் கொண்டு போய், 'உடலுக்குத் தக்கபடி, தைத்தார் சட்டை.'

3

ஓங்கு திரைப் பெருங்கட லுலகத்துமாந்தர்
வீங்குமுலை வருத்திடை மகளிரை மருவுவார்
இலங்குஞ் சோளிசேலை குழல் தமைக் கண்டதும்
மனங்கொடா ரோரிழி அலியிட மன்றோ?
சிறப்பான யாப்பிட்ட பனுவ லென்னும்
விரசஞ்சேர் வாளிள் மங்கை யிருக்க
யாப்பற்ற புதுக்கவிதையை யெப்படி
கைப்பற்ற துணிந்தா ரைம்புல னொப்பி?

யாப்புடைத்த கவிதை
அணையுடைத்த காவிரி
முகிலுடைத்த மாமழை
முறட்டுத் தோலுரித்த பலாச்சுளை
வறட்டுக் கோஷா எறிந்த மங்கை.
யாப்பற்ற கவிதை
அருவருக்கும் அலியல்ல;
மார்கழியின் மொட்டிரவில்
தென்றல் தரும் சூடுபோக்க
வெண்ணிலவின் பயன்துய்க்க;
உடை கலைந்த ஒரு தலைவி
இயற்கையெழில் கொட்டியிருக்க
செயற்கை யணி வேண்டாமென்று
ஒப்பனையை நீக்கிவிட்ட
வனப்பொளிர் கனவுப் பெண்;
கார்குழலாக மெல்லாம் கவர்ந்து எழில் கனிய வீங்கி
ஈர்க்கிடை போகலாகா எதிரெதிர் பணைந்து வீங்கும்
வார்க்குலம் அறுந்த கொம்பை வரிமுலை
ஐயா இது.

4

அன்று மணிக்கதவை
தாயர் அடைப்பவும்
மகளிர் திறப்பவும்
செய்தார் மாறி மாறி;
என்றும்
புலவர் அடைப்ப
கவிஞர் திறப்பார்.

சி. மணி சிறிய சிறிய – ஆயினும் நயங்கள் நிறைந்த – கவிதைகள் அநேகம் எழுதியிருக்கிறார். 1963–64 வருடங்களில். எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடலாம்.

வெளுத்தது நான்கு

துவைக்க
வெளுத்தது
துணி.

காதலன்
சுவைக்க
வெளுத்தது
இதழ்!

ஞாயிறு
வெறிக்க
வெளுத்தது
நிலம்

வாழ்வு
நெறிக்க
வெளுத்தது
முடி.

குறை கூறல்

க.நா.சுப்ரமண்யம் 1964ல் 'இலக்கிய வட்டம்' என்ற மாதம் இருமுறைப் பத்திரிகையை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

அதன் 17வது இதழ் 'தமிழ் இலக்கியத்தில் சாதனை'யை அளவிடும் விசேஷ மலராகத் தயாராயிற்று. 1947– 64 காலகட்டத்தில் தமிழில் நிகழ்ந்த இலக்கிய சாதனைகள் குறித்து, தி. ஜானகிராமன், எம்.வி. வெங்கட்ராம், தி.க. சிவசங்கரன், ரதுலன்,வெ. சாமிநாதன்' ஆர். சூடாமணி. தெ.பொ.மீனாட்சித் சுந்தரன், நகுலன், வல்லிக்கண்ணன் ஆகியோர் அவரவர் நோக்கில் அபிப்பிராயங்கள் அறிவித்து கட்டுரைகள் எழுதியிருந்தார்கள்.

தி.க.சிவசங்கரன் 'பதினேழு ஆண்டில் இலக்கியம்' என்ற தலைப்பில், சிறுகதை, நாவல், கவிதை, புதுக்கவிதை, கட்டுரை, இலக்கிய விமர்சனம், நாடகம் என்று பகுத்து, விரிவாகத் தனது கருத்துக்களை அறிவித்திருந்தார். அதில் புதுக் கவிதை பற்றி அவர் கூறியது இங்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டிய கருத்து ஆகும்.

''புதுக்கவிதை குறித்து என் கருத்து யாது?

புதுமை, சோதனை என்ற முறையில் நான் புதுக்கவிதையை வரவேற்கிறேன்; திறந்த மனத்தோடு புதுக் கவிஞர்களின் படைப்புக்களைச் சுவைக்கிறேன்.

புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபலன், பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன், கே. ராமநாதன் ஆகியோரின் புதுக்கவிதைகளை 'கலாமோகினி', 'கிராமஊழியன்','சிவாஜி', 'நவசக்தி' ஆகிய இதழ்களில் அவை வெளிவந்த காலம் தொட்டு வாசித்து வருபவன் நான்.

அண்மையில் ஆறு ஆண்டுகளாக 'எழுத்து' இதழ்களிலும், பின்னர் 'இலக்கிய வட்ட'த்திலும் இடைவிடாது படித்து வருகிறேன்.

'எழுத்து' ஏட்டின் தோற்றத்திற்குப் பின்னர், தமிழில் புதுக்கவிதை எண்ணிக்கையில் பெருகியிருக்கிறது. ஆனால் அதன் தரம் பெருகியிருக்கிறதா என்பது சந்தேகம்; விவாதத்திற்குரிய விஷயம்.

என்னைப் பொறுத்தவரையில் இன்று எழுதப் பெறும் பழைய (மரபுக்) கவிதையைப் போலவே புதுக்கவிதையும் எனக்குச் சலிப்பூட்டுகிறது.

புதுக்கவிதையின் புதுப் பாதையை, அதன் சொல்லாட்சி யை, படிமச் சிறப்பை, உருவ நயத்தை நான் ரசிக்கிறேன். இப்படியும் கவிதை வரவேண்டியதுதான் என்று உணர்கிறேன். ஆயினும், புதுக் கவிஞர்களின் குரல்களை என்னால் ரசிக்க முடியவில்லை.

வெறுமை, விரக்தி முனைப்பு, மனமுறிவு ஆகிய குரல்கள் பல புதுக் கவிதைகளின் அடிநாதமாக ஒலிக்கின்றன. நவீன பட்டினத்தார்களாகவும், பத்திரகிரியர்களாகவும் திருமூலர்களாகவும், திகம்பரச் சித்தர்களாகவும் சில புதுக் கவிஞர்கள் மாயாவாதம் (மிஸ்டிசிசம்) பேசுவது, அதுவும் இந்திய வரலாற்றின் முக்கியமான இக்கால கட்டத்தில் அழுது புலம்பிக் கையறு நிலையில் கை விரல்களைச் சொடுக்குவது, எனக்கு மிகவும் பிடிபடாத சங்கதி.

இந்தக் கவிஞர்கள் தமிழ்ச் சொல்லை முறிக்கட்டும். மனித மனத்தை ஏன் சிரமப்பட்டு முறிக்க வேண்டும்? அது தான் தெரியவில்லை. ஐயோ பாவம் இவர்களுக்கு என்ன சுகக்கேடு, நோய்?

புதுக் கவிஞர்களின் இந்த மனமுறிவு (மனமுறிப்பு) விவகாரம் பற்றி 'எழுத்து' ஆசிரியர் சி.சு.செல்லப்பா 62 வது ஏட்டில் வரைந்திருப்பது இங்கு நன்கு சிந்திக்கத் தக்கது.

'மாடர்னிட்டியும் நம் இலக்கியமும்' என்னும் 1964 பிப்ரவரி தலையங்கத்தில் சி.சு.செ. கூறுகிறார்.

'மனமுறிவு – ஃபிரஸ்டிரேஷன் – ஒரு மோஸ்தர் (ஃபாஷன்) இல்லை, இன்னொரு இலக்கிய நோக்கைப் பார்த்து இமிடேட் செய்வதுக்கு. அந்த இடத்து அந்த நாளைய வாழ்வைப் பொறுத்தது. மேற்கே இன்றைய வாழ்வு அதுக்கு உணவூட்டலாம். நம் வட்டாரத்தில் நம் வாழ்வில் அது தொனித்தால் ஒழிய, இலக்கியத்தில்

தொனிக்காது. இமிடேட் செய்து தொனிக்கச்செய்தால், அதில் உண்மை இருக்காது.

ந. பிச்சமூர்த்தி இது பற்றி ஒரு சம்பாஷணையில் சொல்லியது: 'மேற்கே டிஸ்சின்டக்ரேட்டிங் - அதாவது, உதிர்கிற நிலை. எனவே நம்முடையது. ஷேப்பிங் அதாவது, உருவாகிற நிலை, எனவே மனமுறிவு நம் இலக்கியத்தின் பொதுத் தொனியாக இருக்கமுடியாது.'

ந.பி. வாழ்க்கையையும் இலக்கியத்தையும் பிரித்துப் பார்க்க முற்படாதவர். ஏன், இலக்கியத்தை விட வாழ்க்கையே மேலானதாகக் கருதுபவருங்கூட, ந.பி.சொன்னது ஆணி அடித்த கருத்து...

ந.பிச்சமூர்த்தியின் ஆணி அடித்த கருத்தை, அதை அடியொன்றிக் குரல் எழுப்பும் செல்லப்பாவின் கருத்தை, ஏனைய புதுக் கவிஞர்கள் - மாயாவாத மனமுறிவுக் குரல் கொடுக்கும் புதுக்கவிதைத் தம்பிரான்கள்- ஏற்றுக் கொள்வார்களா, அல்லது மனமுறிவு (மனமுறிப்பு)த் தத்துவம் தான் இன்றைய புதுக்கவிதையின் பொதுக்குரலாக விளங்குமா என்பது பொறுத்துப் பார்க்க வேண்டிய விஷயம்.

நான் உணர்ந்த வரையில், மிகைப்படக் கூறல், கூறியது கூறல்,மயங்க வைத்தல் ஆகிய சீக்குகள் புதுக் கவிஞர்களிடமும் மலிந்து காணப்படுகின்றன. இந்நோய் விரைவில் அகலக் காலதேவன் அருள்புரிவானாக!''

க.நா.சு.கருத்து

1963 இறுதியில் தோன்றியது க.நா.சுப்ரமணியத்தின் இலக்கிய வட்டம், மாதம் இருமுறை. அதன் இதழ்களில் புதுக் கவிதை போதிய இடம்பெற்று வந்தது.

'இலக்கிய துறையில் செய்ய வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன – இன்றைய தமிழ் இலக்கிய வளம் பெருக' என்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட 'இலக்கிய வட்டம்' பத்திரிகையில், 'நமக்கு நாமே பல விஷயங்களையும் தெளிவு செய்து கொள்ள வேண்டும்' என்ற எண்ணத்துடன், அதன் ஆசிரியரும் மற்றும் சில எழுத்தாளர்களும் எழுதிக் கொண்டிருந்தார்கள். அதனால், 'இலக்கியவட்டம்' நல்ல இலக்கியப் பத்திரிகையாக விளங்கியது. எழுத்தாளர்களுக்கும் இலக்கியப் பிரியர்களுக்கும் பயன்படக் கூடிய அருமையான விஷயங்கள் ஒவ்வொரு இதழிலும் பிரசுரமாயின. 'இ.வ.' சுவாரஸ்யமான ஒரு இலக்கிய ஏடு ஆகவும் வளர்ந்து வந்தது.

அது ஒரு வருஷமும் சில மாதங்களும் தான் உயிரோடிருந்தது என்று நினைக்கிறேன்.

'இலக்கிய வட்டம்' புதுக்கவிதையையும் ஒருசோதனைத் துறை' ஆகத்தான் கருதியது. பிச்சமூர்த்தியின் படைப்புகளை 'புதுக் கவிதை'யாக அது அங்கீகரிக்கவில்லை.

அதன் 25வது இதழில் வெளிவந்த அபிப்பிராயம் இது –

புதுக்கவிதை

'ஏனய்யா இந்த மாதிரிக் கவிதையல்லாத கவிதைகளை யெல்லாம் போட்டு எங்கள் பிராணனை வாங்குகிறீர்?' என்று ஒரு நண்பர் புதுக்கவிதை முயற்சிகளைக் குறித்து எழுதிக் கேட்டுள்ளார்.

மணிக்கொடி காலத்தில் சொ.வி.புதுமைப்பித்தன் என்ற பெயரில் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய காலத்தில் இதெல்லாம் கதைகளா ஐயா, கழுத்தறுப்பு என்று சொன்னவர்கள் உண்டு.

அவர்களே இப்போது புதுமைப்பித்தன் என்றால் ஆஹா என்கிறார்கள்.

இந்தப் பாராட்டுக்கும் கண்டனத்துக்கும் அர்த்தமேயில்லை.

சிறுகதை என்கிற உருவம் போல, புதுக்கவிதை என்கிற உருவம்தோன்றிவிட்டது – நிலைக்க அதிக நாள் பிடிக்காது.

தமிழில் செய்யுள் எழுதுவது மிகவும் சுலபமான காரியமாகி, எழுதப்பட்ட செய்யுள் எல்லாம் கவிதை என்று சொல்கிற அளவுக்கு வந்தாகிவிட்டது.

இது எல்லா மொழி இலக்கியங்களுக்குமே பொதுவாக உள்ள விஷயம் தான். மரபு என்பதை மீறியே மரபுக்குப் புது அம்சங்களைச் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது.

இந்த அர்த்தத்திலே புரட்சியும் எல்லா மரபுகளிலுமே உள்ள ஒரு அம்சம்தான்.

கவிதை வழிகள் தடம்தேய்ந்து, தென்றல் காயவும், மதிதகிக்கவும், மலர் துர்க்கந்தம் வீசவும் (காதலால் அல்ல) தொடங்கிவிட்டது என்பதைத் தற்காலக் கவிதையைப் படிப்பவர்களில் சிலராவது ஏற்றுக் கொள்வார்கள்.

இந்தக் கவிதை மொழி, வார்த்தைகள், பொருள்கள், மதி, மலர், தென்றல், ஒளி இத்யாதி எல்லாம் உபயோகத்தால் தேய்ந்து தேய்ந்து உருக்குலைந்து விட்டன.

பழைய சந்தங்கள் போக, புதுச்சந்தங்கள், புது வார்த்தைச் சேர்க்கைகள், புது உவமைகள் இன்றுள்ள நிலைக்கேற்பத் தோன்றியாக வேண்டும்.

லக்ஷியத்தச்சன் தேடிக் கைப்பிரம்பு இழைப்பதும், உருப்படாத வழியில் பானை வனையும் குயவனின் பாண்டம் உருக்குலைவதும், உருக்குலைந்த சிறகொடிந்த – வலிகுன்றிய சிந்தனைகள். இவை இன்று கவிதையே யாக மாட்டா.

புதுக்கவிதை புது வாழ்வின் எதிரொலியாம். வாழ்க்கையின் இன்றையச் சிக்கலை சிக்கலாகக் காட்டும் சிந்தனை வெறியாம். சிக்கலைச் சுலபமாக்கி சுகம்தேடும் மனப்பிராந்தி அன்று.

புதுக்கவிதை சங்ககாலத்துப் பேச்சுச் சந்தத்தை அஸ்திவாரமாக்கிக் கொண்டு எழுதக்கூடாது என்பதில்லை.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்கிற சந்தம் எல்லா காலத்துக்கும் பொதுவானது தான்.

புதுக்கவிதை ஏமாற்றத்தை, ஏக்கத்தைத்தான் எதிரொலிக்க வேண்டுமென்கிற கட்டாயமில்லை.

மேலை நாடுகளில் அப்படியென்றால், ஆனைக்கு அர்ரம் என்பதில்லை.

புதுக்கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் போல, விமர்சனம் போல, இலக்கியத்தில் – தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுத்துறை.

அது இன்னும் கவிதையாகி விடவில்லை.

புதுக்கவிதை எழுதுகிற பத்திருபதுபேர் தொடர்ந்து எழுதி வந்தால் புதுக்கவிதை கவிதையகிற பக்குவம் பெறலாம்.

அதுவரை அது ஒரு சோதனைத் துறை

('இலக்கிய வட்டம்' 23–10–64)

சோதனை ரீதியில் கவிதை படைத்து வந்த அமெரிக்க, ஐரோப்பியக் கவிஞர்கள் பலரது கவிதைகளின் மொழிபெயர்ப்பு இலக்கிய வட்டம்' இதழ்களில் பிரசுரமாயின.

க.நா.சு. 'மயன்' என்ற பெயரில் கவிதைச் சோதனைகள் நடத்தி வந்தார். அவரது சோதனை முயற்சிக்கு ஒரு உதாரணமாக 'முச்சங்கம்' என்பதைத் தருகிறேன்.

தார்த்தாரிப்
பரந்த
புல்
வெளியிலே
பல்
லாயிரம்
பெண்
பரிகள்
பின்
தொடர
நிமிர்ந்து
நடை
போட்ட
தொல்
காப்பியம்
பேசும்.

அரபு
மக்களிடை
தனியான
தோர்
அன்பு
கண்ட
திருக்
குறளும்
எடுத்
தோதும்
மங்கோலிய
மன்னரிடை
உரிமை
கொண்டாடிய
தேவாரம்
ஒரு
நா
லாயிரம்
பாடும்.

எழுத்து

இலக்கிய
காலாண்டு ஏடு

ஜனவரி – மார்ச்
1970

பனிரெண்டாம்
ஆண்டு

விமர்சன விழாக்கள்

தமிழ் சிறுகதை

நூர் உன்னிஸா

ஜீவரகசியம்

சந்தேகம்

அறுபதுக்களில்

வழிநடை

119

எழுத்து

இலக்கிய காலாண்டு ஏடு

ஆசிரியர் : சி.சு.செல்லப்பா

ஜனவரி – மார்ச் 1970 தை – பங்குனி சௌம்ய

அறுபதுகளில்	– தலையங்கம்
வழி நடை	– சி.சு.செ.
காந்தீய நாவல்	– விவாதம்
கடவுள்கள்	– இர.பன்னீர்செல்வம்
தமிழ் சிறுகதை	–சி.சு.செல்லப்பா
சந்தேகம்	– வல்லிக்கண்ணன்
நூர் உன்னிசா	– கு.ப. ராஜகோபாலன்
ஜீவரகசியம்	– டி.ஆர். நடராஜன்
விமர்சன விழாக்கள்	– சு. சங்கர சுப்ரமண்யன்
ஒலிபெருக்கி	– சி.சு.செ.

எழுத்து–பனிரெண்டாம் ஆண்டு–ஜனவரி–மார்ச் –ஏடு 119. காலாண்டு தோறும் ஜனவரி (தை), ஏப்ரல் (சித்திரை), ஜூலை (ஆடி), அக்டோபர் (ஐப்பசி) மாதங்களில் வெளிவரும்.

ஆபீஸ் : 19–A, பிள்ளையார்கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை –5.

தனிப்பிரதி ரூ. 1–25
ஆண்டு சந்தா ரூ. 5–00; மூன்று ஆண்டுகள் ரூ. 15–00
வெளிநாடுகளுக்கு ரூ. 10–00 ; ‘‘ ரூ. 30–00

வெளியூர் செக்குகளுக்கு 50 பைசா ‘கிளியரன்ஸ்’ கட்டணம் சேர்த்து அனுப்பவேண்டும். போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.

கதை, கட்டுரை, கவிதைகளுடன்போதிய ஸ்டாம்பு வைக்க வேண்டும்.

மதிப்புரைக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்பப்படும்.

ஆலயங்கும்

அறுபதுக்களில்

வரலாறு தெரிய வந்த காலத்திலிருந்து இன்று வரையில் ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் உலக முழுவதிலும் நடந்திருப்பதை, மனித வாழ்வின் அனுபவத்தை கணித்துப் பார்ப்பதானால் அறுபதுக்களைப் போல் ஒரு பத்து வருஷ காலம் தனிச் சிறப்பானதாக இருக்குமா என்பது சந்தேகம். புராண காலம் தொட்டு இருந்து வந்திருக்கும் ஒருநம்பிக்கை தகர்ந்தது போல மனிதன் கற்பனையிலும் நினைக்க முடியாத ஒரு சாதனையாக சந்திரமண்டலத்தில் தன்காலடி பதிய வைத்து விட்டான். இது சென்ற பத்தாண்டு காலத்தில் நடந்திருக்கிறது. இந்த எழுபதுக்களில் அவன் செவ்வாய் கிரகத்துக்கும் பாதை போட்டு விடுவானா?

இந்த அற்புத சாதனைக்கு இன்றைய விஞ்ஞான அறிவு மனிதனை தயாரித்திருக்கிறது. இன்றைய மனிதன் விஞ்ஞான மனிதனாக விஸ்வரூபம் எடுத்து நிற்கிறான். அதிலேயே தன்னை மூழ்கிக்கொள்ளும் அளவுக்கு ஈடுபட்டு விட்டான். மானிடத்தின் அசாதாரண வளர்ச்சியை முன்னேற்றத்தை அது காட்டுக்கிறது. இதனால் விஞ்ஞான அறிவு அவனை பேயாக பிடித்துக்கொண்டு விடுமா? மனிதன் அதிலே தன்னையே இழந்து விடுவானா? விஞ்ஞானத்துக்கு மெஞ்ஞானம் விரோதியா? பிரபஞ்ச அறிவு உண்மை அறிவை அழித்து விடுமா? இன்றைய மனிதனுக்கு அது தேவையில்லையா? மெடீரியலிஸம் என்கிறோமே லோகாயதவாதம் தான் இன்று செல்லுபடியாகும் செலாவணியில் இருக்கவேண்டிய தத்துவம் என்பதுதானா? ஆன்மீகம் செல்லாக்காசா?

இப்படி கேள்வி பின் கேள்வியாக எழுப்பி, கேள்விகள் கேட்க– யாரைக் கேட்க – கேட்டுக் கொள்ளத் தோன்றுகிறது, புதிய சந்திர மண்ணை மிதித்து புழுதி எழுப்பி 'வண்டல் என்கால்களில் தெருப்புழுதி என் கண்களில்' என்று ஒரு புதுக்கவிஞன் பாடினபடி, தன் கண்களை குருடாக்கிக் கொண்டிருக்கிறான் மனிதன். சென்று போன அறுபதுக்களில் , இதுவும் சென்ற பத்தாண்டுக் காலத்தில்

நடந்திருக்கிறது. இந்தப் படத்தையும் அந்தப் படத்தையும் பார் என்று மனிதன் கண்களுக்கு முன்னே கண்ணாடி காட்டத் தோன்றுகிறது. புழுதியால் பார்வையை மறைத்துக் கொண்ட மனிதன் புழுதி விலக்கி கண்விழித்துப் பார்க்கப் போகிறானா அவனால் முடியமா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு உலக மனிதன் இன்று தன்னை இழந்து நிற்கிறான்!

சென்ற உலக யுத்தத்துக்குப் பின் மனிதன் விழித்துக் கொண்டிருப்பான் என்று எதிர் பார்த்தது எவ்வளவு ஏமாற்றமாகி விட்டது! மேற்கே உதயமாயிற்று கலாச்சார உலுக்கல். 'ஆண்டிரண்டு ஓடு முன்னே தத்துவங்கள் பொய்க்கக் கண்டேன். பல தத்துவங்கள் கவிழக் கண்டேன்' என்று புதுக்கவிதை முதல்வன் பாடின மாதிரி அடிப்படை சிதற, மரபு அழிய, ஆளுமை குலைய, மேற்கத்திய மனிதன் ஹிப்பியாகி நம் கோவா கடற்கரைக்கு வந்து ஆண் பெண் சரிநிகர்சமானமாக நிர்வாணமாக தொத்து நோய் பயமுறுத்தலாக,அலைகிறது தான் நாம் பார்ப்பது. பெருமழை வந்து ஓரேயடியாக அழித்து விட்டாலும் தேவலை என்று மனம் முறிந்து நினைக்கும்படியாக தூவான சித்ரவதைகளை கணம் கணமாய் அநுபவிக்கிறது மானிடம். இதிலிருந்து என்று அது தப்பப்போகிறதோ யார் சொல்ல முடியும்.

மனித வாழ்வுதான் இப்படி இருக்கிறது என்றால் மனிதன் படைக்கும் இலக்கியம்? இலக்கியத்தின் பலனைப்பற்றி பேசிப்பேசி வாயலுத்துவிட்டது போலிருக்கிறது. இன்றய இலக்கியப் படைப்புகளை பார்க்கிறபோது வாயடைத்துப்போய் நிற்கவேண்டிய நிலை. யதார்த்தம் என்ற சொல்லுக்கு திருகிய அர்த்தம் ஏற்றி பசியின் பெயரால் கசப்பையும் வெறுப்பையும், தாம்பத்ய உறவின் பெயரால் காமத்தையும் இணை விழைச்சையும் பச்சையாக சொல்வதை கலை என்று பசுந்தோல் போர்த்த புலிப்படைப்புகள் அங்கே மலிந்து விட்டன. மனிதஜாதியின் ஆரோக்யமே கெட்டுக்கொண்டிருக்கிறது நாளுக்கு நாள். ஒரு மனிதனுக்கு மற்ற மனிதர்கள் எல்லோரும் மிருகங்கள் என்று தோன்ற அவனே மிருகமாகி விடுகிறான். அந்த மிருக சுபாவத்துக்கு மதிப்பு கொடுத்து அங்கே முளைக்கும் காளான் எழுத்துக்கள்.

மேற்கு அப்படி ஆகி விட்டதால் கிழக்கு வாழ்வும் அப்படி ஆகிவிட வேண்டுமா? கிழக்கு படைப்பும் அதேபோல ஆகிவிட வேண்டுமா? பாரதம் கிடக்கட்டும் தமிழ் நாட்டை கவனிப்போம். அறுபதுக்களில் ஒருவன் படைத்த கதைகள், நாவல்கள், கவிதைகள், சினிமா பாட்டுக்கள் இவைகளை ஒருவன் நினைத்துப் பார்க்கட்டும். ஏழ்மையின் கொடுமையை, சித்தரிக்கட்டும். மனிதகுல முன்னேற்றம் நோக்காகக் கொண்டு 'அறப்போர்' நடத்தட்டும். ஆனால் அறப்போருக்கு ஆயுதமாக புதுக் கவிஞன் சொல்வது போல 'அரம் எடுத்து ஓடுபவனாக' எல்லாத்தையும் ராவிப்பொடியாக்கும் மரபு, பண்பு, மனிதாபிமான ஆன்மிக விநாசகனாக அகிவிடுவானானால்!

அன்பு அகிம்சை, சத்யம், சமாதானம் இவற்றிற்கு சின்னமானது வெண்மை, கலைத்தெய்வம் 'வெள்ளைத்தாமரை பூவில் இருப்பாள். வள்ளலார் ராமலிங்கசுவாமி அணிந்திருந்தது காவியல்ல. வெள்ளாடை. ஆக அந்த தூய புனித வெண்மைக்கு உலைவைக்க ஓடுபவனாக 'கட்டிடம் கட்ட வரும் கடப்பாரையை ஆயுதமாக்காதே, ரத்தத்துளியைப் போர்கொடியின் ஊடும்பாவும் என்று ஆக்காதே' புதுக்கவிஞன் பாடி இருக்கிற மாதிரி 'இன்னும் சிவப்பாகும்' என்று ரத்தப் பசிகொண்டு பிரம்மராக்ஷசனாக மாறிவிடக்கூடாது மானிடம். இன்று உலகு எங்கும் காண்பது வேறு என்ன? உலகம் அப்படி இருக்க யதார்த்தம் என்று இலக்கியத்திலேயும் இந்த சிவப்பை பூசி மனிதரத்தத்தையே கொதிக்கச் செய்ய முற்படுவதுதான் 'உலகைத் திருத்தும் உத்தமச் செய்கை'யா?

சிவப்பின் மிரட்டல் ஒரு பக்கம் இருக்க இன்னொரு பக்கத்தில் பச்சையின் விரட்டல். இதுவும் மேற்கே இருந்து கிடைத்த பிரசாதம் நமக்கு – அறுபதுக்களில். சென்ற யுத்தம் மேற்கத்திய மனிதனின் பொருளாதார வாழ்வை சீர்குலைந்து நிலைப்பிடத்தை ஆட்டி விட்டது போல ஆன்மிக தூய்மைக்கும் வேர்ப்புழு விஷம் செய்து விட்டது. இதுவரை தான் கடைப்பிடித்திருந்த வழிகள், வைத்திருந்த மதிப்புகள் சோதனை கட்டத்தில் தன்னை காப்பாற்றவில்லை என்று உணர்வு ஏற்படக் கூடும் ஒரு தொல்லையில் சிக்கலில் மாட்டிக் கொண்டு மீட்சிக்கு வழியில்லாமல் மனிதன் தடுமாறுகிற நிலையில்,

அப்போது தன்னை மீட்கக்கூடிய வேறு ஏதாவது இருக்குமா என்று தேடுவது இயல்புதான். ஆனால் இனி விமோசனமே இல்லை என்பதுபோல முடிவுகட்டி ஆன்மிக அராஜக மனப்பாங்குடன் ஒழுக்க திவாலானவனாக, வாழ்க்கையின் அடிப்படை நியதிகளையும் உதறிவிட்டு, இவைகளில் எதில் 'எனக்கு மீட்சி கிடைக்கும் என்று பரிசோதித்துப் பார்க்கிறேன்' என்று விஷப் பரீட்சையாக ஹிப்பி வாழ்வு வாழ்வதென்றால்! அந்தவித வாழ்வு யதார்த்தம் என்று இலக்கியத்திலே சித்தரிப்பதுதான் 'மாடர்னிட்டி' என்று கொள்வது எவ்வளவு அபத்தமானதாகும்?

இலக்கியத்தின் நோக்கம், பயன், மனிதனை ஆழ்ந்து ஊடுருவி அவன் ஆழத்துள் தீவிரமாக பாதித்து, ஆழிய மேம்பாடான கருத்துக்கள் வளரச்செய்வதுதான் என்றால் மேலே சொன்ன போக்கு மனித அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும். ஆண் பெண் உறவு ஒருஅடிப்படை பிரச்சனைதான். என்றைக்குமாக இலக்கியத்துக்கு விஷயம், மூலப்பொருள்கள்தான். ஆனால்மனிதன் வாழ்விலே அதுக்கு உரிய இடம்தான் உண்டு. அதுவே மனிதனை முழுப்பேயாட்டம் ஆடச் செய்வதாக எவனோ அரைவேக்காட்டு தத்துவம் ஒன்றை சொல்லிவிட்டு போனதை பிரமைப்படுத்திக்கொண்டு பூதத்தன்மையானதாக ஆக்கிவிடக் கூடாது. அது நளினமாக, நயமான அளவோடு கையாளப்பட வேண்டிய, சித்தரிக்கப்பட வேண்டிய அம்சம். 'பெண் இயற்கையைப் பரிந்து காண துச்சாதனன் போல மனிதன் உன் துகிலை உறிகிறான்' என்று புதுக்கவிஞன் கூறியதுபோல துச்சாதன காரியமாக பாலுணர்ச்சியை அதன் பச்சையான குணத்திலேயே பச்சையாக சித்தரித்து இலக்கியத்தில் இன்னொரு புதுக்கவிஞன் சொன்னதுபோல் 'மஞ்சள் இதழில் பச்சைகிறுக்கு'கிற எழுத்துப் போக்கை யதார்த்தம் என்று பச்சை பூசி மனித சதையையே அழுகச்செய்ய முற்படுவதுதான் கலையின் உயர்ந்த பட்ச லட்சிய சித்தரிப்பா?

'துருப்பிடித்த இதயத்தை துடைக்க வந்த நேரத்தில் துருவேற்றுகிற 'கைங்கர்யத்தை செய்கிறது இல்லை கலை. 'தண்ணீர் சொட்டின் தயவால் வெள்ளமும் கடலுமானால் நிகழும் நிமிஷத்துள் நிலைத்துள்ள அண்டத்தை தொடரும் விநாடியில் துயிலும்சத்தியத்தை, வாழ்வை மூடிக்கிடக்கும் காலத் தொடரை,

காலாதீதத்தை வாழ்மெய்யை' உணர்ந்து ஏற்கச் செய்யும் ஒரு சத்தான பார்வையை கொள்வதுதான் கலை.

மேற்கே எப்படியோ போகட்டும் என்று இருக்க முடியாமல் போய்விட்டது இன்று உலகம் குறுகி விட்ட நிலையில். உலகத்து மனிதர்கள் ஒரு கணப்பொழுதிலே எங்கெங்கிருந்தாலும் பரஸ்பரம் நெருங்கி அறிந்து கொள்ள சாத்யமாக 'கம்யூனிகேஷன்' தொடர்பு வசதிகள் பெருகி விட்ட நாட்களில் நல்லதோ கெட்டதோ எங்கேயோ கொட்டினாலும் நெறி எங்கேயோ ஏறுகிறது இன்று. இந்த நிலையில் புத்தக பக்கங்கள் எங்கோ கக்குவதை எல்லாம் நெஞ்சுக்குள் அள்ளிக் குப்பை கொட்டிக் கொள்ள வேண்டுமா தமிழ் படைப்பாளி? தானும் கக்கி பிறநெஞ்சுகளுக்குள் அசிங்கத்தை திணிக்க வேண்டுமா?

ஒவ்வொரு தமிழ் படைப்பாளியும் சிந்திக்க வேண்டிய கட்டம் இப்போது. இலக்கியப் புறம்பான அக்கறைகளை முன்வைத்து பத்திரிகை உலகம் வாசகனை, கெடுக்கக்கூடிய பணியை செய்கிறது என்று ஓலமிடுவதைவிட 'நான் நல்லதை எழுதுகிறேனா' என்று அவன் தன்னைக் கேட்டுக் கொள்ளவேண்டும். சிங்கத்துக்கு பசி தணிந்திருந்தால் மனிதனை விரட்டிக் கொல்லாதாம் என்று அதன் சுபாவம் பற்றி சொல்வதுண்டு. புலி அப்படி இல்லை. அடித்துப் போட்டுக் கொண்டே போகுமாம் வெறிக்குணம் எப்போதும் மேலோங்கி நிற்க. அதுபோல பசி வெறி தணிந்த மனிதனிடமாவது ஒரு நிதானத்தை எதிர் பார்க்கலாம். இந்தஇணைவிழைச்சு வெறிக்கு வரையறையே கிடையாது. இன்றய தமிழ் படைப்பாளி இந்த எச்சரிக்கையை மனதில் கொள்ள வேண்டும். வாசகனுக்கும் இந்த எச்சரிக்கை தேவைதான்.

அறுபதுக்களில் தமிழ் படைப்பில் இந்த இரண்டு நச்சுப் போக்குகள் தலைதூக்கி இருப்பது இலக்கியத்தின் வளர்ச்சிக்கு குந்தகமானவை ஆகும். மனிதனை மிருகமாக்கும் ஒரு படைப்பு போலியானதாகும். உண்மைக் கலைப்படைப்பு ஆகாது. ஆரோக்ய எழுத்து இன்று தேவை.

வழிநடை

எழுத்துவில் காணப்படும் கருத்துக்கள் பற்றி எனக்கு வரும் கடிதங்கள், மேடைப் பேச்சுகள், பிற ஏடுகளில் வரும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள், கேட்கப்படும் கேள்விகள் இவைகளுக்கு இந்த பகுதியில் பதில், விளக்கம் தர உத்தேசம்.

சென்ற ஆண்டு ஜுலை எழுத்துவில் 'கவிதையும் இலக்கணமும்' என்ற கட்டுரை எழுதி இருந்தேன். அதன் மீது கருத்துக்களை எதிர் பார்த்தேன். எனக்கு வந்த கடிதங்கள் நான் எதிர்பார்த்த விதமானவை எதுவும் வரவில்லை. ஒரு அன்பர் 'புதுக்+கவிதைக்கு வடிவம் அதன் பொருளிலிருந்தே பிறக்கிறது, பழைய கவிதையிலிருந்து தோன்றிய இலக்கணத்தை வைத்து புதுக்கவிதையை அளப்பது சரியல்ல என்று என் கட்டுரை தெளிவிப்பதாக கூறிவிட்டு 'புதுக்கவிதையை பரிவோடு கனிவோடு அநுபவிக்க வேண்டும்' என்று சாதிக்க முற்படவேண்டுமா, இலக்கண மெல்லாம் விதி விலக்குக் கோணங்களை படைக்கும் கோணலே என்று கூறி விட்டு புதுமைக்கு இலக்கணம் கூற முன்வருவானேன்? புலமையைக் கொண்டு புதுமையை காப்பாற்ற வேண்டுமா?அதுக்கு ரசனை போதாதா என்று கேட்டிருக்கிறார்.

என் கட்டுரை மேலே கூறப்பட்ட குற்றங்களுக்கு உரியது இல்லை. புதுக்கவிதையை ரசனை அடிப்படையில் பார்க்காமல் இலக்கணத்தை வைத்து மட்டும் பார்த்து அவை கவிதையே இல்லை என்று சாடியவருக்கு பதில் என் கட்டுரை. நானும் இலக்கண ரீதியாக பார்வை செலுத்தி இலக்கணமும் எவ்வளவு தூரம் படைப்பாளி கையில் நெகிழ்ந்து வளைந்து கொடுத்திருக்கிறது என்பதை அந்த தரப்புக்கு உதாரணம் காட்டி சுட்டிக்காட்டவே எழுதினேன். அப்போது அவர் உபயோகித்த ஒரு வாக்கியமான 'ஒரு இலக்கணத்தை மீறுகையில் அதன் விளைவு அதைவிடச் சிறந்த இலக்கணமாகத் திகழுமானால் அது அறிவின் வளர்ச்சியை காட்டுவதாகும்' என்பதை

சொல்லிக்காட்டி இது அந்த வழியானதா என்று திரும்பத் திரும்ப கேட்டேனே தவிர பழமை தவறு என்று சாதிக்க முற்படவில்லை. அதுக்கு மாறாக பழமையில் இலக்கண மீறுதலால் இவ்வளவு உருவ வகைகள் தோன்றி இருக்கு அதோடு புதுக்கவிதைகளும் சேர்க்கத்தக்கது என்று அறிவுறுத்துவதே நான் விரும்பியது. விதிவிலக்கு கோணங்கள் தான் பிறகு புறநடையாகவும் ஒழிபியலாகவும் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்டு, புது புற நடைகளுக்கும் ஒழிபியலுக்கும் இடம் விட்டுக் கொண்டே இருக்கும், அப்படிச் சேரச்சேர புதுக்கவிதையும் மரபானதாக ஆகிவிடும் என்பது என் கருத்து; ஆகவே பழய இலக்கியங்களை இலக்கணக் கோணல்கள் என்று நான் கருதவில்லை. பார்க்கப்போனால் கோணலும் கோணமும் வரவேற்க வேண்டியவைகள். கலைஞனுக்கு கோணல் பார்வை (:டிஸ்டார்ஷன்) அவசியம்தான். இல்லாவிட்டால், மற்ற சாதாரண மனிதனிலிருந்து அவன் மாறுபட்டு இருக்கமாட்டான். எப்போது நான் பழய இலக்கணத்தை மதித்து குறிப்பிட்டிருக்கிறேனோ புதுக்கவிதையையும் அதன் வழி சேர்க்க இலக்கண ரீதியாகப் பார்ப்பது தவறில்லை. காப்பாற்ற வேண்டுமா, வேண்டாமா என்கிற பிரச்னையில்லை இங்கே, இலக்கியம் இலக்கணத்தை மீறி தன்னை காப்பாற்றிக்கொள்ளும். இலக்கிய – இலக்கண உறவு இதை நிரூபித்திருக்கிறது. புலமையைக் கொண்டு பழமையைக் காப்பாற்றுவதாக கொடி கட்டுபவர்களுக்கு பதில் என் கட்டுரை. அதே புலமை புதுமைக்கும் பயன் படுத்தப்பட வேண்டும் என்கிறேன். எனவே புலமையைக் கொண்டு புதுமையையும் பார்ப்பது தவறில்லையே.

இன்னொரு அன்பர் உதாரணச் செய்யுள்களையே நான் உதாரணம் காட்டி அவை எல்லாம் மட்டரகம் என்று காட்டுவதாகவும் அவை உயர்ந்த கவிதைகள் இல்லை. வேறு சிறந்த கவிதைகளை எடுத்துக்காட்டினால் தான் அந்த உருவங்கள் பற்றி நன்றாக பார்க்க முடியும், என்று கருத்து தெரிவித்திருக்கிறார். நான் கவித்வம் என்கிறோமே கவிதையின் உள்ளடக்கச் சிறப்பு, அதுபற்றி பேசுவதானால் தான் மட்டரகமான கவிதையை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வது தவறாகும். இங்கே இலக்கணத்துக்கு உதாரணம். எனவே இலக்கண விதிகளை கடைப்பிடித்து மட்டும் ஒரு உதாரணத்தைச் சொல்லி இருக்கையில் அந்தவித இலக்கண வழி

கவிதையின் குறையை எடுத்துக்காட்டுவது எப்படி தவறாகும்? இப்படி காட்டித்தானே கவித்வம் இல்லாத வெறும் 'செய்யுள்' வழி கவிதைகள் பெருக காரணமாகி இன்று அவைகளையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே புதுக் கவிதையில் கவித்வத்தை பார்க்க தவறி விட்டு தளை, சீர், எதுகை, மோனை தட்டுவதாக வடையை தின்பதுக்கு பதில் துளையை எண்ண ஆரம்பித்தால் உதாரணச் செய்யுள்களை எடுத்துக்கொண்டு இந்த உடைசல்களா உதாரணம் என்று காட்டுவதில் தப்பென்ன?

'ஓசையின்பத்தின் சக்கரவர்த்தியாகிய கம்பரை உதாரணத்துக்கு இழுத்து வந்திருக்க வேண்டாம். வேறொரு வான்கோழியின் சிறகுகளை கொய்திருக்கலாம். அந்த மயில் நம் தேசிய இலக்கியத்தின் சொத்தல்லவா?' என்று உணர்ச்சி வசப்பட்டு இன்னொரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது? ஏன் கொண்டு வரக்கூடாது? பிச்சமூர்த்தி என்ற கிளியின் சிறகுகளை பிய்க்க ஒருவர் முற்படும்போது ஒருவர் வான்கோழியை ஏன் தேடிப்போக வேண்டும்? கிளிக்கும் மயிலுக்கும் தான் இணை போட்டுப் பார்க்க வேண்டும். வித்யாசம் தெரியும். விமர்சகன் 'சென்டிமெண்ட்டலாக' இருக்கக் கூடாதே. தவிரவும் அங்கே கம்பரைப்பற்றிய முழு மொத்த பார்வைப் பேச்சு இல்லை. அந்த கவிதைபற்றிய அளவுக்குத்தான். யார் சொன்னார்கள் ஓசை இன்பத்தின் 'சக்கரவர்த்தி' கம்பன் இல்லை என்று?

புதுக்கவிதை மரபானதா மரபுமீறலா என்று நான்அந்த கட்டுரையில சொல்லவில்லை என்பதுக்கு பதில் என் அந்த கட்டுரையில் அது கேள்வி இல்லை. வேறு ஒரு கட்டுரைக்கு அது விஷயம், புதுக்கவிதை மரபுமீறல் ஆனால் மரபுக்கு உட்பட்டது' என்று அந்த அன்பர் சொல்வதே என் கருத்தும். அந்த அன்பரும் நான் 'தமிழ்யாப்பே குழப்பல் சேறாக இருக்கிறது சரியான வளர்ச்சியாக இல்லை என்று நான் நிலைநாட்டப் பார்ப்பதாக சொல்லி இருக்கிறார். நான் அப்படி நினைக்கவே இல்லை. மாறி வரும் வளைந்து வரும் மரபை கணிக்கத் தெரியாமல் கொக்குக்கு ஒன்றே மதியாக உடும்புப்பிடி பிடித்து பேசுபவர்களின் தெளிவு பெறாத குழம்பிய பார்வையைத்தான் சுட்டிக் காட்டுகிறேன். யாப்பைப்பற்றி இல்லை. பார்க்கப் போனால் இதையும் சொல்லலாம். யாப்பு குழம்பி குழம்பித் தெளிந்துதான் மரபு ஏறும். பல்வேறு பாவினங்கள் குழப்பத்தில்

பிறந்தவைதான். சீர், தளை, திணை மயக்கங்கள் குழப்பம் அன்றி வேறு என்ன? இன்று அவை தெளிவானதாகி விடவில்லை நமக்கு?

யாப்பின் உடைசலுக்கும் சமுதாய நிலைக்கும் உறவு இருக்கிறது என்றும் என் கட்டுரையில் யாப்புக்கும் சமுதாய நிலைக்கும் உள்ள உறவு பற்றிய பார்வையில்லை, யாப்பின் வளர்ச்சி சமுதாய வளர்ச்சியோடு பார்க்க வேண்டிய ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார் அன்பர். சமுதாயப் பார்வைக்கும் கவிதைப் பொருளுக்கும் உறவு இருக்கும் என்று சொல்லலாமே ஒழிய கவிதை இலக்கணத்துக்கும் சமுதாய நிலைக்கும் நேர் உறவு இருப்பதாக சொல்வதுக்கில்லை. இலக்கணம் உருவம் பற்றியது. சமுதாய நிலையாலோ உளப்பாங்கு நிலையாலோ தத்துவ நிலையாலோ பாதிக்கப்பட்டு அநுபவத்தை வெளியிட முற்படுகிறபோது மொழி கையாளுதலின் மூலம் உருவம் அமைகிற போது அதுக்கு பயனாகிற அம்சங்கள் தான் சேர்ந்து இலக்கணம். ஆக அனுபவ வெளியீட்டு தோரணைக்கு ஏற்பத்தான் யாப்பில் உடைசல்கள் – உடைசல்கள் என்பதைவிட புது ஒலிக்கீறல்கள் – ஏற்படுகிறது.

அடுத்தபடியாக மதுரையில் நடந்த இ.ப.த. மன்றம் மாநாடு பற்றி 'தமிழ் எம்.ஏ.க்கள் மகாநாடு' என்று தலைப்பில் எழுதி இருந்ததுக்கு ஆட்சேபணை. அது கேலியாம், எப்படி ஆகும்? தமிழ்மட்டும் படித்த வித்வான்கள், புலவர்கள் கூட்டத்திலிருந்து மாறுபட்டு இங்கிலீஷும் படித்த எம்.எ.எம். லிட்டுகள் பெரும்பாலும் கூடியதை குறிப்பிட இந்த தலைப்பு. நான் இந்த மாதிரி கூட்டங்களைத் தான் வரவேற்கிறேன். தமிழ் வளர்ச்சி இவர்கள் மூலம்தான் ஏற்பட வழி இருக்கு என்பதே என் கருத்து. சரியாகப்படித்திருந்தால் என் கட்டுரை புரிந்திருக்கும் . 'இந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்' என்று தற்காலப் படைப்பாளர்களை புலவர்கள் தரப்பில் ஒரு தினிசாக கூறப்பட்டு வந்ததே அதை இதேபோல எடுத்துக் கொள்ளக்கூடாதோ? பெயர்களை வைத்து சின்னவிஷயங்களில் ஏன் விவகாரம் செய்ய வேண்டும் என்பதுதான் புரியவில்லை.

இன்னொன்று, 'ந.பி.யின் வாழ்வியல் பார்வையிலிருந்து புதுக்கவிதை விலகிப்போகிறது. தி.சோ. வே. புதிய உழவுக்கருவியை கீழே போடுகிறார். தாங்கள் புதுமைப்பித்தன் பொன்னகரத்தையே

அழிக்கப் பார்க்கிறீர்கள். எஸ். வைதீஸ்வரன் அமெரிக்காவை தாக்கி ஆனால் அதன் பின் வாழ்விலிருந்தே ஓடுகிறார்' என்பது. ந.பி.யின் வாழ்வியல் பார்வை புதுக் கவிதைக்கு சட்டாம் பிள்ளையா என்ன? கவிதைக்கு தாக்கீது போடுவது வேறு ஒரு 'இஸம்' பார்வையில். கவிதைப் பொருள் பொன்னகரம், அமெரிக்கா, வியட்நாம் புதிய உழவுக்கருவிகள் இவற்றோடு மட்டும் நிற்காது. கவித்வ பார்வையில் இவைகளை பார்ப்பதிலும் எத்தனையோ கோணங்கள், வாழ்வியல் பார்வைகள். புதுமைப்பித்தனின் முப்பந்தைந்துவருஷத்துக்கு முந்திய பொன்னகரத்தையே இன்றும் நகல்கள் எடுத்துக்கொண்டிருப்பது பொன்னகரத்தை அழிப்பது இல்லை. பொன்னகரத்தை வளர்ப்பதாகும். ஏன், பொன்னகரம் அழிக்கப் படவேண்டாம். பொன்னகரங்கள் நிறைய வேண்டும் என்கிறாரா அன்பர்? புதிய உழவுக் கருவியை கீழே போடுவதா என்றால் கம்யூட்டரை எதிர்ப்பானேன்? அன்பின் வாழ்விலிருந்தே ஒரு கவி தப்பி ஓடுகிறார் என்றால், அன்பு வழியில் முன்னேற்றம், தீர்வு தேடாமல் கொடூரம், வெறுப்பு மூலம் நக்ஸல்பாரி வழியை கவிதையில் காட்டுவானேன்? ஆகவே கவிதை கிட்ட இந்த 'நான்விரும்புகிற சமுதாயபிரக்ஞை' மனப்பான்மையை கொண்டு வராமல் இருந்தால் தற்கால கவிதை பிழைக்கும்.

சி.சு.செ.

மதுரை இ.வ. கருத்தரங்கு

காந்தீய நாவல்

(1969 அக்டோபர் இறுதி ஞாயிற்றுக்கிழமை மதுரையில் நடைபெற்ற இலக்கிய வட்டக் கூட்டத்தில் ந. சிதம்பர சுப்ரமண்யனின் "மண்ணில் தெரியுது வானம்" நாவல் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது).

ராஜலக்ஷ்மி : காந்தி நூற்றாண்டு நிறைவு சமயத்தில் வாசகர் வட்டத்தால் வெளியிடப் படும் இரண்டாவது காந்தியுக நாவல் இது என்று நினைக்கிறேன். ஆசிரியர் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மணிக்கொடி யுகத்தைச் சேர்ந்தவர். ஏற்கனவே பிரசித்திபெற்ற 'இதய நாதம்' மில் சங்கீதத்தின் மேன்மையை எடுத்துக் காட்டினார் என்றால், இங்கே இந்த நாவலில் காந்தீயத்தின் உயர்வைத் தெளிவாகவும் சிறப்பாகவும் சித்தரிக்கிறார். நடராஜன் என்னும் கதாநாயகன் பார்வையில் கதை சொல்லப்படுகிறது. 1930 ல் ஆரம்பித்து மகாத்மாவின் பேரிழப்பிற்குப் பின்னரும் சிறிது காலம் வரை நடந்து முடியும் இந்நாவலில் காந்திஜியும் இரண்டொரு அத்தியாயங்களில் பாத்திரமாக இடம் பெறு கிறார். அஹிம்சை, பிரபஞ்சம் முழுதும் வியாபித்திருக்கும் கடவுள் எனும் சத்தியம், கலப்பு மணம், நேர்மை போன்ற காந்தீயத் தத்துவங்களைப் பிரசார பீரங்கிகளாகக் கொண்டு வாசகர்களைப் பயமுறுத்தாமல், கதையின் இயற்கையான போக்கிற்கு ஏதுவாக, நளினமாக இணைத்து மனதை ஈர்க்கிற அளவுக்கு எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

டி.ஆர். நடராஜன் : நீங்கள் சொல்வது மாதிரி காந்தி நெறிகளில் தான் இந்த நாவல் படைக்கப்பட்டிருக்கிறது. என்பதை ஆரம்ப அத்தியாயங்களிலிலேயே உணர முடிகிறது. "ஆங்கில ராஜ்ஜியத்தைத் தான் எதிர்க்கிறேனே யொழிய ஆங்கிலேயர்களை யல்ல" என்றார் காந்தி. என் படிப்பிற் கெட்டியவரை, இந்த நாவலுக்கு முன், வேறு

எந்த நாவலிலும் ஒன்று ஆங்கில அரசாங்கத்தைத் துவேஷித்தமாதிரியே ஆங்கி அதிகாரிகளையும் துவேஷித்திருக் கிறார்கள். அல்லது ஆங்கிலேயர்களைப் பற்றியே பிரஸ்தாபிக்காம லிருக்கிறார்கள். ஆனால், இங்கே, ஆசியரின் கால கட்டம், கிட்டத்தட்ட நடராஜனைத் தன்னில் பார்க்கிற மாதிரி அமைந்திருக்கிறது. அதனால் ஆங்கிலேயர்களிடையே காணப்பட்ட பெருந்தன்மை, ஒழுக்கம், நேர்மை, இறைபக்தி, தத்துவ விசாரம் போன்ற நற்குணங்களைக் கெளபர் துரை, ஜார்ஜ் ரஸ்ஸல், க்ரீன் போன்ற பாத்திரங்களில் தீட்டியிருக்கிறார். மனிதாபிமானம் என்றால் "தொழிலாளி ஜே, போலீஸ்காரன் அக்கிரமம் செய்கிறான். ஒழிக" என்று கதறுவது அல்ல. லெனினுக்கு லிப்ட் காரஜோவிடம் இருக்கிற அபிமானத்தைக் சொல்லி விட்டுச் சட்டத்தின் காவலர்களைக் கொள்ளைக்காரர்களெனச் சித்தரிப்பது மனிதாபிமானம் (humanism) என்றால் அது இங்கே இல்லை தான். ஆனால் ஓர் இலக்கிய மனத்திற்கு உற்சாகமும் உத்வேகமும் அளிக்கிற அளவில், கெளரவமான சமூகத்தின் தனி மனிதர்கள் மேல் ஓர் இலக்கியப் படைப்பாளி – ஆண்டன் செகாவ் மாதிரி – காட்டும் கவனம், மனிதாபிமானம், சிதம்பர சுப்பிரமணியனின் எழுத்தில் மின்னுகிறது.

கணேசன் : வெள்ளைக்காரர்களைக் சிலாகித்து நன்றாக எழுதியிருக்கிறார். சரி. பின்னால் தந்தையின் பேச்சை மீறி காந்தியின் உன்னதமான சுதந்திரப் போராட்டததில் நடராஜன் பங்கு பெறுகிறான். சிறை அனுபவத்திலும் பின்னர் விடுதலையாகி வெளி வந்து பெறும் பத்திரிகை அனுபவங்களிலும் புடம் போடப்படுகின்ற நடராஜன் தேசீயப் போராட்டங்களைப் பற்றியும், உலகப்போர்கள் பற்றியும் கூடச் சிந்திக்கிறான். அந்தக் கால கட்டத்தில் தமிழ் நாட்டில் இருந்த தேசிய எழுச்சியைப் பற்றியோ, உள் நிலவரங்களைப் பற்றியோ ஏன் பிரஸ்தாபிக்காமலிருக் கிறான்? அதாவது, இப்படிக் கேட்கிறேன். ஜஸ்டிஸ் கட்சியினரின் போக்கு, தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம் இந்தி எதிர்ப்பு இயக்கம் இவையெல்லாம் இங்கேயிருந்த தேசீய இயக்கத்தைப் பாதித்தனவா, இல்லையா? ஆசிரியர் இவற்றை ஒதுக்கி விட்டதேன்.

திருவையாறு ராஜகோபாலன் : நீங்கள் சொல்வது விசித்திரமாக இருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியினரைப் பற்றி என்ன சொல்ல

வேண்டும்? அவர்கள் ஆங்கில அரசாங்கத்தின் அடிவருடிகள் (Stooges) எனும் படியாக இருந்தது பற்றியா? இந்தியரின் சுதந்திர வேகங்களுக்குத் தடையாக இருந்தது பற்றியா, மேலும் சுயமரியாதை இயக்கமும் ஹிந்துத் துவேஷமும், ஒரு மகத்தான சுதந்திர வேள்வியின் முன் எந்த அளவுக்கு முக்கியத்துவமானவையோ தெரியவில்லை. ஆசிரியர் ஒதுக்குகிறார் என்கிறீர்கள்? எதை, எதற்காக ஒதுக்க வேண்டும்? தவிரவும் தனிமனிதனின், தேசத்தின் கதை இது என்று தான் ஆசிரியர் தமது முன்னுரையில் குறிப்பிடுகின்றார். தமிழ் நாட்டில் காந்தியுகம் எப்படியிருந்தது என்பதைச் சொல்வதற்கு இந்த நாவலை எழுதியதாக ஆசிரியர் சொல்லவில்லையே! பம்பாயில் கூட சிறிதுகாலம் கதை நடக்கிறது. மேலும் தமிழ் நாட்டில், தேசியப் போராட்டத்தின் ஆக்க பூர்வமான (constructive) பாதிப்பு எங்ஙனமிருந்தது என்பதையும் இலக்கிய மறுமலர்ச்சி, சிறுகதையின் பொற்காலம் (பக் 181) ஆகியவை பற்றிச் சொல்லும் போதும், கள்ளுக்கடை மறியல் அந்நியத் துணி பகிஷ்காரம் மாண்டேகு – செம்ஸ்போர்டு திட்டத்தின் கீழ் காங்கிரஸ் தேர்தல் குறித்து நடந்த மகாநாடு என்று குறிப்பிடும்போதும், ஆசிரியர் தமிழ் நாட்டைப் பற்றிக் குறிப்பிடத்தானே செய்கிறார்! ஈ.வெ.ராவும் அண்ணா துரையும் நடத்திய இயக்கங்கள் பிராந்திய வெறிகளிலும், குறுகிய நோக்கிலும் எழுந்தவை தாமே! இவர்களைப் பற்றியோ, 'சங்கடங்களை அதிகரிப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள்' என்று மகாத்மாவினால் குறிப்பிடப்பட்ட கம்யூனிஸ்ட்டுகளைப் பற்றியோ ஒரு காந்தீய நாவலில் சொல்வற்கு என்ன அவசியம்?...

கோ.முருகன் : நாவலில் மகாத்மா இடம் பெறும் நிகழ்ச்சிகள் விருவிருப்புடன் இறுக்கமாக அமைந்துள்ளன. கம்யூனிஸம் பற்றிக் காந்தியின் கருத்துக்கள் என்ன என்பதை ஆசிரியர் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். ''என் கொள்கை என்னைத் திருத்துவதில் ஆரம்பிக்கிறது. உங்கள் சித்தாந்தமோ மற்றவர்களைத் திருத்துவதில் ஆரம்பமாகிறது.' என்கிறார் காந்தியடிகள். இந்த முப்பது வருஷங்கள் கழித்தும் இச் சொற்களின் வாஸ்தவத்தை நினைக்கையில் புல்லரிக்கிறது. காந்தியடிகள் ஒரு கம்யூனிஸ்ட்தான் என்று சொல்கிற அளவுக்கு சமீபத்திய கோஷங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் காந்திஜியே குறிப்பிடுவது போல் கம்யூனிஸத்துக்கும்

காந்தீயத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு சத்தியத்தை நம்புவதில் இருக்கிறது. விஞ்ஞான சோஷலிஸ நம்பிக்கை வாதிகளுக்கும் காந்தீயவாதிகளுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு நாம் கண்ணால் காண்கின்ற நிஜம். இதை அன்றே மகாத்மா சொல்லியிருக்கிறார். மாயையான சோஷலிஸமும், அதன் விளைவான ஒரு கற்பனைச் சமூகமும் ஏற்படுத்தப் போகிற நியதிகள் மட்டும் எந்த அளவுக்கு நிஜமானவையோ? இந்தியாவின் பெருமை அதன் அடிப்படைப் பெருமிதம், வேதங்களில் நிலைக்கிறது' என்றார் டாக்டர் ராதாகிஷ்ணன், வேதரிஷி காலம் முதல் அப்பெல்லோ யுகம் வரைக்கும் இன்னும் இந்த 'நானை'க் கண்டவர் யாருமில்லை. காந்திய சொல்படி அக வளர்ச்சியின் முதிர்ச்சியில்தான் மனிதப் படைப்பின் உயர்வை அறிய முடியும். சுரண்டலற்ற, ஏற்றத் தாழ்வில்லாத சமூகம் போன்றவை காதுக்கு இனிமையானவை. கண்ணால் காண இயலாதவை. எந்திர வளர்ச்சி மனித ஆத்மாவை நசுக்குகிறது என்றார் அல்டஸ் ஹக்ஸிலி. இதையே இந்திய சமூகத்தின் பாரம்பரியம் உணர்த்துகிறது. ந.சி.யின் நாவல் சொல்கிற இந்த யதார்த்தமான உண்மை நாவலின் வெற்றியை இன்னும் அதிகரிக்கிறது.

சேஷாத்திரி : எனக்கு ஒரு சந்தேகம். கேட்கிறேன். ஆகஸ்ட் புரட்சியைப் பற்றி மொட்டை மாடியில் இருந்து கொண்டு (குரலில் கேலி வழிகிறது) பிரசங்கம் செய்கிறார்கள். நேரு தலைமை தாங்கிய போராட்டமல்லவா அது? தவிரவும் மொட்டை மாடியில் இருந்து பேசியபடியே இவர்கள் சாதிக்க நினைத்திருப்ப தென்ன.?

நடராஜன் : ஆகஸ்ட் புரட்சிக்கு நேரு தலைமை வகித்ததால் மட்டும், புரட்சியில் ஏற்பட்ட அதிக்ரமங்கள் எல்லாம் நியாயமாக ஆகிவிடுமா? அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டிருக்கிறேன் என்பதால் அச்சொத்துக்களை நான் அழிப்பது என்ன நியாயம்? ஆகஸ்ட்புரட்சியில் மக்கள் போலிஸ் ஸ்டேஷன்கள், தபாலாபீஸ்கள், ரெயில் ஸ்டேஷன்கள் ஆகியவற்றை எல்லாம் தாக்கினர். தந்தி, டெலிபோன் கம்பிகளை அறுத்தார்கள். தண்டவாளங்கள், பாலங்களைச் சேதப்படுத்தினர். அஹிம்சாவாதியான காந்திஜி ஆகஸ்ட் புரட்சியைப் பற்றிச் சொன்னதென்ன? "செய்யப்பட்டவை யாவும் சரியாகவே செய்யப்பட்டிருக் கின்றன என்றோ அம்மாதிரி தான் செய்யவேண்டும் என்றோ நான் கூறமுடியாது. மாறாக, பல

காரியங்கள் செய்யப்பட்டிருக்க கூடாது. எண்ணிப் பாராமல் மக்கள் செய்து விட்டார்கள். இத்தகைய பலாத்காரத்திற்குப் பதிலாக நான் கருதும் வகையிலான அகிம்சையின் வீரத்தைக் காட்டியிருப் போமாயின், முன்னேற்றம் இன்னும் அதிகமான தாகவே இருக்கும்.இந்த வகையில் நாசவேலை நடவடிக்கைகள் நாட்டின் சுதந்திரத்தைப் பின்னுக்குக் கொண்டுவந்து விட்டன'' என்று காந்திஜி ஹரிஜனில் 10.2.1946ல் எழுதினார். காந்தியத்தைப் பின்பற்றும் தி.ஜ.வும் நடராஜனும் வேறு எப்படி ஆகஸ்ட் புரட்சியைப் பற்றி பேசியிருப்பார்கள்? மொட்டை மாடிப் பேச்சு என்கிறீர்கள்! இங்கேயிருந்து கொண்டே வியட்நாம் நச்சரவங்களுக்கு 'நம்பிக்கையின் கீத மிசைக்கப் படுக்கையில்' இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கும் ஒருதேசியப் போக்கைப் பற்றி, இந்த நாட்டைச் சேர்ந்தவன், இந்த நாட்டிலேயே ஆக்க பூர்வமான வழிகளில் முன்னேற்றத்துக்குப் பாடுபடுபவன், இங்கேயே பேசுவதில் என்ன தப்பு? என்ன கேலி? மீகாயில் ஷோலகோவின் நோபல் பரிசு பெற்ற 'டான் அமைதியாக ஓடுகின்றது' நாவலில் கூடக் கதாநாயகன் கிரிகோரியின் தந்தை பன்ட் டேலி ப்ரோக்கோஃபிவிச் (Pantelei Provokfveujch) மார்கெட்டில் நின்று கொண்டு சொல்கிறான். ஆஸ்திரிய ஜார் எல்லைக்கு வந்து, ஓரிடத்தில் எனது பகடைகளை சேகரித்து மாஸ்கோவையும் பீட்டர்ஸ் பர்க்கையும் நோக்கி நடத்திக் செல்ல உத்தரவிட்டிருப்பதாக நம் முடைய கிரிகோரி எழுதியிருக்கிறான்' என்று சொல்கிறான். அதற்குப் பிறகும் பேச்சு தொடர்கிறது. வியாபாரம் நடத்தும் இடத்தில் நடக்கிறதே என்று நான் கேலி பண்ண ஆரம்பிக்கவா? நீங்கள் சொல்வது....

ராஜலக்ஷ்மி : நாவலை ஆசிரியர் நளினமான நடையில் எழுதியிருக்கிறார். 'எதிர்பாராத சஸ்பென்ஸ் கதை இல்ல இது. தூய இலக்கியப் போக்கு தென்படுகின்றது. இனிய தமிழ் நடை. காந்திஜி இறந்த சமயத்தை எழுதுகிறார், 'கடைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன. விலைமதிக்க முடியாத பொருள் போய் விட்டது. விற்பதற்கும் வாங்குவதற்கும் என்ன இருக்கிறது என்று புல்லரிக்க வைக்கிற எழுத்து. மேலும் நடராஜன் அரசியல், ஆத்மிகம் என்று தி.ஜ. வாய் மூலம் கேட்டறிகிறான். இந்த இடங்களிலெல்லாம் ஆசிரியர் ஜாக்கிரதை உணர்வுடன், தானே பேசுவது போல் அமைந்து விடாது, பாத்திரசம்பாஷணையில் ஓர்லயிப்பு ஏற்படுத்தும் விதத்தில் எழுதுகிறார்.

சங்கரநாராயணன் : ஆனாலும் நடராஜனை வேலையை விட்டுவிடும் அளவுக்கு சிரமப்படுத்துகிற பத்திரிகை அதிபரை, நடராஜன் எதிர்க்காமல் விட்டு விடுவது என்பது இயற்கையாக இல்லை. இவ்வளவுக்கும் அவன் வரையில் தவறு ஏதும் செய்யாதவன் என்னும் போது அவன் இந்த அநீதியை எதிர்த்துப் போராடியிருக்கக் கூடாது? ஒரு சமயம் காந்திவழி அஹிம்சையை மேற்கொண்டு விட்டானோ? ஆனாலும் எப்படிப் பார்த்தாலும் பொறுப்பற்ற ஒரு கோழையாகத் தான் தென்படுகின்றான் என்றே தோன்றுகிறது.

நடராஜன் : இங்கே தவறுவது நீங்கள் தான் என்று நினைக்கிறேன். 'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்' என்றாள் தமிழ் மகள். என்னையோ, என் கொள்கையையோ உணராத, உணர விரும்பாத ஒருவனிடம், போய் முட்டிக் கொள்வது அறிவுடையவனின் செயல் ஆகுமா? 'அநீதி செய்து விட்டார்கள் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் செய்' என்று கூக்குரலிட்டு காந்திஜியை உதவிக்கு அழைப்பதில் தென்படுவது புத்திசாலித் தனமல்ல. காந்தியடிகள் உண்ணா விரதமிருந்தால் அது சுயநலத்தின் விளைச்சலல்ல. அடுத்தவனின் உரிமைகள் பாதிக்கப்பட்டபோது தான் காந்தியடிகள் உண்ணா நோன்பை மேற்கொண்டார். நாவலில் சக ஆசிரியர்களிடம் பேசுகையில் 'என்கதை முடிந்தது' என்கிறான் நடராஜன். தனக்கு இழைக்கப்பட்டதை அநீதி என்று கூடக் கருதாத ஒரு சாத்வீகம் நிறைந்த காந்தியுக மனிதனைக் காண்கிறோம். 'உண்ணாவிரதம் செய்திருக்க வேண்டும்' என்று நாம் ஆசிரியருக்கு யோசனை சொல்ல உரிமை கிடையாது. நடராஜன் வீழ்ச்சியடைந்தான் என்பது தனது சொப்பனா வஸ்தையில் ஏற்படுத்திக் கொண்ட அமுத எண்ணம். போட்டுக் கொண்டிருக்கிற கறுப்பு (அல்லது சிவப்பா?) கண்ணாடியின் பிறழ்ச்சியான பார்வை. நடராஜன் மார்க்ஸ் ராஜனாயிருந்தால் பொறுப்பற்றவனாயிருந்திருக்க மாட்டான் போலும்!

ராஜலக்ஷ்மி : இந்த நாவலில் சில இடங்களை – ஆங்கிலப் பாடல்கள், சிறுகதைகள் ஆகியவைகளை–தவிர்த்திருக்கலாம் என்று தோன்றியது.

கோ.முருகன் : நடராஜன் சிந்தனை பின்னோக்கிப் பார்ப்பதாக ஆரம்பத்தில் சொல்லப்பட்டாலும், பிறகு அவன் பார்வையிலேயே நேரடியாக விஷயங்கள் சொல்லப்படுகின்றன. அப்போது சத்யாக்கிரக நாளில் நல்லதம்பியைப் பற்றி நினைக்கிறான்: 'நல்ல தம்பி மேல் நாட்டில் பிறந்திருந்தால், ஜேம்ஸ் பாண்ட் வீரராகத்தான் திகழ்ந்திருப்பார்' என்று. ஆனால் ஜேம்ஸ் பாண்டைக் கதாநாயகனாகக் கொண்டு ஐயான்ஃப்ளெமிங் எழுதிய 'காஸினோவா ராயல்' என்று முதல் நாவலே 1953–ல் தான் வெளி வந்தது.

நடராஜன் : பொதுவில் இந்த நாவலில் ஆசிரியரின் சிறந்த எழுத்தை ரசிக்க முடிகிறது. சத்தியம் (truth) சுந்தரம் (Beauty) சிவம் (Goodness) என்னும் மூன்றும் எழுத்தில் வீர்யத்துடன் ஜொலிக்கின்றன. இம்மூன்றின் ஒன்றிய பிரமிப்பான சேர்க்கையில் ஆசிரியரின் அடிப்படை இலட்சியத்தை உணர முடிகின்றது. வாசகர் வட்டம் பாராட்டுக்குரிய பணியைச் செய்திருக்கிறது. பார்த்தசாரதியின் ஆத்மாவின் ராகங்களைப்போல இதுவும் ஒரு சிறந்த காந்தீய சகாப்த நாவல்.

கடவுள்கள்

இர. பன்னீர்செல்வம்

கடவுள் :

மண்ணுலகில் ஒரு சாலை ஓரம்
சாலை ஓரம் பரத்திய அழுக்குத்துணி
அழுக்குத் துணியில் ஆயிரம் ஓட்டை
ஓட்டைகளிடையே சில்லறைக்காசு
காசுக்கிடையில் ஓர் வெள்ளிப்பணம்
அதற்கு சொந்தக்காரன் ஒரு யாசகன்.

யாசகன் :

ஆகாசத்தில் ஒரு நீலவானம்
நீலவானத்தில் அழுக்கு மேகம்
மேகத்திடையில் ஆயிரம் விண்மீன்
மீன்களிடையில் ஒரேநிலவு
அதற்குச் சொந்தக்காரன் கடவுள் !

தமிழ் சிறுகதை 10

சி.சு. செல்லப்பா

சிறுகதைமணிக்கொடி மூன்றாவது ஏட்டில் (28.4.1935) கு.ப. ராஜகோபாலனின் 'சிறுகதை' என்ற கதை வெளிவந்தாலும் அதுக்கு முன்பே கு.ப.ரா 'சுதந்திரச்சங்கு' வாரப் பதிப்பு பத்திரிகையில் மூன்று கதைகள் எழுதி இருக்கிறார். குடும்ப சுகம் (23.3.1934) நூர் உன்னிஸா (30.3.1934) தாயாரின் திருப்தி (13.3.1934) ஆகியவை. நான் ஒரு தவறு செய்து விட்டேன். 1935ல் வெளிவந்த சிறு கதை மணிக்கொடி முதல் ஏட்டில் வெளியான என் கதை 'ஸரஸாவின் பொம்மை' கதையை ஆராயுமுன், அதாவது பிச்சமூர்த்தியின் 'முள்ளும் ரோஜாவும்' கதையை பார்த்தபோதே, கு.ப.ரா. வையும் பார்த்திருக்க வேண்டும்.

கு.ப.ரா.வை அவரது 'நூர் உன்னிஸாவை' வைத்துத்தான் பார்க்கவேண்டும். அது 'சுதந்திரச்சங்கு'வில் இரண்டாவதாக வெளிவந்தாலும் அதுதான் முதலில் அவர் எழுதிய கதை. 'குடும்ப சுகம்' பின்னால்தான் எழுதியது என்பது பிச்சமூர்த்தி கொடுத்த தகவல். ஆகவே நூர் உன்னிஸா சிறுகதைக்கு என்ன பங்கு செலுத்தியது என்று பார்ப்போம். குளத்தங்கரை அரசமரம், என்னை மன்னித்து மறந்து விடு, மலரும் மணமும், ஊமச்சி காதல், கேதாரியின் தயாரர், முள்ளும் ரோஜாவும், தபால்கார அப்துல் காதர் ஆகிய இதுக்கு முன் நாம் பார்த்த கதைக்குப்பின்வந்த கதை நூர் உன்னிஸா.

இதுதான் முதல் காதல் கதை என்றுநான் கருதுகிறேன். அதாவது மணமாகாத இருவரின் உறவு சம்பந்தப்பட்டது. 'மலரும் மணமும்' 'முள்ளும் ரோஜாவும்' விஷயம் வேறு. மணமான நிலையில் ஆசை வெறியில் ஏற்பட்ட பின்விளை வுகள் பற்றியது. 'ஊமச்சி காதல்' தமாஷானது என்று ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். மற்ற கதைகள் பிரச்னைகள் வேறானவை. ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பமாக வாழ்க்கையைத் தொடர மணமுறை ஒரு சமுதாய நியதியாக

கைக்கொள்ளப் பட்டு வருகிற நிலையில், அந்த வாழ்க்கை சக்கரம் சரியாக சுழல பெரியோர் பெற்றோர், குணம் தரம் பார்த்து,அறிவு பூர்வமாக அந்த உறவை நிர்ணயிக்கும்நடைமுறை இருந்து வருகிறது. அதிலிருந்து வேறுபட்டு ஆணும் பெண்ணும் தாமே குணம் பார்த்து தரம் பார்த்து, பரஸ்பரம் அறிந்து உணர்ச்சி பூர்வமாக மனம் கொடுத்து தங்கள் வாழ்க்கைத்துணைகளை தேர்ந்தெடுத்து குடும்ப அமைவது இன்னொரு நடைமுறை. முன்னதுக்கு பெற்றோர் பொறுப்பு; பின்னதுக்கு தாங்களே பொறுப்பு. பின்னதை காதல் அடிப்படையில் ஏற்பட்ட உறவு என்கிறோம். பழைய புராண, சரித்திர, இலக்கியத் துறைகளில் இதுக்கு இடம் இருந்திருப்பது தெரியும் ஆனாலும், தற்கால சமூக வாழ்வில் அதுக்கு இடம் பொருட்படுத்தத் தக்கதாக இருந்து வரவில்லை. இன்று வரையிலும் கூட அது பேசும் படியாக பாதிப்பு விளைவித்திருப்பதாகவும் சொல்வதுக்கில்லை.

இந்த நிலைமையில் நூர் உன்னிஸா வெளி வந்தது. நூர் உன்னிஸாவில் ''டீன் ஏஜ்' என்கிற வளர்பருவ மயக்கம், அது நீடித்து வளர்ந்து உக்ரமாகி தாங்கள் பகுத்தறிந்து உணர்ந்த ஒரு உணர்ச்சித் தீவிரம், அதன் பயனாக அவர்கள் உறவிலே ஏற்பட்ட முடிவு ஆகியவை சேர்ந்து ஒரு சுத்தமான காதல் கதை உருவாகி இருக்கிறது. இதிலே ஏற்பட்ட சிக்கலும் புதுவிதமானது அன்றைக்கு, இந்த கதையின் உள்ளடக்கத்தை நான் சொல்வதைவிட கதையின் முடிவில் வரும் கடிதமே கலைப்பாங்குடன் சொல்லிவிடுகிறது:–

'இக்கடிதத்தை என் வாக்காவும் அடையாளமாகவும்நீ வைத்துக் கொள்ளலாம். நாம் திருச்சியில் சிறு குழந்தைகளாக விளையாடியபோது என் மனதில் உன்னிடம் ஏற்பட்ட பற்று என்னை விட்டு இன்னும் அகலவில்லை ஏனென்றால் ஸதா உன் உருவம் சிலைபோல என் முன் நிற்கிறது. நித்திய இளமையோடு உன்னுடன் விளையாடுவது போலவே கனவு காண்கிறேன். உன்னை மற்றொரு முறை இவ்வுயிரில் பார்க்க வேண்டுமென்ற அவாவும் நிறைவேறி விட்டது. இனி என் நாட்களை பூர்வம் ஜெபுன்னி ஸாவைப் போல கழிக்கப் போகிறேன். தாயாரிடம்நீ கலியாண மில்லையென்று சொன்னது எனக்கு திருப்தியைக் கொடுத்தது. இ னி மேல் நீ இன்னுமொரு ஸ்திரீயுடன் பேசாது உன் வாழ் நாட்களை என் மனத்தோடு மட்டும் லயிக்கச் செய்துகழிப்பாயானால் நானும் சோர்வின்றி வாழ்வேன். அப்படியே செய்கிறேனென்று நீ

எனக்குப்பதில் எழுத வேண்டாம். நீ செய்வாயென்று எனக்கொரு தீவிர நம்பிக்கை இருக்கிறது. அதே என் உயிர்நாடி, நான் மெய்மறந்து உன்னையே நினைக்கிறேன், ஆனால் நாமிருவரும் இவ்வுடலில் ஸதிபதிகளல்ல. சரீர இச்சை வேண்டாம். பூர்ணமாக என் ஆகாசத்தில் ஜொலிக்கும் சுகச்சந்திரனுக்குக் களங்கமுண்டாக்காதிரு, சரிதானே?

இப்படிக்கு
நூர் உன்னிஸா

கதாநாயகன் சொல்வதாக அமைந்தகதைமுடிவில் வரும் வரிகள் இவை:

'என் மனமோகினியின் கட்டளைப்படி நான் உலக வழிகளில்திரிந்து வருகிறேன். நான் செய்யும் காரியங்களிலும் நான் நினைத்த மாத்திரத்தில் என் முன் தங்கப்பதுமை போல வந்து நின்று என்னை உத்ஸாகப் படுத்துகிறாள். என் சோர்விலும் என் மனதின் முன் குதித்துக் கொண்டு வந்து என்னை ஆற்றுகிறாள்.

லைலா மஜ்நூன், ஷெரீன் பர்ஹாத், ரோமியோ ஜூலியட் கதைகள் நமக்குத் தெரியும். இளம்பருவ காதல்நிறைவேறாமல் மனம் முறிந்து சோககரமாக வாழ்க்கை முடிவுகள் அவர்கள் உறவில். அது மாதிரி முடிந்திருக்க வேண்டிய ஒரு சம்பவம்தான் இதுவும், முதலில் காதலுக்கு இடம் இல்லாத காலம். இரண்டாவது, முன் சொன்னவர்களிடையே அந்தஸ்து வித்யாசம். குடும்ப விரோதம் இவை அவர்கள் உறவுக்கு தடையாக நிர்ணயிக்க, இங்கே ஜாதிக்கும் மேலாக மதம் இடையே சுவர் எழுப்பிய நிலை. நடப்பு ரீதியாக பார்த்தால் சாத்தியமே இல்லாதது அன்றைக்கு.

அவர்களின் காதல் சாத்யமாகாதது இருக்கட்டும். அத்தகைய காதல் ஏற்படுவதுக்கான பகைப்புலமே ஏற்பட வழி இல்லாத காலம் என்றும் சொல்வேன். சமுதாயக் கட்டுப்பாடுகள் அவ்வளவு அமுக்கின சந்தர்ப்பம். விதிவிலக்குகள் இருந்ததா என்பதுகூட எனக்கு சந்தேகம் தான். கேள்விதான். 'மலரும் மணமும்' பிரச்னைக்கே களம் இல்லாத போது 'நூர் உன்னிஸா' பிரச்னைக்கா வாய்ப்பு? ராமையா, பிச்சமூர்த்திக்கு மேலே ஒரு படி போய்விட்டார் கு.ப.ரா. தன் கதைக்கு விஷயம் கரு தேர்ந்தெடுப்பதில், கலைஞன் பார்வையிலே கோணங்கள் மதிப்புகள், உணர்ச்சிகள் காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்ப மாறி வருவதையும் விரிவடைவதையும் நாம் பார்க்கிறோம்.

கு.ப.ரா. கதையில் கோணம் மாறுதல் குறிப்பிடத்தக்கது. காதல் வழி மணம் என்றால், அதுவும் பெற்றோருக்கு பிடிக்காத, சமூகம் விரும்பாததாக இருந்து விட்டால், அதில் தோல்வியுற்று மனமுறிந்து காதலர்கள் தங்களை அழித்துக் கொள்வது அல்லது பிறரால் அழிக்கப்படுவது (அனார்கலி விஷயம்) நடந்து வாழ்வு முடிவது தான் கையாளப் பட்டிருக்கிறது. துஷ்யந்தன் சகுந்தலை காதல்கூட வேறு விதமான, ஒரு தரப்பின் குற்றத்தால் துக்ககரமாக ஆகிவிடுகிறது. ஆனால் கு.ப.ரா. இந்த பழசாகிவிட்ட கோணங்களிலிருந்து தன் பார்வையை திருப்பி புதுக்கோணத்தில் பார்க்கிறார். மேலே குறிப்பிட்ட கடிதம் அதை நிரூபிக்கிறது சிறுவயதில் ஏற்பட்ட பற்று, அவனை பனிரெண்டு வருஷங்களாக பார்க்க விட்டாலும் அவனைப்பற்றி எதுவும் தெரியாவிட்டாலும், வளர்ந்து அவன் நினைவாகவே கனவாகவே என்றோ ஒரு நாள் மற்றொருமுறை பார்த்தாலே போதும் என்று எதிர்பார்த்து வாழ்ந்து அந்த கணம் கிடைத்ததும் அதாவது பின் அண்ணன் கல்யாணத்தன்று அவனை சந்திக்கும் சில விநாடி வாய்ப்புக்குப்பின் தன் மனநிறைவைப் பெற்று தன் காதலின் பரிசை பெற்றுவிட்ட திருப்தியுடன் தன் மீதி வாழ் நாளை கழிக்க முடிவு செய்து 'சோர்வின்றி வாழ்வேன்' என்று தன் காதலனிடம் சொல்லும் அளவுக்கு அவள் என்ன மனதிடம் கொள்கிறாள்! அது மட்டும் இல்லை. அவனுக்கும் ஆணையிடுகிறாள், அவனும் தன்மனதோடு மட்டும் லயிக்கச் செய்யும் படியும் தன் லட்சியத்துக்கு மாசு ஏற்படாதபடி நடந்து கொள்ளும் படியும். அவனும் அந்த ஆணையின்படி நடந்து வாழ்ந்து சோர்வு இன்றி மனிநிறைவில் வாழ்கிறான்.

இந்த பார்வை சிறுகதை இலக்கியத்தில் புதியது. புரட்சிகரமானது. இது யதார்த்தமானதா என்று இந்தக் காலத்தில் கேள்வி கேட்கக்கூடும. அசட்டுக் கேள்வி, காதல் என்பதின் புனிதம் தெரியாமல் காமத்தை எடுத்துக் கொண்டு பால் உணர்ச்சி வெளியீட்டுப்படைப்புகள் இன்றுமிஷன் உற்பத்தியாக வெளிவருகிற காலகாட்டத்தில், வேறு எப்படி இருக்கும் கேள்விகள்? காதலின் பரிசுத்தம், பரிசுத்தமான காதல் எந்த அளவுக்கு உயர்த்தக்கூடும் என்பதுக்கு இந்த கோணம் நிரூபணம்.

மதிப்பை எடுத்துக்கொண்டாலும், 'நாமிருவரும் இவ்வுடலில் சதிபதிகளல்ல. சரீர இச்சை வேண்டாம்' என்கிற போது, தாம்பத்ய வாழ்க்கையில் உடலுறவுக்கு 'சரீர இச்சை' என்பதற்கு எவ்வளவு புறக்கணிக்கத்தக்க, குறைந்தபட்ச இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. இதுவும்இன்று 'பிளேடானிக்' காதலா, புலன்களுக்கு உரியதாக இல்லாத, ஆத்மார்த்தமான காதலா என்று இடக்கான கேள்விக்கு உரியதுதான். சதையுணர்ச்சிக்கு மிதமிஞ்சிய மதிப்பு கொடுத்து, ஆண் பெண் உறவு அதையே வைத்துத்தான் என்று கீழ்த்தரமான காமவேட்கை ஒரு கடைக்கோடியிலே படைப்பில் சித்தரித்துக் காட்டப்படுக்கையில் மறு கோடியிலேஅதுக்கு எதிராக சரீர ஸ்பரிசமே இல்லாமல் தாம்பத்ய உறவு இருக்க வேண்டும் என்பதுக்காகவலி யுறுத்தப்படுவது இது என்று ஆகாது. கு.ப.ரா.வே. பின்னால் ஒரு கட்டுரையில் ('சதைப்பற்றற்ற காதல்' பாரத தேவி 30.7.1939) 'சதை என்ற சேற்றில் முழுக அல்ல, அதற்கு மேலே போய் தாமரையைப் போலத் தலையெடுத்து நிறக, இரவும் பகலும் போலவும் துக்கமும் சுகமும் போலவும் வேற்றுமை கொண்டிருக்கும் ஸ்திரீ புருஷ சுபாவங்களை ஒன்றாக்க' என்றும் 'உடற்சேர்க்கையைவிட மனச்சேர்க்கையே புனித உள்ளங்களுக்கு அதேபெருத்த கலவி இன்பத்தைக் தரும்' என்றும் 'அருகாமைகூட காதலுக்குத் தேவையில்லை. பிரிவாற்றாமையில் காதல் வளர்கிறது, விரகே பிரேம ராசி பவதீ' என்று காளிதாஸன் கூடச் சொல்லி இருக்கிறார்' என்றும் குறிப்பிட்டிருக்கிற மாதிரி சீக்கிரமே அழியக்கூடிய அலுக்கக்கூடிய ஒரு உறவுக்கும் அப்பால் நீடித்து நிலைக்கும் ஒரு உறவு இருக்கக்கூடும் என்பதை இந்த சிறுகதை தத்துவ மதிப்பாக வைத்திருக்கிறார் கு.ப.ரா.

'மலரும்மணமும்' கதையில்விதவைப் பெண் செல்வம் ராமதாஸை நேருக்கு நேர் காண தினம் மெய்மறந்து நிற்பதும் 'முள்ளும் ரோஜாவும்' கதையில் உடலழகு என்னும் பொய்ப்படுதா கமலம கண்களை மறைத்து கணவனின்ஆத்ம வனப்பை அறியாமல் செய்து விட்டதும் இரண்டும் உடல் இச்சையை முன்வைத்து நின்ற பாத்திரச் சித்தரிப்புகள். கு.ப.ரா. நோக்கு இந்த கதைமூலம்உடல் இச்சை திருப்தி சாத்யமாகாத நிலையிலும் உறவை காப்பாற்றிக் கொண்டு வாழ்க்கையை நிறைவான தாக்கிக் கொள்ள முடியும் என்பது.

மூன்றாவதாக உணர்ச்சி. தங்கள் லட்சியம் ஈடேற இயலாத நிலையில் உணர்ச்சி வசப்பட்டு தங்களை அசட்டு அபிமான உணர்ச்சியால் அழித்துக் கொள்ளாமல் அறிவைக் கொண்டு உணர்ச்சியை சமனப்படுத்தி சுத்தப்படுத்தி தங்கள் வாழ்க்கையை வேறு பயனுள்ள காரியங்களுக்கு பயன் படுத்துகிறார்கள் இருவரும். அதே சமயம், நித்திய இளமையோடு தங்கள் உறவு நீடிப்பதான நம்பிக்கையால்தான் மனிதன் வாழ்கிறான் என்கிறதானால் காதலிலும் அதில் தோல்வி கண்டாலும் அது சாத்தியம் என்பதுஇந்த கதையில் தெரிவது.

எனவே நூர் உன்னிஸா அன்று சிறுகதையில் ஒருபுதுக் கதவை திறந்ததும், இதைப்பற்றி எல்லோரும் பேசிக் கொண்டோம். அவருடைய 'விடியுமா' கதை வெளிவரும் வரை இந்தக் கதை எனக்கு அபிமானக்கதை . நடுவில் காதலே சாதல், வீரம்மாளின் காளை போன்ற அவர் கதைகளை படித்து ரசித்த போதும். இன்றும் அது அப்பழுக்கு இல்லாத கதையாகவே நான் கருதுகிறேன். எழுதி உள்ள விதம் ரொம்ப சிறப்பானது. ஆரம்பமே நல்ல பிகு. முடியும் போதும் அதே தொனியில், இடையில் நெகிழ்ச்சி தளர்ச்சி கிடையாது. ஏற்றப்பட்ட நாணின் விடைப்பு. கதாபாத்திரமே சொல்கிற பாணி. சிறுகடிதத்துடன் ஆரம்பம் சிறுகடிதத்துடன் முடிப்பு. சிக்கனமாக சொல் உபயோகம். அழுத்தமான உணர்த்தல் உதாரணம்;

என் மனதில் தோன்றித் தோன்றி என்னை மயக்கிய பெண்ணுரு யாருடையது என்று தவித்தேனே– அப்பா, அது நூருன்னிஸா வினுடையதே. ஒரு சிறுமியின் முக்காடிட்ட குற்றமற்ற முகம், அதில் மைதீட்டிய இமைகளிடையே குரு குரு என்று சஞ்சலித்த இரண்டு குறை கூறும் விழிகள், ரோஜாக்களிடையே மல்லிகை போல கீழிதழைச் சற்றே கடித்து வெளியே தோன்றின பல்வரிசை – இத்தகைய உருவம் மோகினி போல் என் மனதில் குடிகொண்டு ஆட்டிவைத்ததே – அது அவளுடையது. அவளுடைய மனநிலையும் என்னுடைய மனநிலையை ஒத்திருக்கக்கூடுமா என்ன! இல்லா விட்டால் இக்கடிதத்துக்கு ஏன் காரணமாகிறாள்! கூட்டத்தில் திரியும் என்னைக் குறித்தல்லவோ கூப்பிடுவது போலிருக்கிறது!

'என் ஹிருதய நிலைமையை அவள் அறிவாளோ? முடியாது. பூவின் அவா மணமாக வெளியேறித் தாக்குகிறது' நினைவில் புறப்படும் அலை எப்படி அவள் இருதயக் கரையில் போய் மோத முடியும்' ஸாத்தியமில்லை...அக்கடிதத்தில் தன் சகோதரனைக் கருவியாகக் கொண்டு என்னையேனிங்கு வர வழைத்தாள்? என்னிடத்தில் அவளுக்கோர் – அதெப்படி நான் சொல்வது?'

உணர்ச்சி சித்தரிப்பில் கு.ப.ரா. பின்னால் சிறப்பான வெளியீடு காட்டி இருப்பதுக்கு நல்ல சூசனை இந்தக் கதையில் தெரிகிறது. சம்ஸ்கிருத இலக்கியங்களில் நல்ல உள்ள அவரது நடையில் அந்த பரிச்சயம் மொழிச் சொற்கள் தக்க இடங்களில் பொருத்தமாக பயனாகி வ.வெ.சு. அய்யர், சங்கு சுப்ரமண்யன் நடை போல் ஒரு கம்பீரம் அமைந்த தாக இருக்கும். அவரது நடையில் கவிதைப் பாங்கும் தொனிக்கும், 'மலரும் மணமும்' போல் சோகமாகவும் 'முள்ளும் ரோஜாவும்' போல் இன்பமாகவும் முடியாமல், நெடுகிலும் அநுபவிக்கும் வேதனையை தள்ளிக் கொடுத்து அந்த வேதனையையும் இன்பக் கனவுகளாக தம் இச்சா சக்தியால் மாற்றும்முயற்சியில் ஈடுபட்ட இரு உள்ளங்களில் போராட்டத்தை வெளியிடும் முடிவாக இருக்கிறது. ஒரு சுத்த கலைஞனின் சுத்தமான படைப்பான இந்த கதையை நான் இன்றும் முன் போலவே ரசிக்க முடிகிறது. இதுக்குப் பின் கு.ப.ரா., வாழ்க்கையில், குடும்பத்தின், ஆண் பெண் உறவின் சிக்கல்களை போராட்டங்களை பிரச்னைகளை வைத்து பல கதைகளை எழுதி இருக்கிறார், அவரை சிறந்த சிறுகதை ஆசிரியர்களில் ஒருவராக ஆக்கத்தக்க திறமை இந்த கதையிலேயே வெளித் தெரிகிறது.

மணிக்கொடியில் முதல் சிறுகதையான 'சிறுகதை' வருமுன் வ.ரா. மணிக்கொடியின் கட்டுரைகள் 'கருவளையும் கையும்' என்ற தலைப்பில் கவிதைகள்,. பூரூரவஸ், ஊர்வசி ஆகிய புராண பாத்திரங்களைதன் கற்பனையில் புதுசு படுத்திய சித்தரிப்புகள் எழுதி இருந்தாலும் இந்த கதை தான் அவரை எடுத்துக் காட்டியது. கதைக்குள் கதையாக அமையும்உத்தி முறை ராமையாவின் 'வார்ப்படம்' கதையில் கையாளப்பட்டது போன்ற ஒரு புதுவிதமானது ஆகும்.

சிறுகதை மணிக்கொடியில் 'ஸரஸாவின் பொம்மை' என்ற கதையோடு பேசபட்ட இன்னொரு கதை 'வேதாளம் சொன்ன கதை' என்று சங்கு சுப்ரஹ்மண்யன் எழுதிய கதையாகும். 'எழுத்து' சங்கு சுப்ரமண்யன் நினைவு ஏட்டில் (ஏப்ரல்1969) அதை கதை வெளியிடப்பட்டிருக்கிறது. பாரதி,வ.வெ.சு. அய்யர் இருவரின் நேரடி தரிசனமும் ஆதர்சமும் பெற்ற அவர், அதுக்கு முன்பே சுதந்திரச் சங்கு, சுவராஜ்யா பத்திரிக்கைகளில் கதைகள் எழுதி இருக்கிறார். சென்ற ஏட்டில் வெளியான 'ரோஜாவின் அவதாரம்' கதை 1933ல் சுவராஜ்யா' என்ற பத்திரிகையில் வெளி ஆகி இருக்கிறது.

இந்த 'ரோஜாவின் அவதாரம்' கதையும் 'வேதாளம் சொன்ன கதை'யும் நாம் இதுவரை பார்த்த கதைகளிலிருந்து மாறுபட்டு இருப்பதை உணரலாம். 'ரோஜாவின் அவதாரம்' கதையை வ.வெ.சு. அய்யரின்'எதிரொலியாள்' கதை ரீதியை தழுவி எழுதி இருப்பதாக அவரே எழுதி இருக்கிறார். ரோஜாவின் அவதாரம்' கச்சிதமான கதை. அழகிய, மணமுள்ள, மென்மையுள்ள, வண்ண புஷ்பமான ரோஜாவின் காம்புகளில் முட்கள் இருக்கும் ஒரு இயற்கைப் போக்கில் ஒரு முரண்பாட்டை உணர்ந்த நினைப்பில்எழுந்த கற்பனைக் கதை. அந்த முரண்பாட்டுக்கு பொருள் காண, நியாயம் காட்ட மனித வாழ்விலிருந்தே சுபாவத்திலிருந்தே நடத்தையி லிருந்தே ஒரு தன்மையை எடுத்துக் கொண்டு, ஒரு போராட்டத்தை கற்பனையில் எழுப்பி ஒரு மதிப்பு ஏற்றி இருக்கிறார். அழகு ரசிக்க வேண்டிய அம்சம். ஆனால் அழகை ரசிக்கும் சாக்கில் குலைப்பதில் தான் மனிதன் ஈடுபடுகிறான். உடல் அழகை எதுக்காக தான் விரும்பிப் பெற்றாளோ ரோஷாந்தா அதுக்கு மாறாக, அதை பயன்படுத்தும் முயற்சி– அவள் எதிர்பார்க்காமல் – செய்யப்படவும் அவள் அதிர்ந்து போகிறாள். புதுமைப்பித்தனின் சில்பியின் நரகம்கதையில் கூத்தனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி ஏற்படுகிறது ரோஷாந்தாவுக்கு. கூத்தனுக்காவது அவன் படைத்த பொருளுக்கு வந்த ஆபத்து லட்சிய நாசம். ரோஷாந்தாவுக்கோ அவளுக்கே வரும் அழிவு. ஆத்ம நாசம்.

இந்த வாழ்க்கைப் பார்வையை அற்புதமான கற்பனையில் ஒரு நல்ல கதையாக ஆக்கி இருப்பது சங்கு சுப்ரமண்யன் திறமை. இது

ஒரு ரூபகாலங்காரமான, உவமை வழியான, உருவகக்கதை என்று சொல்லலாம். இந்த கதை புனைவியல் போக்கான அதிசயோக்தியான அமானுஷ்யமான பகைப்புலம், களம் கொண்டிருந்தாலும் கதை உள்ளடக்கத்தின் சுபாவம் இயற்கையானதும் யதார்த்த மானதாகவும் இருக்கிறது. மனிதவாழ்வின், மனப்போக்கின் பரப்புக்கு உட்பட்ட இயல்புக்கு ஒத்த சித்தரிப்பாக இருக்கிறது. இதே போல 'வேதாளம் சொன்ன கதை'யும் கிழவன் சிறுமியை மணந்து கொள்ளும் சமூக அநீதியை விஷயமாக வைத்து எழுதி இருக்கும் கதை. சமூக சீர்திருத்தவாதிகளின் மனதில், அன்று உறுத்திக்கொண்டிருந்த அந்த பிரச்னையை வைத்து எழுதப்பட்ட முதல் சிறுகதை இதுதான் என்று நான் நினைக்கிறேன். சமூகத்தின் பல குறைகளை வைத்து கதைகள் எழுதியுள்ள மாதவையாவின் ரசிகர் குட்டிக் கதைகளில் இது பற்றிய கதை இல்லை. வ.வெ.சு. அய்யரும் தொடவில்லை.

இந்த கதையில் சங்கு உத்தி புதிதாக கையாண் டிருக்கிறார். மனிதரை கதாபாத்திரங்களாக கொள்ளாமல் மரங்களை தேர்ந்தெடுத்திருக்கிறார். குழந்தை இல்லாதவர்கள் அரச மரத்துக்கு வேப்பமரத்தை கல்யாணம் செய்து வைத்தால் குழந்தைபிறக்கும் என்பது ஒருநம்பிக்கை. இதைவைத்துக் கொண்டு ஒரு நெடுநாளான பழய அரச மரத்துக்கும் இளம் வேப்பங்கன்றுக்கும் முடிந்து போட்டு இரண்டுக்கும் மனித உள்ளங்களை கொடுத்து, கிழ அரசு பக்கத்தில் சிறுமி வேம்பு நிற்க உறவு ஏற்படுத்தி வேம்புவின் சோக வாழ்வு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது கதையில். 'குளத்தங்கரை அரசமரம் உயிர்கொண்டு பேசியது போலே இந்த இரு மரங்களும் மனித உணர்ச்சிகளை வெளிக் காட்டுகின்றன. கிழ அரசு சீக்கிரமே இறக்க (புயலால் விழுந்துவிட) இளம்வேம்பு வளர்ந்து விதவையாக தன் மீதி நாட்களை கழிக்கிறாள்.'

இநத கதையில் கிழவன்– குமரி உறவு அநீதி மட்டுமின்றி பால்ய விதவை்ப் கொடுமையும் சேர்ந்து எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

கதையை சொல்ல கதாசிரியர் கையாண்டுள்ள உத்தியும் புது விதமானது. குளத்தங்கரை ஓரமாக இருந்த ஒருதனி வேப்பமரத்தை பார்த்ததில் வளர்ந்த கற்பனையில் குளத்தங்கரை அரசமரம் சொல்வது போல் எழுதலாம். கனவில் வேப்பமரம் சொல்வது போல சொல்லலாம். ஆனால் இங்கே அதிசயோக்தி, அமானுஷ்ய காலத்து

பின்னணியை எடுத்துக் கொள்கிறார். வேப்பமரமும் அரசமரமும் பேசும் போது, பிள்ளையார் தோன்றி மார்க்கம் காட்டும்போது வேதாளம் இருந்த காலத்துக்கு போவதோ அல்லது விக்ரமாதித்த கால வேதாளத்தை இன்று கொண்டு வருவதோ பொருத்தம்தானே. அந்த வேதாளம் பல நூற்றாண்டுகள் கழித்து விக்ரமாதித்தனையும் உஜ்ஜயினியையும் பார்க்க வந்து, முடியாமல் தமிழ்நாட்டில் ஒரு ஊர் முருங்கமரத்தில் குடி இருக்கையில் வேதாளத்தின் பாஷை தெரிந்த ஒரு சாமியார் வர அவரிடம் சொன்ன கதைகளில் ஒன்றாக வாய்வழி வந்த கதையாக அறிமுகப் படுத்தப்படுகிறது.

வேதாளம் சொன்ன கதை இன்னும் இரண்டு சங்கு சுப்ரமண்யன் மணிக்கொடியில் எழுதினார். இந்த 'வேதாளம் சொன்ன கதை' உத்தியும் அதன் கருவும் அன்று புதுவிதமானது தான். சங்கு சுப்ரமண்யத்தின் இந்த இரண்டு கதைகளையும் நான் படித்ததில் எனக்கு பட்டது, சிறுகதை உருவம் கையாளத்தெரிந்த ஒரு கலைஞன் என்பதுடன் 'உயர்ந்த நோக்கத்தோடு எழுதுகிறோமா என்று பேனாக்காரர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும்' என்று அவரே சொல்லி இருப்பது போல் அந்த நோக்கத்துடன் எழுதி இருப்பவர் என்பதும் தான்.

இவரது தமிழ் நடை வ.வெ.சு. அய்யர் வழிப்பட்டதாகும். அதாவது சம்ஸ்கிருத சொற்கள் பயன்படுத்தப்பட்டகம்பீரமான நடை. அரசியல் எழுத்துக்கு அவர் உபயோகித்த நடையில் உள்ள வேகத்துக்கும் அழுத்தத்துக்கும் மாறாக கதைகளில் வர்ணனைக்கு உபயோகித்தது நளினமான நடை. அவருடைய நடைக்கும் வர்ணனைக்கும் இரண்டொரு உதாரணங்கள்.

'அந்த நிலவின் அவாங்கமயமான ஒளியில் பிரகிருதி தேவியின் இன்ப வெள்ளத்தில் ஸ்ரீதியானாதேவியின் எதிரே ரோஷந்தா நின்றிருந்தாள்.'

'உயிரை உடலிலிருந்து பிரிப்பது பழத்தைத் தோலினின்று விலக்குவது போன்ற சாதாரணச் செய்கையென அவன் நினைத்திருந்தான். செய்கைகளும் எண்ணங்களுக்கும் தகுந்தவாறே மனிதனின் உருவம் மாறுவது வழக்கம் என்பார்கள். அதனால் அந்தக் கொலையாளியின் கட்டமைந்த தேகம் நாளுக்கு நாள் மாறுதலடைந்து உலகத்திலுலாவும் பூதம் போன்ற உருவத்தை அடைந்து விட்டது. (ரோஜாவின் அவதாரம்)

வேம்பு நல்ல அழகி, அந்த ஜ தியிலேயே அவ்வளவு அழகாக யாரும் இருந்ததில்லை. இன்னும் அவள் பூப்பூக்கவில்லை. தங்கம் தங்கமான இலைகளையும் செக்கச்செவேலென்ற கொழுந்துகளையும் அணிந்திருந்தாள். அவள் சூரியன் ஒளியிலும் சந்திரன் நிலவிலும் களித்தாடும் போது வெகு அழகாகயிருக்கும் வாய்க்காலருகே வேம்பு வளர்ந்திருந்தாள்.

'அன்றைக்கிருந்து வேம்புவின் அழகு தேயத் தொடங்கியது. கிழவனை அவள் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. அவன் என்ன என்ன பேசினாலும் கேட்பதில்லை. பசேலென்றும் செவேலென்றும் இருந்த அவள் பட்டாடைகள் கருகத் தொடங்கின. தன்னை அழகு செய்து கொள்ள விரும்பவில்லை. ஆனால் இயற்கை சும்மா இருக்குமா? ஒரு மாதத்தில் அவள் உடம்பில் சின்னச் சின்ன புஷ்பங்கள் அரும்பின. அழகாயிருக்க, முறுவல் காட்டுவது போலிருக்க வேம்பு விரும்பவில்லை. புஷ்பங்களை, எல்லாம் உலுக்கி உதிர்த்து விட்டாள்.'

ஆக, சங்குவின் வேதாளம் சொன்னகதை -1 இன்று படிக்கிற போதும் உணர்ச்சிகளை தூய்மைப்படுத்தி உளப்பாங்கை சரியாக வெளிக்காட்டும் தன்மை அடங்கியதாக முன்போலவே படித்து ரசிக்கத்தக்கதாக இருக்கிறது.

3

இந்த கதையை படித்து விட்டு 'மணிக் கொடியில்'யில் நகர்கிறபோது அடுத்து நான் சந்திக்கும் குறிப்பாக சிறுகதாசிரியர் ந.சிதம்பரசுப்பிரமண்யன். நாம் இதுவரை பார்த்த மணிக்கொடியில் சிறுகதைகள் எழுதிய பி.எஸ். ராமையா, ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, கு.ப.ராஜ கோபாலன், புதுமைப்பித்தன், பெ.கோ. சுந்தரராஜன் ஆகியோருக்கும் சிதம்பர சுப்ரமண்யனுக்கும் ஒரு முக்யமான வித்யாசம் உண்டு. மற்றவர்கள் எல்லோரும் வேறு வேறு பத்திரிகைகளில் கதைகள் எழுதி விட்டு சிறுகதை மணிக்கொடிக்கு வந்தவர்கள். சிதம்பர சுப்ரமண்யன் சிறுகதை மணிக்கொடியிலேயே பூத்தவர். சுத்த மணிக்கொடிக்காரர் என்று அவரைத்தான் சொல்ல வேண்டும். சிறுகதை மணிக்கொடி ஐந்தாவது ஏட்டில் (26 மே 1935) 'வாழ்க்கை முடிவு' என்ற அவரது முதல் கதை வெளிவந்தது.

அவரது இந்த முதல் சிறுகதையை எடுத்துக்கொண்டு சிறுகதை இலக்கியத்துக்கு அது அளித்த பங்கை பார்ப்பதா என்று வருகிற போது எனக்கு அது சரியா என்று சந்தேகம் ஏற்படுகிறது. இதுவரை இந்த கட்டுரைத் தொடரில் குறிப்பிட்ட கதாசிரியர்களில் ஒரு சிலரது முதல் கதையை வைத்தும் மற்றவரது பின் கதைகளை வைத்தும் பார்க்கப்பட்டிருக்கிறது. அதாவது எந்த கதை பங்கு செலுத்தியதாக கருதமுடிகிறதோ அந்த கதைகளே எடுத்துக்கொள்ளப்பட்டது. அதே போலத்தான் சிதம்பர சுப்ரமண்யன் சம்பந்தமாகவும் முறை கையாள உத்தேசம்.

சிறுகதை மணிக்கொடிக்கு வந்தவர்களுக்கு ஏற்கெனவே வேறு பத்திரிகைகளில் கதைகள் எழுதி கைப்பழக்கம் ஏற்பட்டிருந்தது. முன்னரே கிடைத்த வாய்ப்பு, சிறுகதைக் கலை சம்பந்தப்பட்ட நுட்ப விவரங்களை அறிய எழுதிய கதைகளின் குறை நிறைகளை தன் அனுபவத்தில் தெரிந்து கொண்டு மணிக்கொடிக்கு வருகிறபோது கொஞ்சம் எழுத்து சாமர்த்தியம், சாதுர்யம் வாய்ந்தவர்களாக இருக்க சாத்யமாக்கி இருந்தது. அதனால் குறிப்பிடும்படியான கதைகளை அதில் அவர்கள் எழுத முடிய, நாம் பார்க்க முடிந்தது உடனேயே. ஆனால் சிதம்பர சுப்ரமண்யன் மணிக்கொடியிலேயே பிறந்து நடை பழக வேண்டி இருந்தது. 'வாழ்க்கை முடிவு' முதல் ஏழு கதைகளுக்குப் பின் வந்த எட்டாவது கதையான 'வேலையும் விவாகமும்' (13.11.1937) கதையையே நான் இங்கு எடுத்துக்கொள்கிறேன். சிதம்பர சுப்ரமண்யன் தன் முதல் சிறு கதை தொகுப்பு 'சக்ரவாகம்' முக்கு கதைகளை தேர்ந்தெடுக்கையில் இந்த எட்டுக் கதைகளில் மேலே குறிப்பிட்ட கதையும், இன்னும் ஒன்று, ஆக இரண்டு மட்டுமே சேர்த்திருக்கிறார். அந்த மற்ற கதைகள் தான் நடை பழகிய கதைகள் என்று அவர் மதித்திருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன்.

சிதம்பர சுப்ரமண்யன் மணிக்கொடியில் நடை பழகினாலும் பிறந்த இட விசேஷத்தாலும் உலகவெளி மொழிக்கதை பரிச்சயத்தாலும் ஆரம்பத்திலிருந்தே சிறுகதைக் கலை அவருக்கு பிடிபட்டிருப்பது இந்த ஆரம்பக் கதைகளிலேயே தெரிகிறது. உத்தி நடை இவைகளில் தான் மெருகு ஏறவேண்டி இரந்ததேதவிர சிறுகதைக்கான அளவு நிதானம் படிந்திருப்பதும் தெரிகிறது. முதல் கதை 'வாழ்க்கை முடிவில்' 'மீனாக்ஷியின் வாழ்க்கையிலே அநேக

ஜன்மங்கள். அதில் ஒன்று முடிந்தது, அளகம்மாள் வாழ்க்கையில் ஒரே ஜன்மம்தான். அது முடிவடைந்தது' என்று இருப்பது சிறப்பான கதை முடிவுகளின் வரிகளில் ஒன்று. மாற்றலாகிப் போகக்கூடிய ஒரு ரயில்வே உத்யோகஸ்தனின் குழந்தையிடம்ஒரே ஊரில் நிரந்தரமாக தங்கி இருக்க வேண்டிய ஒரு போர்ட்டரின் மனைவி வைத்த பாசத்தால் ஏற்பட்ட உணர்ச்சி அநுபவத்தை சித்தரிக்கும் கதையான அது, அளவறிந்து இயல்பான கதையம்சம் கொண்ட படைப்பு.

'யோகி' என்ற இன்னொரு கதை அன்றைக்கு அதிர்ச்சி தரக்கூடிய கதை. நண்பன் மனைவி என்று தெரியாமல் கைவைத்துவிட்ட காமுகனின் அதிர்ச்சி ஒரு அநுபவமாக அவன் யோகியாகி விட்டதும் யதார்த்தம்தான். 'இரண்டு நாடகங்கள்' 'கலைஞன்' 'கவலை' 'விஷகன்னிகை ஆகியவைகளும் கச்சிதமான கதைகளாக அமைந்தவையே. ஆனால் 'வேலையும் விவாகமும்' அப்போதைக்கு ஒரு புதுக்கவிதை. நல்ல அமைப்பானதும் கூட. இது வரை நாம் பார்த்த அத்தனை கதைகளினின்றும் முழுக்க மாறுபட்டது. ஆசை வெறி+ பாலுணர்வு மனசலனம், சமூக அநீதி. விதவை துயரம். வயது வித்யாச மணம், வரதட்சிணை கொடுமை, காதல் உணர்வு, கலைஞன் அவதி, பழக்க வழக்க வித்யாசம். ஆகிய விஷயங்கள் அந்த கதைகளுக்கு மூலப்பொருள்களாக இருக்கின்றன. இந்த கதைக்கு மூலப்பொருள் கதையில் வரும் கதாபாத்திரம் பாஸ்கரன், 'மலரை வைத்து மாலை கட்டலாம் கோட்டை கட்ட முடியுமா' என்பதுபோல், வாழ்க்கையில் எது எதுக்கு பயன்படும், எந்தஅளவுக்கு பயன்படும், அந்த அளவை நாம் எப்படி அறிவது, அந்த அளவுக்கு உட்பட்டு வாழ்க்கையை எப்படி சீராக நடத்திச் செல்வது என்று எழும் ஒரு பிரச்சனைதான்.

மணந்து கொள்ளவே போவதில்லை என்ற தீவிர சீர்திருத்தவாதி, புதுமைமன மிஸ் குஞ்சிதம் தன்னோடு நெருங்கிப் பழகிய, இஷ்டப்படத்தக்க டாக்டர் பாஸ்கரனிடம் மனதை பறிகொடுக்காதிருந்தவள் டிராமில் கூட்ட நெருக்கத்தில் பெண்மைக்கு அதிர்ச்சி தரும்படியாக நடந்த சம்பவத்தினால் ஏற்பட்ட அநுபவத்தில், மனக் கொதிப்பில் தன் பழைய எண்ணங்களை உதறிவிட்டு மிஸஸ் பாஸ்கரனாக ஆனதுதான் கதை. சுதந்திரத்துக்கும் லட்சியத்துக்கும் ஒரு எல்லை உண்டு, அதுக்குள்தான் இயங்க முடியும், இயங்க வேண்டும் என்ற ஒருநியதி உணர்தல் அல்லது உணர்த்தல் இந்தக் கதையின் தொனிப் பொருள் ஆகும்.

இது வரையில் நாம் பார்த்த கதைகளில் 'படித்தபெண்' என்று நாம் தற்காலப் பார்வையில் கணிக்கத்தக்க பாத்திரம்எதுவும் காணவில்லை. பெண் சுதந்திரமாக, 'பாரதி சொன்னது போல் 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று அவரது புதுமைப் பெண்ணாக செயல்பட்ட பெண்ணை நாம் பார்க்கவில்லை. 'குளத்தங்கரை அரசமரம்' ருக்மணி, 'என்னை மன்னித்து விடு' சீதா, மலரும் மணமும் செல்லம், கேதாரியின் தாயார், தாய் 'நூருன்னிஸாவின்' நூருன்னிஸா அந்திமந்தாரை காமாக்ஷி 'வேதாளம் சொன்ன கதை வேம்பு ஆகிய எல்லா பெண்களும் தாங்கள் இளைத்தவர்கள் என்பதை காட்டிக் கொண்டவர்கள். 'முள்ளும் ரோஜாவும்' கமலம் கூட – கொஞ்சம் தற்காலப் பெண் அதாவதுஅசட்டுத் தமிழ் நாவல்களை படித்தவள்கூட – ஒருநூலிழை தடம் பிசகியவள் தன்னை சுதாரித்துக் கொண்டு தன் பழய எல்லைக்குள் வந்து விடுகிறாள்.

அப்படிப்பட்ட பெண்களுக்குப்பின் வரும் குஞ்சிதம் பி.எ.எல்.டி.தான்தமிழ் சிறுகதை உலகில் முதல் படித்த பெண். சாவித்திரி, ஜோன் ஆஃப் ஆர்க் முதல் அமி மாலிசன்வரை தெரிந்தவள், முப்பதுக்கள் கால சாரதா சட்ட அமுலுக்கு ஏங்குபவள். விவாகரத்து வந்தாலும் நல்லது என்று கூட நினைப்பவள் 'இந்த மேல் நாட்டுப் படிப்பு பெண்களை புருஷர்களாக ஆக்கிவிடுகிறதே. தயவு செய்து பெண்கள் பெண்களாக இருங்கள்' என்று டாக்டர் பாஸ்கரன் கிண்டல் செய்வதை எதிர்த்து இங்கிலீஷ் படித்த புருஷர்களும் மனோ தைரியம் இழந்து பெண்களாகி விடுகிறார்கள் என்று பதில் சொல்கிறவள், 'பெண் கேட்பது ஓட்டு இல்லை, நீட்ஷே சொல்கிறானே பெண் கேட்பது சாட்டை, அதால் கொடுத்தால் சரியாகி விடும் என்கிற பாஸ்கரனுக்கு 'அதேநீட்ஷேயே சொல்கிறான். 'புருஷன் குழந்தை, பெண்ணைக் கண்டு பயப்படும் என்று' என்று எதிர் அடி கொடுக்கிறவள், 'புருஷன் மாதிரி நானும் ஓடியாடி சம்பாதிக்கவா? சந்தி சிரிக்கும் போலிருக்கிறது என் பிழைப்பு, பெண்கள் வீட்டுக்குள்ளே இருப்பதற்குத்தான் லாயக்கா, இந்த பிழைப்பே வேண்டாம், என்று 'அந்தப்புரத்தில் கோஷாவாக இருந்து 'சாட்டை' யடி வாங்கவும் பிரியப்படும் அளவுக்கு மனப்பக்குவம் அடைகிறவள்! குட்டையிலிருந்து தப்பி குளத்தில் விழவா என்கிற அதிர்ச்சிதான் இருந்த மரபான பழமைக்கு திரும்பச் செய்கிறது அவளை.

குஞ்சிதம் முப்பதுக்கள் காலத்தவள். இன்று அறுபதுக்கள் தாண்டி எழுபதுக்களுக்குள் நுழைந்து விட்ட கால கட்டத்தில் குஞ்சிதத்தை பார்த்து இன்றைய மினி ஸ்கிரிட் 'மாடர்ண்' பெண் சிரிக்கக்கூடும். ஆனால் அவளுக்கு முன்பும் ஒரு குளம் இருப்பது அவளுக்கும் புரியப் போவது எதிர்பார்க்க வேண்டியதே, என்று குஞ்சிதம் தன் அனுபவத்தில் பதிலுக்கு சிரிக்கக் கூடும். இந்த வித பார்வை சம்பந்தமாக முற்போக்கு பிற்போக்கு என்ற மதிப்பு சம்பந்தமாக பேசுவது அர்த்தமற்றது. இந்த கதையில் அடிப்படையான மதிப்பு தொடப்பட்டிருக்கிறது. 'நட்சத்திரங்களை ஆட்டி வைக்கும் ஆசையுடன் நான் பாடஆரம்பிக்கிறேன். ஆனால் அது குரங்கை ஆட்டி வைக்கும் கேலிக் கூத்தாக ஆகிறது' என்று ஒரு கவி பாடிய மாதிரி ஆயிற்று என் வாழ்வும்' என்ற கதையில் குஞ்சிதம் சொல்வது போல வாழ்க்கையும் தாம்பத்திய உறவும் கேலிக் கூத்தாக ஆகாமல் சந்தான நிரந்தர நேர்மையான உறவில் இருக்க வேண்டியது வலியுறுத்தப் பட்டிருக்கிறது. க்தை முடிவு சம்பாஷணை இந்த உறவை எவ்வளவு நளினமாக ஏற்படுத்துகிறது!.

'நான் இனிமேல் உன் டாக்டர் இல்லை. உன் ட்ரைவர். வண்டியை ஓட்ட ஆரம்பிக்கலாமா?'

'என்னை என்ன கேள்வி? நான் உங்கள் சமையல்காரி.'

'சமையல்காரியா? என் உயிரையும் உணர்வையும் உலகத்தையு மன்றோ சமைக்கப்போகிறாய்!'

ஆண் பெண் உறவிலே வேண்டிய நிதானம், பரஸ்பர விட்டுக்கொடுத்தல் இதில் எவ்வளவு சூசனையாக உணர்த்தப் பட்டிருக்கின்றது. இந்த கதையின் உருவம் இது வரை பார்த்த கதைகளை விட அச்சாவானது. ஒரு லட்சிய சிறு கதை என்பேன். கதையில் முதல்வரி, 'மிஸ் குஞ்சிதம் மிஸஸ் பாஸ்கரன் ஆகவில்லை'. கதையின் கடைசி வரி 'மிஸ் குஞ்சிதம் மிஸஸ் பாஸ்கரன் ஆகிவிட்டாள்.' இந்தஇரண்டும் 'டிரமாடிக்' தன்மை கொண்ட வரிகளாக இருப்பதுடன் கதையின் கட்டுக்கோப்பு அங்கக்கட்டாக அமைய பயன்பட்டவை. அதோடு எதிரிடை விரோதமான இரு கடை நிலைகளுக்கு இடையே ஒரு காரணகாரிய வளர்ச்சி முற்பட்டிருப்பதை உணர்த்தி எதிர்மறையிலிருந்து உடன் பாடான மாற்றம் காட்டவும் பயனாகி இருக்கிறது. கதைஇந்த வரிகளுக்கு இடையே வளர்ந்து உச்ச கட்டத்தில் போய் நிற்பதைமுடிவை நாம்

படிக்கவும் உணர்கிறோம். இதே மாதிரி, தமிழில் தலை சிறந்த பத்து கதைகள் தேர்ந்தெடுத்தால் அதில் ஒன்றாக இருக்க வேண்டிய 'ஊர்வலத்தில்' என்ற அவரது இன்னொரு சிறுகதையில் 'ஊர்வலம் மூலை திரும்பிற்று. பாண்டு கோஷ்டியார் 'தாரினி தெலுசுகொண்டி' என்ற கீர்த்தனத்தை முடித்து விட்டு நிறுத்திக் கொண்டார்கள்' என்று ஆரம்பம். 'பாண்டு கோஷ்டியார் நாடகமே உலகம்' என்ற பாட்டை வாசித்துக் கொண்டு போயினர் ஊர்வலம் மற்றொரு மூலை திரும்பிற்று' என்பது முடிவு. இந்த உத்தி அற்புதமான சாதனை காட்டி இருக்கிறது அந்த கதையில்.

படைப்புக் களத்துக்கு அறிவு முக்யமா உணர்ச்சி முக்கியமா என்று கட்சி வாதம் செய்யும் மனப்பான்மைக்கு இந்த கதை ஒரு நல்ல உணர்த்தல். இரண்டுக்கும் சம நிலை இங்கு காணப்படுவது மட்டுமின்றி ஒன்று மற்றதுக்கு உதவி ஒருசுத்தமான நினைப்போட்டம், தூய உணர்ச்சிப் போக்கு ஒரு நெறியான தத்துவப் பிடிப்பு எல்லாம் கதாபாத்திரங்களிட மிருந்து வெளி வருவதும் தெரிகிறது.

அநேகமாக மணிக்கொடிக் கதைக்காரர்கள் எல்லோரும் 'ரிஃப்ளெக்டிவ்' எங்கிறோமே சிந்திரிக்கிற, முன்னும் பின்னுமாக மனதை ஓடவிடுகிற, நுட்பமாகமன வோட்டத்தை தொடர்கிற, மாடு அசைபோடுவது போல் மனதின் சிக்கலான கலப்பான, ஆழமான உணர்வுகளை ஆழத்திருந்து மேல் தளத்துக்கு கொணர்ந்து திரும்பத் திரும்ப உரைத்துப் பார்க்கிற விதமான எழுத்துப் போக்கை கடைப்பிடிப்பவர்கள் என்பதை இதுவரை குறிப்பிட்ட கதைகளிலிருந்தே நாம் யூகிக்க முடியும். நூருன்னிஸாவின் கதாநாயகன் தானே நினைப்பதாக கதைவழி, இதில் கதாசிரியர் சாட்சியாக வர்ணித்த முறையே யானாலும், கதாபாத்திரம் மனப்போக்குப் பாங்காகவே சித்தரிப்பு தோரணை.

நடை சிக்கனமாக பிரயோகம், சின்னச் சின்ன வாக்கியங்கள். 'சீக்வன்ஷியல்' என்கிறோமே அறாமல் பின் தொடர்கிற வரிசைக் கருத்தமைப்பு வாக்யங்கள். இதுக்கெல்லாம் உதாரணம்.

'வண்டி நகர்ந்து வேகமெடுக்க ஆரம்பித்தது. அவசரமாக ஓடிவந்து ஏறினான் ஒருவன். ஏறின வேகத்தில் குஞ்சிதத்தை இடித்துக்

கொண்டு போனான். அந்த அதிர்ச்சியால் அவள் குடையும் புத்தகங்களும் கீழே விழுந்தன. அவைகளைப் பொறுக்க கீழே குனிந்தாள். அவள்புடவை சரிந்து விழுந்தது. உடனே சரிப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள். அநேக கண்கள் அவள் பக்கம் திரும்பி இருந்தன. அவள் உடம்பு கன்றிக் குறுகிப்போயிற்று. அவமானமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தன. அவர்கள் பார்த்த பார்வை அவளுடைய ஆண் எண்ணங்களைத் துளைத்துச் சென்று அவள் உள்ளத்தில் பாய்ந்து பெண்மையையே தாக்குவது போலிருந்தது. அவளுக்கு அப்பொழுது ஏற்பட்ட மனக் கொதிப்பில் வெகு நாளையஅவளுடைய எண்ணங்கள் பொசுங்கி, பஸ்பமாகிப் போய்விட்டன.'

நான் மேலே குறிப்பிட்ட மூன்று தன்மைகளை இந்த மாதிரி பாராவில் காணலாம். ஆக, 'வேலையும் விவாகமும்', டஜன் கணக்கில் சிறு கதை வளம் பெருக ஆரம்பித்த காலத்து சிறந்த கதை மட்டுமின்றி நூறு, ஆயிரக்கணக்கில் சிறு கதைகள் வந்து கொண்டிருக்கிற இநதக் காலத்துக்கும் சிறந்த கதை. இந்த கதை செலுத்திய பங்குக்குப் பின்நான்பார்க்க விரும்பும் கதை 'பைத்தியக்காரி' என்பது. இந்த கதையை எழுதியவர் தி.ஜ.ர. என்ற தி.ஜ.ரங்கநாதன்.

சந்தேகம்

வல்லிக்கண்ணன்

முழு நிலவே, ஒளி முகமே!
அமுத ஊற்றே அம்புலியே!
வட்ட நிலா எழில் வதனீ !
என்றெல்லாம் புலம்பினர் கவிஞர்.
அகம் மகிழ்ந்து முகம் மலர்ந்தனை
பெண்ணே !

காமிராக் கண்கள் கண்டு,
காட்டின படமாய்ப் பிடித்து,
நிலவின் தன்மைகள், அழகுகள்
அம்பலம் ஆயின; பின்னர்
கண்ணாடியில் உன் முகம்
கண்ட துண்டோ, பெண்ணே?
என்ன தான் எண்ணினை அன்று?

பள்ளமும் மேடும்
குண்டு குழிகளும்,
வறட்சிப் பரப்பாய்
விரிந்த தோற்றமும்
படங்களில் கண்ட பின்னும்,
வட்ட நிலா, முழு நிலவு
சந்திர பிம்பம் சுந்தரவதனம்
எனப் பல்வகை அளப்புகள்
கேட்டிடில், வெறுப்பும்
கோபமும் கொள்வையோ.
அன்றிக் கிளுகிளுத்துச்
சிரிப்பையோ, பெண்ணே?

நூர் உன்னிஸா

கு.ப. ராஜகோபாலன்

நான் வேலூர் சிறையிலிருந்து விடுதலையடைந்து ஒரு வாரம் இருக்கும். ஒரு நாள் காலையில் நாற்காலியில் சாய்ந்து கொண்டு என் உயிர்வெள்ளம் இனிமேல் எந்த நிலத்தில் பாயப்போகிறதோ என்று யோசனை செய்து பார்த்துக் கொண்டிருந்தேன். நான் கொண்டு செய்யக் கூடிய காரியமாக எனக்கு ஒன்றும் தென்பட வில்லை. தேசீய இயக்கத்திலோ ஒரு தேக்கம். காங்கிரஸ் நிர்மாணத் திட்டம் அப்பொழுது சிதைவுற்றுக் கிடந்தது.

தபால்காரன் ஒரு கற்றை தமிழ்ப்பத்திரிகைகளுடன்ஒரு கவரையும் கொண்டு வந்து கொடுத்தான். ஏகாங்கியான எனக்கு இவ்வுலகில் யார் கடிதம் எழுதக் கூடுமென்று எண்ணிக்கொண்டே அதை உடைத்துப் படித்தேன். பின்வருமாறு ஆங்கிலத்தில் அது எழுதப்பட்டிருந்தது.

குலாம் காதர் எம்.ஏ. — மதராஸ்
ப்ரோ டிப்படி கலெக்டர். — 19–7–30

என்னருமைத் தோழர்,

நீ என்னை மறந்திருப்பாய் என்று நான் நினைக்கவில்லை. இத்தனை வருஷங்களாகக் கடிதம் எழுதாதற்குக் காரணம்; எனக்கு நீ இருக்குமிடம் தெரியாதது தான். இப்பொழுதும் இந்தக்கடிதத்திற்கும் மேலேற்படும் நமது சந்திப்பிற்கும் காரணம் என் தங்கை நூருன்னிஸா, நாம் படித்தபோது நம்முடன் விளையாடினவள், ஞாபக மிருக்கிறதா? தற்செயலாகச் சென்ற பத்தாம் தேதி தினசரிப் பத்திரிக்கையில் உன் பெயரைக் கண்டு அதை எனக்குக் காட்டினாள். அவள் உன் இனிஷியல்களைக்கூட நினைவில் வைத்திருந்ததால் நீ என்று நிச்சயிக்கமுடிந்தது. நீ அன்று தான் வேலூர்ச் சிறையிலிருந்து விடுபட்டதாகப் பத்திரிகையில் கண்டிருந்தது. உடனே அவளுடைய

யோசனையின் பேரில் உன் விலாசத்தைக் கேட்டு வேலூர்க்கு 'டெமி அபீஷியலாக' தந்தி அடித்து பதில் வர வழைத்தேன். அது இன்று கிடைத்தது.

நமது பன்னிரண்டாவது வயதில் திருச்சியில் படிக்கும் பொழுது ஒரு சிறு பிள்ளைப் பிதிக்ஞை பண்ணிக் கொண்டோமே, நினைவிருக்கிறதா? நாம் ஒருவரை யொருவர் அறியாமல் கலியாணம் செய்து கொள்வதில்லை என்று? அதை நிறைவேற்று வதற்காகத்தான் இந்தக் கடிதம். சென்னையில் 22.7.30ல் எனக்குக் கலியாணம். பத்திரிகை இதனுடன் இருக்கிறது. நீ அவசியம் வரவேண்டும்.

உன்அன்புள்ள
குலாம் காதர்.

இந்தக் கடிதம் மின்னலைப் போல என் மனதின் மறதியிருளை அப்பொழுது பளிச்சென்று போக்கிற்று. இந்தப்பத்து வருஷங்களாக பரதேசிபோல்திரிந்த பொழுதும் உப்புசத்யாக்ரகத்தின் காரணமாக ஆறுமாதம் சிறையிலிருந்த பொழுதும் அடிக்கடி மனதில்தோன்றித் தோன்றி என்னை மயக்கிய பெண்ணுருவம் யாருடையது என்று தவித்தேனே- அப்பா, அது நூருன்னிஸாவுடையதுதான்!

ஒரு சிறுமியின் முக்காடிட்ட குற்றமுகம்; அதில் மை தீட்டிய இமைகளிடையே குறுகுறு என்று சஞ்சலித்த இரண்டு குறைகூறும் விழிகள். ரோஜாக்களிடையே மல்லிகைபோல் கீழிதழைச்சற்றே கடித்து வெளியே தோன்றின பல்வரிசை. இதத்கைய உருவம் மோகினி போல் என் மனதில் குடிகொண்டு ஆட்டி வைத்ததே – அது அவளுடையது.

அவளுடைய மனநிலையும் என்னுடைய மனநிலையை ஒத்திருக்கக் கூடுமா என்ன? இல்லா விட்டால் இக்கடிதத்திற்கு ஏன் காரணமாகிறாள்? கூட்டத்தில் கலந்து திரியும் என்னைக் குறித்தல்லவோ அவள் கூப்பிடுவது போலிருக்கிறது!

குலாம் காதருக்கும் எனக்கும் இருக்கும் இந்த சிநேகிதம் ஆரம்பமானது மிகவும் வேடிக்கை. எனது பத்தாவது வயதில் என்னை என் தகப்பனார் திருச்சியில் ஒரு செகண்டரி பள்ளிக் கூடத்தில் மூன்றாவது வகுப்பில் சேர்த்தார். அங்கே குலாம் என்பக்கத்து பையன். பெண் சாயல் கொண்டு வளர்ந்த வாலிபன்.

ஒருநாள் கணக்குப்போடும்பொழுது குலாம் என் சிலேட்டைப் பார்த்து காப்பியடித்து விட்டான். அதெப்படி வெளியாயிற்று என்றால் நான் பிசகாய்ப் போட்டிருந்த வழி அவனுடைய சிலேட்டிலும் காணப்பட்டது, உடனே உபாத்தியாயர் நான் காப்பியடித்தேன் என்று என்னைப் பிரம்பால் அடித்தார்.

குலாம் சாயந்திரம் வீட்டுக்குப் போகும் பொழுது என்னைக் கைதட்டிக் கூப்பிட்டான்.

'நீ ஏன் என் மீது குற்றம் சாட்டவில்லை' என்று கேட்டான். நான் பதில் சொல்லவில்லை.

அவனுக்கு என்ன தோன்றிற்றோ தெரியாது.

'அடே, என்னோடு எங்க மோட்டாரிலே எங்க வூட்டுக்கு வா. அப்புறம் உங்க வூட்டுலே கொண்டு விடறேன்' என்றான்

காரில் ஏறினோம். காரில் சவாரி செய்ய வேண்டுமென்ற என் ஆசை பூர்த்தியாயிற்று. பதினைந்து நிமிஷத்தில் தென்னூரில் அரண்மனை போன்ற ஒரு வீட்டு வாசலுக்குள் போய் நின்றது.

கயாஸுடின் ஸாஹேப் ஒரு பெரிய வர்த்தகர். ஆர்க்காடு நவாப் வம்சத்தைச் சேர்ந்தவராம். வீட்டின் முன் ஹாலில் பிரம்மாண்டமான வெல்வெட்டுத் திண்டுகள் போட்டுச் சாய்ந்து கொண்டிருந்தார். எதிரில், ஹுக்காவும் எச்சிலுமிழும் பாத்திரம் ஒன்றும் இருந்தன. எங்கே பார்த்தாலும் நிலைக்கண்ணாடிகள். பெரிய பெரிய மொகலாயப்படங்கள். பளிங்கு மயில் ஒன்றில் செருகப்பட்டிருந்த ஊதுவத்திகளிலிருந்து வாசனை கம்மென்று வீசிற்று. காலுக்கு மெத்தென்றிருந்த ரத்தினக் கம்பளங்கள் தரையில் விரிக்கப் பட்டிருந்தன.

குலாம் குதித்துக்கொண்டு போய் அவரிடம் ஏதோ சொன்னான். பிரமித்துப் போயிருந்த என்னைப் பார்த்து அவர் 'இங்கே வா' என்று கூப்பிட்டார். பிற்காலத்ததில் நான் மௌலானா ஷௌகத் அலியைப் பார்க்கும் போதெல்லாம் அவர் ஞாபகம் எனக்கு வரும். குலாம் என்னை அவரிடம் இழுத்துக்கொண்டு போனான். அவர் என்னைத் தடவிக் கொடுத்துக் கொண்டே தன் மனைவியைக் கூப்பிட்டார். உள்ளே இருந்து அந்த அம்மாளும் அவளுடைய இரண்டு பெண்களும்

வந்தார்கள். இப்பொழுது ஞாபகத்திலிருந்து சொல்லுகிறேன். அந்த அம்மாளுக்குச் சுமார் முப்பது வயதிருக்கலாம். உயர்ந்து வளர்ந்த அழகான ஸ்திரீ. அவள்மெதுவாக ஒவ்வொர்அடியெடுத்து வைத்து வந்த பொழுதும் கால் சலங்கை கலீர் கலீரென்று சப்தம் செய்தது. மூத்த பெண்அலிமா குட்டையாயும் ஸ்தூலமாயும் இருந்தாள். இளைய பெண் நூருன்னிஸாவோ குலாமைப் போலவே இருந்தாள்.

அப்பொழுது அவளுக்கு எட்டு வயது இருக்கலாம். இவ்வளவு வர்ணனை செய்கிற சக்தி எனக்கு அப்பொழுது இருந்ததா என்ற சந்தேகம் வேண்டாம். கிடையாது. ஆனால் என் மனத்தில் போட்டோ பிடிப்பது போல்பதிந்திருக்கிற அம்சங்களையே இப்போது எடுத்தெழுதுகிறேன்.

நூருன்னிஸாவின் உருவம் என் மனதில் வளர்ந்த சித்திரம்போல் நிற்கிறது. நான் முதல் முதலில் பார்த்த அன்று அவள்ஜரிகை மயமாய் இருந்த பச்சைப்பட்டுப்பாவாடை உடுத்தி இருந்தாள். லேசான மஞ்சள் பட்டு ரவிக்கையும் ரோஜாப்பட்டு தாவணியும் அணிந்திருந்தாள். காலில் காப்பு, பாதஸரம், கையில் காப்புகள், விரல்களில்மோதிரங்கள். கர்நாடக முகம்மதியர் போல குருடு முதலியன இல்லை. முகம் என் மனதில் அப்படியே இருக்கிறது. நீண்ட புருவங்களும் தலைமயிரும் கன்னங்கறேலென்று இருந்தன. பின்னல்இல்லாமல் தலைமயிரை முடித்திருந்தாள். அது அவளுக்கு ரெம்ப அழகாக இருந்தது. அவள் உடலின் சிவப்புக்குச்சமானமே சொல்ல முடியாது. அவள்கண்கள்– அவற்றின் தன்மையை எடுத்துச்சொல்ல முடியவில்லை. வேண்டுமானால் தாமரை இதழ்கள் போன்றன, மீனுருவம் கொண்டன என்று' கவியைப்போல்சொல்லிக் கொண்டே போகலாம்.

கயாஸுடீன். தன் மனைவியிடம் ஏதோ சொன்னார். அவள் என்னை ஒரு தரம் பார்த்து விட்டு அலிமாவிடம் ஏதோ சொன்னாள். அலிமா உள்ளே போய் ஆப்பிள், ஆரஞ்சு, மாதுளைகள் நிறைந்த ஒரு பையைக் கொண்டு வந்தாள். அதை என்னிடம் கொடுத்தபோது குலாமின் தாயினது முகத்தில் தோன்றிய அன்புப்பார்வையை நான் மறக்கவே முடியாது. என் கன்னத்தை ஒரு தரம் தாய்போலத் தடவிக் கொடுத்தாள்.

குலாம் என்னைக் கூட்டிக் கொண்டு காருக்குச் சென்றான். அதில் ஏறி உட்கார்ந்தோம். புறப்படும் பொழுது வாசல் பக்கம் கண்ணெடுத்துப் பார்த்தேன். நூருன்னிஸா முக்காட்டைப் பல்லால் கடித்துப் பிடித்துக் கொண்டு என் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். என் கண்களை சந்தித்த நிமிஷம் உள்ளே ஓடி விட்டாள்.

அன்று முதல் நானும் குலாம்காதரும் இணை பிரியாது திரிந்தோம். விளையாடினோம், அரட்டைகள் அடித்தோம். ஆகாசக் கோட்டைகள் கட்டி மகிழ்ந்தோம். சதா சர்வகாலமும் நான் அவன் வீட்டில்தான் இருப்பேன். நூருன்னிஸாவும் எங்களுடந்தான் இருப்பாள். நாங்கள் செய்வதையும் பேசுவதையும் உற்று கவனித்துக் கொண்டிருப்பாள். தானும் கூட விளையாடுவாள். தெரியாமல் பின்னால் ஒளிந்து வந்து என் கண்களைப் பொத்துவதில் அவளுக்கோர் ஆனந்தம். ஏன், எனக்குந்தான் ஒரு வித மகிழ்ச்சி அப்போது உண்டாகும். அவள் கைகள் மிருதுவான ரோஜா மலர்போல இருக்கும். கைகளை எடுத்து விட்டுக் கலகலவென்று சிரிப்பாள். அவள் கன்னங்கள் குழிவுபடும். அச்சமயம் என் மனம் என்னவோ நான் எடுத்துச் சொல்ல முடியாத ஒரு சந்தோஷத்தை அடையும்.

நாலாவது பாரம் வரை நானும் அவனும் இப்படி இருந்தோம். திடீரென்று என் தகப்பனாரைத் திருச்சியிலிருந்து மாற்றி விட்டார்கள். பிறகு எனக்கும் குலாமுக்கும் சந்திப்பே கிடையாது. பன்னிரெண்டு வருஷங்களுக்குப் பிறகு அவனிடமிருந்து இந்தக்கடிதம் வந்திருக்கிற தென்றால் என் சந்தோஷத்தை என்னென்பது? மறுநாள் இரவு வண்டியில் சென்னைக்குப் புறப்பட்டேன்.

பந்துக்கள் நிறைந்த மஹாலில் குலாம் என்னைத் தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு பழைய நாட்களைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்தான். முகம்மது காஸிம் என்ற வித்வானின் பாட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. எங்கே பார்த்தாலும் ரோஜா வர்ஷம். அத்தரும் பன்னீரும் ஜலப்பிரளயமயமாய் வழங்கப்பட்டன. ஆறு மணிக்கு சபை கலைந்தது. குலாம் என்னை பங்களாவின் மேல் மாடியில் இருந்த ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். வெகுநேரம் அங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

குலாமின் தாய் மகளைத் தேடிக் கொண்டு அங்கே வந்தாள். நான் இருப்பதைப் பார்த்து சட்டென்று பின்வாங்கி முகத்தை மூடிக் கொண்டாள்.

'அம்மா யாரென்று எண்ணுகிறாய்? நம்ம...' என்று குலாம் ஆரம்பித்தான்.

'எனக்கு ஞாபகமிருக்கிறது. சௌக்கியமா அப்பா' என்று கேட்டுக் கொண்டு மெதுவாக அந்த அம்மாள் முன்வந்தாள்.

'சௌக்கியம் அம்மா.'

'எங்கே இருக்கிறாய்?''

'திருச்சியில் இருக்கிறேன்.'

'கலியாணம் ஆயிற்றா?'

'இல்லை.'

'பேசும் பொழுதே அவ்வுருவிற்குப் பின்னால் இன்னும் ஒரு இளம் உருவம் நிழல்போல நிற்பதுபோன்ற பிரமை தட்டிற்று எனக்கு. ஒரு நிமிஷம். நூருன்னிஸாவே என்முன் தோன்றுவாளோ என்ற ஆசை. மறுநிமிஷம் 'செ, அதெப்படி முடியும், அவள் பர்தாப் பெண் அல்லவோ, குலாமும் கடிதத்தில் எழுதினதைத் தவிர நேரில் அவளைப்பற்றிய பேச்சே எடுக்கவில்லையே,' என்ற நினைப்பு ஏற்பட்டது. அவள் யோக க்ஷேமத்தைப் பற்றிக்கூட கேட்க எனக்கு யோசனையாய் இருந்தது. அவளை நிச்சயமாகப் பார்க்க முடியாதென்ற எண்ணம் ஏற்பட்ட பிறகுதான் குலாமுடன் சுய பிரக்ஞையுடன் பேசினேன்.

இரவு பத்துமணி சுமாருக்கு குலாம் படுத்துக் கொள்ளச் சென்றான். எனக்கு ஒரு தனியறை ஒழித்துத் தந்திருந்தார்கள். என் தனியறையில் தனிமையில் நான் படுக்கையில் படுத்துப் புரண்டேன். மின்சார விளக்குகள் வெளிச்சம் எனக்குத் தாங்க முடியாததாக இருந்ததால் அதை அணைத்துவிட்டு ஜன்னலைத் திறந்து வைத்தேன். அதன்வழியாகப் பூரணசந்திரன் என் படுக்கையின் மேலே தன் ஒளியைப் பரப்பினான். படுக்கையில் உட்கார்ந்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன். அதே வீட்டின் ஒரு பாகத்தில் அவளும் அப்பொழுது சஞ்சரித்துக் கொண்டிருந்தாளல்லவா?

என் ஹிருதயத்தின் நிலைமையை அவள் அறிவாளோ? முடியாது. பூவின் அவா மணமாக வெளியேறி உணர்வைத் தாக்குகிறது. நினைவில் புறப்படும் அலை எப்படி அவள் ஹிருதயக் கரையில் போய் மோத முடியும்? சாத்தியமில்லை... அக்கடிதத்தில் தன் சகோதரனைக் கருவியாக்கிக் கொண்டு என்னை ஏன் இங்கு வர வழைத்தாள் பின்? என்னிடத்தில் அவளுக்கோர் – அதெப்படி நான் சொல்வது?

இந்த திசையாக என்பேதைமனம் கேள்விகளும் மறு கேள்விகளும் போட்டுக் கொண்டு சமுத்திரம் போல் அலையலையாய் பொங்கிக் கொண்டிருந்தது.

நடுநிசியாயிற்று. எனக்கு தூக்கமே வரவேயில்லை. பட்டணத்தின் ஓசையும் அடங்கிவிட்டது. தூரத்திலிருந்து சமுத்திரத்தின் ஓசை தான்காற்றில் மிதந்து வந்தது. திடீரென்று மனதில் ஒரு ஆசை உதித்தது. ஒரு வேளை இப்பொழுது என்னை நூருன்னிஸா பார்க்க வரக்கூடுமோ? அல்லது என்னைத்தான் எங்கேயாவது எதிர் பார்க்கிறாளோ?' என்று நினைத்தேன்.

மெதுவான காலடிச்சத்தம் கேட்டது. ஆம், அது நூருன்னிஸா தான். வந்து எனக்கருகே இருந்த ஜன்னலின் அப்புறத்தில் நின்றாள். அதே உருவம் தான். வயதிற்கேற்ற வாட்ட சாட்டம் மட்டுமே வித்யாசம். நிலவில் முகம் வியக்தமாகத் தெரிந்தது. இன்னது சொல்கிறேன் என்று அறியாமல் எழுந்து நின்று 'எண்ணியபடி ஆயிற்றே' என்றேன்.

ஒரு விரலால் தன் உதடுகளைப் பொத்திக் காட்டினாள். தன் மார்பில் வைத்திருந்த ஒரு கவரை எடுத்து என்கையில் கொடுத்தாள். 'இதை ஊருக்குப் போய்ப்படி. நாளைக்குக் காலையிலேயே புறப்பட்டு விடு. பார்த்தாகி விட்டது. ஒரு நிமிஷம் தாமதிக்கக் கூடாது' என்று சொல்லித் திரும்பினாள்.

கொஞ்ச தூரம் சென்று திரும்பிப் பார்த்தாள். நிலவின் வெளிச்சத்தில் அவளுடைய அழகான முகத்தில் கலவரத்தினால் முத்து முத்தாய் வேர்வை துளிர்த்திருந்ததைக் கவனித்தேன். நான் தாவியோடி அவள் கையைப் பற்றினேன்.

ஒரு நிமிஷம் அப்படியே நின்றோம். மறுநொடியில் மெதுவாகக் கையை விடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

மறுநாட் காலை நான் பயணத்திற்குத் தயாராக இருந்ததைக் கண்டு குலாமின் முகம் வாட்ட மடைந்தது.

'என்ன சமாசாரம்' என்றான்.

'அது தான் ஒருநாள் இருந்தாயிற்றே. மற்றொரு சமயம் சாவகாசமாகச்சந்திப்போம். எனக்குக் கொஞ்சம் காரியம் இருக்கிறது' என்றேன்.

அரை மணிக்குள் அந்த பங்களாவை விட்டு வெளியேறி விட்டேன்.

திருச்சியில் காவேரிக்கரை ஓரத்தில் என் அறையிலிருந்து ஜன்னலின் வழியாகத் திரும்பவும் அதே சந்திரனை பார்த்துக் கொண்டிருந்தேன்? எவ்வளவு மாறுபட்ட மனோபாவத்துடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன்.

'இக் கடிதத்தை என் வாக்காகவும் என் அடையாளமாகவும் நீ வைத்துக் கொள்ளலாம். நாம் திருச்சியில் சிறு குழந்தைகளாக விளையாடினபோது என் மனதில் உன்னிடம் ஏற்பட்ட பற்று என்னை விட்டு இன்னும் அகலவில்லை. ஏனென்றால் சதா உன்உருவம் சிலைபோல் என் முன் நிற்கிறது.

நான் நித்ய இளமையோடு உன்னுடன் விளையாடுவது போலவே கனவு காண்கிறேன். உன்னை மற்றொரு முறை இந்த ஜன்மத்தில் பார்க்க வேண்டும் என்ற அவாவும் நிறைவேறி விட்டது. இனி என் நாட்களை முன்பு ஜெபுன்னிஸா கழித்தது போலக்கழிக்கப் போகிறேன். என் தாயிடம் உனக்கு கல்யாணம் ஆகவில்லை என்று நீ சொன்னது எனக்குத் திருப்தியைக் கொடுத்தது. இனி மேல் நீ வேறொரு ஸ்திரீயிடம் ஈடுபடாமல் உன் வாழ்நாட்களை என் மனதோடு மட்டும் லயிக்கச் செய்து கழிப்பாயானால், நானும் சோர்வின்றி வாழ்வேன். அப்படியே செய்கிறேன் என்று நீ எனக்கு பதில் எழுதவேண்டாம். நீ செய்வாய் என்று எனக்கொரு தீவிர நம்பிக்கை இருக்கிறது. அதே என் உயிர்நாடி.

ஜீவ ரகசியம்

டி.ஆர். நடராஜன்

வீசும் மென் காற்று
தூசி சேர்க்கும்
மண் தரை மீதில்,
அதே காற்றே தான்
வீசி அடித்து
தூசி பெருக்கும்
அத்தரை மீதில்.
ஆக்குவதேன்.
அழிப்பதேன்?

நான் மெய்மறந்து உன்னையே நினைக்கிறேன். ஆனால் நாம் இருவரும் இவ்வுடலில் சதிபதிகளல்ல. எப்போதும் சரீர இச்சை வேண்டாம் நமக்கு. பூர்ணமாக நினைவு ஆகாசத்தில் ஜொலிக்கும் சுக சந்திரனுக்கு களங்கமுண்டாக் காதிருப்போம். சரி தானே?

உன்
நூர்உன்னிஸா

அவ்வொளி மயக்கத்தில் அவளே மதியுருவுடன் வந்து என்னிடம் வாக்கு வாங்குவது போலிருந்தது.

என் மனமோகினியின் கட்டளைப்படி நான் உலக வழிகளில் திரிந்து வருகிறேன். நான் செய்யும் சகல காரியங்களிலும் நான் நினைத்த மாத்திரத்தில் என் முன் தங்கப்பதுமை போல வந்து நின்று என்னை உற்சாகப் படுத்துகிறாள். என் சோர்விலும் என் மனதின்முன் குதித்துக் கொண்டு வந்து நின்று என்னை ஆற்றுகிறாள்.

நன்றி : கனகாம்பரம் கதைத் தொகுப்பிலிருந்து :
அல்லயன்ஸ் பிரசுரம்

விமர்சன விழாக்கள்

கு. சங்கர சுப்ரமண்யன்

திட்டமிட்ட அளவில் இலக்கியம் பற்றி ஆராய்ந்து கருத்தறிவிக்க சமீபத்தில் நடைபெற்ற மூன்று விழாக்கள் தனிச் சிறப்புப் பெறுகின்றன. அந்தச் சிறப்பைச் சாதித்த நண்பர் வட்டம், பவர் ஸ்தாபனம், பட்டிமன்றம் மூன்று அமைப்புக்களும் இலக்கியவாதிகளின் ஏகோபித்த பாராட்டுக்கு ஆளாகி இருப்பது நியாயமே.

நண்பர் வட்டம்

கிறிஸ்தவ இலக்கிச் சங்கத்தைச் சேர்ந்த நண்பர் வட்டத்தினர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 13,14 தேதிகளில் நாவல் சிறுகதை பற்றிய கருத்தரங்கு ஒன்று நடத்தினார்கள். நாவலுக்கும் சிறுகதைக்கும் தனித்தனியே ஒதுக்கி, ஒவ்வொரு நாளும் நான்கு அமர்வுகளாகப் பிரித்து, தயாரிக்கப்பட்ட கட்டுரைகள் வாசிக்கப்பட்டு அவற்றின் மீது உரையாடலுக்கும் வழி செய்யப்பட்டது. தவிரவும், குறிப் பிட்ட நாவல்கள், சிறுகதைகள் மீதான திறனாய்வுக் கட்டுரைகளும் படிக்கப்பட்டன.

அழைப்புப் பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப் பட்டதால் அனாவசிய இழுபறிப் போக்குள் தலை காட்டாமல், பெரும்பாலும் நேரப்படியே கருத்துரைகளும் விவாதங்களும் நடந்து முடிந்ததைச் சிறப்பாகச் சொல்ல வேண்டும். பெ.நா. அப்புசாமி; சோ. சிவபாத சுந்தரம், கி.வா. ஜகந்நாதன், அகிலன், ஜெயகாந்தன், கண முத்தையா, சரஸ்வதி ராம்னாத், சி.சு. செல்லப்பா, ஆ.தே. மனுவேல், கு. அழகிரிசாமி, நா. பார்த்தசாரதி, பி.எஸ். ராமையா, எழில்முதல்வன், ரா. ராஜதுரை, ராஜம் கிருஷ்ணன், பொ. ஆ. சத்தியசாட்சி முதலியோர் பல்வேறு தலைப்புக்களில் உரை யாற்றினார்கள். விமலாமனுவேல், தண்டாயுதம், சி. தேவராஜன்,

சி.சு. செல்லப்பா, டேவிட் சித்தையா, சேதுராமன், ஆர். பிரசாத், ஐசக் அருமைராஜ் டி, பாக்கியமுத்து, தயானந்தன் பிரான்சிஸ் குறிப்பிட்ட படைப்புக்களைத் திறனாய்வு செய்தார்கள்.

நாவல் சிறுகதை இரண்டிலும் அன்றைய, இன்றைய போக்குகள், வளர்ச்சிகளும் தடைகளும், கருப்பொருள்கள், விமர்சன பாதிப்பு, பிரசாரத்துக்கான இடம், சமுதாயத்தோடு தொடர்பு, ஆசிரியன் ஆளுமை, உத்தி. கதை அம்சம், பத்திரிகைகளின் பங்கு – இவைகளைப் பற்றிய சிந்தனைகள் பரவலாக வெளிக் கொணரப்பட்டது இந்தக் கருத்தரங்கின் பயனாகும். எழுத்தாளர்கள். வாசகர்கள், விமர்சகர்கள், பத்திரிகாசிரியர்கள், பேராசிரியர்கள் என்று பலதரப்பட்டவரின் கண்ணோட்டமும் ஒருங்கு சேர்ந்தது அந்தப் பயனைப் பெருக்குவதற்கு உதவியது.

இந்தக் கருத்தரங்கில் ஓர் உண்மையும் வெளிப்பட்டது. இலக்கியச் சிந்தனைகள் பல முனைகளில் எழுவது தவிர்க்க முடியாதது, சில சந்தர்ப்பங்களில் சந்திக்க முடியாததும் கூட என்பதுதான் அது. படைப்பில் பிரசாரம் என்பது குறித்தோ விமர்சனத்தின் பயன் என்பது குறித்தோ முடிவில்லாமல் விவாதிக்கலாம். ஆனால், இலக்கியத்தின் புது வகைகள் பெருகி, படைப்புக்கள் பற்றிய பார்வைகளும் விரிந்த பின்னரும் கூட , அடிப்படை விதிகளிலும், சில்லறைச் சங்கதிகளிலும் வாதம் எழுப்பிக் கொண்டிருப்பது வளர்ச்சிக்கு வழி செய்யாது. விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ ஆங்கிலத்தில் சிந்தித்து தமிழிலே வெளிப்படுத்தும் பாங்கினை அனைவருமே ஏற்றுக் கொள்ளும்போது, 'போக்கு' (trend) 'தொற்றவைப்பது' படிமம் (image) போன்ற சொற்களைக் காதில் வாங்கவே மறுப்பது விசித்திரமாக இருக்கிறது. சரியான சொற்கள் காலப் போக்கில் வழக்கில் நிற்கும். ஆரம்பத்திலேயே குறுக்கு வெட்டுப் போடுவதால் சிந்தனைதான் தடைப்படும்.

பவர்

பவர் அமைப்பின் முதல் ஆண்டுவிழா ஜனவரி மாதம் 17, 18 தேதிகளில் இலக்கியக் கூட்டங்களில்புது அனுபவமாக நடந்தேறியது. 'கருத்தரங்கம்' என்று போடாமல் 'கணக்கெடுப்பு' என்று நிர்வாகிகள் திட்டமிட்டு, சிறு கதை, நாவல், கவிதை, விமர்சனம் நாலுக்கும்

மூன்று அமர்வுகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். ந. சிதம்பர சுப்ரமண்யன், பி.எஸ். ராமையா, ந. பிச்சமூர்த்தி மூவரும் தலைமை வகித்ததைப் பார்த்தால், மணிக்கொடி யுகத்தைப் பற்றிய பிரமைகள் நீங்கி அதனோடு தொடர்பு கொண்டவர்கள் உரிய மதிப்புப் பெறுவதை உணர முடிகிறது.

சிறுகதை அமர்வுக்குத் தலைமை வகித்த சிதம்பர சுப்ரமண்யன், 'ருசி பலவிதம்' என்கிற அடிப்படைத் தத்துவத்தைச் சுட்டிக்காட்டி, மதிப்பீட்டு வேலையில் உள்ள சிரமத்தை குறிப்பிட்டு பொதுநோக்கு உருவாவதிலுள்ள சங்கடத்தையும் விளக்கினார். கலைக்கண் நோக்கு பக்திக் கண்ணோட்டம் விஷயத்துக்கும் ஆசிரியருக்கும் உள்ள உறவு, கலைப்பொருளின் மீது ஏற்றப்படும் மதிப்பின்மாறுபடும் தன்மைகள் ஆகியவற்றை தக்க உதாரணங்களுடன் விளக்கினார்.

கி. சந்திரசேகரனுடைய கருத்துக்கள் தெளிவாகவே இருந்தன. 'திறனாய்வு சாத்யமில்லை,' 'உயிரோடு இருப்பவர்களை விட்டுவிட வேண்டும்' 'அரங்கத்தில் ரசக்குறைவாகப் பேசக்கூடாது,' 'மனம் விட்டுப் பேசுவது முற்றிலும் முடியாது' போன்ற வரிகளைக் குறித்தக் கொள்ள முடிந்தது. இவைகள் ரசானுபவத்தின் அடிப்படைத் தத்துவமாக இருக்கலாமே ஒழிய விமரிசனக் கலையின் நடை முறைக்கு ஒத்து வராது என்பதை, துறையில் காலை வைத்தவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

உயிரோடு இருப்பவர்களைப் பற்றியும் சொல்ல வேண்டும் என்றும், விமர்சனத்தைத் தாங்கும் தெம்பு தேவை என்றும் ராமையா அழுத்தமாகவே பேசினார். நூற்றுக்கணக்கில் எழுதுவதும், லட்சக் கணக்கில் படிப்பதுமாக நிலை இருந்தும், பேத்தல்கள் பெருகி இருக்கின்றன என்பது அவரது கருத்து. அனுபவம் விரிந்து அதைப் ப்டைப்பாக்கப் பாடுபடும் போது அதைப்பற்றிய அபிப்ராயம் தேவைப்படுகிறது என்பதையும், குணச்சித்திரம் உருவாகாதது இன்றைய எழுத்தின் குறை என்றும் அவர் மேலும் விவரித்தார்.

படைப்பு பற்றிய நுணுக்க அறிவு ஆரம்ப காலத்தில் இருந்ததைப் போல இப்போது இல்லை என்பது எம்.எஸ். கல்யாணசுந்தரத்தின் கருத்து. தற்போது கச்சிதமான உருவம் இருப்பதில்லை என்று குறிப்பிட்டவர், கிறுக்குச் சேஷ்டைகள் இருந்தால் தான் படைப்புக்கள் மதிக்கப்படுவதை ஒப்புக்கொள்ள மறுத்தார்.

நல்ல படைப்புக்கள் தக்கபடி மதிப்புப் பெறாததும், தகுதியற்றவை பாராட்டப் படுவதும் துரதிருஷ்டமானது என்றார் ஆர்வி. 'எழுத்தாளர்களை நம்பிபத்திரிகைகள் நடப்பதில்லை' என்று அவர் சொன்னது உண்மையிலேயே சிந்திக்கத் தக்கதாகும். 'எழுதுபவரின் அந்தஸ்துக்காக கதை பிரசுரிக்கப்படுகிறது' என்கிற நா. பார்த்தசாரதியின் கருத்தையும் சேர்த்துக் கொண்டால், அசல் எழுத்தாளர்களின் வருங்காலம் கவலைக்குரியதுதான். 'பத்திரிகைகளை நம்பி எழுத்தாளர்கள் படைக்கவில்லை' என்ற தெம்புத் நிலைபெற்றால்தான் சூழ்நிலையைச் சமாளிக்க முடியும்.

விடுதலைக்கு முன், பின் என்று பிரித்துக் கொண்டு பார்வை செலுத்திய எழில்முதல்வன் 'அரிமாநோக்கு வேண்டும்' என்று வலியுறுத்தினார். பல்வேறு தேவைகளுக்காகவும் பொழுது போக்குக்காகவும் எழுதுவது பெருகும் போது நல்ல வளர்ச்சி மறைக்கப்படுகிறது என்பது அவர் கருத்து. கருத்துப் பரிமாறுதல்களின் அவசியத்தை தி.பி.சுந்தரம் வலியுறுத்த, பத்திரிகைகளில் சிறுகதைகளின் இடம் குறைந்து வருவதை நா. பார்த்தசாரதி சுட்டிக் காட்டி, இலக்கியப் புறம்பான போக்குகளை எதிர்க்க 'தார்மீக யுத்தம்' துவக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். 'ஆளைப் பார்க்காமல் எழுத்தைப் பார்க்க வேண்டும்' என்பது நாரண துரைக்கண்ணனின் கோரிக்கை. நியாயமானதுதான். இந்த நெறி விமர்சனத்துக்கும் பொருந்தும். விமர்சனம் செய்வது யார் என்று பார்க்காமல், என்ன சொல்லப் படுகிறது என்பதைக் கவனிக்கும் பொறுமையும், மதித்துப் பரிசீலிக்கும் பக்குவமும் எழுத்தாளனுக்கு வேண்டும் என்பதைச்சொல்லி வைக்கத் தோன்றுகிறது.

'இலக்கியப் போக்குகளைக் கிளறிப் பார்ப்பதே கணக்குப்பார்ப்பது' என்று இலக்கணம் வகுத்துக் கொண்ட ஜெயகாந்தன், அண்மைக் காலமாக தென்படுகிற கட்சி கட்டுகிற போக்கைக் கண்டித்தார். குளத்தங்கரை அரச மரம் கதையைத் தொட்டு ஆரம்பித்த சி.சு. செல்லப்பா, கலைத்தன்மை, யதார்த்தம், மண்வாடை, அனுபவம், கற்பனை, மரபு பற்றிய உணர்வு, இலக்கிய இன்பம் ஆகியவைபற்றி விளக்கிப் பேசினார். இன்றைய ஒழுக்கச் சிதைவைக் குறிப்பிட்டு, 'ஜனங்கள் எப்படியோ ராஜா அப்படியே' என்று முடிவுரை வழங்கினார் சிதம்பர சுப்ரமண்யன்.

சிறுகதை அமர்வில் படைப்பு பற்றியும் விமர்சனம் பற்றியும் பலதரப்பட்ட எழுத்தாளர்களின் கருத்துக்கள் கிடைத்த பெரிய லாபம் இருந்தாலும், 'கணக்கெடுப்பு' வேலை சரிவர நடக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தக் குறை நாவல் கவிதை, விமர்சனம் பற்றிய அமர்வுகளில் நிவர்த்திக்கப்பட்டதாகச் சொல்லாம். முதலில் தடுக்கி விழுந்தது பின்னால் சுதாரித்துக் கொள்ள வழி விட்டாற் போல.

நாவல் அமர்வுக்குத் தலைமை வகித்த ராமையாவின் முன்னுரையிலும் பின்னுரையிலும் நிறைய விஷயங்கள் வெளிவந்தன. சிந்திக்கத் தெரிந்தவன், சமூகத்திலும் சத்யத்தை உணர்த்த வந்தவன் தவறும் போது கோபம் ஏற்படுகிறது நியாயம் என்றார் அவர். சமத்துவத்துக்கும் அப்பால் மானுடத்தைத் தொட்டு எழுதப்பட வேண்டும் என்று கூறி, இலக்கியத்தில் அரசியல் வெறித்தனம் கூடாது என்றும் கண்டித்தார். மதிப்புபற்றி விளக்குகையில், ரயில் இன்ஜினுக்குக் கரிதான் தேவை. வைரம் பயன்படாது என்றது நயமாக இருந்தது.

நீண்ட துவக்கஉரை ஆற்றிய பி.வி.சுப்ரமண்யன் இந்தியப் பண்பாட்டுக்குள்ள அடிப்படி மதிப்புகள் பற்றி பிரஸ்தாபித்து, இன்றைய பெரும்பாலான நாவல்களில் ஆரம்பம் நன்றாக இருந்தாலும் முடிவில் தொய்வு இருப்பதாகக் குறைப்பட்டார். காந்தீயநாவல்கள் எழுத வயதும், ஈடுபாடும் தேவை என்பது அகிலனின் கருத்து. காந்தீய நாவல்களுக்கு தனி முக்யத்வம் தேவையா என்பது ஆர்வியின் வினா. மனிதனை மனிதனாக வாழச் செய்யும் அளவுக்கு உள்ளத்தைத் தொடும் நாவல் எதுவும் வெளிவரவில்லை என்பது அவரது கணிப்பு. கலைப்படைப்பு என்கிற முறையில் பார்வை செலுத்த வேண்டுவதை, வற்புறுத்திய டாக்டர் கணேசன் இன்றைய நாவல்களில் 'சிக்கல்கள்' அதிகம் என்றார். லஞ்ச ஊழல் போன்ற அரசியல் பிரச்சனைகள் எழுத வேண்டும்என்று நா. பார்த்தசாரதி வலியுறுத்தி, எழுத்தாளர்கள் தங்கள் சொந்தக் கவலைகளை மட்டும் திருப்பித் திரும்பி மேடைகளில் அவிழ்த்து விடுவதைக் கண்டித்தார். 'சோதனை' என்ற முன்கூட்டிய நினைப்போடு எழுதக்கூடாது என்பது எம்.ஏஸ். கல்யாண சுந்தரத்தின் வாதம். வரலாற்று நாவல்களில் வரலாற்றுப் பிழைகள் புகுவதை

எழில்முதல்வன் சுட்டிக்காட்டினார். இளைய தலைமுறையினருக்கு வாழ்வில் நம்பிக்கை இல்லாததே சோதனை முயற்சிகளுக்குக் காரணம் என்பது ரங்கராஜன் முடிவு. எழுத்தாளர்கள் தங்களையே பல்வேறு படைப்புக்களில் காப்பியடிப்பது வேதனையான அம்சம் என்று விளக்கிய சி.சு.செல்லப்பா, புதிய கருப்பொருள்கள் தேடுவதன் அவசியத்தையும் 'எழுதும் முறையில்' அக்கறை வேண்டும் என்பதையும் வற்புறுத்தினார்.

கவிதை– விமர்சனம் அமர்வுக்குத் தலைமை வகித்த ந.பிச்சமூர்த்தி, மரபுக் கவிதை எழுதியிருப்பவர் என்பதோடு புதுக்கவிதையின் முன்னோடியாக விளங்குபவர். கவிதை பற்றிக் கூறியதுசொற்செட்டுடன் விளங்கியது. அன்றும் இன்றும் அவருடைய எழுத்தின் தனித்தன்மை அந்தச் சொல்லாட்சிதான். வழக்காடும் தொழிலுக்குத் தயாரானவர் வாதங்களில்சிக்கிக் கொள்வது கிடையாது. இலக்கியத்தை அந்தரங்கசுத்தியோடு சமைப்பதையும் அணுகுவதையும் வற்புறுத்துவதே அவருடைய பேச்சின் சாரமாக அமைந்ததில் வியப்பில்லை.

நா. பார்த்தசாரதியின் கவிதைக்கணிப்பு சங்க காலத்தில் துவங்கி, பாரதியின் திருப்பு முனையைத் தொட்டு, புதுக்கவிதை மீது பட்டு நகர்ந்ததில் பல கவிஞர்களின் பெயர்கள் விழுந்தன. சங்க காலத்தில் மூழ்கி விடாததும், பாரதியோடு முடித்து விடாததும் வரவேற்கத் தக்க அம்சங்கள். புதுக்கவிதை பற்றிய அவரது ஈடுபாடு 'கூட்டு சேராக் கொள்கை' யாகப் பரிணமித்ததைப்பற்றி ஒரு வார்த்தை. அரசியிலில் அந்தக் கொள்கைக்குள்ள நடைமுறைச் சிதைவைப் புரிந்து கொண்டால், இலக்கியத்திலும் அதன் 'ஆபத்து' விளங்கும். சார்புகள் தேவையற்ற சங்கதி. நயம் காணும் மனப்பான்மை விரிவாக நிலைத்தால் சரி.

புதுக்கவிதை, விமர்சனம் இரண்டுமே செல்லப்பாவுக்கு இன்றைய 'மூச்சுப் பிரச்னை' என்று கொள்ளலாம். வெறும் கொள்கை விளக்கத்தைத் தாண்டி, வரிகளை வைத்து அனுபவ உணர்வை எழுப்புவதில் அவருக்குள்ள நம்பிக்கைக்கு அன்று நல்ல வாய்ப்பு. கல்வித்துறையில்பணியாற்றுபவர்கள் ஒழுங்கு நியதிக்குப் பழகியவர்களாதலால் முறையான விமர்சன வளர்ச்சிக்கு அவர்கள் பங்கு உதவக் கூடும் என்பது அவரது கருத்து.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS
ABOUT EZHUTTHU TAMIL QUARTERLY
Form IV
See Rule 8

1. Place of Publication; Madras
2. Periodicity of its Publication : Quarterly
3. Printers Name : A Rajaram
   Nationality : Indian
   Address : 5, Medawalkam Tank Road, Madras -10.
4. Editor and Publisher's Name :
   C.S. CHELLAPPA
   Nationality : Indian
5. Name & Addresses of individual who won the news paper and partners or share holders holding more than 1% of the total Capital — C.S. Chellappa, 19-A, Pillaiar Koil Street, Triplicane, Madras - 5.

I C S Chellappa hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

1-3-70

C.S. CHELLAPPA
Publisher.

எழில்முதல்வன், ஞானக்கூத்தன் கவிதை பற்றியும், ராஜதுரை, தி.பி.சுந்தரம்விமர்சனம் பற்றியும் கூறியது அந்தத் துறைகள் பற்றிய சிந்தனைகள் விரிவு பெற்றிருப்பதையே காட்டுகிறது. கலைக்கும் பிரசாரத்துக்கும் உள்ள தொடர்புபற்றி அகிலன் தன் கருத்தை விளக்கமுற்பட்டார். இலக்கிய மரபு பற்றியும் அவருடைய அக்கறை வெளிப்பட்டது. ஜெயகாந்தனுக்கு கோட்பாடு காணும் விமர்சன வேலையைச் சாட இரண்டாவது வாய்ப்பு.

மொத்தத்தில் சிந்திப்பதற்கு நிறைய விஷயங்களைத் தந்திருக்கிறது இந்த விழா. விமர்சனத் தொனி மேலோங்கி நின்றது தனிச்சிறப்பு. செல்லப்பாவைவிட கடுமையான கருத்துக்கள் ஆர்வி, அகிலன், பார்த்தசாரதி, ஜெயகாந்தன், ராமையா சொன்னாலும் முன்னவர் 'விமர்சகர்' என்று பட்டம் சூட்டப்பட்டதால், பின்னவரது 'கடுமை' சுலபமாக ஜீரணிக்கப்படுகிறது என்கிற உண்மை எனக்குப் புரிந்தது. எல்லா எழுத்தாளர்களும் ஒரு கட்டத்தில், ஒரு முனைப்பில் ஒரு நிலையில் 'விமரிசனம்' செய்யத் தவறுவது இல்லை. 'என்னைத் தொடாத வரைக்கும் சரி' என்கிற மனப்பான்மை அகலும் போது

பணியின் பயன் புரியும். இலக்கியஅக்கறையோடு செய்யப்படும் விமரிசனங்களைப் புறக்கணித்ததின் விளைவு, புறஅக்கறைகள் அளவுகோல்களாகத் தலைதூக்கி, ஜெயகாந்தன் போன்றவர்கள் புதுப் 'பார்வை'களில் சிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இலக்கியப் பார்வைகள் வலுத்தால் புறப்போர்வைகள் விலகிப் போகும் என்பதற்கு ஆருடமா சொல்ல வேண்டும்?

பட்டிமன்றம்

பிப்ரவரி 5,12,19 தேதிகளில் ஒய்.எம். சி.ஏ. பட்டிமன்றம் நடத்திய கூட்டங்கள், புதிய இலக்கியம் பற்றி சிந்தனைகள் வெளிப்பட, தொடர்ந்த வாய்ப்பாக அமைந்தது. சமீப ஆண்டுகளில் அங்கு 'தற்கால இலக்கியம்' பரவலாகப் பேசப்படுவது இலக்கியவாதிகளின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது.

ந.சிதம்பர சுப்ரமண்யன் தலைமையில் நடந்த கூட்டத்தில் 'நாவலின் உமைப்பு' பற்றி டாக்டர் எஸ். கணேசன் பேசியது, 'பவர்' அரங்கில் காலம் கருதி சொல்ல முடியாததை வெளிப்படுத்தும் வாய்ப்பை அவருக்கு அளித்தது. படைப்பாளிகள் கூட சிந்திக்காத அளவுக்கு நாவலின் வகைகள், தன்மைகள் பற்றி அவர் ஆராய்ந்து வைத்திருக்கிறார்.

சி.சு.செல்லப்பா தலைமையில் 'தமிழில் விமர்சனம்' பற்றி நடந்த கூட்டத்தில் எழில் முதல்வன், டாக்டர் கணேசன், பேராசிரியர் சுப்ரமண்யம் ஆகியோர் உரையாற்றினர். விமர்சனம் பற்றி பத்திரிகைகளும் மன்றங்களும் தற்சமயம் காட்டும் அக்கறைகளுக்கு

ஒலிபெருக்கி

சி.சு. செல்லப்பா

இசை அலறும்
எரிமலை வாய்;
பேச்சு நொறுங்கும்
கல்லுடை ரோலர்;
ஜவ்வைத் தீய்க்கும்
கொல்உலை எஃகுக்கோல்.

இக் கூட்டம் வலுச் சேர்த்ததாகச்சொல்லாம். 'மேனாட்டு அளவுகோல்கள் இங்கு தேவையா' என்கிற கேள்வியும் எழுப்பப் படாமல் இல்லை. அநேகமாக இதெல்லாம் தீர்ந்துபோன சங்கதிதான். 'நவீன இலக்கிய வகைகளே மேல் நாட்டுச் சரக்காயிற்றே' என்கிற பதில் பல தடவை கிடைத்துவிட்டது. இனி நடைமுறை விமர்சனத்தை நோக்கி நகர்வது இலக்கியத்துக்குப் பயன்தரும்.

சென்னைப் பல்கலைக்கழக திருக்குறள் ஆராய்ச்சித்துறையை சேர்ந்த பேராசிரியர் க.த.திருநாவுக்கரசு தலைமையில் சி.சு.செல்லப்பா 'புதுக்கவிதை' பற்றி விளக்கவுரை நிகழ்த்தினார். தலைவரின் முன்னுரை, பின்னுரையைக் கேட்டவர்கள் புதுக்கவிதை பற்றிய பிரமைகள் மெல்ல அகன்று வருவதை உணர முடிந்தது. கட்டுக்கட்டாக கையிலே கவிதைகளை வைத்துக்கொண்டு புதுக்கவிதையின் தொனி, பொருள்பற்றி செல்லப்பா உரை நிகழ்த்துவது ஒரு இயக்கத்திற்கான அடிப்படைவலுவைச்சமைத்துக் கொடுக்கிறது. புதுக்கவிதை படைக்கும் பிறரும் இம்மாதிரி அரங்கம் ஏறினால், காலப்பபோக்கில் 'நயாபைசா' விலிருந்து 'நயா' கழண்டதுபோல 'புதுக் கவிதை'யிலிருந்தும் கவிதை மட்டும் நிற்கும்.

நவீன இலக்கியம் பற்றிய சிந்தனைகள் பெருகி வருவதும், படைப்பாளிகளும், விமர்சகர்களும், பேராசிரியர்களும், பத்திரிகாசிரியர்களும் கலந்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் வாய்ப்புக்கள் விரிவதும், எதையும் ஆய்வு ரீதியில் அணுகும் மனப்பான்மை தழைப்பதும் இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் நல்ல அறிகுறிகளே.

Ezhutthu Edited and Published by C.S. Chellappa from
19-A, Pilliar Koil St., Madras - 5.

Printed By A. Rajaram for Ramalakshmi Press,
5, Madawalkam High Road, Madras - 10.

சி.சு. செல்லப்பா படைப்புகள்

1.	சரசாவின் பொம்மை	சிறுகதை	கலைமகள் வெளியீடு
2.	மணல் வீடு	,,	ஜோதி நிலையம் வெளியீடு
3.	வாடிவாசல்	குறுநாவல்	எழுத்து பிரசுரம்
4.	சத்யாக்ரகி	சிறுகதை	,,
5.	அறுபது	,,	,,
6.	சி.சு. செல்லப்பா சிறுகதைகள் 7 தொகுதிகள்		
7.	கைதியின் கர்வம்	சிறுகதை	,,
8.	செய்த கணக்கு	,,	,,
9.	பந்தயம்	,,	,,
10.	ஒரு பழம்	,,	,,
11.	நீர்க்குமிழி	,,	,,
12.	பழக்கவாசனை	,,	,,
13.	ஜீவனாம்சம்	நாவல்	,,
14.	மாற்று இதயம்	கவிதை	,,
15.	நீ இன்று இருந்தால்	,,	,,
16	தமிழில் சிறுகதை பிறக்கிறது	கட்டுரை	,,
17.	தமிழில் சிறுகதை முன்னோடிகள்	,,	,,
18.	இலக்கிய விமர்சனம்	,,	,,
19.	படைப்பிலக்கியம்	,,	,,
20.	காற்று உள்ளபோதே	,,	,,
21.	ஏரிக்கரை	,,	,,
22.	குறித்த நேரத்தில்	,,	,,
23.	எல்லாம் தெரியும்	,,	,,
24.	ஊதுபத்திப்புல்	கட்டுரை (ந.பிச்சமூர்த்தி கவிதைகள் பற்றியது)	எழுத்து பிரச்சுரம்
25.	மாயத்தச்சன்	,, ,,	,,
26.	எனது சிறுகதைப்பாணி	,,	,,
27.	முறைப்பெண்	நாடகம்	,,
28.	சுதந்திரதாகம் – 3 பாகங்கள்	நாவல்	,,
29.	பி.எஸ். ராமையாவின் சிறுகதைப் பாணி– கட்டுரை		